Q23:38.2113T
N50

164317

அருணாசல
புராணம்

52

அருணாசல விசேடக் மகாத்து.

பஞ்சபூதத்தலம்.

திவி-காஞ்சி.	வாயு-திருக்காளத்தி.
அப்பு-திருவானைக்கா.	ஆகாயம்-சிதம்பரம்.
தேயு-திருவண்ணாமலை.	

திருவண்ணாமலை.

பஞ்சபூதத்தலத்துள்-அக்கினி.
ஆதாரத்தலத்துள்-மணிபூரகத்தலம்.
சாதனத்துள்-நினைக்கமுத்திதருந்தலம்.

பூசித்த அடியவர்.

உமையம்மையார்.
ர்க்கண்டேயர்
ட்டுணு.
மன்.
கௌதமமுனிவர்.
திக்குப்பாலகர்.
வச்சிராங்கதபாண்டியன்.
ல்லாளன்.
னகர்.

அட்டவசுக்கள்.
சத்தமாதர்கள்.
ஆதித்தன்.
விரதத்தன்.
குதிரை.
புளகாதிபன்.
இந்திரன்.
அருணகிரிநாதசுவாமிகள்.
முதலாய எண்ணிலார்.

N50

சோதிவடிவாகிய காலம்.

மாசி மாதம், கிருட்டிண பக்கம், சதுர்த்தசி திதி, மக நட்சத்திரம், அர்த்தராத்திரிக்கு மேலே என்க.

மலைவடிவாகிய காலம்.

கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரத்தில், சோமவாரத்திரவு பதினேழு நாழிகைக்கு மேலதாகிய சிவலிங்கோற்பவகாலமென்க.

உ

சிவமயம்.

வேதப் பிரமாணம்.

பிரமனும் விட்டுணுவும் அன்னமும் பன்றியுமாகத்

திருவருணாசலத்தைத் தேடியதற்குப் பிரமாணம்.

பிரமன் தேடியது.

இருக்குவேத சுலோகம்.

ப்ரஹ்மாவை ஹம்ஸோபூத்வா; சிரோன் வேஷ்டவ்ய:; ஸகஸ்ரம் ஸமா ஆஸன் ப்ரஹ்மா, அஹம் சிரோஜ்ஞாநே, த்வமேவ மாதாஸி, த்வமேவ பிதாஸி த்வமேவம்ருதாஸி, த்வமேவ த்ருஷ்டாஸி, சுரோத்ராஸி, கர்த்தாசி, காரயதாஸி ஜ்யேஷ்டோஸி, யயேவம் வேதா, சிவசாயுஜ்ய மாப்நோதி சிவசாயுஜ்ய மாப்நோதி.

(இதன் மொழிபெயர்ப்பு.)

பிரமன் அன்ன வடிவாகிச் சிவபெருமானுடைய திருமுடியைத் தேடும்போது ஆயிரம் வருடமாயின. அப்போது பிரமா, நான் தேவரீருடைய திருமுடியை அறிந்தேனல்லேன்; தாயும் நீரே, தந்தையுந் தேவரீரே, உடன்பிறந்தவரும் நீரே, பார்க்கின்றவரும், கேட்கின்றவரும், கர்த்தாவாக இருப்பவரும், காரியங்களைச் செய்விக்கின்றவரும் தேவரீரே; மூத்தவரும் நீரே, உயர்ந்தவருந் தேவரீரென்றுதுதித்தனர். இங்ஙனம் யாவனறிவானோ அவன் சிவசாயுச்சியத்தை யடைகின்றான்; சிவசாயுச்சியத்தை யடைகின்றான்.

சிவமயம்.

அருணாசல விசேடக் கொத்து:

அருணகிரி புராணம்.

அருணகிரியென்பவரொருகாலற்றையவலவினையற்று
அருணகிரியென்பவர்பலகாலாண்டொன்றுளதீவினையற்று
அருணகிரியையகத்திருத்தியருணகிரியென்பவர்தினமு
அருணகிரிநாயகனருளான்மேலுற்றமலனடியடைவார்.

திருவண்ணாமலைத் திருநாமங்கள்.

அருணாசலம்.
அருணகிரி.
அருணை.
வாயுநகரம்.
தேசுநகரம்.
சோணகிரி.
சிவலோகபுரி.
முத்திபுரி.
ஞானநகரம்.
தலேச்சுரம்.
கௌரிநகரம்.
சுத்தநகர்.
தக்கிணகயிலாயம்.
அனற்கிரி.

அருணாசல யுக விளக்கம்.

கிருதயுகம்-அக்கினிமலை.
திரேதாயுகம்-மாணிக்கமலை.
துவாபரயுகம்-பொன்மலை.
கலியுகம்-கன்மலை.

அருணாசலப் பெருமை கூறும் நூல்கள்.

இருக்குவேதம்.
அதர்வணவேதம்.
பாஸ்கரசங்கிதை.
சரப உபநிடதம்.
தேவாரம்.
திருவாசகம்.
கந்தபுராணம்.
உபதேசகாண்டம்.

சிவமயம்.

164317

விளம்பரம்.

இதுகாறும் அநேகர் பதிப்பித்த புத்தகங்களைப் [illegible]ம் இப்பதிப்புப் பிழையின்றிச் சுத்தமாகப் பதிப்பிக்கப் பட்டது. சைவர்களும், [illegible] திருவண்ணாமலையைத் தரிசி[illegible] செல்வர்களும் முக்கியமாக அறிய வேண்டிய அ[illegible]யங்களைச் சேர்த்திருக்கிறோம். யாவரும் எளிதில் உணரும்படி சுருக்கங்களோடும் சரிதம் சிறிதும் விடாமல் செந்தமிழ் வசனநடையிற் சுருக்கவசனங்களும், கிரிப்பிரதக்ஷிண விதியும், திருவண்ணாமலையைப்பற்றிய இருக்குவேதசுலோகம், பாஸ்கர சங்கிதா சுலோகம், அதர்வண வேதசுலோகம், உருத்திரசங்கிதைத்தோத்திரம், [illegible] தீபதத்துவம், கார்த்திகைத்தீபச்சிறப்பு, அண்ணாமலைய ண்ணம் என்னும் விசேட விஷயங்களும், அவ்வவ்விட டோறும் குறிப்பு உரைகளும் எழுதி மதுரைநான்கா[illegible]கப்புலவரும், அத்துவித சித்தாந்த மஹோத்தாரணரும், [illegible] சமஸ்தான வித்துவானும் ஆகிய யாழ்ப்பாணத்து [illegible]ப்புலோலி ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் வேண்டுகோட்கியைய அளித்துள்ளார். அவற்றையுஞ்சேர்த்துப் பதிப்பித்துளேம். திருவண்ணாமலையில்வந்து தரிசனஞ்செய்வோர், தீபமிடுவோர், இடுவிப்போர், தீர்த்தமாடுவோர், கிரிப்பிரதக்ஷிணஞ்செய்வோர், பூசைசெய்வோர், தோத்திரபாராயணஞ்செய்வோர், பிரசங்கிப்போர் யாவருக்கும் விஷயங்கள் மிக்கபயன் படுமென்பதிற் சந்தேகமின்[illegible]றை யிப் புத்தகத்துடன் சேர்த்துளேம்.

விஷ்ணு தேடியது.

இருக்குவேத சுலோகம்.

விஷ்ணுர்வை வாராஹம் ரூபமாஸ்தாய பூமின்விதாரயன் சகஸ்ரம் ஸமா ஆசன், பாதாந் விஷ்ண பரோபூத்வா, த்வமேவ மாதாஸி, த்வமேவபிதாஸி, த்வமேவப்ரு தாஸி, த்வமேவஜ்யேஷ்டோஸி, த்வமேவசிரேஷ்டோஸி, யயேவம் மஹிமாநம், வேதாத்ருஷ்டாபவதி, விக்ஞாதாபவதி, கர்த்தாபவதி, காரயதாபவதி, யயேவம் வேதா சிவசாயுஜ்ய மாப்நோதி, சிவசாயுஜ்ய மாப்நோதி.

(இதன்மொழி பெயர்ப்பு.)

விட்டுணு பன்றிவடிவாகிப் பூமியைத் தோண்டிச்செல்கையில் ஆயிரம் வருடமாயின. சிவனுடைய பாதங்களைத் தேடுவதில் விருப்பமுடையவராகிய விட்டுணுவானவர், தாயுநீர் தந்தையும்நீர், சகோதரரும்நீர், மூத்தவரும், உயர்ந்தவரும் நீர் என்று துதித்தனர். இந்த மகிமையை யாவன் அறிவானோ அவனே காண்கின்றவனாகின்றான், அவனே யறிந்தவனாகின்றான், அவனே கர்த்தா ஆகின்றான், அவனே காரியங்களைச் செய்கின்றவனாகின்றான் இங்ஙனம் யாவனறிவானோ அவன் சிவசாயுச்சியத்தையடைகின்றான்; சிவசாயுச்சியத்தை யடைகின்றான் என்பதாம்.

பஸ்கர சங்கிதைச் சுலோகம். (வேதபாகம்.)

ப்ரஹ்மா விட்டுணு ரஜஸா பத்த வைரௌ மதயே யோருஸ்ய திஜாத வேதா-ஸ்தாணூ ருத்ரஸ் திஷ்ட த்புநஸ்யலோப்தா, த்ருஷ்ட வாஸ் தாணூ மூபரய்யயுத்தம் ப்ற

நஸ்தநுர்தூர மசௌதித்றாகூ வராகோவிஷ்ணுர் நிமமஞ்
ஜூமொர ப்ரஹ்மோதப் பாதஞூமோர் நிவமாலைக் ருத்திர.

(இதன்மொழிபெயர்ப்பு.)

பிரம விட்டுணுக்கள் இராசதகுண மேலிட்டுப்போர்செய்யா நிற்கும்போது, இருவருக்கும் நடுவில் ஸ்ரீருத்ரபகவான் புவனங்களைக் காக்குமாறு அக்கினித் தம்பமாகத் தோன்றினார். அதனைப் பார்த்தமாத்திரத்தில் தங்கள்போரை நிறுத்திவிட்டுத் தூரத்தே விலகிவிட்டனர். பின்னர் விட்டுணு பன்றியாகிப் பூமியிலிருந்து கீழே தேடிக்கொண்டு சென்றார். பிரமன் அன்னப் பறவையாகிப் பூமியிலிருந்து மேலே தேடிச்சென்றான். வைணவர்கள் வேதப் பிரமாணங்கள் இல்லையென்பதற்காகவே யிவைகாட்டினும்.

அதர்வண வேத முடிபாகிய

சரப உபநிடதம்.

யத்பாதாம் போருகத்வம்த்வம் ருக்யதே விஷ்ணு நாசஹ
ஸ்துத்வாஸ் தும்யம் மகேசாக மவாங் மனசகோசரம்
பத்தாரம் ருதகோ விஷ்ணோ: ப்ரசாத மகரோத்விபு:

இதன் கருத்து.

யாதொருவருடைய (சிவபெருமானது) பாததாமரையிரண்டும் விஷ்ணுவினாலே தேடப்பட்டன வாக்கும் மனத்தினுக்கும் எட்டாத சிவபெருமானைத் தோத்திரஞ்செய்து அன்பினால் வணங்கிய விட்டுணுவினுக்குப் பிரபுவாய அருணாசலேச்சுரர் அருள்புரிந்தனர்.

யமரியை கோயிலுக்குக் காணிக்கை செலுத்துகிறார்கள். இவர்கள் எல்லாருஞ் சிவத்துரோகிகள், இவர்களை அஞ்ஞானிகள்.

சைவசமயத்தைத் தமிழ்ச்சமயம் என்றும், சைவசமயக்கோயிலைத் தமிழ்க்கோயில் என்றும், அறிவில்லாத சனங்கள் வழங்குகிறார்கள். தமிழ் என்பது ஒருசமயத்தின் பெயரன்று ஒருபாஷையின்பெயர். (தமிழ்-இன்பம்)

பெறுதற்கரிய மனிதப் பிறவியைப் பெற்றும், மிகமேலாகிய சைவ சமயமரபிலே பிறந்தும், சைவசமயம் இப்படிப்பட்டது, அந்தச் சமயக்கடவுள் இப்படிப்பட்டவர், அவரைவழிபடுகிற முறைமை இப்படிப்பட்டது என்று, ஆராய்ந்து அறிந்துகொண்டு சைவ சமயத்தை அநுட்டியாது, சேர்ந்த நேர்ந்தபடி நடப்பது, ஐயையோ நரகத்துன்பத்துக்குக் காரணமன்றோ.

சைவசமயிகள் சைவசமயத்தை அறியாது கெடுவதற்குக் காரணம், சைவசமயத்தைச் சைவசமயாசாரிகள் பிரசங்கஞ் செய்யாது விடுதலே யாதாயினும் ஒரு சமயத்தை அறிந்து பிரசங்கஞ் செய்யாதவர்கள், அந்தச் சமயத்துக்குத் தாங்கள் குருமார்கள் என்று சொல்லிக்கொண்டு திரிவதும், அந்தக் குருத்துவத்துக்கு உரிய பொருளையும் மரியாதையையும் தாங்கள் பெற விரும்புவதும் என்ன பரிதாபம்! பரிதாபம்!!

[illegible], மாணிக்கவாசகசுவாமி

உ

சிவமயம்.

சைவசமயி.

விபூதி உருத்திராக்கம் தரிப்பது மாத்திரமே சைவசமயிக்கு இலக்கணம் என்று சிலர் எண்ணுகிறார்கள்.

விபூதி உருத்திராக்கந் தரிப்பது. மற்ச மாமிசம் புசியாது விடுவது இந்த இரண்டு மாத்திரமே சைவசமயிக்கு இலக்கணம் என்று வேறு சிலர் எண்ணுகிறார்கள்.

விபூதி உருத்திராக்கந் தரிப்பது. மற்சமாமிசம் புசியாது விடுவது, மற்சமாமிசம் புசிக்கிறவர்கள் காணாதிருக்கும்படி போசனஞ்செய்வது இந்த மூன்று மாத்திரமே சைவசமயிக்கு இலக்கணம் என்று மற்றுஞ் சிலர் எண்ணுகிறார்கள்:

சைவசமயிக்குரிய

முக்கியவிலக்கணங்களாவன:—

க. கொலை, களவு, கள்ளுண்ணல், மற்சமாமிசம் புசித்தல், வியபிசாரம், பொய்முதலாகிய பாவங்களை மரணபரியந்தம் விலக்கி நடப்பது.

உ. உயிர்களுக்கு இரங்குதல், மெய் பேசுதல், வறியவர்களுக்கு ஒருபிடி அன்னமாவது கொடுத்தல், செய்தநன்றி அறிதல், இந்தக்கருமங்களை மரணபரியந்தம் பாதுகாத்து நடப்பது.

ங. பிதா, மாதா, பாட்டன், பாட்டி, தமையன், மாமன், உபாத்தியாயர், குரு, அரசன் முதலிய பெரியோர்களை மரணபரியந்தம் உபசரிப்பது:

ச. சிவதீக்ஷை பெற்றுக்கொள்வது.

ரு. விபூதி உருத்திராக்ஷந்தரிப்பது.

சா. சந்தியாவந்தனை, (அனுஷ்டானம்) சிவத்தியானம், பஞ்சாக்ஷரசெபம், சிவஸ்தோத்திரம் இவைகளை மரணபரியந்தம் நித்தமும் ஒரு பத்து நிமிஷநேரத்திலாவது மனதை ஒடுக்கி விதிப்படி அன்புடன் செய்து முடிப்பது.

எ. நித்தமுமாவது புண்ணிய காலங்களிலாவது சிவலிங்கப் பெருமானை அன்புடன் விதிப்படி வலஞ்செய்து வணங்கித் துதிப்பது.

அ. சைவவினாவிடை, சிதம்பரமான்மியம், பெரியபுராணம் முதலாகிய புத்தகங்களை வாசித்தாவது கேட்டாவது அறிவது.

கூ. சிவபெருமானுடைய மகிமையையும் புண்ணியபாவங்களையும் சிவபெருமானை வழிபடு முறைமையையும் அறிவிக்கிற சைவப்பிரசங்கங்களைக் கேட்டுச் சிந்திப்பது.

க0. சிவ நிந்தை, சிவசாத்திர நிந்தை, குரு நிந்தை, சிவனடியார்நிந்தை இவைகளைக்கேளாது நீங்கி விடுவது.

கக. திருஞானசம்பந்த மூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசகசுவாமி

௨

சிவமயம்.

கள் என்னுஞ் சைவசமயகுரவர் நால்வருடைய திருநக்ஷத்திரங்களிலே, அவரவருடைய சரித்திரத்தைக் கேட்டுச் சிவனடியார் ஒருவருக்காவது அன்னங்கொடுத்து, விரதத்துடன் இருப்பது.

௧௨. செய்யத்தகாத பாவத்தைச்செய்தாலும் செய்யத்தக்க புண்ணியத்தைச் செய்யாதுவிட்டாலும், மனம்பதைபதைத்து அஞ்சி நடுநடுங்கி குருவை அடுத்து அவர் சிவாகமப்பிரகாரம் விதித்த பிராயச்சித்தத்தை விசுவாசத்துடன் செய்து கொள்வது.

௨

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அநாசாரம்.

1 மற்சம் மாமிசம் புசித்தல்.

2 கள் சாராயங் குடித்தல்.

3 மற்சம் மாமிசம் புசிப்பவர். கள்ளுஞ் சாராயங் குடிப்பவர், தாழ்ந்தசாதியர், அன்னிய சமயிகள் என்கிற இவர்களிடத்தாவது, இவர்களுடன் இருந்தாவது, இவர்கள் காணவாவது போசனம் பண்ணுதல்.

4 சனனாசௌசம் மரணாசௌசம் உடையவரிடத்தே போசனம் பண்ணுதல்.

5 போசனஞ்செய்தவுடனே எச்சில் தெளியாதுவிடுதல்.

6 எந்தப் பாத்திரத்தையாவது எச்சிலாக்குதல்.

7 பலகாரம் பழம் முதலியவைகளை எச்சில்பண்ணிப் புசித்தல்.

8 புகையிலைச் சுருட்டுப் பிடித்தல்.

9 வெற்றிலைப்பாக்கு வாயிலிருக்கச் சயனித்தல்.

10 காலையிலே தந்தசுத்தி பண்ணுமுன்னே வெற்றிலைப்பாக்கு போடுதல்.

11 வாயோடு கையையுங் கையோடு பாத்திரத்தையும் அணைத்து எச்சில்பண்ணித் தண்ணீர் குடித்தல்.

12 வீட்டுமுற்றத்திலும் கிணற்றங் கரையிலும் குளக்கரையிலும், ஆற்றங் கரையிலும் பூந்தோட்டத்திலும், திருவீதியிலும் எச்சில் உமிழ்தல், மலசலங் கழித்தல்.

13 ஸ்நானத்துக்குஞ் சமையலுக்கு முபயோகப்படுகிற சலத்திலே சௌசம் பண்ணுதல்.

14 கிணற்றங்கரையிலே சௌசம் பண்ணுதல்.

15 சௌசத்தின் பொருட்டுப் பாத்திரத்திலே சலம் மொண்டு வைத்துக்கொள்ளாது மலசலங் கழித்தல்.

16 சௌசஞ் செய்தவுடனும் தந்தசுத்தி செய்தவுடனும் போசனஞ் செய்தவுடனும் வாய்கொப்பளித்துக் கால் கழுவாது விடுதல்.

17 க்ஷௌரம் பண்ணுவித்துக்கொண்டாலும் துக்க வீட்டுக்குப் போனாலும் உடுத்தவஸ்திரத்துடனே முழுகாது விடுதல்.

18 முகக்ஷௌரம் மாத்திரம் பண்ணுவித்துக் கொள்ளுதல்.

19 மத்தியானத்துக்குப்பின் க்ஷௌரம் பண்ணுவித்தல்.

20 தைச்சங்கிராந்தியிலும் ஆசௌச முடிவிலும் பழையமட்பாண்டங்களைத் தள்ளாது விடுதல்.

21 மண்பாண்டங்களை எல்லாருங் காணும்படி வெளியில் வைத்தல்.

22 பாண்டங்களை நாய்காகம் முதலியவைகளால் தீண்டவிடுதல்.

23 எச்சில்முதலியவைகளை ஓரத்திலே துப்பாது வழியிலே துப்புதல்.

24 கஞ்சா அபினி உண்ணல்.

இந்த அநாசாரங்களை எல்லாரும் விலக்கித் திருத்தம் உற நடக்கக் கடவார்கள்.

சிவமயம்.

திருக்கோயிலிலும் திருவீதியிலும் செய்யத்தகாத குற்றங்கள்.

1 ஸ்நானஞ் செய்யாதுபோதல்.
2 தோய்த்துலராத வேட்டி தரித்துக்கொண்டுபோதல்.
3 கால் கழுவாது போதல்.
4 ஆசௌசத்துடனே போதல்.
5 தலையில் வஸ்திரந் தரித்துக்கொள்ளுதல்.
6 சட்டையிட்டுக் கொள்ளுதல்.
7 போர்த்துக்கொள்ளுதல்.
8 மேல்வேட்டி போட்டுக்கொள்ளுதல்.
9 பாதரக்ஷையிட்டுக்கொள்ளுதல்.
10 வாகனமேறிக் கொள்ளுதல்.
11 குடைபிடித்துக் கொள்ளுதல்.
12 வெற்றிலைப்பாக்கு அருந்துதல்.
13 துப்புதல்.
14 மலசலங் கழித்தல்.
15 மூக்குநீர் சிந்துதல்.
16 மயிர்கோதி முடித்தல்.
17 சூதாடுதல்.
18 சிரித்தல்.
19 சண்டையிடுதல்.
20 வீண்வார்த்தை பேசுதல்.
21 காமப்பற்று வைத்தல்.
22 காலை நீட்டிக்கொண்டிருத்தல்.

23 சயனித்தல்.
24 ஆசனத்திருத்தல்.
25 சுவாமிக்கும் பலிபீடத்துக்குங் குறுக்கேபோதல்.
26 சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் இடையிலே நமஸ்காரம் பண்ணுதல்.
27 சுவாமிக்கு நேராகக் காலைநீட்டி நமஸ்காரம்பண்ணுதல.
28 சுவாமிக்குக் காலை நீட்டி அங்கப்பிரதக்ஷணம் பண்ணுதல்.
29 நிருமாலியத்தைக் கடத்தல்.
30 நிருமாலியத்தை மிதித்தல்.
31 தூபி, துஜத்தம்பம், பலிபீடம், விக்கிரகம் இவைகளின் நிழலை மிதித்தல்.
32 விக்கிரகத்தைத் தொடுதல்.

இவைகளை அருணகிரி புராணம் வலம்புரிச் சருக்கத்தில் 90-வது செய்யுண் முதலியவற்றில் பரக்கக்காணலாம்.

இந்தக் குற்றங்களைச் செய்தவர்கள் நரகத்திலே தண்டிக்கப்படுவார்கள் என்று ஆகமங்களும் புராணங்களுஞ் சொல்லுகின்றன குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்வதுபோலச் சுவாமி தரிசனமாகிய புண்ணியஞ் செய்யப்போய்ப் பாவத்தைத் தேடிக்கொள்வது புத்தியன்று. எல்லாரும் இந்தக் குற்றங்களை விட்டு விதிப்படி சுவாமி தரிசனஞ்செய்து, திருவருள் கடாக்ஷம்பெற்று உய்யக்கடவர்கள்.

இந்தியாவிலே, உத்தியோகஸ்தர்கள் அனேகர் சுவாமி சந்நிதானத்திலே, விதிக்கு விரோதமாக, சட்டை இட்டுக்கொண்டும், போர்த்துக் கொண்டும், மேல் வேட்டி போட்டுக்கொண்டும், தலையில் வஸ்திரந்தரித்துக்கொண்டும், பாதரக்ஷை இட்டுக்கொண்டும், குடைபிடித்துக்கொண்டும் போகிறார்கள். அவர்கள், தங்கள் சமயத்தில் விசுவாசம் உடையவர்களானால், இப்படிச் செய்வார்களா கிறிஸ்தவர்களுள்ளே, கவர்னர் முதலிய பெரிய உத்தியோகஸ்தர்களுந் தங்கள் கோயில்களுக்குத் தங்கள் சமயக்கிரமப்படியே போவதை, அவர்கள் காணவில்லையா? தங்களிற் றாழ்ந்த மனுஷர்கள் தங்களெதிரே பாதரக்ஷை இட்டுக்கொண்டாயினுங் குடை பிடித்துக்கொண்டாயினும் நின்றால், அவர்களைக் கோபிக்கிறார்களே! இது குற்றம் என்று கொண்டவர்கள் இந்தக்குற்றத்தைத் தாங்கள் சுவாமி சந்நிதானத்திலே செய்யத்துணிவது என்ன செருக்கு !!

திருக்கோயிறன்னின் மலஞ்சலம் விடுதலுமிழ்தல் திருவிளக்குச்சாயை யிலிங்கச்சாயை கடத்தல், ஒருக்காலாய் வலம்வருதல் ஓடிவலம்வருதல் ஒண்டொடி வேசியர்ப் புணர்தலூற்றவரை நினைத்தல். மருக்கமழ் நின்மாலியத்தைச் சிவன்றனைக் கோமுகையை வழிகடத்தலாடையின்றி மருவுதல் கான்றுமிழ்தல், பெருக்கநீறணியாமை பெலிப்பற்று மிதித்தல் பெலிபீடங் குறுக்கிடுதல் பெருமான் சந்நிதியில்.

ஏறுடனே தூபிதுசதண்டுபெலிபீடம் இலிங்கமிவைசாயை மிதித்தேகுதல் பொய்ம்மொழிதல், பேறிழவேயுசுசி பிறர்தாரத்தை விரும்பல் பெரும்புனலாவிருபாதங் கழுவாமைசயனம், தேறுபாலை தின்றம்பலமுமிழ்தறிருடல் திருக்கோயினியமத்தைச் செய்தலத்தோர்தங்கட், காறணியுஞ்சடைமுடியா ராகமத்திற்சொலுமிவ்வா றைந்தோடிரண்டுமெற்ற தாகாவன்றே.

இக்குற்றங்கள் அபுத்திபூர்வமாகநேரின் வேதத்திலுள்ள உருத்திரமந்திரத்தை ஆயிரமுருச்செபிக்கின் முற்றுமகலும். அவ்வேதவாக்கியமந்திரங்களை யுச்சரித்தற்கு அருகரல்லாதவர் அகோரமந்திரத்தை ஆயிரமுருச்செபிக்கக்கடவர் இக்குற்றங்களைப் புத்திபூர்வகமாகவேயியற்றின் தப்பாது எரிவாய் நிரயத்தில் அழுந்துவது திண்ணம், இதற்குப் பரிகாரமுமில்லை என்பது வேதாகமபுராணநி

களின் துணிபாகலின், ஆலயத்திலே புண்ணியத்தை நாடிப்போய் இத்தகையசெயல்களால் பாவத்தைத் தேடிக் கோடல் முறையன்று. ஆகையால் இவற்றுள் ஒன்றனையு மியற்றாதுத் தமக்கு விதித்தவாறே அவ்வவ்வெல்லையினின்று சுவாமி தரிசனஞ்செய்து இநவருளைப்பெற்று மீள்வதே கடமையாம். சுபம்.

திருக்கோயிற்குற்றங்கள்

முற்றிற்று.



தேவர்கள் முனிவர்கள், சித்தர்கள் முதலியயாவர்களும் புடைசூழ உமாமகேஸ்வரி சமேராய் பரமசிவன் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கயிலையங்கிரி—1.

யத்தில் விசுவாசம் உடையவர்களாஞு, ன

13

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவண்ணாமலையில்

திருஞானசம்பந்தசுவாமிகள்

அருளிச்செய்த

தேவாரத்திருப்பதிகம்.

சுவாமிபெயர்—அருணாசலேசுரர்.

தேவிபெயர்—உண்ணாமுலையம்மை.

பண்-நட்டபாடை. (முதற்திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

உண்ணாமுலையுமையாளொடுமுடனாகியவொருவன்
பெண்ணாகியபெருமான்மலைதிருமாமணிதிகழ
மண்ணார்ந்தனவருவித்திரண்மழலைம்முழவதிரு
மண்ணாமலைதொழுவார்வினைவழுவாவண்ணமறுமே. (க)

தேமாங்கனிகடுவன்கொளவிடுகொம்பொடுதீண்டித்
தூமாமழைதுறுவன்மிசைசிறுநுண்டுளிசிதற
வாமாம்பிணையணையும்பொழிலண்ணாமலையண்ணல்
பூமான்கழல்புனைசேவடிநினைவார்வினையிலரே. (உ)

பீலிம்மயில்பெடையோடுறைபொழில்சூழ்கழைமுத்தஞ்
சூலிம்மணிதரைமேனிறைசொரியும்விரிசாரல்
வாலிம்மழைதவழும்பொழிலண்ணாமலையண்ணல்
காலன்வலிதொலைசேவடிதொழுவாரனபுகழே. (ங)

உதிரும்மயிரிடுவெண்டலைகலனாவுலகெல்லா
மெதிரும்பலியுணவாகவுமெருதேறுவதல்லான்
முதிருஞ்சடையிளவெண்பிறைமுடிமேல்கொளவடிமே
லதிருங்கழலடிகட்கிடமண்ணாமலையதுவே. (௪)

மரவஞ்சிலைதரளம்மிகுமணியுந்துவெள்ளருவி
யரவஞ்செயமுரவம்படுமண்ணாமலையண்ண
லுரவஞ்சடையுலவும்புனலுடனாவதுமோரார்
குரவங்கமழ்நறுமென்குழலுமைபுல்குதல்குணமே. (ரு)

பெருகும்புனலண்ணாமலைபிறைசேர்கடனஞ்சைப்
பருகுந்தனைதுணிவார்பொடியணிவாரதுபருகிக்
கருகும்மிடறுடையார்கமழ்சடையார்கழல்பரவி
யுருகும்மனமுடையார்தமக்குறுநோயடையாவே. (௬)

கரிகாலனகுடர்கொள்வனகழுகாடியகாட்டி
னரியாடியநகுவெண்டலையுதையுண்டவையுருள
வெரியாடியவிறைவர்க்கிடமினவண்டிசைமுரல
வரியாடியகண்ணாளொடுமண்ணாமலையதுவே. (எ)

ஒளிறூபுலியதளாடையனுமையஞ்சுதல்பொருட்டாற்
பிளிறூகுரன்மதவாரணவதனம்பிடித்துரித்து
வெளிறூபடவிளையாடியவிகிர்தன்னிராவணனை
யளறூபடவடர்த்தானிடமண்ணாமலையதுவே. (அ)

விளவார்கனிபடநூறியகடல்வண்ணனும்வேதக்
கிளர்தாமரைமலர்மேலுறைகேடில்புகழோனு
மளவாவணமழலாகியவண்ணாமலையண்ண
றளராமுலைமுறுவல்லுமைதலைவன்னடிசரணே. (௯)

15

வேர்வந்துறமாசூர்தரவெயினின்றுழல்வாரு
மார்பம்புதைமலிசீவரமறையாவருவாரு
மாரம்பர்தமுரைகொள்ளன்மினண்ணாமலையண்ணல்
கூர்வெண்மழுப்படையானலகழல்சேர்வதுகுணமே. (௧0)

வெம்புந்தியகதிரோனொளிவிலகும்விரிசார
லம்புந்துமூவெயிலெய்தவனண்ணாமலையதனைக்
கொம்புந்துவகுயிலாலுவகுளிர்காழியுண்ஞான
சம்பந்தனதமிழ்வல்லவரடிபேணுதறவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண்-தக்கேசி. (முதற்றிருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

பூவார்மலர்கொண்டடியார்தொழுவார்புகழ்வார்வானோர்கண்
மூவார்புரங்களெரித்தவன்றுமூவர்க்கருள்செய்தார்
றூமாமழைநின்றதிரவெருவித்தொறுவின்னிரையோடு
மாமாம்பிணைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. (௧)

மஞ்சைப்போழ்ந்தமதியஞ்சூடும்வானோர்பெருமானார்
நஞ்சைக்கண்டத்தடக்குமதுவுநன்மைப்பொருள்போலும்
வெஞ்சொற்பேசும்வேடர்மடவாரிதணமதுவேறி
யஞ்சொற்கிளிகளாயோவென்னுமண்ணாமலையாரே. (௨)

ஞானத்திரளாய்நின்றபெருமானல்லவடியார்மே
லூனத்திரளைநீக்குமதுவுமுண்மைப்பொருள்போலு
மேனத்திரளோடினமான்கரடியிழியுமிரவின்க
ணானைத்திரள்வந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. (௩)

இழைத்தவிடையாளுமையாள்பங்கரிமையோர்பெருமானார்
தழைத்தசடையார்விடையொன்றேறித்தரியார்புரமெய்தார்
பிழைத்தபிடியைக்காணாதோடிப்பெருங்கைமதவேழ
மழைத்துத்திரிந்தங்குறங்குஞ்சாரலண்ணாமலையாரே. (௫)

உருவிற்றிகழுமுமையாள்பங்கரிமையோர்பெருமானார்
செருவிலொருகால்வளையவூன்றிச்செந்தீயெழுவித்தார்
பருவிக்குறவர்புனத்திற்குவித்தபருமாமணிமுத்த
மருவித்திரளோடிழியுஞ்சாரலண்ணாமலையாரே. (௬)

எனைத்தோரூழியடியாரேத்தவிமையோர்பெருமானார்
நினைத்துத்தொழுவார்பாவந்தீர்க்குநிமலருறைகோயில்
கனைத்தமேதிகாணாதாயன்கைம்மேற்குழலூத
வனைத்துஞ்சென்றுதிரளுஞ்சாரலண்ணாமலையாரே. (௭)

வந்தித்திருக்குமடியார்தங்கள்வருமேல்வினையோடு
பந்தித்திருந்தபாவந்தீர்க்கும்பரமனுறைகோயின்
முந்தியெழுந்தமுழவினோசைமுதுகல்வரைகண்மே
லந்திப்பிறைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. (௮)

மறந்தான்கருதிவலியைநினைந்துமாறாயெடுத்தான்றோ
ணிறந்தான்முரியநெரியவூன்றிநிறையவருள்செய்தார்
திறந்தான்காட்டியருளாயென்றுதேவரவர்வேண்ட
வறந்தான்காட்டியருளிச்செய்தாரண்ணாமலையாரே. (௯)

தேடிக்காணார்திருமால்பிரமன்றேவர்பெருமானை
மூடியோங்கிமுதுவேயுகுத்தமுத்தம்பலகொண்டு
கூடிக்குறவர்மடவார்குவித்துக்கொள்ளவம்மினென்
றாடிப்பாடியளக்குஞ்சாரலண்ணாமலையாரே. (௯)

தட்டையிடுக்கித்தலையைப்பறித்துச்சமணேநின்றுண்ணும்
பிட்டர்சொல்லக்கொள்ளவேண்டாபேணித்தொழுமின்கள்
வட்டமுலையாளுமையாள்பங்கர்மன்னியுறைகோயி
லட்டமாளித்திரள்வந்தணையுமண்ணாமலையாரே. (௧0)

அல்லாடரவமியங்குஞ்சாரலண்ணாமலையாரை
நல்லார்பரவப்படுவான்காழிஞானசம்பந்தன்
சொல்லான்மலிந்தபாடலானபத்துமிவைகற்று
வல்லாரெல்லாம்வானோர்வணங்கமன்னிவாழ்வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவண்ணாமலையில்

திருநாவுக்கரசுசுவாமிகள் அருளிச்செய்த

திருநேரிசை. (௪-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

ஓதிமாமலர்கடூவியுமையவள்பங்காமிக்க
சோதியேதுளங்குமெண்டோட்சுடர்மழுப்படையினானே
யாதியேயமரர்கோவேயணியண்ணாமலையுளானே
நீதியானின்னையல்லானினையுமாநினைவிலேனே. (௧)

பண்டனைவென்றவின்சொற்பாவையோர்பங்கநீல
கண்டனேகார்கொள்கொன்றைக்கடவுளேகமலபாதா
வண்டனேயமரர்கோவேயணியண்ணாமலையுளானே
தொண்டனேனுன்னையல்லாற்சொல்லுமாசொல்லிலேனே. (௨)

உருவமுமுயிருமாகியோதியவுலகுக்கெல்லாம்
பெருவினைப்பிறப்புவீடாய்நின்றவெம்பெருமான்மிக்க
வருவிபொன்சொரியுமண்ணாமலையுளாயண்டர்கோவே
மருவிநின்பாதமல்லான்மற்றொருமாடிலேனே. (௩)

பைம்பொனேபவளக்குன்றேபரமனேபால்வெண்ணீற்றாய்
செம்பொனேமலர்செய்பாதாசீர்தருமணியேமிக்க
வம்பொனேகொழித்துவீழுமணியணாமலையுளானே
யென்பொனேயுன்னையல்லாலேதுநானினைவிலேனே. (௪)

பிறையணிமுடியினானேபிஞ்ஞகாபெண்ணோர்பாகா
மறைவலாவிறைவாவண்டார்கொன்றையாய்வாமதேவா
வறைகழலமரரேத்துமணியணாமலையுளானே
யிறைவனேயுன்னையல்லாலியாதுநானினைவிலேனே. (௫)

புரிசடைமுடியின்மேலோர்பொருபுனற்கங்கைவைத்துக்
கரியுரிபோர்வையாகக்கருதியகாலகாலா
வரிகுலமலிந்தவண்ணாமலையுளாயலரின்மிக்க
வரிமிகுவண்பெண்செய்பாதநான்மறப்பிலேனே. (௬)

இரவியுமதியும்விண்ணுமிருநிலம்புனலுங்காற்று
முரகமார்பவனமெட்டுத்திசையொளியுருவமானா
யரவுமிழ்மணிகொள்சோதியணியணாமலையுளானே
பரவுநின்பாதமல்லாற்பரமநான்பற்றிலேனே. (௭)

பார்த்தனுக்கன்றுநல்கிப்பாசுபதத்தையீந்தாய்
நீர்த்ததும்புலாவுகங்கைநெடுமுடிநிலாவவைத்தா
யார்த்துவந்தீண்டிக்கொண்டலணியணாமலையுளானே
தீர்த்தனேநின்றன்பாதத்திறமலாற்றிறமிலேனே. (௮)

பாலுநெய்முதலாமிக்கபசுவிலைந்தாடுவானே
மாலுநான்முகனுங்கூடிக்காண்கிலாவகையுணின்றா
யாலுநீர்கொண்டல்பூமணியணாமலையுளானே
வாலுடைவிடையாயுன்றன்மலரடிமறப்பிலேனே. (௯)

இரக்கமொன்றியாதுமில்லாக்காலனைக்கடந்தவெம்மா
னுரத்தினால்வரையையூக்கவொருவிரனுதியினாலே
யரக்கனைநெரித்தவண்ணாமலையுளாயமரரேறே
சிரத்தினால்வணங்கியேத்தித்திருவடிமறப்பிலேனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இதுவுமது.

திருக்குறுந்தொகை. (௫-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

வட்டனைமதிசூடியைவானவர்
சிட்டனைத்திருவண்ணாமலையனை
யிட்டனையிகழ்ந்தார்புரமூன்றையு
மட்டனையடியேன்மறந்துய்வனோ. (௧)

வானனைமதிசூடியமைந்தனைத்
தேனனைத்திருவண்ணாமலையனை
யேனனையிகழ்ந்தார்புரமூன்றெய்த
வானனையடியேன்மறந்துய்வனோ. (௨)

மத்தனைமதயானையுரித்தவெஞ்
சித்தனைத்திருவண்ணாமலையனை
முத்தனைமுனிந்தார்புரமூன்றெய்த
வத்தனையடியேன்மறந்துய்வனோ. (௩)

காற்றனைக்கலக்கும்வினைபோயறத்
தேற்றனைத்திருவண்ணாமலையனைக்
கூற்றனைக்கொடியார்புரமூன்றெய்த
வாற்றனையடியேன்மறந்துய்வனோ. (௪)

ணாமலைகைதொழ
வோடிப்போகுநமதுள்ளவினைகளே. (௫)

மின்னனைவினைதீர்த்தென்னையாட்கொண்ட
தென்னனைத்திருவண்ணாமலையனை
யென்னனையிகழ்ந்தார்புரமூன்றெய்த
வன்னனையடியேன்மறந்துய்வனே. (௫)

மன்றனைமதியாதவன்வேள்விமேற்
சென்றனைத்திருவண்ணாமலையனை
வென்றனைவெகுண்டார்புரமூன்றையுங்
கொன்றனைக்கொடியேன்மறந்துய்வனே. (௬)

வீரனைவிடமுண்டனைவிண்ணவர்
தீரனைத்திருவண்ணாமலையனை
யூரனையுணரார்புரமூன்றெய்த
வாரனையடியேன்மறந்துய்வனே. (௭)

கருவினைக்கடல்வாய்விடமுண்டவெந்
திருவினைத்திருவண்ணாமலையனை
யுருவினையுணரார்புரமூன்றெய்த
வருவினையடியேன்மறந்துய்வனே. (௮)

அருத்தனையரவைந்தலைநாகத்தைத்
திருத்தனைத்திருவண்ணாமலையனைக்
கருத்தனைக்கடியார்புரமூன்றெய்த
வருத்தனையடியேன்மறந்துய்வனே. (௯)

அரக்கனையலறவ்விரலூன்றிய
திருத்தனைத்திருவண்ணாமலையனை
யிரக்கமாயென்னுடலுறுநோய்களைத்
துரக்கனைத்தொண்டனேன்மறந்துய்வனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இதுவுமது.

திருக்குறுந்தொகை. (௫-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

பட்டியேறுகந்தேறிப்பலவில
யிட்டமாகவிரந்துண்டுழிதரு
மட்டமூர்த்தியண்ணாமலைகைதொழக்
கெட்டுப்போம்வினைகேடில்லைகாண்மினே. (௧)

பெற்றமேறுவர்பெய்பலிக்கென்றவர்
சுற்றமாயிருதொல்குழலாளொடு
மற்றந்தீர்க்குமண்ணாமலைகைதொழ
கற்றவத்தொருஞானத்திருப்பரே. (௨)

பல்லிலோடுகையேந்திப்பலவில
மொல்லைசென்றுணங்கல்கவர்வாரவ
ரல்லறீர்க்குமண்ணாமலைகைதொழ
நல்லவாயினநம்மையடையுமே. (௩)

பாடிச்சென்றுபலிக்கென்றுநின்றவ
ரோடிப்போயினர்செய்வதொன்றென்கொலோ
வாடிப்பாடியண்ணாமலைகைதொழ
வோடிப்போகும்நம்மேலவினைகளே. (௪)

தேடிச்சென்றுதிருந்தடியேத்துமி
னாடிவந்தவர்நம்மையுமாட்கொள்வ
ராடிப்பாடியண்ணாமலைகைதொழ
வோடிப்போகுநமதுள்ளவினைகளே. (௫)

மின்னைவினைதீர்த்தென்னையாட்கொண்ட
திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரத்திருப்பதிகம்.

கட்டியொக்குங்கரும்பினிடைத்துணி
வெட்டிவினைகள்பாடும்விகிர்தனா
ரட்டமூர்த்தியண்ணாமலைமேவிய
நட்டமாடியைநண்ணநன்காகுமே. (௬)

கோணிக்கொண்டையர்வேடமுன்கொண்டவர்
பாணிநட்டங்களாடும்பரமனா
ராணிப்பொன்னினண்ணாமலைகைதொழப்
பேணிநின்றபெருவினைபோகுமே. (௭)

கண்டந்தான்கறுத்தான்காலனாருயிர்
பண்டுகால்கொடுபாய்ந்தபரமனா
ரண்டத்தோங்குமண்ணாமலைகைதொழ
விண்டுபோகுநம்மேலைவினைகளே. (௮)

முந்திச்சென்றுமுப்போதும்வணங்குமி
னந்திவாயொளியான்றனண்ணாமலை
சிந்தியாவெழுவார்வினைதீர்த்திடுங்
கந்தமாமலர்சூடுங்கருத்தனே. (௯)

மறையினானொடுமாலவன்காண்கிலா
நிறையுநீர்மையுணின்றருள்செய்தவ
னுறையுமாண்பினண்ணாமலைகைதொழப்
பறையுநாஞ்செய்தபாவங்களானவே. (௰)

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
சமயாசாரியராகிய
திருவாதவூர் மாணிக்கவாசகசுவாமிகள்
திருவண்ணாமலையில் அருளிச்செய்த

திருவெம்பாவை.

[சத்தியைவியந்தது.]

வெண்டளையான்வந்த இயற்றரவிணைக் கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ங
னேதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
யீதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். (௧)

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகலாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
யேசுமிட மீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசுமலர்ப் பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் றில்லைச்சிற் றம்பலத்து
ளீசனார்க் கன்பார்யா மாரேலோ ரெம்பாவாய். (௨)

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
  னத்தனா னந்த னமுதனென் றள்ளூறி
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
  பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
  வெத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமே
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
  யித்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய். (௩)

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
  வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
வெண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
  கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
  கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ள
முண்ணெக்கு நின்றுருக யாமாட்டோ நீயேவந்
  தெண்ணிக் குறையிற் றுயிலேலேலோ ரெம்பாவாய். (௪)

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
  போலறிவோ மென்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
  ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
  சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலமிடினு முணரா யுணராய்கா
  ணேலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். (௫)

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
  நானே யெழுப்புவ னென்றலு நாணாமே

போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
  வானே நிலனே பிறவே யறிவரியான்
றானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
  வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவா
யூனே யுருகா யுனக்கே யுறுமெமக்கு
  மேனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். (௬)

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமர
  ருன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
  தென்னா வென்னாமுன்னந் தீசேர் மெழுகொப்பா
யென்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
  சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியா
  லென்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். (௭)

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கு
  மேழி லியம்ப வியம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
  கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவா
  யாழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை
  யேழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். (௮)

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
  பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
யுன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோ
  முன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோ

மன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோ
மின்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியே
லென்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். (௯)

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலு
மோத வுலவா வொருதோழன் றொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகா
ளேதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலா
ரேதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். (௰)

மொய்யார் தடம்பொய்கை புக்குமுகே ரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
யையா வழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குன்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
வையாநீ யாட்கொண் டருளும் விளையாட்டி
னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோ
மெய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய். (௧௧)

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைக
ளார்ப்பரவஞ் செய்ய வணிகுழன்மேல் வண்டார்ப்பப்

பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாத
மேத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். (௧௨)

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதா
லங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தாற்
றங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினா
லெங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (௧௩)

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
யாதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய். (௧௪)

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால்வந்தனையாள்விண்ணோரைத்தான்பணியாள்
பேரறையாற் கிங்ஙனே பித்தொருவ ராமா
றாரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
யேருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (௧௫)

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையா
ளென்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவ
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையா
டன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். (௧௬)

செங்க ணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பா
லெங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
யிங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
யங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். (௧௭)

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைக டாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவா

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தா

லெங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கே
ளெங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
வெங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல்பக லெங்கண் மற்றொன்றுங் காணற்க
விங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியே
லெங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். (௧௯)

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமா னான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். (௨௦)

திருச்சிற்றம்பலம்.

இஃது
ஷை சுவாமிகள்
திருவண்ணாமலையிலருளிச்செய்த

திருவம்மானை.

ஆனந்தக்களிப்பு.

[ஒப்புமைபற்றிவந்த வாரடித்தரவு கொச்சகக்கலிப்பா.]

செங்க ணெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி

மண்டம வியப்புறுமா பாடுதுங்கா ணம்மானாய் (௧)

யெங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு மாட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையா
னங்கண னந்தணனா யறைகூவி வீடருளு
மங்கருணை வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய். (௧)

பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தா
ராராலுங் காண்டற் கரியா னெமக்கெளிய
பேராளன் றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் னுளம்புகுந்த
வாரா வமுதா யலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்கா ணம்மானாய். (௨)

இந்திரனு மாலயனு மேனோரும் வானோரு
மந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி
யெந்தரமு மாட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்
பந்தம் பறியப் பரிமேற்கொண் டான்றந்த
வந்தமிலா வானந்தம் பாடுதுங்கா ணம்மானாய். (௩)

வான்வந்த தேவர்களு மாலயனோ டிந்திரனுங்
கானின் றுவற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போற் றலையளித்திட்
டூன்வந்து ரோமங்க ளுள்ளே யுயிர்ப்பெய்து
தேன்வந் தமுதின் றெளிவி னொளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய். (௪)

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்

விருமாநடைபுக் குரைபோயுணர்வற்

தில்லைநகர் புக்குச் சிற்றம் பலமன்னு
மொல்லை விடையானைப் பாடுதுங்கா ணம்மானாய். (௫)

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
நீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாமேலை வீடெய்த
வாட்டான் கொண்டாண்டவா பாடுதுங்கா ணம்மானாய். (௬)

ஓயாதே யுள்குவா ருள்ளிருக்கு முள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை யாட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே யுலகேழு
மாயானை யாள்வானைப் பாடுதுங்கா ணம்மானாய். (௭)

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோமான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானாய். (௮)

துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்டபுரி நூலான் கோலமா வூர்தியான்
கண்டங் கரியான்செம் மேனியான் வெண்ணீற்றா
னண்டமுத லாயினா னந்தமிலா வானந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளு
மண்டம் வியப்புறுமா பாடுதுங்கா ணம்மானாய் (௯)

யெங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு மாட்கொண்டு

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளு மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை யாட்கொண்ட
வண்ணா மலையானைப் பாடுதுங்கா ணம்மானாய். (௧௦)

செப்பார் முலைபங்கன் றென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்குந் தன்மையினா
னப்பாண்டி நாட்டைச் சிவலோக மாக்குவித்த
வப்பார் சடையப்ப னானந்த வார்கழலே
யொப்பாக வொப்புவித்த வுள்ளத்தா ருள்ளிருக்கும்
மப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்கா ணம்மானாய். (௧௧)

மைப்பொலியுங் கண்ணிகேள் மாலயனோ டிந்திரனு
மெப்பிறவி யுந்தேட வென்னையுந்தன் னின்னருளா
லிப்பிறவி யாட்கொண் டினிப்பிறவா மேகாத்து
மெய்ப்பொருட்கட் டோற்றமாய் மெய்யே நிலைபெறு
மெய்ப்பொருட்குந் தானேயா யாவைக்கும் வீடாகு
மப்பொருளா நஞ்சிவனைப் பாடுதுங்கா ணம்மானாய். (௧௨)

கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை யெங்குஞ் செறிந்தானை யன்பர்க்கு
மெய்யானை யல்லாதார்க் கல்லாத வேதியனை
யையா றமர்ந்தானைப் பாடுதுங்கா ணம்மானாய். (௧௩)

ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவரா
யேனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை

விருமாநடைபுக் குரைபோயுணர்வற்

யூனையு நின்றுருக்கி யென்வினையை யோட்டுகந்து
தேனையும் பாலையுங் கன்னலையு மொத்தினிய
கோனவன்போல் வந்தென்னைத் தன்றொழும்பிற் கொண்டருளும்
வானவன் பூங்கழலே பாடுதுங்கா ணம்மானாய். (௧௪)

சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்றன் வேள்வியினி
லிந்திரனைத் தோணெரித்திட் டெச்சன் றலையரிந்
தந்திரமே செல்லு மலர்கதிரோன் பற்றகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை யோட்டுகந்த
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்கா ணம்மானாய். (௧௫)

ஊனா யுயிரா யுணர்வாயென் னுட்கலந்து
தேனா யமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோ ரறியா வழியெமக்குத் தந்தருளுந்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசே
ரானா வறிவா யளவிறந்த பல்லுயிர்க்குங்
கோனாகி நின்றவா கூறுதுங்கா ணம்மானாய். (௧௬)

சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்றிரடோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்
றூடுவேன் செவ்வாய்க் குருகுவே னுள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்து மலர்வே னனலேந்தி
யாடுவேன் சேவடியே பாடுதுங்கா ணம்மானாய். (௧௭)

கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மாலயனுங் காண்பரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையி
லெளிவந் திருந்திரங்கி யெண்ணரிய வின்னருளா

ஒளிவந்தெ னுள்ளத்தி னுள்ளே யொளிதிகழ
வளிவந்த வந்தணனைப் பாடுதுங்கா ணம்மானாய். (௧௮)

முன்னானை மூவர்க்கு முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத்
தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
யென்னானை யென்னப்ப னென்பார்கட் கின்னமுதை
யன்னானை யம்மானைப் பாடுதுங்கா ணம்மானாய். (௧௯)

பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்க ணீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் றொல்புகழே
பற்றியிப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுதுங்கா ணம்மானாய். (௨0)

திருச்சிற்றம்பலம்.

சுப்பிரமணியக்கடவுள் வரப்பிரசாதியாய்த்
திருவண்ணாமலையில் எழுந்தருளியிருந்த
அருணகிரிநாதர் அருளிச்செய்த

திருப்புகழ்.

தனனாதனனத் தனனாதனனத்
தனனாதனனத்—தனதான.

அருமாமதனைப் பொருவாள் கயல்குத்
  தயிலார்நயனக் கொடியார்த
மழுகார்தனகற் புழுகார்சயிலத்
  தணையாவலிகெட் டுடல்தாழ

விருமாநடைபுக் குலைபோயுணர்வற்
  றிணையாவுளமுட் குயிர்சோர
வெறிவாய்நரகிற் புகுதாதபடிக்
  கிருபாதமெனக் கருள்வாயே
யொருமால்வரைபட் டிருகூறிடவுற்
  றொருவேலணைவிட் டெறிவோனே
யுறமான்மறவக் குறமாமகளுக்
  குருகாவிருபொற் புயவீர
திருமால்கமலப் பிரமாவிழியிற்
  றெரியாரவனுக் கரியோனே
செழுநீர்வயல்சுற் றருணைபுரியிற்
  றிருவீதியினிற் பெருமானே

தான தந்த தந்த தான தந்த தந்த
தான தந்த தந்த—தன தான.

தோத கப்பெ ரும்ப போத ரத்தி யங்கு
  தோகை யர்க்கு நெஞ்ச மழியாதே
சூலை வெப்ப டர்ந்த வாத பித்த மென்று
  சூழ்பி ணிக்கு ணங்க ளணுகாதே,
பாத கச்ச மன்றன் மேதி யிற்புகுந்து
  பாசம் விட் டெறிந்து பிடியாதே
பாவ லர்க்கி ரங்கி நாவி னுக்கி சைந்த
  பாடன் மிக்க செஞ்சொ றரவேணும்
வேத மிக்க விந்து நாத மெய்க் கடம்ப
  வீர பத்ர கந்த முருகோனே
மேரு வைப் பிளந்து சூரனைக் கடிந்து
  வேலை யிற்று ளைந்த கதிர்வேல

  தாவி ருபாசத் தும்பினாலே

கோதை பொற்கு றிஞ்சி மாது கச்சணிந்த
  கோம ளக்கு ரும்பை புணர்வோனே
கோல மூற்று யர்ந்த சோண வெற்பி லங்கு
  கோபு ரத்த மர்ந்த பெருமானே.

தனதனத் தானனத் தனதனத் தானனத்
தனதனத் தானனத்—தனதான.

கயல்விழித் தேனெனைச் செயலொழித் தாயெனக்
  கணவகெட் டேனெனப் பெறுமாது
கருதுபுத் ராவெனப் புதல்வரப் பாவெனக்
  கதறிடப் பாடையிற் தலைமீதே
பயில்குலத் தாரழப் பழையநட் பாரழப்
  பறைகள்கொட் டாவரச் சமனாரும்
பரியகைப் பாசம்விட் டெறியுமப் போதெனைப்
  பரிகரித் தாடையைத் தரவேணு
மயிலிடைச் சேவல்கைப் பரிதரத் தோகையுற்
  றருணையிற் கோபுரத் துறைவோனே
யமாரத் தாலிறக் குமரிநட் பாகனத்
  தமிழ்சொற் பாவலர்க் கெளியோனே
புனலிலைப் பாறுபொற் சயிலமெய்ச் சாரலிற்
  புனமறப் பாவையைப் புணர்வோனே
பொருபடைப் பூதரத் தொடுகடற் சூரனைப்
  பொருதழிச் சேவகப் பெருமானே

மழுகார்தனகற புழுகாரசயலத
  தணையாவலிகெட் டெல்தாழ

தானதன தானத்த தானதன தானத்த
தானதன தானத்த—தனதான.

ஆறுமயில் போலொத்த தோகையர்க ளேமெத்த
  வாரவட மேலிட்ட முலைமீதே
யானதுகி லேயிட்டு வீதிதனி லேநிற்கு
  மாமைமடை யாரிக்கு மொழியார்பால்
மாலொடவர் போகத்தி லேகுலவி யேசித்தம்
  வாடியெனை நீசித்த மகிழ்வாகி
மாகமுக டாருக்ர வேகமயி லேயுற்று
  வாழ்வுபெற வேமுத்தி தருவாயே
நாலுமுக வேதற்கு மாவிலையின் மாயற்கு
  நாடவரி யார்பெற்ற வொருபால
நாகமுடி மீதுற்ற ஞானமதி லேபத்தர்
  ஞானமுனி வோர்கட்கு மிறையோனே
வேலைவிழி வேடிச்சி யோடமரர் மாதொக்க
  வீறருணை மால்வெற்பி லுறைவோனே
வீரமுட னேயுற்ற சூரர்கிளை வீழ்விக்க
  வேலைமிக லேவிட்ட பெருமானே

தானதன தானத் தானதன தானத்
தானதன தானத்—தந்ததானே.

ஆலவிழிநீலத் தாலதரபானத்
  தாலளகபாரக் கொண்டலாலே
யாரகையால்விற் போலுநுதலால்வித்
  தாரநடையால்வற் கொங்கையாலே
யாலமயலாகிக் காலதிரிசூலத்
  தாலிறுகுபாசத் தும்பினாலே

தாழ்வி லுயர்பாழ்பட் டேழ்வினைவிடாமற்
சாகுமுனினேவற் கொண்டிடாதே
சோலைதருகானிற் கோலமறவானைத்
தோளிலுறவாகக் கொண்டவாழ்வே
சோதிமுருகாகித் தாபழயஞாலச்
சோணகிரிவீதிக் கந்தவேலே
பாலககலாபக் கோமளமயூரப்
பாகவுமைபாகத் தன்குமார
பாதமலர்மீதிற் போதமலர்தூவிப்
பாடுமவர்தோழற் றம்பிரானே.

தனனதன தானதத்த தனனதன தானதத்த
தனனதன தானதத்த—தனதான.

முழுகிவட வாமுகத்தி லெழுகனலி லேபிறக்கு
முழுமதிநி லாவனிற்கும் வகையாலும்
மொழியுமட மாதருக்கு மினியதனி வேயிசைக்கு
முதியமத ராசனுக்கு மழியாதே
புழுகுதிகழ் நீபமத்தி லழகியகு ராநிரைத்த
புதுமையினி லாதிரட்டி புயமீதே
புணரும்வகை தானினைத்த துணரும்வகை நீலசித்ர
பொருமயிலி லேறிநித்தம் வரவேணும்
எழுமகர வாழிசுற்று பொழிலருணை மாநகர்க்கு
ளெழுதரிய கோபுரத்தி லுறைவோனே
யிடைதுவள வேடுவச்சி பவளவித ழேதுடிப்ப
விளமுலைவி டாதசித்ர மணிமார்பா
செழுமதிய நாகமொய்த்த வொழுகுபுனல் வேணிவைத்த
சிவனைமுத லோதுவித்த குருநாதா

இசைமுகன் முராரிமற்று மரியபல தேவருற்ற
சிறையடைய மீளவிட்ட பெருமானே.

தனன தனதன தனன தனதன
தனன தனதன—தனதான.

இறுகு மணிமுலை மருவு தாளமு
மெரியு மெழுமதி நிலவாலே
யிரவி லெனதுயிர் கவரவருகுயி
லிசையு முறுகட லலையாலே
தருக ணதிபதி மதனன் விடுகொடு
சரமு மினியெனை யணுகாதே
தருண மணிபொழி லருணை நகருறை
சயில மிசையினில் வரவேணு
முறுகு திரிபுர மறுகு கனலெழ
முறுவ லுடையவர் குருநாதா
முடிய கொடுமுடி யசுரர் பொடிபட
முடுகு மரகத மயில்வீரா
குறவர் மடமக ளமிர்த கனதன
குவடு படுமொரு திருமார்பா
கொடிய சுடரிலை தனையு மெழுகடல்
குறுக விடவல பெருமானே.

தனனதத்தத் தத்ததத்தத் தனதன
தனனதத்தத் தத்ததத்தத் தனதன
தனனதத்தத் தத்ததத்தத் தனதன—தனதான.

கமலமொட்டைக் கட்டழித்துக்குமிழியை
நிலைகுலைத்துப் பொற்குடத்தைத் தமனிய
கலசவர்க்கத் தைத்தகர்த்துத் தலையற விளநீரைக்

கருவிலட்டைப் பிற்றுராத்திப் பொருதவ
சயம்விளைத்துச் செப்படிப்பித் தலவிய
கரிமருப்பைப் புக்கொடித்துத் திதன்மத னபிடேக
மமலர்நெற்றிக் கட்ட ழுக்குட் பொடிசெய்து
வதிகசக்ரப் புட்பறக்கச் சொடுமைமி
னடனமிட்டச் சப்படுத்திச் சபதமொ டிருதாள
மறைதல்கற்பித் துப்பொருப்பைக் குலவிய
சிறகறுப்பித் துக்கதித்துப் புடைபடு
மபினவச்சித் ரத்தனத்துப் திருடிக ஞறவாமோ
தமரமிக்குற் றுக்கலக்கப் பலபறை
தொகுதொகுத்தொக் குத்தொகுக்கத் தொகுதொகு
தரிகிடதத்தத் தத்தரிக்கத் தரிகிட வெண வோதி
சடவுடற்பக் கப்பழுத்துப் புகையெழு
விழிகளுட்செக் கச்சிவத்துக் குறளிகள்
தசைகள்பட்சித் துக்களித்துக் கழுகொடு கழுகாட
வமரில்மெத்தக் கொக்கரித்துப் பொருதிடு
மசுரரத்தத் திற்குளித்துத் திமியென
வடிநடித்திட் டுக்கைகொட்டிச் சமர்செயு மயிலான
வழகுமிக்குச் சித்திரப்பொற் புரவியி
னுலவுகீர்த்தக் கொற்ற சித்துக்குருபர
வருணையிற்சித் தத்தெனக்குத் தெளிவருட் பெருமாளே.

முற்றிற்று.

திருவண்ணாமலை க்ஷேத்திரவெண்பா.

வேதச் சிரத்தும் விடன் கயிலைத் தடத்து
மோதித் தெளிந்தார்த் துள்ளத்தும்—நாதிக்கும்
தண்ணாரமுதமழைத் தாழ்பொழில்சூழ் தென்னருணைக்
தண்ணாரமுதன் கழல்.

உ

சிவமயம்.

திருவண்ணாமலை
குகைநமச்சிவாயர் உபதேசம்பெற்றுச்
சிதம்பரத் திருப்பணிசெய்த

குருநமச்சிவாயர் சரித்திரம்.

தலைச்சுரமென்னுந் * திருநாமம்பெற்ற திருவண்ணாமலையில் நமச்சிவாயமூர்த்தி யென்றொரு சித்தர் எழுந்தருளி இருந்தனர். அவர் மேற்படியூர் மலையின்மேற் குகைசெய்து நிஷ்டைபுரிந்து வந்தமையால், குகைநமச்சிவாயமூர்த்தியெனக் கூறப்பட்டனர். அவர் அக்குகையின் சமீபத்தில் வளர்ந்தோங்கிநின்ற ஓர் ஆலவிருட்சத்தின்மீது தூங்கும் ஊஞ்சலிட்டு, அதில் யோகநித்திரைகொள்வது வழக்கம். அவருக்கு நமச்சிவாயமூர்த்தி யென்றொரு சீடரிருந்தனர், அவர் அங்கேயிருந்து அதிபக்தியுடன பணிவிடைசெய்துகொண்டிருக்கும்போது ஒருநாள் குலுக்கென்று நகைத்தார்; நமச்சிவாயம்! என்ன வதிசயங்கண்டு நகைத்தாயென்று கேட்டார். உடல், பொருள், ஆவிமூன்றுந் தத்தஞ்செய்ய, அவைகளைப் பெற்றுக்கொண்டு அடிமையை யாள விருப்புற்ற தெனதை னே!

திருவாரூரின்கண் தியாகராஜசுவாமிகள் எழுந்தருளச் செய்து தெருவீதி வரும்போது அப்ஸரப் பெண்களுக் கொப்பற்ற நடனநாட்டியப்பெண்கள் ஆடிக்கொண்டுவர, அதிலொரு தேவதாசி கால்தடக்கி விழுந்தாள். அங்குநின்றவர்களெல்லாம் நகைத்தார்கள், அடிமையும் நகைத்தேன். அஃதே தவிர மற்றொன்று மில்லையென்றார்.

இது நிற்க, மற்றொருநாள் வஸ்திரத்தைப் பிடித்துத் தேய்த்தார், அஃதேதுக்காகத் தேய்த்தது என்று குகைநமச்சிவாயமூர்த்தி கேட்க; சிதம்பரத்திலே கனகசபைக்குக் கறுப்புத்திரை யிட்டிருந்தது, அதற்கருகே குத்துவிளக்கிலே நெய்விட்டுத் திரிபோட்டெரிய, அஃதை ஒரெலியிழுத்துக்கொண்டுபோக, அத்திரை பற்றிக்கொண்டது. அங்கிருந்தபேர் அதைத் தேய்த்தார்கள்; அடியேனும் மேன்மேலும் எரியாவண்ணம் தேய்த்தேன் சுவாமி யென்றார்.

பின்பொருநாள், குகைநமச்சிவாயமூர்த்தி சிலகாரணார்த்த சோதனை நிமித்தம் வாந்திசெய்து, அதைத் திருவோட்டிற் பிடித்து இதை மனிதர் அடிபடாத இடத்திற்கொண்டுபோய்விடென்று கட்டளையிட்டனர்; அதை நமச்சிவாயர் மனிதர் சஞ்சரிக்கப்படாத விடமெதுவென வறிந்து தானே வாங்கி உட்கொண்டனர்.

ஆசாரியர் இவ்வற்புதச் செய்கையையறிந்து சிஷ்யரைப்பார்த்து அப்பா நமச்சிவாயம்; அடிபடாதவிடத்தில் வைத்தாயாவென்று கேட்டார். சிஷ்யர் வைக்குந்தானத்தில் வைத்தேனென்று தலைவணங்கிக் கூறினர். அதற்குமேல் இந்த மூன்று அதிசயமும்பார்த்து, நம்மினின்றுஞ் சிஷ்யனுக்கு வர வர ஞான உதயம் அதிகமாகிறது. இவ்விடத்தில் வைத்திருக்கக்கூடாது இன்னும் ஓர் அதிசயம்பார்த்துச் சீடனை அதற்கேற்ற இடத்திற் கனுப்ப வேண்டுமென்று ஆலோசனைசெய்து, ஒருவெண்பாவி லரைவெண்பா எடுத்துக் குகைநமச்சிவாயமூர்த்தி கூறினர்; அது வருமாறு:—

நேரிசை வெண்பா.

ஆல்பழுத்துப் பக்கியினுக் காகார மானதென
வேல்பழுத்து நின்றநிலை வீணிலெனச்—

என்றனர்—அருகே இருந்தசீடர் ஏன். சுவாமி! குறைவெண்பாவையு முடிக்கலாமே என்றுசொன்னார். ஆசாரியர், அப்பா நமச்சிவாயம்! குறைவெண்பாவும் நீ முடிக்கலாமே என்றுசொன்னார். சிஷ்யர் சுவாமீ! குருவாக்குக் கெதிர்வாக்கடியேன் சொல்லக்கூடாது; இது சிஷ்யனுக்கடுத்ததல்லவே என்று சொன்னார். நீ ஞானப்பிள்ளை யானபடியினாலே சொல்லுகவென்று குருவாக்குவந்தது. நமச்சிவாயர் அதைச் சிரமேல்வகித்து அக்குறை வெண்பாவையு முடித்தனர். அஃதெப்படியென்னில்:—

—சரலவனச்

செய்ய பொருத்தருடன் சேர்ந்து மிருப்போ
மெய்ய நமச்சி வாயா.

என்று முடித்தார்.

அதற்குமேல் குகைநமச்சிவாயமூர்த்தி யோக நித்திரைச்செய்யும் மஞ்சம்விட்டிறங்கி, அப்பா என் இருகண்மணியே! இன்றன்றோ நீ மெய்ஞ்ஞானத்தை யடைந்தாய்! ஆச்சரியம்! ஆச்சரியம்! உன்னைப்போல சிஷ்யன் யாருக்குக்கிடைப்பான்! ஆகையால் இன்று தொட்டு நீ குருநமச்சிவாயமூர்த்தி எனத் திருநாமம் பெறப்பட்டாய் என்று தழுவிக்கொண்டு, ஒருகம்பத்திலே இரண்டியானை கட்டக்கூடாது; இதுவோ போகஸ்தலம், அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தைத் தாநின்ற அம்பலவாணர் எழுந்தருளியிருக்கும் திவ்விய க்ஷேத்திரமாகிய சிதம்பரம் என்னுந்தலம் ஒன்றுளது அத்தலம் உம்மால் இன்னுந் திருப்பணிமுதலிய காரியங்கள் நடக்கவேண்டியிருப்பதால், அங்கேபோய்ச் சேருமென்று கட்டளையிட்டனர். சிஷ்யர், சுவாமீ அடியேன் குருதரிசனம் செய்துகொண்டு, இவ்விடம் குருபாதம் சேர்வனேயல்லாமல், வேறொரு ஸ்தலத்திற்குப் போவதில்லை என்றும்! பின்னும் அடியேன் நித்தியம் குருதரிசனமில்லாமல் இருப்பதில்லை என்றுங்கூறினர். குகைநமச்சிவாயர் நீர் சிதம்பரம் போய் கனகசபையை தரிசனஞ்செய், அங்கே நம்மைப்போல் தரிசனங் கொடுத்தாலிரும், அல்லாவிடில் இவ்விடம் வந்துவிடும் என்றுசொல்ல; சிஷ்யர் நல்ல புத்தி தந்தீர் என்று குருவுக்குத் தோத்திரஞ்செய்த விபரம்.

25

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வாக்காலே தியானத்தாலே மனமகிழ் கிருபையாலே
நோக்காலே பரிசத்தாலே நண்ணிய பிறவி தீர்க்கு
தாக்கான நமச்சிவாய [illegible]
நாற்காலி காலதாளு ஞன் முத்தி பெறலுமாமே.

என் றிந்தப்பிரகாரம் அடிமைக்கிரமமாய்ப் பத்து பாடல் தோத்திரம் செய்தனர். "நடக்கலாம்" என்று குருவாக்குவந்தது.

உடனே குருநமச்சிவாயர் தனியராய் சாயங்காலம் புறப்பட்டுக் கிழக்குநோக்கிக் காதவழிவந்தார். இருட்டிப்போயிற்று; அவ்விடத்தில் ஒரு இடம்பார்த்து ஓர்விருக்ஷத்தின்கீழ நிஷ்டையிலிருந்தார், ஒரு சாமத்திற்கு மேற்பசிப்பிணியால் நொந்து அப்போது உண்ணாமுலை யம்மையாரைநோக்கி ஒரு வெண்பா இயற்றினர்.

நேரிசை வெண்பா.

அண்ணா மலையா ரகத்துக் கினியாளே
யுண்ணா முலையே யுமையாளே — நண்ணு
வினைதோறும் [illegible]றுசெய நின்னடிய ருண்ண
மனைதோறுஞ் சோறுகொண்டு வா.

இவ்வெண்பா இயற்றிய சமயத்தில், அண்ணாமலையாருக்குச் சர்க்கரைப் பொங்கல்செய்து, பொற்றாம்பாளத்தில் வைத்து, நைவேதித்துக் கோவிலிலே வைத்துத் திருக்காப்

பிட்டு அர்ச்சகர் முதலியோர் மறந்துபோய் அவரவர் வீடுவந்து சேர்ந்தார்கள். பின்பு அதையறிந்த உண்ணாமுலைத்தாயார் கொண்டுவந்து குருநமச்சிவாயமூர்த்திக்குக் கொடுத்துவிட்டுக் கோயிலுக்குப் போய்விட்டார். விடிந்தபின் அர்ச்சகர் முதலானவர்கள் கோவிலுக்குவந்து கதவைத்திறந்து பொற்றாம்பாளத்தைப் பார்த்தார்கள். பொற்றாம்பாளம் எங்குங்காணோம்! யாரோ கள்வன்வந்துகொண்டுபோய்விட்டானென்று கோவிற் குருக்கள் முதலானோரும், பட்டினத்திலுள்ளவர்களும், இஃதென்ன அதிசயமோ! தெரியவில்லையென்று அவரவர் ஆலோசனைசெய்ததில், இருபது நாழிகை மட்டும் பூசையில்லாமல் இருந்தது. அப்போது ஒரு பிராமணப் பிள்ளையின்மீது ஆவேசம்வந்து குருநமச்சிவாயமூர்த்தி சிதம்பர தலத்துக்குப் போகின்ற வழியிலே ஆலமரத்தின் கீழே இருக்கிறார். அவருக்கு அமுதுகொண்டுபோய்அம்மையார் கொடுத்தார். அங்கே தாம்பாளங்கிடக்கிறது. எடுத்துக்கொண்டு வாருங்களென்று சொன்னார். அதைக்கேட்டு ஆச்சரியமுற்று அணியண்ணாமலையாரையும் உண்ணாமுலையம்மையாரையுந் தோத்திரஞ்செய்து, அதற்குமேல்குருக்கள்முதலிய யாவரும் அவ்விடம்சென்று தாம்பாளத்தைக் கண்டு எடுத்துக்கொண்டு அருணாசலப்பதிக்கு வந்துவிட்டார்கள்.

பிறகு மறுநாளருணோதயத்தில் குருநமச்சிவாயமூர்த்தியெழுந்து நித்திய கடனை முடித்துக் குருவைத் துதிசெய்து கிழக்குநோக்கி வரும்வழியில் இருடிவந்தனம் என்றொரு திவ்விய ஸ்தலத்தைக்கண்டனர். அத்தலத்தில் அம்மையாரும் சுவாமியும் அர்த்தபாகம் பிரியாமலிருக்கிறது. முனிவர்களுக் கரசனாகிய அகத்திய மகாமுனிவரால் பூசிக்கப்பட்டது. அங்கு ஐயாயிரங் கொண்டான் என்றோர் திவ்விய தீர்த்தமு முண்டு. அதில் ஸ்நானம்பண்ணிப் பூசைமுடித்துத் திரிகரண சுத்தியுடன் சுவாமியைத்துதித்துத் தரிசனஞ் செய்துகொண்ட பின்னர் தீர்த்தக்கரையில் நிஷ்டையி லிருக்கும்போது பசிநோய் வந்ததாக, அப்போதியற்றிய:—

நேரிசை வெண்பா.

தாயிருக்கப் பிள்ளை தளருமோ தாரணியி
னீயிருக்க யான்றளர னீதியோ—வேயிருக்குந்
தோளியே விண்ணோர் துதிக்குந் திருமுத்து
வாளியே சோறு கொண்டுவா.

இவ்வாறு சொன்னமாத்திரத்தில் அம்மையார்செவியில் அம்முறை கேட்டவளவில் வந்து என்னப்பா! நான் அர்த்தபாகம் பிரியாம லிருக்கவும் நீ பிரித்துப் பாடினது சரியா? இப்போது உன் வாக்கினாலே சேர்த்துப் பாடவேண்டுமென்றுகூற, அவ்வாறேகுருநமச்சிவாயமூர்த்தி சேர்த்துப்பாடிய:—

நேரிசை வெண்பா.

மின்னும் படிவந்த மேகலைத் தீசருடன்
மன்னுந் திருமுத்து வாளியே—பொன்னின்

களையானே தாயேயென் கன்மனத்தே நின்ற
மலையானே சோறு கொண்டு வா.

என்று இவ்வெண்பாவைச்சொன்னவுடனே, அம்மையார் அ
முதுகொண்டுவந்து கொடுத்தாள். அதை யுட்கொண்டு அங்கு
ன்று புறப்பட்டு விருத்தாசலம் வந்து மணிமுத்தா நதியிலே ஸ்
நானஞ்செய்து, பழமலை நாதரையும் பெரியநாயகி யம்மையாரை
ம் தரிசித்து ஒரு குளக்கரையில் நிஷ்டையி லிருக்கும்போது ப
வந்தது, அப்போது சொல்லிய:—

நேரிசை வெண்பா.

நன்றிபுனை யும்பெரிய நாயகியெ னுங்கிழத்தி
யென்றுஞ் சிவன்பா லிடக்கிழத்தி—நின்ற
நிலைக்கிழத்தி மேனிமுழு நீலக் கிழத்தி
மலைக்கிழத்தி சோறு கொண்டு வா.

இவ்வெண்பாவைச் சொன்னவுடனே, அம்மையார் தன்னே
நிக்கொண்டு விருத்தாம்பிகையாய் வந்து குரு நமச்சிவாய மூர்த்தி
யைப்பார்த்து என்னப்பா! உன்னுடைய வாக்கினாலே என்னைக்கி
ழத்தி கிழத்தி என்று பாடுதல் நலமா! கிழவிக்கு நடக்கவியலுமா!
ஜலமெடுக்கத் தன்னுமா! அமுது கொண்டுவர முடியுமா! என்று
சொல்ல, குரு நமச்சிவாயமூர்த்தி அம்மா! பால காசியிற் பாலாம்
பிகை, இது விருத்தகாசி, நீரும் பெரியநாயகி, உம்முடைய சுவா
மியும் பழமலைநாதர், அதற்காக நான் அப்படிச் சொன்னேனென்
று சொன்னார். அம்மையார் உன்னுடைய வாக்கினாலே இளமை

யாய்ச் சொல்லவேண்டுமென்று கேட்க குருநமச்சிவாயர் இரண்டு அம்மையார் ஆகிறதே என்று சொல்ல, அம்மையார் ஆனால் ஆகட்டும், இளமையாய்ச் சொல்ல வேண்டுமென்று சொன்னார்! அதற்குமேற்சொன்ன:—

49

நேரிசை வெண்பா.

முத்தநதி சூழு முதுகுன் றுறைவானே
பத்தர் பணியும் பதத்தானே—யத்த
னிடத்தானே மூவா முலைமே லார
வடத்தானே சோறு கொண்டு வா.

இவ் வெண்பாவைச் சொன்னவுடனே, அம்மையார் பாலாம்பிகையாய்ச் சோறுகொண்டுவந்து கொடுத்தார். அதை உட்கொண்டு அதற்குமேல் நடந்து புவனகிரிக்குவந்து நாலு கோபுரமும் தரிசனைசெய்துசொல்லிய:—

நேரிசை வெண்பா.

கோபுரங்க ளென்னினையுங் கண்டமட்டிற் குற்றமெலாந்
தீபரந்த பஞ்சதுபோற் சென்றதே—நூபுரங்க
ளார்க்கின்ற செஞ்சரண வம்பலவர் நின்பாதம்
பார்க்கின்றோர்க் கென்றே பலன்.

இவ் வெண்பாக் கூறிக்கொண்டே சிதம்பரம்வந்து கோவிலிலேபோய்ச் சிவகங்கா ஸ்நானஞ்செய்து சொல்லிய:—

நேரிசை வெண்பா.

கண்டமட்டிற்கண்டவினை காதம்போங்கையிலள்ளிக்
கொண்டமட்டிற்கொண்டவினை கொல்லைபோம்—வண்டமிழ்சேர்
வாயாரவேபுகழும் வண்ணச் சிவகாமித்
தாயார் திருமஞ்சனம்.

இவ் வெண்பா சொன்னவுடனே கனக சபைக்குப்போய் சுவாமி தரிசனஞ் செய்யும்போது, சபாநாதர் மலையின்பேரிலிருந்த குகை நமச்சிவாயரைப்போலவே தரிசனங் கொடுத்தார் அப்போதுதோத்திரஞ்செய்த:—

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

திருவணா மலையிற் குகைநமச் சிவாய
தேசிக வடிவமா யிருந்து
காவணா மடியேன் சென்னிமே லுனது
கழலிணை வைத்தவா றுணரேன்
விரகனா ரியரைப் புதல்வரைப் பொருளை
வேண்டிய வேண்டிய தனைத்தும்
பரவினார்ப் புகழ்வார்க் களித்திடும் பொன்னம்
பலவனே பரமரா சியனே.

என்று இந்தப்படி நூறுபாடல் ஒரு நாழிகையில் நின்றபடியே பாடித் தோத்திரஞ் செய்துகொண்டு, அதற்குமேல் ஒரு அறையில் யோக நிஷ்டையி லிருந்தனர்; அப்போது தில்லை மூவாயிரவரிலே மூன்றுபேர் குருக்கள்மார் பல்லக்கு ஏறுகிறவர்கள்; அவர்கள்பேர் சிவமுத்தர், ஜடாமுத்தர், மகாமுத்தர், அம்மூவரிடம் சென்று திருவண்ணாமலையிலிருந்து, ஒரு சந்நியாசி நம்மன்பன் வந்திருக்கின்றனன். அவன் யோகத்திலே அதிகமாயிருப்பவன் அவனுக்குத் தனித்து இடங்கொடுக்கவேணும். அவனாலே நமக்கு அநேக திருப்பணிகளாகக் காத்திருக்கின்றன. அதற்கெங்கே இடம் என்றால் நம்முடைய கோவிலுக்கு வடபுறத்தின் எல்லைக்கப்புறம் இடமிருக்கிறது அங்கே நாம்போய் இரண்டுநேரம் பாதம்வைத்திருக்கிறோம். அஃது எதற்காகவெனில், மாணிக்கவாசகருக்குத் திருவாசகம் எழுதுவதற்காகவும், உபமன்னியருக்குத் திருப்பாற்கடல் அழைப்பித்துக் கொடுப்பதற்காகவும் போயிருந்தோம் அவ்விடத்தில் இவரைக்கொண்டுபோய் விடுங்களென்று வாக்களித்தனர். அந்தப்படியே குருக்கள் மூவரும் குரு நமச்சிவாயமூர்த்தியைக் கொண்டுபோய் அவ்விடத்திலிருக்கச்செய்து, கோவிலுக்கு வந்துவிட்டார்கள். அதற்குமேல் நிஷ்டையிலிருக்கும்போது பசி வந்தது அப்போது சொல்லிய:—

வெண்பா.

ஊன்பயிலுங் காய முணராம லுன்றனது
வான்பயிலும் பொன்னடியை வாழ்த்துவேன்-தேன்பயிலுஞ்
சொல்லிய னல்லார் துதிக்குஞ் சிவகாம
வல்லியே சோறு கொண்டு வா.

இவ் வெண்பாவைச் சொன்னவுடனே, சிவகாமியம்மையார் அமுதுகொண்டுவந்துசொன்ன:—

நேரிசை வெண்பா.

பிராட்டியார் திருவாக்கு.

கொண்டுவந் தேன்சோறு குகைநமச்சி வாயருந்
தொண்ட ரடியார் சுகிக்கவே—பண்டுகந்த
பேய்ச்சிமுலை யுண்ட பெருமா னுடன்பிறந்த
கச்சி சிவகாமி நான்.

இவ்வாறு அம்மையார் சொல்லி நித்தியமும் அன்னங் கொண்டுவந்து கொடுக்கக் குருநமச்சிவாயமூர்த்தி யோகத்திலிருந்து வந்தனர்.

இப்படி இருக்க, வருவார் போவார் அநேகர் பார்த்து மகா பெரியவரென்று பணங்களை எதிரில் வைத்துவிட்டுப்போவார்கள்; அவை அதிகமாய் குவிந்து கிடக்க, அவைகளை குருநமச்சிவாயர் பார்த்து, இது ஆட்கொல்லி, இவ்விடம் வருவானேனென்று அந்நேரம் யார் முன்னே நிற்கிறார்களோ அவர்களை வாரிக்கொண்டு போகக் கட்டளையிட, அவரவர்கள் வாரிக்கொண்டு போவார்கள், அப்படி நடத்துவதைத் தில்லை மூவாயிரவர் பார்த்து, இப்படி வீணாக அநேக திரவியம் போகிறதென்று யோசித்துக் குருநமச்சிவாயமூர்த்தியினிடத்திற்போய், தேவர் இவ்விடத்திலிருக்கிறபடியினால் கண்டபேர் திரவியங்களை வாரிக்கொண்டு போகிறார்கள்; கோவிலுக்குள்ளே வந்தால், அநேகதிருப்பணிகள் நடக்கும், அநேக கட்டளைகள் நடந்துவரும் உள்ளே வரவேண்டுமென்று சொன்னார்கள். நாம் சபாநாயகர் உத்தரவின்மேல்வந்துவிட்டோம்; நம்

க்கங்கே வரவேண்டியதென்னவிருக்கிறது என்றுசொல்ல; இவர் நாம் அழைத்தால் வரமாட்டாரென்று இவர்களிற்சிறந்த மூவரும் சபாநாயகரிடஞ் சென்று குருநமச்சிவாய மூர்த்தி கோயிலுக் குள்ளே வந்தால், அநேக திருப்பணிகள் அநேக கட்டளைகள் நடந்து வருமென்று சொன்னார்கள்? சபாநாதர் நல்லது உங்களுக்கு வரமாட்டார், நாமேபோய் அழைத்து வருகிறோமென்று ஜங்கமரூபவிருத்தராய்த் தண்டு கமண்டலம்பிடித்துக்கொண்டு, திருப்பாற்கடலுக்குவந்து குருநமச்சிவாயமூர்த்தி நிஷ்டையிலிருக்க எதிரே நின்றார்; குருநமச்சிவாயர் நிஷ்டைநீங்கிப்பார்த்தார், பெரியவராய் எதிரில்நிற்பதைக்கண்ணுற்று சரணார்த்தியென்றுசொன்னார்; வந்தவரும் சரணார்த்தியென்றார். ஐயா! நீங்களிருப்பது எந்தவூரென்று கேட்டார். நாம் இருப்பது தில்லை வனமென்றார், உம்முடைய பெயர் என்னவென்று கேட்டார். நம்முடைய பெயர் அம்பலத்தாடுவார் என்றுசொன்னார். இவ்விடத்தில் வந்தகாரியம் என்னவென்று கேட்டார். அன்னந் தேவையாயிருக்கிறது, இவ்வூர் முழுதுஞ் சென்றேன். இங்குப்போனால் அகப்படுமென்று சொன்னார்கள். வந்தேனென்று சொன்னார். அதற்குக் குருநமச்சிவாயமூர்த்தி நமக்கு தேவி கொண்டுவந்து அன்னங் கொடுக்கிறது. நம்மிடத்தில் பாத்திரங்கூட இல்லையென்று சொன்னார், சுவாமி! இதோ பாத்திரமிருக்கிறதென்று சந்திரனைப் பாத்திரமாய் வைத்தார். குருநமச்சிவாயர் தேவியை நோக்கினார், அன்னம் வந்தது இதைக் கொள்ளுமென்றார். அம்பலத்தாடுவார் நாம் கொள்ளுகி

றதில்லையென்று சொன்னார். குருநமச்சிவாயர் எதற்காகவென்றார்; இந்தப்பிரகாரம் நித்தியம் அன்னங்கொடுத்தால் கொள்ளுவோம். இல்லாவிடில் கொள்ளுகிறதில்லையென்றார். நீரோ மிகவும் பெரியவராய் விருத்தராயிருக்கின்றீர். நானோ காசியோ ராமேசுவரமோ, உமக்கெப்படி நித்தியம் அன்னங் கொடுக்கிறோமென்று நாம் சொல்லுகிறது என்றார். உமக்கு முன்னே நடந்தால் அன்னங் கொடும். பின்னால் இருந்தால் அன்னம்வேண்டாமென்று சொன்னார். நீர் முன்னே நின்றால் அன்னங் கொடுக்கிறேன், அல்லாவிடிற் கூடாதென்றார். சுவாமீ, நாம் முன்னிற்கிறோமென்றார். அதற்குமேல் குருநமச்சிவாயர் சுவாமியை அமுது கொள்ளுமென்றார். விபூதி கோவிலும், உருத்திராக்கமும் தொட்டுக் கொடுத்தால் கொள்வோமென்றார், நீர் முன்னின்றால் கொடுக்கிறே னென்றார். நல்லது முன்னிற்கிறோம் என்றார். அப்படியே படைக்கிறோம் என்றார். அமுதைக் கொள்ளும் பாவனையாய்க் கொள்ளும்போது, தாகத்துக்குத் தீர்த்தம் வேண்டுமென்றார். அதோ திருப்பாற் கடலிருக்கிறது ஜலம்கொள்ளுமென்றார் அப்படியே கொள்ளப்போய் மறைந்து கோவிலுக்குப்போய், தில்லை மூவாயிரவரை யழைத்து நாம்போய்த் திட்டஞ்செய்து வந்திருக்கிறோம். நீங்கள் அனைவருங்கூடி நமக்குண்டான விருதுகளையும் நாம் ஏறுகிற சிவிகையையும் எடுத்துக்கொண்டுபோய், அவரை அச்சிவிகையிலேற்றி விருதுகளுடன் வீதிப்பிரகாரஞ்செய்து நம்மிடத்திற்குக் கொண்டுவந்துவிடுங்களென்று சொன்னார். அப்படியே தில்லை மூவாயிரவர் எடுத்துக் கொண்டுபோய் இனிமேலாவது வரலாமே! இந்தப் பல்லக்கின்பேரில் ஏறவேண்டுமென்று

சொன்னார்கள். நமக்கேன் பல்லக்கு தேவையில்லையென்று சொன்னார். இது பல்லக்கு அல்ல ஞாக்யசிங்காசனம் என்றார்கள் கூடாதுயென்றார். அதற்குமேல் நேற்று மத்தியானம் எங்கள் சுவாமி தங்களிடத்திற்கு வந்தாரே, நீங்களென்ன சொன்னீர்கள் என்றார்கள். குருநமச்சிவாயர் நிஷ்டையிலே பார்த்தார். சபாபதி தரிசனமாயிற்று இவ்விடத்திற்கும் வந்து அங்கும்போய்ச் சொன்னாரவென்று அப்போதுசொன்ன:—

நேரிசை வெண்பா.

சங்கமரா யம்பலவர் தாமே யெழுந்தருளி
யிங்கெமக்குப் பிச்சை யிடுவென்ன—வங்கமுது
திட்டமுட னமக்கு நீதினமு மேசர்வ
கட்டளையுண் டாக்குகென்றார் காண்.

இவ்விதமாய்ச் சொல்லிக்கொண்டே பல்லக்கிலேறி வீதிப்பிரகாரம் போகும்போது சொன்ன:—

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அல்லலாகிய வருவினை தனையறுத் தடியினை தருவாரோ
மல்லனீடிய புவியின்மே வின்னமும் வரும்பிறப் பறும்பாரோ
நல்லமாறாலை மாதுமை நாயகர் நானித நவின் றேற்றுங்
தில்லைநாயக ரம்பலத் தாடுவர் திருவுளந் தெரியாதே.

இவ்வாறு சொல்லிக்கொண்டு கோவிலிலேபோய்க் கொடிக்கம்பத்தருகே பல்லக்கிறக்கி பஞ்சாக்கர மதில்மட்டும் பாதக்குறடு

இட்டுக்கொண்டு போய், அதற்குமேல் கனகசபையிற் சென்று சுவாமி தரிசனம்செய்து, தில்லை மூவாயிரவரைப்பார்த்து இப்போது நாம் என்ன கட்டளை நடப்பிவிப்போமென்று யோசனைசெய்ய, சபாநாயகர் அசரீரிவாக்கியமாய்ச் சர்வஜனத்துக்கும் சர்வகட்டளையென்று தொடும் என்று வாக்கியம் வந்தது நாம் சர்வகட்டளையென்று தொடுவதற்கு இப்போது இவ்வளவு அன்பர்களும் பார்த்திருக்கும்போது சபாநாயகர் பிச்சைகொடுத்தால் எப்போதும் நடக்குமென்று பொற்றாம்பாளத்தை யேந்திச்சொல்லிய:—

நேரிசை வெண்பா.

காதலுடன் சர்வ கட்டளையா யுன்னுடைய
பாத மலர்ப்பூசை பண்ணவே—யோது
குருவா யெனையாண்டு கொண்டவனே பிச்சை
தருவாய் சிதம்பர நாதா.

இந்தப்பிரகாரம் சொன்னவுடனே, சபாநாயகர்முன் ஆகாசமார்க்கமாய்ச் சகலஜனமும் பார்க்கத்தக்கதாக ஒரு தங்கக்காசு விழுந்தது. சுவாமியே பிக்ஷை கொடுத்தார் என்று சகலஜனமும் பொன் முத்து முதலியன அநேகமாய்ப் போட்டார்கள். குருநமச்சிவாயர் இதைத் தில்லை மூவாயிரவர் கையிற் கொடுத்துச் சிரித்து நடந்தார்,சற்றுத்தாங்கிற்று; ஏதுதாங்குகிறதென்று மூவாயிரவரைக் கேட்டார், அது எங்களுக்குத் தெரியுமாவென்று சொன்னார்கள்

குருநமச்சிவாயர் தியானத்திலே பார்த்துச் சுவாமிக்கு ஆபரணங்களிருந்ததுண்டாவென்று கேட்டார். ஆபரணம் ஏதென்றுசொல்லி அதற்குமேல் ஆலோசனைசெய்து பதஞ்சலி வியாக்ரபாதர் நடனம்பார்க்க பாதச்சிலம்பும் கிண்கிணியும் இருந்ததுண்டென்பர் அது நாங்களறிவோம்; மற்றபடி ஆபரணங்களிருந்ததில்லையென்று சொன்னார்கள். அதற்குமேல் குருநமச்சிவாயர் சிற்பிகளையழைப்பித்துப் பாதச்சிலம்பும் கிண்கிணியும் வீரகண்டாமணியும் செய்ய வேண்டும் என்ன வேண்டுமென்று கேட்க, சிற்பர் அதற்கு ஐம்பதினாயிரம் பொன் செல்லுமென்று சொன்னார். வந்திருக்கிற திரவியத்தை யெடுத்துக்கொடுத்துத் திருவாபரணஞ் செய்யச்சொல்லி யனுப்பிவைத்து அறைக்கு எழுந்தருளியிருக்க, தில்லைமூவாயிரவர் கூடிக்கொண்டு நாமனைவரும் இவராலே பிழைக்கலாமென்றிருந்தோமே! திரவியத்தைக் கொடுத்துச் சிலம்பும் கிண்கிணியும் இயற்றச்சொன்னாரே! அதுதரித்தால் நடனம் செய்யவேண்டுமே! இவருக்கு சுவாமி நடனம் செய்யப்போகிறாரோ என்று பரிகாசஞ் செய்யத் தலைப்பட்டார்கள்.

அந்தச்சொல் இவர் செவியிலே விழுந்துகொண்டிருந்தது. இப்படியிருக்க, நாற்பதாம்நாள் சிலம்பும் கிண்கிணியும் செய்துவந்தன. மூவாயிரவரையும் மற்றையாவரையும் அழைப்பித்து இப்போது சபாநாயகர் நடனம்பண்ணினால் அனைவரும் பார்ப்பீர்களாவென்று கேட்டார். நாங்கள் எத்தனை புண்ணியஞ் செய்தோமோ! எங்கள் மூவேழ்வமிசமும் கரையேறிப் போகுமென்று சொன்னார்

கள். குருநமச்சிவாயர் ஆனால் ஒருவேளை காற்றுவந்து அசைந்தார் என்று சொல்வார்கள். பலகணி வாயில்களெல்லாம் அடைக்க வேண்டுமென்று திட்டஞ்செய்து, சிலம்பும் கிண்கிணியும் சபாநாயகர் பாதத்திலே தரிக்கச் சொல்லித் தாம் நடனதரிசனம் விரும்பிச்சொன்ன:—

நேரிசைவெண்பா.

அம்பலவா வோர்கா லாடினாற் றாழ்வாமோ
வும்பரெலாங் கண்டதெனக் கொப்பாமோ—சம்புவே
வெற்றிப் பதஞ்சலிக்கும் வெம்புலிக்குந் தித்தியென
வொத்துப் பதஞ்சலிக்கு மோ.

இந்தப் பிரகாரம் சொன்னவுடனே, கலகலென நடனமாயிற்று திருநடனமாக குருநமச்சிவாயமூர்த்தி சொன்ன:—

விருத்தம்.

மிதித்தபொற் பதமு மெடுத்தபா தார
  விந்தமுஞ் சந்தவெம் புலித்தோல்
விளங்கிய விடையு முந்தியுஞ் சுழியு
  மேனிவெண் ணீற்றின தொளியுங்
கதித்தநற் கனக மேருநான் கனைய
  கனச்சதுர்ப் புயங்களுங் கான
கண்டமு முகமுஞ் சென்னியும் சரியே
  கண்டுகண் களிக்குநா ளானதோ

க மாட்டார், அது எங்களுக்குத் தெரியுமாவென்று சொன்னார்கள

துதித்துக் கீதங்கள் பலர்புகழ்ந் தேத்தத்
  தும்புரு நாரதர் பாடத்
துங்கமா மாயன் மத்தளி மிடைமேற்
  சுமந்துதொந் தோமென முழக்கத்
திதித்திதி தகுவென் றம்பிகை கௌரி
  திகழ்திருத் தாளமொத் திசைப்பத்
தில்லையம் பலத்தே திருநடம் புரியுந்
  தேவனே சிதம்பரே சுரனே.

என்று குருநமச்சிவாயமூர்த்தி தோத்திரம்செய்யவே சபாபதியார் நடனஞ்செய்யத் தொடங்கினர். சர்வரும் கீழேவிழுந்து நமஸ்கரித்து அசைவற்றிருந்தார்கள், தில்லை மூவாயிரவரில்மூன்றுபேர் கீழேவிழுந்து கண்ணை விழித்துக்கொண்டு வெகுநாழிகை நடனமாகிறதே ஆடுகிறவர் குருநமச்சிவாயமூர்த்தியும் அசைவற்றாடுகிறவர் அம்பலவாணரும், உங்கள் மகத்துவம் தெரியவராது நடனத்தை நிறுத்தவேண்டுமென்று சொன்னார்கள் குருநமச்சிவாயர் ஆடச் சொல்லுகிறது நாமா! நிறுத்தச் சொல்லுகிறது நாமா! என்று சொன்னார், சுவாமீ தாளம் போடுகிறவர்கள் நிற்கவேண்டுமென்று சொன்னார்கள். அப்போது குருநமச்சிவாயமூர்த்தி சொன்ன:—

நேரிசை வெண்பா.

[illegible] பெற
ஆக்கியகா லானுஞ் சலியாதோ—வாக்கா
தினவரதா தில்லைத் திருத்தாண்டவா நீ
யனவரதங் கூத்தாடி னால்.

இவ்வெண்பாச் சொல்லியவுடனே, மிகவும் நடனமாயிற்று. ஆகவே, தில்லை மூவாயிரவர்கூடிச் சபாபதியின் மீது குருநமச்சிவாயமூர்த்தி தோத்திரம் செய்கிறாரே! நாம் அவர்மீது தோத்திரஞ் சொல்வோமென்று தோத்திரம்செய்த தில்லைமூவாயிரவர்:—

பாடல்.

வேடநெச்சின் மிகவிரும்பும் வேளவன்றன் மேனிபொன்ற
வாடனித்தங் காளியொடா டம்பலவர் சந்நிதிக்குக்
கோடிலக்கங் கவிபாடுங் குருநமச்சி வாயரருட்
பாடன்மெச்சி யம்பலவர் பாதகச்சை யாடியதே.

இங்ஙனஞ் சொன்னவுடனே குருநமச்சிவாயமூர்த்தி நடனம் நிற்கும்படி சொல்லிய:—

நேரிசை வெண்பா.

கருதத்தா தாததியென் னாடகத்திற் கேற்ற
தகுதித்தா ளுஞ்சிலம்புந் தாளு—மருதப்பா
பாரே யினியமையும் பொன்னம் பலத்தாடு
வாரே திருத் தாண்டவம்.

இவ்விதமாய்ச் சொன்னவுடனே நடனம்நின்றது. அதற்குமேல் தில்லை மூவாயிர[illegible]ங்காகாரமானால் நாங்கள் பூசிக்கிறோமென்று சொல்லிக்கொண்டார்கள். அப்படியே செய்யலாமென்று சொல்லி அநேகதிருப்பணிகள் நடத்திவந்தனர். பின்னும் கட்டளைவித்தாரமாய் நடக்கத்தக்க

வடைடா, அது எங்களுக்குத் தெரியுமாமென்று சொன்னார்கள

தாக எழுபத்திருவர் தம்பிரான்களுக்குப் பல்லக்குப் பிருது மற்றும் வேண்டியவைகளையுங் கொடுத்துத் தேசமெங்குஞ் சஞ்சாரம் செய்வித்தனர்.

அதற்குமேல் குருநமச்சிவாய மூர்த்தி அநேககால மிருந்து திருப்பெருந் துறையிலே இலிங்காகாரம் ஆயினர்.

நேரிசை வெண்பா.

வந்தீச் சுரவருடம் வைகாசி தேதிநவ
மிந்துநா ணாழிகை யேழரைமேல்—வந்தகுரு
தானு மருணகிரி தானுசிவ லிங்கத்து
ளானா னமச்சிவா யன்.

மேல் குருநமச்சிவாயமூர்த்திமரபில் இத்தனை பட்டத்தவரென்று சொல்லுவதற்குக் காலாந்தரங்களிலே ஆதரவுகள் கைசோர்ந்துபோயிருக்கின்றன. அதற்குமேல் குருநமச்சிவாயமூர்த்தி பட்டத்திற்கு வந்தவக்காலத்தில் சபாநாயகர் சர்வகட்டளைக்கு ஸ்ரீ சாலிவாகன சகாப்தம்-௧௪௯௭-யுவ௵ தை௴ ௨௨௨ புவனேக வீரபட்டினத்து காட்டாரனைவரும் காலாட்கள் தோழரும் சிதம்பரஸ்வரர் சர்வகட்டளைக்குக் குருநமச்சிவாயமூர்த்தி பணிவிடைக்கு அரசூர்ப்பத்தில் இளங்கம்பூர் நான்கெல்லை யுட்படச் சேர்ந்தடியினாலே சந்திராதித்தர் உள்ளவரைக்கும் சிவார்ப்பிதமாகத் தந்தது.

சிலாசாதனத்துப் பாடல்.

விருத்தம்.

தென்னருணை மருவுகுகை நமச்சிவாய
தேவர் சிஷ்யன் குருநமச்சி வாயன்செய்யும்
மன்னுபணி விடையாகப் புலியூர்ச்செம்பொன்
மன்றுடையான் பூசைகொண்டு மகிழ்ந்துவாழ்க

வின்னிலமெ லாந்தழைக்க வரசூர்ப்பத்து
விலிங்கபுர சாதனக்கல் லெழுதிநாட்டி
நன்னெறிசேர் காலாட்க டோழன் சின்ன
நல்லநயி னான்கொடுத்து நடத்தினானே.

பின்னும் அரியலூர்ச் சினாமலையில் ஒப்பில்லாத மழவராயர் கட்டளை ௨௪-கிராமம்விட்டு நடந்தது. அம்பலங் கட்டளை அரைக்கட்டளை என்றுபேர். அனந்தகிரிச்சீமையில் சொக்கம்பட்டி உடையார்சீமையில் பிச்சனூர், மானூர் இரண்டு கிராமம்விட்டது. வீரகநல்லூர் என்று இரண்டுகிராமம் நடப்பிவித்தது. கள்ளக்குறிச்சியில் பாளையப்பட்டுச் சேலம் சேஷாதரப்பிள்ளை குருநமச்சிவாயபுரம் என்று ஒரு கிராமம் நடப்பித்தது. மங்களூர்ச்சீமையில் ஆதிபுரமாளிகை மேடுஎன்று இரண்டுகிராமம் நடந்தது. வேட்டவலம் பண்டாரத்தார் கரடி பூமாரி என்று இரண்டு கிராமம் நடந்தது. இவைகளெல்லாம் சபாபதி சர்வகட்டளைக்கும் குருநமச்சிவாயமூர்த்தி மடத்திற்கும் நடந்துவந்தன. உடையார்பாளையம் பண்டாரத்தார் தென்னந்தோப்புக்கு ரூபா ௪00-கொடுத்துச் சிதம்பரத்தில் சுவாமி சர்வகட்டளைக்கு வாங்கிவிட்டது. இவைகளெல்லாம் அநேகமாய் முன்னாலே நடந்தது. கலிகாலக் கொடுமையால் வரவரநின்றுபோ யிருக்கின்றன.

அந்தக்கிராமத்தி லிருக்கிற விபரம். சகாப்தம் ௧௧௯௫-௵ முதல் குருநமச்சிவாயமூர்த்தி பட்டம்-௧௭-க்கு சகாப்தம்-௧௭௨௭ ௵த்துக்குச் சரியான குரோதன௵ வரை வந்த பட்டத்துக்குள்ளாக உடையார் பாளையத்திலிருக்கிற பண்டாரத்தார் அநேகவாகனமுதலானதும் தருமமும் நடப்பிவித்தார். இந்தவாறு குருநமச்சிவாயமூர்த்தி தேசசஞ்சார யாத்திரைசெய்து சபாநாயகர் சர்வகட்டளைக்கும் மடதருமத்துக்கும் பிட்சை நடத்திவந்தது.

உடையார் பாளையம் சீமையில் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் செங்காரத்தோப்பு மடம் தீர்த்தம் உண்டாக்கிக்கொடுத்து, உடையார்பாளையம் பகுதியில் பேரணீசுவரர் கோவிலும் கிழக்கு மடமும் தீர்த்தமும் உண்டாகியிருக்கின்றன.

இளங்கம்பூர் முன்னாலே சர்வமானியகிராமம். இப்போது சர்க்காரிலே கழிந்துவருகிறது. சாலிவாகன சகாப்தம் ௧௧௯௦-க்குமேல்செல்லும் யுவ௵ தை௴ ௨0௳ இளங்கம்பூர்ச் சபாநாயகர் சர்வகட்டளைக்கு சாதனக்கல் எழுதினது காஞ்சிபுரத்திலிருந்துவந்த சின்னநல்ல காளாக்கத் தோள்படைத்தார் உடையவனு.

௨. வது, பட்டம் நல்லநாயகபண்டாரத்தார். சபாநாதருக்கு [illegible] வெள்ளியிடபம் பின்னும் சில திருப்பணிகளும் செய்துவைத்தார்.

௩. வது, அவர் புத்திரர் நல்லநாயகபண்டாரத்தார் சபாநாயகருக்குப் [illegible] குதிரையும் அநேக [illegible] பூர்த்தங்களும் உடையார்பாளையம் சீமையில்மாலேரி என்னுங்கிராமமும்நடப்பிவித்தனர்.

சாலிவாகன சகாப்தம் ௧௧௯௫-க்குச் செல்லாநின்ற ஜய௵ தை௴ ௨௨௳ சின்னநல்லநாயகபண்டாரத்தார் புத்திரர் நல்லநாயகபண்டாரத்தார். அவர்புத்திரர் சின்னநாயகபண்டாரத்தார். பாளையம் அரண்மனையும் ஆலயமும் மடமும் மற்றுமுண்டான தருமங்களெல்லாம் செய்தனர். அவர்காலத்தில் சாலிவாகன சகாப்தம் சார்வரி௵ மார்கழி௴ ௨௨௳ மானூர் பிச்சனூர் இந்த இரண்டுகிராமமும் ஜயங்கொண்ட சோழபுரச் செங்காரத்தோப்பும் செய்துவைத்தனர்.

௪. வது, பெரியநல்லநாயக பண்டாரத்தார் காலத்திலே பூதவாகனம், மயில்வாகனம், அன்னவாகனம்செய்து உற்சவம் நடப்பித்து மடப்புறமென்னும் கிராமமும் ஏக்கும்வாங்கித் தருமங்களைச் செய்துவந்தனர்.

௮. வது, சின்னநல்லநாயக பண்டாரத்தார் காலத்திலே சிவகாமி அம்மையாருக்குக் குருமங்கிலியஞ் செய்து, கட்டளை [illegible] கட்டிவைத்து, மேல் கோபுரத்துக்கு மேற்கே பிள்ளையார் கோவிலுங் கட்டிவைத்து, திருப்பெருந்துறைக்கு குருநமச்சிவாயமூர்த்தி மடத்துக்குத்தெற்கு ௪00-பொன் கொடுத்துத் தென்னந்தோப்பு வாங்கிவிட்டனர்.

௯. வது, சின்ன அம்பலநாயக பண்டாரத்தார் சிதம்பரவேலனுக்கு ௨0-தளிகை நைவேத்தியஞ்செய்து குருநமச்சிவாயமூர்த்தி அடியார்களுக்கு பிட்சைநடப்பிவித்துவந்தார்; சகாப்த௵ ௧௫௧0-சர்வதாரி௵ மார்கழி௴ ௨௨௨

இந்தச் சகாப்தம் வரைக்கும் கோபுரத்தில் சாசனம் இருக்கிறது.

இவ்வாதீனம் வீரசைவமடம்.

குருநமச்சிவாயர் செய்த பாடல்.

பரமரகசியமாலை-சிதம்பரவெண்பா-அண்ணாமலைவெண்பா.

குகைநமச்சிவாயர் செய்த பாடல்.

அருணகிரியந்தாதி-தனிவெண்பாமாலை.

இவ்வாதீனத்தார்க்கு நாளதுவரையில் சிதம்பர உற்சவகாலத்தில் சுவாமியுடன் பல்லக்குப் பிருதுகள் நடந்துவருகின்றன.

குருநமச்சிவாயர் சரித்திரம்

முற்றிற்று.

சிவமயம்.

திருவண்ணாமலைக்
குகைநமச்சிவாயசுவாமிகளால் உபதேசம்பெற்ற
சிதம்பரம்
குருநமச்சிவாயசுவாமிகள்
அருளிச்செய்த

அண்ணாமலை வெண்பா.

காப்பு.

மன்னுதிரு வண்ணா மலைமாலை நாயடியேன்
பன்னுதமிழ் வெண்பாவிற் பாடவே—துன்னுமலர்ப்
பாதனே மூடிகத்தின் பாலேறுந் தேவகண
நாதனே நீமுன் னட.

வெண்பா நூல்.

ஆதிநட மாடுமலை யன்றிருவர் தேடுமலை
சோதிமதி யாடரவஞ் சூடுமலை—நீதி
தழைக்குமலை ஞானத் தபோதனரை வாவென்
றழைக்குமலை யண்ணா மலை. (௧)

அன்பர் பிறப்பை யகற்றுமலை யன்பரல்லா
வன்பர் பிறப்பை வளர்க்குமலை—யன்பை
வடிக்குமலை சிங்கத்தை வந்துசிம்பு ளாகி
யடிக்குமலை யண்ணா மலை. (௨)

கூற்றை யுதைத்தமலை கோமாறன் கூடல்வைகை
யாற்றை யடைத்தமலை யாரூரன்—போற்றச்
சிறந்தமலை தீவினையேன் செய்தகுறை யெல்லா
மறந்தமலை யண்ணா மலை. (௩)

ஏழைக் கிரங்குமலை யேதேது கேட்டாலுங்
கோழைப் படாமற் கொடுக்குமலை—வேழ

முரித்தமலை யம்மைக் கொருபாக மீந்த
மருந்துமலை யண்ணா மலை. (௪)

கண்டங் கரியமலை கண்மூன் றுடையமலை
யண்டரெல்லாம் போற்றற் கரியமலை—தொண்டருக்குத்
தோற்றுமலை நாளுந் தொழுவோ ரெழுபிறப்பை
மாற்றுமலை யண்ணா மலை. (௫)

அன்னமுடன் சொன்ன மளிக்குமலை யாதரிப்போ
ருன்னுவ ரெல்லா முதவுமலை—துன்னுபுகழ்
கொண்டமலை யங்கைக் கொழுந்தாகி யண்டமுற
மண்டுமலை யண்ணா மலை. (௬)

மாமா தவநமச்சி வாயன் றினமொருவெண்
பாமாலை சாத்திப் பணியுமலை—காமாதி
என்னுமலை தான்கடந்தோ ரின்பத் திருவுளத்தே
மன்னுமலை யண்ணா மலை. (௭)

அஞ்சக் கரமா யமர்ந்தமலை யாதரிப்போர்
வஞ்சக் கருவினையை மாற்றுமலை—நெஞ்சகத்
திருக்குமலை மெய்ஞ்ஞான சித்திதருந் தெய்வ
மருந்துமலை யண்ணா மலை. (௮)

தொண்டர் குலமாகச் சூழுமலை சூழுமலர்
பண்டைவினை யெல்லாம் பறிக்குமலை—யண்ட
முருவுமலை யெந்தைகுரு வோநமச்சி வாயன்
மருவுமலை யண்ணா மலை. (௯)

கொம்பனைய பேதைக் குறமகளிர் வானிலுற
வம்புலியி னேறிவிளை யாடுமலை—செம்பவள
மொத்தமலை சற்குருவா யொண்கழலென் சென்னியின்மேல்
வைத்தமலை யண்ணா மலை. (௧௦)

ஞான குருநாத னமச்சிவா யன்கருணை
யானயா ளூறியெனை யாண்டமலை—வானவர்கள்
போற்றுமலை தீவினையேன் புந்திக் கவலையெல்லா
மாற்றுமலை யண்ணா மலை. (௧௧)

சரண கமலந் தனைப்புகழுந் தொண்டர்
மரண பவத்துயர மாறக்—கருணை
பொழியுமலை தட்டுப் புழுகு பனிநீர
வழியுமலை யண்ணா மலை. (௧௨)

அன்பர் கருத்தி லனவரத மேவுமலை
துன்ப மகலத் துரத்துமலை—யின்பம்
விளைக்குமலை செம்பொன்மக மேருவினை வில்லா
வளைக்குமலை யண்ணா மலை. (௧௩)

நன்பாக் குகையி னமச்சிவா யன்கருத்தில்
வெண்பாப் பயிராய் விளையுமலை—திண்பா
ரளந்தமலை செஞ்சுடரா யன்றிருவர் தேட
வளர்ந்தமலை யண்ணா மலை. (௧௪)

சீதமல ரோனெடுமா றேடுமலை யன்பருக்குப்
பாதமலர் வீடாய்ப் பலிக்குமலை—மாதவர்கண்
மொய்த்தமலை யுண்ணா முலையுமையைப் பாகத்தில்
வைத்தமலை யண்ணா மலை. (௧௫)

வைத்தநிதி யோநமச்சி வாயகுரு நாடோறு
மெய்த்தமிழி னாற்புகழ்ந்து மேவுமலை—யெத்திசையு
மின்னுமலை மாதுடனே வெள்ளிமலை வீடாக
மன்னுமலை யண்ணா மலை. (௧௬)

முக்கோண மாக முளைத்தமலை முண்டகன்மா
லக்கோடு நாக மணிந்தமலை—திக்கோடு

துன்னுமலை தன்னைத் துதிக்குமடி யாருளத்தின்
மன்னுமலை யண்ணா மலை. (௧௭)

வண்டமிழா லோநமச்சி வாயகுரு வேத்துமலை
கண்டுதொழு வார்க்கினிய காட்சிமலை—யண்டமுத
நீறுமலை போற்றி நினைக்குமடி யாருளத்தே
வாழுமலை யண்ணா மலை. (௧௮)

அஞ்செழுத்தாய் வேதமா யாகமமாய் நின்றமலை
விஞ்செழுத்தா யொன்றாய் விளங்குமலை—நெஞ்சகத்தே
தைத்தமலை நாயேனைத் தன்னடியார் கூட்டத்தில்
வைத்தமலை யண்ணா மலை. (௧௯)

மன்னாரு மோநமச்சி வாயகுரு செந்தமிழாற்
பன்னாரு மேத்திப் பணியுமலை—யெந்நாளு
மெய்க்குமலை பொல்லா வினையேனைத் தன்னடிக்கீழ்
வைக்குமலை யண்ணா மலை. (௨௦)

எந்தை குருநாத னிருக்குமலை யென்பாச
பந்தமற நோக்கிப் பரித்தமலை—சந்திரனைத்
தேய்த்தமலை நாயடியேன் சிந்திக்குஞ் சிந்தனைக்கே
வாய்த்தமலை யண்ணா மலை. (௨௧)

அஞ்ஞானக் கங்கு லகற்றுமலை யன்பர்க்கு
மெய்ஞ்ஞானச் சோதி விளக்குமலை—துஞ்ஞானச்
சந்தமலை நாயேற்குத் தந்தைதாய் சற்குருவாய்
வந்தமலை யண்ணா மலை. (௨௨)

நீற்றை யணிந்தமலை நீள்சுடராய் நின்றமலை
யேற்றைப் பரியாக வேறுமலை—கூற்றை
யுதைத்தமலை யன்றரியை யோர்சிம்பு ளாகி
வதைத்தமலை யண்ணா மலை. (௨௩)

ஓலமிடுந் தேவர்குழா முய்யத் திருமிடற்றி
லாலவிடந் தன்னை யடக்குமலை—நாலுமறை
யந்தமலை நாயேனை யாளக் குருவாகி
வந்தமலை யண்ணா மலை. (௨௪)

ஆதி நெடுமா லயன்காணா வன்றுபராஞ்
சோதிச் செழுஞ்சுடராய்த் தோன்றுமலை—வேத
முழங்குமலை சிந்திப்பார் முன்னின்று முத்தி
வழங்குமலை யண்ணா மலை. (௨௫)

வந்துலகி லோநமச்சி வாயகுரு வாயடியேன்
சிந்தைகுடி கொண்டிருக்குந் தெய்வமலை—முந்தைவினை
நீக்குமலை சொல்லரிய நீள்பிறவித் துன்பமெல்லா
மாய்க்கு மலை யண்ணா மலை. (௨௬)

சத்திக் கொருபாகந் தான்கொடுத்து நின்றமலை
முத்திக்கு வித்தாய் முளைத்தமலை—யெத்திசையும்
போற்றுமலை போற்றிப் புகழ்வா ரெழுபிறப்பை
மாற்றுமலை யண்ணா மலை. (௨௭)

வால மதியை மௌலியின்மேல் வைத்தமலை
சீலமுனி வோர்கள் செறியுமலை—காலங்
கடந்தமலை சீறிவருங் காலனைக்கா லாலே
யடர்ந்தமலை யண்ணா மலை. (௨௮)

சிட்ட ரிடருஞ் சிவநீதி யில்லாத
துட்டர் சுகமுந் துடைக்குமலை—நட்டம்
பயிலுமலை யெவ்வுலகும் பாழ்படுமென் றால
மயிலுமலை யண்ணா மலை. (௨௯)

கண்ட மிருளக் கடுவிடத்தை வானவர்க்கா
வுண்டபிரா னாகி யுதவுமலை—தொண்ட

ரிணங்குமலை வானோரு மேனோரும் போற்றி
வணங்குமலை யண்ணா மலை. (௩௦)

துன்பப் பசிதீர்க்குஞ் சுத்தசிவ ஞான
வின்பப் பசுந்தே னிருக்குமலை—யன்பர்க்
கிருளுமலை வாராம லெப்போதுங் காட்சி
யருளுமலை யண்ணா மலை. (௩௧)

செகமருவு மைம்புலனிற் சேராமன் ஞானச்
சுகமருவ மேன்மைபுனை தொண்ட—ரகமருவுந்
தூயமலை வஞ்சகர்க்குத் தோன்றாம லேயொளிக்கு
மாயமலை யண்ணா மலை. (௩௨)

கரத்தி லினிய கனபொருளைத் தந்தஞ்
சிரத்தி லடியிணையைச் சேர்த்தும்—பரத்து
மிகத்துமலை வாராம லென்குருவா யாண்ட
மகத்துமலை யண்ணா மலை. (௩௩)

பற்றி யிமையோர் பகைதெறுவான் வந்தெதிர்த்த
வெற்றி மதராசன் வேகவே—யுற்று
விழித்தமலை தக்கனார் வேள்விதனை முன்னா
ளழித்தமலை யண்ணா மலை. (௩௪)

பாட றனைவிரும்பிப் பாவலர்க்கா கப்பரவை
வீதிதனக் கிருகால் மேவியே—கூட
விணக்குமலை தன்புகழை யெண்டிசைக டோறு
மணக்குமலை யண்ணா மலை. (௩௫)

கந்திக்குந் தேமாங் கனிபறித்துக் கார்க்கவென்
மந்திக்கு நல்கி மகிழுமலை—சிந்தைக்கு
மெண்ணமலை வற்றோர்க் கினியமலை யோரஞ்சு
வண்ணமலை யண்ணா மலை. (௩௬)

உன்னு தவம்புரியு மோநமச்சி வாயகுரு
மன்னுங் கருணைமுகில் வாழுமலை—யென்னம்
பெரியமலை மாலும் பிரமனுந் தேடற்
கரியமலை யண்ணா மலை. (௩௭)

வேண்டு மயன்மால் விழிமனத்துக் கெட்டாம
னீண்டெழற் பிழம்பாய் நின்றமலை—யாண்ட
கருணைமலை யொப்புரைத்துக் காணவரி தான
வருணைமலை யண்ணா மலை. (௩௮)

வீடுமுதலா விரும்பும் பொருளனைத்தும்
பாடுமடி யார்க்கும் பலிக்குமலை—நீடுபுகழ்
பூண்டமலை சற்குருவாய்ப் பொல்லாச் சிறியேனை
யாண்டமலை யண்ணா மலை. (௩௯)

அனைத்துலகும் போற்றுதிரு வைந்தெழுத்தை யோதித்
னைத்தொழுது பேணுந் தவத்தோர்—நினைத்தவர
[illegible]
மல்குமலை யண்ணா மலை. (௪௦)

மானனைய கண்ணார் வசமாகி நாயடியே
னூனவினைக் காட்டி லுழலாமன்—ஞானநெறி
காட்டுமலை தன்னைக் கருதுமடி யாரிடரை
வாட்டுமலை யண்ணா மலை. (௪௧)

பிள்ளை யறுத்தூதவும் போராளனை யுவந்து
கொள்ள வயிரவமெய்க் கோலமாய்—மெள்ள
நடந்தமலை சிம்புளாய் நாரசிங்க ரூபை
யடர்ந்தமலை யண்ணா மலை. (௪௨)

உய்யவரந் தந்தருளு மோநமச்சி வாயகுரு
வையமுழு துந்துதிக்க வாழுமலை—துய்யவரக்

தேக்கு மலை நல்லோர் செறியமலை பெண்ணையா
றாக்குமலை யண்ணா மலை. (௪௩)

உண்ணா முலையா ளொருபாக மானமலை
கண்ணா ரமுதாய காட்சிமலை—விண்ணோர்
துதிக்குமலை யன்பர் தொழுதேத்தி நாளு
மதிக்குமலை யண்ணா மலை. (௪௪)

நாதனரு ளான னமச்சிவா யன்கனிவா
யோதுதமிழ் மாலை யுகந்தமலை—பாதிமதி
சூடுமலை பத்திசெயுந் தொண்டருடன் கூடிவினை
யாடுமலை யண்ணா மலை. (௪௫)

தேவரையுந் தேவருக்குத் தேவராச் செப்புமொரு
மூவரையு மண்ணோர் முனிவரையும்—யாவரையும்
பெற்றமலை தன்பெருமை பேசுங்காற் றாய்தந்தை
யற்றமலை யண்ணா மலை. (௪௬)

நேசிக்கு மன்பர் [illegible]
பூசிக்கும் பூசை பொருந்துமலை—யாசைக்குள்
வீழுமலை பற்றொழிந்த மெய்யடியார் நெஞ்சகத்தில்
வாழுமலை யண்ணா மலை. (௪௭)

நன்றிபுனை நம்ப னமச்சிவா யன்றினமுந்
துன்றுமலர் தூவித் துதிக்குமலை—யன்றிருவர்
தேடுமலை சந்ததமுந் தில்லைச்சிற் றம்பலத்தே
யாடுமலை யண்ணா மலை. (௪௮)

நெஞ்சகத்தி லொன்று நினைப்பார்க்கு மாலறியாக்
கஞ்சமொத்த பொன்னடியைக் காட்டுமலை—யஞ்செழுத்தி
னாமமலை யம்பிகையுண் ணாமுலையம் மைக்குகந்த
வாமமலை யண்ணா மலை. (௪௯)

புன்றலையின் மாயன் புவியிடந்துங் காணரிய
நன்றிதரும் பொன்னடியை நாடியே—யென்றுமொரு
நாளுமலை வாராம லேயெனைச் சற்குருவா
யாளுமலை யண்ணா மலை. (௫௦)

சண்ட விடத்தைச [illegible]ரிந்து போகாமற்
கொண்ட திறம்பாடிக் கொண்ட[illegible]—தொண்டர்
பணியுமலை மெய்ம்முழுதும் பால்வெள்ளை நீறு
யணியுமலை யண்ணா மலை. (௫௧)

தில்லைவனங் காசி திருவாரூர் தென்மதுரை
[illegible]ம் பேரொளியாய் நின்றமலை—தொல்லைமறை
பாடுமலை சந்ததமும் பத்தரக மேவிநட
மாடுமலை யண்ணா மலை. (௫௨)

மூலமுத லுண்ணா முலையென் றுமன்பருக்குச்
சாலவர மீந்தருளுந் தாயென்று—நாலுமறை
பேசுமலை பாகம் பிரியாச் சிவஞான
வாசமலை யண்ணா மலை. (௫௩)

தொன்மதுரைச் சுந்தரர்க்காத் தூதுபோய் வந்தமலை
நன்மைதரத் தொண்டருக்கு நல்குமலை—மன்மதனைக்
காய்ந்தமலை கூடலிற்சங் கத்தா ருடன்றமிழை
யாய்ந்தமலை யண்ணா மலை. (௫௪)

புண்டரிகன் மாரேடிப் பொன்முடியும் பொன்னடியுங்
கண்டறிய வொண்ணாத காட்சிமலை—தொண்டருடை
யூனமலை பற்றறுக்க வோநமச்சி வாயகுரு
வானமலை யண்ணா மலை. (௫௫)

துன்றுமலர் சோலைதொறுஞ் சூழுமலைச் சோனையென
மன்றல்கமழு மதுமாரி—யென்றும்

பொழியுமலை மாருமற் பூஞ்சுனைநீர் பொங்கி
வழியுமலை யண்ணா மலை. (௫௬)

வேட்ட வடியார் விளக்குஞ் சிவஞான
நாட்டம் பொழிபேரா னந்தநீ—நாட்டக்
குனிக்குமலை நாளுங் குறைவிலாச் செல்வ
மளிக்குமலை யண்ணா மலை. (௫௭)

நீலமலை தேடரிதாய் நின்றமலை நின்றதழற்
கோலமலை மன்றிற் குனிக்குமலை—மூலமலை
யந்தமலை சுந்தரர்கா யன்றிரவிற் றூதுபோய்
வந்தமலை யண்ணா மலை. (௫௮)

தரையெலா முய்யத் தனித்திருந்து செய்யுங்
கரையிலா மாதவத்தைக் கண்டு—விரவியொரு
பாகமலை மாதுபெறப் பாலித்து நின்றருளு
மாகமலை யண்ணா மலை. (௫௯)

கள்ளப் புலவேடர் கைவசமா கக்கனிந்து
தெள்ளித் தெளிந்தோர் செறிவாக வுள்ளக்
கருத்துமலை யாதிருக்கக் காட்டுமருந் தெய்வ
மருத்துமலை யண்ணா மலை. (௬௦)

முக்குணமு மைம்புலனு மூனா வகையடக்கி
யொக்கு முணர் வாயிருப்போ ருள்ளத்தே—புக்குலவும்
பாதமலை தாய்வயிற்றிற் பார்மீதில் வந்துபிற
வாதமலை யண்ணா மலை. (௬௧)

பண்ணடுத்த கூடற் பழம்பதியிற்பிட்டமுதை
யுண்ணடுத்து வைகை யுடையாமன்—மண்ணடுத்துப்
போடுமலை சந்ததமும் பொன்னம்பலத்தினட
மாடுமலை யண்ணா மலை. (௬௨)

அண்டமுழு தும்பறந்தே யன்னவுரு வாய்த்தேடி
மண்டலமெ லாங்கோல மாய்த்தேடிப்—புண்டரிகன்
சீர்க்கமலை கோனறியாத் தெய்வச் சிவஞான
மார்க்கமலை யண்ணா மலை. (௬௩)

கூனற் சிறுபிறையைக் கோளரவுக் கஞ்சாமல்
வானப் பணிசடைமேல் வைத்தமலை—ஞானச்
சரதமலை யானந்தத் தாண்டவத்துக் கேற்ற
வரதமலை யண்ணா மலை. (௬௪)

பொருந்துதலைச் சங்கப் புலவர்தம்மைப் போலே
விரிந்தபுகழ்க் கூடலிலே மேவி—யருந்தமிழை
யாய்ந்தமலை பார்மீதி லலைந்தெழுத்த ளுசிவந்து
வாய்ந்தமலை யண்ணா மலை. (௬௫)

ஆதிமலை யாதி யநாதிமலை யம்மையொரு
பாதிமலை யோதிமறை பாடுமலை—நீதிமலை
தந்த்ரமலை யந்த்ரமலை சாற்றியபஞ் சாக்கரமா
மந்த்ரமலை யண்ணா மலை. (௬௬)

அஞ்சு புலனு மடக்கி யறிவுடையோர்
வஞ்ச வினைப்பிறவி மாயவே—நெஞ்சி
லழுத்துமலை யன்ப ரனவரதம் போற்றி
வழுத்துமலை யண்ணா மலை. (௬௭)

கதித்தமுனி பாலகன்மார்க் கண்டனையே சீறிப்
பதைத்துவருங் காலன் படவே—யுதைத்ததொரு
வீரமலை சற்குருவாய் மேவியெனை யாண்டபட்ச
வாரமலை யண்ணா மலை. (௬௮)

இமயவரும் பத்தருமா கேசுரருங் காணச்
சமயகுரு வாகத்தி தாங்க—வுமையொருபங்

கானமலை வாக்குமனங் காய்ந்த தமக்கரிய
வானமலை யண்ணா மலை. (௬௯)

ஆத்தி கடுக்கைமுத லானமல ரைந்தெழுத்தாற்
சாத்தி யடியவருந் தக்கோரு—மேத்திப்
புகழுமலை யாங்கவரைப் பொற்கொடியோ டெய்தி
மகிழுமலை யண்ணா மலை. (௭0)

மாலூன்றிச் செய்யு மணந்தகைந்து சுந்தரனைக்
காலூன்றி யாளக் கருணையாய்க்—கோலூன்றித்
தந்த விருத்த சதுர்வே தியனாக
வந்தமலை யண்ணா மலை. (௭௧)

அறுகு மதியு மணிமுடிமேற் சூடன்
மறுகுதனி லடியார் வாழ—விறகு
சுமந்தமலை போற்றிசெயுந் தொண்ட ரகந்தோறு
மமர்ந்தமலை யண்ணா மலை. (௭௨)

மட்டலவு கஞ்ச மலரோனு மாலோனுந்
திட்டமுடன் றேடித் திகைத்தாலு—மெட்டரிய
ஞானமலை பார்மீது நாலுகத்தி னூனுவடி
வானமலை யண்ணா மலை. (௭௩)

மறைவடிவாஞ் சோமாசி மாறன் மகடன்னி
லுறைவடிவாம் பங்கினுமை யோடே—நிறைவடிவாய்ச்
சென்றமலை யந்தணர்சூழ் தெய்வக் கனகமணி
மன்றமலை யண்ணா மலை. (௭௪)

எப்பொருளு மாகி யிருசுடர்பா ராக
மெய்ப்பொருளு மாகி விளங்குமலை—கைப்பொருளை
யொத்தமலை யென்றுமே லோகமச்சி வாயனடி
வைத்தமலை யண்ணா மலை. (௭௫)

பல்லுயிருங் கேட்டறியப் பார்த்தன்கை யாலடித்த
வில்லடியும் புத்தன் மிகவெறிந்த—கல்லெறியும்
பட்டமலை மன்மதனைப் பார்வையினால் வெந்துவிழ
வட்டமலை யண்ணா மலை. (௭௬)

வானை யுருவ வளர்ந்தமலை வாமபச்சைத்
தேனையொரு பாகத்திற் சேர்ந்தமலை—யானை
யணித்திரள்சேர் சார லதில்வேய்க ளீன்ற
மணித்திரள்சே ரண்ணா மலை. (௭௭)

அன்று கயிலை யரக்க னெடுத்த வப்போ
நின்றவனைக் காலா னெரித்தமலை—யென்று
மருந்துமலை யெவ்வுலகு மன்பரிடர் நோக்கு
மருந்துமலை யண்ணா மலை. (௭௮)

அன்றுபதி னாறுவய தானமார்க் கண்டர்தமக்
கென்றுமீ ரெண்வயதே யென்றமலை—நின்று
சிறக்குமலை தன்னடியார் செய்தகுறை யெல்லா
மறக்குமலை யண்ணா மலை. (௭௯)

அன்றிருவர் தேட வனல்வடிவாய் நின்றமலை
நின்றுருகுந் தொண்டருக்கு நேயமலை—யென்று
நடிக்குமலை வெள்ளியிலே காரணனையோட
வடிக்குமலை யண்ணா மலை. (௮0)

நஞ்சணியுங் கண்டமலை நாளுமடியவர்தம்
வஞ்சவினை தானறுக்க வந்தமலை—நெஞ்சை
யிளக்குமலை யன்பர்க் கினியபே ரின்ப
வளர்க்குமலை யண்ணா மலை. (௮௧)

ஐயரவஞ் சூடுமலை பத்தர்பணிந் தேத்துமலை
கையின்மழு மான்றரித்த காட்சிமலை—துய்ய

நதியணியும் வேணியின்மே னாறுமலர்க் கொன்றை
மதியணியு மண்ணா மலை. (௮௨)

மயிலாரவஞ் சேருமலை மான்புலிகள் கூடிப்
பயிலுமலை வானோர் பரவுங்—கயிலை
பொருந்துமலை யெந்நாளும் போற்றுமன்பர் நாவா
லருந்துமலை யண்ணா மலை. (௮௩)

உற்றுப் புரத்தி லொருமூவர் தம்மைவைத்துப்
பற்றி யெரிந்துவிழப் பார்த்தமலை—நத்தியே
நாளுந் தனைத்தேடி நம்புமடி யார்தமையே
யாளுமலை யண்ணா மலை. (௮௪)

உள்ளும் புறம்பு மொருசெயலா மன்பருளங்
கொள்ளுமலை நாட்டங் குளிக்குமலை—துள்ளு
மெருத்தின்மே லேறுமலை யென்பிறவி நோய்க்கு
மருத்துமலை யண்ணா மலை. (௮௫)

துன்ப மகற்றுமலை தொல்வினையை நீக்குமலை
யன்பர்தமை வாவென் றழைக்குமலை—தன்பதத்தைக்
காட்டுமலை தன்னைக் கருத்திலுறு மன்பரிடர்
வாட்டுமலை யண்ணா மலை. (௮௬)

போதமுற்ற மெய்யடியார் புந்தியிலே வேரோட்டிப்
பாதமுச்சி மட்டாய்ப் படர்ந்தமலை—காதந்
தழைக்குமலை யன்பர் தபோதனரை வாவென்
றழைக்குமலை யண்ணா மலை. (௮௭)

முப்போதும் பூசித்து யோசித்துப் போற்றுமவர்க்
கெப்போது முன்னின் றருளுமலை—யெப்போதுந்
தாய்க்குமரி தானமலை சற்குருவாய் நாயேற்கு
வாய்க்குமலை யண்ணா மலை. (௮௮)

காலை யுதைத்தமலை கையின்மான் சூலமலை
வேலை விடமருந்தும் வெற்றிமலை—மாலை
யணிசேரு நீண்முடிமே லங்கரவ மீன்ற
மணிசேரு மண்ணா மலை. (௮௯)

மாறுபட்ட தக்கனுயிர் மாய்த்தமலை மாலயர்க்கு
நீறபட்ட செந்தழலாய் நின்றமலை—கூறங்கா
லொப்பனைக ளில்லா துயர்ந்தமலை நீண்முடிமே
லப்பணியு மண்ணா மலை. (௯௦)

பச்சைநிறந் தானாகிப் பாதிவடி வானமலை
கச்சையெனக் கட்செவியைக் கட்டுமலை—நிச்சயமாய்
மாளுமடியேனை மாளா வகையருளி
யாளுமலை யண்ணா மலை. (௯௧)

மானொருகை வெற்றி மழுவொருகை யானமலை
யான முனி வோர்கணித்த நாடுமலை—யானை
யுரித்தமலை யம்மை யுமையாலே யார்க்கு
மருத்துமலை யண்ணா மலை. (௯௨)

முல்லைமலர்க் கொன்றை முடிமே லணிந்தமலை
யெல்லையிலா மாதலர்க ளேத்துமலை—தில்லையிலே
நட்டமலை முப்புரத்தை நாடுமன்பர் மூவரைவிட்
டட்டமலை யண்ணா மலை. (௯௩)

எல்லாருங் காணற் கினியமலை யென்னுடைய
பொல்லா வினையறுக்கப் போந்தமலை—சொல்லாரும்
நல்லமலை பொல்லாரை நாசமுறப் பார்க்கைக்கு
வல்லமலை யண்ணா மலை. (௯௪)

ஆழி நெடுமா லயர்க்குமரி தானமலை
யூழின் வினை யன்பர்க் கொழிக்குமலை—யாழியிலே
நஞ்சழலைக் கண்டு நடுங்கினரைக் காக்குமலை
யஞ்சு முகத் தண்ணா மலை. (௯௫)

எத்திசையுந் தோற்றுமலை யேறுகந்து நின்றமலை
சித்திவா மீந்தருளிச் செய்யுமலை—முத்தர்மனம்
பூணுமலை யண்டர் புகழுமலை நீண்டதொரு
மாணுமலை யண்ணா மலை. (௯௬)

வண்மைக் குணத்தவரை மாதவரை வந்தடைந்தோர்
தம்மைத் தளராமற் றாங்குமலை—யுண்மை
பொருந்துமலை விண்ணவர்கள் போகாம லால
மருந்துமலை யண்ணா மலை. (௯௭)

வானத்துப் பூந்தருவை வாங்கிக் களிறுபிடி
யானைக்கு நீட்டி யணையுமலை—ஞானத்த
ருன்னுமலை யெந்நாளு மோநமச்சி வாயகுரு
மன்னுமலை யண்ணா மலை. (௯௮)

அழியாத முத்தி யளிக்குமலை யன்பர்க்
கொழியா வினையை யொழித்துக்—கழியாத
வெற்றுப் பிறப்பை யினியமையு மென்றருளி
மாற்றுமலை யண்ணா மலை. (௯௯)

பெற்றந் தனிற்றோன்றிப் பெய்வளையுந் தானுமென் றன்
குற்றங் களைந்தருளிக் கொண்டமலை—நித்தம்
புதியமலை கங்கையணி பொற்சடைமேல் வைத்த
மதியமலை யண்ணா மலை. (௧௦௦)

அண்ணா மலைமாலை யானதமிழ் வெண்பாவாற்
றண்ணாரு மைந்தெழுத்தைச் சாற்றியநூற்—பண்ணாகக்
கற்றவர்கள் கேட்டவர்கள் காசினியிற் பேரின்ப
முற்றுலகை யாள்வ ருவந்து. (௧௦௧)

மன்னுதிரு வண்ணா மலையைவல மாகவந்துன்
யுன்னுதிரு வைந்தெழுத்தை யோதினேன்—தென்னருணை
நாயகத்தைக் கோவிலிலே நான்கண்டேன் பேறெடுத்தத்
தாயகத்தைக் கண்டவர்பொற் றாள். (௧௦௨)

அண்ணாமலைவெண்பா

முற்றிற்று.

உ

சிவமயம்.

யாழ்ப்பாணத்து நல்லூர்
மகாவித்வசிரோமணி
தியாகராசபிள்ளை அவர்கள் இயற்றிய

அண்ணாமலையார்வண்ணம்.

எழுதரிதென்றல்.

தனத்தான தனனதன தனத்தான தனனதன
தனத்தான தனனதன தந்த தனனா
தனனதன தானதான தனனா.

சிலைக்காம னுடலெரிய விழித்தாடல் புரிபரமர்
செருக்கால நமனுயிரை யுண்ட சரணர்
மலர்ப்பாவை வருசகல கலைப்பாவை தொழுபசிய
மலைப்பாவை கவுரியொரு பங்கிலுறைவார்
சினத்தாலு மிகவுமெதிர் விழித்தாலு முனிவின்றி
சிரித்தாலு மழல்வடிவு கொண்ட பரனார்—
அரவு சூடியேறு நீகுழையார்,
திருக்கோயி திருவதிகை திருச்செய்ஞ திருமருக
திருத்தோணி திருவாலை வஞ்சி பனையூர்
திருச்சேறை தருமபுர மறைக்காடு திருமயிலை
திருக்கோவ லினகர மன்பில் கடவூர்
திருக்காவை பொதியமலை கழிப்பாலை கயிலைமலை
தெளிச்சேரி யிடைமருது தஞ்சை வழுவூர்—
சுழியல் பனைவாயில் கூடலுறைவார்,
புலித்தோலி னுடையழகர் பலிக்கேகு நடையழகர்
பொடிப்பூசு நுதலழகர் செங்கை மழுவார்

NSD

நெருப்பாறு வரும்வழியின் மயிர்ப்பால மெனுமனறி
நினைப்பார்கள் வினைகளையு மெங்கள் பரனார்
புயத்தோடு நெடியவரை யெடுத்தானை வெகுளியொடு
புடைத்தானை யுரிவையணி கொண்டதிறலார்—
குமுதமலர் மாலை சூடுவிடையார்,

புகைப்போல வேழுபடன் மூகிற்கூட யிடறிவிழு
பொழிற்கூடு வளர்கமுகு நின்ற நிலையே
குருத்தோடு மிடறேடிய முடத்தாழை விரியசெதிர்
குதித்தோடி வருகயல்க ளென்று வயல்சூழ்
புகழ்ச்சோண கிரியிறைவர் விடைப்பாக ரமரர்விழி
புதைத்தேபி னிருகைதொழு மங்குவடிவார்—
தடவரையெறுவிபோலுமயிலார்,

மலைப்பார மெனவ்வரு தனப்பார மெழுதிடினும்
வளத்தோடு பெறுகுணமி ரண்டும் வருமோ
விருப்பான கரியகுழ லிருட்போல வெழுதிடினு
மிகுத்தேறு வரியளிமு ரன்று வருமோ
மதர்ப்பான விணைவிழிகள் வடுப்போல வெழுதிடினு
மடப்பார்வை யிருகுழைக டந்துவருமோ—
குழையெழுதி னூசலாடிவருமோ,

மலர்த்தாளை வனசமலர் தனைப்போல வெழுதிடினு
மலர்ப்பாய லனமெனந டந்துவருமோ
வுறுப்பான திலகநுதல் விதுப்போல வெழுதிடினு
முவப்பான குறுவியா வரும்பி வருமோ
வனிக்கோல மிடறுகமு கினைப்போல வெழுதிடினு
மரப்பாவை யுருகுமிசை யின்பம் வருமோ—
விரலெழுதின் வீணைபேசவருமோ,

இலைப்பாதி யிழையுமென நுசுப்பாக வெழுதிடினு
மிதைப்போல வொசிவொடுத ளர்ந்து வருமோ
வனப்பேறு திகிரியென மணித்தோள்க ளெழுதிடினு
மயிர்க்கால்கள் புளகித மெறிந்து வருமோ
விதழ்க்கோவை யதனைமிகு சிவப்பாக வெழுதிடினு
மினிப்பான பொழுதமுது விந்து தருமோ—
உகிரெழுதின் மீதுலாவி வருமோ,

எழுத்தோடு முறுவன்முலை நகைக்காக வெழுதிடினு
மெதிர்த்தாடு புலவிநகை யிங்கு வருமோ
மதிப்பான வுடலையொரு கொடிப்போல வெழுதிடினு
மயிற்சாய லொரு சிறிது தங்கிவருமோ
எடுத்தாடு படமெனவல் குலைப்பேணி யெழுதிடினும்
இதத்தோடு மழுதுகுதி கொண்டு வருமோ
கிழியெழுதி னேதுலாபமு ரையீர். (க)

ஆர்வ மொழியுரை.

கருட னோடு மச்ச மாமை கமல மோட முற்கரங்
காட்டி லோட மூன்றி ராமர் காற டக்கி யோடவே
மருளி வந்த சிங்க மோட வாமன் வெள்ளை பாறவே
வஞ்ச மான கண்ண னோடு மார னீறச் சேனனு
மிருளி னோடு முண்டகத்த னேங்கி யோட வென்றவர்க்
கிறி லாது சிவன் வைத்த வேந்தல் யாவன் வேதமே
யருளு மந்த முதல்வன் யாவ னருணை கண்டு வாழ்மினோ
வார காதி மூல மென்ப தறிகி லாத மாக்களே.

164317
G23;38.2113-T
NSD

உ
சிவமயம்.
தெய்வீகம் விளங்கிய குகைநமச்சிவாயதேவர்
அருளிச்செய்த

அருணகிரியந்தாதி.

காப்பு.

சித்திதரும் புத்திதருஞ் செந்திருவைச் சேர்விக்கும்
பத்திதரு மெய்ஞ்ஞானம் பாலிக்குங்—கொத்தி
யரிமுகனைக் காய்ந்த வருணேசர் தந்த
கரிமுகனைக் கைதொழுதக் கால்.

நூல்.

கார்கொண்ட மேனியனுங் கஞ்சனுங்கா ணாப்பெருமை
யார்கொண் டுரைசெய்வா ரம்புவியிற்—சீர்கொண்
டருணகிரி மேவுநின்ற வையாநீ வேண்டிக்
கருணைபுரி யாதிருந்தக் கால். (௧)

காலைமலர் தூவக் கருத்தறியா நாயேற்கு
வேலைவிட முண்ட விமலனே—மேலாய
வாசிகனே கண்பலித்து வாழ்விக்குஞ் சோணகிரித்
தேசிகனே நீ கண்டாய் திக்கு. (௨)

திக்குவே றில்லை திருவுளமே யல்லாம
லிக்குவே லைக்காய்ந்த வீசனே—மிக்கவிடங்
தன்னையுண்ட சோணகிரித் தாணுவே நாயேற்குப்
பின்னையுண்டோ நீயல்லாற் பேசு. (௩

பேசுமவர் வஞ்சப் பிறப்பறுக்கு மென்றுலகில்
வீசுபுகழ்ச் சோணகிரி வித்தகா—மாசிலா
வண்ணா மலையானே யன்னைவயிற் றென்னையுறப்
பண்ணா மலையாக்கண் பார். (௪)

பாராம லீயிருந்தாற் பார்மீதி னாயேனுக்
காராவார் சோணகிரி யண்ணலே—தீராப்
பிறப்பை யகற்றுதற்கும் பினாகனே சூழ்ந்த
விறப்பை யகற்று தற்கு மின்று. (௫)

இன்றுபோ காவோ விருவினையு மும்மலமு
நின்றுதமி யேனை நெருக்காம—னன்றிதரு
மாரணனே சோணகிரி யத்தனே மாறேறெங்
காரணனே நீநினைந்தக் கால். (௬)

காலன் றனக்கஞ்சக் காரணமென் னெஞ்சமே
யாலமுகந்த வருணேசன்—கோலத்தை
நேசமுற்று நீகருதி னீங்காம னின்றலைக்கும்
பாசமுற்று நீக்கும் பரன். (௭)

பரமனீ யென்று பணிந்துருகிப் பாடிக்
கரஞ்சேர்த்து நீர்சோரக் கண்கள்—வரங்கேட்ட
வென்னவா வின்படியே யீந்தா யிதற்கருணை
மன்னவா காணேன்கைம் மாறு. (௮)

மாறுகொண்ட தக்கன் மனோரதமெல் லாந்தவிர்த்து
வீறுகொண்ட சோணகிரி வித்தகா—வாறுகொண்ட
செஞ்சடையாய் நின்னைத் தெரிசித்தல் வேண்டுமென்கண்
பஞ்சடையா முன்னே பரிந்து. (௯)

பரிந்தணிந்த வெண்ணீறும் பாம்புந்திக் கண்ணு
மரிந்தசிர மாலை யழகுந்—தெரிந்து
நெருக்குமாம் வல்வினையை நீக்குமரு ணேசற்
கிருக்குமாங் கோலங்க ளேத்து. (௧0)

கோலமுதற் றேடிநெஞ்சே கூப்பிட்டுங் காணாத
கோலங் குருவடிவு கொண்டேதா—ஞாலங்

தரித்தபிரான் சோணேசன் றன்முனிந்து வேளை
யெரித்தபிரான் வந்தா னிதென். (௧௧)

என்ன தவப்பயனோ வேழையேற் கென்றறியேன்
முன்னமறை காணாத முக்கண்ணா—நின்னையே
தேடுகைக்குஞ் சோணகிரித் தேசிகனே நின்புகழைப்
பாடுகைக்கும் பெற்ற பயன். (௧௨)

பெற்றோம் பலனைப் பிறந்தநா னெஞ்சமே
யற்றோ மனத்தி லநவரதம்—பற்றுவா
ருள்ளலைக்குந் தீவினையை யோட்டு மருணகிரி
வள்ளலைக் கொண்டாட வரம். (௧௩)

வரம்பலிக்கு மெய்ஞ்ஞான வாழ்வே பலிக்குந்
திறம்பலிக்குஞ் செல்வம் பலிக்கு—முரம்பலிக்குஞ்
சோணா சலனைச் சுவாமிதனை யுள்ளத்தே
காணார் கருத்தென் கருத்து. (௧௪)

கருதி வருணேசன் கஞ்சமலர்த் தாளை
யிருத்தி நினைப்பாரை யென்றும்—வருத்துமோ
நாட்டும் பலவுயிரை நாடோறும் பின்றொடர்ந்து
வாட்டும் பிறவிநோய் வன்பு. (௧௫)

வன்பெருக்கிற் கன்மிதக்கும் வாய்முதலை பிள்ளைதரு
மென்புருக்கொள் பெண்ணா யிருக்குமே—யன்பருக்கு
நாட்டுகுரு சோணகிரி நாதனடி யார்மூவர்
பாட்டினிசை கேட்ட பரம். (௧௬)

பரம னருணேசன் பதம்பணியார்க் கென்றுங்
கருமஞ் சிதையுமெனல் கண்டோ—மருமந்த
கூட்டுத் தலைபோய்க் கொடியதக்கன் வேள்வியிலே
யாட்டுத் தலையாகை யால். (௧௭)

ஆலம் வருவதுகண் டஞ்சி யமரர்குழாஞ்
சாலவெருண் டோடுஞ் சமயத்தி—லோலமென
நின்றா னுலகறிய நேசமடி யாரிடத்துக்
குன்றாத சோணகிரிக் கோ. (௧௮)

கோடிவிதி மாளிற் குலாவுகம லக்கண்ண
னோடி வடவா லுறங்குமே—நாடுங்கா
லக்கண்ணர் கோடி யழியி னருணகிரி
நக்கனருள் சற்றே நகும். (௧௯)

நகுமானை யேந்தருணை நம்பா பிறப்பிற்
புகுவேனைக் காக்கும் புனிதா—தகுமேனைப்
பெற்றதுணை நீயல்லாற் பேருலகி னாயேனுக்
குற்றதுணை மற்றியாவ ரோது. (௨௦)

ஓதக் கடனஞ்சை யுண்டசோ ணாசலனை
யோதக் கடனெஞ்சே யோதினாற்—பாதம்
பெறலா நமது பிணிமூப்புச் சாக்கா
டறலாங் கரையேற லாம். (௨௧)

ஆமென்று நம்பி யனுதினமும் போற்றினா
னாமென்று பற்றி நலமாகக்—காமித்துச்
சிட்டாகுஞ் சோணகிரி சிந்தித்தா னெஞ்சமே
விட்டேகும் வெய்ய வினை. (௨௨)

வெய்ய பிறவிதனை வேரறுக்குஞ் சோணகிரி
யையரடி யார்பாட்டிற் கல்லாமற்—றுய்யகரா
வாய்க்குமோ பிள்ளையுந்தன் வாரிதியிற் கன்மிதந்து
காய்க்குமோ வாண்பனையுங் காய். (௨௩)

காய நெகிழாமுன் கண்க ளிருளாமுன்
வாயிலுள்ள பல்லும் வழுவாமுன்—காயம்பார்த்

தோடிநமன் வாராமுன் னுள்ளேநீ சோணகிரி
நாடிநம வென்றே நட. (௨௪)

நடக்குங் குலங்கல்வி நம்மவென்பா ராசை
யடக்கும் வகைசற் றறியார்—தொடுக்குநூல்
காட்டுமோ சோணேசன் கஞ்சமலர்த் தாளிணையைக்
கூட்டுமோ சொல்லீர் குலம். (௨௫)

குலமில்லார் வண்மைக் குணமில்லார் கல்வி
நலமில்லா ராயினு நன்றே—வலம்வந்
தரிய திருவருணை யண்ணலுக்கா ளாவார்
பெரியவர்க்கு மேலான பேர். (௨௬)

பேறும் பெருவாழ்வும் பிள்ளைகளும் வேண்டுவா
ராரும் பரவு மருணேசன்—சீரை
யுறக்கத் திலுமறக்க வொண்ணா துரைக்கிற்
பிறக்கக் கிடையாது பின். (௨௭)

பின்னறியேன் முன்னறியேன் பேதையேன் பாமாலை
யென்னறியேன் சோணகிரி யீசனே—நின்னருளைக்
கொண்டுரையா திற்குங் குறியுங் குறிதேடுங்
கண்டுரையா தென்றன் கருத்து. (௨௮)

கருத்தறிந்த மெய்யடியார் கண்காண வெள்ளை
யெருத்தில்வருஞ் சோணகிரி யீசா—பருத்த
வலங்கார நால்வேத னைந்தலையு ளொன்றைக்
கலங்காம னீயறுத்தாய் கண்டு. (௨௯)

கண்டுமிணை யென்பார் கருத்துநா வும்வாழி
யண்டர்கோ வேயருணை யண்ணலே—விண்டொழுஞ்
சங்கையெடுத் தோன்கண் சரணத்திற் சாற்றுமுன் றன்
செங்கையிலே வேதன் சிரம். (௩௦)

சிரமாலை தாமணிந்து சேவிலுகந் தேறி
யருமா மறைதேடு மண்ணலே—வருமா
முனிக்கூட்டம் போற்று முதல்வனரு ணேச
னினிக்கூட்டான் றன்பத் தெமை. (௩௧)

எமையாளுஞ் சோணகிரி யீசாநின் பாதத்
துமையாளு நீயு மொக்க—சமயத்
திருக்கின்ற கோலத்தை யான்காண வேண்டி
யிருக்குங் கருணை செய்வா யென்று. (௩௨)

என்றுமரு ணேச னிருபதத்தை நம்பாதார்
குன்றில் வனத்திற் குகையதனிற்—சென்று
திரிந்தென் பலமருந்து தின்றுசில கால
மிருந்தெ னிராமலிருந் தென். (௩௩)

ஏனமனந் தேட விணையடியுஞ் சீர்முடியுந்
தானவற்றிற் கெட்டாத தாணுவா—ஞானத்
தழல்கண்ட மேனித் தலைவனரு ணேசன்
கழல்கண்டார் காணார் கரு. (௩௪)

கருமா முகில்வண்ணன் கஞ்சனுக்கு மெட்டாப்
பெருமான் விடையேறும் பெம்மா—னொருமான்
மழுவேற்குஞ் சோணகிரி மன்னனடி யாரைத்
தொழுவேற்கு முண்டோ துயர். (௩௫)

துயர்கொண்டு நாளுந் தொலையாப் பிறப்பி
லயர்கின்ற நாயேற்கு மாமோ—வுயர்தவத்தோ
ராரும் பரவு மருணேச ரம்புயத்தாள்
சேருங் கருத்தொருக்காற் செப்பு. (௩௬)

செப்பரிய மால்பிரமர் சிந்தைதனக் கெட்டாத
வப்பரிய சோணகிரி யப்பனே—யெப்பொழுதும்

யென்னைவிட்டு நீங்காநின் பேரழகு சந்தமென்
கண்ணைவிட்டு நீங்காது காண். (௩௭)

காணா ரரிபிரமர் கஞ்சமலர் தாளிணையை
நாணமற் றென்காண நாடியே—சேணுடை
ராயம் புகழருணை யண்ணா மலையானே
மாயுந் தமியேன் மனம். (௩௮)

மனத்திற் பயமறிந்து மாமுனிவர்க் காகச்
சினத்திற் புரமெரித்த சீமா—னனத்தனரு
டக்கன் றலையறுத்த தாணு வருணகிரி
நக்கன் றனைமனமே நம்பு. (௩௯)

நம்பியிரு நெஞ்சமே நாளு மருணகிரி
யும்பர்கோ னன்றுரைத்த வுண்மையை—நம்பிக்
கெடுத்தாலுஞ் சோணேசன் கேடுபடா தெம்மை
யெடுத்தாலுஞ் சோணேச னென்று. (௪௦)
என்றுதரு வாய்மகிழ்ந்தே யான்பெறுவ தெந்தார
வின்று தமியேற் கியம்பிடாய்—நன்றிதரு
மேகனே சோணகிரி யீசனே சேவேறும்
வாகனே சாகா வரம். (௪௧)

சாகாவரம்பெறலாஞ் சந்ததமுஞ் சோணகிரி
நாகா பரணன்றா ளடியே—யேகாந்த
நண்ணுமக்க மாலைகொடு நாவார வைந்தெழுத்தை
யெண்ணு மறவா தெடுத்து. (௪௨)

எடுத்த பயனை யிருவினையை யெண்ணா
ரடுத்தசிவ பூசை யறியார்—தொடுத்த
நெறியாகுஞ் சோணகிரி சித்தரடியாரை
யறியாத மானிடவ ரச்சு. (௪௩)

அச்செல்லா மொன்றா வதிலே யிருவகையா
வைச்ச தென்ன சோணகிரி வள்ளலே—யிச்சையிலே
வாழ்ந்துசில பேரிருக்க வாய்புதைத்துக் கைகட்டித்
தாழ்ந்துசில பேரிருக்கத் தான். (௪௪)

தானே யுலகுடையோன் றன்னசைவே பல்லுயிர்க்குந்
தானே யனைவர்க்குந் தாதைதாய்—தானே
யனைத்துயிருங் காக்கு மருணேச னென்றன்
மனத்துயரம் போவதே மாண்டு. (௪௫)

மாண்டு பிறழ்ந்துழலு மாப்பிணியை நீக்குதற்கு
வேண்டு மருந்துனக்கு வேண்டிலு லீண்டிலகில்
லணேசர் சொல்லை விரும்பாம னெஞ்சமே
சோணேச னென்றொருக்காற் சொல். (௪௬)

சொல்லரிய நால்வேதஞ் சொன்னபடி யேகுறி
கில்லரிய பூசையிலே நேசமா—வெல்லரிய
நஞ்சே தரித்தருளு நாதரடித் தாமரையை
நெஞ்சே மறவாம னீ. (௪௭)

நீயே வரல்வேண்டும் நின்னைப்போ லானதுணை
நாயேனுக் காருண்டு நாடுங்காற்—றூயகமா
மண்ணா மலைமேவு மப்பனே யென்பிறவிப்
புண்ணா மலையகற்றும் போது. (௪௮)
போது மதுரு[illegible]னிதர் புவியின்ற
மாதுபங்க ரண்ணா மலைநாதா—பாத
மிறுகப் பிடிமனமே யெந்நாளு நின்னைக்
குறுகப் பயப்படுமே கூற்று. (௪௯)

கூற்றிருக்கு மூ[illegible]ாலிற கூறு புறங்காலி
லேற்றிருக் [illegible] மாயவன்க ணெப்பொழுதுஞ்—சாற்றுகையி

164317

லம்புயத்தோன் கம்மிருக்கு மண்ணு மலைநாதன்
செம்புயத்திற் காரிகையாஞ் செப்பு. (௫0)

செப்பரிய ஞானச் செழுஞ்சுடரே சோணகிரி
யப்பனே நன்னா லறிந்தாலு—மிப்புவியிற்
கொண்டகுரு வைப்பொருளாக் கொள்ளார் பயனேது
கண்டவெல்லாம் வீணிலே கற்று. (௫௧)

கற்றதனாற் றொல்லைவினைக் கட்டறுமோ நல்லகுலம்
பெற்றதனாற் போமோ பிறவிநோ—யுற்றகட
னஞ்சுகந்து கொண்டருணை நாதரடித்தாமரையை
நெஞ்சுகந்து கொள்ளா நெறி. (௫௨)

நெறியுண்டா நல்ல நிலையுண்டா ஞானக்
குறியுண்டா மெண்ணமெலாங் கூடுஞ்—செறிவுண்டா
மாதி யருணகிரி யண்ணலா ரைந்தெழுத்தை
யோதிட நெஞ்சமே யுன். (௫௩)

உன்னக் கருத்துண் டுரைப்பதற்கு நாவுண்டு
பன்னச் சிவநூல் பலவுண்டு—முன்னமறைக்
கெட்டாத சோணகிரி யீசரிரு தாள்பணிய
வொட்டாது பாவ முயர்ந்து. (௫௪)

உயர்ந்தவர்க்கு னெல்லா முயர்ந்திருக்கும் கோவே
நயந்தபுகழ் சோணகிரி நாதா—பயந்தமர
ருண்ணப் படாநஞ்சை யுண்டவுனைச் [illegible]ரா
டெண்ணப் படுவா ரிதென். (௫௫)

என்ன சனன மெடுத்தார் புவிமீதி
லன்னமட மன்சொல் லறிவிலார்—முன்னமே
யொன்னார் புரமெரித்த வுண்ணா மு[illegible]க
வென்னார் திருநீ றிடார். (௫௬)

நீறிடே னைந்தெழுத்தை நேசமுட னேகருதிக்
கூறிடே னென்னையுமாட் கொள்வதனுக்—காறணிந்த
வேணியார் சோணகிரி வித்தகனார் வெற்றிமழுப்
பாணியர்க் கன்றே பரம். (௫௭)

பரகதிக்கு வித்தாமுன் பஞ்சாக்கரத்தைப்
பரபரப வென்றுரைத்த பாவ—நரகப்
பிறப்பிற்கு மீடாம் பிறந்தருணை யீசர
சிறப்பிற்கு மீடாயி னேல் (௫௮)

எனிருந்து நெஞ்சே யிரவுபக லா[illegible]லைத்
[illegible]பாய் சோணகிரித் தாணுவா—மானுக்க
வெந்தையா னீங்கு மிருவினைநோய் சிந்திக்குஞ்
சிந்தையான் வேறென் செயல். (௫௯)

என்செயலாஞ் சோணேச ரிட்டபடியே யொழிய
நெஞ்சையெலாம் புண்ணா நினைந்தாலும்—விஞ்ச
வருமோ பெருவாழ்வு வல்லமையா னெஞ்சந்
தருமோசம் பேராசை தான். (௬0)

தானே யெனக்குத் தவமாய்த் தவப்பயனாய்த்
தானே யெனக்கன்னை தாதையாய்த்—தானென்னைச்
செப்பரிய வின்பாதஞ் சேர்விக்குஞ் சோணகிரி
யப்பனே நீயே றுமான். (௬௧)

ஆனவர நல்குநதி யாயிரஞ்சென் றாடிலென்
றானம் பதினாறுந் தான்செயினென்—றேனணங்க
னஞ்சடையான் சோணகிரி யண்ணறனை யென்றுந்
நெஞ்சடையார் பூதலத்தே நின்று. (௬௨)

நின்று தவம்புரியாய் நெஞ்சே திருக்கோயில்
சென்றுசிவ பூசையறஞ் செய்திடாய்—வென்றிதரு

மம்மான் கரத்த னருணேச னம்புயத்தாள்
சும்மா கிடைக்குமோ சொல். (௬௩)

சும்மா கிடைக்குமோ சோணா சலன்பாத
மம்மால் விரிஞ்ச னறிகிலார்—நம்மா
லிருக்துகதை சொன்னக்கா லென்னாகு நெஞ்சே
பொருந்த வினையாத போது. (௬௪)

போதையிரு பல்லுகுத்துப் புண்டரிகன் றேவியெனு
மாதையென்று மூக்கரிந்த மாவீரன்—றாதை
விருப்பா மதிசூடி வெண்டலையோ டேந்தி
யிருப்பா னருணேச னின்று. (௬௫)

இன்றைக்கு நாளைக் கிரவிற் கெனுந்துயர
மென்றைக்குப் போமருணை யீசனே—கொன்றைமதி
புன்னை யெருக்கும் புனையுஞ் சடாடவியா
யென்னை நெருக்கு மிவை. (௬௬)

நெருக்குமிவை யென்னுயிரை நீங்காமற் சூழ்ந்தே
யிருக்கும் பலபிணிநோ யெல்லா—மொருக்கும்வகை
கண்டே னருணேசன் கஞ்சமலர்த் தாள்கருத்திற்
கொண்டே னெனக்கென் குறை. (௬௭)

குறையேது மில்லையினிக் கூறுங்கால் வானோர்க்
கிறையாகுஞ் சோணேசற் கென்று—மறைபுகுந்தோம்
பற்றி நமன்றொடான் பார்க்குங்கா ணெஞ்சமே
வெற்றிநமன் கைத்தலத்து வேல். (௬௮)

வேலைவிட முண்ட விமலாரு ணேர்கொன்றை
மாலையணி மார்பர் மலர்ப்பதத்தை—மேவமரர்
பண்ணினார் பூசையறம் பண்ணிப் பரகதியி
னண்ணினா ரெல்லா நலம். (௬௯)

எல்லார் பிறப்பு மிறப்புமியர் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தோஞ் சோணேச—ரில்லிற்
பிறந்தகதை யுங்கேளோம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட்டி லேம். (௭0)

ஏமாந்த சோணகிரி யீசரடி யாரடிக்கே
பூமா மலர்தூவிப் போற்றாதார்—தாமென்றும்
வெஞ்ச மனத்திருக்கும் வேடராய் நாடோறும்
வஞ்சநம னுக்கஞ்சு வார். (௭௧)

வஞ்ச நமனுக்கஞ்சி வாடுந் தமியேனை
யஞ்சலென்ற சோணகிரி யண்ணலே—நெஞ்சறிய
வாண்டகுரு நீயென் றறியாதோர் செய்ததவ
மாண்டமரத் திற்கணைத்த மண். (௭௨)

மண்ணிற் பிறந்திறந்து மாயுந்தெய் வங்களோ
டெண்ணப் படாவருணை யீசனே—விண்ணப்ப
மொன்றுண் டடியே னுனைப்பிரியா தேயிருக்க
வென்று தருவா யெனக்கு. (௭௩)

தருவா யெனக்குகந்துன் றன்னிருதா டன்னை
மருவார் புகலொளிக்க மன்றை—குருவாகி
முன்னை வினையகற்றி மூர்த்தி யருணேச
வென்னைப் பொருளா வெடுத்து. (௭௪)

எடுப்பானுங் காப்பானு மேற்பானு மேற்பக்
கொடுப்பானு மேதுங் கொடானும்—விடப்பானம்
பண்ணி யனேகர் பயங்கெடுத்த சோணகிரிப்
புண்ணியனே நீகாணிப் போது. (௭௫)

இப்போது பின்னைக் கிலையென் றிரப்போரை
யெப்போதுந் தள்ளா திரங்கியே—முப்போதும்

பூசிப்ப தெந்நாள் புனிதனே சோணகிரி
நேசிப்ப தெந்நா ணினைந்து. (௭௬)

நினையேன் றிருக்கோல நின்றுகண் ணீர்சோர
நனையேன் பிறப்பறுக்க நாடேன்—புனையேனின்
பொன்னடிக்குப் பூமாலை போற்றி யருணேச
ரின்னடிக்கிங் காருதவும் பேர். (௭௭)

பேராயிரமுடைய பெம்மானைச் சோணகிரி
யாரா வமுதை யறியாமல்—வாராது
தீதுநலமுந் தெரியுங்கா ணெஞ்சமே
யேதுமவ னென்றே யிரு. (௭௮)

இருந்துநினைப் பார்த மிருவினையை நீக்கும்
பொருந்துமிடி யிம்மையிலே போக்கு—மருந்தன்றே
தம்பிரா னெவ்வுயிர்க்குந் தானு வருணகிரி
யெம்பிரா னோரஞ் செழுத்து. (௭௯)

அஞ்செழுத்தை யோதுமவர்க் கஞ்சி யவர்தலையிற்
றுஞ்செழுத்தைக் கஞ்சன் றுடைக்குமே—யஞ்சுதலைக்
கொன்றறுத்து நாலா வொருகுறையா நின்றதலை
யின்றறுப்பான் சோணேச னென்று. (௮௦)

என்றுநமன் றூதுவரை யேற்கவே தானழைத்து
நின்றுரைக்குஞ் சோணகிரி நித்தனார்க்—கின்றடிமை
யானவர்க்கு நீர்வணங்கி யப்பாலே போமென்று
தானவர்க்குப் புத்தியாத் தான். (௮௧)

புத்திதருஞ் சோணேசன் பொன்னடியை வாழ்த்துநர்க்குப்
பத்திதரு மெய்ஞ்ஞானம் பாலிக்கு—முத்திதரும்
மாற்றரிய தீவினையை மாற்றுவிக்கு மைந்தெழுத்தைப்
போற்றரிய நெஞ்சமே பூண்டு. (௮௨)

பூண்டவகைக் கெல்லாம் பொருந்துமணி முத்திருக்க
வேண்டும் பசும்பொன் விளைவிருக்கத்—தீண்டாமற்
பொங்கரவுந் தோலெலும்பும் பூண்டா யிதென்னருணைச்
சங்கரா கங்கா தரா. (௮௩)

கங்கா தரனே கடையேனை யெந்தநா
ளங்கா தரவா வழக்குநா—ளங்காதல்
பார்க்குநாள் சோணேச பார்த்துப் பரகதியிற்
சேர்க்குநா ளெந்தநாள் செப்பு. (௮௪)

செப்பரிய வாணவத்தைச் சேதமுறு மும்மலத்தை
யொப்பிலாச் சஞ்சிதத்தை யோட்டினே—னிப்போ
தருவாகி நின்ற வருணகிரி யானைக்
குருவாக வென்னுளத்தே கொண்டு. (௮௫)

கொண்ட நெறிசற்றுங் குலையார் மனத்திருக்கு
மண்டர்கோ வேயருணை யண்ணலே—தொண்டர்க்
கிடையாது நெஞ்ச மிருவினையா லென்று
மடையா தெழுபிறப்பா மல். (௮௬)

அல்லதொரு தெய்வ மறியே னறிந்தாலு
நல்லதென்று நெஞ்சகத்தி னாடேன்யான்—சொல்லரிய
வண்ணா மலைமேவு மண்ணலையு மண்ணவிடத்
துண்ணா முலையாளை யும். (௮௭)

உம்மை நினைந்தே யுருகி யருணேசர்
தம்மை நினைந்தார் தமக்கல்லா—லிம்மையிலே
யெல்லாருங் காண வெளிதோ புலிமீதி
னல்லார் துதிக்கு நடம். (௮௮)

நடலையறுத் தாளருணை நம்பனுக்கன் பில்லா
குடலையொறுத் தாலாவ துண்டோ—வடலைது

லோதினாற் பாச மொழியுமோ புற்றிலே
மோதினாற் பாம்புசா மோ. (௮௯)

மோகமறேன் சோணகிரி மூர்த்தியே மும்மலத்தின்
றாகமறே னின்பெருமை தானறியேன்—காகநாய்
தம்மதென் னுங் காயத்தைத் தானெடுத்துத் தாரணியி
னம்மதென் னுங் கண்டாய் நரி. (௯0)

நரிக்குப் பொதிசோறு நான்சுமந்து நொந்தே
னரிக்கு மரிதா னரனே—தெரிக்குமறை
காணாத சோணகிரிக் கண்ணுதலே நின்பதத்தைப்
பேணாத நாயேன் பிறந்து. (௯௧)

பிறந்திறக்குந் தெய்வப் பிணங்களைக்கொண் டாடே
னறைந்தழைக்குஞ் சோணகிரி யாரே—பிறந்திரவா
வும்மைப் புகழ்ந்தே யுமக்கடிமை யானபேர்
தம்மைப் புகழ்வதல்லாற் றான். (௯௨)

தானவர்கண் முப்புரத்தைத் தானெரித்து நஞ்சுகந்தீர்
வானவர்க்காச் சோணகிரி வள்ளலே—யேனம்
விருப்பா மலர்குடி வேண்டினா னீண்ட
நெருப்பா விருந்ததென்ன நீர். (௯௩)

நீராழி நஞ்சுகந்த நித்தனே சோணகிரி
யாரா வமுதேயென் னையனே—பாராளுந்
தாதையே பூசையறந் தானறியா மற்றிரியும்
பேதையேற் காராவார் பின். (௯௪)

பின்னை யொருவரில்லை பேருலகிற் றஞ்சமா
வன்னந் தருமருணை யையரே—யென்னை
யெடுப்பதற்குங் காப்பதற்கு மென்பிறவி நோயைக்
கெடுப்பதற்கு நீரே கெடீர். (௯௫)

நீர்கொண்ட வேணி நிமலாவென் னீள்பிறப்பை
யார்தொலைப்பார் நீயல்ல தாயுங்காற்—பார்மீதிற்
பொய்யா வரங்கொடுக்கும் புண்ணியனே சோணகிரி
யையா கருணா லயா. (௯௬)

கருணால யாநின் கழல்பணிய மாட்டே
னருணா சலாவென் றழையேன்—மரணாந்த
காலத்தி லேதுங் கருத்தறியேன் கண்ணையுன் றன்
கோலத்தில் வையேன் குறித்து. (௯௭)

குறியே னிருபதத்தைக் கூறும் வகைசற்
றறியே னறிந்தவர்க்கொன் றுற்றேன்—சிறியேனின்
றாயுமறை தேடரிய வண்ணா மலையானே
மாயுமிருக் கைதயா மனம். (௯௮)

ஐயா மரப்பாவை யாவேனுஞ் சூத்திரிதன்
கைவசமோ பாவை கற்றதோ—வெய்யவினை
யென்னிச்சை யோவருளை யீசா படைத்தவற்கு
முன்னிச்சை யன்றோ வுரை. (௯௯)

உரைக்கு மடியா ருயிர்ப்பயிர்வா டாமற்
றரைக்குளா னந்தவெள்ளந் தன்னை—நிரைக்குமே
யென்றூர் புரமெரித்த வெந்தை யருணகிரிக்
கண்ணா ரமுதமெனுங் கார். (௧00)

அருணகிரியந்தாதி முற்றிற்று.

இந்த அருணகிரியந்தாதியானது கன்னடசர மூர்த்தியாகிய குகைநமச்சிவாயதேவர் மல்லிகார்ச்சுனத்திலிருந்து "தெற்கே சிவதல யாத்திரை செய்து வருகிறேன்" என்று தம் குருவின் அநுமதி பெற்றுக்கொண்டு சஞ்சரிக்கும்போது தன் குருவுருவாக எழுந்தருளிய அண்ணாமலையார் அநுக்கிரகித்தபடி திருவண்ணாமலையிலே குகையினிடத்து மகிமையுடனிருந்து அண்ணாமலையார்வரப் பிரசாதத்தினாலே அவரைத் தோத்திரஞ்செய்தது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவண்ணாமலையின்கண் எழுந்தருளியிருந்த

குகைநமச்சிவாயசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

திருவருணைத்

தனிவெண்பா.

சொன்னந் தருங்குருவே சோணா சலத்தானே
யின்னம் பிறந்தாலு மிப்படிநின்—சன்னிதியை
நாடக் கிடைத்திடுமோ நன்னெஞ்சே நாமவரைக்
கூடக் கிடைத்திடுமோ கூறு. (௧)

சம்பா வமுதுஞ் சருக்கரைதே னெய்பாலுந்
தென்பாகத் தந்தருளுந் தேசிகா—வென்பார்க்கே
வந்தருள் சோணேச வயதுநா ளுங்கொடுத்துத்
தந்தருள்வாய் நின்பதமே தான். (௨)

ஆரிருக்க லாமே யருணேச ரேயுலகி
னீரொருத்த ரல்லாம னேதெங்கா—னீரும்
பிறவாமலே யிருந்தீர் பின்பிறந்தா ரெல்லா
மிறவாரோ மண்மீ தினில். (௩)

வானவரு மிந்திரனு மாலொடய னுஞ்சென்று
போனவிடம் புன்முளைத்துப் போகாதே—தானமுதா
யத்த ரருணேச ரன்பாக நஞ்சுதனைப்
பத்தியுட னுண்ணாத போது. (௪)

சோணா சலனைத் துதியாமற் றொல்லுலகில்
வீணாசை கொண்டிருந்து விட்டோமே—பூணாரம்
பெண்டிர்மக்கள் சுற்றம் பெருவாழ் வெனக்கருதி
யுண்டி தனக்கா யுழன்று. (௫)

ஓதி யுரைத்தாலு மூண்படுக்கை யற்றாலு
மாதரைத்தன் னெஞ்சின் மறந்தாலு—நீதி
வழுவாமற் சோணகிரி வள்ளலே யன்பு
தழுவாம லாமோ தவம். (௬)

அங்கையார் மேல்வைத்த வாசையிலே நூற்றிலொரு
பங்கருணை யீசன்மேற் பற்றினார்—சங்கையற
வத்தனின்பம்பெறலா மாராய்ந்து நெஞ்சமே
நித்தந் தவம்பெறலா நீ. (௭)

இந்தவரந் தானே யெமக்கமைய நீகுருவாய்
வந்திருக் கோலத்தை மாறாமற்—சிந்தைதனில்
வைச்சிருக்க வுச்சியிலே வைத்தபதத் தைக்கருத்திற்
றைச்சிருக்கச் சோணா சலா. (௮)

உண்ண வுடுக்க வொருகுடைக்கீழ் வையமெலாம்
பண்ணப் பணந்தேடப் பாவிக்க—வெண்ணியிரு
மந்நாள் பின்னிட் டடியே னுனைத்துதிப்ப
தெந்நாள் சோணேச னே. (௯)

மண்ணும்பொன் னாகாதோ மாற்றான் விலகாதோ
பண்ணுந் தவங்கள் பலியாவோ—நண்ணுபுகழ்
விண்ணும் பரவும் விமல வருணகிரி
யண்ணல் புரிந்தா லருள். (௧0)

மாணமிலி பொய்யன் மனக்கனிவி லாதபுத்தி
யீனனிவ னென்று மிகழாதே—ஞான

வுருவே யருணகிரி யோகமெச்சி வாய
குருவே யெனையாண்டு கொள். (கக)

ஆதிமறை தேடரிய வண்ணாமலை யாருக்
கேதுமுடி யேதடியென் றேத்துவே—னீதி
யொளியே திருமேனி யும்பருக்கு மெட்டா
வெளியே யவரிருக்கும் வீடு. (கஉ)

ஆபாசந் தீர்க்கு மருணேச ரேதமியேன்
மாயாம லொன்றுதர மாட்டீரோ—வோயாம
லூசலுக்கு நேரா யுழலுமனந் தானொருவர்
வாசலுக்குப் போகா வரம். (கங)

பல்லுயிரைக் கொன்ற பழிநீங்கு நீங்காத
புல்லறிவு நீங்கும் புலைநீங்குங்—கொல்லவந்த
கூற்றுவனு நீங்குங் குவலயத்திற் சோணகிரிப்
போற்றுந் தவத்தோர்க்கப் போது. (கச)

சிந்தையினால் வாக்கினால் செய்தொழிலாற் பார்வையினால்
வந்த பிறப்பிறப்பும் வன்பிணியும்—எந்தைகுரு
நாதனெனச் சோணகிரி நம்பனென மால்தேடும்
பாதனெனப் போமே பறந்து. (கரு)

பொல்லாத வென்பிறவிப் புண்ணுக் கொருமருந்து
சொல்லா யருணகிரிச் சோதியே—யெல்லாரும்
போற்ற நடம்புரியும் புண்ணியா நான்மறைக
ளேற்றுஞ் சிவலோ கனே. (கசு)

சூலங் கரத்திருக்கச் சோதிமழு மானிருக்க
வாலமுண்ட கண்டத் தழகிருக்க—வேலை
விழித்த விழியிருக்க மெய்போக ராயா
தரித்ததென்ன தாமதமோ தான். (கஎ)

153

அடைக்கலமாச் சோணகிரி யப்பனடி சார்ந்தோம்
கடைப்பிறவி முந்நீர் கடந்தோம்—படைக்குமந்த
முண்டகனை யும்மதியோ மூரிக் கடாவேறும்
கண்டகனை யும்மதியோங் காண். (கஅ)

இந்தப் பிறப்பி லிரங்காத தேவரீ
ரெந்தப் பிறப்பி லிரங்குவீர்—சிந்தைக்
கனியே யருணகிரிக் கண்ணுதலே பொல்லாத்
தனியே னிடர்தீரத் தான். (ககூ)

ஆயபிணி மூன்றூற் றறுபதுக்குங் கூடாகி
மாயவுட லைச்சுமக்க மாட்டேனே—தோயுமதி
யப்பணியும் வேணி யருணேச ரேதமியேற்
கிப்பிறவி மாற்றீ ரினி. (உ0)

பொழுது திக்கச் சாமமெனும் போதே யெழுந்து
முழுகி வெண்ணீற்றினின் மூழ்கி—தொழுதனது
பொன்னான சேவடியைப் போற்ற விறைஞ்சருணை
மன்னா தருவாய் வரம். (உக)

வையமுழு தும்படைத்து வாழு மருணகிரி
யைய னமைத்தபடி யல்லாம—னொய்யமனம்
நூறா யிரமாக நோக்கிடினு மெள்ளளவு
மேறா ததிற்குறை யாது. (உஉ)

ஆகா வழியா யடியேன் பிறந்திறந்து
போகா வழியருளப் போகாதோ—வாகா
வருணையனே யன்பர்க் கனவரத மான
கருணையனே கண்பார்த் தருள். (உங)

கையிலே தீயிருக்கக் கன்னெஞ்ச னேனுலகப்
பொய்யிலே வீழ்ந்தழிந்து போவேனோ—மெய்யிலே

ரீறு வுனைத்துதிக்கு நேசருளத் திற்கருப்பஞ்
சாறு மருணா சலா. (௨௪)

நெற்றிவிழி கண்மூன் றுகித்திறையோ சோணேசா
பற்றுமழு சூலம் பறிபோச்சோ—சற்று
மபிமான மின்றோ வடியார்க ளெல்லாஞ்
சபிமாண்டு போவதே தான். (௨௫)

ஆண்ட குருவை யறியாத மானிடர்க
ணீண்டி விடவொருத்தி தோன்றினா—ணீண்டபுகழ்
திக்கெலாம் போற்றுதிரு வண்ணா மலைதனில்வா
ழெக்கழா தேவி யிவள். (௨௬)

குற்ற லரிசி குறைந்தகாட் போதாதோ
வெற்றிலைக்குங் கேடோவா வேண்டுமோ—வித்தகித்த
மண்ணா மலைநாதா வைம்ப தரைக்காசுக்
கெண்ணிவிற்ற தற்குவந்த தென். (௨௭)

கோள ரிருக்குமூர் கொன்றாலுங் கேளாதூர்
காளையரே நின்று கதறுமூர்—நாளும்
பழியே சுமக்குமூர் பாதகரேவாழுமூ
ரழியாதூ ரண்ணா மலை. (௨௮)

வீதெருஞ் சோணகிரி வித்தகனார் சத்தியுட
னீடுதே ரேறியவர் நிற்கின்ற—ரோடி
வடம்பிடிக்க வாருங்கள் வந்தவர்க்கு முத்தி
யிடங்கிடைக்கும் பாருலகி லின்று. (௨௯)

பூமாலை சாத்திப் புவிபுகழ்சோ ணாசலற்குப்
பாமாலை சூட்டிப் பலகாலு—நாமாலை
பண்ணா யிரம்பாடிப் பார்த்திருக்க நாயேற்குத்
தண்ணா யிரம்வேண்டேன் காண். (௩௦)

எனக்குத் தனக்கென் றிகலியைந்து பூதக்
தனக்குத் தனக்கே தலையாய்—மனக்குவகை
மாவதில்லை சோணகிரி யையா விலைதீக்கப்
போவதில்லை போகாப் பொறி. (௩௧)

போகாப் பொறியாய்ப் புலனைந்துங் கூடியவித்
தேகாதி தன்னைக்குத் தேட்டமா—யோகா
விருக்கு மருணகிரி யீசா விதனை
யுருக்கும் வகையே துரை. (௩௨)

தாயினுநல் லாரினிய தாதையினுந் தானல்லா
ராயிலரு ணேச ரடியேற்கு—மாயவுட
றகப் பொருந்துவரோ நாறு மயதிருந்துஞ்
கப் பொருந்துவரோ சாற்று. (௩௩)

க்தர்களை வாவென்றும் பாவிகளைப் போவென்று
த்திவழி யிதென்று மூதலிக்கும்—சத்தியமே
ன்னவயல் சூழருணை யண்ணா மலைநாதர்
ன்னிதியி லூதுதிருச் சங்கு. (௩௪)

ச்சரவம் பூண்டானை நன்றாய்த் தொழுதவன்ற
ிச்சையிலே தானு மிருப்பதுவும்—பிச்சைதனை
ங்குவது முண்பதுவும் வந்துதிரு வாசலிலே
தங்குவதுந் தானே சுகம். (௩௫)

ருவருணைத் தனிவெண்பா
முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவண்ணாமலைத்
தீபதரிசனச் சரித்திரச் சுருக்கம்.

ஸ்ரீ அகண்டாகார சச்சிதாநந்த பரிபூரணசுயம்பிரகாசப்பொருளாகவிளங்கும் ஸ்ரீ கைலாயபதியானவர் இந்த உலகின்கண் ஆங்காங்கு வசிக்கும் ஆத்மகோடிகளொவ்வொன்று முய்யும்பொருட்டுத் திருவருட்கண்சுரந்து திருக்கோயில்கொண்டிருக்கின்ற பலஸ்தலங்களுளொன்றாகியும், ஆளுடையபிள்ளையாராகிய திருஞானசம்பந்தசுவாமிகளாலும், ஆளுடையவரசுகளாகிய திருநாவுக்கரசுசுவாமிகளாலும், பதிகம்பெற்றுள்ளதும், ஆளுடைய அடிகளாகிய மாணிக்கவாசக சுவாமிகளால் திருவெம்பாவை, திருவம்மானைபாடியருளியதும், பட்டினத்துச் சுவாமிகளது அமிசத்தாற் றிருவவதாரஞ்செய்தருளிய அருணகிரிநாதர் திருப்பரங்குன்றின்கண்ணே எழுந்தருளியிருப்பவரும், திருச்செந்தூரின்கண்ணே எழுந்தருளியிருப்பவரும், திருவாவினன் குடியின்கண்ணே எழுந்தருளியிருப்பவரும், திருவேரகத்தின்கண்ணே எழுந்தருளியிருப்பவரும், இதுவன்றிமலைகடோறும் விளையாடுதலே நிலைபெற்ற குணத்தையுடைய முருகப்பிரானிடத்து அன்புடையோராய்த் திருப்புகழ் முதலிய அநேகபிரபந்தங்கள் பாடியருளப்பெற்றதும், சோழதேசமுதலான இடங்களில் இன்னஇன்னநாட்டில் இத்தனை இத்தனை தலங்களென்று முன்னோராகிய அறிவுடையோர்களேற்படுத்தின கிரமப்படியே மகதநாடு அல்லது நடுநாட்டுக்குள்ளிருக்கும் ஸ்தலங்களுள்விசேஷமாகிய திருவண்ணாமலையென்னுந் திவ்யக்ஷேத்திரமானது கிருதாயுகத்தில் அக்கினிமலையாகவும், திரேதாயுகத்தில் சுவர்ணமலையாகவும், துவாபரயுகத்தில் தாம்பிரமலையாகவும், கலியுகத்தில் கன்மலையாகவும், திருவுருக்கொண்டு, அருணாசலம், சோணாசலம், சௌரிநகரம், தேசுநகரம், முத்திநகரம், ஞானநகரம், சிவலோகம், என்று இவ்வாறு பலதிருநாமங்களுடையதும்: ஆன்மகோடிகளை இடைவிடாது இரக்ஷிக்குஞ் சிவபெருமானே கிரிரூபமாயிருப்பதும்: பார்வதிதேவியார் திருவவதாரமானதும்: திருக்கண் புதைத்ததும்: மகிடாசுரமர்த்தனஞ் செய்ததும்: இடப்பாகம் பெற்றதும்: சந்திரவம்சத்தனாகிய வச்சிராங்கத பாண்டியன் பேறுபெற்றதும்: கலாதரன், காந்திசாலி, தவஞ்செய்து பேறுபெற்றதும்: அக்கினிவம்சத்தனாகிய வல்லாளராஜன் புத்திரசோகந் தீர்ந்ததும்: இந்திரதீர்த்த முதலாகிய அநேக தீர்த்தங்களும்: அன்பர்கள் திருமலை வலம்புரிதலும்: ஆதித்தனுக்கு தரிசனங்கொடுத்ததும், சூரியவம்சத்தனாகிய பிரதத்தராஜனால் அநேக காணிக்கைகள் தரப்பெற்றதும், அஷ்டவசுக்களும் பிரமன்முதலானவர்கள் பாவந்தீர்ந்ததும்: புளகாதிபன் பேறுபெற்றதும்; நினைக்க முத்திதரும் தலமென்பதும் ஆகப் புராணத்திற் சொல்லப்படுகின்றன.

பரமசிவம்:—மலையுருவமானதற்குக் காரணமியாதெனின், ஒருகற்பத்தில் மகாவிஷ்ணுவும் பிரமதேவனும் தாம்தாம் பிரமமென்றுவாதித்துப் போரிட்டதைத் தீர்க்கும்பொருட்டுச்சிவபெருமான் அழற்றூணாயவர்கள் மத்தியில்நின்று கலகத்தைத் தீர்த்து அநுக்கிரகித்து அவர்கள் வேண்டுதலினால் ஒரு சிறியமலையாயுருக்கொள்ள, அதைக்கண்ட பிரமதேவனும், மகாவிஷ்ணுவும், சுவாமியைநோக்கி இம்மலையினுச்சியில் ஒருஜோதி எந்நாளுந் தெரியும்படிக்குக் கிருபைசெய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள், அதற்குச் சிவபெருமானானவர் வாரீர் பிரமவிஷ்ணுக்களே? கார்த்திகைமாதத்தில்வரும் கார்த்திகைநக்ஷத்திரத்தில் இம்மலையினுச்சி

யின்கண் ஒருஜோதி காண்பிப்போம்; அச்சோதியைத் தரிசித்தவர்கள் மிடியும் வியாதியும், நீங்கி இஷ்டகாமியங்களைப் பெற்றுவாழ்வார்கள். இவையல்லாமல் அரசர்களும் தவத்தர்களும் தரிசிப்பார்களாகில் இடையூறின்றி வாழ்வார்கள். அன்றியும், இதைத் தொழுதவர்களுக்கும், தரிசித்தவர்களுக்கும், அவர்மட்டில்லாமல், அவர்களுடைய கோத்திரத்தில் இருபத்தொரு தலைமுறைக்கும் மோக்ஷங்கொடுப்போம் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

மேலும் இம்மலை ஜனன மரணமென்னும் வியாதிக்கு மருந்துபோல் இருப்பதனால் மலைமருந்தென்றும் அழல்வண்ணமாயிருப்பதனால் அருணாசலமென்றும் பெயருள்ளது; இதைஒருதரஞ்சொன்னவர்களுக்குப் பஞ்சாக்கரத்தை மூன்றுகோடிதரம் உச்சரித்த பலன்வருமென்பது அருளிச்செய்தார்.

அதற்குப் பிரமதேவனும், மகாவிஷ்ணுவும், ஆநந்தமடைந்து சிவபெருமானைப் பார்த்துத் தேவரீர் இவ்வாறுமலைக்கோலமாயிருந்தால் அடியேங்கள் எப்படிப்பூசை செய்யக்கூடும்! ஆகையால் இந்தமலையின்கீழ் ஒரு சிவலிங்கமூர்த்தியாயெழுந்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். சிவபெருமான் அப்படியே சிவலிங்கமூர்த்தமாகின்றோமென்று அந்தமலையினுள்ளேமறைய, உடனே அம்மலையினிடத்திற் சிவலிங்கந் தோன்றியது. அதைக்கண்டு பரமானந்தமாய் மயனென்னுந் தேவதச்சனால் ஓராலயங் கட்டுவித்தார்கள். அப்போதவ்விடத்தில் வளப்பம்பொருந்திய நகரமும், மூந்நூறு தீர்த்தங்களும் உண்டாயின. அல்லாமலும் ஆகாயகங்கை கிணறுகளாகவும் கற்பக விருக்ஷங்கள் மரங்களாகவும் வந்திருந்தன. தேவர்களும், இருஷிகளும், மனிதர்களாகவந்து பிரந்தார்கள் அரம்பாஸ்திரீகள் தாசிகளாகப் பிறந்தார்கள். ஆகையால் எல்லாஸ்தலங்களும் உடலென்றும், அருணாசலஸ்தலம் முகமென்றும் அதில்சிவபெருமான் கண்ணென்றும், இத்தலத்தின் பெருமையை அளவிட்டுச் சொல்லுதற்கருமையென்றும், நமது பெருமானாகிய நந்திகேச்சுரர் மார்க்கண்டேய முனிவருக்கு அனுக்கிரகஞ்செய்தார். அக்காலத்தில் சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளியபிரகாரம் அம்மலையின்மேல் கார்த்திகைமாதத்தில்வருகின்ற கார்த்திகை நக்ஷத்திரத்தில் ஜோதிதரிசனமாகிக் கொண்டுவந்த பாவனையாக இப்போதும் அந்தமலையின்மேல் தீபதரிசன மாகின்றமையால், அத்தினத்தில் இந்திரதீர்த்தமுதலாகிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து கிரியைவலம்வந்து தங்கடங்கள் சக்திக்குத்தக்கபடி அதிபக்தியுடன் தர்மங்களையுஞ்செய்து அருணாசலேசுரரைத் தொழுது தீபதரிசனமுஞ்செய்து உள்ளன்போடு துதிப்பவர்கள் அளவிலாச்சம்பத்தையும் மோக்ஷத்தையுமடைவார்கள்.

இதன்றியும், ஆதிவாரத்தில் திரிகரணசுத்தியுடன் தீர்த்தமாடி அந்தமலையையாதொருசிந்தனையுமில்லாமல் நிர்மலமாய்வலஞ்செய்துதம்மாலியன்றவளவில் தர்மங்கள் செய்தவர்கள் சூரியமண்டலத்தைப்பிளந்து சிவபதத்தைத் தமக்கு இடமாகச்சேர்த்துக் கொள்வார்கள் சோமவாரத்தில் அருணோதயத்திற்குமுன் தீர்த்தமாடி ஈரவஸ்திரத்துடன் வலம்வந்தவர்கள் தேவேந்திரனைப்போல் ஏழுலகத்தையும்ஆண்டு சிவசாரூப்பியத்தை அடைவார்கள்; மங்களவாரத்தில் தீர்த்தமாடி யாருடனும் வாய்பேசாமல் சித்தத்தைச் சிவன்பாலிருத்தி வலஞ்செய்பவர்கள் தங்கள்வறுமையும் சங்கிலித்தொடர்போல் வருகின்ற எழுபிறப்பையும் நீங்குவார்கள்; புதவாரத்தில் சிவபெருமானைப் பிரதக்ஷிணஞ்செய்தவர்கள் நான்குவேதங்களையும் ஆறுசாஸ்திரங்களையும், அறுபத்துநான்கு கலைகளையும் தெளிந்து முத்திக்கு நெருங்கினவராய்த் தேவர்களாவார்கள்; குருவாரத்தில் வலம்வந்தவர்கள் திரிமூர்த்திகளும் புகழத் தேவர்களுக்கும்முனிவர்களுக்கும் மேலாவார்கள்; சுக்கிரவாரத்தில் வலஞ்செய்தவர்க

ன் விஷ்ணுபதத்திற்சேர்வார்கள்; சனிவாரயுதயத்தில் வலம்வந்தவர்களுக்கு நவக்கிரகங்களும் பதினோராமிடத்தின் நற்பலனைக்கொடுக்கும்; சிவராத்திரியிலும் வருஷப்பிறப்பிலும், ஐப்பசிமுதலாகிய மூன்றுமாதங்களிலும், வலம்வந்தவர்களுக்கு மேற்சொன்ன பலன்களிலும் அதிகமான பலன்சித்திக்கும்.

உருவந்தெரியாமல் சித்தரும் தேவரும் இத்திருமலையை உள்ளன்புடன் வலஞ்செய்வதால் மற்றவர்கள் கிரிப்பிரதட்சணஞ்செய்யும்போது வாகனத்தின்மேலேறிக்கொண்டுவாராமலும், போர்வைபோர்த்துக்கொள்ளாமலும், குடைபிடித்துக்கொள்ளாமலும், பாதரட்சைதொடுத்துக்கொள்ளாமலும், தாம்பூலந் தரியாமலும், வேறொருசிந்தனையில்லாமலும், மனத்தினால் வந்தனஞ்செய்து அருணாசலேசுவரரையே சிந்தித்துக்கொண்டு மிகுந்த பயபக்தியுள்ளவர்களாயிருத்தல்வேண்டுமென்றும், அந்நாளில் விரதமிருந்து சிவதரிசனஞ்செய்து ஆலயத்திற்குள்ளேபோகின்றவர்களுள் அனுக்கரல்லாதவர்கள் அவ்விடத்திலிருக்கும் ஆதிசைவாசாரியர்களைக்கொண்டு வில்வார்ச்சனைமுதலானவைகளைச் செய்வித்தால் தங்கள்கையினாற்செய்த பேறுகிடைக்குமென்றும் பிரமதேவர் சனகரிஷிக்குச்சொன்னார்.

[சர்வாலய தீபதரிசனச் சரித்திரச் சுருக்கம்.]

ஸ்ரீகைலாயத்தில் உலகமாதாவாகிய பார்வதியாரோடு சிவபெருமான் எழுந்தருளியிருக்கும்போது, அவ்விடத்தில் ஏற்றியிருந்த நெய்த்தீபங்களில் ஒருதீபம் அணையுந்தருணத்தில் ஒரெலியானது அதிலிருந்த நெய்யை உண்ணப்போனபோது, அவ்வெலியின் முகமானது அணைந்துபோகிற வர்த்தியைத் தூண்டியமாத்திரத்தில், பிரகாசம் அதிகரித்ததனால் சிவபெருமானவர்கிருபை கூர்ந்து அவ்வெலிக்கு மானுடசரீரமும், அரசம், மற்றப்பேறுந்தந்து பூமியில்

பறக்கும்படி கட்டளையிட்டனர். அவ்வெலியானது மாபலிச்சக்கிரவர்த்தியாய்ப்பிறந்து சகல ஐசுவரியத்தையும் அனுபவித்திருக்குங்காலத்தில் ஒருநாள் சிவதரிசனத்துக்குப்போக எத்தனித்துத்தன் இராசசின்ன முதலிய சகல ஆடம்பர விபவத்துடன் சிவாலயத்திற்குட் பிரவேசித்துப் பிரதட்சணம் வருகையில், அவ்விடத்தில் ஏற்றியிருந்த தீபநெய்யின் ஓர்துளி இந்தச்சக்கிரவர்த்தியின் தேகத்தில் ஒழுகினவுடன், அந்தச் சக்கிரவர்த்தியின் தேகமுழுமையும் இரணமுண்டு வெகுகாலம் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கும்போது, ஒருநாள் சிவபெருமான் கிருபைகூர்ந்து சக்கிரவர்த்தியே! நீ மிகவும் அகங்காரியானமையால் நம்மாலுனக்கித்துன்பமுண்டாயிற்று நீ இன்றுமுதல் உணர்ந்து நெய் முதலிய பொருள்களால் ஆலயங்களுக்குத் தீபமேற்றுவையேயானால் உனக்கு இந்தவிரணந்தீர்ந்து சாயுச்சியபதவி கிடைக்குமென்று அசரீரியாய்த் திருவுளம்பற்றியதைக்கேள்வியுற்ற அச்சக்கிரவர்த்தியானவர் ஆநந்தமடைந்து அந்தக்கட்டளையின்படியே அன்றுமுதல் சிவாலயங்களிலும், மற்ற இருள்சூழ்ந்த ஆரணியங்களினும், தீபம் ஏற்றிக்கொண்டு வருங்காலங்களில், ஒருநாள் ஸ்ரீகைலாசபதியாகிய சிவபெருமானவர் திருவுளமிரங்கிக் கார்த்திகைமாதம் பூர்வபக்ஷம் கார்த்திகைநக்ஷத்திரத்தில், தேஜோமயமாயெழுந்தருளி அச்சக்கிரவர்த்திக்குச் சாயுச்சியபதமளித்தருளினார்.

அக்காலத்திலே தீபதரிசனத்துக்கு வந்திருந்த தேவர்களெல்லாரும் அச்சோதியைக்கண்டு பயந்து [illegible] ய உஷ்ணந் தணியும்பொருட்டும் பொரி, அவல், நிவேதனஞ்செய்தார்கள். இவ்வாறு கைலாசபதியான சிவபெருமான் மாபலிச்சக்கிரவர்த்திக்குச் சோதிசொரூபமாய்த் தரிசனங்கொடுத்த காரணமாக இன்றும் சிவாலயங்கடோறும் கார்த்திகைமாதம் பூர்வபக்ஷ

காலத்திலேகை. முதலாரு [illegible]

கார்த்திகை நக்ஷத்திரத்தில் தீபம்வைக்கவும் * சுட்கப்பனை கட்டவும் ஆயிற்று.

கார்த்திகை நக்ஷத்திரத்துக்கு முன்னால் பரணி நக்ஷத்திரஞ் சாயுங்காலை அதிவாச தீபத்தில் அக்கினிகாரிய முதலியவைகளின் மூலமாய் மகாலிங்க மூர்த்தியை ஆவாகனஞ்செய்து அந்தத்தீபத்தைச் சுவாமி சந்நிதானத்திற்ருனே பூசித்து வைக்கவேண்டும்.

மறுநாள் சாயங்காலை அர்த்த சூரியமண்டலத்தில் தென்னை, பனை, கமுகு, வாழை, மூங்கில் என்னும் இந்தமரங்களில் ஓர் வித மரத்தை ஆலயத்திற்கும் இக்கிரத்திக்குக்கு மத்தியஸ்தானமாகிய பிரமஸ்தானத்தில் நாட்டவேண்டும். அந்த மரத்துக்குத் தீபதண்டமென்று பெயராம்.

தண்டவுன்னதப் பிரமாணம்.

சுவாமி கர்ப்பக்கிரகத்து விமானம் எவ்வளவு உயரமோ அவ்வளவு உயரமாவது, அந்த விமானக் கழுத்தினளவாவது இருக்கவேண்டும்; இவ்விதமான தீபதண்டத்துடன் உலர்ந்த தென்னோலையாவது பனையோலையாவது பாக்கோலையாவது வாழைச்சருகாவது தாழஞ்சருகாவது அசோகச் சருகாவது சேர்த்து விமானம்போல் கட்டவேண்டும்.

மேற்சொன்ன பரணிநக்ஷத்திர மறுநாளாகிய கார்த்திகைநட்சத்திரத்தில் பஞ்சமூர்த்த சமேதமாய்ச் சோமாஸ்கந்த மூர்த்தியை உற்சவாலங்காரத்துடன் எழுந்தருளப்பண்ணி மேற்படி தீபதண்டத்தைச் சுவாமிக்குமுன்னே வரும்படியாகச்செய்து [illegible]கொண்டு அத்தீபத்தை அந்தத் தண்டத்தின்மேல்வைத்துச் சருகுகளைக் கொளுத்திவிட்டு அந்தச் சருகுகள் எரிந்தபின்பு மேற்படி தண்டத்தைச் சோதித்துவிடவேண்டும். அச்

---

* சுட்கப்பனை யென்பது — சொக்கப்பானை.

சோதியைச் சிவபெருமானாகப் பாவனைசெய்து தரிசிப்பவர்கட்கு இம்மையிற் செல்வமும், மறுமையில் மோக்ஷமுங் கிடைக்குமென்று ஆகமங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன.

தண்ட விதி.

உத்தமம் தென்னமரம்; மத்திமம் பனைமரம்; அதமம் பாக்குமரம்; அதமாதமம் வாழையும் மூங்கிலுமாம்.

தண்டவுன்னதப் பிரமாணம்.

உத்தமம் உயர்வு, மத்திமம் அதன் கழுத்தளவு.

மலையைச்சேர்ந்த ஸ்தலங்களில் நக்ஷத்திரம் பிரதானமாகவும் [illegible] ஸ்தலங்களில் பௌர்ணமி திதி பிரதானமாகவும், தீபம்வைக்க வேண்டியதென்று ஆகமங்களிற்சொல்லப்பட்டிருக்கின்றன.

தீபதரிசனச் சரித்திரச் சருக்கம்
முற்றிற்று.

பகற்காலத்தே [illegible]
காலத்திலிகை. முதலாஞ் சாமம், நான்காஞ் சாமங்களில் இடப்ப

சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

தீபவிதி.

ஆலயமுதலிய சிவசந்நிதானங்களினும், பூசையினும், யாகாதிகளினும் விளக்கிடுதல் சிறந்த புண்ணியமாகும். பதினாறுவகை உபசாரங்களுள் விளக்கிடுதலும் ஒன்று. சரியைத் தொழில்களுள் அதுவிசேடித்ததாகக் கூறப்பட்டுள்ளது. விளக்கில்லாத எக்காரியங்களும் பயன்படா. விளக்கிலா இடம் உயிரில்லாத உடம்பைநிகர்க்குமென்று சிவாகமங்கள் கூறுகின்றன. சிவபெருமானுக்கு முப்பத்திரண்டு உபசாரங்களுடன் பூசைசெய்க; அவை யியலாதாயின் பதினாறுவகை யுபசாரங்களாற் பூசிக்க. அவையு மியலாதவர் சந்தனம் புட்பம் நைவேத்தியம் தூபம் தீபம் என்னும் ஐந்துவித உபசாரங்களினாலாவதுசெய்க. அவையிற்றனுஞ் செய்ய வியலாதவர் முடிவிற்செய்யப்படும் தீபமாத்திரம் ஏற்றித் தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச் சங்கரா சயபோற்றி யென்னக்கடவர் என்ற காமிக ஆகமம் இலளித ஆகமம், தமிழ்வேதம் என்பன முழங்கா ற்கும். இதனாற் றீபத்தின் பெருமை யித்துணைத்து என்பது தெற்றெனப் புலப்படும். புவனங்கள் யாவற்றையும் பொதுவறப்புரந் மாவலிச்சக்கிரவர்த்தி யென்பான் யாவன்? அவன் முற்பிறப்பில் லியாகப்பிறந்து சிவாலயத்திலுள்ள விளக்கிலிட்டுவை [illegible] யுண்ணுதற்குச்சென்றான். அக்காலத்து மங்கியிருந்த தீபச்சுட தன்முகத்திற்சுட உதறியதனால் அது ஓங்கியெரிந்தது. அதனா தத்துவாதீத [illegible]ப்பரஞ்சுடராகிய தற்பரசிவனார் அவனுக்கு வுலகும் ஏவல்கேட்ப ஆ[illegible] அட்ட ஐசுவரியம், ட்டபோக்கிய சம்பன்னம், சத்த சந்தானம், அ[illegible] ட்குண சமேதம், பஞ்ச தந்திரப் பிரவீணம், வர்க்கத்திரயம்,

ட்டம், சதுரங்கபலம் முதலிய சகல விபோக சகிதமாக வாழும் வாழ்க்கையினையும் அருளினார் என்று புராணங்கள் உரைத்தன. சிவதிரவியமாகிய நெய்யைத் தன்பசிக்காக வுண்டமையினாலும், மங்கிய தீபத்தைத் தூண்டவேண்டுமென்று நினைத்துச் செய்யாமையினாலும், சிறிது குற்றமுற்றவனானபடியால் திருமாலது படிற்றுச் செய்கையினகப்பட்டான். இங்ஙனமாயின் மெய்யன்புடன் தீபமிடுகின்றவர் அடையும் பலன் இவ்வளவின தென்று உலகமறிந்து ஏற்றியுய்க.

தீபமாலை, தீபம் என்னும் இவற்றாற் பிரகாசிப்பித்தல் சிவவழிபாட்டிற்கு இன்றியமையாததாகும். தீபமாலையாவது கபிலநிறப்பசுவின் நெய்யினால் நிறைக்கப்பட்டதும், கர்ப்பூரம், அகில் என்னுமிவற்றோடு சம்பந்தமாகத் திரிக்கப்பட்ட இழைகளையுடையதும், அவியாததும், வட்டவடிவாகிய தோரணம் முன்னர்த் தூங்கப்பெற்றதும், திரிசூல வடிவாகச் செய்யப்பட்டதுமாயுள்ளது. தீபங்கள் ஒருமுகம், இருமுகம், மும்முகம், நான்குமுகம், ஐம்முகம் என்பனவும், புருடதீபம், நட்சத்திரதீபம், மயூரதீபம், இடபதீபம், நந்திதீபம், கும்பதீபம் எனப் பலவகையவாக விளங்கும். பூசையின் மூவகையுள் தீபம் வரையும் அருச்சனையெனவும், நைவேத்தியம் வரையும் பூசை எனவும், பலியீடுமெனவும் சாந்தி கருமம் எனவுஞ்சொல்லப்படும். ஆகவே தீபமில்லையேல் அருச்சனையென்பதுமில்லையாம். ஆலயங்களில் தீபமிடும்போது, ஒன்றுமுதல் பத்துவரையில் இடுதல் அதமாதமமாம். பத்துமுதல் நூறு வரையில் இடுதல் அதமம். நூறுமுதல் பதினாயிரம் அளவும் இடுதல் மத்திமம் எனப்படும். பதினாயிரமுதல் ஓரிலக்கம் வரையும் இடுதல் உத்தமமாகும். இலக்கத்திற்குமேல் இடப்படுவனவெல்லாம் உத்தமோத்தமமாகும்.

பகற்காலத்தே யிடப்படுந் தீபங்களில் இரட்டிப்பாக இராக்காலத்திலிடுக. முதலாஞ் சாமம், நான்காஞ் சாமங்களில் இடப்ப

னைவற்றினும் இடைச்சாமங்களில் இருமடங்கு அதிகமாக ஏற்றுக. இன்னுந் தீபங்கள் நான்கு வகைப்படும். குற்றமில்லாத நற்பசுக்களின் நெய்கொண்டு இடுவது சாத்துவிக தீபம். வெள்ளாட்டு நெய், நல்லெண்ணெய்கொண்டு இடுவது இராசத தீபம். எருமை நெய்யாலிடுவது தாமத தீபமாகும். விருக்ஷங்களின் விதைகளில் உற்பத்தியான ஆமணக்கெண்ணெய், இருப்பை நெய், கடலையெண்ணெய் முதலியனகொண்டு இடுவது பைசாச தீபமென்க. தாமததீபத்தைப் பார்க்கினும் பைசாச தீபம் இழிந்ததும் யோக்கியமில்லாததும் என்று சிவாகமங்களால் இழித்துக் கூறப்பட்டன. திரிகள் தாமரைநூல், பருத்திநூல், கொண்டு செய்க. இவ்வாறு பரசிவனாது திருமுகங்களினின்றுந் தோன்றிய சிவாகமங்கள் முறையிடவும், சிலர் அதனையெட்டுணையேனும் மதிக்காது, குளிக்கப்போய்ச் சேறுபூசுவார்போலச் சிவாலயங்களிலே கெட்ட நாற்றமுள்ள மண்ணெண்ணெய் கொண்டும், மெழுகு வர்த்தியென்னும் அநாசாரப் பொருள்கொண்டும் தீபமிடுகின்றனர். உற்சவ காலங்களிலே எண்ணெய்ச் செலவிற்குப் பயந்து சாணை வரட்டியிலே மண்ணெண்ணெயைத் தோய்த்துக் கொளுத்திப் பிடிக்கின்றனர். தருமகர்த்தர்களும் அதனைக் கண்டித்தல் கிடையாது. அருச்சகர்களும் அவர்வழியே செல்கின்றார். அதனால் அவர்க்கு நரகப் பிராப்தியன்றி நற்பலன் அடையாது. தீபமிடுங்கால் அது ஓரங்குலம்வளர்ந்து எரிவது அதமமென்க. இரண்டு மூன்று அங்குலம் மத்திமமாம். அவற்றின்மேற்பட்டெரிவன உத்தமம்.

காலை உச்சி மாலை என்னும் மூக்காலங்களினும் தீபங்கள் நந்நான்குடன் பூசிப்பது அதமத்தினதமம். காலை உச்சிகளில் நான்கு தீபங்களும், மாலைக்காலத்தில் எட்டுத்தீபங்களும் இட்டுப் பூசித்தல் அதமம். மூக்காலங்களினும் பன்னிரண்டு இடுவது மத்திமத்திலதமும், இருபத்துநான்கிடுவது மத்திமத்தின்மத்திமமும். சங்ககாகளத் தொனிகளோடும், அருக்கிய புட்பங்களோடும் முப்பத்தாறு தீபங்களிடுவது மத்திமத்தி லுத்தமமுமாகும். எழுபது தீபங்களேற்றிப் பூசித்தல் உத்தமத்தி லதமம். மூக்காலங்களினும் இரண்டுமரக்கால் அரிசிகொண்டு செய்யப்பட்ட அவிசு பாயசம், சித்திரான்னம் என்பவற்றையும், அவ்வளவு சுத்தஅன்னத்தையும் படைத்து அர்த்தசாமத்தும் அவ்வாறு நைவேத்தியஞ்செய்து, முப்பத்துநான்கு வாத்தியங்கள் முழங்க, இருநூறு தீபங்களிட்டுப் பூசிப்பது உத்தமத்தில் மத்திமமாம். பத்துமரக்கால் அரிசிகொண்டு செய்த நைவேத்தியம் படைத்து, ஐம்பது வாத்தியங்களும், முப்பத்திரண்டு உபசாரமும், ஐம்பது உருத்திர கணிகையர் நிருத்தங்களுமமையக் காலை உச்சி மாலை என்னு மூக்காலங்களினும் ஐந்நூறு, ஆயிரம், பதினாயிரந் தீபங்களேற்றிப் பூசிப்பது உத்தமோத்தமம் ஆகும், இங்ஙனம் சிவாகமவிதிப்படி சிவாலயங்களிலே எண்ணிறந்த தீபங்களை யேற்றிப் பூசித்ததனா லுண்டாகும் பலன் திருவருணாசலத்தில் கார்த்திகைமாதத்தில் இடப்படுந் தீபதரிசன மாத்திரையே யுண்டாகும். கார்த்திகைத் தீபத்திற்கு நெய், திரி முதலியன உபகரித்தோர் பெரும்பயனை எவருஞ்சொல்லுதல் இயலாது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தீபதத்துவம்.

ஆலயாதிகளிலே திருவிளக்கிடுவதின் உண்மையை யாராய்வாம். தீபம் ஆக்கினேய உபசாரத்துளொன்று அக்கினி அருவாகவும் உருவாகவும் இருத்தல்போலச் சங்கரபகவானும் அருவாகவும் உருவாகவும் இருக்கின்றார் என்பது உணரப்படும். அக்கினி யோ

ன்றைப்பற்றித் தோன்றுதல்போலப் பரமபதியும் அன்புமுறுகியவிடத்துத் தோன்றுவார் என்பதும் போதரும். ஒரு விளக்கினிருந்து வேறொரு விளக்கும், அதிலிருந்து பலவிளக்குகளும் தோன்றுவதுபோலத் தத்துவங் கடந்த தனிப் பரம்பொருள் ஆகியசிவபெருமானும் ஆன்மாக்களை அநாதியே பந்தித்த ஆணவாதி மும்மலங்களையும் நீக்கி யவைகட்கு அத்துவித இன்பமாகிய சிவசாயுச்சியத்தை யளித்தற்குச் சிவமாகியும் சத்தியாகியும், நாதவிந்துக்களாகியும், சதாசிவன், மகேசுரன், உருத்திரன் முதலிய அளவிறந்த உருவங்களைக்கொண்டும் பஞ்சகிருத்தியங்களையும் இயற்றுகின்றார் என்பது பெறப்படும். அவ்வுண்மை ஒருமுகதீபம் இருமுகதீபம்,மும்முக தீபம், நான்முக தீபம், ஐம்முக தீபம், பலவடுக்குத் தீபங்களாலும் உணர்த்தப்படுமென்க. தீபம் என்பது சிவபெருமானது திருவருள்வடிவாகிய சிவசத்திக்குறியாம். இன்னும் இத்தீப மிடுதலை ஆராயுங்கால் தீபம் இருளை நீக்குவதுபோல அஞ்ஞான விருளை நீக்குவது ஞானம் என்று அறிதல் சான்றோர்க் குரிமையாம். ஆலயம் தேகமாகவும், ஆங்குள்ள தகழிபோல இருப்பது தேகத்தினுள்ள மனம் ஆகவும், அத்தகழியில் நெய்யை நிறைத்தல் போல இம் மனத் தகழியினும் உண்மை யுணர்வாகிய நெய்யை நிறைத்து, தாமரை நூல், பருத்தி நூல் திரியிடுதல்போல உயிர் என்னுந்திரியையிட்டு, பிராணன் என்னுங் காற்றை நிறுத்தி, அன்பென்னுந் தூண்டுகோல் கொண்டு சிவஞானம் என்னுந் தீபத்தை யேற்றின் ஆணவமாதி மலவிருளகன்று பரஞ் சோதியாகிய சிவ தரிசனம் உண்டாகும் என்பதற்கு அறிகுறியாகக் காணப்படும். கார்த்திகைத்தீபமும் அதனைத் தரிசிக்குங் கண்களின் ஒளியும் இரண்டற்ற அத்துவிதமாக விளங்கல் போலச் சிவபெருமானாகிய பசுபதியும், ஆன்மாக்களும் "விண்ணினிலமுடலுயிர்" என்றின்னர்போல அத்துவிதமாக விளங்குகின்றனர் என்னுந் தத்துவமுந் தோன்றநிற்கும் பெற்றியது.

தேவாரம்.

உடம்பெனு மனையகத்து ளுள்ளமே தகழியாக
மடம்படு முணர்நெய்யட்டி யுயிரெனுந் திரிமயக்கி
யிடம்படு ஞானத் தீயா லெரிகொள விருந்து நோக்கிற்
கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே.

ஷை

ஊனி லுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கார்த்திகைத்தீபச்சிறப்பு.

திருவண்ணாமலையிலே கார்த்திகை மாதந்தோறும் இடப் டும் தீபத்திற்குச் சர்வாலய தீபமெனவும், கார்த்திகைவிளக்கீடு னவும், ஞானதீபமெனவும், சிவசோதி, பரஞ்சுடர் எனவும் பெ ர்கள் வழங்கப்படும். கார்த்திகைத் தீபக்காட்சியைக்கண்டு ஆனந் த்தவரதுகண்களே கண்களெனப்படும். அல்லாதார் கண்களெல் ாம் புண்கண், மரக்கண், பீலிக்கண், மட்பாண்டக்கண் எனப் ட்டு ஒரு சிறிதும் பயனிலவாம். அதனை மதுரைச் சங்கப்புலவரு ளாருவராம்பொய்கையாரும்.

மட நடைப் பறவையு மாய விலங்கு
மடிமலர் முடிக்கா டவைமுறை போகா
துறழுபு காண்குமென் றறீஇத் திரிந்து
தேவயாண் டாயிர கேடியு முணராப்
பரஞ்சுடர் மலைக்கட் கருந்தடங் கண்ணி
காணுபு விளக்குங் கார்த்திகை விளக்கை

மாணப் பெறீஇயவீர் மணக்கோ விழியே
யல்லன மரங்கற் பீலி யேனம்
நிலமிவற் றுழைபோ மாசின வாகலிற்
பல்சான் றீரே பல்சான் றீரே
வீழ்காட் படாமை வியற்பய னுறுவான்
சென்மின் காண்மின் றிருவிளக் கருளே.

என்று அவ்வுண்மை தெரித்தார். இவ்விளக்கீடு, சிவபெருமான் உலகமுழுதும் சோதி வடிவாய் விளங்கி நின்றதற்கு அறிகுறியாக எவ்விடத்துந் தீபமிட்டுத் தரிசிக்கு மதுவாம். வைணவர்க்கு ஐப்பசியில் தீபாவளி வருதல்போல, சைவ சித்தாந்திகளாகிய எம்மனோர் யாவருக்கும் உரிய தீபாவளி கார்த்திகைத் தீபமேயாம். இதனைப் புறச்சமயிகளும் ஏற்றுக் கொண்டாடி வருகின்றார். சமணர் முதலாய புறப்புறச் சமயிகளும் இதன் பெருமையை யாங்காங்கு எடுத்து வியந்துளார். சமண நூலாகிய சீவக சிந்தாமணியினும்,

(நாமகளிலம்பகம்-௨௨௭-செய்யுள்.)

தார்ப்பொலி தரும தத்தன் றக்கவா றுரைப்பக் குன்றிற்
கார்த்திகை விளக்கிட் டன்ன கடிகமழ் குவளைப் பைந்தார்
போர்த்ததன் னகல மெல்லாம் பொள்ளென வியர்த்துப் பொங்கி
நீர்க்கடன் மகரப் பேழ்வாய் மதனன்மற் றிதனைச் சொன்னான்.

என்று சிறப்பித்துப் பேசப்பட்டிருக்கின்றது. ஒல்காப்பெரும்புகழ்த் தொல்காப்பியனாரும் புறத்திணையியலின் மக்கட்பாடாண்டிணை கூறியவிடத்து, ''வேலி னோக்கிய விளக்கு நிலையும்'' என்றருளி இதன் பெருமை குறிக்கவைத்தார். இதற்கு உரைசெய்த உச்சிமேற் புலவர் கொளும் ஆசிரியர் நச்சினார்க்கினியரும், ''இதுகார்த்திகைத் திங்களிற் கார்த்திகை நாளின் ஏற்றிய விளக்குக் கீழும்மேலும் வலமுமிடமுந் திரிபரந்து சுடர் ஓங்கிக் கொழுந்துவிட்டெழுந்ததென்று அரிவோராக்கங் கூறப்படுவதாம்'' என்றுரைத்தார். அவ்வாறே சங்கப்புலவர்களும்,

(தொல்காப்பியம்-புறத்திணையியல்-௯௫-சூத்திரத்து
உரைச் செய்யுள்கள்.)

மைம்மிசை யின்றி மலை விளக்குப் போலோங்கிச்
செம்மையி னின்றிலங்குந் தீபிகை—தெம்முனையுள்
வேலினுங் கேடாது வேந்தன் மனைவிளங்கக்
கோலினுங் கோடா கொழுந்து.
வளிதுரந்தக் கண்ணும் வலந்திரியா பொங்கி
யொளிசிறந் தோங்கி வரலா—னளிசிறந்து
நன்னெறியே காட்டு நயந்தெரி கோவாற்கு
மெய்ந்நெறி காட்டும் விளக்கு.

என்று கார்த்திகைத் தீபத்தின் பெருமையை நன்கு எடுத்து காட்டினர். ஆகவே யித்தீபக் காட்சி உலகந் தோன்றிய காலந் தொடங்கி நிகழுகிறதென்பது உண்மையாயிற்று. முன்னர்க் காலத்திற் கார்த்திகை மாதத்திலே கார்த்திகை நட்சத்திரத்தில் சிவபெருமானைப்பூசித்து விளக்கு ஏற்றியபோது, அது எத்துணைக் காற்றடித்தபோதும் சாயாது மேலோங்கி யெரியுமாயின் மிகவும் நல்லதென்றும், வலப்பக்கத்தாயினும், இடப்பக்கத்தாயினும், கீழிலாயினும் சாய்ந்து எரியுமாயின் இன்னின்ன பலாபலமென்றும் அறிந்துகொள்ளும் வழக்கம்இருந்தது. இக்காலத்தும் அதுகொள்ளப்படுகின்றது. உலகரும் ''மலையிலிட்ட விளக்கு, குன்றின்மேலிட்ட விளக்கு'' எனக்கூறுதல் காணப்படுவதலால் திருவண்ணாமலையின்க ணிடப்படும் கார்த்திகைத் தீபத்தின்சிறப்பு விளங்கும். திருவண்ணாமலையென்பது தொண்டைநாட்டு முப்பத்திரண்டு சிவதலங்களுள் ஒன்று. முப்பத்திரண்டுதலம் வந்ததற்குக் காரணம் என்னவென்று ஆராயுங்கால், இறைவியாகிய பரமேசுவரி திருக்கயிலையினின்றும் இவ்வுலகில் வந்து முப்பத்திரண்டு அறங்களையும்

வளர்த்தருளினன் என்னலால் அதற்கு அறிகுறியாகத் தலங்களும் முப்பத்திரண்டாயின வென்பர் பெரியோர். உலகத்திலுள்ள தலங்கள் எவற்றினும் நினைத்த மாத்திரையே அத்துவிதமுத்தியாகிய திருவடிப்பேற்றை யளித்தலால் திருவருணாசலத்திற்கு ஒப்பானவும் மிக்கவுமான தலங்கள் எங்குமில்லை. பரசிவமே மலையாக விளங்குவாராயின் அதன்பெருமையை யாவரே யுணரவல்லார்.

இத் திருவண்ணாமலையின் பெருமை தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, பெரியபுராணம், கந்தபுராணம், சூதசங்கிதை, பிரமாண்டபுராணம், சரபஉபநிடதம், இருக்குவேதம், பாஸ்கரசங்கிதை, அருணாசலபுராணம், அருணகிரிபுராணம், திருவருணைக்கலம்பகம், அருணைபந்தாதி, அருணகிரியந்தாதி, சிவரகசியம், முதலிய பலநூல்களில் விளக்கப்பட்டுள்ளன. விட்டுணு தன்பிள்ளையுடன் சண்டையிட்டு மிருகமாகவும், புத்திரன் பறவையாகவும் உருவெடுத்து அடிதலை தெரியாது மங்கிக் கருவமொழிந்த பின்னர்த் துதிக்க, சோதிவடிவாய் சிவபெருமான் மலையாக விளங்காநின்றார். அம்மலையினால் உலகமெல்லாஞ் சிவந்த நிறமாக விளங்கினமையால் அருணாசலம் எனப்பெயர்பெற்றது. அருணம்=சிவப்பு; அசலம்=மலை. சோணகிரி என்பதற்கும் பொருள் அதுவே. சோணம் - சிவப்பு. இனி அருணம் என்பதனை அ - ருணம் என்னும் வடமொழிகளாகக் கொண்டு, ருணசம்பந்தங்களை யொழிப்பது எனவும்பொருள் கூறுவர் அருணகிரி புராணத்தார். நிற்க, சில போலிவைணவர்கள் திருவண்ணாமலை சுதரிசனகிரி எனப்பெயர் பெற்ற வைணவதலம்என்று கூக்குரலிடுகின்றார். அவ்வாறே இராமாநுசன் என்னும் புதுவை வைணவனொருவன் சுதரிசனகிரிபுராணம் என்று ஒருபோலிப் புராணம்பாடிச் சிவதூடணங்களும் புரிந்தான். அதற்குச்சைவர்கள் மறுப்புக்கள் எழுதி வெளியிட வாயடங்கி நாவுலர்ந்து நாளுலந்து தென்றிசை யோடினன். அதுநிற்க, விட்டுணுவும் பிரமனும் அடிமுடிகளைத் தேடி யறியாது துதிக்க,

அக்கினி யுருவாய் நின்றருளிய பெருமான் அடியையும் முடியையுங்
காட்டாது இலிங்கோற்பவ மூர்த்தியாய், இலிங்கோற்பவ காலமா
ய மகாநிசியிலே ஒரு முகூர்த்தகாலங் காட்சிகொடுத்தருளியது
ன்றிக் கார்த்திகை மாதத்திலே கார்த்திகை நட்சத்திரத்திலே
இதுபோல ஓர் சோதி காட்டுவேம். அதனைத் தரிசிப்பவர் யாவரா
னும் அவர்பாசமாகிய இருட்படலத்தினின்றும் நீங்கிச் சிவஞான
ஒளியையடைந்து நம்கழலடி யுறுவர்" என்றும் பரமர் அருளின
மையால் அந்த ஐதிகப்படியே இப்போதும் மலையில் கார்த்திகைக்
ர்த்திகையில் தீபமேற்றித் திருவிழாக் கொண்டாடப் படுகின்
து. விட்டுணுவுக்கும் பிரமனுக்கும் நடுவிற் சோதி வடிவாகத்
தோன்றியது மாசிமாதத்தில் கிருஷ்ணபக்ஷச் சதுர்த்தசி திதியும்
சோமவாரமுந் திருவோண நட்சத்திரமுங் கூடிய மகாநிசிக்கால
ன்றோ? தீபமிடல் மாசிமாதத்திலன்றிக் கார்த்திகையி லிடுதல்
துகாரணம் என வினவிற் கூறுவாம்.

இறைவன் சோதியுருவாக முதலிற் றோன்றியது மாசிச் சிவ
ராத்திரியிலேயே இலிங்கோற்பவ மூர்த்தியாய்ப் பின்னர்க் காட்சி
டுத்தது மகாநிசிக் காலமாகிய இரவு இருபத்தேழு நாழிகைக்
ள்ளாம். அக்கால [illegible] அவ்வண்ணமென்படி பார்க்கி
ன் மானுடரினக் கார்த்திகை மாதமே தேவர்க்கு மகாநிசிக் கால
ாகும். அது பற்றியே கார்த்திகையில் விளக்குவிழாச் செய்யப்படு
மென்றறிக. இதுவன்றி வரன் என்னு மொருசித்தன் முனிவர் சா
த்தால் மகிடாசுரனாகப் பிறந்திருக்க, சங்கரி அவனைக் கொன்று
வன் கழுத்திற் சிவலிங்கந் தோன்றி யெடுக்க, அது கையினின்
ும் நீங்காதிருந்த அப்பாவத்தை விலக்கிக் கொள்ளற்காக, அம்
மையார் இத்திரு வருணாசலத்தை யடைந்து, ஐப்பசி மாதத்திற்
கட்டை நட்சத்திரத்திற் பூசித்து, கட்கதீர்த்தத்தின் முழுகி அரு
சித்தமையால் சிவலிங்கங் கையினின்றும் நீங்கப்பெற்று, ாத்

திகைக் கார்த்திகையிலே சிவாகம விதிப்படி உற்சவம் நடத்துவித்துத் தீபங்களையும் எவ்விடத்தும் ஏற்றுவித்து, தாம் நினைந்தனவெல்லாம் பெற்றார் என்று அருணகிரிபுராணங் கூறுதலால் அவ்விதிப்படி யிக்காலத்துந் தீபமேற்றுதலுமாம். இத்தீப தரிசனஞ் செய்தோர் சிவபெருமானைத் தரிசித்தவராவர்.

சிவபெருமான் ஒளிவடிவா யிருக்கின்றார் என்பது தோன்றத் திருநெறித் தமிழ்வேதமும் 'சோதியே சுடரே சூழொளிவிளக்கே' என அடுக்கிக் கூறுகின்றது இத்திருமலை சிவனேயாதலால் இதன்கண் கால்வைத்து ஏறுதல் மகாபாதகமாம். இம்மலையை வலம்வந்தோர் தம்பாவங்களெல்லாம் நீங்கி முத்திபெறுவர். வலம் வருவோர் பாதரட்சையிட்டும், குடைபிடித்தும், வாகனத்து ஏறியும் செய்தல் ஆகாது. முன்னர் மாகிதன் என்னும் அரசன் குதிரையிலேறி வலஞ்செய்தான். அதனால் அவன் நரகத்தில் வீழ்ந்தான். குதிரை சிவலோகஞ் சென்று சிவகணத் தலைவனாய் வாழ்ந்ததென்று உண்மைநூல்கள் கூறுகின்றன. ஆகலால் நமரங்காள்! குளிக்கப்போய்ச் சேறுபூசுவார்போலப் பாவந் தேடிக்கொள்ளாது விதிப்படி தீபதரிசனமும் பிரதக்கிணமுஞ்செய்து சிவஞானபலத்தால் அருணகிரிப் பெருமானது திருவடிப் போ[illegible] சிவசாயுச்சிய முத்தியை யடைந்து செம்மாந்து வாழ்வீராக.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருணாசலபுராணம்

மூலமும் உரையும்.

பாயிரம்.

விநாயகர் காப்பு.

கலி விருத்தம்.

மிக்க வேத வியாசர் விளம்பிய
விக்க தைக்கிளை யீன்றருள் செய்திட
முக்கண் வெற்பினை மும்மத வாரியைக்
கைக்க விற்றினை கைதொழு தேத்துவாம்.

இ-ள். அநேக வேதங்களை இயல்பாகவே உணர்ந்த வியாசரால் அருளிச்செய்யப்பட்ட ஸ்காந்த புராணத்தில் உருத்திர சங்கிதையிலிருக்கும் இந்த அருணாசல மான்மியத்தை யிக்காலத்தில் தமிழினாற்செய்ய (இதற்கு இணையில்லையென்று சொல்லும்படி) அநுக்கிரகஞ் செய்வதற்கு மூன்று கண்களையுடைய மலைபோன்றவரைச் சமுத்திரம்போன்ற * மும்மதத்தையும் தும்பிக்கையினையுமுடைய யானைமுகம்பொருந்திய விநாயகரைக் கையினாற் றொழுது எடுத்தநூல் இடையூரின்றி இனிதுமுடித்தற்பொருட்டுத் தோத்திரஞ் செய்வாம்—எ-று. (க)

நடேசர் துதி.

முதிருஞ்சுவை மதுரம்பெற
  மொழியுந்தமிழ் விரகன்புகழ்
பதிகம்புனை பவனம்பினர்
  பவபஞ்சன னமலன்கதி
ருதிரும்படி பகிரண்டமு
  முடையும்படி யிலகும்படி
யதிரும்படி நடனம்புரி
  யதிருக்கழ லதிருங்கழல்.

இ-ள். மிகுந்த மதுரச்சுவையு முண்டாகப் பாடுகின்ற திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளால் தோத்திரம் பண்ணப்பட்ட பதிகமாகிய மாலையைத் தரிக்கின்றவராகியும், தம்மையடைந்தவர்களது பிறவியைக் கெடுப்பவராகியும், மலரகிதராகியும் விளங்கி, சூரியனுதிரவும், பகிரண்டமுடையவும், விளங்குகின்ற பூமியதிர

---

* மும்மதமாவன—கன்னமதம், கபோலமதம், பீஜமதம்.

வும் கடனத்தைச் செய்யாநின்ற மேவுஞ் சப்திக்கின்ற வீரகண்டாமணியைத்தரித்த நடேசரது பாதத்தை வணங்குவோம். எ-று. இச்செய்யுளுக்குப் பின்னிலைவருவிக்கப்பட்டது. (உ)

தலமகிமை.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

இரவிகள் சந்திரர் வயிரவர் விஞ்சைய
ரிமையவ ரெண்டிசையோ
ருரக ரருந்தவர் முனிவரர் பங்கய
ருவண நெடுங்கொடியோர்
பரவி நெருங்கலி னுலக நிறைந்தவர்
பணியு மிடங்கிடையா
தரகர வென்பது கடலின் முழங்கிய
தருணை வளம்பதியே.

இ-ள். சூரியர்களும், சந்திரரும், வயிரவரும், வித்தியாதரரும், தேவரும், அட்டதிக்குப் பாலகரும், நாகலோகத்தாரும், அரிய தபசிகளும், முனிவர்களும், பிரமர்களும், கருடக் கொடியையுடைய விட்டுணுக்களும் பரந்து நெருங்குதலினால் உலகநிறைந்து அவர்கள்வணங்குதற்கு இடங்கிடையாததாய் அவர்களாலே சொல்லப்பட்ட அரகரவென்கிற சப்தமானது சமுத்திரத்திலும் அதிகமாக முழங்கும் வளப்பத்தையுடையது அருணாசலமென்னுந் தலமாம். எ-று. (௩)

இளமுலை மங்கையர் முகமு நெருங்கிய
விருகுழை யும்பகலே
யொளிரொரு சந்திர னுடனிரு செங்கதி
ருதயமெ னத்தனிநூ

தளையவி ழுந்தொடை மகபதி தன்பதி
  தனபதி தன்பதியா
மளகை வளம்பதி தனிலும் வளம்பதி
  யருணை வளம்பதியே.

இ-ள். இளமையாகிய தனங்களையுடைய பெண்கள்முகங்களும், அவர்களணிந்த இரண்டு இரத்தினக்குண்டலங்களும், பகலிலே பிரகாசிக்கின்ற ஒருசந்திரனுடனே இரண்டுசூரியர் உதயமானார்களென்றுசொல்லும்படியாகிய ஒப்பற்றஊர், முறுக்கவிழ்ந்த கற்பகமாலையைத்தரித்த தேவேந்திரனுடைய பட்டினமாகிய அமராவதியையும், குபேரனுடைய நகரமாகிய அளகாபுரியையும் பார்க்கிலும் வளப்பத்தையுடையது அருணாசலமென்னுந் தலமாம். எ-று.

கால னெதிர்த்திட மார்பி லுதைத்தவர்
  காம னுருப்பொடியா
ஆல மிடற்றினர் மாலை மதிக்குறை
  யாடர வப்பணியார்
நாலுமுகத்தவன் ஞால மளிப்பவ
  னாடு மதற்கரியார்
சூலமெடுப்பவர் மேவு திருப்பதி
  சோண கிரிப்பதியே.

இ-ள். இயமனெதிர்க்க மார்பில் உதைத்தவராகியும், மன்மதனுடைய தேகத்தைப் பொடியாகச் செய்தவராகியும், விடத்தைக் கண்டத்தில் தரித்தவராகியும், இளம்பிறையைத்தரித்தவராகியும், ஆடுகின்ற சர்ப்பத்தை ஆபரணமாகப் பூண்டவராகியும், பிரமாவும் விஷ்ணுவும் தேடுதற்கரியவராகியும் சூலத்தைக் கையிலெடுத்தவராகியும் விளங்குகின்ற பரமசிவன் வாசஞ்செய்கின்ற அழகாகிய பதி அருணாசலமென்னுந் தலமாம். எ-று. (௫)

பரசிவவணக்கம்.

சந்தக்கலிவிருத்தம்.

உறவொடு பகையறு மொருமுத லவனெவ
னழிவி லுலகரு ளிறையவ னவனெவன்
மறைமுடி வினிநடம் வ[illegible] னெவனவ
னறிவினி லறிபவ னடியிணை தொழுதனம்.

இ-ள். உறவும் பகையும் இல்லாத ஒப்பற்ற முதன்மையானவனெவன்? சருவசங்காரமானபின்பு உலகத்தை உண்டாக்குகிறவனெவன்? வேதமுடிவிலே நடனஞ்செய்கின்றவனெவன்? தன்னியற்கையறிவினாலே சகலத்தையறிகிறவனெவன்? (பரமசிவம்) அப்படிப்பட்ட தன்மையையுடைய பரமசிவனது திருவடிகளை யாம் வணங்கினோம். எ-று. (௧)

அருணாசலேசர்துதி.

கலிநிலைத்துறை.

மணிகொண்ட நெடுங்கடலில் விழிவளருந்
  திருமாலு மறையி னோனும்
பணிகொண்ட பாதலத்தும் பூதலத்து
  மீதலத்தும் பரிந்து தேட
வணிகொண்ட பிரமாண்ட கோளகைபோற்,
  கோளகையா யழகு காட்டக்
அணிகொண்ட பொருவமையா மொருவரையா
  மகலாது கருத்துட் சேர்ப்பாம்.

இ-ள். இரத்தினங்களுக் கிருப்பிடமாகிய நீண்டகடலிலேநித்திரைசெய்கின்ற விட்டுணுமூர்த்தியும், பிரமதேவரும், நாகங்கள்

வாசஞ்செய்கின்ற பாதாளத்திலும பூமியிலும் மேலுலகத்திலும் வருந்தித்தேட அவர்களாலெட்டப்படாமல் அழகாகிய பிரமாண்டகோளகையானது பொன்னாற்செய்யப்பட்ட கோளகைபோலாகி அழகுகாண்பிக்க எண்ணங்கொண்ட ஒப்பற்ற அக்கினிமலையாகிய பரமசிவத்தை நீங்காது இருதயகமலத்திற் சேர்த்துக்கொள்வோம்.

ஒருமானைக் கரத்தினில்வைத் தொருமானைச்
சிரத்தி னில்வைத் துலகமேழுந்
தருமானை யிடத்தினில்வைத் தருள்வானைப்
பவளநெடுஞ் சயிலம் போல
வருமானை முகத்தானை யளித்தானைப
பெருமானை மகிழ வேறும்
பெருமானை யருணகிரிப் பெம்மானை
யடிபணிந்து பிறவி தீர்ப்பாம்.

இ-ள். தாருகவன இருடிகள் வரவிட்டமானைக் கையிலேவைத்தும், ஒரு மான்போன்ற கங்கையை முடியில்வைத்தும், ஏழுலகத்தையும்பெற்ற உமாதேவியை வாமபாகத்தில்வைத்தும், அடியார்க்கருள்செய்கின்றவரும், பவளம்போல்வருகின்ற ஆனைமுகத்தையுடைய கணபதியைப்பெற்றவரும், போர்செய்கிற இடபவாகனத்தி லெழுந்தருளுகின்ற ஆண்டவருமாகிய (அருணாசலதலத்தில் வீற்றிருக்கின்ற) பரமசிவனுடைய திருவடிகளை வணங்கி இனிவரும் பிறப்பைத் தீர்த்துக்கொள்ளுவோம். எ-று. (௮)

உண்ணாமுலையம்மைதுதி.

காரொழுகுங் குழலாளைக் கருணைவழிந்
தொழுகுமிரு கடைக்கண்ணாளை
மூரலிள நிலவொழுகப் புழுகொழுக
வழகொழுகு முகத்தினாளை

வாரொழுகுந் தனத்தாளை வடிவொழுகித்
தெரியாத மருங்குலாளைச்
சீரொழுகும் பதத்தாளை யருணையுண்ணா
முலையாளைச் சிந்தை சேர்ப்பாம்.

இ-ள். மேகம்போன்ற கூந்தலையும், கிருபைவழிந் தொழுகுகின்ற இரண்டுகடைக்கண்களையும், தந்தங்களின்காந்தி இளமையாகிய சந்திரிகைபோற்பிரகாசிக்கப் புழுகுவசிக்கின்ற அழகுபொருந்திய முகத்தையும், கச்சணிந்த தனங்களையும், அதிகவழகையுடையதா யொருவருக்குக்தெரியாத இடையையும் சிறப்புப்பொருந்திய பாதங்களையுமுடைய அருணாசலதலத்தில் வீற்றிராகின்ற உண்ணாமுலையம்மையை மனத்தில் நினைந்துக்கொள்ளுவோம். எ-று. (௯)

யானைதிறைகொண்ட விநாயகர்துதி.

மதமூன்று மாறாக வருங்களிற்று
முகத்தானை மனத்தி லேதான்
பதமூன்று மருந்தவர்க்குப் பதமூன்றுங்
கடந்தபதம் பாலிப் பானை
விதமூன்று புரங்கடிந்தா ரளித்தருளு
மொருமுதலை வேரோ டேசஞ்
சிதமூன்று பிறப்பொழிக்கு யானைதிறை
கொண்டவனைச் சிந்தை சேர்ப்பாம்.

இ-ள். மும்மதங்களும் ஆறாகி ஓடிவருகின்ற யானைமுக முள்ளவரும். மனதில் தம்முடைய திருவடிகளைச் சிந்திக்கின்ற அரியதவத்தை யுடையவர்களுக்கு நான்காம்பதமாகிய சாயுச்சியத்தைக் கொடுப்பவரும், முப்புரத்தை நீறுசெய்த சிவபிரானாரா லளிக்கப்பட்டவரும் ஒப்பற்ற முதலாகியவேர் ஓங்கிற சஞ்சித (ஆகாமியம் பிராரத்தம்) வினையையுடைய பிறப்பைக் கெடுக்கின்றவருமாகிய

யானை திறைகொண்டவரென்னும் விநாயகரை மனத்திற் சேர்த்துக்கொள்வாம். எ-று. (ச0)

சிவசுப்பிரமணியர் துதி.

கொந்தாரு மலர்ச்சோலை யருணைநெடுங்
கோபுரத்திற் குமர வேளை
வந்தாரை வாழ்விக்க வடவீதி
தனிலுறையு மயிலி னானைக்
கந்தாருங் கடக்களிற்று மகவாற்குத்
தருநிழலுங் கனக நாடுந்
தந்தானை யலர்கடப்பந் தாரானைப் பணிபவர்தா
டலை மேற் கொள்வாம்.

இ-ள். பூங்கொத்துகளையுடைய சோலைசூழ்ந்த அருணாசலத்துக்குக் கிழக்குக் கோபுரவாயிலுக் கடுத்த மேற்புற மண்டபத்தி லிருக்கின்றவரும், தம்மை யடைந்தவர்களைப் பிழைப்பிக்கச்செய்ய வடவீதியிலே வாசஞ்செய்கின்ற மயில்வாகனத்தை யுடையவரும், தறியிற்கட்டப்பட்ட மதம்பொருந்திய ஐராவதத்திலேறுகின்ற தேவேந்திரனுக்குத் தேவலோகத்தையும், கற்பக விருக்ஷத்தி னிழலையுங் கொடுத்தவரும், கடப்பமாலையைத் தரிசித்தவருமாகிய சிவசுப்பிரமணியக்கடவுளை வணங்குகின்ற அடியார்களுடைய பாதங்களைத் தலைமேல் வைத்துக்கொள்ளுவோம். எ-று. (சக)

மூவர்முதலிகள் துதி.

வாதுகொண்ட பரசமய கோளரியை
யடிவணங்கி வன்கற் றூணாற்
நீதுகொண்ட கருங்கடலைக் கடந்தசெழுந்
தமிழ்க்கடலின் றிருத்தாள் போற்றி

137

காதுகொண்ட விழிப்பாவை திருமனைக்கெம்
பெருமானைக் கால்கணோவத்
தூதுகொண்ட சுந்தரனைத் தம்பிரான்
றோழனையாந் துதிசெய் வோமே.

இ-ள். வாதுகொண்டு செயிக்கவந்த சமணர்களாகிய யானைகளுக்குச் சிங்கமாகிய திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளது திருப்பாதத்தை வணங்கி, வலியகருங்கல்லோடுபிணித்துச் சமணர்கள் சமுத்திரத்திற்போட அக்கல்லையேதெப்பமாகச் சமுத்திரத்தைக் கடந்த செந்தமிழ்க்கடலென்று சொல்லப்பட்ட அப்பர்சுவாமிகளது பாதத்தைவணங்கி, காதளவுந்தாவிய கண்களையுடைய பரவைநாயகியாருடைய திருமனைக்கு இரண்டு பாதங்களும்நோக எமதாண்டவரைத் தூதாகவனுப்பிய தம்பிரான்றோழராகிய சுந்தரமூர்த்திசுவாமிகளை வணங்குவோம். எ-று. (௪௨)

திருவாதவூரடிகள் துதி.

தரவு கொச்சகக் கலிப்பா.

அத்தனார் பெருந்துறைபுக் கரியவினைக் கடல்கடந்து
புத்தனார் மதங்கடிந்து புனிதமா கியசிவன்
முத்தனார் மாணிக்க வாசகனார் முத்திக்கு
வித்தனார் வாதவூர் வித்தகனார் தாள்போற்றி.

இ-ள். பரமசிவன் குருமூர்த்தமாக எழுந்தருளியிருந்த திருப்பெருந்துறைக்குப்போய் அச்சுவாமியினுடைய அநுக்கிரகம்பெற்று அரிதாகிய வினைக்கடலைத்தாண்டி அக்காலத்தில் வியாபித்திருந்த பௌத்தர்களுடைய மதத்தைக் கண்டனஞ்செய்து பரிசுத்தமாகிய சிவன்முத்த தசையடைந்தவரும், அம்முத்தியாகிய நிலத்

திற்குவிதையாகியும் * திருவாதவூரிற்பிறந்த ஞானசொரூபியாயும், (அரிமர்த்தன பாண்டியனுக்கு முதன்மந்திரியாகியும்) இருந்த மாணிக்கவாசகசுவாமிகளுடைய பாதத்திற்கு வந்தனம். எ-று. (௧௬)

திருத்தொண்டர்துதி.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

மனையாளை யரற்களித்து மனங்களித்த
இயற்பகையார் மலர்த்தாள் போற்றி
தனையாளும் பெருமானுக் கெச்சிலிடுங்
கண்ணப்பர் சரணம் போற்றி
வினையாள ரறியாத திருநீல
கண்டரடி விரும்பிப் போற்றி
யெனையாளு மிளையான்றன் குடிமாற
ரிணையடியை யிறைஞ்சு வோமே.

இ-ள். பரமசிவன் அடியார்வேடம் பூண்டுவந்து மனைவியை யெனக்குக் கொடுவென்று கேட்க அதற்காக அதிக சந்தோஷத்தையடைந்து, அவர்க்குத் தம்மனையாளைக் கொடுத்து அதனால் அதிக மகிழ்ச்சியடைந்த இயற்பகைநாயனாருடைய மலர்போன்ற பாதங்களுக்கு வந்தனம், தன்னையாட்கொண்ட சுவாமிக்குத் தான் தின்று உருசிப்பார்த்த எச்சிலைக்கொடுத்த கண்ணப்பசுவாமிகளது பாதத்திற்கு வந்தனம், வினையையுடையவர்கள் அறியாத திருநீலகண்ட நாயனாருடைய பாதத்தைமகிழ்ந்துவணங்கி, அடியேனை ஆட்கொண்டருளும் இளையான்றன் குடிமாறனாயனாருடைய பாதத்தை வணங்குவாம். எ-று. (௧௭)

---

* திருவாதவூர் என்பது வைகையாற்றின் கரையிலுள்ளது.

[4]

ஐயடிகள் காடவர்கோ னீரடியை
வணங்கிமக வறுத்தெம் மாற்கு
செய்யடிசி லுடன்படைத்தார் திருவடியைத்
தொழுதுதிரு நீற்றுச் சோழன்
மெய்யடியைப் புகழ்ந்துதெய்வ வுலாச்சொன்ன
சேரனடி விருப்பி னேத்திப்
பொய்யடிமை யில்லாத புலவர்முத
லனைவரையும் போற்றுவோமே.

இ-ள். ஐயடிகள் காடவர்கோனாயனாரது இரண்டுபாதத்தையும் வணங்கி, எமதுசுவாமிக்குப் பிள்ளையை அறுத்துச்சமைத்த கறியை நெய்விட்ட அன்னத்துடன் படைத்த சிறுத்தொண்டநாயனாருடைய மெய்ம்மையாகிய பாதத்தை வந்தித்து, தெய்வீகம்பொருந்திய திருவுலாப் பிரபந்தம் பாடிய சேரமான் பெருமானாயனாருடைய பாதத்தையும் ஆசையுற்றுப்பணிந்து, மெய்யடிமையையுடைய புலவர்கள் முதலாகிய யாவரையும் வணங்குவோம். எ-று. (௧௮)

நந்திதேவர், துர்க்கை, கௌதமர், சண்டேசுரர் துதி.

நந்திதிரு வடியிறைஞ்சி விந்தைபதம்
புகழ்ந்துமறை நான்கிற் ணைகந்தாய்
வந்தருளுங் கோதமனார் மலரடியென்
முடிக்குமுடி மாலையாக்கித்
தந்தையிரு பதஞ்சிதைத்துச் சிதையாத
பதத்திருந்த தண்டி தாளைச்
சிந்தையினைச் சூடியிருத்தி யருணகிரி
நினைப்பவர்தாள் சென்னி சேர்ப்பாம்.

இ-ள். நந்திதேவருடைய அழகிய பாதங்களைத் தொழுது, துர்க்காதேவியினுடைய பாதத்தை வணங்கி, நான்கு வேதத்தினின்றும் ஐந்தாம்வேத சொரூபமென்று சொல்லப்பட்ட கௌதமருடைய தாமரைபோன்ற பாதத்தை என் சிரத்துக்குத் தரிக்கப்பட்ட மாலையாகச்செய்து, தம்முடைய தகப்பனாரது இரண்டு பாதங்களையும் வெட்டி அதனால் கெடாத மோக்ஷபதத்திலிருந்த சண்டேசுரருடைய பாதத்தை இருதயத்திற் குடியிருக்கச்செய்து அருணாசலத் தலத்தை நினைப்பவருடைய பாதத்தையுஞ் சிரத்திற் சாத்திக்கொள்ளுவோம். எ-று. (கசு)

அவையடக்கம்.

தேறுகின்ற பலகலையுந் தெளிந்தசுவை
யிருநான்குந் திகழும் பாடல்
கூறுகின்ற புலவர் முன்னே தமியேனுஞ்
சிலபுகல்சொற் குறித்த வாறு
வீறுகின்ற மறைவிரிஞ்ச னெதிர்வரு
மனத்தின் முன்னும் விரிஞ்சன்றாதை
யேறுகின்ற கருடன்முன்னு மொருமசகம்
பறவை கொடுத்திடுதல் போலும்.

இ-ள். பலநூற்களையுங் குறைவறக்கற்று * எட்டுச் சுவையும் பொருந்திய தமிழ்ப்பாடல்களைச் சொல்லுகின்றவித்துவான்கள் முன்னே ஒன்றுமறியாத யானுஞ் சிலபாடல்களைப்பாடநினைத்தவிதம் விளங்கிய நாலுவேதங்களையுடைய பிரமனேறிநடத்தும் அன்னத்தின்முன்னும் அவன் தகப்பனாகிய விட்டுணு ஏறும்படியானகரு

---

* எட்டுச்சுவையாவன:—சிருங்காரம், வீரம், பெருநகை, கருணை, இரௌத்திரம், குற்சை, அற்புதம், பயம் என்பனவாம்.

டன் மூன்றும் ஒருசிறியகொசு பறந்திடுதலைக் காண்பித்ததுபோலும். எ-று.

145 (கஎ)

நீரிருக்கு மெனப்பழித்து விடுவரோ
வதுபாலி னிகழு மாற
னாரிருக்கு மெனக்கழித்து விடுவரோ
வதுமலரி னன்று மாற
லாரிருக்குஞ் சடைமுடியார் விடமிருக்குந்
திருமிடற்று ரருணை நாதர்
பேரிருக்குந் தகைமையினா லெனதுரையை
யிகழுவரோ பெருமை யோரே.

இ-ள். பாலொடு கலந்திருக்கின்ற நீரைச் சகவாசயோக்கியத்தால் தள்ளாமலெடுத்துக்கொள்ளுவார்கள், புட்பமாலையோடு சேர்ந்த நாரையும் அப்படியே கொள்ளுவார்கள், ஆத்திமாலையைச் சூடிய சடைமுடியையும் ஆலகாலமிருக்குங் கண்டத்தையுமுடைய அருணாசலேசுரருடைய நாமமிருக்கிற பெருமையினாலே என்னாற்செய்யப்பட்ட புன்பாடல்களையும் பெரியோர்கள் ஒப்புக்கொள்வார்களேயன்றி இகழார்கள். எ-று. (கஅ)

அழகுதரக் கனிந்தநச்சு மரம்பழைய
தெனினுமதி னமுதுண் டாமோ
விழைவுதரு சுவைக்கரும்பு புதியதுவே
யெனினு மது விரதம்போமோ
விழிவுறுபா டலுமுயர்வு தங்கியசெய்
யுளுமவைபோ லிருக்கு மாயிற்
பழமையென நலந்தருமோ புதுமையென
விகழ்படுமோ பயன்கொள் வோர்க்கே.

சாலமடைக்க அருணாசலபுராணவரலாறும், ஒப்பில்லாத நக்கு

இ-ள். அழகிய சிவப்புநிறம்பொருந்தப் பழம்பழுத்த எட்டிமரம் வெகுகாலைய மரமாயிருந்தபோதிலும், அதில் மாதுரியமுண்டாகாது; யாவராலும் இச்சிக்கப்பட்ட இனிப்பாகிய கரும்பு கொஞ்சகாலையதாயிருந்தாலும், அதில் கசப்புண்டாகாது; அதுபோற் பிரயோசனத்தைக் கொள்ளுவோர்களுக்கு, குற்றத்தோடுகூடிய செய்யுள் பழமையாயிருந்ததினாலேயே ஒருநன்மையைத் தராது; யாதொருதோஷமில்லாத உயர்வான பாடல் சிலகாலைக்குமுன் உண்டாயிருந்ததினாலேயே இகழப்படாது. எ-று. (௧௯)

திணையளவுந் தமிழ்மிடியற் றதிமதுரம்
பிறந்தகல்வித் திறமை யோரு
நினையுமியற் சுவையறியா மூடர்பருஉ
வறிவின் முன்னே நிற்கலாமோ
வினையடருங் குவளைவிழி யனிச்சமல
ரனையதிரு மேனி மாதர்
புனைவின்மதன் மலர்க்கணையைப் பொறுப்பதெல்லா
லமரினம்பு பொறுத்திடாரே.

இ-ள். சொல்லுந் தொழிலடைகின்ற நீலோற்பலம் போன்ற கண்களையும் அனிச்சப்பூவொத்த உடம்பினையுமுடைய பெண்கள் கருப்புவில்லைத் தரிக்கின்ற மன்மதனாலே விடப்பட்ட புஷ்பபாணத்தைப் பொறுப்பார்களே யல்லாமல் கொடிதாகிய யுத்தத்தில் விடுகிற அம்பைப்பொறுக்கார்கள். அதுபோலத் திணையளவுகூடச் செந்தமிழ்த் தரித்திரம் இன்றி அதிக மதுரம்பிறந்த கல்விவல்லவர்களும் இலக்கணரசமேயறியாத மூடர்களுடைய மிகுந்த அறிவையுடைய கல்விப்பிரசங்கத்தின் முன்னிற்கார்கள். எ-று. (௨௦)

நூல்வரலாறு.

கருத்துருக விறைவனந்திக் கருள்புரிய
நந்தியுமார்க் கண்டற் கோத
விருத்திமறை வியாதமுனிக் கவனுரைக்கச்
சூதனுக்கு வியாதன் சொல்லப்
பொருத்தமன விருடியருக் கருட்சூதன்
மொழிந்த சிவபுராணங் கோடி
யுருத்திரசங் கிதையுரைத்த வருணகிரி
வளத்தினையா னுரைக்க லுற்றேன்.

இ-ள். மனமுருகப் பரமசிவன் நந்திகேசுரருக்கு அருள்புரிய, நந்திகேசுரரும் மார்க்கண்டேயருக் கருள்செய்ய, மார்க்கண்டேயர் வேதங்களை யொழுங்குசெய்த வியாசருக்கருள்செய்ய, வியாசர்சூத முனிவருக்குச் சொல்ல, சூதர் ஒருவழிப்பட்ட மனமுடைய சௌனகர்முதலிய முனிவர்களுக் கருள்செய்த, சிவராணங் கோடியாகும் அவைகளில் முக்கியமாகிய காந்தத்தில் உருத்திரசங்கிதையிற் சொல்லிய அருணாசலத் தலமகிமையைச் சொல்லத் தொடங்கினேன். எ-று. (௨௧)

அருணைநகர் வளமையுமா லயனகந்தை
விடவழல் வெற்பானவாறும்
பொருவின்மக மழித்ததுவு மரனுமையை
மணந்ததுங்கண் புதைத்த வாறும்
வருமகிடற் றொலைத்ததுவு மிறைவியிடங்
கலந்ததுவும் வயிரப் பூணு
னிருவினையை யகற்றியது மற்றுமுள
சரிதையெலா மியம்பு வேனே.

இ-ள். அருணாசலத்தலமகிமையும், பிரமவிட்டுணுக்களுடைய கர்வமடங்க அக்கினிமலையானவரலாறும், ஒப்பில்லாத தக்கனு

டைய யாகத்தை அழித்ததும், பரமசிவன் பார்வதி தேவியாரை மணஞ்செய்ததும், அப்பார்வதிதேவியார் சுவாமியினுடைய திருக்கண்களை மூடியதும், மகிடாசுரனை உமாதேவி கொன்றதும், அப்பார்வதி தேவியார் வாமபாகத்திற் சேர்ந்ததும், வச்சிராங்கத பாண்டியனுடைய பாவத்தை நீக்கினதும் மற்று முள்ளவுஞ் சொல்வேன். எ-று. (௨௨)

அங்கிகுல மோங்கவரு வல்லாள
  பூபன்ற னரிய தொண்டுந்
துங்கமிகுந் தீர்த்தமுடன் றிருமலையை
  வலம்புரியுஞ் சுடரோன் பேறும்
பொங்குபிர தத்தனொடு வினைதீர்த்த
  வாறுபுள காதி யாவு
மிங்கிதஞ்சேர் வடகலையி லிருந்ததனைத்
  தென்கலையா லியம்பலுற்றேன்.

இ-ள். உலகின்கண் ஓங்கு முக்குலவேந்தருள் அக்கினிகுலோத்துங்கனென்று வழங்குஞ் சேரகுலாதிபனாகிய வல்லாளமகாராஜனுக்குப் பிள்ளைகலி நீக்கி முத்தியளித்ததும், அத்தலத்திலோங்குந் தீர்த்தங்களின் பெருமையும், அவ்வருணாசலத்தை வலஞ்செய்பவர்கள் பெறும் பேறும், கதிரவனுடைய கர்வத்தையடக்கி முத்தியளித்தவாறும், பிரதாபம்பொருந்திய பிரதத்தனென்னும் வேந்தனது சரிதையும், பாவந்தீர்த்த சரிதையும், புழுகு பூனையாகவிருந்து மூன்று லோகங்களினுஞ் சஞ்சரித்துவந்தபுளகாதிபனென்னு மரக்கனுடைய சரிதமும், இங்கித மிகுந்த வடமொழியி லிருந்ததைத் தென்மொழியாகிய தமிழினாற் சொல்லத் தொடங்கினேன். எ-று. (௨௩)

பாயிரம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௨௩.



கைலாசபதிக்குத் தொண்டுபூண்டொழுகும் நந்திகேசுரர், மார்க்கண்டேய மகாமுனிவருக்கு அருணாசலத்தினுற்பவமும், அதன் மகிமையையும், தரிசிக்கவேண்டிய விதிமுதலியவைகளையு முபதேசித்தல்—6.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருநகரச் சருக்க வசனம்.

உயர்வாகிய மழு மான் பிரம்பு உடைவாள் என்னும் இவைகளைத் தாங்கி, விபூதியை உத்தூளனமாகத்தரித்து, சடைமுடி, திரிநேத்திரம், புலித்தோல், உபவீதம் என்பவற்றையுடையவராய், சிவபெருமானது ஆணைப்படி வெள்ளிமயமாகிய கயிலைமலையைக் காத்தருளுவோர் திருநந்திதேவர். அவர் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானாலே திருவாய்மலர்ந்தருளப்பட்ட சைவசித்தாந்தமென்னும் பயிர்தழைப்ப, கருணையாகிய மழையைப் பொழியும் இயல்பினையுடையவர். சிலாதமுனிவர்க்குப் புத்திரராயவதரித்தவர். விட்டுணுமுதலிய தேவர்கள் யாவரும் வணங்கும் திருவடிகளையுடையவர் திருக்கயிலாய மலையிலே நவரத்தினங்களாலுஞ் செய்யப்பட்ட ஒருமண்டபமுளது. அதன் நடுவேயிடப்பட்ட சிங்காசனத்தின்மேல் கணத்தவர்களும், குற்சன், உரோமசன், குமுதன், குமுதாக்கன் முதலிய முனிவர்கள் பலருஞ்சூழ்ந்து துதிக்கத் திருநந்திதேவர் பரமசிவனைப்போல வீற்றிருந்தார். அப்போது மிருகண்டு முனிவரின் புத்திரரான மார்க்கண்டேய முனிவர் அங்குவந்து திருநந்திதேவரின் பாதாரவிந்தங்களைப் பணிந்து துதித்து, தனிமுதற்பொருளே! சிவசாயுச்சிய முத்தியை யடையும்வழியை யடியேங்கள் அறியும்படி உபதேசித்தருள வேண்டுமென்று விண்ணப்பித்தார்.

நந்தியம்பெருமான் மகிழ்ச்சியுற்று, சிவபிரானுக்கு அன்புடையீர்! கம்பைநதி, கும்பநதி, காவிரி, கோதாவிரி, கிருட்டிணை, வேகவதி, வேதவதி, சரயு, கங்கை, தாமிரபர்ணி, பொன்முகலி, யமுனை, நருமதை, சோணை முதலிய புண்ணிய தீர்த்தங்கள் பூவுலகில் அளவில்லாதனவுள. அவைகளில் மூழ்கினாற் பாவத்தைப்போ

க்கும். அன்றியும் காசி, திருவாரூர், சிதம்பரம், விட்டுணுபூசித்த விருத்தாசலம், திருக்கேதாரம், மல்லிகார்ச்சுனம், திருக்காளத்தி, காஞ்சிநகர், சிவசருமா என்னும் ஆதிசைவப் பிராமணர்க்குத் திருவருள்புரிந்த விரிஞ்சிபுரம், சீகாழி, திருவையாறு, கும்பகோணம், திருவானைக்கா, திருவிடைமருதூர், மதுரை, இராமர் பூசித்த இராமேச்சுரம் என்னும் இத்தலங்களிலே இறந்தாலும், பிறந்தாலும், தரிசித்தாலும், அபிடேகஞ்செய்தாலும், சிவாலயம், நந்தவனம், மடம் முதலியபணிகளை மெய்யன்புடன் இயற்றினாலும் பரகதியடைவார்கள் என்றுரைக்க, மார்க்கண்டேய முனிவர் கூறுவார்.

ஐயனே ! இத்தலங்களினும் தீர்த்தங்களினும் சென்று சென்று அவ்வாறுசெய்தல் தேவர்கள் முதலாயினார்க்கும்முடியாது அவ்வாறாயின் அற்ப அறிவினையும், சிறு ஆயுளையும் உடைய விலங்கு பறவை முதலியவற்றிற்கு முடியுமோ? அன்றியும் மனிதர்களினும் கைகால்முதலிய அங்கவீனர்களுக்கும், பொருளிலாதவர், நோயாளர்முதலாயினோர்க்கும் இயலுமோ? யாவர்க்கும் எவைகட்கும் இலகுவில் பரகதியளிக்கும் தலமொன்றை அருளிச்செய்யவேண்டுமென்றுபணிந்திரக்க, திருநந்திதேவர் திருவாய்மலர்ந்தருளுவார் ஆயினார்.

மார்க்கண்டேயரே ? அவ்வணம் கொடுக்கும் ஒருதலம் உளது அதன்பெருமை சொல்லவல்லவர்யாவர். ஆயினும் ஒருவாறு கூறுகின்றேம் என்று பரவசமுற்று, சிவபெருமானை உள்நினைந்து துதித்து, நடுநாட்டிலிருக்குந் திருவண்ணாமலையே அதுவாகும். அந்தத் தலத்திற்கு வாயு நகரம், கௌரிநகரம், தேசுநகரம், அருணாசலம், சோணகிரி, சிவலோகபுரி, முத்திபுரி, ஞானநகரம், தலேச்சுரம், சுத்தநகர், தக்கிணகயிலாயம் முதலாக அநேகபெயர்கள் உள்ளன. அதுவொன்றே மெய்யன்புடன் றன்னை நினைத்தவர்க்குச் சிவசாயுச்சிய முத்தியையளிக்கும். இது சத்தியம், சத்தியம் முக்காலுஞ் சத்தியமேயாம். பிரமன் முன்னர்க்காலத்துப் பூவுலகிலுள்ள தலங்களெல்லாவற்றையும் ஒருதட்டிலும் இவ்வருணாசலத்தை ஒருதட்டிலும் நிறுத்திப்பார்க்கும்போது அருணாசலத்தட்டேமிக்ககனமுடைத்தாகக் காணப்பட்டதென்று வேதவேதாந்தங்கள் முழங்குகின்றன. அருணாசலம் என்னும் அத்தலமோ எக்காலத்தும் அழியாது விளங்குவது. ஏழுமேகங்களாலும் வேதனையடையாதது. பிணி, நோய், பசி, இடையூறுமுதலிய தீமைகள் அணுகப்பெறாதது. இதுகாறும் விட்டுணுவின் உந்தியினின்றும்பிறந்திறந்ததொன்னூற்றாறு பிரமர்களாற் பூசிக்கப்பட்டது. உலகம் எந்தக்காலத்து உண்டாயிற்றோ அந்தக்காலத்துத்தானே இத்தலமும் உண்டாயிற்று. வேதவேதாந்தங்களும் அதன் பெருமையை யெடுத்துக் கூறாநிற்கும். இவ்வருணாசலப்பதியில் எக்காலத்தும் அழிதலில்லாத ஒருமலை இருக்கின்றது.

அதன்பெயர் திருவண்ணாமலை, அருணாசலம் என்பர். அது அத்தலத்தின் தெற்குத் திசையிலே விளங்கிப் பிரமாண்ட கோளகையையூடுருவிநிற்கும். மற்றைத் தலங்களிற் பலவகையிலிங்கங்கள் ஆங்காங்குப் பிரகாசிக்கும். இத்திருநகரிலோபராபரலிங்கமாகியபரசிவப்பிரபுவே இலிங்கவடிவுள்ள மலையாகப் பிரகாசித்து விளங்குகின்றார் திருவண்ணாமலை முதலாவது யுகமாகிய கிருதயுகத்தில் அக்கினிமலையாகவும், இரண்டாவது யுகமாகிய திரேதயுகத்தில் மாணிக்கமலையாகவும், மூன்றாவது யுகமாகிய துவாபரயுகத்திற் பொன்மலையாகவும், நாலாவதுயுகம் கலியுகத்திற் கன்மலையாக இலங்காநிற்கும். ஏழுமேகங்களும் பற்பலகோடியாகி எண்ணில்லாதகாலம் பனைபோன்ற துளிகளைக்கொண்டு ஓயாமற் பெய்தாலும் மலையின்மேல்விழுந்தசலம் சிறிதாயினுங்கீழிறங்காது. இதுவொன்றே அண்ணாமலை அக்கினிமலையென்பதற்கு அத்தாட்சியாகும். விட்டுணுக்கள் பலர் பூசித்தார்கள். ஒருகாலத்து ஒருவிட்டுணு தன்மகனாகிய பிரமனுடன் சண்டையிட்டுப் பன்றியாகத்தேட, பிரமன்

அன்னமாகத்தேடி, ஆயிரந்தேவவருடம் ஆராய்ந்தும் அடிமுடிதெரியாமல் அலைந்துவருந்திப் பணிந்து அருள்பெற்றதலம். கார்த்திகைமாதத்தில் அம்மலையின்மீது தீபமேற்றுதல் பூமிதேவியின் கிரீடத்திற்பதித்த மாணிக்கரத்தினத்தைப்போற்றோன்றும்.

அருணாசலத்திற்குக் கீழ்த்திசையிலுள்ள அர்க்கமலையில் இந்திரனும், தென்பாகத்திலுள்ள தெய்வமலையில் இயமனும், மேற்பக்கத்[illegible]ணடமலையில் வருணதேவனும், வடதிசைக்கணுள்ள குலமலையில்குபேரனும், மற்றையதென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு என்னுந்திசைகளிலுள்ள மலைகளினிடத்து அக்கினி, நிருதி, வாயு, ஈசானன் என்னுந் திக்குப்பாலகர்களும் இருந்து நாடோறும்பூசிக்கின்றார். அவைகளின் பின்னருள்ள கிரிகளில் ஏனையதேவர்களும் முனிவர்களும் சித்தர்களும் இனமான சநகலகணர்களும் இருந்துவழிபடுவார்கள். பார்வதிதேவியார் அங்குத் தவம்புரிந்து இடப்பாகம்பெற்றனர். விட்டுணு பிரமர்கள் தங்கள் அகங்காரமொழிந்து சிவபெருமானே பரமபதியென்றுய்ந்தனர். வச்சிராங்கதபாண்டியன் வலம்வந்து தன்பாவங்களையெல்லாம்போக்கினன். கலாதரன் காந்திசாலி என்னுமிருவரும் வலம்புரிந்து முத்தியடைந்தார். இவ்வாறு எண்ணிலார் முத்தியடைந்தார். அவ்வருணாசலத்திற்குப் பெண்ணைநதியும் செய்யாறும், கமலாநதியும் முறையே இடை, பிங்கலை சுழுமுனையென்னு நாடிகளாகும் அந்நதிஸ்நானம் ஒன்றுக்கு ஆயிரமடங்குபலம் உண்டாம் திருவாரூர்ப் பிறத்தலும், காசியில் இறத்தலும், சிதம்பரத்திற் றரிசித்தலும் கஷ்டமாகலால், இவ்வண்ணாமலையைநினைத்த உடன்சிவசாயுச்சிய முத்திகிடைக்கும். இது திண்ணம் திண்ணம். உலகத்திலுள்ள தலங்கள்யாவும் உடலாகவும், அருணாசலம் முகமாகவும், சோணகிரிப் பெருமான் கண்ணாகவும் வேதாகமங்கள் உரைத்தன. இதற்கு ஒப்பானதலம் வேறுண்டென்று சொல்வோர் மீளாநரகத்தையடைவர். இதன்பெயரை நினைத்தாலே முத்தியெனின் சொல்வோர்க்கும் தரிசிப்போர்க்கும், அங்குத்திருப்பணி, வழிபாடுசெய்வோர்க்கும் வரும்பலம் யாவரேசொல்லவல்லவர் என்றார் நந்தியம்பெருமானார். மார்க்கண்டேயர் முதலாயினோர் யாவரும் தம்மைமறந்து பரவசமாய் ஆனந்தமுற்றனர்.

, பயனமலையில் சந்திரன் பொழி



ஒருகற்பத்தில் பிரம விட்டுணுக்கள் "நாம்நாம்பிரமம் என வாதிட்டுப் போரிடுந்திரத்தைத் தீர்த்தாளச் சிவபெருமான் அவர்கள்மத்தியி லக்கினிமலையாய்நின்று அவ்விருவருடைய வெண்ணங்களை மாற்றியருளியது—7.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முதலாவது,

திருநகரச் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

துங்கமழு வுழைபிரம்பு சுரிகையக
லாதகையான் றுகிர்க்குன் றாடே
திங்களுமிழ் நிலவனைய வெண்பொடியான்
சடைமுடியான் செறிமுக் கண்ணான்
பொங்குதிரு வரையகலாப் புலித்தோலான்
புயநாலான் புரிமுந் நூலான்
கங்கைமதி தவழ்சடையான் திருவாணை
செலுத்தி வெள்ளிக் கயிலைகாப்பான்.

இ-ள். உயர்வாகிய மழுவும்; மானும், பிரம்பும், உடைவாளும், நீங்காத கையையுடையவர்; பவளமலையில் சந்திரன் பொழி

கின்ற நிலவுபோலத் தேகத்தில் அணிந்த விபூதியை யுடையவர்; சடைமுடியை யுடையவர்; நெருங்கிய மூன்று கண்களை யுடையவர்; விளங்குகின்ற இடுப்பில் நின்று நீங்காத புலித்தோலையுடையவர், நான்கு புயங்களை யுடையவர்; மூன்றுபுரியாகிய பூணுநூலையுடையவர், கங்கையும், சந்திரனும் தவழ்கின்ற சடையையுடைய பரமசிவனது கட்டளையைச் செலுத்திக்கொண்டு வெள்ளி மயமாகிய கைலாசகிரியைக் காக்கின்றவர். எ-று. (௧)

கொய்வனச மலர்நிறத்தான் மைவளருந்
திருமிடற்றான் குலவெள்ளேற்றான்
சைவமெனும் பயிர்தழைக்கக் கருணைமழை
பொழிமேகந் தன்னை யொப்பா
னைவரையு மகத்தடக்குஞ் சிலாதரற்குப்
புறத்துலவு மாவி போல்வான்
றெய்வமெல்லாந் தொழச்சிவந்த மலர்ப்பதத்தா
னந்தியெனுந் திருநாமத்தான்.

இ-ள். கொய்யப்பட்ட தாமரை மலரொத்த நிறத்தையும், விடமும் பொருந்திய கண்டத்தையும், நல்ல வெண்மையாகிய இடபவாகனத்தையுமுடைய பரமசிவன் சம்பந்தமாகிய சைவசமயமென்னும் பயிர் தழைப்பக் கருணையாகிய மழையைப் பொழிகின்றமேகம் போன்றவர்; பஞ்சேந்திரியங்களையும் அகத்தில் நின்றும் புறத்தில் தீமையாகிய பொருள்களிற் போகவொட்டாமல் அடக்கிய சிலாதரரிஷிக்குப் புறத்திற் சஞ்சரிக்கின்ற உயிர்போன்றவர்; விஷ்ணுமுதலாகிய தேவர்களெல்லாம் வணங்க அதனால் சிவப்பேறிய தாமரை மலரையொத்த பாதங்களை யுடையவர்; இப்படிப்பட்ட தன்மையையுடைய நந்திகேசர ரென்கிற அழகிய திருநாமத்தைப் பெற்றவர். எ-று. (௨)

ஈசனணி நதிமதியுந் திருவுருவுந்
திருவுருவி லிசைந்த நீறும்
தேசுவென விளங்குமொரு கயிலாயச்
சிலம்புளதச் சிலம்பின் மீதே
வாசவனே முதலிமையோர் நெருங்குதலான்
மகுடமொடு மகுடந் தாக்கி
யோசையுடன் கனகமணிப் பொடியுதிர்ந்து
கனகமலைக் குவமை யாகும்.

இ-ள். பரமசிவன் தரிக்கின்ற கங்கையுஞ் சந்திரனும் அவரது வெண்மையாகிய திருவுருவமும் அவ்வுருவத்திலணிந்த திருநீறுமாகிய இந்நான்கினுடைய காந்திபோலப் பிரகாசிக்குங் கயிலாயமென்னும் ஒப்பற்றதிருமலையுண்டு அத்திருமலைமேல் வணங்குகிறதற்காகத் தேவேந்திரன் முதலாகிய தேவர்கள் நெருங்குகிறபடியால் கிரீடத்தோடுகிரீடம் இடிபட்டுச் சத்தத்துடனே பொற்பொடிகளும் இரத்தினப்பொடிகளும் உதிர்ந்து மகம்மேருகிரிக்குச் சமானமாகக் குவியும். எ-று. (௩)

இந்திரநீ லச்சிலையா * லிசைத்தகடந்
தெரியாமலெழுதிச் சேர்த்து
மந்தரமா மெனவயிரத் தூணிறுத்தி
மாணிக்க மதலை கூட்டிச்
செந்துகிரால் † போதிகையு மரகதத்தா
லுத்திரமுஞ் செறித்து மீதே
சந்திரகாந் தத்தகடு பரப்பியமண்
டபமுளதச் சயில மீதே.

---

* கடம் - அருநெறி. † போதிகை—[illegible].

இ-ள். இந்திரநீலக் கல்லினாலே ஒன்றோடொன்றுசேர்த்த சந்துதெரியாமற் சித்திரமெழுதிச் சுவர்வைத்து மந்தரகிரிபோல் வயிரத் தூண்களைநிறுத்தி மாணிக்கத்தினாற்செய்த கொடுங்கைசேர்த்துச் சிவப்பாகிய பவளத்தினாற் போதிகையும் மரகதத்தினால் உத்திரமுஞ்சேர்த்து அதன்மேல் சந்திரகாந்தத் தகடுபரப்பிய மண்டபம் ஒன்று அந்தமலையின்மேலுளது. எ-று. (௪)

இருமருங்குந் தரளமணி யிழைத்தவரி
  யாசனத்தி லிருந்து நீலப்
பருமணியா லிழைத்தபொரு பாதபீடிகை
  யின்மலர்ப் பதத்தை யூன்றி
மருவுபெருங் கயிலையின்மீ திருந்துமுய
  லகன்முதுகில் வலத்தா ளூன்றி
யருமறைய முனிவருக் குரைக்குமிறை
  யென விருந்தா னந்தவேளை.

இ-ள். நந்திகேசுரர் அந்த மண்டபத்தில் இரண்டு பக்கமும் முத்துகளிழைத்த சிங்காதனத்திலிருந்து பருத்த நீலரத்தினத்தினாலிழைக்கப்பட்டிருக்கிற பாதகுறட்டின்மேலே மலர்போன்றபாதங்களை வைத்துக்கொண்டு சிவகணங்களால் மருவப்பட்ட பெருமையாகிய கயிலாயகிரியில் எழுந்தருளியிருந்து முயலகன்மேல் வலப்பாதத்தைவைத்து அரிதாகிய சித்தாந்தப்பொருளை * முனிவர்களுக்குத் திருவாய்மலர்ந்தருளிய பரமசிவம்போல் இருந்தார் அந்தவேளையில். எ-று. (௫)

---

* முனிவர்—சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர் என்பார்.

குற்சனு ரோமசன் குமுதன் குமுதாக்கன்
  சகடாயன் கும்ப சாதன்
வற்சர்வைசம் பாயனர்கணாசி முனி
  புலிக்காலன் வாம தேவன்
நற்சனகன் சனற்குமரன் வாதரா
  யணன்மதங்க னடனத்தாளை
யர்ச்சனைசெய் யனந்தமுனி முதலனந்த
  முனிவரர்தம் மருகிற் சூழ.

இ-ள். குற்சர், உரோமசர், குமுதர், குமுதாட்சர், சகடாயர், அகத்தியர், வற்சர், வைசம்பாயனர், கணாசிமுனி, வியாக்கிரபாதர், வாமதேவர், சனகர், சனற்குமாரர், வியாசர், மதங்கர், சுவாமியினுடைய நடனம்பொருந்திய திருவடிகளில் அருச்சனை செய்கின்ற பதஞ்சலி முதலாகிய அனந்த முனிவர்கள் தம்முடைய பக்கத்திற் சூழ. எ-று. (௬)

மன்னியமார்க் கண்டமுனி யுடனெழுந்து
  பணிந்துயிர்கண் மழைமின் போல
விந்நிலத்திற் *பிறப்பதுவு மிறப்பதுவு
  மிருவினையு மெமக்குத் தோன்றச்
சொன்னவொரு தனிமுதலே முத்திபெறும்
  பரிசெமக்குச் சொல்வா யென்று
னன்னவுரை செவிப்புகலு நந்தியருள்
  சுரந்துமுனிக் கருள்வ தானான்.

இ-ள். நிலைபெற்ற வயதினையுடைய மார்க்கண்டேய முனிவர் சீக்கிரத்தில் எழுந்திருந்து நந்திதேவரை வந்தனஞ்செய்து சுவாமி

மேகத்தில் தோன்றி அதி சீக்கிரத்தில் அழியு மின்னல்போல் உயிர்கள் இவ்வுலகத்தில் பிறப்பதும் இறப்பதும் இவைகளுக்குக் காரணமாகிய நல்வினை தீவினைகளாகிய இரண்டும் எங்களுக்கு விளங்கும்படியாக அருளிச்செய்த ஒப்பற்றகடவுளே! நாங்கள் மோக்ஷத்தையடைவதற்குத் தக்கவழியை கிருபைசெய்யவேண்டுமென்று கேட்க; அந்தவார்த்தையைக் கேட்டவுடனே மிகுந்தகிருபையுடையவராகி நந்திதேவர் மார்க்கண்டேயருக்கு அருளிச்செய்யத் தொடங்கினர். எ-று. (௭)

கம்பைநதி கும்பைநதி காவிரிகோ
தாவரியே கன்ன வேணி
பம்பைநதி வேகவதி வேதவதி
சரயுநதி பரமாங் கங்கை
செம்புநதி பொன்முகரி யமுனைநதி
நருமதைமேற் செப்புஞ் சோணை
யம்புவியின் மிகவுளவங் காடினர்தம்
வினையகற்று மதுவல் லாமல்.

இ-ள். கம்பைநதி, கும்பைநதி, காவிரி, கோதாவிரி, கிருஷ்ணவேணி, பம்பைநதி, வேகவதி, வேதவதி, சரயுநதி, எல்லாநதிகளுக்குமேலாகிய கங்காநதி, தாமிரபருணி, பொன்முகரி, யமுனாநதி, நருமதாநதி, மேன்மையாகச் சொல்லப்பட்ட சோணைநதியென்று அழகான பூவுலகத்தில் அநேக நதிகளுண்டு. அவைகள் தம்மிடத்தில் ஸ்நானஞ்செய்தவர்களுடைய பாவத்தைநீக்கும் அதுவல்லாமல். எ-று. (௮)

காசியெனு மொருதலமிக் கயிலையினுஞ்
சிறப்புளது கங்கை நீத்தம்

வீசுதிரைக் கொழுந்தோட்டிப்,பாகதிக்கு
வேரோட்டும் வியந்து மூழ்கின்
மாசினுட லதிலிறந்தான் மரமேனும்
விலங்கேனு மனித ரேனு
மீசனரு ளுபதேசஞ் செவிப்புகலா
விறைவனென விருக்க லாமே.

இ-ள். காசியென்கிற ஒருதிவ்வியதலம் இந்தக்கைலாயத்தைப்பார்க்கிலும் சிறப்புள்ளது. அக்காசியில்வருகின்ற சங்காப்பிரவாகம் எறிகின்ற அலைகளைக்கொழுந்தாக ஓடச்செய்து தன்னிடத்தில்விரும்பி (திரிகரணசுத்தியுடன்) மூழ்கினால் அவர்களுக்கு மோட்சத்துக்கு வழிகாட்டும். களங்கம் உள்ளதேகம் அவ்வூரில் விட்டால் மரமாவது மிருகமாவது மனிதராவது பரமசிவனுடைய தாரகப் பிரமோபதேசம் செவியிற் சேர்தலாலே சிவசாரூப்பியத்தையடைந்திருக்கலாம். எ-று. (௯)

போகியொரு புற்றிடங்கொண் டிருப்பதுகண்
டிடுதலல்லாற் புனிதர் போற்றும்
யோகியொரு புற்றிடங்கொண் டிருந்ததலங்
கண்டதுண்டோ வுரைப்பக் கேளு
நாகமிசை நடித்தவருக் குயிர்வேண்டித்
திருத்தவஞ்செய் நளினக் கோயில்
சேருமனத் தவரான மருவாரூர்
தனையெரித்தார் திருவாரூரே.

இ-ள். சர்ப்பப் புற்றை யிடமாகக் கொண்டிருந்ததைப் பார்த்ததேயல்லாமல் ஞானிகள்போற்றுகின்ற யோகி புற்றினிடத்திலே யிருந்த தலத்தைப் பார்த்ததுண்டோ? அதுயாதெனில் சொல்லக்

கேளுங்கள், காளிங்கனென்னும் பாம்பின்மேலேறி நடனஞ்செய்த விஷ்ணுவுக்கு உயிர்ப்பிச்சை வேண்டி இலட்சுமி பூசைசெய்துக் கொண்டிருந்த கமலாலயமென்னும் தலமாகி வஞ்சம் பொருந்திய மனமுடைய திரிபுராதிகளையெரித்த சிவபிரான் வாசஞ்செய்கின்ற ஊராகிய திருவாரூர் என்னுந் திவ்யஸ்தலந்தான். எ-று. (க0)

தக்கவிராட் புருடன்மனத் தலமெனுமோர்
  தலமுளதத் தலத்தின் மீதே
முக்கணனா ரடிப்பரவர் மூர்த்தியிலா
  யிரத்திலொரு மூர்த்தி தானே
யிக்கயிலை யிடத்துறைவ தென்னிலதின்
  பெருமைநம்மா லிசைக்க லாமோ
வக்கனக சபைகண்டா ரரியயன்
  காணாத முத்தி யடைகுவாரே.

இ-ள். பெருமை பொருந்திய விராட் புருடனுடைய * இதய தலமாகிய சிதம்பரமென்று ஒருதலமுண்டு அஃதி லுளதாகிய கனகசபையில் மூன்றுகண்களையுடைய பரமசிவன் ஆனந்தத்தாண்டவஞ்செய்வார்! அவருடைய மூர்த்திகரத்தில் ஆயிரத்திலொன்றுதான் இக்கைலாச பதத்திலிருக்குமென்றால் அத்தலத்தின் பெருமையை நம்மாற் சொல்லக்கூடுமோ! அப்படிப்பட்ட அழகு பொருந்திய கனகசபையை (உள்ளன்புடன்) கண்டு தரிசித்தவர்கள் விஷ்ணுவினாலும் பிரமாவினாலும் காணப்படாத முத்தியை யடைவார்கள். எ-று. (கக)

---

* ஸ்ரீபர்வதஞ் சிரஸ்தானே கேதாரந்துல்லாடஹே என வருஉம் உபநிடதசுலோகத்தால் சிதம்பரம் இதயதலமாதல் காண்க.

தாங்காழி யவன்சிவனை வழிபடுமு
  துவரையந்தத் தலத்தைப் பார்க்கி
லோங்கார வடிவதிலே யுயிரிழந்தா
  லுடலழியா தொளி கெடாது
வீங்காது நெகிழாது பிறவுயிரால்
  வருந்தாது வெடித் திடாது
தீங்கான மணங்கிருமி பிறவாது
  கிடைக்கும்வலச் செவி மேலாக.

இ-ள். சக்கரத்தைக் கையில் தரிக்கின்ற விஷ்ணுமூர்த்தி பரமசிவனைப் பூசைபண்ணிய விருத்தாசலமென்று ஒருதல முண்டு; அந்தத் தலத்தைப் பார்க்குமிடத்தில் அது பிரணவ சொரூபமாயிருக்கும், அந்தத் தலத்தில் உயிர் விட்டால் தேகமழியாது, கிறங்குன்றாது, வீங்கமாட்டாது, கட்டு நழுவாது, மற்றப்பட்சி மிருகங்களால் பின்னமாகாது, வெடிபடாது, அதில் துர்க்கந்தமும் புழுவும் உண்டாகாமல் வலதுகாது மேலாகக் கிடக்கும். எ-று. (கஉ)

பொய்ம்மகிட முகனைவென்ற வம்மையிட
  மகலாத புனித மூர்த்தி
செம்மையிட மென்றிருந்த கருமகிட
  முகமாகச் செறிகே தாரம்
இம்மையிடர் மறுமையிடர் ஞானமில்லாச்
  சிறுமையிட ரெல்லாந் தீர்க்கும்
மும்மையிடம் பெறுமுலகுக் கெளிதாகத்
  தனியிருந்த முத்தி போலும்.

இ-ள். பொய்ம்மையாகிய எருமை முகத்தினையுடைய மகிடாசுரனைச்செயித்த பார்வதி வாமபாகத்தில் நீங்காத பரிசுத்தராகிய பரமசிவன் செம்மையாகிய இடம் இதுதானென்று எழுந்தருளியிருக்கிற கறுப்பாகிய எருமையினது முகம்போல் விளங்கிய திருக்கேதார மென்னும் தலம்; இந்தச் சென்மத்தில் வருகிற துக்கமும் மறுமையில்வருகிற துக்கமும் ஞானமில்லாததனாலே உண்டாகின்ற துக்கமுமாகிய எல்லாத் துயரத்தையும் தீர்ப்பதற்கு மூன்றுலகத்தாருக்கும் எளிதாகித் தனியேயிருந்த முத்தித்தானம்போல் இருக்கின்றது. எ-று. (கஉ)

இருப்பனத்தன் பருப்பதத்திற் பிரமராம்
   பிகையுடனென் றிரண்டு போதும்
விருப்பனத்தன் பணிந்திமையோ ருலகுமுத
   லனைத்துலகும் விதித்தான் மற்றைத்
திருப்பதிக்கே யிருப்பவனுந் தேவர்களுஞ்
   சராசரமாய்ச் செனித்தவ் வூரி
லிருப்பதற்கு முயல்வரென்ற லெத்தலமு
   மத்தலத்துக் கிணைய தாமோ.

இ-ள். மல்லிகார்ச்சுனமென்னும் பர்வதத்தில் பிரமராம்பிகையுடனே பரமசிவன் எழுந்தருளியிருக்கின்றாரென்று அன்னவாகனத்தையுடைய பிரமன் வந்து பத்தியோடு இரண்டுவேளையும் வணங்கி அவருடைய அருள்பெற்றுத் தேவலோகமுதல் எல்லாலோகத்தையும் படைத்தார்: மற்றைத் திருப்பதியிலிருக்கிற வேங்கடாசலபதியும் தேவர்களும், அந்தத் தலத்தில் சரமாகவும், அசரமாகவும் பிறந்திருப்பதற்குத் தவஞ்செய்வார்களென்றால் எப்படிப்பட்ட தலங்களும் அந்தக்ஷேத்திரத்திற்குச் சமானமாகுமோ. (

விருப்படியார் சொரிந்தவறு கலருடனே
   விழியிடந்த வேடர் காலிற்
செருப்படியு முகந்தபிரான் காளத்தி
   நகரமெனுந் தெய்வ பூமி
பருப்பதமா கியும்விளங்குந் தண்ணறுக்
   கொழிக்கு மலர்ப் பதுமையோடு
மருப்படியுந் துழாய்மார்பன் வடமலைமே
   லிருந்துகண்டு வணங்க மாதோ.

இ-ள். திருக்காளத்தியென்னுந் தெய்வீகம்பொருந்தியதலத்தில் ஆதிசைவப் பிராமணராகிய சிவகோசரியார் பத்தியோடு மிகுதியாக அருச்சனைசெய்த அறுகுபுட்பங்கள் இவையுடனே கண்ணைப்பிடுங்கிப் பதித்த கண்ணப்பதேவரது காற்செருப்பையும் விருப்பமாக ஏற்றுக்கொண்ட இலிங்கசொரூபமாகிய சிவபெருமான் தானே குளிர்ச்சிபொருந்திய தேனைச்சொரிகின்ற தாமரைமலரிலிருக்கின்ற இலக்குமியோடு வாசனையுள்ள துளபமாலையையணிந்த மார்பினையுடைய விட்டுணுமூர்த்தி திருவேங்கடமென்னுந் திருப்பதியில் நின்றுகொண்டு தரிசனஞ்செய்து வணங்கும்பொருட்டு அந்தக்காளத்தியில் மலையாகியும் விளங்குகின்றார். எ-று. (கங)

தேக்குநா விருதிசையும் புகழ்ந்ததொண்டை
   நாடெனுமோர் தெய்வ நாட்டி
னோக்கினர் வினையகற்று மொருதலமுண்
   டதன்பெயரை நுவலக் கேளும்

வாக்குநா யகிக்கவன் படைத்தபுவி
  தழைக்கவறம் வளர்த்தெந் நாளுங்
காக்குநா யகியுடனே கம்பநா
  யகருறையுங் கச்சி மூதூர்.

இ-ள். அகன்ற எட்டுத்திக்கிலுள்ளவர்களும் புகழ்ந்துகொண்டிருக்கின்ற * தொண்டை மண்டலமென்னுந் தெய்வீகம் பொருந்தியநாட்டில் தரிசனஞ்செய்தவர்களுடைய பாவத்தைப் போக்குகின்ற ஒருதலமுண்டு; அதன்பெயரைச் சொல்லக்கேளுங்கள் சரஸ்வதியின் கணவனாகிய நான்முகன்படைத்த உலகத்திலுள்ள உயிர்கள் பிழைக்கும்படி முப்பத்திரண்டு தருமத்தையும் பரிபாலனஞ்செய்து எந்நாளுங்காக்கின்ற காமாட்சியம்மையுடனே ஏகாம்பரேசுரர் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீகாஞ்சிபுரமாகும். எ-று. (௧௬)

பழுதறவே யெழுகடலு மெழுகிரியு
  மெழுதலமும் படைத்த வேதக்
கிழவனறி யாமுடியை யொருபால
  னறிந்தபதி கிளத்தக் கேளு
மழகுதரு நடம்புரியு மிறைவருக்கம்
  பிகைபூசை யயனார் பூசை
விழைவுதரு மரிபூசை கரன்பூசை
  புரிந்ததிரு விரிஞ்சை மூதூர்.

இ-ள். யாதொரு பழுதுமில்லாமல் ஏழுசமுத்திரத்தையும் ஏழுமலையையும் ஏழுலகத்தையும்படைத்த பிரமனால் அறியக்கூடாத * சிரத்தை ஓர் ஆதிசைவப் பிராமணப்பிள்ளை அறிந்ததலத்தைச் சொல்லக்கேளுங்கள்; ஆநந்தத்தாண்டவஞ்செய்த சுவாமிக்குப் பார்வதியாரும் பிரமனும் சிவநேசமிகுந்த விஷ்ணுவும் கரனும் பூசித்த விரிஞ்சிபுரமென்னும் தலமாம். எ-று. (௧௭)

---

* தொண்டைமான் என்னும் அரசனாலாளப்பட்ட மண்டலமாகலின் தொண்டைமண்டலம் என்னும் பெயர்த்து. இவ்வுண்மையறியார் தொண்டமண்டலம் எனக்கொண்டு இடர்ப்படுவர்.

* சுவாமி சிரத்தைப் பாலன் அறிந்ததாவது:—"பயனாரும்பதி பசுபாசம்புகல் பலநூலுந்தெளிவோ, னியலாரும்பெயர் சிவநாதன் றின மிவனோடின்புறுமா, னயனாநந்தினி வடமீனுந்தொழு நலமார்பண்புடையா, ளயலாமங்கவ ளருபாலன்சிவ சருமாவென்பவனே."—

இ-ள். பயனுள்ள பதி பசு பாசங்களைச் சொல்லுகின்ற ஆகமமுதலிய பலசாத்திரங்களையு முணர்ந்தவன், சிவநாதன் என்னுமியற்பெயரையுடையவன், நாடோறுமிவனுடனின்புற்றிருக்கு மனைவி நயனாநந்தினி அருந்ததியுந் தொழத்தக்க கற்புடையவள், அன்புள்ள அவள்பெற்றபுத்திரன் சிவசருமா எனப்பெயருள்ளவன்- (அப்பேர்க்கொத்த சிறுபாலன் அபிஷேக முதலியவை செய்கிறதற்கு மார்க்கசகாயர் சந்நிதிக்குட்சென்று பார்க்குமளவில், அந்தோ! பூசாகாலந்தவறுகின்றதே!)—"இருகரத்தினாலிவர் முடிதொடவரிதென்றே, கருதியெய்த்துநொந் தினியென்சொல் செயலெனக் கவன்றான், பரகதிக்குவந்தருள்புரி பதவிசகாயன், மரகதக்கொடியிடத்தினன் றிருமுடிவளைந்தான்."—(இ-ள்.) நமதுடைய இரண்டு கைகளால் இம்மார்க்க சகாயருடைய திருமுடியைத் தொடுவது நமக்கு அரிதென்றுகருதி மனமிளைத்துவருந்தி இனியாதுசெய்வதென்று துயரமடைந்தான்; அப்போது பரகதிக்குவந்தருள்செய்த மரகதவல்லியம்மையை யிடப்பாகத்திலுடைய மார்க்கசகாயராகிய பரமசிவம் தன்திருமுடியைவளைத்தார்.—(இவ்வரலாற்றை திருவிரிஞ்சைப்புராணம் பாலனுக்குத்திருமுடிவளைத்த சருக்கத்திற் பரக்கக்காண்க.)

பொய்யாது புனல்பெருகுங் காவேரி
நதிக்கரையிற் * பூந்தராயு
மையாறு மிடைமருதுந் திருக்குடந்தை
வளநகரு மானைக் காவு
மையாரு மிடற்றதிரி சிரமலையு
மாணிக்க மலையுந் தோன்று
மெய்யாக வவற்றினது பெருமையெல்லாம்
விரித்துரைக்கும் வேதந்தானே.

இ-ள். பொய்க்காமல் பெருகிவருகின்ற காவேரி நதியினிருகரையிலும் சீகாழி, திருவையாறு, திருவிடைமருதூர், வளம்பொருந்திய கும்பகோணம், திருவானைக்கா, விஷம்பொருந்திய கண்டத்தையுடைய மாதுரு பூதேசுரர் எழுந்தருளியிருக்கின்ற திரிசிரபுரம், இரத்தினகிரி இவைமுதலான தலங்களில் விளங்கிக்கொண்டிருக்கும் அந்தத்திவ்விய க்ஷேத்திரங்களுடைய பெருமையெல்லாம் வேதமானதுதான் மெய்ம்மையாக விரித்துச்சொல்லும். எ-று. ()

பருவளையார் பரிக்கும்வைகை நதிக்கரையின்
மதுரை யறு பத்துநாலு
திருவிளையாட் டிறைவனியற் றியதலமா
மதன்பெருமை செப்பலாமோ
கருவிளையாட் டகற்றுமிரா மேச்சுரந்தென்
கடற்கரையிற் காணு மங்கே
செருவிளையாட் டிராகவனு மிராவணனைத்
தொலைத்தபழி தீர்த்திட்டாரே.

இ-ள். பெரியசங்குகள் முழங்குகின்ற வைகையாற்றின் கரையில் சோமசுந்தரக்கடவுள் அறுபத்துநாலு திருவிளையாடல்செய்

---

* பூவாகவும் தாராகவும் சங்கநிதி பதுமநிதி என்னும் இருநிதி
ளும் பூசித்தமையால் சீகாழி பூந்தராய் எனப்பெயர்பெற்றது.

ருளியமதுரை என்னும் ஒருதலமுண்டு; அந்தத்தலத்தின் பெருமை யாவராலுஞ்சொல்லப்படாது. தென்சமுத்திரத்தின் கரையில் சனனதுக்கத்தைப்போக்குகின்ற இராமேச்சுரமென்று ஒருதலமுண்டு, யுத்தத்தை விளையாட்டாகச் செய்கின்ற இராமபிரான் இராவணனைக் கொன்றதனால் வந்த பிரமகத்தியை அந்தத்தலத்தில் சிவனைப்பூசித்துத் தீர்த்துக்கொண்டார். எ-று. (௧௯)

அத்தகைய தலங்கடமிற் பிறக்கவுட
னிறக்கவிழி யமையக் காணச்
சுத்தவெளி தனிலாடுஞ் சுடரொளிக்கு
மனங்களிக்கத் தூய்நீ ராட்ட
வித்தமதை யெடுத்திறைத்துச் சிவாலயமும்
விரிபொழிலு மிகவுண் டாக்க
வுத்தமமா கியபரம கதியுளதென்
றுரைக்குமுனி யுரைய தானான்;

இ-ள். அப்படிப்பட்ட தன்மையையுடைய தலங்களிலே யாவராலும், பிறந்தாலும், இறந்தாலும், போய்த்தரிசித்தாலும், பரித்தமாகிய சிதாகாசத்தில் திருநடஞ்செய்யும் மிகுந்தபிரகாசசொரூபமாகிய பரமசிவனுக்குத் திருவுளங்களிக்கும்படி தூய்மையாகியநீரினால் அபிஷேகஞ்செய்தாலும் திரவியங்களைச் செலவுசெய்து சிவாலயங்கட்டுவித்தாலும், விரிந்த பூஞ்சோலைகளைவைத்தாலும், உத்தமமான பரமகதியுண்டாமென்று நந்திதேவர் அருளிச்செய்யக்கேட்டு மார்க்கண்டேயர் சொல்லத்தொடங்கினார். எ-று. (௨௦)

இந்நகரா நதிதோறுந் தலந்தோறு
மிப்படியே யியற்ற வென்றான்
முன்னியசீ ரமரருக்குஞ் சித்தருக்கு
முனிவருக்கு முடி வுறுத்

மின்னிகருஞ் சிறுவாழ்க்கை மனிதர்தமக்
கெளிதாமோ மேவி னாலு
மன்னியமாம் பிறவுயிர்க்கு மாத்தினுக்குங்
கிடையாதே யமல வென்றான்.

இ-ள். இப்படிப்பட்ட தன்மையையுடைய நதிகள்தோறும் தலங்கள்தோறும்போய்த் தேவரீர் கட்டளையிட்டவிதமாகவே தீர்த்தமாடி வழிபாடுமுதலானவைகளைச் செய்யவேண்டுமென்றால் மிகுந்த சிறப்புப்பொருந்திய தேவர்களாலும் சித்தர்களாலும் முனிவர்களாலும்முடியாது. அப்படி மின்னல்போற்றோன்றி க்ஷணத்திலழியுஞ் சிறியவாணாளையுடையமனிதர்களுக்கு எளிதில்முடியுமோ! அப்படிமுடிந்தாலும் மிருகங்களுக்கும் பட்சிகளுக்கும் விருட்சங்களுக்குங் கிடைக்கமாட்டாதே சுவாமி என்று சொன்னார் மார்க்கண்டேயர். எ-று. (௨௧)

ஆடுமந்த நதிதோறு மினிதெனுமத்
தலந்தோறு மனந்த காலந்
தேடுகின்ற பயனுதவுஞ் சிவஞானம்
வருந்தாமற் சிறிது போதி
னாடுகின்ற வுறுப்பிலர்க்கு மறிவிலர்க்கும்
புலையருக்கு நரகாள் வார்க்கு
மோடுகின்ற விலங்கினுக்கு மற்றெவைக்குந்
தருமொரான் றுரைப்பா யென்றான்.

இ-ள். மனிதர்கள் ஆடுகின்ற அந்த நதிகள்தோறும் இனிதாகிய அந்தத்தலங்கடோறும் அநேககாலமாக ஸ்நானஞ்செய்து தரிசனமுதலியவைகளைச்செய்ததனால் உண்டாகியபிரயோசனமாகிய சிவஞானத்தை, வருத்தப்படாமல்கொஞ்சகாலத்தில்தானே பிரதட்சணஞ்செய்தல் கும்பிடுதல் தரிசனஞ்செய்தல் முதலியவற்றிற்கு

ஏதுவாகிய கை கால் கண்க ளற்றவர்களுக்கும் விவேக சூனியர்களுக்கும் நீசர்களுக்கும், நரகத்தில் வீழத் தகுந்த பாவஞ் செய்தவர்களுக்கும், சஞ்சரிக்கிற மிருகங்களுக்கும் மற்றுமுள்ள எல்லாச் சீவராசிகளுக்கும் கொடுக்கின்ற ஒருதலம் அருளிச்செய்ய வேண்டுமென்று கேட்டார் மார்க்கண்டேயர். எ-று. (௨௨)

இப்படியே நமனைவென்ற பெருந்தவனு
மிருந்தவரு மியம்பி யேத்திக்
கைப்பதும மலர்கொடுதன் காற்பதுமந்
தீண்டுதலுங் கருணை யாகி
யப்படியே முத்திதரு மொருதலமுண்
டுரைக்குதுமென் றமைத்தான் பின்னை
மைப்படியுங் கண்டத்தா னருணகிரி
நினைந்துபர வசத்த னானான்.

இ-ள். இயமனைச்சயித்த பெருமையாகிய தவத்தினையுடைய மார்க்கண்டேயரும் மற்றுமுள்ள முனிவர்களும் இச்சப்பிரகாரமாகச்சொல்லித் தோத்திரஞ்செய்து தாமரை மலர்போன்ற கைகளால் நந்திதேவருடைய தாமரை மலரையொத்த திருவடிகளைப் பரிசித்து வந்தனஞ்செய்யுமளவில் அவர் கிருபையுள்ளவராகி, நீங்கள் சொன்னபடியே மோக்ஷங் கொடுக்கிற தலம் ஒன்றுண்டு. அதைச் சொல்லுகின்றோம் என்று கையமர்த்திப் பின்பு விஷந்தங்கிய கண்டத்தையுடைய பரமசிவம் எழுந்தருளியிருக்கிற அருணாசலமென்னுந் தலத்தை நினைந்து பரவசமானார் நந்திதேவர். எ-று. (௨௩)

அங்கமெல்லா மயிர்பொடிப்ப நடுநடுங்கி
விழியிரண்டு மருவி பாயச்
செங்கைபிணை மலர்குவிய மொழிதளர
நெடும்போது தெளிவில் லாமற்

கங்கையணி சடையானே யருணகிரிப
  பெருமானே கனற்கண் ணானே
யெங்களையா ளுடையானே யெனத்துதித்து
  விழித்ததற்பின் னிசைப்ப தானான்.

இ-ள். தேகமெல்லா மயிர்க்குச்செறிய நடு நடுங்கிக்கொண்டு இரண்டு கண்களிலும் நின்று அருவிபோல் ஆனந்த பாஷ்பம் வர, மலர்போன்ற இரண்டு கைகளும் ஒன்றாய்க்குவிய, வார்த்தை தடுமாற அநேகநாழிகை தம் வயமில்லாமல் கங்கையைத் தரித்திருக்கின்ற சடையையுடையவரே! அருணகிரியில் எழுந்தருளியவரே! அக்கினிக் கண்களை யுடையவரே! எங்களை யாட்கொண்டவரே! என்று தோத்திரஞ்செய்து விழித்துக்கொண்டு அதன்பின்பு சொல்லத்தொடங்கினார் நந்திகேசுரர். எ-று. (௨௪)

சத்தியம தாமொழிவன் முத்திதரு மூரது
  தனக்குரிய நாமமிக வுண்
டத்தனையு நான்மொழிய வெத்தனைவ லேனதிலோ
  ரற்பவள வேபுகலு வேன்
சித்தியுத வுங்கவுரி தேசுநக ரென்றுபெயர்
  தென்னருணை யென்று பெயர்சீர்
வைத்தசிவ லோகநக ரென்றுபெயர் நீடுசதுர்
  வாயுநக ரென்று பெயரே.

இ-ள். அப்படி தோத்திரஞ் செய்த பின்பு நந்திதேவர் சொல்வார், கேளும் மார்க்கண்டேயரே? சத்தியமாகச் சொல்லுகின்றேன், மோக்ஷத்தைக்கொடுக்கிற தலமொன்றுண்டு. அதற்குரியநாமங்களோ அநேகம். அத்தனை பெயரையுஞ் சொல்லுகிறதற்கு நான் எவ்வளவுசக்தியுடையவன், ஆனாலும் அவைகளில் சிலநாமமாத்திரஞ்சொல்லுகின்றேன். சித்திகளைக்கொடுக்கிற கவுரி நகரமென்றும், தேசுநகரமென்றும், அழகிய அருணாசலமென்றும், சிறப்புப்பொருந்திய சிவலோகநகரமென்றும், நாகரிகமிருந்த வாயுநகரமென்றும், நூல்களிற்சொல்லப்பட்ட திருநாமங்களையுடையது. எ-று.

சத்தபுரி யேமுத லெடுத்ததலம் யாவுமொரு
  தட்டுமொரு தட்ட தனிலே
யத்தலமு மிட்டெதிர் நிறுக்கவவை கட்கதிக
  மானதொளி ரந்த நகர
முத்திநக ரென்றுபெயர் ஞானநக ரென்றுபெயர்
  முந்தியத லேச்சுர மெனுஞ்
சுத்தநக ரென்றுபெயர் தென்கயிலை யென்றுபெயர்
  சோணகிரி யென்று பெயரே.

இ-ள். பின்னும் நந்திதேவர் சொல்வார்; சத்தபுரிகளென்கிற அயோத்தி, மதுரை, மாயாபுரி, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை முதலாகிய எல்லாத்தலங்களையும் ஒருதட்டிலும், அந்த அருணாசலத்தை ஒருதட்டிலும்வைத்துநிறுக்க அந்தத்தலங்களுக்கெல்லாம் அதிகனத்தையுடைத்தாயிருந்து பிரகாசிக்கின்ற அந்தத்தலத்துக்கு முத்திநகரமென்றும், ஞானநகரமென்றும் முதன்மையாகிய தலேச்சுரமென்றும், சுத்தநகரமென்றும், தக்ஷிணகைலாயமென்றும், சோணகிரியென்றும் பெயராம். எ-று. (௨௬)

வாதமிகு காலவழ லூழியலை யேழுபுயல்
  வாதைபுரி யாத நகரந்
சீதமுத லானபிணி திமையிடை யூறுபசி
  சேரவரி தான நகரம்

மாதவர்கண் மாதவர்கள் பூசைபுரி மாநகர
மாதவர்க ணாபி மலராம்
போதிலுறை வேதியர்தொ ணூறுபெய
ரோடறுவர் பூசைபுரி தேவநகரம்.

இ-ள். இறுதிக்காலத்திலுண்டாகிய பிரசண்டவாயுவினாலும், ஊழித்தீயாகிய வடவாமுகாக்கினியினாலும்; சமுத்திர பிரளயத்தினாலும், யுகமுடிவில்பொழிகின்ற எழுமேகங்களினாலும், யாதொரு வேதனையும் அடையாததலம்; சைத்தியமுதலான பிணிகள் தீமையாகிய இடையூறுகள் பசி இவைகள் சேராததலம்; மகத்தாகிய தவசிகள் அநேக விட்டுணுக்கள் பூசைசெய்ததலம்; அப்படிப்பட்ட விட்டுணுக்களுடைய நாபிகளாகிய தாமரைமலர்களில் உண்டாகிய தொண்ணூற்றாறு பிரமர்கள்பூசித்த தெய்வீகம் பொருந்தியதலம் அருணாசலமென்னுந்தலமாம். எ-று. (உஎ)

ஒன்றுளது பூமிதனி லின்றுபுதி தன்றுலகு
மும்பரு முயர்ந்த வெளியு
மென்றுளதந் நாளுளது வேதமுடி மீதினி
லிருப்பதக லாம லதிலோர்
குன்றுதலி லாதவொரு வெற்புளது புண்டரிக
கோளகையு மூடுருவியே
நின்றுளது தென்றிசையி லென்றுமழி யாதுநெடு
நீருலகு வாழ்வு பெறவே.

இ-ள். இப்படிப்பட்ட தன்மையையுடையதலம் ஒன்றுண்டு அந்தத்தலம் இன்றைக்குப் புதிதாகவந்ததல்ல; இந்தப்பூவுலகமும், மேலுலகங்களும், ஆகாயவெளியும் என்றுண்டாயினவோ அன்றே உண்டாயிருக்கின்றது. நீங்காமல் வேதத்தின் முடியிலுள்ளது; அந்தத்தலத்தில்கெடுதலில்லாத ஒருமலையுண்டு; அதுநெடிய கடல் சூழ்ந்த பூமியிலுள்ளவர்கள்வாழும்படிக்கு தென்திக்கில் என்றும்நிலைபெற்றுப் பிரமாண்டகோளகையையூடுருவிநிற்கின்றது. எ-று. ()

கலி விருத்தம்.

ஆரிட மிராக்கத மசுரந் தேவதந்
தாருடை மானிடஞ் சம்பு வென்றுநாம்
பேரிடு மிலிங்கமே பிறங்கு மெங்கணு
மேருடைப் பருப்பத மிலிங்க மாவது.

இ-ள். * ஆரிஷமென்றும், ராக்ஷஸமென்றும், ஆசுரமென்றும், தைவதமென்றும், மாலையைத்தரிக்கின்றமானுடமென்றும், நாமங்கள்பெற்ற இலிங்கங்கள் எந்தத்தலங்களிலும் பிரகாசிக்கும்; இந்தத்தலத்திலோவென்றால்மலையேஇலிங்கமாயிருக்கின்றது. எ-று

செங்கனன் முதல்யுகந் திரேதை மாமணி
பொங்கிய துவாபரம் பொலிந்த பொன்னிறந்
தங்கிய கலியுகந் தன்னிலே சிலை
யங்கமா மதன்பெய ரருண பூதரம்.

இ-ள். முதல்யுகமாகிய கிருதயுகத்தில் சிவப்பாகிய அக்கினிமலையாகவும், திரேதாயுகத்தில் மாணிக்கமலையாகவும், துவாபரயுகத்தில் மிகுந்த பிரகாசத்தையுடைய பொன்மலையாகவும், கலியுகத்தில் கன்மலையாகவுந் திருவுருக்கொள்ளும் அந்தமலைக்கு அருணாசலமென்னுந் திருநாமமாம். எ-று. (ங0)

---

* இருடிகளாலே பூசைசெய்யப்பட்டது ஆரிடலிங்கம், ராக்ஷசர்களாலே பூசைசெய்யப்பட்டது இராக்கதலிங்கம், தேவர்களாலே பூசைசெய்யப்பட்டது தைவதலிங்கம், மானுடராலேபூசைசெய்யப்பட்டது மானுடலிங்கம் என்பர்.

கவியா முகக்கடை சொரியுங் காரின
முருவமே மூன்றியொவ் வொன்று கோடியாய்ப்
பருவமா யிரந்துளி பனையிற் பெய்யினு
மருவியா யடங்குமவ் வசல மீதினில்.

இ-ள். எல்லாச்சீவராசிகளும் கருவறும்படி யுகாந்தகாலத்தில் பொழிகின்ற மேகங்கள் ஏழென்கிற எண்ணிக்கையில்லாமல் ஒவ்வொன்றுகோடியாகி ஆயிரம்வருஷம் ஒவ்வொரு துளிபனையின்கனி போலப் பருமனாகப்பெய்தாலும் அந்தமலையின்மேல் சிறிய அருவியாகச்சுவறி அடங்கிப்போமல்லாமல் புறத்தில்வரமாட்டாது. எ-று.

அரியய னளவிடா தனந்த காலமாய்த்
திரிதரி னதற்கிணை செப்ப லாகுமோ
சுரநதி பரவதிற் சுனையி னீருணா
விரவிதன் புரவிமே லேறிச் செல்லுமே.

இ-ள். விட்டுணு பன்றியாகியும், பிரமன் அன்னமாகியும் அநேககோடிகாலமாய்த்தேடி அடிமுடிகாணாமல் வருந்துவார்களானால், அந்த அருணாசலத்துக்கு ஒன்றைச்சமானமாகச் சொல்லக்கூடுமோ! அஃதல்லாமல் ஆகாசகங்கைதன்னினும் முக்கியமென்று துதிசெய்கின்ற அந்தமலையிலிருக்கின்றசுனையிலே நீருண்ணச் சூரியன் தேரிற்கட்டிய குதிரைகள் தாவிச்செல்லும். எ-று. (௧௨)

வெண்மைசேர் புயலத னடியின் மேவுத
லெண்மகிழ் கயிலைமீ திருப்ப தொக்குமா
றண்மைசேர் கார்த்திகை விளக்கு சாற்றுதன்
மண்மகள் மகுடமா மணியிற் றோன்றுமே.

இ-ள் வெள்ளைநிறமாகிய மேகங்கள் அந்தமலையடிவாரத்தில் சேருதல்யாவராலும் எண்ணப்பட்டகைலாயகிரிமேல் அந்த மலை

யிருக்கிறதை ஒக்கும். குளிர்ச்சிபொருந்திய கார்த்திகை மாதத்தில் கிர்த்திகாதீபம் அந்தமலைமேல் ஏற்றுதல் பூமிதேவியினுடையகிரீடத்தில்பதித்த இரத்தினம்போற் றோன்றும். எ-று. (௧௩)

அன்றுமா றிசைமுக னளவி டாமுதன்
மன்றல்சேர் திருமலை வடிவு கொள்கையா
னன்றுநம் மருகனு நாமு மோர்குல
மென்றுளா மகிழ்ந்ததே யிமைய பூதரம்.

இ-ள். முற்காலத்தில் விட்டுணுவினாலும் பிரமனாலும், அறியப்படாதபரமசிவன் கீர்த்திபொருந்திய அந்தமலையுருவங்கொண்டதினால் இமயபர்வதராசனானவன் நல்லது (இத்தனைகாலம்வரைக்கும்வேறுசாதியாயிருந்த) நம்முடையமருமகன் இப்போது நங்குலமேயென்று மனஞ்சந்தோஷித்தான். எ-று. (௧௪)

பன்னிரு திங்களும் பரிதி யாண்டு
மன்னிய மதியமும் வலம தாய்வரு
மந்நிலை யுரைக்கவென் னறிவு போதுமோ
வுன்னிய வாசையா லுரைக்க லுற்றனன்.

இ-ள். பன்னிரண்டுமாதமும் சூரியசந்திரர்கள் மகாமேருவை வலஞ்செய்தல்போலப் பிரதட்சணஞ்செய்து வருவார்களென்றால் அந்த அருணாசலத்தின் பெருமையைச் சொல்வதற்கு அற்பமாகிய என்னுடையபுத்திபோதுமோ! ஆனாலுஞ்சொல்லவேண்டுமென்று நினைவுகொண்ட அவாவினால்சொல்லத் தொடங்கினேன். எ-று.

அர்க்கமா மலையுள தடுத்த கீழ்த்திசை
நற்கணா யிரத்தவ னண்ணி வாழ்த்துவன்
றெற்கிலே யுளதுபுத் தேளிர் மாமலை
பொற்கையந் தகன்றினம் புகழ்ந்து போற்றுவான்.

இ-ள். அருணாசலமென்னு மலைக்கு அடுத்த கீழ்ப்பக்கத்தில் அர்க்கமலையென்று ஒருமலையுண்டு; அதில் ஆயிரங்கண்களையுடைய தேவேந்திரனிருந்துகொண்டு சுவாமியைத் தோத்திரஞ்செய்வான் அவ்வருணகிரிக்கு அடுத்ததென்பக்கத்தில் தெய்வமலையென்று ஒன்றுண்டு; அதில் சிவந்தகைகளையுடைய இயமன்புகழ்ந்துகொண்டு வணங்குவான். எ-று. (௧௬)

மேற்றிசைத் தண்டமா விலங்க லுண்டதிற்
சேற்றிசை வருணன்முன் செங்கை கூப்புவன்
தோற்றிடும் வடதிசைச் சூல மால்வரை
போற்றிய வளகையான் பொருந்தி வாழ்த்துவான்.

இ-ள். அந்த அருணாசலமென்னுந் திருமலைக்கு மேற்பாரிசத்தில்தண்டமலையென்று ஒருமலையுண்டு; அதில்மகரவாகனத்திலேறுகின்றவருணராஜன் சிவந்தகையைக்கூப்பி அந்தமலையைவணங்குவான். வடபாரிசத்தில் சூலமலையென்று ஒருமலையுண்டு; அதில் எல்லாராலும்போற்றப்பட்ட குபேரன் இருந்துகொண்டு துதிசெய்வான். எ-று. (௧௭)

மற்றுநால் வரைகளில் வாயு தீயவ
னெற்றிசேர் விழியவ னிருதி போற்றுவன்
சுற்றுள மலைதொறுஞ் சுரருஞ் சித்தரு
முற்றசீர் வசுக்களு முறைந்து போற்றுவார்.

இ-ள். மற்ற நான்குதிக்குகளிலும் இருக்கிறமலைகள்நான்கிலுமிருந்துகொண்டு வாயு, அக்கினி, ஈசானன், நிருதி இந்நால்வர்களும் வணங்குவார்கள். அவைகளைச்சுற்றியிருக்கிறமலைகளிலெல்லாம் தேவர்களும், சித்தர்களும், சிறப்புப்பொருந்திய அஷ்டவசுக்களும் இருந்துகொண்டு வணங்குவார்கள். எ-று. (௧௮)

தன்னையே நிகருமத் தலத்திலே புவிக்
கன்னைமா தவம்புரிந் ததிக மாகவே
என்னையா ளுடையவ னிடங்க லந்தனள்
பின்னையு மதிநலம் பேச லாகுமோ.

இ-ள். தனக்குத்தானே ஒப்பாகிய அத்தலத்தில்பூலோகத்துக்குத் தாயாகிய பார்வதியம்மை மகத்தாகிய அரியதவஞ்செய்து என்னையாட்கொண்ட பரமசிவனுடைய இடப்பாகத்திற்சேர்ந்தாள். ஆனபடியினாலே அந்த அருணாசலத்தின் பெருமையைச் சொல்லமுடியுமோ. எ-று. (௧௯)

தன்னிகர் மந்திரம் புவனந் தத்துவம்
வன்னமாய் விளங்குமவ் வரையை மாலய
னன்னமு மேனமு மாகி நாடினா
ரின்னமு மளவிடா திடும்பை நீங்கினார்.

இ-ள். தனக்குத்தானே ஒப்பாகிய மந்திரம், புவனம், தத்துவம் இவைகளினுருவமாய்விளங்கும் அருணாசலத்தை விட்டுணு பிரமன் இருவரும்பன்றியும் அன்னமுமாகித்தேடி இத்தன்மையையுடையதென்று அறியக்கூடாமையினாலே தங்களுடையகர்வத்தை நீங்கினார்கள். எ-று. (௨௦)

மருவிய பெரும்புகழ் வச்சி ராங்கத
னருணையை வலம்புரிந் தமல னாயினான்
கருவிய கலாதரன் காந்தி சாலிபெண்
டிருவரும் பரகதி யெய்தினா ரதில்.

இ-ள். மகத்தாகிய கீர்த்திபெற்ற வச்சிராங்கத பாண்டியன் அருணாசலத்தைப் பிரதட்சணம் வந்ததினாலே தன்னுடைய பாவத்தைப்போக்கி மலமில்லாதவனாக்கிக்கொண்டனன்; பெரு

பொருந்திய கலாதரன், காந்திசாலி இவ்விருவரும் அந்தத்தலத்தைவலம்வந்து மோட்சத்தையடைந்தார்கள். எ-று. (சக)

ஆதியா மிவர்க டொடங்கியின் றளவுக்
கனேகருண் டருணையை நினைந்துங்
காதலா லுரைத்துங் கேட்டுமுன் கண்டுங்
கால்களால் வலஞ்செய்து மதிலே
நீதியா யிருந்து நெறியினு ணடந்து
நெடுங்கயம் படிந்தறம் புரிந்துஞ்
சோதிதா டொழுதும் பணிவிடை செய்துந்
துளக்கிலா முத்திபெற் றிருந்தார்.

இ-ள். முன் சொல்லப்பட்ட இவர்கள் ஆதியாகத் தொடங்கி அன்றுமுதலின்றுவரைக்கும் அநேகம்பேர் அருணாசலத்தை நினைத்தும், ஆசையோடு தோத்திரஞ்செய்தும், கேள்விப்பட்டும், தரிசனஞ்செய்தும், கால்களாலே பிரதட்சணஞ்செய்தும், அதில் நீதிபொருந்தியவேதமார்க்கத்தை அனுசரித்துக்கொண்டிருந்தும், மகத்துவம்பொருந்திய தீர்த்தங்களிலேமுழுகியும், தருமங்களைச்செய்தும், சோதிசொரூபமாகிய சிவனதுபாதங்களைத்தொழுதும், திருப்பணிசெய்தும், கெடுதலில்லாத மோட்சத்தைப் பெற்றிருந்தார்கள். எ-று. (சஉ)

அப்பதி தமிழ்நாட் டுளதிடை பெண்ணை
யாறுசெய் யாறுபிங் கலையாஞ்
செப்பிய கமலை நதிசுழி முனையாஞ்
செய்ததொன் றாயிரம்பலமாம்

முப்பத்து மூன்று கோடி தேவர்களு
முனிவருந் தவஞ்செய்வா ரதற்கோ
ரொப்புவே றில்லை யிம்பர் நாட்டிடத்து
மும்பர்நாட் டிடத்துமென் றுரைத்தான்.

இ-ள். அவ்வருணாசலத்தலம் தமிழ்நாட்டிலிருக்கிறது. அப்பதிக்குவலப்பக்கத்திலிருக்கிற பெண்ணையாறு இடை என்றுநாடியாகும்; இடப்பக்கத்திலிருக்கிற செய்யாறு பிங்கலையென்றுநாடியாகும்; கமலை என்கிறநதி சுழிமுனை என்றுநாடியாகும்; அந்தநதிகளில் ஸ்நானஞ்செய்தால் ஒன்றுக்கு ஆயிரம்பங்கு பலன்வரும்; முப்பத்துமுக்கோடி தேவர்களும் முனிவர்களும் அத்தலத்தில் தவஞ்செய்வார்கள். அதற்கு ஒப்பு இந்த உலகத்திலும் மேலுலகத்திலும் இல்லையென்றுசொன்னார் நந்திதேவர். எ-று. (ச௩)

அற்றமி லவன்சொ லருணையின் சிறப்பா
லகமகிழ்ந் துருகிய முனிவன்
மற்றுள தலத்தி லதிகமென் றுரைத்த
வாய்மையை மனங்கொளா துரைப்பான்
சிற்றறிவுடையே னாதலா லொருசொற்
றெளிந்திலே னெனச்சொன்னா னதனை
முற்றுமா முணர்ந்தான் மொழியென மொழிந்தான்
முனிவனு மலர்க்கிவை மொழிவான்.

இ-ள். சிவபக்தியிற் சோர்வில்லாத நந்திதேவரால் சொல்லப்பட்ட அருணாசலத்தின்மான்மியத்திலே மனமகிழ்ந்து உருக்கத்தையடைந்த மார்க்கண்டேயர் மற்ற சிவத்தலங்களைப் பார்க்கிலும் அருணாசலத்தலம் அதிகமென்று சொன்னவுண்மையைமனத்தில் ஒப்புக்கொள்ளாமல்சொல்வார்; சுவாமி? நான்சிறிய அறிவையுடை

யவனாதலால் நீங்கள் திருவுளம் பற்றியருளியது நன்றாய்த் தோன்றவில்லை யென்று சொல்ல, அதுகேட்டுச் சகலத்தையும் உள்ளத்திலுணர்ந்த நந்திதேவர் உமக்குண்டான சந்தேகத்தைச் சொல்லுமென்று கேட்க, மார்க்கண்டேயர் அவருக்குச்சொல்லுவார். எ-று.

தில்லையைக் காணக் காசியி லிறக்கச்
சிறக்குமா ரூர்தனிற் பிறக்க
வெல்லையில் பெருமை யருணையை நினைக்க
வெய்தலா முத்தியென் றுரைத்தி
ரொல்லையி னாலு தலங்களுந் தம்மி
லொக்குமென் றுரைத்திடா தடிகே
ளல்லிசூ ழருணை யதிகமென் றுரைத்த
தருளென வருள்செய்வா னவனும்.

இ-ள். சிதம்பரத்தை தரிசனஞ்செய்தாலும், காசியிலே தேகத்தை விட்டாலும், சிறப்புள்ள திருவாரூரிலே பிறந்தாலும், அளவில்லாத பெருமையையுடைய அருணாசலத்தை நினைத்தாலும், முத்தி கிடைக்குமென்று அருளிச்செய்தீர், இந்நான்கு தலங்களையும் ஒன்றுக்கொன்று ஒப்பென்று திருவுளம்பற்றாமல் சுவாமீ? அல்லிமலர்களையுடைய தடாகஞ்சூழ்ந்த அருணாசலத்தை மாத்திரம் அதிகமென்று கட்டளையிட்டதை அநுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று மார்க்கண்டேயர்கேட்க அதற்கு நந்திதேவரும் அருளிச்செய்கிறார். எ-று. (௪௫)

இறந்திடுந் தொழிலும் பிறந்திடுந் தொழிலு
மெண்ணிய படியவை முடியா
பறந்திடு மவைக்குஞ் சிலவிலங் கினுக்கும்
பாதப முதலவோ ருயிர்க்கு

நிறைந்த புன்னீச ரந்தகர் தமக்கு
நிருத்தமண் டபந்தொழ நேரா
தறந்திகழ் பயனுற சலாசல [illegible]
மல்லவர்க் கரியதா மதுவே.

இ-ள். கேளும் மார்க்கண்டேயரே, ஒருவன் இறக்குந் தொழிலும், பிறக்குந்தொழிலும் நினைத்தபடிமுடியாது. அதிருக்கட்டும், பட்சிசாதிகளுக்கும் மிருகங்களுக்கும் விருட்சமுதலாகிய ஓரறிவுயிருக்கும், புன்மைநிறைந்த நீசருக்கும் குருடருக்கும் நடராசனது நிருத்தசபையைத் தரிசனஞ்செய்யக்கூடாது. பூர்வஜனனபுண்ணியத்தினாலே அந்தச்சபைக்குட்போய்க் காணத்தகுந்தவர்களாகிய சிலர்க்குமாத்திரங் கிடைக்கும், மற்றவர்களுக்கு அரியதாகும்; அந்தக்கலமாம். எ-று. (௪௬)

குண்டகர் பதிதர் கோளகர் புலையர்
கொலையின ருறுப்பினிற் குறைந்தோர்
கண்டகர் நெடுந்தூ ரத்தினி லிருப்போர்
கருணைசே ரருணபூ தரத்தை
எண்டக வொருகா னினைத்திட முத்தி
யிவரலால் விலங்குபுண் மரங்கண்
முண்டக முதலா யினவுமுன் காண
முளைத்திட முத்தியே பெறுமால்.

இ-ள். ஒருமாது தன் கணவனுக்கன்றி வேறொருவனுக்குப் பெறப்பட்ட குண்டகர்களுக்கும், பாவிகளுக்கும், விதவைக்குப்பிறப்பட்டகோளகருக்கும், நீசருக்கும், கொலைசெய்கிறவர்களுக்கும், அவயவங்குறைந்தவர்களுக்கும், தீமைசெய்கின்றவர்களுக்கும், நெடுந்தூரத்திலிருப்பவர்களுக்கும் கிருபைபொருந்திய அருணாசலத்தை

ன்றாக ஒருதரம் நினைக்க முத்தியுண்டாகும், இவைகளல்லாமல் மிருகங்கள் பட்சிகள் மரங்கள் தாமரைமுதலிய பூண்டுகளும் அவ் [illegible] முத்தியையடையும். எ-று. (௪௭)

சிலையெலா மிலிங்க மதுசிவ லோகந்
தேவர்பா தவங்கள்பா தவங்க
ளலையுலாம் புனல்கள் சடையுலாங் கங்கை
யருந்துமூ ணமரருண் ணமுதா
முலவியே வருதல் புவிவலம் வருத
லுரைத்தசொல் சுருதியா முறங்கன்
மலைவறு சமாதி யாகுமத் தலத்தை
மானுமோ மற்றொரு தலமே.

இ-ள். அத்தலத்திலிருக்கிற கற்களெல்லாம் லிங்கங்களான படியினாலே அது சிவலோகமாகும். அத்தலத்திலிருக்கிற விருட்சங்களெல்லாம் கற்பக விருட்சங்களாகும்; அத்தலத்திலிருக்கிற அலைபொருந்திய நீரெல்லாம் சுவாமியின் சடையிலிருக்கிற கங்கையாகும்; அத்தலத்திலிருக்கிறவர்கள் சாப்பிடுகிற உணவுகளெல்லாம் தேவாமிர்தமாகும்; அத்தலத்தில் சஞ்சரித்தல் பூமிப்பிரதட்சணஞ்செய்தலாகும்; அவ்வூரிற்சொல்லும் வார்த்தைகள் வேதமாகும்; அத்தலத்தில் நித்திரைசெய்தல் நிஷ்டைகூடிச் சமாதியிருத்தலாகும்; ஆனபடியினாலே அதற்கு மற்றொருஸ்தலம் சமானமாகுமோ. எ-று. (௪௮)

முத்தழல் புரிந்தோ நான்மறை தெளிந்தோ
ரைவகை வேள்வியு முடித்தோ
ரெத்தவம் புரிந்தோ ரெவ்வறஞ் செய்தோ
ரெண்வகை யோகிய ரெனினு

மத்தல நினையா தவர்க்கிலை முத்தி
யாதலா லமரர்வா னிருந்துஞ்
சுத்தமா னிடராய்ப் பிறந்ததை நினைத்துந்
தளக்கிலா முத்திபெற் றிருப்பார்.

இ-ள். காருகபத்தியம், ஆகவனீயம், தக்கிணாக்கினியம், என்கிற மூன்றக்கினியை வளர்த்தவர்களும், இருக்கு, யசுர், சாமம் அதர்வணம் என்னும் நான்குவேதங்களையுணர்ந்தவர்களும், பிரமயாகம் தெய்வயாகம், பூதயாகம், பிதிர்யாகம், மானுடயாகம் என்கிற ஐவகையாகங்களையும் நிறைவேற்றினவர்களும், எத்தன்மையாகிய தவஞ்செய்தவர்களும், எப்படிப்பட்ட தருமஞ்செய்தவர்களும் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதியெனப்படுகின்ற அஷ்டாங்கயோகஞ்செய்தவர்களுமாகிய எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் அவ்வருணாசலத்தை நினையாவிட்டால் அவர்களுக்கு முத்தியில்லை; ஆனபடியினாலே தான் தேவர்களாய்ச் சொர்க்கலோகத்திலிருந்தவர்களும் ஞானமுள்ள மானிடராகப் பூமியிற்பிறந்து அவ்வருணாசலத்தைத் தியானஞ்செய்துகெடுதலில்லாதமுத்தியை அடைந்திருப்பார்கள். எ-று. ()

பொருவிலாச் சுவர்க்கத் தமிர்தமுண் டிருப்போர்
போகபூ மியைத்தனி புரப்போ
ரருணைமா நகரிற் கிருமியாய்ப் பிறப்ப
ததிகமென் றுகரங் கொள்வார்
மருவுமப் பதியிற் பிறப்பதா னூறு
மகம்புரிந் தவர்க்கலாற் கிடையா
திருவருள் படைத்தார்க் கெளிதலான் மற்றத்
தேவர் யாவருக்கும தரிதே.

இ-ள். ஒப்பில்லாத சொர்க்கலோகத்தில் நரை, திரை, மூப்பு, உண்டாகாதபடி அமிர்தமுண்டிருப்போர்களாகிய தேவர்களும், போகத்தை அனுபவித்தற்குரிய அந்தச்சொர்க்கமுதலான உலகங்களைத் தனித்தனியாளுகின்ற தேவேந்திரன்முதலாகிய திக்குப்பாலகர்களும், அருணாசலதலத்தில் கிருமியாகிப் பிறக்கிறதுசொர்க்கத்தின்பதத்தை அனுபவித்தலைப் பார்க்கினும், அதிகமென்று பிறப்பதற்கு ஆசைப்படுவார்கள், தெய்வத்தன்மை பொருந்திய அந்தப்பதியில் பிறக்கிறது நூறுயாகஞ் செய்தவர்களுக்கு அல்லாமற்கிடையாது. சுவாமியினுடைய கிருபைபெற்றவர்கட்குக் கிடைக்கும், அவர்களன்றி மற்றத்தேவர்கள் முதலானமகத்துவம்பொருந்தியயாவர்க்கும் அப்படிபிறப்பது கிடைக்கமாட்டாது. எ-று. (௧0)

வெற்றிரும் பிடத்திற் செம்பில்வெண் கலத்தில்
  வெள்ளியில் வெள்ளிய பொன்னிற்
குற்றமொன் றில்லாக் குயிற்றிய மணிபோற்
  குலவிய சிவனிருந் திடுவன்
மற்றைய தலத்தி லருணையென் றுரைக்கும்
  வளம்பதி தனிலெழுந் தருள்வின்
பொற்றகட் டிடத்து மணியென வுரைத்தான்
  புனிதனா கியவரு ணந்தி.

இ-ள். சொற்பவிலைபெற்ற இரும்பிலும், செம்பிலும், வெண்கலத்திலும், வெள்ளியிலும், வெள்ளைப் பொன்னிலும் பதிக்கப்பட்ட யாதொரு தோஷமில்லாத மாணிக்க ரத்தினம்போல் மற்றத்தலங்களில் எங்கும் நிறைந்த பரமசிவன் எழுந்தருளியிருப்பார் பொன்னாற்செய்த தகட்டில் பதிக்கப்பட்ட அந்த இரத்தினம்போல் அருணாசலமென்று சொல்லப்பட்ட வளம்பொருந்தியதலத்தில் எழுந்தருளியிருப்பாரென்று பரிசுத்தராகிய வருணந்திதேவர்திருவுளம்பற்றினார், ஆதலால் எல்லாத் தலத்திற்கும் இத்தலம் அதிகமாம். எ-று. (௰௧)

கண்ணினால் விளங்குந் திருமுக முகத்தாற்
  கரியகண் விளங்குமவ் விரண்டின்
பண்ணினால் விளங்கு முடலெலா மவைபோற்
  பரமனால் விளங்குமவ் வருணை
யண்ணறான் விளங்கு மருணைமா நகரா
  லமலனோ டருணைமா நகரா
லெண்ணிலாப் பதிக ளவைகளும் விளங்கு
  மெவற்றினுஞ் சிறந்ததென் றிசைத்தான்.

இ-ள். கேளும் மார்க்கண்டேயரே? கண்க ளிருக்கிறதினால் முகம் பிரகாசிக்கும்; முகத்தினிடத்தி லிருப்பதால் அக்கண்கள் விளங்கிக்கொண்டிருக்கும்; இந்த விரண்டினுடைய சேர்க்கை அழகினாலே தேகமெல்லாம் விளங்கும்; அவைபோல் பரமசிவனாலே அருணாசலம் சிறப்படைந்திருக்கும்; அந்த அருணாசலத்தால் சுவாமியும் அமிசையையுடையவராய் விளங்குகிறார்; அத்தலத்தினாலும் அதில் எழுந்தருளியிருக்கிறசுவாமியினாலும் எண்ணிக்கையில்லாத எல்லா க்ஷேத்திரங்களுஞ் சிறப்பாய்விளங்கும்; ஆனதினாலே எல்லாத்தலங்களிலும் அதுசிறந்ததென்று திருவாய்மலர்ந்தருளினார். எ-று. (௰௨)

இதனால் எல்லாத்தலங்களும் உடலாகவும், அருணாசலத்தலம் முகமாகவும், அதிற் சுவாமி கண்ணாகவும் சொல்லப்பட்டது.

விசல ரிலைமெய் குளிர்ந்திடுங் கொடியின்
  வேரினீர் சொரிந்திடி னதுபோற்
பூசனை யருணை நகரிலே சிறிதாம்
  புரையற நடக்குமே யாகிற்
காசியே முதலத் தலமெலாம் பூசை
  கனம்பெற நடந்ததா மிலையே
யீசர்வா ழுந்தத் தலமெலாம் பூசை
  யியற்றிய னியற்றிடா திருந்தென்.

இ-ள். ஒரு கொடியினது வேரில்நீர்வார்த்தால் அக்கொடியும் அதிலிருக்கிற மணம்வீசுகின்ற புஷ்பங்களும் இலைகளும் குளிர்ச்சியையடையும். அதுபோல் அருணாசலத்தலத்தில் சுவாமிக்கு எவ்வளவாகிலும் பூசை குற்றமில்லாமல் நடக்குமானால் காசி முதலாகிய எல்லாத் தலங்களிலும் மேன்மையாகப் பூசை நடந்ததாகும். அத்திருவண்ணாமலையில் பூசை நடவாவிட்டால் மற்றத்தலங்களில் நடந்தாலென் நடவாவிட்டாலென் ஒருபயனுமில்லை. எ-று. (௬௩

நிலந்தொழு மருணா சலந்தனி லிருந்து
நெஞ்சினி லையமாய்ப் பிரிந்தோர்
தலந்தனை விரும்பி நடந்தவர் முன்செய்
தவங்களு மறங்களுந் தவறுக்
குலந்தனி லுதித்தோ ராயினும் புலையர்
குணத்தவ ராயினுங் கொடிய
ருலந்தவ ருயிரோ டிருக்கினு மதற்கோ
ருவமைசொன் னவர்க்குமீ தொக்கும்.

இ-ள். உலகத்தார் போற்றுகின்ற அருணாசலத் தலத்திலிருந்து இதைவிட உயர்ந்த தலங்கள் இருக்குமென்று மனதில் சந்தேகங்கொண்டு பிரிந்து ஒரு க்ஷேத்திரத்தை நாடி நடந்தவர்களுக்கு அவர்கள் அதற்குமுன் செய்யப்பட்ட தவங்களும், தருமங்களும், பிரயோசனப்படமாட்டா; அவர்கள் நல்லகுலத்திற் பிறந்தவர்களானாலும் நீசராவார்கள்; நல்ல குணங்களையுடையவர்களானாலும் கொடியகுணத்தராவார்கள். அவர்கள் உயிரோடிருந்தாலும் இறந்தவர்களாவார்கள்; அந்த அருணாசலத்துக்கு வேறொரு தலங்களை ஒப்பாகச்சொன்னாலும் இந்தத் தோஷங்களெல்லாம் உண்டாகும். எ-று. (௬௪)

என்றுதா னருணைச் சிறப்பெலா முனிவற்
கேதுவோ டெடுத்தினி தியம்பிக்
கன்றுமான் மழுவுஞ் சுரிகையுந் தரித்த
கடவுணன் கிருந்தன னவனைச்
சென்றுசென் றிறைஞ்சி நெக்குநெக் குருகிச்
சென்னிமேற் செங்கைவே ரோட்டி
யொன்றுமா னந்தப் பெருங்கட லிடைப்புக்
குணர்ச்சியாய் முனிவனீ துரைப்பான்.

இ-ள். இப்படி அருணாசலத்தின் பெருமையை யேதுவோடு முனிவர்களுக்கினிதாக எடுத்து அருளிச்செய்து, மான், கன்று, மழு, உடைவாள் இவைகளைத் தரித்த நந்திதேவர் களிப்புற்றிருந்தார் அந்த நந்திதேவரைப் பலதரம் வந்தனஞ்செய்து நெக்குவிட்டுருகிச் சிரசின்மேல் சிவந்த கைகளை நெடுநேரங் கூப்பி ஒன்றுபட்டவராய் ஆனந்த சமுத்திரத்தில் முழுகித் தன்னை மறந்தவராகிப் பின்பு ஞாபகம் வந்து இதனைச் சொல்லுவார் மார்க்கண்டேயர். எ-று. (௬௫)

முதலாவது,
திருநகரச்சருக்கம்
முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-௭௮.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

*திருமலைச் சருக்க வசனம்.

நந்தியந்தேவே! திருநகரச் சிறப்புக்களை யெல்லாங் கேட்டு ஆனந்த மடைந்தேன். திருமலையின் வரலாறுகளைக் கேட்க எளியேன் மனம் பெரிதும் அவாவுகின்றதென்று மார்க்கண்டேயமுனிவர் உரைக்க, திருநந்திதேவர் திருவாய்மலர்ந் தருளுவார். மார்க்கண்டேயரே! மகாசங்கார காலத்திலே சராசரங்கள் யாவும் பிரமனிடத்தில் ஒடுங்கும். அவ்விதியோன் மாயனிடத்தும், அவன் உருத்திரனிடத்தும், அவர் மகேசுரர் என்னும் அநந்த வேதநாயனிடத்தும், அவர் சதாசிவ மூர்த்தியிடத்தும், அவர் விந்துவினிடத்தும், அது நாதத்துவம், அது குடிலை யென்னும் மகாமாயையினிடத்தும், அது தத்பர சிவத்தினிடத்தும் ஒடுங்க, அந்தப் பரசிவப் பிரபுவே தானுவாக விளங்கும். மீளவும் உலகந் தோன்றுங்கால் ஒடுங்கியவாறே தோன்றப் பிரமன் தான் ஒடுங்கிய விட்டுணுவினிடத்து நின்றுந் தோன்றிப் பலவகைச் சிருட்டிகளையும் படைத்தான். முதலில் மரீசிமுதலிய எழு முனிவர்களும் பிரமனது மனத்தினின்றுந் தோன்றினர். தக்கன் வலக்காற் பெருவிரலினும், பிருகு மார்பினும், தருமதேவதை முகத்தினும் பிறந்தனர். அவர்களினின்றும் தேவர் முனிவர், அசுரர், கருடர், சர்ப்பங்கள், தேவப்பெண்கள், கந்தருவர், இராக்கதர், வானரர், கின்னரர், விலங்குகள், வசுக்கள் தாவர முதலிய யாவுந் தோன்றக்கண்டு பிரமன் அகங்காரங் கொண்டான். விட்டுணுவினிடஞ்சென்று, திருமாலே யானே பரப்பிரமம். உலகங்களெல்லாம் எமது படைப்பாகும். ஆங்காங்குள்ள உயிர்கள் யாவும் எம் படைப்பே. ஆகலால் எம்மைப் புத்திரனாக் கொள்ளாயே. யாம் படைக்கா விடின்

நீ யெங்ஙனம் காப்பாய். சுவரில்லாமற் சித்திரம் எழுதுவாருண்டோ? உன்றொழிலுக்கு வேறொருவரை நியமிக்கும் வல்லமை யெமக்குண்டு என்றுபலவாறுகூற, திருமாலுங் கோபத்தினால்பற்பல வீரமொழிகளைக்கூறி நாமே பிரமம் என்று அகங்கரித்தார். அதனால் இருவர்க்கும் போர்மூண்டுகொண்டது. உலகங்கள் பெருந்துன்பங்களுற்றன.

இதனையறிந்த தடங்கருணைப் பெருங்கடலாகிய சிவபெருமான் அக்கினிவடிவாக அவர்நடுவேதோன்றிக் கீழும்மேலும் ஓங்கிப் பரந்துநின்றார். அதனால் உலகங்களெல்லாஞ் சிவந்துதோன்றின. அச்சோதிவடிவத்தைக்கண்ட பிரமனும் விட்டுணுவும் பயந்து ஒதுங்கினின்றார். பின்னர்ச் சண்டையிடுவதையொழித்து, இச்சோதியுருவின் அடியையாவது முடியையாவது காண்பேம். கண்டவர் யாவரோ அவரே பரப்பிரமம் ஆவார் என்று ஒருவர்க்கொருவர் சொல்லியிசைந்தார். அப்போது பாம்பிற்படுத்துக்கொள்ளும் மாயவன் பன்றிவடிவெடுத்து நான் அடிதேடியறிவேன் என்று பூமியை அரைக்கணத்தில் ஆயிரங்காதந்தோண்டிக் கீழேசென்றான். பிரமன் அன்னப்பறவையுருவெடுத்து நான்முடியைத்தேடிவருவேனென்று அண்டமுகட்டை ஓர் அரைக்கணத்து ஆயிரங்காத தூரத்தைத் தாண்டிச்சென்று பறந்தான். திருமாலாகிய பன்றி பூமியைக் கடந்துசென்று, அதன்கீழுள்ள எழுலகையுந் துளைத்துப் போய், மாவலிவாழும் போகவதியென்னும் நகரத்தையுந் தாண்டி, ஆடகேசுர புவனத்தையும்பணிந்து துதித்து அப்பாலுஞ் சென்று அதன் அடியைக்காணப்பெறாமல் தன் இரண்டுகொம்புகளுந் தேயப்பெற்று, குளம்புகளும் முகத்தினுனியுந்தேய்ந்து வலிகுறைந்து தேடும் ஆசையுமற்றுப்போக ஆயிரந்தேவவருடந் தேடியுங்காணாமல்மெலிந்து, தெளிவுற்றுச் சிவன்செயலென்று பூமிக்குவந்தது.

பிரமனாகிய அன்னப்பறவை ஆகாயமுகட்டைக்கடந்து சென்று மேலுலகங்களையெல்லாம் உருவிப்போய்; ஆயிரந்தேவவருட

தேடிச்சென்றுங் காளகண்டச்சோதியின் முடியைக் காணாதாயற்று. பின்னும் நூறாயிரங்காததூரம்போய்ப் பார்த்தாலும்முதலிற்பார்த்ததுபோலவே எட்டப்படாதிருந்தது. அன்னப்பறவைக்குச் சிறகுகளெல்லாம் உதிர்ந்துபோயின. விசையும் அடங்கினது. துக்கமும் பெருமூச்சுமிகுத்தன. தனியே அன்னமாகிய பிரமன் ஆலோசிக்கின்றான். இச்சோதிவடிவைச் சிவபெருமானென்று அறியாதவனாயினேன். விட்டுணுவையாவது நட்புகொள்ளாதுபகைத்தேன். இவை எனது புத்திக்குறைவினாலும் பாவத்தினாலுமே. இவ்வளவுதூரம்வந்தும் முடியையறியாமற்போனதோ? பொய்ச்சாட்சிசொல்வதற்கும் ஒருவருமில்லையே என்செய்வேனென்று வருந்தும்போது, தாழம்பூவொன்றுவருதல்கண்டு அதனைப்பிடித்தான். என்னைவிட்டுவிடு என்றுகூற, பிரமன் தாழைமலரேயெங்கிருந்து வருதியென்றுகேட்க. விதியோய்! பரமசிவனாரது திருமுடியினின்றுந்தவறிவிழுந்தேன். நாற்பதினாயிரம் வருடமாகியும் இவ்வளவுதூரந்தான்வந்தேன் இன்னும் எவ்வளவுதூரம்போகவேண்டும்பூமியையடைதற்கு எனக்கேட்டது. பிரமன்சொல்வான். நான் ஆயிரம்வருடம்பறந்து இவ்வளவுதூரந்தான் வந்தேன். அதுநிற்க எனக்கு ஒருதவிசெய்யவேண்டும். விட்டுணுவும்நானும் அடிமுடிதேடுவதாகச் சபதஞ் செய்துகொண்டேம். நான் முடியைக் கண்டதாகச் சாட்சி சொல்லவேண்டும். அதுபாவமாகாது என்றுவேண்டிய உபாயமொழிகளைச்சொல்லிச் சம்மதிக்கப்பண்ணி விரைவாகவிட்டுணுயிருக்கும் பூமியிடத்தில் வந்துசேர்ந்தான். தாழம்பூவிட்டுணுவாகியபன்றியைநோக்கி, பிரமன்சிவனதுமுடியைப்பார்த்தான். நானும் அங்கிருந்துவருகிறேனென்று பொய்ச்சாட்சிசொல்லிற்று. அக்கணத்தில் அக்கினிமலைபடீரென்றுவெடித்தது. உலகத்துள்ளவுயிர்களெல்லாமொடுங்கின. சிவபெருமான்சோதியினின்றுந்தோன்றிப் பிரமனை நீசொல்லியசொல் நன்றுநன்று என்றுநகைத்தருள, பிரமன் இறந்தவர்போலாகி விழுந்தான். திருமால் வணங்கினர், பாடினார்,

துதித்தார். அவ்விட்டுணுவுக்குக் கேட்டவரங்களையெல்லாங்கொடுத்தருளி, மூர்ச்சை தெளிந்து எழுந்து நாணமும் அச்சமுங் கொண்டு துதித்த பிரமனை நோக்கி, உனக்குப் பூமியிலே பூசையுங் கோயிலு மில்லாமற் போகக்கடவன. தாழைமலரே! பொய்ச் சாட்சி கூறினமையால் இன்று முத னின்னைத் தீண்டேம் என்று சபித்தருளினார், பிரமன் அழுது தேம்பித் தேம்பித் துதித்தான். சிவபெருமான் திருவுளமிரங்கி, விதியோய்! அஞ்சாதே பிரமணர்க்குச் செய்யப்படும் பூசை நினதாகக்கடவது. முன்போலப் பூமியைப் படைக்குதி என்று, திருவாய்மலர்ந் தருளுவார். பிரமவிட்டுணுக்களே! இத்தலத்தைச் சுற்றி மூன்று யோசனை தூரம் சுத்த ஞானத் தலமாகுக. இச்சோதி மலையாகும் இதற்கு அருணை எனப் பெயர் வழங்கப்படுக. இதனை வழிபடுவோர் யாவர்க்குமுற்ற துன்பங்களை யொழித்துப் பேரின்ப முத்தியைக் கொடுப்பேம். பூமியிற் பல பிறவிகளை யெடுத்துத் தவஞ் செய்தார்க்கு இத்தலத்தில் பிறக்கும் பெருமையை யளிப்பேம். இங்கு ஓர் தானஞ் செய்யின் ஆயிரமாக விருத்தியாகுக, இத்தலத்தில் பாவமே விளையாது. இவற்றிற் சந்தேக முள்ளார்க்கு முத்தி கிடைக்காது என்றார். உடனே சோதி வடிவு மலையாக குறுகி நின்றது இவ்வொளியினால் எங் கண்கள் வருந்துவதால் மலைவடிவாக இருக்கவேண்டும். அதனுச்சியில் ஒருபிரகாசங் காட்டியருள வேண்டுமென்றார் பிரமவிட்டுணுக்கள்.

அவ்வாறே கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரத்தினத்தில் ஒருபிரகாசங் காண்பிப்பேம் அதனைத் தரிசித்தவர்க்கு எல்லாப் பெருமையும் எல்லா வின்பமும் கிடைக்கும். அவர்களுக்கன்றி அவரது கோத்திரத்திற் பிறந்த இருபத்தொரு தலைமுறைச் சந்ததியிற் பிறந்தவர்கள் யாவர்க்கும் முத்தி யளிப்பேம் இறப்பினையும் பிறப்பினையும் நீக்குதற்கு மருந்தாகலால் மலை மருந்து என்று பெயர்பெறுக. சிவப்பு நிற முடைமையாலும், உலகைச் சிவந்த

திருமலைச் சருக்க வசனம்.

[illegible]யாக்கினமையாலும் அருணாசலம், அருணைகிரி என்று வழங்கப்படுக. அருணாசலம் என்று ஒருதரங் கூறினால் பஞ்சாக்கரமந்திரத்தை மூன்றுகோடிதரம் உச்சரித்த பலங்கிடைக்கும் என்று அருளினார். பிரம விட்டுணுக்கள், சுவாமீ! இவ்வாறு மலைவடிவானால் அபிடேகம், மலர்மாலை, கந்தம் முதலியன கொண்டு பூசை செய்யத் தக்கவர் யாவர். ஆகலான் கீழே இலிங்க வடிவாக எழுந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அவ்வாறு ஆலகண்டப் பெருமான் ஆயினார். அதுகண்டு சந்தோஷித்து தேவதச்சனைக் கொண்டு, கோயில், மண்டபம், தூபி, கோபுரம், மதில்கள் செய்வித்து முந்நூறு தீர்த்தங்களையு முண்டாக்கிப் பூசித்து மேலான பதவி பெற்றார்கள். சிவபெருமான் இம்மலை யுருவாய பின்னர்க் கயிலை மலையின் விருப்பு நீங்கிற்று. மற்றைய தலங்களும் இதற்கீடல்ல என்று திருநந்தி தேவர் திருமலையின் சிறப்புக்களை எடுத்துரைத்தார்.

திருமலைச் சருக்க வசனம்

முற்றிற்று.



சிவபிரான் முடியையும், அடியையுங்காணப் பிரமன் அன்னமாயும், விட்டுணு வராகமாயுந்தேடி யலுத்திருக்க, கயிலையி னின்று தவறிய கைதைப் பிரமனுக்காகப் பொய்சொல்லக் கைதைக்கும் பிரமனுக்கும் சாபம் நேரிட்டது—8.



உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது,

திருமலைச் சருக்கம்.

* கலிநிலைத்துறை.

எந்தை யேயரு ணந்தியே யடியவர்க் கெளியாஞ்
சிந்தை யானது மகிழ்ந்தன னருணையின் சிறப்பா
லந்த மாநக ரிடத்திலே சிவனழல் வடிவாய்
வந்த வாறுட னதுமலை யாகிய வகையும்.

இ-ள். அருணாசலத்தின் மகிமையைக் கேள்வியுற்ற மார்க்கண்டேயர்சொல்லுவார்; எம்முடைய ஆண்டவரே! அடியேனுக்கு அருள்செய்த நந்திதேவரே! அடியார்க்கெளியவரே! நீர் அருளிச்செய்த திருவண்ணாமலையென்னும் தலத்தின் மகிமையினால் மனங்களிப்படைந்தேன்; அப்படிப்பட்ட தலத்தினிடத்திற் பரமசிவன் அக்கினிசொரூபமாய்த் திருவுருக்கொண்டதும், அதன்பின்பு மலையுருவமானதும். எ-று. (க)

---

* 'நெடிலடி நான்காய் நிகழ்வது' கலித்துறை என்பதிலக்கணம்.

அம்ம லைச்சுட ரடிதலை தெரிகலா தயன்மால்
விம்ம லுற்றது மவர்க்கருள் செய்ததும் விளம்பாய்
கைம்ம லைக்கடக் கரியுரி புனைந்திடுங் கயிலைச்
செம்ம லைத்தொழுஞ் செல்வனே யெனவவன் செப்பும்.

இ-ள். அந்த அக்கினிமலையின் அடியும் முடியும் அறியக்கூடாமல் பிரமதேவரும், வ[illegible]ர்த்தியும், வருத்தப்பட்டதும், பின்பு சுவாமி அவர்களுக்கு அநுக்கிரகஞ் செய்[illegible]ளவளம்பற்ற வேண்டும், கையுள்ளமலையை ஒத்ததாய் மதத்தையுடைய யானையின் தோலைத்தரித்தருளிய கைலாயவாசகராகிய பரமசிவனை வணங்கும்படியான செல்வத்தையுடையவரேயென்றுசொல்ல, அதற்கு நந்திதேவர் சொல்லத்தொடங்கினார். எ-று. (௨)

பஞ்ச பாதக மொருவனப் பதியிலே பண்ண
நெஞ்சி னினைத் திடுகினு நினைத்ததே பரமாய்த்
தஞ்ச மாகிய முத்தியா மெனமறை சாற்று
மஞ்சொ லாலது மொழிந்தபேர்க் கென்னபே றரிதே.

இ-ள். ஒருவன் அந்த அருணாசலத்தலத்தில் பஞ்சபாதகங்களைச் செய்யவேண்டுமென்று நினைத்தாலும், அப்படி நினைந்ததே மேற்பட்டபுண்ணியமாகி அதனால் பற்றுக்கோடாகிய முத்தியுண்டாகுமென்று வேதங்கள் முறையிடும்; அன்பையுண்டாக்கும்; நல்லசொற்களினால் தோத்திரஞ்செய்தவர்களுக்கு என்னபேறு கிடைக்கமாட்டாது. எ-று. (௩)

ஆகையா லுமக் கன்றியே யெமக்குமுண் டதிகஞ்
சோக மோகங்க டவிர்ப்பவ னொருபரஞ் சுடராய்
மாகமூடுற வளர்ந்தது மாலயற் காகப்
போக லிங்கமென் றனது மொருவகை புகல்வேன்.

இ-ள். ஆனபடியினாலே மார்க்கண்டேயரே? இந்தமஹான்மியத்தைக் கேட்கின்ற உமக்கேயல்லாமல், எனக்கு அதிக பலமுண்டாம்; துக்கத்தையும் மோகத்தையும் நீக்குகிற சிவபெருமான் ஒப்பற்றபெரிய சோதிவடிவமாய்ப் பிரமவிட்டுணுக்களுக்காக ஆகாசம் அளாவிவளர்ந்தும், யாவருக்கும் போகத்தைக் கொடுக்காநின்ற இலிங்கமென்று சொல்லும்படி திருவுருக்கொண்டதும் எனக்குத் தெரிந்த அளவிற் கொஞ்சம் சொல்லுகின்றேன். எ-று. (௪)

ஒடுங்கு நாளினி லயனரி யுருத்திரன் மகேச
னொடுஞ்ச தாசிவன் விந்துநா தஞ்சத்தி நெறியே
யடங்கி டும்பர சிவத்தினிற் பரசிவ மனைத்துங்
கடந்த தத்துவ முடிவிலே நின்றது கருதி.

இ-ள். சர்வ சங்கார காலத்தில் முறைப்படி சகல உயிர்களும் பிரமனிடத்தி லொடுங்கிப் பிரமதேவர் விஷ்ணுவினிடத்திலொடுங்குவார்; விஷ்ணு உருத்திரனிடத்தி லொடுங்குவார்; உருத்திரன் மகேசுரனிடத்திலொடுங்குவார், மகேசுரன் சதாசிவனிடத்திலொடுங்குவார்; சதாசிவன் விந்துவினிடத்திலொடுங்குவார்; விந்துநாதத்தினிடத்திலொடுங்கும்; நாதம் சத்தியினிடத்திலொடுங்கும்; சத்தி பரமசிவத்திலொடுங்கும்; அந்தப்பரமசிவம் திருவுளங்கொண்டு எல்லாங்கடந்த தத்துவமுடிவிலே நின்றது. எ-று. (௫)

பரசி வத்தினில் வருபரா சத்திபாற் குடிலை
விரவி டும்பர தத்துவ மடைவிலே விரிந்த
மருவு மைவரு மொடுங்கிய முறையிலேவந்தா
ரரிம கன்படைத் திடுவது நினைந்தன னகத்தில்.

இ-ள். அப்படியெல்லாம் ஒடுங்கினகாலத்தில் தனியாய்நின்ற பரமசிவம், உலக முண்டாகவேண்டுமென்று திருவுளங் கொண்ட அளவில், அந்தச் சிவனிடத்திற்றோன்றிய பராசத்தியினிடத்தில்

குடிலை என்னுஞ்சத்திதோன்றியது; அதில் பெருமையமைத்தமற்றதத்துவங்கள் முறையே உண்டாயின; பஞ்சகிர்த்தியங்களுக்குரிய பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேச்சுரன், சதாசிவன் முன்னே ஒடுங்கிய முறையே உண்டானார்கள்; விஷ்ணுவினுடைய புத்திரனாகிய பிரமாவானவர் உலகத்தைச் சிருட்டிப்பதற்கு மனதில் எண்ணினார். எ-று. (௬)

மரிசி யங்கிரன் புலத்தியன் புலகனென் மறையோர்
கிருது வத்திரி சனபதி யெழுவருங் கிளைத்தா
ருரிய தக்கனும் வலப்பதப் பெருவிர லுதித்தான்
பிருகு மார்பினு மறத்திறை முகத்தினும் பிறந்தார்.

இ-ள். அப்படிப் பிரமன்நினைத்தவுடனே, மரீசி, அங்கிரர், புலத்தியர், புலகர், கிருது, அத்திரி, சனபதி என்கிறவிருடிகளெழுவர்களும்பிறந்தார்கள்; தக்கன் வலக்காற்பெருவிரலிற் பிறந்தனன்; பிருகுமார்பிடத்திற்பிறந்தான்; தருமதேவதை முகத்திற்பிறந்தது.

உன்னு மைந்தரின் மரீசிபாற் காசிப னுதித்தான்
பன்னு தக்கனு * மறுபது பெண்களைப் பயந்தா
னன்ன காசிப னவர்பதின் மூவரை யணைந்தான்
முன்ன ளாகிய வதிதிபா லிமையவர் முளைத்தார்.

இ-ள். பிரமனிடத்திற் பிறந்தபிள்ளைகளாகிய எழுவரில் மரீசிரிஷியினிடத்திற் காசிபரிஷிபிறந்தார்; தக்கனென்பவன் ஐம்பது பெண்களைப்பெற்றான், அந்த ஐம்பது பெண்களில் பதின்மூன்று

பெண்களைக் காசிபர் விவாகஞ்செய்தார்; மூத்தவர்களாகிய அதிதி வயிற்றில் முப்பத்து முக்கோடி தேவர்களும் பிறந்தார்கள். எ-று.

இருமை சேர்ந்திடு மிரணிய விரணியாக் கர்களைத்
தெரிய வீன்றனள் சிறப்புறுந் திதியெனு மிளையா
டருண மைந்தரி லிரணியன் பிரகலா தனனோ
டருமை மைந்தர்க ணால்வரைப் பயந்தன னவருள்.

இ-ள். அதன் பின்பு அதிதிக்கு இளையவளாகிய சிறப்புள்ள திதியென்பவள் இரணியன் இரணியாக்கனென்னும் இரண்டு பேரையும் பிரசித்தமாகப் பெற்றாள்; இந்த இருவரில் இரணியன் பிரகலாதன், அனுகிலாதன், கிலாதன், சங்கிலாதன் என்றும் நான்கு பிள்ளைகளைப் பெற்றான். எ-று. (௯)

பிரக லாதனன் றவத்தினான் மூவரைப் பெற்றா
னருளு மைந்தரில் விரோசனன் மாவலி யளித்தான்
பரவு மாவலி வாணனென் றொருவனைப் பயந்தா
னான ருச்சனை புரிந்தவ னயன்றொழ விருந்தான்.

இ-ள். அவருட் பிரகலாதனன் தவத்தினால் * மூன்றுபிள்ளைகளைப் பெற்றான்; அந்த மூவரில் விரோசனனென்பவன் மாவலி என்பவனைப் பெற்றான்; மாவலி வாணாசுரனைப் பெற்றான்; அவ்வாணாசுரன் பரமசிவனைப் பூசித்துப் பிரமன் தொழும்படியான வாழ்வுபெற்றிருந்தான். எ-று. (௧0)

தனுவ லித்தவன் சம்பரன் முதலினோர் பதின்ம
ரனைய தானவர்ப் பெற்றனன் சிங்கிகை யணங்கும்
பாளியி ராகுவே முதலொரு நால்வரைப் பயந்தாள்
பினைய ளாங்கொரு மூன்றுபே ரசுரரைப் பெற்றாள்.

---

* அறுபதுபெண்களுள் தருமனுக்குப் பதின்மரையும், காசிபர்க்குப் பதின்மூவரையும் சந்திரனுக்கு இருபத்தெழுவரையும்; அரிட்டநேமிக்கு நால்வரையும், வெகுபுத்திரனுக்கும், அங்கிரசுக்கும் இவ்விருவரையும், பிருசாசுவனுக்கு இருவரையும் விவாகஞ் செய்துகொடுத்தான்.

* மூவராவார்—சிபி, பாட்கலன், விரோசனன்.

இ-ள். மலைகளினுடைய சிறகை யறுப்பதற்குத் தேவேந்திரனுக்குத் தன் முதுகெலும்பைக் கொடுத்துத் தேகத்தை விட்டவராகிய ததீசிரிஷி என்பவர் சம்பரன் முதலாகிய பத்து அசுரர்களைப் பெற்றார்; அப்பத்துபேரில் சிங்கிகை என்பவள் இராகு முதல் நான்கு பிள்ளைகளைப் பெற்றாள்; அவளுக்கிளையவள்மூன்று பேரசுரரைப் பெற்றாள். எ-று. (கக

கால கேயர்க ளறுவரைப் பயந்தனள் காலை
சால நீள்சிறைக் கருடனு மருணனுந் தவிர
நாலு பாலரைப் புதல்வரா வினதையு நயந்தா
ளால நேர்விழிக் கத்துரு பணியெலா மளித்தாள்.

இ-ள். காலை என்பவள் காலகேயர்கள் ஆறுபேரையும் பெற்றாள்; மிகவும் நீண்டிருக்கிற சிறகினையுடைய கருடன் அருணனோடுகூட நான்கு பிள்ளைகளை வினதை என்பவள் பெற்றாள்; விடத்தையொத்த கண்களையுடைய கத்துரு என்பவள் பாம்புகளெல்லாவற்றையும் பெற்றாள். எ-று. (க

அரிட்டை யென்பவ ளிடத்திலே யரம்பையே முதலா
யிரட்டி மங்கையர் பிறந்தன ரிலங்கிளை முனிவ
னருட்ட வத்திலெண் ணிரட்டிகந் தருவரை யளித்தா
ளருட்டு வாள்விழிக் கபிலையாற் பதின்மர்வந் துதித்தார்.

இ-ள். அரிட்டை என்பவளிடத்தில் அரம்பை ஊர்வசி முதலான பெண்கள் பிறந்தார்கள்; விளங்காநின்ற இளை என்பவள் முனியினுடைய கிருபையினாலே பதினாறு வகையாகிய கந்தருவர்களைப் பெற்றாள்; வாள்போன்ற கண்களையுடைய கபிலையினிடத்தில் பத்துப்பிள்ளைகள் பிறந்தார்கள். எ-று. (கங

அங்கி ரர்சன பதிகள்காந் தருவரை யளித்தார்
தங்கு மத்திரி கதிர்மதி புலத்தியன் றனையர்

பொங்கி ராக்கதர் வானரர் கின்னரர் புலக
னங்கு மைந்தர்கிம் புருடர்பின் விலங்கையு மளித்தான்.

இ-ள். அங்கிரர் சனபதி என்கிற இருவரும் காந்தருவரைப் பெற்றார்கள்; அத்திரி என்பவர் சூரியசந்திர ரிருவரையும் பெற்றார்; புலத்தியர் இராக்கதர், வானரர், கின்னரர் இவர்களைப் பெற்றார்; புலகரிஷி என்பவர் கிம்புருடரையும், மிருகங்களையும்பெற்றார். எ-று. (கச)

தருண ராகிய வசுக்களைச் சனபதி தந்தான்
பிருகு வென்பவன் கவியுடன் சவுனரைப் பெற்று
னிருவ ரோடுசெந் திருவையும் பிருகுபெற் றெடுத்தான்
பருவ மைந்தரிற் கவியுமோ வெள்ளியைப் பயந்தான்.

இ-ள். சனபதி என்பவர் பின்னும் தருணம் பொருந்திய அஷ்டவசுக்களைப் பெற்றார்; பிருகு என்பவர் கவி என்பவனையும், சவுனகரையும் பெற்றார்; இவ்விருவரைப் பெற்றது மல்லாமல், பின்பு இலக்குமியையும் பெற்றார்; அப்பருவம் பொருந்திய பிள்ளைகளில், கவி என்பவர் சுக்கிரனைப் பெற்றார். எ-று. (கரு)

பரிய தானதன் றேவிமூக் கிரண்டினும் பரிதி
யுரிய வாண்பரி யாகியிந் திரியத்தை யூற்ற
வரிசை பற்றிய மருத்துவ ரிருவரும் வந்தார்
விரிச ராசரம் பிறந்தன பலபல விதமாய்.

இ-ள். சூரியன் தன் மனைவியைச் சேருகிறதற்கு எத்தனப்பட்டபோது, அவளதற்குப் பொருந்தாமல் பெண் குதிரையாயோடினாள்; சூரியன் ஆண் குதிரையாய்த் துரத்த அவள் திரும்பிப் பார்த்தாள், அப்போது சூரியன் தனது பெண்சாதியின் இரண்டு மூக்கிலும் இந்திரியத்தை ஊற்ற, வரிசையாகிய அசுவினி தேவர்களிருவர் பிறந்தார்கள்; அதன் பின்பு விரிந்த * சரமும் அசரமும் அநேக விதமாயுண்டாயின. எ-று. (கசு)

---

* சரம்-நடையுள்ளனவும், அசரம்-நடையில்லனவுமாம்.

* கலி விருத்தம்.

கண்டுலகெ லாகமது கற்பனைக ளென்றே
புண்டரிக வேதியன் மதத்தரி புரத்திற்
றண்டியெதிர் கொண்டுபகை தங்கவிசை வண்டார்
வண்டுளப மாயவனை வைதுரை வழங்கும்.

இ-ள். இப்படி எவற்றையும் உண்டாக்கிய பிரமதேவன் இந்த உலகெல்லாம் நம்முடைய சிருட்டியினா லல்லவோ உண்டாயின வென்று அகங்காரங்கொண்டு, அதனால் வைகுந்தத்தில் வலிதிற் போய் எதிர்த்துப் பகை கொள்ளும்படி சங்கீதம் பாடுகின்ற வண்டுகள் சூழ்ந்த துளப மாலையைத்தரித்த விட்டுணுவைப் பார்த்து அவமதித்துச் சிலவார்த்தைகள் சொல்லத்தொடங்கினான். எ-று.

எழுலக மேழுபில மேழு புயலோரே
ழாழிமுத லேழுகிரி யாம்வகை யியற்றி
வாழுமுயிர் யாவையும் வகுத்திட மனத்தாற்
பாழிகொண் மரீசிமுதன் மைந்தர்கள் படைத்தேன்.

இ-ள். விட்டுணுவே? பதினான்கு லோகங்களையும், கறுத்த மேகங்களையும், சத்த சமுத்திரங்களையும், முதன்மையாகிய சத்த குலபருவதங்களையும் உண்டாகும்படி மனத்தினாற் படைத்து இப்பொழுதுவாழ்கின்ற எல்லாவுயிர்களையும் உண்டாக்க வலிமையமைந்த மரீசிமுதலிய விருடிகளைப் பெற்றேன். எ-று. (௧௮)

மைந்தரது மைந்தர்கள் குருக்களுடன் வானோர்
சந்திரன் முதற்பெரிய தானவர்க ளானோர்
கந்திருவர் கிம்புருடர் சித்தர்கண நாத
ரிந்திரன் முதற்றிசைக ளெட்டினு மிருப்போர்.

இ-ள். விட்டுணுவே? என்னுடைய பிள்ளைகளுடைய பிள்ளைகள் குருவாகிய பிரகஸ்பதியுடனே எல்லாத்தேவர்களும், சந்திர சூரியர்களும், அசுரர்களும், கந்தருவர், கிம்புருடர், சித்தர், கணநாதர்களும், தேவேந்திரன்முதலாகிய திக்குப்பாலகர் எட்டுப்பேருமாயிருக்கிறார்கள். இவர்களெல்லோரும் என்னாலல்லவோ உண்டானார்களென்று பின்னுஞ்சொல்லுவார் பிரமதேவர். எ-று. (௧௯)

எஞ்சுதலி லாவிறைவ னென்பதனை யென்பேர்
கஞ்சனெனு மைந்தனை மறந்திடு கரத்தா
லஞ்சலில் படைப்பொழியி லெப்படி யளிப்பாய்
செஞ்சுவ ரிலாதெழுது சித்திரமு முண்டோ.

இ-ள். குறைவில்லாத சகலத்துக்கும் நானே கர்த்தா வென்பதையும், என்பிள்ளைதான் பிரமனென்பதையும் மறந்துவிடு; நான் கையினாலே உலகத்தைப் படைக்காவிட்டால், நீ எப்படிக் காப்பாற்றுவாய்! சுவரில்லாமலெழுதுகிறசித்திரமுமுண்டோ! வென்று பின்னுஞ்சொல்லுவார் பிரமதேவர். எ-று. (௨௦)

அளித்திடு களிப்பினை யகத்தினில் விடாயேல்
வெளிப்பட வொருத்தனை யளித்திட விதிப்பேன்
குளிர்ச்சிய கடற்கிடை குதித்திட தனுள்ளே
யொளித்திடு சுரத்திர ளுனைச்சருவு முன்னே.

இ-ள். விட்டுணுமூர்த்தியே? சகலத்தையும் இரட்சிக்கின்றோமென்கிற மதத்தைவிட்டுவிடு; நீ விடாமற்போனால், உன் உத்தியோகத்தைநீக்கி மற்றொருவனையுண்டாக்கி இரட்சிக்குந்தொழிலுக்கு நியமித்துப்போடுவேன்; நம்முடைய புத்திரபௌத்திரர்களாகிய தேவர்கூட்டங்கள்வந்து உன்னைக்கொல்லும்படிவளைத்துக் கொள்ளுவதற்குமுன்னே திருப்பாற் கடலுக்குள்ளே குதித்து ஒளித்துப்போவென்று சொன்னார்பிரமதேவர். எ-று. (௨௧)

---

* "அளவடி நான்கின் கலிவிருத்தம்மே" என்பதிலக்கணம்.

வித்தக முனிப்பிருகு விட்ட முனிவாலே
பத்துரு வெடுத்தனை பகுத்தறிகி லாயோ
வத்தனை யுடற்களு மமைத்தபடி யாலென்
கைத்தலமு மிப்படி கறுத்தபடி பாராய்.

இ-ள். ஞானசொரூபியாகிய பிருகுரிஷியிட்ட சாபத்தினால் பத்துதரம் பூமியில் பிறந்தாய்; நீ அதை பகுத்தறிய வில்லையோ அப்படி நீபிறந்தபோதெல்லாம் அவ்வளவுபெரியவுனது உடல்களை யெல்லாம் படைத்துப்படைத்து என்கைகள்காய்ப்பேறி இப்படிக் கறுத்துப்போயிற்றுபாரென்று பின்னுஞ்சொல்வாராயினார். எ-று.

உந்திமல ரோனென விகழ்ச்சியுரை யாதே
முந்தவொரு தூணிடை முளைத்தனை யுனக்குத்
தந்தையென வோவலது தாயெனவோசொல்
செந்தழல் பிறந்துகிளை தீய்ப்ப தறியாயோ.

இ-ள். ஓ விட்டுணுவே? நம்முடைய நாபிக்கமலத்தினால்தான் வந்தானென்று நிந்தனை சொல்லாதே; முன்னாலேநீ ஒருதூணினிடத்திலே பிறந்தாயே; அந்தத்தூணை உனக்குத் தகப்பனென்று சொல்லட்டுமோ! அந்தத் தூண் உனக்குத் தந்தையானால் எனக்கு நீ தந்தையாவாய்; செக்கிறம்பொருந்தியநெருப்பு மூங்கிலினிடத்திலேபிறந்து மூங்கிலைத்தானே கொளுத்திப்போகிறதை அறியாயோ! அப்படி உன்னிடத்திலே நான்பிறந்தாலும் உன்னை அழித்துப்போகிறேனென்றார் பிரமதேவர். எ-று. (உ௩)

வேதனிவை சொற்றன கொடும்படை வெதுப்பிக்
காதிடை துளைத்தனல் புகட்டின கடுப்பக்
கோதமொ டெழுந்தபுகை கொண்டநகை கொண்டே
மாதவன் மதித்தனன் மறுத்திவை யுரைப்பான்.

இ-ள். பிரமன் இப்படிச்சொன்னவார்த்தைகள் விட்டுணுவுக்கு இரண்டுகாதிலும் வேலாயுதத்தைப் பழுக்கக்காய்ச்சித் தொளைக்கவிட்டு உள்ளேசெலுத்தியநெருப்புப்போல் தகிக்க மிகுந்தகோபங்கொண்டு புகையெழும்பும்படியாகநகைத்து இவனுக்கு இந்த அகங்காரம்வந்தது எந்தவிதத்தினாலேயென்று ஆலோசித்துச் சில வார்த்தைகளைச்சொன்னார் விட்டுணுமூர்த்தி. எ-று. (உ௪)

வந்தவழி தன்னையு நினைத்திலை மனத்தென்
னுந்தியுன தன்னையென வுன்னுதலை யில்லாய்
தந்தைசிறு மைந்தர்பிழை தன்னையுணா ரென்
றிந்தவுரை சொல்லினை யிகழ்ந்தது பொறேனே.

இ-ள். பிரமாவே? நீவந்தவழியையும் நினைத்தாயில்லை! என்னுடைய நாபியை யுனதுதாயென்று ஆலோசிக்கவும் இல்லை; தந்தைகளாயிருக்கிறவர்கள் பிள்ளைகள்செய்த பிழையை ஒருகுற்றமாகநினையார்களென்று இந்தவார்த்தை சொல்லினையோ! இனிமேல் இப்படி பொறுக்கமாட்டேனென்று பின்னுஞ்சொல்லுவார் விட்டுணுமூர்த்தி. எ-று. (உ௫)

கன்று மதுவுங் கைடவப்பகடு தானு
மென்றனைய ராகவு மிழந்துயிர் குடித்தேன்
மன்றவொரு தீமைசெயின் மைந்தனென வுண்டோ
வன்றியுட னேனையு மறுத்தெரிகி லாரோ.

இ-ள். கோபத்தையுடைய மதுவும், யானைபோன்ற கைட்வனும் எனக்குப்பிள்ளைகளல்லவா! என்னையிகழ்ந்து எதிர்த்தபடியினாலே கொன்றுவிட்டேன்; தன்னைபெற்ற ஒரு தீங்குசெய்தால் மகனென்று பார்க்கக்கூடுமோ! அஃதல்லாமல் தேகத்திலே ஒரு கட்டிகண்டால் அதையறுத்தெறிந்து சொஸ்தப்படுத்திக் கொள்ளாமலிருக்கின்றார்களோ மனிதர்கள். எ-று. (உ௬)

பித்தனுனதோர்தலை பிடுங்கியெறி போதி
லத்தலை நடிக்கென வமைக்கவிதி யில்லா
யெத்தலைவ னென்பதனை யித்தகைமை கொண்டோ
பைத்தலை யராமுடிகொள் பாரிடம் விதித்தாய்.

இ-ள். ஓபிரமனே? பயித்தியக்காரனாகியசிவன் உன்னுடைய தலைகளிலொன்றைப்பிடுங்கி எறிந்தகாலத்தில், அந்தத் தலையை மறுபடியுண்டாக்கிக்கொள்ள வகையில்லை; உன்னை எப்படித்தலைவனென்றுசொல்லுகின்றது; இந்தத்தலையைக்கொண்டுதானோ படத்தையுடைய ஆதிசேடன் முடியிலிருக்கின்ற பூமியைப் படைத்தாயென்றார் விட்டுணுதேவர். எ-று. (உஎ)

மச்சவுரு வங்கொடு மறைத்தொகுதி தந்தேன்
விச்சையுள தானவரை வென்றுயிர் குடித்தே
னச்சுமர மாமெலினும் வைத்தமர மொன்றே
யச்சமுறு கின்றன னழிக்கவரி தென்றே.

இ-ள். பிரமனே? சோமுகாசுரன் உன்னிடத்தில்வேதங்களைப்பிடுங்கிக்கொண்டுபோனபோது, நான்மச்சாவதாரங்கொண்டு அவ்வசுரனைக்கொன்று வேதங்களை வாங்கித்தந்தேன்; அஃதல்லாமல் சாமர்த்தியமுள்ள அநேக அசுரர்களைக்கொன்று தேவர்களோடு உன்னையுங் காப்பாற்றினேன்; எட்டிமரமானாலும் தான்வைத்த மரமாகவிருந்தால் வெட்டார்கள்; அதைப்போல பிள்ளையான உன்னைக்கொல்லக்கூடாதென்று பயப்படுகிறேனென்றார் விட்டுணு. எ-று. (உஅ)

என்றொருவ ருக்கொருவ ரெத்தனை யுரைத்தார்
கன்றினர் புயத்தின்மிசை கைத்தல மடித்தார்
நின்றுல குதித்தனர் நெருக்கினர் நிமிர்ந்தார்
துன்றிய கனற்பொறி சுருக்கெழ விழித்தார்,

இ-ள். இப்படி ஒருவர்க்கொருவர் எத்தனை வார்த்தைகளையோசொல்லிக் கொண்டிருந்தார்கள்; கோபித்துக் கொண்டு புஜத்தின்மேல் கைகளாலே அடித்துக் கொண்டார்கள்; நின்று பூலோகத்தில் குதித்தார்கள்; நெருங்கினார்கள்; நிமிர்ந்தார்கள்; நெருப்புப்பொறி நெருக்கமாய்விழ சுறுக்கெனக் கண்களை விழித்தார்கள். எ-று. (உகூ)

வெற்புகள் பொடித்தன வெடித்தது கடாகம்
பற்பல சுடர்க்கதிர் பனிக்கதி ரொளித்த
சர்ப்பமு நெளித்தது தலைச்சுமை பொறாதே
கற்பமுடி வென்றமரர் கண்களை யிமைத்தார்.

இ-ள். பிரமதேவரும், விட்டுணு மூர்த்தியும், சண்டை செய்கிறபோது மலைகளெல்லாம் பொடியாய்ப் போயின; அண்ட கடாகம் பளீரென்று வெடித்தது, பற்பல கிரணங்களை யுடைய சந்திர சூரியர்கள் ஒளித்தார்கள் ஆதிசேஷன் தலைச்சுமை பொறுக்கமாட்டாமல் உடல் நெளித்துக் கொண்டான்; கற்பகாலம்வந்து உலகமழியப் போகின்றதென்று (இமையாநாட்டமுடைய) தேவர்கள் கண்களை இமைத்துக் கொண்டார்கள். எ-று. (௩0)

உடுக்கண முகிற்கண முதிர்ந்த வுலகெல்லா
மடுக்களில் விழுந்தன வெழுந்தன பராக
மடக்கின பகீரதிமுன் னானநதி யெல்லாத்
திடுக்கொடு முழங்கின திசைக்கரிக ளொட்டும்.

இ-ள். நக்ஷத்திரக் கூட்டங்களும், மேகக் கூட்டங்களும் உதிர்ந்தன; உலகமெல்லாந் தூண்பங்களோடு அடுக்குக் குலைந்து விழுந்து தூளெழும்பின; கங்கை முதலான நதிகளெல்லாம் தண்ணீரில்லாமல் வற்றிப்போயின; அட்டதிக்கிலு மிருக்கிற யானைகள் திடுக்கிட்டுப் பயந்தன. எ-று. (௩க)

மேலினி தெடுத்தெறிவர் வீழ்வர்கடி தோடிக்
கோலியெதிர் குத்துகென நின்றிடுவர் குத்திச்
சாலமடி தொட்டளவில் சாரிகை திரிந்தார்
மாலையு மிருட்டும்வல மாய்வருதன் மான.

இ-ள். ஒருவரை யொருவர் மேலே யெடுத்தெறிவார்கள் கீழே விழுவார்கள்; மறுபடியும் எழுந்து விரைவில் ஓடிவளைந்து எதிரே நின்று குத்தென்று சொல்லுவார்கள்; அப்படிக் குத்திக்கொண்டு மிகுதி மடியைப் பிடித்துச் சூறைபோ லநேகவிசை சுழன்று திரிந்தார்கள்; அந்தி நேரமும் இருளும் வலமிடமாக வருதலை யொத்திருக்கும்படி. எ-று. (௧௨)

ஊருவன தத்துவன செல்வன விண்ணோடே
சேருவன நின்றன திரிந்தன திரட்டார்
தாருவகை யிற்றன ரழைந்ததிரு ளெங்கு
மேருவரை யுக்கதெழு வேலையள றுக

இ-ள். அவ்வேளையில், உலகத்தில் ஊர்ந்து போகின்ற சீவன்களும், தவழ்கின்றவைகளும், நடக்கின்றவைகளும், பறக்குஞ் சீவராசிகள்போல ஆகாயத்தில் பறந்தன; நிலையாகின்ற விருக்ஷமு மலைகளுந் திரிந்தன; திரளாக நிறைந்த ஐந்துவகை யாகிய தேவதருக்கள் பொடிப்பொடியாய்ப் போயின; எவ்விடமும் அந்தகாரம் நிறைந்தது மகாமேரு அசைந்தது; சத்த சமுத்திரங்களுஞ் சேறுயின. எ-று. (௧௩)

அந்தமுடி வெல்லைதனி லஞ்சிமை யோர்தா
மிந்திரனை யெய்தினர்க ளெய்திய துரைக்கு
முந்தியவ னுற்றதுயர் யாவையு மொழிந்து
வந்தவர வேதென வகுத்துரைசெய் கின்றார்.

இ-ள். சருவ சங்காரகாலம் வந்ததென்று சொல்லும்படி இருவருஞ் சண்டை செய்யும் அந்த வேளையில், தேவர்களெல்லாம்

பயப்பட்டுத் தேவேந்திர னிடத்திற்போய்ச் சேர்ந்து தங்களுடைய துக்கத்தைச் சொல்லுவதற்கு முன்னே, தேவேந்திரன் தான் பட்ட துன்பங்களெல்லாஞ் சொல்லிப் பின்பு நீங்கள் வந்தகாரியம் ஏதென்று கேட்கத் தேவர்கள் சொல்லுவார்கள். எ-று. (௧௪)

ஆரணனு நாரணனு மானவிரு வோருந்
தாரணியி லேமிகு சமர்த்தொழில் விளைத்தா
ரோரணிய வேறுகதி யில்லையெவ ருக்குங்
காரணனை யேதொழுதல் காரியமி தென்றார்.

இ-ள். பிரம விட்டுணுக்களாகிய இருவரும் பூமியில் மிகுந்த யுத்தத்தைச் செய்கிறார்கள்; எங்களுக்குப் பிழைக்கத் தகுந்த மார்க்கம் வேறேயில்லை; எல்லாருக்குங் காரணமாயிருக்கிற பரமசிவனைத்தொழுது இந்தச் செய்தியைச் சொல்வதே காரியமென்று சொன்னார்கள் தேவர்கள். எ-று. (௧௫)

நாயக னிசைந்துபினர் நாகவுல கத்தோர்
தூயமலர் போலடி துதித்தரிவை பாகா
மாயமுடன் மாலயன் வருத்தமது தீராய்
தாயலது மைந்தர்துணை தாரணியி லுண்டோ.

இ-ள். இப்படிச் சொல்லத் தேவேந்திரனும் சம்மதித்துப் பின்பு, அவனோடு தேவர்களெல்லாரும் போய்ச் சிவனுடைய பரிசுத்தமாகிய தாமரை மலர்போன்ற பாதத்தைத் தொழுது, மங்கை பாகனே! மாயஞ் செய்கின்ற விட்டுணுவும், பிரமனும் சண்டை செய்வதனால், வருந் துக்கத்தைத் தீர்க்கவேண்டும்; பிள்ளைகளுக்குத் தாயே துணையல்லாமல் மற்றொரு துணை பூமியிலுண்டோ! என்று சொன்னார்கள் தேவர்கள். எ-று. (௧௬)

உருட்படு சகட்டைநிக ருற்றலகின் மீதே
யிருட்படு பிறப்பினை யிறப்பினை யுறாதே
பொருட்பெற வுனக்கடிமை புக்கள விலாவுன்
னருட்கடல் குளித்திட வடைக்கலம தானோம்.

இ-ள். உருண்டுகொண்டு போகின்ற வண்டியினுடைய சக்கரம்போல், அஞ்ஞானம் பொருந்திய பிறப்பையு மிறப்பையும்மாறி மாறியடைந்து வருத்தத்தை யனுபவியாமல் மோட்சத்தைப் பெற உனக் கடிமையாகப் புகுந்து உன்னுடைய அளவில்லாத கிருபைக் கடலில் குளிக்க அடைக்கல மானோ மென்றார்கள் தேவர்கள். எ-று. (௧௭)

புழுக்குடை யுடற்சுமை பொறுக்க முடியாத
விழுக்குடைய விச்சைகெட விச்சையருள் வானே
முழுக்கட லிடைத்தின முழுக்குறினு மாறா
வழுக்கமல மற்றிட வடைக்கலம தானோம்.

இ-ள். அநேக புழுக்கள் குடைந்து கொண்டிராநின்ற உடற்பாரத்தைப் பொறுக்கமுடியாத இழுக்காகிய அஞ்ஞானங்கெடப் பிரியத்தினோடு கிருபைசெய்கின்ற சுவாமியே! பெரிய சமுத்திரத்தினிடத்தில் தினம்முழுகினும் போகாத மும்மலமாகிய அழுக்கற்றுப்போக அடைக்கலமா யும்மைச் சேர்ந்தோ மென்றார்கள். எ-று. (௧௮)

எண்ணமினி வேறிலை யெமக்கருள்செ யென்றே
கண்ணுதலை விண்ணவர்கள் கற்றுமொழி போதி
லண்ணலு முணர்ந்தன னனைத்துயிரி னுள்ளே
யெண்ணெயென நிற்குமவ னீதறிகி லானோ.

இ-ள். இனிமேல் வேறே ஆலோசனை யில்லை, எங்களுக்குக் கிருபை செய்யுமென்று சிவனைத் தேவர்கள் புகழ்ந்து தோத்திரஞ்செய்கையில், சுவாமியும் அவ்விருவருக்கும் வந்த சண்டையின் மூலத்தையறிந்தார்; எல்லா வுயிர்களிடத்திலும் எள்ளினிடத்து நெய்போல் நிற்கும் சுவாமி இது அறியமாட்டாரோ! அறிவார். எ-று. (௧௯)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

நடுக்கமுறு முனிவரெலா மமரரெலாம்
பயந்தவிர நாகமீது
படுக்கைபுரி திருமாலும் பங்கயத்தி
லுறுமயனும் பகைமைதீர
வடுக்கிவிடும் புவனமெலா மடுக்கழியா
திருக்கமனத் தருள்வ தாகித்
தடுக்கரிய * தழலுருவத் தொருவரையா
யிருவரையுந் தடுப்ப தானான்.

இ-ள். நடுக்கமடைந்த முனிவர்கள் தேவர்களெல்லாரும்பயம் நீங்கும்படிச் சர்ப்பசயனத்தில் நித்திரைசெய்கின்ற விட்டுணுமூர்த்தியும், தாமரைப் புட்பத்தில் வீற்றிருக்கின்ற பிரமதேவரும், ஒருவருக்கொருவர் பகையை நீங்கவும், அடுக்கடுக்காயிருக்கும் அண்டங்களெல்லாம் அடுக்கழியாம லிருக்கவும் கிருபை செய்வதாய்த் தடுத்தற்கரிய, அக்கினி சொரூபத்தோடு கூடிய ஒருமலையாகி இவ்விருவரையுந் தடுக்கும்படி எழுந்தருளினார் பரமசிவன். எ-று. (௨௦)

பாதலத்திற் பணிகளெலாம் விழுதாக
வதன்கீழிற் பருவேரோடிப்
பூதலத்திற் கிளைத்திமையோ ருலகெல்லா
மலர்ந்து மலர்ப் புண்டரீகன்

---

* மாசிமாதத்திலே அமரபக்கத்துச் சதுர்த்தசி திதியிலே இரவு மகா நிசிக்காலத்திலே சோதியாகத் தோன்றினர்.

பீதலத்து முகடுடைத்துக் கடாகவெளி
கடந்துபெரு வெளிக்கு மேலா
மாதலத்துக் கிதுவுமொரு கனன்மேரு
வடுத்ததென வளர்ந்த மாதோ.

இ-ள். பாதாள லோகத்திலிருக்கிற பாம்புகளெல்லாம் அம்மலைக்குச் சல்லிவேராகவும், அதின்கீழ் பருத்த வேரோடி பூமியிற் பெரிதாய் கிளைத்துத் தேவ லோகங்களெல்லாந் தாண்டி பிரம லோகத்து முகட்டையுடைத்து அண்டகடாக வெளியைக் கடந்து அதற்கப்பாலிருக்கும் பெரியவெளிக்கு மேலாயிருக்கிற இடத்துக்கும் அக்கினிச்சொரூபமாகிய மகாமேரு அடுத்ததென்று சொல்ல வளர்ந்தது. எ-று. (௪௧)

முளைக்குநெடுஞ் சுடரிரவி புரவியுலா
வாவுலக முழுது மோடிக்
கிளைக்குமணி யிருளகற்ற வேற்றிவைத்த
விளக்கெனவே கிளர்கை யாலே
யளக்கரெலா மளப்பரிய வடவையழல்
பரந்ததென வரத்த மானத்
திளைக்குமெழு கிரிகளெல்லா மதுசொரிந்த
சிறுபொறிபோற் சிவந்த மாதோ.

இ-ள். உதயமாகி நெடுந்தூரங் கிரணங்களை வீசுகின்ற சூரியனுடைய தேரிற்கட்டிய குதிரைகள் சஞ்சரிக்கக்கூடாத உலகமெல்லாம் ஓடி கிளைத்த நீலமணிபோலும் கரிய இருளை யோட்டுவதற்கு ஏற்றிவைத்த விளக்குபோல் பிரகாசிப்பதனால், சமுத்திரமெல்லாம் சொல்லுவதற்கரிய வடவாமுகாக்கினி பரந்ததுபோலச் சிவப்புநிறம் பொருந்த சத்தகுல பர்வதங்களெல்லாம் அந்தப் பிரகாசத்தினால்-அந்த அக்கினிமலைசொரிந்த அக்கினிப் பொறிகள் போலச் சிவந்தன. எ-று. (௪௨)

கலி நிலைத்துறை.

வானக்கனலைப் [illegible] மலரோனுங்
கானக்கண்ணனு மஞ்சியகன்றார் கரைகாணார்
ஞானக்கண்ணினர் காணுமதல்லா னவைசேரு
மீனக்கண்ணின ருக்கெளியானோ வெம்மானே

இ-ள். இப்படி ஆகாச பரியந்தம் அக்கினி சொரூபத்தைக் கண்ட பிரமனும், வேணு நாதத்தைச் செய்கின்ற கிருஷ்ணனாகிய விட்டுணுவும், பயப்பட்டு ஒதுங்கி நின்றார்கள்; ஞானக் கண்களையுடையவர்கள் காணுவதல்லாமல் குற்றம் பொருந்திய ஈனமாகிய முகத்திற் கண்ணுடையவர் காண்கிறதற்கு எளியவரோ! நம்முடைய பரமசிவன். எ-று. (௪௩)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கண்ணிலள விடவரிய சுடரினைக்கண்
டிருவருமாய்க் கவலையாறு
ரெண்ணிலிதி னடிமுடியை யறிபவரே
பெரியவரென் றிசைத்தா ரிந்த
மண்ணினடி யறிவனெனப் பணிவிடையிற்
றூக்கமிக்கோன் வராக மானான்
விண்ணின்முடி யறிவனென வெகினவடி
வெடுத்தயனும் விரைந்து போனான்.

இ-ள். கண்களாலே இவ்வளவுதூரம் இந்த மலை போயிருக்கிறதென்று அறியக்கூடாத பிரகாசமான மலையைப்பார்த்து, இரண்டுபேருந் துன்பத்தையுடையவராய் இந்த மலையினது அடியையாவது முடியையாவது அறிகிறவரே பெரியவரென்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டார்கள்; அப்பொழுது சர்ப்பத்தில்

நித்திரை செய்கிறவராகிய விட்டுணுமூர்த்தி இந்த மலையினடியை காணறிந்து வருகின்றேனென்று வராகவடிவானான் · [illegible] யின் சிகரத்தைக் காணுகின்றேனென்று பிரமனும் அன்னப் பட்சியாகி ஆகாயத்திற் பறந்தான். எ-று. (சச)

மெத்துமரைக் கணத்தினுக்கா யிரங்காதம்
பறந்தயனார் விரைந்து போனார்
துத்தியரா வெடுத்தபுவி கணத்தினுக்கா
யிரங்காதந் துளைத்துப் போனா
ரத்தகையோர் செயலுரைக்கிற் கனகமணி
நெடும்பூட்டுக் கருகிலோடு
நித்திலப்பொற் குண்டிகையு நீலமணிக்
குண்டிகையு நிகர்த்த மாதோ.

இ-ள். சொல்லப்பட்ட அரைக் கணத்தில் பிரமதேவர் ஆயிரங்காதவழி பறந்து மேலாகப்போனார்; படத்தையுடைய ஆதிசேடன் சுமந்த பூமியை அரைநொடியில் ஆயிரங் காததூரம் தொளைத்துக்கொண்டு விட்டுணு கீழாகப் போனார்; அஃதெப்படியிருந்த தென்றால், அம்மலை தங்கமயமாகிய ராட்டணப் பூட்டைப் போலவும், அதில் இறைக்கிறதற்குக் கட்டிவிட்டிருக்கின்ற நீலரத்தினத் தோண்டிபோலவும் முத்துக்கவிழைத்திருக்கிற அழகிய தோண்டி போலவு மிருந்தது. எ-று. (சரு)

பூவுலகை யரியகன்று கீழுலகின்
முறைமுறையே புகுந்து போந்து
காவலுறு மாவலிதன் போகவதி
யெனும்புரமுங் கடந்து மேவித்

போலச் சிவந்தன. எ-று. (சஉ)

தேவர்தொழும் பரஞ்சுடர்வா ழாடமக
சுரங்கரத்துஞ் சிரத்தும் போற்றி
மூவுலகை முதலளந்தோ னேழுலக
மளந்துமதன் முடிவு காணான்.

இ-ள். வராகவடிவமெடுத்த விட்டுணுவானவர் பூலோகத்தைக் கடந்து, அதின் கீழிருக்கிற ஏழுலகத்தையும் முறையே தொளைத்துக்கடந்துபோய் மாவலிச்சக்கிரவர்த்தி காவலிலிருக்கிற போகவதிபட்டினத்தைத்தாண்டி, அப்புறம் தேவர்கள்வணங்கும் பிரமசொரூபமாய்விளங்குகின்ற ஆடகேசுரத்தைக்கண்டு கைகளினாலும் சிரத்தினாலும்வணங்கி முன்னே மூன்றுலகத்தையுமளந்தவர் இப்போதேழுலகங்களை அளந்தும் அந்தமலையினடியைக் காணமற் போனார். எ-று. (சசு)

வளர்ப்புடைய பிறைபோல வளர்மருப்புந்
தேய்ப்பிறைபோல் மழுங்கிப்போகக்
குளப்படியு முகநுனியும் பிளைத்தேடு
மாசையைப்போற் குறைந்துபோக
வளப்பரிய துயராழிப் பத்துநூறுண்
டகன்றதற்பி னரனை வாழ்த்தி
யிளைப்பதுவுஞ் சலிப்பதுமற்
றெழுதலமு மிடர்க்கடலு மேறினனே.

இ-ள். அப்படி மகாவிட்டுணு வராகவடிவங்கொண்டு தேடுகிறபோது வளர்பிறைபோல் நாளுக்குநாள்வளர்ச்சியுற்ற இரண்டுகொம்புகளும் தேய்பிறைபோல்குறைந்து மழுங்கிப்போகவும், குளம்புகளும் முகத்தினுனியும் தேடுமாசைப் பின்பு எப்படி குறைந்துபோயிற்றோ! அப்படித்தேய்ந்து குறைய எண்ணக்கூடாத துக்கசமுத்திரத்தில்விழுந்து ஆயிரந்தேவவருஷகாலந் தேடியுங்காணமல்பின்

புதெளிவுவந்து இதுசிவனுடையசெயலென்றறிந்து அவரைத்தியானஞ்செய்து இளைப்புஞ்சலிப்பும் நீங்கித் தன்னுடைய துக்கசமுத்திரத்தையும் எழுதலத்தையும் தாண்டிவந்தார். எ-று. (௪௭)

தம்போரை முதற்றடுக்கத் தழற்பிழம்பா
யெழுந்துவந்தத் தலத்தைச் சார்ந்தா
னம்போத னிதன்முடியி னளவறியா
னெனமனத்தி லையந் தீர்ந்தா
னம்போருக் கரியானைச் சேயானைத்
தனதுவிழி நயனத் தோடே
பைம்போதைப் புனைவானைப் பலகாலும்
பணிந்துருகிப் பரவி நின்றான்.

இ-ள். தனக்கும்பிரமனுக்கும் வந்தகலகத்தைநீக்கும்படி அக்கினிசொரூபமாக எழுந்ததலத்தைச்சேர்ந்து அழகியதாமரைப்பூவிலிருக்கிறபிரமன் இந்த மலையின்முடியை அறியமாட்டானென்று நிச்சயஞ்செய்துகொண்டு, நம்பாதமனிதர்களுக்கு அரியவரை எப்படிப்பட்டவர்களுக்கும் தூரமாகவிருக்கிறவரைத் தம்முடையகண்ணாகியபுட்பத்தோடு அழகியபுட்பங்களைத்தரிக்கின்றவரைப் பலதரமும்வந்தனஞ்செய்து உள்ளமுருகிப்பரவினார் விட்டுணுமூர்த்தி.

கலி விருத்தம்.

இன்னதா மிவன்செய லிருக்க விங்கிதன்
முன்னமே யழற்கிரி முடியைத் தேடவே
யன்னமாய்ப் பறந்தவ னரைக்க ணத்திலே
மன்னுமோ ராயிரக் காதம் வாவினான்.

இ-ள். இந்தப்பிரகாரம் இந்தவிட்டுணுவிருக்க, இதற்குமுன்னே அக்கினிமலையின்முடியைத்தேட அன்னப்பட்சியாகிப் பறந்த பிரமன் அரைக்ஷணத்திலே ஆயிரங்காதவழிதாண்டினார். எ-று. ()

கிழியே யண்டகோ ளகையுங் கீழுற
வேறு * மோ ராயிர மாண்டு மேவினு
னூறுநா றாயிரங் காத நோக்கினு
மீறிலா திருந்ததவ் வெரியின் றூணமே.

இ-ள். அண்டகோளகையுங் கிழிபடக்கிழித்துப்பறந்து ஆயிரவருடந்தேடினார்; அப்படி அநேக நூறாயிரங்காதந்தாண்டிப்போய்ப்பார்த்தாலும் முதல்பார்த்ததுபோலவே முடிவில்லாதிருந்தது அந்த அக்கினித்தூண். (௫௦)

சிறையெலா முதிர்ந்தன விசையுந் தீர்ந்தன
நிறைவதா மிடுக்கனு முயிர்ப்பு நீண்டன
குறையெலாம் வளர்ந்திடத் தனிமை கூர்தலான்
மறையினா னிவையிவை மனத்தி னெண்ணினான்.

இ-ள். அப்படி பிரமன் அன்னமாய்ப்பறந்துபோம்போது, சிறகெல்லாமுதிர்ந்துபோயின; விசையும் அடங்கிற்று; குறைவில்லாதவூக்கமும்பெருமூச்சும் அதிகப்பட்டன; மனக்குறைவால் ஒருவருமில்லாமல் தான் ஒன்றியானபடியினாலே பின்வருமவற்றை மனத்திலெண்ணினார். எ-று. (௫௧)

அரியயா விதனடி யறிந்து மீளுமோ
தெரிவுறா திடையிலே திரும்பு மோவென
வரியதா கியதுய ரூசலா டினா
னெரியுறு மெழுகுபோ லிளகுஞ் சிந்தையான்.

இ-ள். அரியமகாவிட்டுணு இந்த அக்கினிமலையினுடைய அடியையறிந்து திரும்புவாரோ! கொஞ்சதூரந்தேடி இனிமேல்தேடக்கூடாதென்று திரும்பிவருவாரோ! என்கிறதுக்கமாகிய ஊசலி

---

* விட்டுணுவும்பிரமனும் பன்றியும் அன்னமுமாகத்தேடினார் என்பதை "விஷ்ணுர்வை வாராகம் ரூபமாஸ்தாய எனவும், ப்ரஹ்மாவை ஹம்ஸோபூத்வா" எனவும் வரூஉம் இருக்குவேத மகாமந்திரவசனங்களால்தெளிக.

விருந்தாடினார். நெருப்பிலேயிட்ட மெழுகுபோல் இளகியமனமுடையவனாகிய பிரமதேவன். எ-று. (௫௨)

மற்றிது சிவனென மனத்தி னெண்ணிலே
னுற்றரி தன்னையு முறவு கொண்டிலே
னிற்றைநாள் வரைக்குமிவ் விடர்க்குண் மூழ்கினேன்
சிற்றறி வுடைமையோ செய்த தீமையோ.

இ-ள். இந்தமலையைச் சிவனென்று அறியாமற் போனேன்! பகைத்துக்கொள்ளப்பட்ட விட்டுணுவையாவது உறவுகொள்ளாமற்போனேன்! அன்றுமுதலின்று வரையிலும் வெகுகாலமாய்த் துக்கசமுத்திரத்தில் மூழ்கினேன்! என்னுடைய சிறியபுத்தியினாலேயோ! பூர்வம் நான்செய்தபாவத்தினாலேயோ! என்று விசனத்தையடைந்தான்பிரமன். எ-று. (௫௩)

எய்தினேன் முடியறிந் தேகிலே னெனும்
பொய்களை யுரைக்கினும் பொருந்தவே யுரை
செய்துணை பிறிதிலை யென்று தேம்பினான்
* கைதையின் மடல்வரப் பின்பு கண்டனன்.

இ-ள். இவ்வளவுதூரந் தேடிவந்தும் முடியையறியாமற் போனேன்! ஆனாலும் இனிமேற்போய் விட்டுணுவினிடத்திற்பார்த்தேனென்று பொய்சொன்னாலும், ஒத்தாசையாகப்பார்த்தாயென்று பொய்ச்சாட்சிசொல்வதற்கு ஒருதுணையுமில்லையேயென்று விசனப்பட்டான்; அச்சமயத்தில் தாழம்பூமடல் ஒன்றுமேலேயிருந்திறங்கப்பார்த்தான் பிரமன். எ-று. (௫௪)

இம்மட லெங்குற்று வருவ தென்னுமுன்
னம்மட லணைந்ததங் கதனை யேற்றனன்
செம்மறன் முடியில்வீழ் † செம்ம லாகையால்
மெய்ம்மைசே ருயிர்ப்பதாய் விடுமி னென்றதே.

---

* கைதை—தாழம்பூ. † செம்மல்—பழம்பூ.

இ-ள். இந்தத் தாழைமடல் எங்கேயிருந்து வருகிறதென்று ஆலோசிக்கு முன்னே, தாழம்பூ பிரமனுக்குச் சமீபத்தில் வர, அதைக் கையினாலே பிடித்தான்; அது பரமசிவனுடைய சிரத்திலிருந்து தவறிவிழுந்த பழம்பூ வாகையால் மெய்ம்மையான பெருமூச்சோடு என்னைச் சீக்கிரத்தில் விட்டு விடுவாயென்று சொல்லிற்று. எ-று. (௫௫)

ஏரணி கைதையே யிங்கு நீவருங்
காரண மேதெனக் கமலன் கூறினான்
ஆரண னாரண னளவிடா முதற்
பூரணி முடியினுந் தவறி வீழ்ந்தனன்.

இ-ள். அந்தத் தாழம்பூ சொல்லியதைக் கேட்டு, அழகான தாழம்பூவே! எங்கேயிருந்து இங்கு வந்தாயென்று பிரமன்கேட்க, பிரமனாலும் விட்டுணுவினாலும் அறியக்கூடாத பரமசிவத்தினுடைய சிரத்திலிருந்து தவறி விழுந்தேனென்று சொல்லிற்று. எ-று. (௫௬).

தார்ப்பொலி முடியினுந் தவறி வீழ்ந்தபின்
னாற்பதி னாயிரம் வருட நண்ணினே
னேற்பது விடுகவென் றிசைப்ப வெந்நகையைப்
பார்ப்பது விடுத்தயன் பகர்வ தாயினான்.

இ-ள். கொன்றைமாலை பிரகாசிக்கின்ற சுவாமியின் திருமுடிமேல் நின்று விழுந்து நாற்பதினாயிரம் வருஷங்களாக வந்தேன். இன்னும் நான் பூமியிற் போகவில்லை; வருத்தத்தோடு வருகிறேன், என்னைப் பிடிக்கவேண்டாம், விட்டுவிடென்று தாழம்பூ சொல்ல, பிரமன் சுவாமியைத் தேடிவந்ததை வெறுத்துச் சிலவார்த்தை சொல்லத் தொடங்கினான். எ-று. (௫௭)

துன்னிய கைதையே துணையுமாய் நமக்
கின்னமு மலைவுறு திடக்க ணீக்கினை

விற்று.

லுன்னினு முயிர்த்துணை யுறவுவேறிலை
யன்னிய னல்லனா னனமு மல்லனே.

இ-ள். என் சமீபத்திலடைந்த தாழம்பூவே? நீ எனக்குத் துணையாயிருந்து நானின்னமுந் தேடி யலையாமல் என் வருத்தத்தை நீக்கினால், உன்னைப் பார்க்கினும் உயிர்போன்ற துணையும் உறவும் வேறில்லை; நானும் அன்னிய னல்லன், அன்னப் பக்ஷியுமல்லன் என்று சொன்னான் பிரமன். எ-று. (௫௮)

நாமமோ நான்முக னானு மாலுமா
யேமமா மிதற்கள விசைக்க வெண்ணினோம்
பூமிகீ ழிடந்தவன் போயினான் மனத்
தீமையேன் றிருமுடி தேடிக் காண்கிலேன்.

இ-ள். என் பெயரோ பிரமன்; நானும் விட்டுணுவுங் கூடி அக்கினி சொரூபமாகிய இந்தமலையி னளவைத் தெரிந்துகொள்ள வெண்ணினோம்; பூமியின் கீழிடத்தைப் பிளந்துகொண்டு அடியை அவன் தேடப்போனான்; பாவியாகிய நான் முடியைக்காண வெகுநாள்தேடியுங் காண்கிலன். எ-று. (௫௯)

அடிதலை வரவிது வதுகொண் டென்பய
னெடியநின் வரவினா னினைத்த தெய்தினாற்
படியளந் தவனுடன் பறவை யாமிவன்
முடியறிந் தானென மொழிதல் வேண்டுமே.

இ-ள். ஆதியந்தமாக நடந்த செய்தியிது, அதைக் குறித்துப் பேசுவதினாற் பலனென்ன; பெருமை பொருந்திய உன்னுடைய நல்வரவினாலே நினைத்தகாரிய முடிந்தால் தான் பயன்; பூமியை யளந்த விட்டுணுவினுடன் பறவையா யுருவெடுத்த இப்பிரமன்

சிவனுடைய முடியை யறிந்தானென்று நீசொல்லவேண்டுமென்று பின்னுஞ் சொல்லுவான் பிரமன். எ-று. (௬௦)

வஞ்சமென் றிகழ்ந்திடேல் வருந்தி னார்க்குயிர்த்
தஞ்சமா மெனிற் பெறும் பொய்யுஞ் சாற்றலா
மஞ்சியே சொலத்தகா மொழியு மன்றிது
நஞ்சமுண் டமைவரே நண்பு வேண்டினார்.

இ-ள். தாழம்பூவே? கேள், இது வஞ்சனைத் தொழிலென்று தள்ளாதே; யாதோ ஒரு துன்பத்தை யடைந்தவர்க்கு உயிர்ச்சேதம்வருமாயின், அது பிழைத்தற்கும் பெரிதாகிய பொய்யையும் சொல்லலாம், இது பயப்பட்டுச் சொல்லக் கூடாத வார்த்தையுமல்ல; சிநேகம் வேண்டினவர்கள் தம்முடையநண்பன் விஷத்தைத் தின் என்றாலுந் தின்று சிநேகிதன் பேச்சைத் தட்டாமல் கீர்த்தி நிலைக்கச் செய்வார்கள். எ-று. (௬௧)

[உண்ண என்னும் செய்வெனெச்சம் உண்டு எனச்செய்தெனெச்சமாகத் திரிந்து அங்கு இழிவு சிறப்பும்மை தொக்குநின்றது. ஏகாரம் தேற்றத்தின் கண் வந்தது.]

கண்ணுதன் முடியில்வாழ் கைதை யேயிது
தெண்ணுவ தொழிகென வியைந்து போந்தது
விண்ணினி லிருந்துகீழ் விரைந்து வேதியன்
மண்ணுல களந்தமான் மருங்கு நண்ணினான்.

இ-ள். பரமசிவனுடைய முடியில் வாழ்கின்ற தாழம்பூவே! வேறே ஓர் ஆலோசனையுஞ் செய்யவேண்டாம்; இதற்குடன்படென்றுசொல்லத் தாழம்பூ அதற்கிசைந்து வந்தது; ஆகாயத்தினின்றும் சீக்கிரத்தில் பிரமன் மண்ணளந்த விட்டுணுவினிடத்தில் வந்து சேர்ந்தான். எ-று. (௬௨)

பிற்று.

சீதரா கேட்டி யென் வரவின் செய்கையைக்
காதநூ றாயிரங் கணத்தி லேகடந்
தாதியான் முடியறிந் தணுகி னேனென
வோதினான் கைதையு முள்ள தென்றதே.

இ-ள். விட்டுணுவே? என்னுடைய நல்வரவைக் கேள், ஒரு நொடியிலே நூறாயிரங்காதம் பரந்து எல்லாருக்கும் ஆதியாகிய சிவனுடைய சிரம்பார்த்து வந்தேனென்று சொன்னான்; தாழம்பூவும் நிஜந்தான் பிரமன் பார்த்தானென்று சொல்லிற்று. எ-று.

எழுசீரடி யாசிரியச் சந்தவிருத்தம்.

அக்கண மழற்கிரி வெடித்தது வெடித்தவர
  லத்தனி லரக்க ரிமையோ
ருக்கனர் திசைக்களிறு கக்கின வரக்கரை
  யுருக்கிய தெனக் குருதிநீர்
செக்கரொளி மட்கிட முருக்கிதழ் கறுக்குமெய்
  சிவப்பொளி வெளுத்த வடிவாய்
முக்கண னதற்கிடை முளைத்தனன் முகத்திலவன்
  முப்புர மெரித்த நகையே.

இ-ள். அப்படி பிரமன்சொன்ன அந்தக்ஷணமே, அக்கினிமலை படீரென்று வெடித்தது; வெடித்த சத்தத்தில் இராட்சதர்கள் தேவர்கள் திடுக்கிட்டு உயிர் சோர்ந்தார்கள்; திக்கில் உள்ள யானைகள், சூரியர்களை உருக்கிச்சாய்த்தா லெப்படியோ அப்படி இரத்தஜலத்தைக் கக்கின; செக்கர் வானத்துப்பிரகாசம் மழுங்கிப் போம்படியாகவும், முருக்கம்பூவிதழ் கறுக்கும்படி யாகவும், சிவந்த தமது திருவுருவின் ஒளிவுபொருந்திய திறம் விபூதியினால் வெளுத்தவடிவாய்த் தோன்ற அந்த வெடிப்பில்நின்றும் பரமசிவன் முப்புரத்தை எரித்த நகை அவர்முகத்தில் தோன்ற எழுந்தருளினார். எ-று. (௪௪).

முண்டக வகந்தையின் மொழிந்தவுரை நன்றென
  மொழிந்து நகை கொண்ட வளவே
அண்டபகி ரண்டமு நடுங்கின வொடுங்கின
  வடங்கின விருஞ்சு டரெலாங்
கொண்டலு மறைந்தன சிறந்தன விறைந்தன
  குறைந்தன நிறைந்த னகுவா
லெண்டிசை திரிந்தன கரிந்தன பொரிந்தன
  வெரிந்தன விரிந்த தருவே.

இ-ள். ஓ பிரமனே? உன்னுடைய அகங்காரத்தினாற் சொன்னசொல் நன்றாயிருந்ததென்று சொல்லி நகைத்தபோது, அண்டபகிரண்டங்களெல்லாம் கிடுகிடென்று நடுங்கி யொடுங்கிப்போயின; சூரிய சந்திரருடைய பிரகாச மடங்கிப் போயின; மேகங்கள் மறைந்தன; சிறந்து நிலையா யிருக்கிறவைகளெல்லாம் இறந்தன; குறைந்தவைகளெல்லாம் நிறைந்தன; கூட்டமாகிய திக்குகள் அலைந்தன; பரவியிருந்த மரங்களெல்லாம் கரிந்தும் பொரிந்தும் எரிந்தும் போயின. எ-று. (௪௫)

கலி விருத்தம்.

அழிந்தன னயனென வமர ரஞ்சினார்
குழிந்தது நிலமெனக் கொள்ளை யாமலர்
பொழிந்தனர் நெடியவற் குவகை பூத்தது
கழிந்தது மலரவற் கிடும்பைக் கங்குலே.

இ-ள். தேவர்களெல்லோரும் பிரமன் இன்றே அழிந்துபோனானென்று பயப்பட்டார்கள்; பூமி பள்ளமாகும்படி கொள்ளை

[illegible], [illegible]. அனுபந்தனமைய பகுத்தலின் [illegible] ற்று.

கொள்ளையாகப் புட்பமாரி பொழிந்தார்கள்; நெடுமாலுக்குச் சந்தோடம் வந்தது; பிரமனுக்கு அகங்காரமென்கிற இருள் நீங்கிப் போயிற்று. எ-று. (சுசு)

பாடினான் பரவினான் பரவ சத்தினா
லாடினா னோடினா னளவிடா முதல்
கூடினா னெவ்வரங் கொள்ளுகே னெனத்
தேடினான் சிவனையத் தெளிந்த செங்கண்மால்.

இ-ள். அப்போது தெளிவையடைந்த விட்டுணுதேவர், அக்கினிமலையி னிடத்திலிருந்து எழுந்தருளிய பரமசிவனைப் பாடினார், வந்தனஞ் செய்தார், பரவசங்கொண் டானந்தக் கூத்தாடினார்; நான்கு திக்கிலும் ஓடினார், யாவராலு மளவிடக்கூடாத இச்சுவாமியைத் தரிசித்துக் கூடினவனாகி, இனிநா னென்னவரங் கேட்பேனென்றாலோசனை செய்தார். எ-று. (சுஎ)

ஆசையா லுருகுமவ் வரித னன்புகண்
டீசனும் பலவர மினிது நல்கினான்
வாசமா மலரவ னுக்கு மண்ணின்மேல்
பூசையுங் கோயிலும் போக வென்றனன்.

இ-ள். இப்படி மிகுந்த பக்தியினாற் றேகம் உருகாநின்ற விட்டுணுவினுடைய அடிமைத் திறத்தைப் பார்த்துக் கேட்ட வரங்களெல்லாஞ் சிவன் அருளிச்செய்து, பிரமனைப் பார்த்து உனக்குப் பூமியிலே கோயிலும் பூசையு மில்லாமற் போகக் கடவதென்று திருவுளம் பற்றினார். எ-று. (சுஅ)

கைதையே யிவனொடு கரவு நீயுரை
செய்ததாற் றீண்டிலே மென்று தீர்த்தனை
யெய்திய முனிவுகண் டேங்கி நான்முகன்
மெய்தரை யுறப்பதம் வீழ்ந்து போற்றினான்.

இ-ள். ஓ தாழம்பூவே? இப்பிரமனோடு சேர்ந்து பொய்ச்சாட்சி சொன்னபடியினால், உன்னை யிதுமுதற்கொண்டு தீண்டேனெனத் தள்ளினார்; அதன்பின்பு சுவாமிக்கு இப்படிப்பட்ட கோபம் வந்ததைப்பார்த்து ஏக்கமெடுத்துப் பிரமன், தன்னுடைய தேகம் பூமியில் நன்றாய்ப் படவிழுந்து வந்தனஞ் செய்தான். எ-று. ()

வேறு.

பொடிமூடிய தழலேநிகர் புலையாணவ மலமாஞ்
செடிமூடுகை யாலேயுழல் சிறியேனொரு பொருளோ
வடிவேபெரு வெளியேசதுர் மறையேசதுர் மறையின்
முடிவேதனி முதலேயெனை முனியேலெனை முனியேல்.

இ-ள். நீறுபூத்த நெருப்பையொத்த சுவாமியே! சண்டாளத்துவமாகிய * ஆணவமலமென்கிற செடிமூடிக் கொண்டிருப்பதினால், அவிவேகியாய்த் திரியாநின்ற சிறியேனொரு பொருளோ. உருவமானவரே! அகண்ட வெளியானவரே! நான்குவேதமானவரே! நான்கு வேதத்தினுடைய அந்தத்தி லிருக்கின்றவரே! ஒப்பற்ற முதலாகியவரே! கோபித்துக்கொள்ள வேண்டாம், கோபித்துக் கொல்லவேண்டாம். எ-று. (எ0)

எந்நீர்களு மொன்றாகிய வெழுவாரியு மறுகி
வெந்நீரது வானாலுடன் விராவப்புன லுண்டோ
நின்னீர்மையி தென்றாலுல குய்செப்படி நிகழும்
முந்நீர்விட முண்டோயெனை முனியேலெனை முனியேல்.

இ-ள். எல்லா நதிகளின் நீரும் விழுந்து ஒன்றாகிய ஏழுசமுத்திரமும் காய்ந்து வெந்நீராய்ச் சுட்டால், அதையாற்றுவதற்கு வேறேசலமுண்டோ! உமக்கே யிப்படிப்பட்ட கோபம் வந்தால் உல

---

* ஆணவமென்பது செம்பிற்குக் களிம்புபோல அநாதியே டன்கலந்து, நிற்பது. அனுத்தன்மைப் படுத்தலின் ஆணவமா ற்று.

கத்திலிருக்கிற ஜீவராசிகள் எப்படிப் பிழைக்கும்! முன்னே சமுத்திரத்தில் பிறந்த ஆலகால விடத்தையுண்ட மூர்த்தியே! கோபஞ்செய்ய வேண்டாம் கோபஞ்செய்ய வேண்டாம். எ-று. (எக)

பிறையே மழு மதியேயுறை பெண்ணே பிறவாணே
நறையேநறு மலரேயென நானாவித மாவை
பொறையேதிரு.வருளேபொழி புயலேயிய லிசையே
முறையேபல முறையேயெனை முனியேலெனை முனியேல்.

இ-ள். இளம் பிறையாகியும், பூரணச் சந்திரனாகியும், பெண்ணாகியும், ஆணாகியும், தேனாகியும், புட்பமாகியும், மலைகளாகியும், கிருபாவருஷத்தைப் பொழிகின்ற மேகமாகியும், சொல்லாகியும், நாதமாகியும், மற்றும் நானாவிதரூபமாகியு மிருக்கின்ற மூர்த்தியே! உமக்கு முறையோ முறை என்னை கோபிக்கவேண்டாம் கோபிக்க வேண்டாம். எ-று. (எஉ)

வெம்மைச்சர மலராகிய வில்வேடனு வனறே
கொம்மைத்தலை மதவாறெழு கோபக்களி றன்றே
செம்மைக்கன லன்றேகொலை செயுமந்தக னன்றே
மும்மைப்புர மன்றேயொரு பொருளாயெனை முனியேல்.

இ-ள். மிகுந்த வெப்பத்தைக் கொடுக்கின்ற புஷ்ப பாணங்களையுடைய மன்மதன் தேகமல்லவே! தாருகாவனத்து ரிஷிகள் விட எழும்பின தலையும் ஆறுபோன்ற மதத்தையு முடைய கோபமாகிய யானையல்லவே! அந்தரிஷிகள் பின்பு விட்ட சிவப்பாகிய அக்கினியல்லவே! கொலைசெய்யுக் தொழிலையுடைய எமனல்லவே! திரிபுரமல்லவே! நான் எவ்வளவு! உமக்கு என்னை ஒரு பொருளாகக் கோபஞ்செய்ய வேண்டாம். எ-று. (எங)

அரிதற்கரிதாமுன்முடி யறிவேனெனு மனவே
பறவைப்படி வானேனினி மேலோவிடர் படுவேன்
சிறுமைப்படு மென்பாலருள் செய்யென்றுரை செய்தான்
மறுகிக்குளி ரனல்போலிறை மகிழ்வாயிவை மொழிவான்.

இ-ள். யாவராலுமறியக்கூடாத உம்முடைய முடியை யறிகிறேனென்றமாத்திரத்திலே பறவையுருவமானேன்; இனிமேலோ துக்கத்தையடைவேன்; சிறுமையையடைந்த என்னிடத்தில் கிருபைசெய்யுமென்றுசொல்லி வியசனப்பட்டபோது, மறுகக்காய்ந்து குளிர்ந்தஜலம்போலச் சிவபிரான் சந்தோஷமாய்த் திருவாய் மலர்ந்து சிலமொழிகளை அருளிச்செய்வார். எ-று. (எச)

அம்போருக வஞ்சேவினி யவனித்தல மறையோர்
தம்பூசனை யுன்பூசனை யாகித்தப னியமாஞ்
சம்பூதர வுலகேழையும் விதியென்றருள் செய்தான்
கம்பூர்கடல் விடமுண்டருள் கருணைக்கட லானான்

இ-ள். பிரமனே? இனிமேல் நீ பயப்படாதே, பூமியில் பிராமணர்களுக்குச்செய்கிற பூசை உன் பூசையாகக்கொண்டு, பொன்னுருவமாயுண்டாகிய மகாமேருமலைதாங்கும் ஏழுலகத்தையும் எப்போதும்போல் படையென்று அருளிச்செய்தார்; சங்குகள் தவழ்கின்ற சமுத்திரத்தின் விஷத்தையுண்ட [illegible]வாகிய சிவபெருமான். எ-று. (எ[illegible])

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இத்தலத்தி லுமக்குவ[illegible]கொடுத்தலினல்
யோசனைமூன் றெல்[illegible]ரம்
சத்தபவித் திரஞானத் த[illegible]
பொலிகவிந்தச் சோதிதா[illegible]

சிற்றுருவ மலையாகி வரமுதவக்
கடவதின்பஞ் சிறந்ததான
முத்திதனைத் தகையாம லுதவுமிதற்
கருணைபுரி மொழியு நாமம்.

இ-ள். பிரமவிட்டுணுக்களே! உங்களுக்கு இந்தத்தலத்திலே அநுக்கிரகஞ்செய்து வரங்கொடுத்தபடியினால் இத்தலத்தைச்சுற்றி மூன்று யோசனை தூரம்வரைக்கும் சுத்தபவித்திரமாக விருக்க வேண்டும்; இந்தச்செந்தீமலை சிறியவுருவத்தோடுங்கூடிய மலையாகக்கடவது; பேரின்பஞ் சிறந்தமோட்சத்தை தடையில்லாமற் கொடுக்கும். இந்தத்தலத்திற்கு அருணைபுரியென்று பெயராம். (௭௬)

வாதைபடு மிந்திரனு மிமையவரு
நினைக்கவவர் வருத்தந் தீர்த்தோம்
ஆதலினா லித்தலத்தை நினைப்பவர்க்குப்
பிறப்பிடும்பை யகற்றுவோமிப்
பூதரமு மித்தலமும் பிரளயத்து
மழியாத பொற்ப தாகி
மோதியகாற் றடைந்ததிசைச் சராசரங்க
ளவையுமுயர் முத்திசேர்க்கும்.

இ-ள். துன்பத்தையடைந்த தேவேந்திரனும், தேவர்களும் நம்மைநினைக்க அவர்களுடைய துன்பத்தைத் தீர்த்தோம், ஆனபடியாலிந்தத்தலத்தை நினைக்கின்றவர்களுக்குப் பிறவித்துக்கத்தை நீக்குவோம்; இந்தப்பர்வதமும் இந்தத்தலமும் பிரளயகாலத்திலும் நாசமடையாத லக்ஷணத்தை யுடையதாகி மோதுகின்ற வாயுசஞ்சரிக்கின்ற திக்குகளிலுள்ள சராசரங்க ளெல்லாவற்றையும் மேலான முத்தியிலே சேர்க்கும். எ-று. (௭௭)

பொருளாகக் கோபஞ்செய்ய வேண்டாம். எ-று. (௭௩)

வையகத்தி லரியதவம் புரிந்தவருக்
கினியமுத்தி வழங்க வேண்டிச்
செய்யவிந்தத் திருநகரி லவதரிக்க
வரந்தருவோஞ் செய்த தான
மெய்பெறவொன் றாயிரமாய் வளருமிதிற்
கொடும்பாவம் விளையா திதை
யையமென வுணர் வார்க்குப்
பரகதிகிட் டாதுநம தாணைதானே.

இ-ள். பூமியி லரிதாகிய தவத்தைச் செய்தவர்களுக்கு இனிமையான மோட்சத்தைக்கொடுக்க விரும்பிச் சோதி வடிவமாகிய இந்தத்தலத்தி லவதரிக்க வரத்தைக் கொடுப்போம்; இஃதிலோர் தானஞ்செய்தால் ஒன்று ஆயிரமாய் விருத்தியாகும்; இந்தத்தலத்தில் பாவமே யுண்டாகாது; இதைச் சந்தேகமாக நினைப்பவர்களுக்கு மோக்ஷங் கிடைக்கமாட்டாது; நம்முடைய ஆணைப்படி என்றார் பரமசிவன். எ-று. (௭௮)

அண்ணலிவை மொழியளவி லழற்றாண
மதுகுறுகி யசல மாகி
வண்ணநெடுஞ் சுடர்விரிந்து விளங்குதல்கண்
டயன்றிருமால் வணங்கிச் சொல்வார்
விண்ணவர்க்கு மெங்களுக்கு மிதன்சோதிக்
கெதிர்குறுகி விழிக்கப்போகா
தெண்ணரிய சுடர்களெல்லா முட்காந்த
மலையாக விருக்க வென்றார்.

இ-ள். இந்தப் பிரகாரஞ் சுவாமி சொன்ன அளவில், அக்கினிமலை குறுகி ஒரு சிறியமலையாய் நிறம்பொருந்திய மிகுந்தபிரகாசம்

விரிந்து பிரகாசித்தலைப்பார்த்த பிரமவிட்டுணுக்களும் சுவாமியை வணங்கிச்சொல்லுவார்கள்; தேவர்களுக்கும் எங்களுக்கும் இந்தமலையின்சோதிக் கெதிராகப்போய் விழிக்கக்கூடவில்லை; ஆனபடியினால் எண்ணுதற்கரிய கிரணங்களெல்லா மறைந்து ஒருமலையாயிருக்கவேண்டுமென்றார்கள். எ-று. (எக)

அன்னமிசை வருவானுங் கருடன்மிசை
வருவானு மமல மூர்த்தி
வன்னியொளி மறைத்துமற்றை மலையாக
விருத்தியென மலையாச் செய்தார்.
சென்னியிலே யொருசோதி யனுதினமுந்
தெரியவருள் செய்வா யென்று
ரென்னுழந்த வடியவர்க்கா விறையவனு
மிரங்கியிவை யியம்ப லுற்றான்.

இ-ள். அன்ன வாகனத்திலேறுகின்ற பிரமனும், கருடவாகனத்தில்வருகின்ற விட்டுணுவும், மலரகிதராகிய சுவாமி அக்கினிப் பிரகாசத்தைமறைத்து, மற்றமலைகள்போ லிருக்கவேண்டுமென்று கேட்க, அப்படியே மலையுருவாகச்செய்தார்; இந்தமலையினுச்சியில் ஒருபிரகாசம் எங்களுக்குத்தெரியும்படியாகக் கிருபைசெய்யவேண்டுமென்றார்கள்; அப்படிச்சொன்ன தொண்டர்களுக்காக இரங்கிச் சுவாமியுந் திருவாய்மலர்ந்தார். எ-று. (அ0)

கார்த்திகைக்குக் கார்த்திகைநா ளொருசோதி
மலைநுனியிற் காட்டா நிற்போம்
வாய்த்தவந்தச் சுடர்காணிற் பசிபிணியில்
லாதுலகில் மன்னி வாழ்வார்

லே! திரிபுரமல்லலே! நான் எவ்வளவு! உமக்கு [illegible] ஒரு
பொருளாகக் கோபஞ்செய்ய வேண்டாம். எ-று. (எக)

இ-ள். அப்படியே லிங்கமாகினோம், பக்தியுடன் பூசிப்ப

பார்த்திவர்க்கு மருந்தவர்க்கு மிடையூறு
தவிருமிது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தி லிருபத்தோர் தலைமுறைக்கு
முத்திவரங் கொடுப்போ மென்றார்.

இ-ள். பிரமவிட்டுணுக்களே? * கார்த்திகைமாதத்தில் கிருத்திகைநட்சத்திரத்தில்மலையினுச்சியில் ஒருபிரகாசங் காண்பிப்போம்; அப்படிபொருந்திய சுடரைக்கண்டால் பசியும் வியாதியுமில்லாமல் உலகத்தில்நிலைபெற்றுவாழ்வார்கள்; இந்தச்சோதியைக்கண்ட அரசர்களுக்கும் அரியதவசிகளுக்கும் இடையூறுநீங்கும்; இதைப்பணிந்தவர்கள் தரிசித்தவர்களுடைய கோத்திரத்தில் இருபத்தொருதலைமுறைக்கும் முத்திவரங்கொடுப்போமென்றார் அருணாசலேசர். எ-று. (அக)

மரணபவ மறுக்கநல்ல மருந்தாகு
மதற்குமலை மருந்தென் பேர்பெ
ருணைவடி வாதலினா லருணகிரி
பெனுமொருபே ரதனை யோர்கால்
தரணியிலே யுரைத்தவர்க்கு முக்கோடி
யஞ்செழுத்துச் சரித்த தாமென்
றிருணிலவு மிடற்றிறைவ னிசைக்கமகிழ்ந்
திறைஞ்சியவ ரிசைப்ப தானார்.

இ-ள். இறப்பினையும் பிறப்பினையும்நீக்குதற்கு மருந்தானபடியினாலே இந்தமலைக்கு மலைமருந்தென்றும்பெயர், இந்தமலை சிவப்புநிறமானபடியினாலே அருணகிரியென்றும் ஒருபெயர், அதை ஒருதரம் பூமியில் சொன்னவர்களுக்குப் பஞ்சாக்ஷரத்தை மூன்றுகோடிதரம் உச்சரித்ததற்குச்சமானமாகுமென்று நீலகண்டத்தை

---

* அனல்வடிவினின்றும் இலிங்கமாகக் காட்சிகொடுத்தகாலம் மகாநிசிக்காலமாகிய அர்த்தராத்திரிக் காலமாகலின், மானுடதினப்படி கார்த்திகைமாதக் கார்த்திகை சொல்லப்பட்டது.

யுடையசிவன் அருளிச்செய்ய, பிரமவிட்டுணுக்கள் சந்தோஷத்தையடைந்து சுவாமியைவணங்கிச் சொல்லுவார்கள். எ-று. (அஉ)

அடுத்தருண கிரியானே யுனக்குவிண்ணீ
 ரலதுபுன லாட்டுவா ரார்
தொடுத்தவுடுத் திரளலது திருமுடிக்கு
 மணிமாலை சூட்டுவா ரார்
கடுத்திகழு மிடற்றோனே கதிர்களன்றி
 மணித்தீபங் காட்டுவா ரா
ரெடுத்திறைஞ்சிப் பூசைசெய்ய விதன்கீழோ
 ரிலிங்கவடி வெடுப்பா யென்றார்.

இ-ள். அருணாசலேசுரரே? மலையாகியவுமக்கு ஆகாயத்தில் நின்றும்பெய்யாகின்ற மழையேயல்லாமல் ஜலங்கொண்டுவந்து அபிஷேகஞ்செய்கிறவர்களார்? நக்ஷத்திரக்கூட்டங்களே முத்துமாலையாவதல்லது வேறேமுத்துமாலை சூட்டுகிறவர்களார்? சூரியகிரணமே தீபமாவதல்லாமல் தீபங்கொண்டுவந்து வேறே காட்டுகிறவர்களார்? ஆனபடியினாலே, நாங்கள் அபிஷேகமுதலானவைகள்செய்து பூசைசெய்வதற் கிந்தமலையின்கீழ் ஓரிலிங்கவடிவமா யெழுந்தருளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். எ-று. (அ௩)

அன்னதுவா யிருக்குதுநீ காமியத்தி
 லருச்சியுமென் றசலப் புக்கா
ரெங்கிலமும் புகழவங்கோர் சிவனுருவ
 முளைத்ததுகண் டிறைஞ்சியேத்தி
மன்னியபூ மழைபொழிந்து பரவசமாய்
 மகிழ்ந்தாடி மயனைக் கூவித்
தன்னிகரில் கோபுரமு மண்டபமு
 மணிமதிலுஞ் சமைப்பித் தார்கள்.

இ-ள். அப்படியே இலிங்கமாகிறோம் பத்தியுடன் பூசியுங்களென்று அந்தமலையினுள்ளே மறைவுகோலஞ்செய்தார்; எந்தத் தேசமும்புகழும்படியவ்விடத்தில் ஓரிலிங்கந்தோன்றிற்று; அதைக்கண்டுவணங்கித்தோத்திரஞ்செய்து, புட்பவருஷம்பொழிந்து, பரவசமாய்ச்சந்தோஷமடைந்து, ஆநந்தக்கூத்தாடி மயனென்கிறதேவதச்சனைக்கூப்பிட்டு ஒப்பில்லாத கோபுரங்களும் மண்டபங்களும் அழகுபொருந்திய மதிலுஞ் செய்வித்தார்கள். எ-று. (அச)

அழியாத வளநகருந் தீர்த்தமுந்நாற்
 றறுபதுங்கண் டழகுசெய்தார்
வழியாநீர்ச் சுரநதியுஞ் சுரதருவுங்
 கேணிகளு மரமுமான
வொழியாம விமையவரு மிருடியரு
 மனிதரென வுருவங்கொண்டார்
விழியால விடமனைய கணிகையரா
 யரம்பையரு மேவினாரே.

இ-ள். ஒருகாலத்துமழியாத வளப்பமுள்ளநகரமும், முந்நாற்றறுபதுவகையாகியதீர்த்தமும் உண்டானதுகண் டழகுசெய்தார். வழியாதசலத்தையுடைய ஆகாயகங்கையும், கற்பகவிருட்சமும்; கிணறுகளும்மரங்களாயின, நீங்காமல் தேவர்களும் ரிஷிகளும் மனிதவடிவங்கொண்டு பிறந்தார்கள்; விஷம்போன்ற கண்களையுடையதாசிகளாக அரம்பாஸ்திரீகள் பிறந்தார்கள். எ-று. (அ௫)

காலையிலே முழுகிமர வுரியுடுத்துச்
 சிவந்தசடை கட்டிநீறு
மேலணிந்து கண்டிகைபூண் டனமுதலா
 மஞ்சனத்தான் மிகுத்தசாந்தான்

மாலையினாற் சிவபூசை புரிந்தண்ணா
மலையதனை வலங்கொண்டேத்தி
யேலவொரு பதினாலா யிரவாண்டு
கழிந்ததற்பின் னிறைவரானார்.

இ-ள். பிரமவிட்டுணுக்கள் இருவருங்காலையில்முழுகி மரவுரி தரித்துக்கொண்டு, சிவந்தசடைகட்டி விபூதியைத் தேகமெல்லாந் தரித்து உருத்திராக்கமாலை பூண்டுகொண்டு, அன்னமுதலாகிய திருமஞ்சனத்தினாலும் சந்தனத்தினாலும் மாலையினாலுஞ்சிவபூசை செய்து திருவண்ணாமலையைப் பிரதக்ஷணஞ்செய்துவணங்கிப் பதினாலாயிரம்வருஷம் ஆனபின்பு சுவாமியினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தங்கள்பதிக்குப்போய்த் தங்களதிகாரத்தைப் பெற்றுக்கொண்டார்கள். எ-று. (௮௬)

ஆசைதருந் திருவருணை சமைந்ததற்பின்
கயிலைமலை யாசைபோயிற்
றீசனுக்குங் கனகமலை யிதுவாயின்
வெள்ளிமலை யினிமேலென்னாங்
காசிமுத லெடுத்துரைக்குஞ் சிறப்புடைய
தலமேழுங் கனகநாடு
மாசகன்ற கதிர்தோன்ற வொளியிழந்த
வுடுக்கணம்போல் வளமைதேய்ந்த.

இ-ள். சுவாமிக்கு ஆசைகொள்ளும்படி திருவருணாசலத்தலம் அமைந்தபிறகு, கயிலைமலையிலிருக்கும் ஆசைவெறுத்தது; இந்தமலையே பொன்னுருவங்கொள்ளுமாயின், வெள்ளிமலையின்மேலாசையுண்டாகுமா? காசிமுதலாகச் சொல்லப்பட்ட * ஏழுதலங்களும் தேவலோகமும் குற்றநீங்கிய சூரியனுதயமாகப்பிரகாசமிழந்த நக்ஷத்திரங்கள்போல ஒளிமழுங்கிப்போயின. எ-று. (௮௭)

* அரியயனு மளவிடுதற் கரியமலை
நிலையுரைக்க வரிதென் றாலுந்
தெரியவுனக் கறிந்தபடி சிறிதுரைத்தே
னினியுரைக்குந் திறமே தென்றான்
வரிசைபெறு ‡ மார்க்கண்ட முனிமகிழ்ந்து
பணிந்துமையாண் மலையிற் றோன்றி
யுரியசிவ னிடங்கலந்த கதையுமுரைத்
தருளுகென வுரைப்ப தானார்.

இ-ள். நந்திதேவர் மார்க்கண்டேய ரிஷியைப்பார்த்து, விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும் அறிதற்கரிதாகிய திருமலையின் சிறப்பை என்னால் சொல்லுதற்கரியதென்றாலும், எனக்குத்தெரிந்த அளவில்சிறிது உமக்குத்தெரியும்படி சொன்னேன்; இனிச்சொல்லவேண்டியதென்னவென்றால், வரிசைபெற்ற மார்க்கண்டேயரிஷிசந்தோஷித்துவணங்கி, சுவாமீ! பார்வதியார் இமாசலத்தில் அவதாரஞ்செய்ததும், சுவாமியைநோக்கித் தவஞ்செய்து அவரிடப்பாகம்பெற்றதுவுஞ் சொல்லவேண்டுமென்று கேட்கச் சொல்லத்தொடங்கினார். எ-று. (௮௮)

இரண்டாவது,

திருமலைச்சருக்கம்

முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - [illegible].

---

* காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை, மதுரை, மாயா, அயோத்தி என்பன சத்தமுத்தித் தலங்களாம்.

* அரி — பகைவரையழிப்பவன். அயன் — பிறத்தலில்லாதவன் இவை உபசாரம். ‡ மார்க்கண்டர் — மிருகண்டு முனிவரின் புத்திரர் இது வடமொழித் தத்திதாந்தபம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவவதாரச் சருக்க வசனம்.

காலகாலன்றன் றிருவருள்பெற்றுச் சிவன்முத்த நிலையடைந்த மார்க்கண்டேயமுனிவரே! முன்னர்நாளிற் பிரமாவினது புத்திரர்களுள் ஒருவனான தக்கனென்பவன் சிவபெருமானை நினைந்து பற்பலவருடம் அரிய தவத்தைப்புரிந்து, அகில அண்டகோடிகளையெல்லாம்பெற்றருளிய பரமமாதாவாகிய உமாபரமேசுவரியைத்தனக்குக் குழவியாகப்பெற்று, இறைவனுக்குத் திருமணஞ்செய்து கொடுத்தான். சிவபெருமான் இவனது அகங்காரத்தை நோக்கி, ஆங்குத் திருமணக்கோலத்திருந்தவாறே மறைந்தருளினார். அதனால் தக்கன் சினந்து நிந்தித்தான். பின் ஒருகால்கயிலைக்குப்போனால் தனக்குமிக்கமரியாதை நடக்குமென்றுநினைத்துச்சென்றான். ஆங்கு இவன்வரவுணர்ந்த சிவகணங்கள் இவனைப்பிடரிற்பிடித்துத் தள்ளி, நின்னிடம் போவாயாகவென்று கூறினர். தக்கன் பின்னருங்கொடுங்கோபமுற்றுச் சிவபெருமானுக்கு எதிராகச் சகலதேவர்களையும் அழைத்துவைத்து, ஓர் யாகஞ்செய்யத்தொடங்கினான். அதுகாலை எம்பிராட்டியார் சிவபெருமானது திருவடிகளில்வணங்கி, எந்தைசெய்யும் யாகத்தைப்போய்ப் பார்த்துவருதற்கு விரும்புகின்றேனென்று கேட்டார். ஆதிபகன் அவ்வாறு பார்த்துவருதியென விடைகொடுத்தருளினார், அம்மையார்சென்று தமது வளர்த்ததாயெனப்படும் வேதவல்லியைக்கண்டனர். அவள்யாதொன்றும்பேசாமலும் உபசரியாதும்வாளா இருந்தாள். தந்தையெனப்படும். தக்கனிடம்போயினார். அப்பாதகனும் யாதோர்உபசாரணையும்பண்ணாது வாயில்வந்தவாறு பரமபதியாகிய சிவபெருமானையும் தேவியாரையும்நிந்தித்தான். நாராயணியாகிய அம்மையார் செவிபு

சத்து, எம்மைநிந்தித்ததைப் பொறுத்தோம். எமதுபரமனை நிந்
த்தனை. அதுமகாபாதகமாகும். அந்நிந்தனைகளையெல்லாங் கேட்
சும்மாவிருந்தநீவிர் எல்லா மதிபாதகராய் அத்தண்டனையை
பவிப்பீர்கள். இந்தயாகசாலை பிணங்கள்மலிந்த சுடுகாட்டாகத்
ன்றுக என்று சபித்துச் சினத்துடன் கயிலைவந்து கண்ணுதற்
ந்தார்.

சிவபெருமான் தேவியாரது திருவுள்ளத்தையுணர்ந்து, சிறி
வகுளிகொண்டு ஆயிரமுகங்களையுடைய உக்கிரவடிவத்தையெ
தருளினார். நெற்றிக்கண்களினின்றும் அக்கினிப்பொறிகள் சி
த்தொடங்கவே, அக்கண்களினின்றும் ஆயிரந்திருமுடிகளும்,
க்கர்வானம்போன்றமேனியும், மகா உக்கிரமும், முக்கண்களு
சிவந்தசடாமுடியும், நரசிங்கத்தின்றோலாகிய உத்தரியமும், பு
தோலாகிய கச்சையும் உடையவராய், நஞ்சுகால திருவாய்கள்
முழக்கஞ்செய்யாநிற்ப; நெற்றிக்கண்கள்கொதிப்ப, கூப்பியகர
டன் எமது ஐயனாகியவீரபத்திரக்கடவுள், அடியேனையழைத்
ன்ன? அழைத்ததென்னவென்று தோன்றினார். சிவபெரு
, குமாரனே ! தக்கனது யாகத்தை யழித்து வருதியென்று
ளையிட்டார். வீரபத்திரக்கடவுள்மிக்கசந்தோஷமுடையராய்,
தயாரது திருவடிகளைவணங்கி விடைபெற்றுப்பக்கத்தினின்
தகணங்களும் பேய்களும் சூழச்சென்றார். (பரமேஸ்வரி தம
ருமேனியின் கருநிறத்தைக் கையாற்றடவியெடுத்துவீசப் பத்
காளிதோன்றினள் என்றும், அவளையும் இவருடன்கூட்டி, அ
குவேண்டுங் காளிக்கூட்டங்களையும் அலகைகளையும் சேர்த்து
ப்பினராம். ஏனெனில் யாகசாலையிலிருந்த தேவப்பெண்கள்,
வயத்தினிழார், தக்கன்மனைவியாம் வேதவல்லி இந்திராணி
வதி இலக்குமிமுதலியபெண்களைத்தண்டிக்கும்பொருட்டாக.
வாறுகந்தபுராணம் உரைத்தது.) சகல பூதங்கள் சூழ்ந்து சாம
ட்டவும், வாத்தியங்கள்கொட்டவும், குடை, கொடி, ஆலவட்ட

முதலியனபற்றவும் வீரபத்திரக்கடவுள் ஆயிரம்யானைகள் பூட்டப்பட்டதேரிலேறிச்சென்றார். பலப்பலபூதங்கள் பலபலவடிவங்களைக்கொண்டுசென்றன. அப்பூதங்களின் வல்லமையைச் சொல்லுதல் யார்க்குமரிதேயாம்.

இவ்வாறு யாகசாலைக்குச்சென்றவுடன் பூதங்கள் தேவர்கள கிய அதிதியின்பிள்ளைகளை யெடுத்தெறிந்தார்கள். அப்போதுதிக்குப்பாலகர் எண்மரும்வந்துவளைத்தார்கள். எட்டுப்பூதங்கள் அவர்களையும் வாகனங்களையும் எடுத்து எறிந்தன. எறிபட்டவர் மீண ம்வந்து போர்புரிதல்கண்டு வீரபத்திரக்கடவுள் எட்டுப்பாணங் ளைச்செலுத்தி அவற்றால்துளைபட்டு இந்திரன் குயிலாகப்பறந் ன். மற்றையோர் வீழ்ந்துமூர்ச்சிக்கலாயினர். இயமன் இறந்தான் அக்கினியின் எழு எனும்நாக்கள் வெட்டப்பட்டன. யாக கர்த்த வாகிய எச்சத்தன் றலை வெட்டப்பட்டது. வேதவல்லியின் காதுகளிரண்டையும் அறுத்தார். தக்கன் றலையை அறுத்து வீழ்த்தி ர். மற்றைய முனிவர், வசுக்கள், ஆதித்தியர் முதலாயினோர்க்கு தக்கதண்டனைசெய்ய இறந்தனர். பகன், பூடா என்னும் இருசூ யர்களுக்குமுறையே கண்களும்பற்களும் தகர்ப்பட்டன. சந்தி ன் நிலத்தில்தேய்க்கப்பட்டான் இறந்ததேவர்கள் பசாசுகளாகி வும்போர்புரிய அவற்றையெல்லாம் அடித்துக்கொன்றார். பூத கள் யாகசாலையிலுள்ள பொருள்களையெல்லாம்வாரிவாரியுண்ட பிரமன் ஒளித்திருந்து இறந்தவர்களைப் படைத்துப்படைத்து தான். அதுவறிந்த யானைமுகவனுக் கிளையோராம் வீரபத்தி அவனுடன்போர்செய்து அவன் றலைகளையும், மானசபுத்திரர்க யுங்கொன்றார். விட்டுணு கருடன்மேல்வந்து பாணங்களைச் செ த்த, அவற்றையெல்லாம் இமைக்குமுன் விலக்கிவில்லையுமறுத்த மாயன் விற்போர்செய்தற்கு வலிமையின்றிக் கத்தியை யெடு அதனையும் தகர்த்தார். கருடனையொரு பாணத்தாற் கொன்று தரிசனம் என்னுஞ் சக்கரத்தை வாசுதேவன் பிரயோகித்தா

அது பயந்து சுவாமியின் றிருவடிகளில்விழுந்து வணங்கிற்று. விட்டுணு பயந்து வருத்தமுற்று, முன்போல வேறொரு மீன்வடிவமெடுத்துக் கடலிலோடி யொளித்தான். எல்லோரும் இறந்து யாகசாலை சுடுகாடாயிற்று. வீரபத்திரக்கடவுள் சென்று அம்மையார்க்கும் அப்பனுக்கும் அறிவிக்க, அவர்கருணையுற்றுச்சென்று அனைவரையு மெழுப்பினர், அவர்கள் எழுந்து தம்குற்றங்களை எல்லாம் பொறுத்தருள வேண்டுமென்று துதித்துப் பன்முறை வணங்க, அவர்க்கருள் புரிந்து விடையளித்து, பரமனுந்தேவியுங் கயிலைவந்தடைந்தார்.

அப்போது பரமேசுவரி, சிவநிந்தை புரிந்த தக்கனுக்கு மகளென்னும் தாக்ஷாயிணி யென்னும் பெயரையும், அதுபோதுகொண்ட உடலையும் வைத்திரேன் என்று சிவபெருமான் றிருவருளால் அவ்வுடலைவிட்டு வேறொருவுருவம் எடுத்து, மலையரசனுக்கும் மேனைக்கும் குமாரியெனத் தாமரைமலர்மீது கிடந்தார். அதனைத் தவஞ்செய்த மலையரையனும் மனைவியும் எடுத்து அன்புடன் வளர்க்க விருந்தனர். நாரதர் ஒருநாள் அங்குவந்து, அம்மையாரது விசேடங்களை யறிந்துச் சென்றார். சிவபெருமான் ஞானயோகம் புரியாநின்றார். இறைவி அவரது திருத்தொண்டாகிய தவத்திலே காலத்தைக் கழித்துவந்தார். இங்ஙன மிவ்வாறிருக்கத் தேவர்கள் யாவரும் பிரமனை நினைத்துத் தொழுதார்கள். அவன் றோன்றி நம்முகம் வாட்டமுற்றதென் என்று வினவ, எம்மையெல்லாம் தாரகன் என்னும் அசுரன் எதிர்த்து இவ்வாறு பங்கஞ்செய்தான் என்றார். மலரோன் சொல்வான். தேவிர்காள்! என்னாலாவது, விட்டுணுவினாலாவது, வேறெவராலாவது அவனைக் கொல்லல் முடியாது. சிவபெருமானுக்கும் உமைக்கும் குமாரர் தோன்றினாற்றான் அவன் அழிவான். ஆதலால் அவர்களிருவருங் கூடும்படி மன்மதனை யனுப்புவேமென்று, அவனைப்போய் மயக்குமாறு கேட்டனர். மன்மதன் பலவாறெடுத்து உண்மைகளைக்கூறியும் பிர

மன்முதலியோர் சம்மதிக்காது சாபமிடுவேமென்ன, அதற்குப்பயந்து மன்மதன் றன் சேனைகளோடும் விருதுகளோடுஞ் சென்று, விருப்பு வெறுப்பில்லாத சிவபெருமான்மீது மெல்லமெல்ல அம்பையேவினன். தேவராசனாகிய சங்கரன் விழித்துப் பார்த்த அளவில் அவனுடல்கரிந்து சாம்பராயிற்று. சிவபெருமான் கயிலையில் முன்போலிருந்தார். இரதிதேவிபுலம்ப அவளைத் திருமணக் காலங்காறும் பொறுத்திரு வென்று கூறி, தேவர்கள் யாவரும் வந்து துதித்து இரங்குதல் கேட்டு, இறைவன் உமையைத் திருமணஞ் செய்தருளத் திருவுளங்கொண்டு, அகத்தியர் முதலாய எழு முனிவர்களையும் இமயமலை யரசனிடம் திருமணம் பேசும்படியனுப்ப, அவர்கள்போய்ப்பேச அளவிறந்த மகிழ்ச்சியுற்றுத் தம் விருப்பத்தை யறிந்து, திருமணத்திற்கு அலங்காரஞ்செய்தனர். மலையரையன் யாவர்க்கும் திருமண வோலைபோக்கினன். உலகத்திலுள்ள யாவரும் வந்தனர். பிரமன் முதலாயினோர் இறைவனை வணங்கி, உலகத்தவராகிய யாங்களுய்யக்கொண்ட திருவிளையாட்டன்றிவேறென்னை. அவ்வணஞ் செய்தருளுந் திருவிளையாடலுக் கேற்பத் திருமணக் கோலங் கொண்டருள வேண்டுமென்று ஆபரணங்களை முன்கொண்டுவந்து வைத்தார். அவைகளை யடியார்க் கெளிய பெருமான் இசைந்து ஏற்க, திருமணக் கோலஞ்செய்தனர். சிவபெருமான் இமயமலைக்குச் சகல கணத்தவர்களோடுஞ் சென்றருள, அங்குள்ளார் யாவரும் அரகர மகாதேவ! என்றார்ப்பொலி கரையிறந்த மகிழ்ச்சியுடன் பணிந்து துதித்தனர். இறைவனார் அவரவர்க்குத் தக்க அருள்புரிந்து, திருமணச் சாலை சென்று அரியணைமீது அமர்ந்தனர். பலபல் வினோதங்கள் நிகழாநின்றன. இலக்குமி சரஸ்வதி முதலாயினோர் இறைவியை யலங்கரித்து மணச்சாலைக்குக் கொண்டுவந்தனர். யாவரும் போற்றும்படி மலையரையன் தன்மனைவி மேனை என்பாள் நீர்வார்க்க, இறைவி திருக்கரத்தைப் பெருமான் கரமலரில் வைத்துத் தத்தஞ்செய்து கொடுத்

தான். மற்றைய திருமணச் சடங்குகளைப் பெருமான் ஆஞ்ஞையால் பிரமன் முடித்தான். யாவரும் வணங்கினர். அதுகாலை இரதிதேவி வந்து மங்கிலியப் பிச்சையென்று வணங்கி நிற்ப, விட்டுணு முதலியோரும் போற்ற இறையவன் றிருவுளக் கருணையால் அவனை முன்போலத் தோன்றச்செய்து யாவர்க்கும் விடையளித்துக் கயிலைசேர்ந்தார். அங்குத் தாமும் உமாதேவியாரும் சகலவுயிர்களுக்கும் போகம்நிகழுமாறு இனிதுற்றார். பின்னர்ச் சுப்பிரமணியப் பெருமான் றோன்றி, தேவர்க்கு வைரியாயிருந்த * தாரகன் என்னும் அசுரனுடன் பத்துநாட் போர்புரிந்து அவனைக்கொன்று தேவரைக் காத்தருளினார். இவற்றானே பார்வதிதேவியார் இமயமலையரசனுக்கு மகளாகத் திருவவதாரஞ் செய்ததும், சுப்பிரமணியப் பெருமான் அவதரித்ததும் கூறினோம்.

திருவவதாரச் சருக்க வசனம்

முற்றிற்று.

---

* இந்தத் தாரகன் என்பான் சூரபன்மனது தம்பியாந் தாரகனல்லன் திரிபுரத்து அசுரர்களாகிய தாரகாக்கன், கமலாக்கன் வித்துன்மாலி என்னும் மூவர்க்கும் தந்தை யிவனாகும். இவன்சரித்திரவிரிவைச் சிவரகசியம் திருக் கூவப்புராணம் என்பவற்றினும் யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி மகாவித்வான் நா-கதிரைவேற்பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டு, இவ் வித்தியாரத்நாகர அச்சியந்திர சாலைக்காரரால் பதிப்பிக்கப் பட்ட சுப்பிரமணிய பராக்கிரமம் என்னும் நூலினும் பார்க்கக் காண்க.



தக்கன் பரமனையிகழ்ந்து யாகஞ்செய்யவும், அதையறிந்த பரமன் வீரபத்திரராலே யாக
த்தை யழிக்கவும், பின்பு பரமனைப் பாணிக்கிரகணஞ்செய்ய பார்வதி பர்வதராஜனுக்குப்பெ
[illegible]



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மூன்றாவது,

பார்வதிதேவியார்
திருவவதாரச் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பன்னிருவர் பதிஞெருவ ரெழுவரெண்மர்
திசைக்கிறைவர் பணிநாட் டுள்ளோர்
கின்னரர்கிம் புருடர்சித்த ரியக்கரிமை
யவர்முனிவர் கிளையி னுள்ளோர்
மன்னுமல ரவன் றிருமால் கலைமடந்தை
மலர்மடந்தை மகிழ்ந்து சூழ
முன்னவனை யிகழ்ந்து தக்கன்
முடியாத பெருவேள்வி முடிக்கலுற்றான்.

பூருவகதை.

கேளும் மார்க்கண்டேயரே! முன்னாளிலே பிரமனிடத்திற்
பிறந்த தக்கனென்பவன், அரிய தவஞ்செய்து உயர்ந்தவரங்களைப்

பெற்றுக்கொண்டு மிகவும் பிரசித்தனாகி வாழுகிறகாலத்தில், பார்வதி தேவியார் தன்னிடத்தில் பிறக்க அவரைச் சுவாமிக்குத் திருக்கலியாணஞ்செய்து கொடுத்து மாமனாராகும்படி வரம்பெற்று, அந்தப்படி செய்தபின்பு, ஒருநாள் இவன் சுவாமியினுடைய சபைக்குப் போனான்; அவ்விடத்தில் சுவாமி தனக்கு எழுந்து மரியாதை செய்யவில்லையென்கிற கோபங்கொண்டு தன்னுடைய வீட்டுக்குவந்து சுவாமியைப் பார்க்கிலும் உயர்வை யடையவேண்டுமென்று எண்ணங்கொண்டு.

இ-ள். பன்னிரண்டு சூரியர்கள், பதினொருருத்திரர்கள், சத்தரிஷிகள், அஷ்டதிக்குப் பாலகர், நாகலோகத்தார், கின்னரர், கிம்புருடர், சித்தர், யக்ஷர், தேவர்கள், முனிவர்கள், நிலைபெற்ற பிரமன், விஷ்ணு, சரஸ்வதி, இலக்குமி மிகவுஞ் சந்தோஷம் அடைந்து சுற்றிக்கொள்ள, எல்லோருக்கும் முதல்வராகிய பரமசிவனை நிந்தித்து நிறைவேற்றாத பெரியயாகஞ் செய்யத் தொடங்கினான். எ-று. (க)

எந்தைசெயு மகம்பார்க்க விடையருளென்
றிறைக்கிறைவி யிசைத்தா ளுந்தை
புந்தியிலா திகழ்ந்தனனென் றுரைத்தனனீ
யெனைவேண்டிப் பொறுப்பா யென்று
வந்தனஞ்செய் தனளவளை நகைபுரிந்து
கடிதுசென்று வருவா யென்றான்
கந்தமலர்க் குழலாளுந் தந்தைமகந்
தொடங்குகன தலத்தைச்சார்ந்தாள்.

இ-ள். பார்வதி தேவியானவள் தகப்பனாகிய தக்கன் யாகம் பண்ணுவதைக் கேட்டு, சுவாமீ! என்னுடைய தகப்பன்செய்கிற வேள்வியைப் பார்த்து வருகிறதற்கு உத்தரவு கொடுமென்று கேட்க, அதற்குசுவாமியானவர் உன் தகப்பன்புத்தியில்லாமல்என்னை மிகவும் நிந்தித்திருக்கிறானே. நீ போகலாமா வென்றுசொல்ல,

அதைக்கேட்டுச் சுவாமி என் தகப்பன் செய்த இந்தக் குற்றத்தை என்னைவேண்டிப் பொறுக்கவேண்டுமென்று நமஸ்காரஞ் செய்த போது அந்த அம்மையைப்பார்த்து நகைத்து நல்லது நீபோய்ச் சீக்கிரதில் வந்துசேரென்று சொல்லப் பார்வதியும் தகப்பன் யாகஞ்செய்கிற இடத்துக்குப் போனாள். எ-று. (உ)

தாயரைக்கண் டடிதொழுதா ளவடழுவா
திருந்தனடன் றந்தை யான
தீயவனைப் பணிந்தனளங் கவனுமிகழ்ந்
தானிகழ்ந்த செயலை நோக்கிப்
பேயிருக்குஞ் சுடலையெனப் பிழைபிறந்து
விடுகவுங்கள் பெருவாழ் வென்று
வாய்பிறக்குங் கொடுமைசொலி மறைந்தனளச்
செயலறிந்தான் மங்கை பாகன்.

இ-ள். பார்வதி தக்கன் யாகசாலைக்குப்போய்த் தன்னுடைய தாயை வணங்கினாள், அவள் இந்த அம்மையைத்தழுவி உபசாரஞ் சொல்லாமலிருந்தாள், அதன்பின்பு தீமைபொருந்திய தகப்பனை வந்தனஞ்செய்ய, அவனும் நிந்தித்தான், அதைப்பார்த்துக் கோபங்கொண்டு உன்னுடைய யாகசாலை வாழ்வு, பேயிருந்து விளையாடுஞ் சுடலையாகிப் போகக்கடவதென்று சபித்து, பிராட்டியார் மறைந்தார். அதனையறிந்தனர் உமாதேவி நாயகராகிய சிவபெருமான். எ-று. (ங)

கலி விருத்தம்.

உண்ணிலாவு வஞ்சிசெல்ல வொருவனாவி யுய்யுமோ
தண்ணிலா முடிக்குணின்று தழலைமொண் டிறைக்கையா
லண்ணல்வெம்பி முனிவுகொள்ளு மளவினெற்றி விழிதனில்
விண்ணடுங்க மண்ணடுங்க வீரன்வந்து தோன்றினான்.

இ-ள். (அக்கினியிற் சூடுபோலத்) தம்முடன் அபேதமாயிருந்ததேவியார் இங்ஙனம் கோபித்து வரத்தனியாய் தக்கனுயிரும் பிழைக்குமோ? சிவனது குளிர்ந்த சந்திரன் சிரத்திலே தானேயிருந்து நெருப்பைவாரிச் சொரிகின்ற படியினாலே அதிக தாபமடைந்து இந்தத்தக்கனுடைய பாவியினாலல்லவோ இவ்வருத்தம் உண்டாயிற்றென்று கோபித்துக் கொள்ளும்போது, அவருடைய நெற்றிக்கண்ணிலிருந்து வீரபத்திரர் ஆகாயவுலகமும் பூமியும்நடுங்கும்படி தோன்றினார். எ-று. (௪)

மஞ்சுபற்றி யுடல்கறுத்து மணிமயூர முடியுடன்
சஞ்சரிக்கு மேருவென்ன விடிமுழக்கு தழலின்வாய்
நஞ்சுகொப் புளிக்கநெற்றி நயனமுங் கொதிக்கமே
லஞ்சலித்த கையொடெங்க ளையன்வந்து தோன்றினான்.

இ-ள். மேகத்தைப்பார்க்கிலும் உடம்புகறுத்து மயிலின்நிறம்போன்ற மரகதரத்தினமிழைத்த கிரீடத்துடன் சஞ்சரிக்கின்ற மேருவுக்கு ஒப்பாகி இடிபோல் முழங்குகின்ற நெருப்பாகிய சொல்லையுடைய வாய் நஞ்சைக் கொப்புளிக்க, நெற்றிக்கண் கொதிக்கச் சிரத்தின்மேல் வைத்துக் கூப்பிய கைகளோடு எம் ஐயராகிய வீரபத்திரர் வந்து தோன்றினார். எ-று. (௫)

ஒழித்தசிங்க வுரிபுயத்தி னுத்தரீயமாகவே, கழித்தெதிர்ந்
துவல்லியத்தி னதளிசைத்த கச்சையாய், விழித்திமைக்கு
முன்னம்விண்ணின் வெளியடைத்தமேனியா, யழைத்ததெ
ன்ன வென்னவென் றெனையன்வந்து தோன்றினான்.

இ-ள். இரணியனைக்கொன்ற நரசிங்கத்தினுடையதோல் உத்தரியமாகவும், தாருகாவனத்துரிஷிகளால் விட்ப்பட்டுச் சுவாமியால்மரணமடைந்த புலியின் தோல் இடுப்புக் கச்சையாகவும், விழித்து இமைப்பதற்குமுன்னே ஆகாயமெல்லாமறைத்ததேகத்துடனே

என்னையழைத்தது என்னகாரணம் என்னகாரணமென்று வீரபத்திரர் வந்தார். எ-று. (௬)

முக்கணத்த னீர்கொடாது கனல்கொடுக்கு முகிலெனத்
தக்கன்வேள்வி யைத்தகர்த்து மீள்தியென்று சாற்றினா
னக்கணத்தி னுவகைபொங்கி யடிவணங்கி யேகினான்
பக்கநின்ற பூதநாதர் பாரிடங்கள் சூழவே.

இ-ள். என்னையழைத்தகாரியம் என்னவென்றுகேட்ட வீரபத்திரரைப்பார்த்து, மூன்று கண்களையுடைய பரமசிவன், சலத்தைப்பொழியாமல் நெருப்புகளைக்கக்கும் மேகம்போற்போய்த் தக்கனுடையயாகத்தை யழித்து வாவென்றருளிச்செய்ய, அக்கணமே வீரபத்திரர் அதிகசந்தோஷமடைந்து சுவாமியினது திருவடியைத் தொழுது பக்கத்தினின்ற பூதக்கூட்டங்களும் பேய்களுஞ்சூழப் போனார். எ-று. (௭)

நஞ்சுகொப் புளிக்குநாக நாலிரண்டு மாலையா
யஞ்சிரட்டி பூதநீல வாலவட்டம் வீசவே
குஞ்சரங்க ளெட்டையுங்கு தம்பையாக விட்டவெண்
கஞ்சுகத்தர் நால்வர்தூய கவரிநின்று வீசவே.

இ-ள். விஷங்கக்குகின்ற * அஷ்டமா நாகங்களை மாலையாகத் தரித்துக்கொண்டுபத்துப்பூதங்கள் நீலவர்ணமான ஆலவட்டம் வீசிக்கொண்டுவரவும், திக்கிலிருக்கும் † யானைகளெட்டையுங்காதிலே குண்டலமாகத்தரித்துக்கொண்டு, வெள்ளைச்சட்டையணிந்த நால்வர்பரிசுத்தமாகிய சாமரம்வீசவும்புறப்பட்டார்வீரபத்திரர். எ-று.

---

* அஷ்டநாகங்கள்—அநந்தன், வாசுகி, தக்கன், கார்க்கோடன், பதுமன், மகாபதுமன், சங்கபாலன், குளிகன். † யானைகளெட்டு—ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், ட்பதந்தம், சாருவபௌமம், சுப்பிரதீபம்.

தீயிருந்த வுதரவெம்மை-விண்பிழிந்து தீர்த்திடும்
பேயிரண்டு நூறுநூறு காகளம் பிடிக்கவே
வாயிரண்டு போலுமாலை மதியிடந்த பூதமோ
ராயிரங் கவிக்கமுத்தி னாதபத்தி ரங்களே.

இ-ள். வடவாமுகாக்கினி குடிகொண்டிருந்த வயிற்றினுடைய பசியை மேகங்களைப்பிழிந்துகுடித்து ஆற்றிக்கொள்ளுகின்ற இரண்டாயிரம்பேய்கள் எக்காளம்பிடிக்கவும், சந்திரனை இரண்டாகப் பிளந்து இரண்டுகடைவாயிலும் வைத்ததுபோலுமிருக்கும் ஆயிரம்பூதங்கள் முத்துக்குடைகள்பிடிக்கவும் புறப்பட்டார். எ-று. (க

மாயுமாயர் தந்தசங்கு கோடி கோடி மறுகவே
தீயின்வாயி னூர்திதந்த சிங்கநாத மூதவே
சாயுமெண்ணில் காலர்மேதி தந்தகொம் பிசைக்கவே
யாயிரங்க ளிற்றெருத் தனைத்ததேரி லேறினான்.

இ-ள். இறந்திறந்து பிறக்கிற அனேககோடி விஷ்ணுக்களுடைய கையிலிருந்த சங்குகளை அனேக பூதங்கள் வாயில்வைத்து ஊதிவரவும், இறந்த அக்கினிபகவான்வாயுபகவானேறுகின்ற ஆட்டுக்கடா கலைமான் இவைகளுடைய கொம்புகளை வாயில் வைத்து அனேகபூதங்களூதவும், இறந்துபோன எமராசர்களேறிய எருமைக்கடாக்களுடைய கொம்புகளைவாயில்வைத்து அனேகபூதங்களூதவும், ஆயிரம்யானைகள் கட்டியிழுக்கிற தேரிலேறினார்வீரபத்திரர்.

சிலகணங்க ளானையான சிலகணங்க டேரதா
யுலவுகின்ற சிலகணங்க ளோடுகின்ற வாசியாய்
மலைவுகொண்டு சிலகணங்கண் மனித தேவராயின
வலகைதானு மலகிலா தனந்தவேட மானதே.

இ-ள். அப்படி வீரபத்திரர் தேரிலேறினபோது, சிலபூதங்கள் யானைரூபங் கொண்டன; சில பூதங்கள் தேரினுருவங் கொண்டன; சில பூதங்கள் குதிரையாயின; சில பூதங்கள் மனிதரும்தேவருமாயின; எண்ணில்லாத பேய்கள் எண்ணிறந்த ரூபங்கொண்டு புறப்பட்டன. எ-று. (கக)

வீரையே முடங்கவுண்டும் விடாய்கெடாது மீளுமே
பாரவேழு பாருமுண்டு பசிகெடாது படருமே
கூரவே லெறிந்துகால னூடுகொள்ளை கொள்ளுமே
போரையே விரும்பிமுன் னடந்துசென்ற பூதமே.

இ-ள். வீரபத்திரர் புறப்பட்டவுடனே, யுத்தஞ்செய்ய விரும்பி அவருக்குமுன்னே நடந்த பூதங்கள் * எழுசமுத்திரத்து நீரடங்கலும் குடித்தாலும் விடாய்தீராமல் திரும்பும் ; பாரமாகிய எழுலகத்தையும் சாப்பிட்டும் பசிபோகாமல் அலைந்துகொண்டிருக்கும் கூர்மைபொருந்திய வேலாயுதத்தை எறிந்து எமனுடைய நாட்டைக் கொள்ளைகொள்ளும். எ-று. (கஉ)

கொண்ட லேழை யுஞ்சிவந்த குஞ்சிமீது சுற்றுமே
புண்டரீக ரண்டமும் புகைகொளுத்தி மீளுமே
யெண்டிசா முகத்தைநாடி யாகசாலை தேடுமே
சண்டவாயு வென்னவங்கை தட்டியோடு பூதமே.

இ-ள். பூதங்கள் எழுமேகங்களையும் பிடித்துச் சிவந்த தலைமயிரிலே சுற்றிக்கட்டிக் கொள்ளும்; அனேக பிரமாண்டங்களையும் புகையுண்டாக நெருப்பினால் கொளுத்தும்; எட்டுத்திக்குந்தேடியாகசாலையெங்கேயென்றுதேடும்; பிரசண்டவாயுபோலக் கைகளைக் கொட்டிக்கொண்டு வீரபத்திரர் பின்னே ஓடாநிற்கும். எ-று. ()

---

* எழுசமுத்திரங்கள்-உப்பு, தேன். கருப்பஞ்சாறு, தயிர், நெய், பால், சுத்தநீர் என்பன.

வெள்ளவாழி மதுநுகர்ந்து வீறுகின்ற சிலகணந்
துள்ளவந்து புவனமுற்றுஞ் சுற்றுகின்ற விறையையார்
தள்ளுகின்ற பேர்களென்று சாய்க்கநின்று நகைசெயும்
பள்ளிகொள்ளு முடனெழுந்து பரிவுகொண்டு பாடுமே.

இ-ள். வெள்ளமாகிய சமுத்திரம்போன்ற மிகுந்த மதுவைப் பானஞ்செய்து அதனால் வீருப்புமேலிட்டுச் சண்டைக்கு எழுந்தன; சிலபூதங்கள் துள்ளிக்கொண்டு உலகமெல்லாஞ் சுற்றிவரும்; சிலபூதங்கள் நம்முடைய சுவாமியைத் தள்ளுகிறவர்கள் யாரென்றுகேட்டு அவர்களைக் கொல்லுகிறதற்காக நின்று வீரநகைகொள்ளும்; சிலபூதங்கள் நித்திரைசெய்யும்; சிலபூதங்கள் உடனேயெழுந்து அன்புகொண்டு சிவனைக்குறித்துப் பாடும். எ-று. (௧௪)

வெதிர்சிலம்பு முரசுசங்கம் விருதுபம்பை யதிரவே
புதியகண்ட மணிதவண்டை புரிமதங்க மறுகநீள்
கதிகடந்து யாகசாலை கண்டுபூத கணமெலா
மதிதிமைந்த ரானபேர்க ளாவிவாரி வீசினார்.

இ-ள். வீரபத்திரர் புறப்பட்டவுடனே புள்ளாங்குழல், சிலம்பு, முரசு, சங்கங்கள், விருதாகிய உடுக்கை முதலான வாத்தியமுழங்கவும், பெரியமணி, தவண்டை, மிர்தங்கம், சத்திக்கவும், வழிமுழுதும்போய்த் தக்கனுடைய யாகசாலையைக் கண்டு எல்லாப்பூதக் கூட்டங்களும் அதிதியினுடைய பிள்ளைகளாகிய சகல தேவர்களையும் தூக்கி வாரிவீசினார்கள். எ-று. (௧௫)

காரிலேறி மையிலேறி கடாவிலேறி யலகைமே
லேரினேறி மகரமேறி யிரலையேறி யளகையாம்
பாரிலேறி மானமேறி பசுவிலேறி யெண்மருந்
தேரிலேறி வந்தவீரர் சேனைமாள மோதினார்.

இ-ள். மேகவாகனனாகிய தேவேந்திரனும், ஆட்டுக்கடாவிலேறுகின்ற அக்கினியும், எருமைக்கடா வாகனனாகிய யமனும், பேய்வாகனனாகிய நிருதியும், மகரவாகனனாகிய வருணனும், மான்வாகனனாகிய வாயுபகவானும், அளகாபுரியையாண்டு விமானத்திலேறுகின்றகுபேரனும் எருதுவாகனனாகிய ஈசானியனுமாகிய எட்டுப்பேர்களுந் தேரிலேறி எதிர்த்துக் கொண்டுவந்த வீரபத்திருடைய பூதகணங்களை யெதிர்த்தார்கள். எ-று. (௧௬)

வாளிசூலம் வேலுலக்கை வச்சிரங்க ணிச்சிவாள்
மீளிசேனை காவலாளர் வீழுமாறு வீசினார்
கூளிநா லிரண்டுசென்று கொடியவெண்மர் பரியெலா
மாளியோ டெடுத்தெறிந்த * வம்மனைக்கு நிகரவே.

இ-ள். அட்டதிக்குப் பாலரும் பாணம், சூலாயுதம், வேல், உலக்கை, வச்சிராயுதம், மழு, கத்தி இவைகளை வீரபத்திரருடைய சேனைத்தலைவர்கள் விழும்படி பிரயோகஞ்செய்தார்கள்; அப்போது எட்டுப் பூதங்கள் புறப்பட்டுத் திக்குப்பாலகர் எட்டுப்பேரையும், அவர்களேறிய வாகனங்களெட்டையும் அம்மனைக்குச் சமானமாக எடுத்தெறிந்தன. எ-று. (௧௭)

அலகைநா லிரண்டும்வீழ மவர்செய்பூத மோடவே
மலைவுகண்டு திக்குபாலர் வாகைமாலை சூடினார்
கலிதல்கண்டு வீரன்வாளி நாலிரண்டை யேவினா
னுலகபால ருடல்புகுந்து ளமுதமுண் டுலாயதே.

இ-ள். முன்னே எட்டுப்பூதங்களால் எறிபட்டு விழுந்த திக்குப்பாலகரெண்மரும், அந்த எட்டு பூதங்களும் கீழேவிழவும், மற்றைப்பூதங்களெல்லாம் ஓடிப்போகவும் யுத்தஞ்செய்து, வெற்றிமா

---

* அம்மனை என்பது மகளிராடும் ஒருவிளையாட்டு.

லைசூடிக்கொண்டார்கள்; அதுகண்ட வீரபத்திரர் எட்டுப்பாணத்தை விட்டார்; அவைகள்போய் எட்டுப்பேர்களுடலைத் துளைத்து அவ்வுடல்களுள் இருக்கிற அமிர்தத்தைப் புசித்து சஞ்சரித்தன. எ-று. (௧௮)

மருங்கிலிருந்து குயிலதாகி வச்சிரத்த னேகினா
னொருங்குமீச னளகையாளி நிருதிவாயு வருணனுஞ்
சுருங்கினார் கடாவிலேறி துஞ்சினா னழற்பிரான்
பெருங்கையேழு மீசனன்பர் பிறவிபோ லறுத்தனன்.

இ-ள். தேவேந்திரன், தன் வாகனத்தைவிட்டுக் குயில் வடிவங்கொண்டு ஓடினான்; ஈசானன், குபேரன், நிருதி, வாயு, வருணன் இவர்கள் தோற்று வெட்கத்தை யடைந்தார்கள்; எமன் இறந்தான்; அக்கினிபகவானுடைய எழுகையையும், சுவாமி அன்பருடைய பாவங்களை அறுப்பதுபோல் அறுத்துத் தள்ளினார் வீரபத்திரர். எ-று. (௧௯)

கச்சமற்ற வச்சமோடு கலைபதான வெச்சனா
ரெச்சனாக வுயிரைவாரி யுடலுரித் தெறிந்தனன்
பச்சைவல்லி யன்னையான பன்னிகா திரண்டையும்
வச்சிரத்தி னாலரிந்து மாமன்முன்பு சென்றனன்.

இ-ள். அளவில்லாத பயங்கொண்ட யாககர்த்தாவாகிய கலைக்கோட்டு மகாரிஷி பிராணனுந் தேகமும் வேறாகக்கொன்று உடலைஉரித்து எறிந்தார்; பார்வதியின் தாயாகிய தக்கனுடையபெண்சாதியின் இரண்டு காதையும் அறுத்துத்தள்ளி, மாமனாகிய தக்கனிடத்திற்குப்போனார் வீரபத்திரர். எ-று. (௨௦)

மிக்கருந்து சோமபானம் வீரபான மாகவே
யொக்கநின்ற யாகதண்ட மொன்றுகொண்டு குன்றுபோற்
றக்கனா ரெதிர்த்தபோது தலையரிந்து தள்ளினா
னக்கணத்தி லொன்றுசென் றரைக்கணத் தயின்றதே.

இ-ள். தேவர்கள்கூடிச் சோமபானஞ் செய்வதை நீக்கித் தனக்கு வீரமே பானமாகும்படி யாகசாலையிற் புகுந்து, யாகத் தம்பத்தைப் பிடுங்கிக்கொண்டு எதிர்த்த தக்கனுடைய தலையை மலைபோல் கீழேவிழ அறுத்துத் தள்ளினார்; அப்போது அந்தப் பூதகணங்களிலொன்று அரைநொடியிற்றானே அத்தக்கன் தலையைத் தின்றுவிட்டது. எ-று. (௨௧)

பசுக்களே றுருத்திரப் பசுக்களாவி தன்னையும்
வசுக்களாவி தன்னையு மருத்துதேவ ராவியும்
முசுக்கள்போ லொளித்திருந்த முனிவராவி தன்னையு
மசிக்கவீரன் விட்டசூல மள்ளியள்ளி யுண்டதே.

இ-ள். மாடுகளி லேறுகின்ற பசுப்போன்ற உருத்திரக்கூட்டங்கள் பிராணனையும்; அஷ்டவசுக்க ளுயிரையும், மருத்துவர்களுயிரையும், குரங்குகள்போல் ஒளித்துப் பதுங்கியிருந்த முனிவருடைய பிராணனையும், பரியாசஞ்செய்ய வீரபத்திரர்விட்ட சூலாயுதமானது எடுத்து எடுத்து * தின்றுவிட்டது. எ-று. (௨௨)

விழியினோ டருக்கர்பல்லை வேரறுத்து வாணிமா
வெழில்படைத்த துண்டநா விரண்டுதுண்ட மாக்கினான்
ழலமைத்த காண்மிதிக்க வமிர்தமுண்ட கலைநிலா
வழலவிக்கு மாறுதாளி லப்புவெண்ணெ யொத்ததே.

இ-ள். சூரியன் பற்களுங் கண்ணுந் தெரித்துக் கீழேவிழ அடித்துச் சரசுவதியைப் பிடித்து இரண்டாக நாக்கையறிந்தார்; இ

---

* தின்றுவிட்டதென்றது, இங்ஙனம் பிளந்து கொன்றது என்று பொருள் கொள்க.

லக்குமியை மூக்கறுத்தார்; வீரகண்டாமணியைத் தரித்தகாலினால் சந்திரனை மிதிக்க, அவன் நசுங்கித் தக்கனுடைய யாகசாலை நெருப்பை மிதித்ததனால் அந்த வெப்பந்தீர அப்பிய வெண்ணெய் போலானான். எ-று. (உக)

காயமண்ணில் விட்டதேவர் கரியமேனி யலகையாய்
மாயமாகி முன்னையாகம் வந்துதோன்றி யமர்செயத்
தூயசேனை யாயபேர் தொடர்ந்துசாக வமர்செய்தார்
பேயதா யிருக்கவும் பிணக்ககன்ற தில்லையே.

இ-ள். பூதகணங்களாலே இறந்துபோனதேவர்கள், கரியதேகத்தையுடைய பசாசாகி, மறுபடியும் முன்யாகத்திலே மாயமாய்த் தோன்றி எழுந்து சண்டைசெய்ய, அவர்களை வீரபத்திரசேனை அடித்துக்கொன்றார்கள்; ஆகையால் பேயாய்ப் போயியுந் துக்கம் நீங்கவில்லை. எ-று. (உஉ)

விதிபுனைந்த வோம குண்டம் வேறுபட்ட தென்னினும்
புதியசோறு மெள்ளினோடு பொரியும்வாய் புகட்டிமுன்
குதிகொணெய்க் கடாமெடுத் தொழுக்குபோதொர் கூளித
னுதரகுண்ட மனலெழுந்த வோமகுண்ட மானதே.

இ-ள். பிரமனாலே விதிக்கப்பட்ட யாகசாலை நாசத்தையடைந்தாலும், அதற்குபயோகமாக வைத்திருந்த சோறும், எள்ளும், பொரியும், ஒருபூதம் வாயிற்கொட்டிக்கொண்டு, நெய்க் குடங்களையெடுத்து மடமடவென்று உட்கொள்ளும்போது, அதனுடையவயிறே ஓமகுண்டமாகவும் உதராக்கினியே நெருப்பாகவு மிருந்தது. எ-று. (உ௩)

அட்டதிக்கு பாலரும் வசுக்களுங் குருக்களு
முட்டரான முப்பதிற்று மூன்றுகோடி தேவரும்

பட்டபோ தவர்தம்மெய்கள் பழுதுறாது தன்னுளே
யிட்டபூத வுதரமுன்னை யாகசாலை யொத்ததே.

இ-ள். அஷ்டதிக்குப்பாலகரும், அஷ்டவசுக்களும்தலைவராக வந்தகுருக்களும், முட்டிப்பட்டவராகிய முப்பத்துமுக்கோடி தேவர்களும் இறந்தபோது, அவர்கள்தேகம் வீணாகப்போகாமல், வீரபத்திருக்குமுன்னே அவருடைய சேனைகள் சாப்பிட்டபடியினால் அந்தபூதகணங்களுடையவயிறு யாகசாலையையொத்தது. எ-று. ()

கற்பகால முங்கெடாத கணமிதிக்க வமரர்த
மற்பமா முடம்பிரத்த மாவிகார மொத்ததால்
பற்பலா ரியக்கர்சித்தர் பண்டிசிந்து குடர்களாற்
சர்ப்பயாக மொத்ததன்று தக்கன்செய்த யாகமே.

இ-ள். கற்பகாலத்திலும் அழிவில்லாதபூதகணங்கள் மிதித்தபடியினால், தேவர்கள் அற்பமாகிய உடம்பினின்றும் பீரிட்ட உதிரம் யாகத்துக்குநெய்யெடுத்துச் சொரிதல்போலிருந்தது; பலபல யட்சர்சித்தர்களுடைய வயிறுபிதுங்கப்பட்டு அவர்களுடையகுடல் கொடிகொடியாகச் சிந்திக்கிடந்தது, சர்ப்பயாகஞ்செய்தலை யொத்தது அன்று தக்கன்செய்தவேள்வி. எ-று. (உ௭)

சிறந்ததிக்கு பாலராதி தேவர் சித்தர் முதலினோ
ரிறந்திறந்து போகவேத் னிறையிலே யியற்றினான்
பிறந்துவந்து வந்துபோர் பெருக்கினார் பிறந்தபேர்
மறந்துவீழ வீரன்மோதி மலரினானை யண்டினான்.

இ-ள். சிறப்புப்பொருந்திய திக்குப்பாலகர்முதலாகிய தேவர்கள், சித்தர்கள்முதலானோர் இறக்க இறக்கப்பிரமன் நொடிப்பொழுதில் அவர்களைப் படைத்துக்கொண்டே வந்தார்; அவர்கள் மறு

படியும்யுத்தஞ்செய்தார்கள்; (பிறக்கும் வரலாற்றையுணர்ந்து) அவர்கள்பின்னும் பிறக்காமலிருக்கும்படி பிரமனையடுத்துயுத்தஞ்செய்யத் தொடங்கினார் வீரபத்திரர். எ-று. (உஅ)

செத்ததேவர் மீளவுஞ் செருச்செயப் படைத்திடுங்
கைத்தலங்கள் வீழுமாறு கமலனை மோதினான்
* முத்தலைக்கொள்படையெடுத்துமுண்டகத்தர்சிந்தைசேர்
பத்துமைந்தர் சென்னியும் படிக்குளே பரப்பினான்.

இ-ள். இறந்துபோனதேவர்கள் மறுபடியுஞ்சண்டைசெய்யப் படைக்கும் பிரமனுடைய கைகளையறுத்துத் தள்ளினார்; மூன்று தலையையுடைய ஆயுதத்தினால் அவர்மனத்தில் உண்டாகிய பத்துப்பிரமருடைய தலைகளையும் குத்திப், பூமியில்விழத்தள்ளினார் வீரபத்திரர். எ-று. (உகூ)

அண்டகூட முண்டுமிழ்ந்த வாதிமாய னமர்செயத்
துண்டமேரு வெனவிளங்கு கருடன்மீது தோன்றியே
விண்டவாளி வருடமாக வீரன்மார்பில் வீசினான்
கண்டதுண்ட மாகவீரன் கையின்வாளி யேவினான்.

இ-ள். அண்டங்களை விழுங்கி உமிழ்ந்த முதல்வராகிய விட்டுணுமூர்த்தி சண்டைசெய்ய மேருகிராகவிளங்கிய மூக்கையுடைய கருடன்மேல் ஏறிக்கொண்டு அநேகபாணவருஷங்கள் வீரபத்திரர் மார்பில் படும்படியாகப் பொழிந்தார்; அப்படிவிட்ட பாணங்களை எல்லாம் கண்டதுண்டமாகத் தன்கைப் பாணத்தினால் அறுத்தெறிந்தார் வீரபத்திரர். எ-று. (௩௦

வையமுண்ட மால்வெகுண்டு வாள்விதிர்த்து வீசினா
னையனங்கோர் வாளியா லறுத்தெறிந்தோ ரம்பினாற்

---

* முத்தலைக் கொள்படை - சூலாயுதம்.

பையரா வருந்தியாவி பருகினான்மெய் கருகினான்
கையிலாழி யேவினான் பணிந்த தண்ணல் காலிலே.

இ-ள். விட்டுணு வில்யுத்தம் பண்ணுகிறதற்குச் சத்தியில்லாமல் கோபங்கொண்டு, ஒருகத்தியை எடுத்துச்சுற்றிவீசினார்; வீரபத்திரர், அக்கத்தியை ஒருபாணத்தை விட்டறுத்தெறிந்து ஒரு [illegible]த்தினால் பாம்பைக் கொல்லுகின்ற கருடனைக்கொன்றுவிட்டார்; அதுகண்டு துக்கத்தினால் உடம்பு கருகிப்போய்க் கையிலிருக்கிற சக்கிரத்தை வீரபத்திரர்மேல் பிரயோகஞ்செய்தார்; அஃதோடிவந்து சுவாமிகாலில் விழுந்துபணிந்தது. எ-று. (௩க)

எந்தைமுன் னளித்தவாளி யெங்கதத்திரளில் வீழவே
யந்தமெய் யொழிந்துபன்றி யரியின்வேட மாகிய
வந்துவந்து போர்தொடங்கி வாளின்வேலின் வவ்வினா
லுந்திவேறோர் சேலதாகி வாரிமீ தொளித்தனன்.

இ-ள். முற்காலத்தில், விட்டுணு ஆயிரம் தாமரை மலரைக்கொண்டு பரமசிவனைப்பூசித்து வருகிறபோது, இவர் பத்தியைப் பரிசோதிக்கவேண்டி * ஆயிரம்பூவிலே ஒருபூவைச் சுவாமிமறைத்துவைத்தார் விட்டுணு பூசைசெய்து அருச்சனைபண்ணிக்கொண்டுவரும்போது, ஒரு புட்பங்குறைய அதற்குப் பதிலாகத் தன்னுடைய தாமரைப்பூவொத்த கண்ணைப்பிடுங்கி அருச்சிக்கச் சுவாமிக்கு மனத்தில் சந்தோஷம்வந்து சக்கிராயுதம் கொடுத்தார்! அந்தச் சக்கிரத்தைத்தானே சுவாமிமேல்விட, அதுபயந்து காலில் விழவே, இனிமேல் இந்த ரூபத்தோடே நின்றால் பிழைக்கமாட்டோமென்று அந்த உருவத்தையொழித்துப் பன்றியாகவும், சிங்கமாகவும், ரூபமெடுத்து வந்து யுத்தஞ்செய்ய அந்தந்த உருவங்களை

---

* "யோவாமபாதார்ச்சித விஷ்ணுநேத்திரஸ் தஸ்மைதௌசக்ரமதீவஹிருஷ்ட." தஸ்மை ருத்திராயநமோ அஸ்து என்றதுவேதம் தமிழ்வேதங்களாலு முணர்க.

வாளாயுதத்தாலும் வேலாயுதத்தாலும், வீரபத்திரர் கொன்றார்; அதன்பின்பு மிகவும் பயந்து மீனுருவமெடுத்துச் சமுத்திரத்தில் விழுந்து ஒளித்தார். எ-று. (௧௨)

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

பழியுண்ட நெடுமாலும் பழையபடி
புவியுண்டு போனான் மேலா
தழியுண்டு தலைநாலுந் தடியுண்டா
னிமையவர்தந் தடியூ றுண்டார்
கழியுண்ட கனற்குண்டம் பேயிறைச்சி
யருந்துதன கலமே யான
தழியுண்டு மனமகிழ்ந்த மெய்த்தருமுனி
வரரெல்லா மழியுண் டாரே.

இ-ள். மண்ணையுண்ட மகாவிட்டுணுவுந் தோற்று மண்ணைவாயிற்போட்டுக்கொண்டு (அலைகடலில்) ஒளித்துக்கொண்டார்; பிரமன் தவிர்த்து நான்கு தலையும் அறப்பட்டிறந்தார்; தேவர்களும் தண்டத்தாலடியுண்டு இறந்தார்கள்; பூதகணங்கள், இறைச்சி சாப்பிடுகிறதற்கு ஓமகுண்டம் பாத்திரமானது அவிர்ப்பாகஞ் சாப்பிட்டு மனமகிழ வந்த முனி சிரேஷ்டர்கள் எல்லாரும் வீரபத்திரசுவாமியினா லிறந்தார்கள். எ-று. (௧௩)

இங்கிதுவாய் முடிந்ததற்பின் வீரனிறை
பதம்பரவி யிசைத்தா னெல்லா
மங்கனது முனிவாரி யருள்கூர்ந்து
மகத்திறந்தார்க் காவி யீந்து
மங்கிய பதங்களெலாம் பழையபடி
யுதவுதலும் வணங்கிப் போனார்
சங்கரியை முன்பெற்றா னன்பெற்றான்
றனக்காட்டுத் தலை பெற்றானே.

இ-ள். இவ்விடத்தில் இவ்வாறாக யாகசாலையோடு யாவரும் நாசமடைந்த பிற்பாடு, வீரபத்திரர் கைலாயத்திற்குப்போய்ச்சுவாமியினுடைய பாதத்தில்வணங்கி அங்குநடந்த சமாச்சாரமெல்லாஞ் சொன்னார்; அதுகேட்டருளிப் பரமசிவனுங் கோபமாறி கிருபை பிறந்து யாகத்திலிறந்தவர்கள் அனைவரையும் பிழைப்பித்துக் கேடில்லாத அவரவரிடங்களை யவரவர்க்குப் பழையபடியே அருளிச் செய்தலும்; அவர்கள் சுவாமீ! நாங்கள் விவேகமில்லாமையினால் செய்தகுற்றத்தைப் பொறுக்கவேண்டுமென்று நமஸ்கரித்து விடை பெற்றுக்கொண்டார்கள்; பார்வதியைப்பெற்ற தக்கனுக்கு மாத்திரம் நிந்தைசெய்ததற்கு அபராத அடையாளமாக ஆட்டுத்தலையை அவனுடலில் வைத்துப்பொருத்தி எழுந்திருக்கும்படி செய்தார். எ-று. (௧௪)

எந்நாதன் றனையிகழ்ந்தோன் புதல்வியென
வுலகுரைக்கு மிடுக்கண் மாறத்
தன்னாகந் தன்யோக சாதனத்தால்
விடுத்திமவான் றவத்தி னாலு
முன்னாக மைநாகன் றனைப்பயந்த
மேனையது முயற்சி யாலு
மின்னாக வவதரித்தா ளமரரெலாங்
கற்பகப்பூ வீசி னாரே.

இ-ள். எமக்குநாதராக இருக்கின்ற பரமசிவனை நிந்தித்த தக்கனுடைய குமாரியென்று பழிப்பாக உலகம் சொல்லுமே நம்மையென்றுபார்வதி அந்தத் துக்கந்தீரத் தன்னுடைய தேகத்தை யோகாக்கினியினாலே நிவர்த்திசெய்து, மலையரசன் தபோமகிமையினாலும் முன்னே மைநாகனென்கிற பிள்ளையைப்பெற்ற மேனா தேவியினது தவமுயற்சியினாலும், அவர்களுக்குக் குமாரியாக அவதாரஞ் செய்தாள்; தேவர்கள் கற்பகப் புட்பங்களை வருஷமாகப் பொழிந்தார்கள். எ-று. (௧௫)

* சித்தாந்தத் தொன்றுசத்தி சிவத்திரண்டாய்
ஞானமிச்சை செயலின் மூன்று
கொத்தாகிக் குடிலைதரு நாதவிந்து
விரண்டினுக்குங் கொழு கொம்பாகி
முத்தாகிச் சிவனிடத்தே யுருத்திரன்மா
லயன்முதலே முளைத்த மூல
வித்தாகி நிறைவாளைப் பயந்தவர்க்கு
முடிந்ததவம் விளம்ப லாமோ.

இ-ள். சித்தாந்தமாகச் சொல்லப்பட்ட சிவனிடத்தில் ஒன்றுபட்ட அபின்னாசத்தியாய்ப்பின்பு அச்சிவத்தினின்றும் பின்னாசத்தியென்று வேறுபட்டுப் பின்பு ஞானாசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தியென மூன்றுவகையாகிக் குடிலையினாலுண்டாகிய நாதவிந்துகளுக்குக் கொழு கொம்பாகியும், சுவாமிக்கு முத்தாகியும், பரமசிவனிடத்தில் உருத்திரன், விட்டுணு, பிரமன் முதலானவர்கள் உண்டாகிறதற்கு மூலமாகிய வித்தாகியும், எங்குநிறைந்த பார்வதியைப்பெற்றவர்க்கு முடிந்ததவப்பெருமையைச்சொல்லக்கூடுமோ எ-று. (௬௬

கலைவளரு மதிபோன்று சிவனை வெல்ல
மதன்வளர்க்குங் கரும்பு போன்றும்
பலகலையுந் தெளிந்துபந்து கழங்கூச
லியற்றியுமை பயிலு நாளில்
மலையரச னிடத்தின்மறை நாரதனா
ரொருநாளின் மகிழ்வா யெய்தி
யுலகமெலாங் குடியிருக்குந் திருவயிற்று
விலக்கணம்பார்த் துரைக்க லுற்றார்.

---

* சித்தாந்தம்-தீர்ந்தமுடிபு. வேதாந்தத்தின்முடிபே சித்தாந்தமென்றவாறு. "வேதாந்தத்தெளிவாஞ் சைவசித்தாந்தத்திறனிங்கு தெரிக்கலுற்றாம்" என்றது சிவப்பிரகாசமும்.

இ-ள். பார்வதி இமாசலராசனுக்கும், மேனாதேவிக்கும் குழந்தையாகி வளர்பிறைபோல் நாளுக்குநாள்வளர்ந்து மன்மதன் சிவனைவெல்லவில்வேண்டி அதற்குவளர்த்த கரும்பையொத்துப் பலபல சாஸ்திரங்களையுங்கற்றுப்பயந்து, கழங்கு, ஊசல், விளையாட்டு முதலானவை பார்வதிசெய்துக்கொண்டுவருகிறகாலத்தில், மலையரசனிடத்தில் வேதமுணர்ந்தநாரதர் ஒருநாள்வந்து உலகங்களெல்லாம் வயிற்றில்வைத்திருந்த அம்மையுடைய இலக்ஷணம்பார்த்துச் சொல்லுவார். எ-று. (௬௭)

நெற்றியிலோர் புறத்திலரை நேத்திரமுண்
டாமொருகை நெடிய சூலம்
பற்றுமொரு தனமறையு மொருபாக
மரகதம்போய்ப் பவள மாகும்
கற்றைநறுங் குழல்பாதி சடையாகு
மொருகைவளை கழன்று போகு
முற்றவர விவைகளென்ன மலையரசன்
மனமுருகி யுவகை யானான்.

இ-ள். பருவதராஜனே? உம்முடைய குமாரத்திக்குச் சிலபொழுதில்நெற்றியில் ஒருபக்கத்தில் அரைக்கண்தோன்றும்; ஒருகையில் சூலமுண்டாகும்; ஒருபக்கத்துத்தனம் மறைந்துபோகும்; பாதிசரீரம் பச்சைநிறம்போய்ப் பவளமாகும், கூந்தலிற்பாதிசடைகளாகும்; ஒருகையில் வளைகளில்லாமற்போகும்; இவைகள் சம்பவிக்குமென்று நாரதர்சொல்லப் பருவதராஜன் உள்ளமுருகிச் சந்தோஷத்தையடைந்தான். எ-று. (௬௮)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வையநீர்க் கங்கை பாயும்
பனிவரை மருங்கி னந்நாள்
துய்யநீர்ச் சடையான் வந்தங்
கோர்தவந் தொடங்கக் கேட்டு

வையக மளித்தா டாதை
வள்ளலைப் பணிந்து மானை
யையநின் றவத்துக் கேவல்
கோடியென் றளித்துப் போனான்.

இ-ள். இப்படி நாரதர்சொன்னதைக்கேட்டுப் பார்வதியேநமக்குப் பெண்ணாகவந்தபடியினால், பரமசிவன் மருமகனாகிவரவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறநாளையில், பூமியில் கங்கையைச் செலுத்திக்கொண்டிருக்கிற அந்த இமயபர்வதத்திலொருபக்கத்தில் பரமசிவன் யாதோவொரு நினைவினால் யோகத்திலிருக்கிறாரென்கிறவார்த்தை கேள்வியாகித் தன்மகளாகிய பார்வதியையும், சிலதோழிப்பெண்களையும், அழைத்துக்கொண்டுபோய் நமஸ்காரஞ்செய்து என்னுடையபெண்ணை உம்முடையதவத்துக்கு ஏவல்செய்ய ஒப்புக்கொள்ளுமென்று அவரிடத்தில் அம்மையைவிட்டுப்போனான் பருவதராசன். எ-று. (௩௯)

ஓங்குமா லயன்மற் றன்னோர்
ரொழிவிலாத் தவம் புரிந்தால்
தாங்குபே றளிப்பான் றானோர்
கருத்தினாற் றவஞ்செய் போதிற்
பூங்குழல் கனியும் போது
முஞ்சியும் புனலுங் கொண்டு
பாங்கியர் பலருஞ் சூழப்
பணிவிடை பலவுஞ் செய்தாள்.

இ-ள். எல்லாத்தேவரினு முயர்ந்த விட்டுணு, பிரமாமற்றவர்கள் பெருமையாயொழிவில்லாத தவசுசெய்தால் அவர்களுக்குவேண்டியவரத்தைக்கொடுக்கிற சுவாமியானவர் யாதோ ஒரு கருத்தினாற்றவஞ்செய்கிறபோது பார்வதி, பழம், புஷ்பம், தருப்பை, திருமஞ்சனமுதலானவைகளைக்கொடுத்துத் தன்னுடைய பாங்கிமார்களுடனே பலபணிவிடையுஞ் செய்துகொண்டிருந்தாள். எ-று. ()

இங்கிவை யிருக்கத் தேவ
ரியாவரு மிமையோர் கோவும்
பங்கயத் தவனை யெய்திப்
பணிந்தனர் பதுமத் தோனு
மங்கவர்க் கிருக்கை யீந்தா
னவரவர் முகத்திற் சோர்வுங்
குங்குமக் குழம்பு நீத்த
புயங்களிற் குழைவுங் கண்டான்.

இ-ள். இவ்விடத்தில் இப்படியிருக்க, எல்லாத் தேவர்களும் தேவேந்திரனுங்கூடிப் பிரமனைச்சேர்ந்து தொழுதார்கள்; அந்தப் பிரமனும் அவர்களுக்கிருக்க ஆசனங்கொடுத்துப் பிற்பாடு, அவர்களுடைய முகஞ்சோர்ந்து இருப்பதையும் குங்குமப்பூசியிருந்த தோள்கள் இளைத்திருப்பதையும் பார்த்தார். எ-று. (௪௧)

வச்சிர மொடிந்தீ சானன்
கணிச்சிவாய் மடிந்துங் காலன்
முச்சிரம் வளைந்து மற்றோர்
படையெலா முறிந்துந் தேவர்
மெய்ச்சிர மகுட நீத்து
மெலிந்தமை விளம்பு மென்று
னச்சுரர் தமக்குக் கோமான்
றாரக னழித்தா னென்றான்.

இ-ள். வச்சிராயுதம் முடிந்துபோயும், ஈசானன் மழுவாயுதத்தின்வாய்மழுங்கியும், எமனுடைய சூலாயுதம்வளைந்தும், மற்றவர்கள் ஆயுதமுறிந்தும், தேவர்கள் சிரத்திலிருக்கிற மகுடம்பிடுங்கப்பட்டும், வருத்தத்தையடைந்தீர்கள்; அவ்வருத்தத்தைச்சொல்லுங்களென்றுகேட்கத்தேவேந்திரன் தாரகாசுரன் இப்படி அவமானஞ்செய்தானென்று சொன்னான். எ-று. (சஉ)

காலையம் புயத்தோன் சொல்வான்
காலனாற் கனலாற் காற்றான்
மாலினா லென்னா லுன்னா
லவன்வலி தொலைக்க லாமோ
வாலமா மிடற்றான் மேரு
யசலமா திடத்தே தோன்றும்
வேலனார் வெல்வா ருங்கள்
சிறையெலாம் விடுப்பா ரென்றான்.

இ-ன். அப்படி தேவேந்திரன் சொல்லக்கேட்ட பிரமன் சொல்லுவான்; இயமன், அக்கினி, வாயு, விட்டுணு இவர்களாலும், என்னாலும், உன்னாலும், அந்தத் தாரகாசுரனைக் கொல்லக் கூடுமோ! சிவனுடைய பிள்ளையாய், இமாசல புத்திரியான பார்வதியினிடமாக சிவசுப்பிரமணியர் அவதரித்து அவனைக்கொன்று உங்கள் சிறையை மீட்பாரென்றுசொன்னான். எ-று. (சங)

யோகத்தி லிருக்கு மீச
னுமைக்கு நாண்டரிக்கு மாறு
வேகத்தி லியற்று மென்றே
யயன்விடை கொடுத்தான் மீண்டு

571

மாகத்தி லணுகித்தேவர்
மதனனை நினைத்தார் மாரன்
சோகத்தை யொழிக்குந் தென்றற்
றேருடன் றோன்றிச் சொல்வான்.

இ-ள். யோகத்திலிருக்குஞ் சிவபிரான் பார்வதிக்கு மங்கிலியதாரணஞ்செய்யும்படிச் சீக்கிரத்தில் முயற்சி செய்யுங்களென்று பிரமன் சகலருக்கும் உத்தரவுகொடுக்கத் தேவர்களெல்லாம் அமராபதிக்குவந்து மன்மதனை நினைத்தார்கள்; அவன் விடாய் தீர்க்கத்தகுந்த தென்றலாகிய தேரிலேறிவந்து சொல்லுவான். எ-று.

எவன்றவ மழிக்க மாத
ரெவர்களை மயக்க நீவிர்
கவன்றவெந் துயரா லெம்மை
யழைத்ததென் கரும மென்று
னவன்றனை யிறுகப் புல்லி
யமரர்கோ னருளி னோக்கிச்
சிவன்றவ மழிக்க வேண்டி
யழைத்தமை தெரியச் சொன்னான்.

இ-ன். மன்மதன், தேவர்களைப்பார்த்து எவனுடைய தவத்தை அழிக்கவேணும்? எந்தப்பெண்களை மயக்கவேணும்? நீங்கள் எந்தத் துக்க நிமித்தமாக என்னை யழைத்தீர்களென்று கேட்கத் தேவேந்திரன் அந்த மன்மதனை இரண்டு கையினாலும் இறுகக் கட்டித் தழுவி உபசாரத்துடனே பார்த்துச் சிவனுடையதவத்தையழிக்கும்படி உன்னைவேண்டி யழைத்ததென்று தெரியச்சொன்னான். எ-று. (சரு)

விண்ணிலார் மகவான் சொல்ல
வெகுண்டுவேள் பயந்து கூறும்
பெண்ணலா னலியா னல்லன்
பிறப்பிலா னிறப்பு மில்லான்

கண்ணினு லளவை நூலாற்
கருத்தினு லளவா வந்தத்
தண்ணிலா முடியான் செய்யுந்
தவத்தையார் தவிர்க்க வல்லார்.

இ-ள். தேவலோகத்திலிருக்கும் இந்திரன்சொல்லக் கோபித்துச் சுவாமிக்குப் பயப்பட்டுச் சொல்லுவான்; தேவேந்திரனே! சிவன் பெண்ணுமல்லர்; ஆணுமல்லர்; அலியுமல்லர்; பிறப்பும் இறப்புமில்லாதவர்; காட்சிப் பிரமாணத்தினாலும், ஆகமப் பிரமாணத்தினாலும், கருத்தினாலும் இப்படிப்பட்டவரென்று நிதானிக்கக்கூடாத குளிர்ச்சிபொருந்திய சந்திரனைத்தரிக்கும், முடியையுடைய அந்தச்சுவாமி தவத்தை யழிக்கின்றதற்கு யார்வல்லவர். எ-று. (௪௬)

கன்னிகை கவுரி யீசன்
கதமிலாப் பிரம சாரி
சந்நிதித் தன்மை யாலே
யுயிரெல்லாந் தழையா நிற்கு
முன்னிய வுயிர்கள் போல்
வொடுங்கிடு மவன்பாற் செல்லு
மன்னிய பொருளுந் தோன்றி
மனதிலே யொடுங்கு மாபோல்.

இ-ள். அம்மனோ; கன்னிகை; சிவனோ! குற்றமில்லாத பிரமசாரி, இவர்களிருவருடைய சந்நிதிமகிமையினாலே சகல உயிர்களுமுண்டாகி விருத்தியாகும்; முன் எப்படி சுவாமியிடத்திருந்து சீவன்கள் உண்டாயினவோ, அப்படியே அவரிடத்தில் ஒடுங்கும்; மனதிலே தோன்றிய அனேக வஸ்துக்கள் அதிலே ஒடுங்குவதுபோல். எ-று. (௪௭)

273

தாமத குணத்த னென்பர் சங்கரித் திடலா லீசன்
சேமமா முயிர்கட் கெல்லா மிளைப்பொழித் தருள்வ தாகு
மாமல குணமொன் றில்லை வடிவமுங் கனலா மென்கைப்
பூமலர் சொரிந்தக் காலும் புகையெழப் பொரிந்து போமே.

இ-ள். உலகத்தில் சங்காரத்தொழில் செய்வதனால், சிவன் தமோகுணத்தை யுடையவரென்றுசொல்வார்கள்; அப்படி அன்று; அஃதுயிர்களுடைய இளைப்பை யொழிப்பதாகும், மற்றத்தேவர்களுக்கு உண்டாயிருக்கின்ற * மும்மலகுண சம்பந்தமில்லை; இவருடையசொரூபமும் நெருப்பாகும்; அவர்மேல்நான் புஷ்ப பாணத்தைவிட்டால் அவைகள் புகையாய்க் கரிந்துபோகும். எ-று. (௪௮)

உருவெனத் தெரியா தானை யுருவினோ டருவா வானை
யருவெனத் தெரியா தானை யமர்செயி லரிதென் றஞ்சி
வெருவரப் புகுந்தா னந்த வேளையில் வேளை நோக்கித்
தருவனத் திடையில் வாழுஞ் சதமக னுரைப்பா னானன்.

இ-ள். உருவென்று யாவராலும் தெரியக்கூடாதவரை உருவமாகியும், அருவமாகியும், இருக்கின்ற சிவனை அருவமென்றுந் தெரியாதவரை மிகவும்யுத்தஞ்செய்து செயிக்கப்படாதென்று மன்மதன் பயப்பட்டுத் தன்னுடைய தானத்திற்குப்போகப்புறப்பட்டான்; அக்காலத்தில் மன்மதனைப்பார்த்து கற்பகத்தருவி னிழலில் வாசஞ்செய்யாநின்ற தேவேந்திரன் சொல்லத் தொடங்கினான். எ-று. (௪௯)

மாயவ னுரத்தின் மீது மலரவ னாவின் மீது
நாயகன் சிரத்தின் மீதும் பொறுத்ததன் னலமே யன்றோ
காயுநற் கதிரின் மேனி கடைந்தது மெனக்கு மிந்த
வாயிர நயனந் தந்த செயலு முன் னாண்மை யன்றோ.

---

* மும்மலகுணங்களை "அஞ்ஞானப்பொ யயர்வேமோகம்பை சனுக்கியமார்ச்சரியம்பயம்" எனவரும் இருபாவிருபஃதின் செய்யுளானறிக.

இ-ள். விட்டுணு, தம்முடைய மார்பினிடம் இலட்சுமியை வைத்துக் கொண்டதும், பிரமன் சரசுவதியை நாவில் வைத்துக் கொண்டதும், மகாதேவர் தலையிலே கங்கையென்கிற பெண்ணை வைத்துக்கொண்டதும், உன்னுடைய சாமர்த்தியமல்லவோ! சூரியனைச்சாணையில் கடையச்செய்ததும், எனக்கு ஆயிரங்கண்கள் வந்ததும்; உன்னுடைய ஆண்மையல்லவோ! என்றான் தேவேந்திரன். எ-று. (௬௦)

செல்வதின் றெமக்கா யங்கே
தருவது தேவர்க்காவி
வெல்வது சிவனை வென்று
கொடுப்பது காம வேட்கை
சொல்வது மறுக்க வேண்டா
மெனச்சொலித் துணைக்கைப் பற்றி
நல்வர மிதுதா வென்ன
மதனவே ணயந்து கூறும்.

இ-ள். பின்னுந் தேவேந்திரன் சொல்வான்; மன்மதனே? எனக்காக அங்கேசென்று சிவனை ஜயித்து அவருக்குக்காமலாகிரி யுண்டாகும்படி செய்தால் அவருக்குப் புத்திரனுண்டாகும்; அந்தப்புத்திரன், அசுரர்களைக்கொன்று தேவர்களைப் பிழைக்கும்படி செய்வார்; அதற்குநீயே காரணமாயிருக்கிறாய்; நான்சொன்ன வார்த்தையை மறுக்கவேண்டாமென்று கையைப் பிடித்துக்கொண்டு எனக்கு இந்த நல்லவரத்தைக் கொடுவென்றுகேட்க, மன்மதன் சந்தோஷித்துச்சொல்வான். எ-று. (௬௧)

அரன்சிலை மலையென் றாலு
மடுங்கணை யரியென் றாலும்
வரம்புற விசைந்த நாணும்
வாசுகி யரவென் றாலுங்

கரும்பெனுஞ் சிலையா லைந்து
கணையெனு மலரா னீலச்
சுரும்பெனுங் குணத்தால் வெல்வே
னெனச்சொலித் தொழுது போனான்.

இ-ள். தேவேந்திரனே? சிவனுக்கு வில் மலையாகி யிருந்தாலும், விட்டுணுவே பாணமாகியிருந்தாலும், வாசுகியேநன்றாக எற்றுகின்ற நாணியானாலும், என்னுடைய கரும்பாகிய வில்லினாலும் பஞ்சபுட்பங்களாகிய பாணங்களாலும் நீலநிறம் பொருந்திய வண்டென்கிற நாணியினாலும், அந்தச்சிவனை ஜயித்துப்போடுகிறேனென்று வந்தனஞ்செய்து சுவாமியிடத்துக்குப் போனான் மன்மதன். எ-று. (௬௨)

நந்தனமணமுந்தெய்வத்தமிழ்ப்புதுமணமுங்கொண்டு
பந்துமலையத்தென்றல்வசந்தமந்திரியுஞ்சேர்ந்த
திந்துவுநிலவாம்வெள்ளைவலையினையெறிந்ததெங்கும்
கொந்தலரிளமாவெல்லாங்கோகிலமுழங்கிற்றன்றே.

இ-ள். மன்மதன் சிவனைஜயிக்கும்படி புறப்படும்போது, பொதியமலையிலிருந்து அவ்விடத்தில்தங்கிய சந்தனவாசனையும், திவ்யமான தமிழ்வாசனையுங்கொண்டு தென்றற்காற்று வந்தது; வசந்தனாகிய மந்திரியும் வந்துசேர்ந்தான்; சந்திரனுங் கிரணமாகிய வெள்ளை வலையினை நான்குபக்கமும் வீசினான்; புஷ்பக்கொத்துகளையுடைய இளமையுற்ற மாமரத்திலெல்லாங் குயில்முழங்கியது. எ-று.

மல்லிகை முகையாஞ் சங்க
மதுகர முழக்கஞ் செய்ய
முல்லைசண் பகம சோகு
முளரியே முதலா யுள்ள

வெல்லையில் மலருந் தேனு
மிறைத்தன ரிரும்பைச் செம்பைக்
கல்லினை யுருக்குஞ் சொல்லார்
குறிஞ்சியாழ் கரத்திற் கொண்டார்.

இ-ள். மல்லிகையரும்பே சங்கமாகவும், அவ்வரும்பில் சப்திக்கின்றவண்டுகள் அச்சங்கத்தை வாயில்வைத்து ஊதுகிறவீரனாகவும் விளங்க முல்லை, சண்பகம், அசோகு, தாமரை முதலாகிய கணக்கில்லாத புஷ்பங்களையும், தேனையும், நான்குபக்கமு மிறைத்துக்கொண்டு கடினமாகிய இரும்பு, செம்பு, கல், இவைகள்கூட உருகும்படிசொல்லுகிற வார்த்தையையுடைய பெண்கள் குறிஞ்சியாழென்னும் வாத்தியத்தைக் கையிலே கொண்டார்கள். எ-று. ()

பொங்கிய வுடுக்க ளான
புகரணி முகத்துச் செக்கர்
தங்குசிந் தூர மாகுந்
தனியிருட் கரியுங் கிள்ளைப்
பைங்குர கதமுஞ் செல்லப்
பணைமுலைப் பவளச் செவ்வாய்
மங்கைய ரெனும்போர் வீரர்
வடிக்கண்வாள் விதிர்த்துச் சென்றார்.

இ-ள். மிகுந்த நட்சத்திரங்கள் முகத்திலிருக்கிற புள்ளிகளாகவும், செவ்வானம் ஒரு திலதப்பொட்டாகவும், விளங்குகின்ற ஒப்பற்ற இருட்டாகிய யானையும், பசுமைபொருந்திய கிளியாகிய குதிரையும், நடக்கப்பருத்த முலையையும் பவளம் போன்ற வாயையுமுடைய ஸ்திரீகளாகிய சுத்தவீரர்கள் தங்கள் தங்கள் கண்களாகிய கத்திகளை அசைத்துக்கொண்டு புறப்பட்டார்கள். எ-று. (௫௫)

கோணிய கரும்பு மைந்து குலமலர்க் கணையுங் கொண்டு
வாணுத லிரதி செல்ல மகரகே தனத்தினோடு
தாணுமா வனத்தைச் சேர்ந்தான் றவஞ்செய்வான் றனைக்கண்டஞ்சி
நாணினா னறுகால் வண்டு நாணினா னடுங்கினானே.

இ-ள். வளையாகிய கரும்புவில்லையும், புட்பங்களாகிய ஐந்து பாணங்களையும் எடுத்துக்கொண்டு ஒளிபொருந்திய நெற்றியையுடைய இரதிதேவி கூடவர மீனக்கொடியுடனே பரமசிவன் யோகத்திலிருக்கிற வனத்தைச்சேர்ந்து அவ்விடத்தில் தவஞ்செய்கிற அந்தச்சுவாமியைப்பார்த்து இவரைஎவ்வாறு செயிப்போமென்று பயந்து வெட்கத்தையடைந்து நடுங்கினான். வண்டைநாணாகவுடைய மன்மதன். எ-று. (௫௬)

வெளித்தலத் தெதிர்த்தா லென்ன
விளையுமோ தனக்கென் றெண்ணி
யொளித்தனன் முன்னே பின்னே
யுமையவள் வரவு கண்டு
களித்தனன் மயக்க மாமோ
கனத்துக ளிறைத்து வில்லை
வளைத்தன னளிநாண் பூட்டி
வடிக்கணை தொடுத்தான் மாரன்.

இ-ள். நேரே வெளியாகவந்து யுத்தஞ்செய்தால் என்னகேடு நமக்குண்டாகுமோ! என்றுநினைத்து சுவாமியின்பின் தெரியாமல் ஒளித்திருந்து சமயம்பார்த்துக் கொண்டிருந்தபோது, பார்வதி அக்கடவுள்முன்னே பணிவிடைசெய்ய வருதலைக்கண்டு, பெண்துணை நமக்கிருக்கிறபடியினால் வெல்லக்கூடுமென்று சந்தோஷித்து மோகத்தை உண்டாக்கும் புஷ்பபாணத்தை இறைத்து வில்லை வளைத்து நாணேற்றிப் பாணங்களைத் தொடுத்தான் மன்மதன். எ-று. (௫௭)

ஒருகரும் புருவச் சாப
மொடியினு முலக மீன்ற
இருகரும் புருவச் சாப
முளவென்னு மெழுச்சி யாலே
பொருகணை தொடுத்தான் சென்று
புரஞ்சுடு கணையி னானு
மொருகணை விடுத்தான் மார
னுடலெலாங் கொளுத்திற் றன்றே.

இ-ள். மன்மதன், தானதிக சண்டை செய்தால் ஒருகரும்பு உருவமாகிய வில்லானது ஒடிந்தாலும், உலகத்தைப்பெற்ற பார்வதியின் இரண்டு கரும்புருவமாகிய வில் உண்டாயிருக்கின்றன நமக்கு யாதொரு குறைவுமில்லை யென்கிற செருக்கினாற் போய் அனேக பாணங்களைவிட்டபோது மூன்று புரத்தையும் எரித்த நகையாகிய அம்பையுடைய சிவன் அந்த மன்மதன்மேல் தன்னெற்றிக்கண்ணாகிய ஒருகணையைச் செலுத்தினார். அக்கணை மன்மதனுடைய உடம்பையெல்லாங் கொளுத்திவிட்டது. எ-று. (௫௮)

அருக்கவெண் பஞ்சு போல
வழற்கண்ணா லனங்க னான
திருக்குளங் கனலக் கண்டு
தேவருந் திசையி னோரும்
வெருக்கொள வொளித்தார் பூத
கணத்துடன் விடையி னானும்
பொருக்கென மறைந்து வெள்ளிப்
பொருப்பிடைப் புகுந்தா னன்றே.

யெகத்திசனை அசைத்துக்கொண்ட புறப்ப[illegible]

இ-ள். நெருப்புப்பட்ட எருக்கம்பஞ்சுபோல் மன்மதனாகிய ரூபாடுபொருந்திய மனத்தையுடையவன் எரிந்துபோகக்கண்டு தவர்களும், அஷ்டதிக்குப் பாலகரும் பயப்பட்டு ஒளித்துக்கொண்டார்கள்; அதன்பின் சுவாமி பூதகணங்களுடன் சீக்கிரமாக அக்விடம்விட்டுக் கைலாயத்துக்கு எழுந்தருளினார். எ-று. (௫௯)

சங்கரன் மணத்தை வேண்டி
யுமையுநற் றவமே செய்தா
ளங்கது புணரு மாறேழ்
முனிவருக் கமலன் சொன்னான்
மங்கல முரைக்க வேழு
முனிவரு மகிழ்வா யெய்தித்
துங்கவெற் பிறையார்க் கிந்தச்
சோபனஞ் சொல்லி னார்கள்.

இ-ள். பரமசிவன் தன்னைக் கலியாணஞ்செய்துகொள்ளப்பார்வதிதவஞ்செய்கிறாள்; அவள்வந்துசேரச் சப்தரிஷிகளையழைத்துப் பருவதராஜனிடத்திற்போய்ச் சுவாமிக்கு உன்பெண்ணைக் கலியாணஞ்செய்துகொடுமென்று கேளுங்களென்று அனுப்பினார்; அந்தப்படியே அந்த எழுபேரும் பருவதராசனிடத்திற்குப்போய் இந்தச் சோபனசங்கதிசொன்னார்கள். எ-று. (௬௦)

மலையிறை மகிழ்ந்தா னந்த மலையிறை புதல்வன் வள்ளல்
குலமெது பயந்தோர் நாமங் குடிப்பெய ரேது வாழுந்
தலமெது புகலுமென்றான் றவத்தவர் நகைத்துச் சொல்வா
ரலகிலான் பிறப்பு நல்ல கிளையென வறிவித் தார்கள்.

இ-ள். இருடிகள்போய்ச்சொன்னவுடனே, பருவதராசன் சந்தோஷித்தான்; அவன்பிள்ளையாகிய மைநாகன் ரிஷிகளைப்பார்த்

து சிவன் என்னசாதி? அவருக்குத் தாய்தகப்பன் பெயரென்ன குடிப்பெயரென்ன? அவரிருக்குமூரெது? சொல்லுங்களென் கேட்டான்; அதை முனிவர்கேட்டு நகைத்துச் சிவனே அளவிட கூடாதவர், அவர் பிறந்தவிடம் மூங்கில்; அவர் கல்லசாதியென் தெரிவித்தார்கள். எ-று. (௬௧

பெருத்ததோ ருவகையாகிப்
பிறைமுடி யன்பேர் நாளிற்
பொருத்தமு நாளுந் தேர்ந்து
முனிவரைப் புகழ்ந்து போற்றி
விருத்தியார் வரவு நாளுங்
குறித்திறை விடுத்தா னன்னோர்
பரித்தகங் கையினாற் கிந்தப்
படியெலாம் பணிந்து சொன்னார்.

இ-ள். அப்படி சப்தரிஷிகள் சொன்னபிறகு பருவதராசன் முதலானவர்களெல்லாம் மகாசந்தோஷத்தையடைந்து சந்திரனைத்தரித்தமுடியையுடைய சிவபெருமானதுபெயர் நட்சத்திரத்திற்கும், அம்மையாரதுபெயர் நட்சத்திரத்திற்குத்தகுந்த பொருத்தமுங் கலியாணஞ்செய்கிறகாலமுமறிந்து நிச்சயஞ்செய்து ரிஷிகளினுடைய பாதத்தைப் புகழ்ந்துவணங்கி விருத்திபொருந்திய திருக்கலியாணமுகூர்த்தவோலையும் எழுதிக்கொடுத்தனுப்பிவித்தான்; அந்த எழுரிஷிகளும் கங்கையைத்தரித்த சுவாமிக்கு நடந்த சங்கதிகளெல்லாம் வணங்கிச்சொன்னார்கள். எ-று. (௬௨)

இமையவெற் பிறைவ னோலை
முகத்திலேழ் கிரிக்கு மேருச்
சிமையமால் வரைக்குஞ் செம்பொற்
றிகிரிமால் வரைக்கு மேழு

யெகத்திசனை அசைத்துமகாணம புறப

தமரவான் கடற்குஞ் சித்த
சாரணர் முனிவோ ருக்கும்
அமரரா னவர்க்கும் வஞ்சி
மணத்தினை யறிவித் தார்கள்.

இ-ள். இமயபருவதராசன் பார்வதியம்மையின் திருக்கலியாணமுகூர்த்த ஓலையை அநேக தூதர்கள்கையிற் கொடுத்தனுப்பிவிக்க அவர்கள் சத்தகுல பருவதங்களுக்கும், கொடுமுடிபொருந்திய மேருவுக்கும், சக்கிரவாளகிரிக்கும், ஒளியையுடையசத்தசமுத்திரத்திற்கும் சித்தர், சாரணர், முனிவர், தேவர்முதலானவர்களுக்கும் அம்மைதிருக்கல்யாணத்தைத் தெரிவித்தார்கள். எ-று. ()

ஓலைகண்டளவேசேர்ந்த வுததிகளேழும்பூமி
மாலையாய்ச்செல்லுகின்ற மகிமைசேர்நதிகளேழும்
நீலமேமுதலாயுள்ள கிரியெலாநெருங்கிச்சென்ற
கோலமாமுனிவோர்சித்தரிமையவர்குழாங்கொண்டார்கள்.

இ-ள். ஓலையைக்கண்டவுடனே எழுசமுத்திரத்திற்கும் பூமிதேவிக்கும் மாலையோலப் பிரகாசிக்கின்ற மகிமைபொருந்திய எழுநதிகளுக்கும், நீலகிரி முதலாகிய சப்தகுல பருவதங்களும், அதிஷ்டானமாகிய தேவதைகள் நெருங்கிச்சேர்ந்தார்கள்; முனிவர்களும், சித்தர்களுந் தேவர்களுங் கூட்டங்கூட்டமாகச் சேர்ந்து வந்தார்கள். எ-று. (௬௪)

அட்டதிக் கனைத்துந் தோரற்
கொடிகளா லடைத்தார் விண்ணை
மட்டறு விமானந் தன்னான்
மாலையான் மறைத்தார் வீதி

நெட்டிலை யரம்பை பூக
நிரைகளால் நிறைத்தார் வெற்பிற்
றட்டிய புழுகி னாலே
மெழுகினார் தரைக ளெல்லாம்.

இ-ள். எட்டுத்திக்கையுந் தோரணங்களாலும் இடமில்லாமல் நிறைத்துவிட்டார்கள்; ஆகாயத்தை இடமில்லாமல் விமானத்திலும், மாலைகளினாலும் நிறைத்துவிட்டார்கள்; வீதிகளில் நீண்ட இலைகளையுடைய வாழைகளையும், கமுகுகளையும், நிரைநிரையாகக்கட்டி அலங்காரஞ்செய்தார்கள்; மலையிலிருக்கிற புழுகைக் கரைத்துத் தரைகளெல்லாம் மெழுகினார்கள். எ-று. (௬௫)

தோரணஞ் சமைத்தார் முத்தின்
றொடையெலாந் தொடுத்தார் விண்ணிற்
பூரண கும்பம் வைத்தார்
புதுமணி விளக்கு மிட்டார்
ஆரண னுலகு மற்றை
யளகையு மமரர் நாடு
நாரண னுலகும் வந்து
காணவே நாணு மாறே.

இ-ள். தோரணங் கட்டினார்கள்; அதில் முத்துமாலைகளைத் தொங்கவிட்டார்கள்; ஆகாயகங்கையைக்கொண்டுவந்து பூரணகும்பம்வைத்தார்கள்; நூதனமாக இரத்தினவிளக்கு ஏற்றினார்கள்; பிரமலோகமும், அளகாபுரியும், தேவலோகமும், வைகுந்தமும், இதைப்பார்த்து நாணும்படிச் சிங்காரித்தார்கள். எ-று. (௬௬)

மணிவிளக்கனையமின்னை மலையரமகளிர்கூடிக்
கனிமலர்க்கங்கையாட்டிக் கலையினுன்மருங்கைவாட்டிப்

பணிமணியாரம்பூட்டிப் பரிமளத்தாமஞ்சூட்டி
பணிநுதற்றிலகந்தீட்டி யருமறைச்சடங்குசெய்தார்.

இ-ள். இரத்தின தீபம்போன்ற பார்வதியை மலையிலிருக்கிற பெண்கள்கூடிக் கற்பகமலர் வாசனைசேர்ந்த கங்காசலத்தினால் ஸ்நானஞ்செய்வித்து, இடைப்புத்தவளும்படி சேலைகட்டி, ஆபரணங்களும் முத்துமாலையும்பூட்டிப் பரிமளம்பொருந்திய நறுமலர் மாலை சூட்டி, அழகியநெற்றியிற் றிலதப்பொட்டு அணிந்து வேதவிதிப்படிச் சடங்குசெய்தார்கள். எ-று. (௬௭)

பூமணக்கோலஞ்செய்த பொடியணிபுனிதனைத்
தாமணக்கோலஞ்செய்யச் சதுர்முகன்முதலோரீண்டித்
தூமணித்துகில்கள்சாத்திச் சுரதருமாலைசாத்தி
மாமணிப்பணியைநீக்கி மாமணிப்பணிகள்பூட்டி.

இ-ள். வாசனை பொருந்திய புட்பபாணங்களை எய்தமாரனை நெற்றிக்கண்ணாலெரித்து அந்தப்பஸ்மத்தைப்பூசிய சுத்தராகிய பரமசிவனை மணக்கோலஞ்செய்யும்படியாகப் பிரமன்முதலானவர்கள்கூடிப் பரிசுத்தமாகிய இரத்தினமயமாகிய வஸ்திரஞ்சாத்திக் கற்பகப்பூமாலைதரித்து, முன்னேயிருந்த சர்ப்பாபரணத்தைக் கழற்றிப்போட்டு மாணிக்க இரத்தினங்களாலாகிய ஆபரணங்களைத் தரித்தார்கள். எ-று. (௬௮)

சடையிளம் பிறையைத் தங்க
ளிறையெனத் தகைந்து சூழ்ந்த
வுடுக்குல மென்ன முத்தா
லொளிவிடு மகுடஞ் சூட்டி
யடைவுடன் விழியாந் திங்க
ளாதவர் காதின் மீது
குடியிருந் தனபோற் செய்ய
குண்டல மிரண்டுஞ் சாத்தி.

164317

இ-ள். சுவாமியினது சடையிற்றரித்த பிறையைப்பார்த்துத் தம்முடைய புருஷனென்று சுற்றிக்கொண்ட நட்சத்திரக் கூட்டங்கள்போல, முத்துகள் பிரகாசிக்கின்ற கிரீடஞ்சூட்டிப் பொருந்திய கண்களாயிருக்கிற சந்திரசூரியரிருவருங் காதினிடத்திற் குடியிருந்தாற்போல அழகாகிய இரண்டு குண்டலங்களைச் சாத்தினார்கள். எ-று. (௬௯)

வரம்பெற்ற திருமால் சாத்து
மலர்விழிக் கரிய சோதி
பரம்பிய தனைய நீலப்
பருமணிச் சிலம்பு சாத்தி
விரும்பிய கோலஞ் செய்தா
ரிறையுமால் விடைமேற் கொண்டா
ரரம்பையர் நெருங்கித் தெண்ணீ
ராஞ்சனங் காட்டி னார்கள்.

இ-ள். விட்டுணு வரம்பெற்றுக்கொள்வதற்காகத் தம்முடைய கண்களிலொன்றைப் பாதத்திற்சாத்தினாரே, அந்தக்கண்ணினது கறுப்புச்சோதி காலைச்சுற்றிப் பரவினதுபோல நீலமணிகளையிழைத்தச் சிலம்பைத்தரித்து சகலராலும்விரும்பத்தகுந்த அலங்காரஞ் செய்தார்கள்; பரமசிவன் விட்டுணுவேயுருவமாகிய ரிஷபத்திலேறினார்; அப்பொழுது அரம்பாஸ்திரீகள் மஞ்சளாலத்தியெடுத்தார்கள். எ-று. (௭0)

குலவுமா லணுகிப் போற்றக்
குமுதவாய் மலர்ந்தான் கஞ்ச
மலரினான் வணங்கச் சற்றே
மணிமுடி யசைத்தான் விண்ணோர்

தலைவனா ரெதிர்நின் றேத்தத்
தனிநகை புரிந்தான் றேவர்
பலரும்வந் திறைஞ்சி யேத்த
வவர்க்கெலாம் பார்வை யீய்ந்தான்.

இ-ள். விட்டுணு சுவாமியின் முன்னே வந்து வணங்கச் செவ்வாம்பற்பூப்போலுந் திருவாய்மலர்ந்து வாருமென்றார்? தாமரைப்பூவிலிருக்கின்ற பிரமன்வந்து நமஸ்கரிக்கச் சற்றேரத்தின கிரீடமிழைத்த திருமுடியையசைத்தார்; தேவேந்திரன் வந்தனஞ்செய்யப்புன்சிரிப்புகொண்டார்; மற்றதேவர்களெல்லாரும் வந்துவணங்கக் கிருபைக்கண்ணினாலே பார்த்தருளினார். எ-று. (௭௧)

கலி விருத்தம்.

முடிந்த கங்கையாற் பிறைக்கொழுந்
தெழுந்துமேன் முகைத்து
வெடித்த தாமெனத் தவளவான்
கவிகைமேல் விளங்க
வடித்த கங்கையி னருவியு
மம்புலிக் கொழுந்துந்
தொடுத்து வீழுமா றெனவிரு
கவரிக டுளங்க.

இ-ள். சடையில்வைத்த கங்காசலத்தினால்பிறையானதுகொழுந்துவிட்டு அரும்பாகிப் புட்பித்ததென்று சொல்லும்படியாகவெள்ளைவட்டக்குடைபிடிக்கவும், அலையடிக்கிறகங்கையினருவியும் சந்திரனுஞ்சேர்ந்து விழுந்தனபோலும் இரண்டுசாமரம் வீசவும். ()

திருவினாயக னடைப்பைகொண் டொருபுறஞ் சேரக்
குருவினாயகன் களாஞ்சிகொண் டொருபுறஞ் சார
விரவிநான்முக னாலவட் டங்கொடு வீசப்
பரவிநாரதர் தும்புரு விருபுறம் பாட.

இ-ள். இலக்குமிகாந்தராகியவிட்டுணு பாக்குவெற்றிலை முதலானவைவைத்திருக்கிற அடைப்பையெடுத்துக்கொண்டு ஒருபக்கம்வரவும், கற்பகத்தருவிற்கு நாதனாகிய தேவேந்திரன் படிக்கமெடுத்துக்கொண்டுவரவும், பிரமன் சமீபத்திலின்று ஆலவட்டம் வீசவும் தும்புருநாரதரிருவரும் வந்தனஞ்செய்து இருபுறத்திலும் நின்று சங்கீதம்பாடவும். எ-று. (எங

கூற்றனானவன் கனகபா துகைகொடு குறுகக்
காற்றுவேந்தனுந் திசையெலா நறும்புகைகாட்ட
வேற்றுவாகனக் கடவுளுஞ் சிறியவாளெடுப்பத்
தோற்றுமாதவர் கலைமதி விளக்கொடுசூழ.

இ-ள். இயமன் தங்கத்தினாற்செய்திருக்கிற பாதகுறடுகளைக் கையாலெடுத்துக்கொண்டுவரவும் வாயுபகவான் திக்குகளெட்டினும் அகிற்புகை சாம்பிராணிப் புகைகாண்பிக்கவும், ரிஷபத்திலேறுகின்ற ஈசானன் உடைவாளெடுத்துக்கொண்டுவரவும், சூரியர்களநேகரும்சந்திராநேகரும் விளக்கெடுத்துக்கொண்டுவரவும். எ-று.

சுரமடந்தையர் துகிலின்மஞ் சிகைபல சுமப்ப
வுரவமங்கையர் நவமணிப் பணிசுமந் தணுகப்
பரவுகின்னரர் முதலினோர் வீணையார்ப் பரிக்கப்
பொருவினான்மறை நடந்திறை தலைமையைப் புகழ.

இ-ள். தேவகன்னியரனேகர் வஸ்திரம்வைத்திருக்கிற பெட்டிகளைத் தூக்கிக்கொண்டுவரவும், நாகலோகப்பெண்கள் நவமணிகளிழைத்திருக்கிற ஆபரணங்களைச் சுமந்துகொண்டுவரவும், கின்னரர்கிம்புருடர் வீணைவாத்தியஞ்செய்யவும் நான்குவேதங்களுஞ் சமீபித்துச் சுவாமியெல்லாருக்கும் பெரியவரென்று புகழ்ந்து முறையிடவும். எ-று. (எரு)

கிரகமேழு * மெண் வசுக்களு முனிவருங் கிளர
வுரகர்விஞ்சைய ரிமையவர் மகிழ்ந்துகண் டுருக

---

* வசுக்களாவார்—தரன், துருவன், சோமன், ஆபச்சைவன், அனலன், அணிலன், பிரத்தியூசன், பிரபாசன்.

விருகரங்களாலுருத்திரர் மலர்மழையிறைப்பத்
திருவும்வெண்கலை மடந்தையுமிமசலந் தெளிப்ப.

இ-ள். சந்திர சூரியர் இருவருந்தவிர, மற்றையேழுகிரகங்களும், அட்டவசுக்களும், முனீசுரர்களுங் களிகூர்ந்துவர; நாகலோகத்தார், வித்தியாதரர்கள், தேவர்கள், பார்த்துச் சந்தோஷத்தையடைந்துஉருக; ஏகாதச ருத்திரர்களும் இரண்டு கைகளாலும் புட்பங்களை வருடமாக இறைப்ப, இலக்குமியும் சரஸ்வதியும் பனிநீர் தெளிக்கவும். எ-று. (எசு)

திக்குப்பாலகர்தெரிவையர் திசைதொறுந்திகழ
மிக்க * மாதர்களெழுவருஞ் சோபனம்விளம்ப
விக்குநேர்மொழிநீரர மகளிர்வாழ்த்தெடுப்பத்
தக்கவிஞ்சையர் மகளிர்பல்லாண்டிசைதழங்க.

இ-ள். திக்குப் பாலகருடைய தேவிகள் அவரவர் திசைகளினின்று சேவிக்கவும், சத்தமாதர்கள் சோபனம்பாடவும், கருப்பஞ்சாறுபோல் மாதுரியம் பொருந்திய வார்த்தைகளுடைய நீரரமகளிர் வாழ்த்துச்சொல்லவும், தகுந்த வித்தியாதர மாதர்கள் பல்லாண்டுகூறவும். எ-று. (எள)

கண்டைபேரிகைகுடமுழா முழவுகாகளந்த
வண்டைமல்லரிசல்லரி வலம்புரியொலிப்ப
வண்டகோளகைமடந்தையர் சிலம்பொலியதிர்ப்ப
வெண்டிசாமுகந்தனிலுமெண் பிரம்பொலியிசைப்ப

இ-ள். பெரிய மணியினோசையும், பேரிகை, குடவாத்தியம் மத்தளவாத்தியம், காகளம் தவண்டை மல்லரி சல்லரி சங்கங்கள் கோஷிக்கவும், தேவப்பெண்கள் காலின்சிலம்பு கலீரென்று சப்

---

* மாதர்களெழுவர்—பிரமாணி, உருத்திராணி, நாராயணி, வராகி, கௌமாரி, காளி, இந்திராணி யென்னு மிவர்களாம்.

திக்கவும் எட்டுத்திக்கிலும் நந்திதேவர் வருகிற கூட்டங்களைவிலக்க அடிக்கிற பிரம்பினது சப்தம் பிரகாசிக்கவும். எ-று. (௭௮)

எண்ணும்வெள்ளிமால் வரையடியிறங்கியதிடப
மண்ணல்சேனையின் கொழுந்திமகிரித்தலமடைந்த
விண்ணுமண்ணுமெள்ளிடமற நெருங்கியவிமானம்
மண்ணுமால்விடைநெறிகடந் தடைந்ததுபதியே.

இ-ள். யாவராலுந் தோத்திரஞ் செய்யப்பட்ட கைலாயகிரியடிவாரத்தில் ரிஷபவாகன மிறங்கியது; சுவாமியினுடைய சேனையின் முன்னணி இமைய பர்வதத்தை யடைந்தது; ஆகாயமும் பூமியும் எள்ளிருக்க இடமில்லாமல் விமானங்கள் நெருங்கின; அலங்கரித்திருக்கின்ற விட்டுணுவாகிய ரிஷபம் சுவாமியைத் தூக்கிக்கொண்டு வழிமுழுதுங்கடந்து இமயபர்வதராஜன் பட்டணத்தில் வந்துசேர்ந்தது. எ-று. (௭௯)

இமகிரிப்பதியடைந்தது மிமகிரிமடவார்
நிமலனார்திருவழகெலாம் விழிகளாலிரைத்தா
ருமைதவத்தினுக்கதிவிலை யெனப்புகழ்ந்துரைத்தா
ரமர்செய்காமனைபழித்தகண் ணெதுவெனவறைந்தார்.

இ-ள். அப்படியே சிவன் இமய பருவதத்தில் எழுந்தருளினபோது, அந்தமலையிலிருக்கின்ற பெண்கள் சுவாமியின் அழகைப் பார்த்துப் பார்வதிசெய்த தவத்துக்கு ஒரு குறைவுமில்லாமல் பலன் சித்தியாயிற்று என்றார்கள்; அவர்களில் சிலர்யுத்தத்துக்கு வந்த மன்மதனை எரித்தகண் எதுவோ அந்தக் குரூரமான கண்ணைப்பார்ப்போமென்பார்கள். எ-று. (௮௦)

ஆகமாரனிக்கிருக்கவு முலகெலாமயர்ந்த
யோகமீதிவரிருக்கையான் மதனுடலொழித்துப்
போகமீதிவர்விருப்புற வுயிர்க்கலைபுணர்ந்த
மோகமாக்கிடுமுதலிவ ரெனச்சிலர்மொழிந்தார்.

இ-ள். மன்மதன் தேகத்தை யுடையவனா யிருந்தபோதும் இவர் யோகத்தி லிருந்ததனால் உலகத்திலுள்ள சனங்களெல்லாம் விகாரமில்லாமல் அயர்ந்து கிடந்தன; மன்மதன் தேகம்போயும், இவர்போகத்தில் விருப்பம் உண்டானபடியினால்சகலருக்கும்போகத்திலாசையுண்டாயிற்று. ஆனபடியினால் மோகத்தை யுண்டாக்குகிறவர் இந்தச் சிவனேயன்றி வேறொருவரு மில்லையென்று ஸ்திரீசனங்கள் சிலர் சொன்னார்கள். எ-று. (௮௧)

மாயவிற்கைவே ளழகிவரெழின்மிகுவடிவி
லாயிரத்திலொன் றிலையெனத்தனைமதித்தவனைத்
தீயிடத்துடல்கொளுத்திய தவத்தினற்றிறனே
யாயுமுத்தமரறிப்பரோ வெனச்சிலரறைந்தார்.

இ-ள். மாயஞ் செய்கின்ற கருப்புவில்லைக் கையிற் றரித்திருக்கின்ற மன்மதன் அழகு இந்தச்சுவாமியினுடைய வடிவமாகிய அழகில் ஆயிரத்திலொரு பங்குகாணாது; அதனாலே அவனை இகழ்ந்து தன்னைமதித்துத் தீயினால் அவனைக் கொளுத்திப்போட்டது; தபோமகிமையினாலேயே ஆராய்ந் தெளிக்கத்தகுந்த உத்தமர்கள் ஆனால் அப்படிச்செய்வார்களோ வென்று சிலமாதர்கள் சொன்னார்கள். எ-று. (௮௨)

மாதுலன்பெருங்கிளைஞரு மருகனார்திரளுங்
காதலன்பினொடெதிரெதிர் தழுவினர்கலந்தா
ராதியந்தமுமதனிலை யளவிடலரியோன்
வேதியன்கரம்பிடித்தினி திழிந்தனன்விடைமுன்.

இ-ள். மாமனாகிய மலையரசன் சுற்றத்தார் முதலிய சேனைகளும், மருமகனாகிய பரமசிவத்தினுடைய சேனாசமூகமு மிகுந்த ஆசையோடுங் கூடினவர்களாய் எதிரெதிராகவந்து ஒருவருக்கொரு

வராகத் தழுவிக்கொண்டார்கள்; முதலுமீறுமில்லாத அளவிடப்படாத சிவபிரான் பிறரன்கையைப் பிடித்துக்கொண்டு ரிஷபவாகனத்தில் னின்று இறங்கினார். எ-று. (௮௩)

இலகுமங்கையரனேகர்நீ ராஞ்சனமெடுப்ப
வுல்கபாலகரிருமருங் கினுநடந்தொதுங்கத்
திலகமாதவனிருகைமே லொருகரஞ்சேர்த்திட்
டலகிலாமணியிழைத்ததோர் மண்டபத்தணைந்தார்.

இ-ள். இப்படிச் சுவாமி இடபவாகனம்விட்டு இறங்கினவுடனே அழகுள்ள அனேகம்பெண்கள் ஆலத்தி எடுக்கவும், திக்குப்பாலகரெண்மரும் சுவாமியினிருபுறத்திலும் நடந்தொதுங்கி வரவும், எல்லாருக்குந் திலதமாகிய விட்டுணுவினுடைய இரண்டுகைமேலும் தம்முடைய ஒருகையைச் சேர்த்துக் கணக்கில்லாத ரத்தினங்களால் இழைக்கப்பட்டிருக்கின்ற மண்டபத்தில் வந்துசேர்ந்தார்கள். எ-று. (௮௪)

அரியமண்டபத்தமைந்தபீ டிகையின்மீதடைந்தார்
வரையிடைப்பிறந்தமை வளர்முலைசொலவருவார்
குருமலர்க்கையிலேந்திவந் தருள்குடியிருக்குந்
திருமுகத்தியையிறையவன் வலப்புறஞ்சேர்த்தார்.

இ-ள். சுவாமி அருமையாகிய அந்தமண்டபத்தில் இட்டிருந்த ஆசனத்திலெழுந்தருளினார், ஸ்தனங்கள் மலைபோ லிருப்பதனால், அந்தத் தனங்களை இவர்கள் மலையிற் பிறந்தார்களென்று காண்பிக்கும்படியாக வருகிறமாதர்கள் தங்களுடைய நிறம்பொருந்திய புட்பம்போலும் கைகளிலேந்திக்கொண்டு கிருபையே குடியாக விருக்கின்ற அழகிய முகத்தையுடைய பார்வதியைச் சிவனுடைய வலப்புறத்தில் உட்காரவைத்தார்கள். எ-று. (௮௫)

முன்னையாரணன்வதுவையின் சடங்கெலாமுடித்து
வன்னிமேற்பொரியிறைத்துநெய்சொரியமந்திரத்தா

லென்னையாளுடையிறைவனுமேழுலகீன்ற
கன்னிசெங்கரம்பிடித்துமூ வலஞ்செய்தான்கனலை.

இ-ள். இந்தப்பிரகாரம் சுவாமியும் அம்மனும் கலியாணமண்டபத்திலெழுந்தருளியிருக்க, அந்தவேளையில் பிரமதேவர் கலியாணச்சடங்கை விதிப்படிமுடிக்க, எம்மை யாட்கொண்ட பரமசிவன் அக்கினியிற் பொரிசொரிந்து நெய்யாகுதிசெய்து, முன்னமே ஏழுலகத்தையும்பெற்ற அம்மனை கையைபிடித்து அக்கினியை மூன்றுதரம் வலமாகச் சுற்றிவந்தார். எ-று. (௮௬)

ஒற்றைவால்வளையொலித்தது சுருதியுமொலித்த
[illegible]சொரிந்தார்
[illegible]ற்றியாசனத்திருந்தன னனைவரும்பணிந்தார்
பெற்றதாதையோடன்னையைப் பணிந்தனள்பெதும்பை.

இ-ள். வெண்மை பொருந்திய ஒப்பற்ற சங்கமுழங்கவும், நான்குவேதங்களும் சப்திக்கவும், நான்குபுறமும் சுற்றிக்கொண்ட தேவர்களும் ரிஷிகளும் புஷ்பமாரியைப்பொழியவும், சுவாமி ஓர் ஆசனத்தில் எழுந்தருளினார்; அப்போது, சர்வத்திரபேரும் வந்தனஞ்செய்தார்கள்; பார்வதிதேவியார் தமதுதாயையுந் தகப்பனையும் வணங்கினார். எ-று. (௮௭)

எரித்தகாமனைத்தருதியென் றிமையவரயன்மா
லொருத்தரன்றியேயிறையவன் மகிழ்ச்சிகண்டுரைத்தார்
மரித்தகாமனையழைத்தருள் புரிந்தனன்வள்ளல்
பெருத்தவன்பினாலனைவரும் விடைகொடுபெயர்ந்தார்.

இ-ள். தேவர்களும், பிரமனும், விட்டுணுவும் மற்றயாவரும்சுவாமி எல்லாரிடத்திலும்வைத்த பிரியத்தைப்பார்த்துச் சுவாமி! நீர்முன்னேஎரித்த மன்மதனை எழுப்பித் தரல்வேண்டுமென்றுகேட்டார்கள்; அப்படியே இறந்துபோன மன்மதனைவரவழைத்துக்

கொடுத்துக் கிருபைசெய்தார் பரமசிவன்; பின்பு யாவரும் விடைபெற்றுக்கொண்டுபோனார்கள். எ-று. (௮௮)

அதற்பினன்னையுங் கவுரியுமுருகியொன்றாகி
மதத்தவானையைக்குமரனைப் பயந்தனர்மகிழ்வாக்
விதிர்த்தவேலினைக் குமாரனுக்களித்து நிறைவிடுத்தான்
கொதித்ததாரகனுயிர்குடித் துவந்தனன்குமரன்.

இ-ள். அப்படியே திருக்கலியாணம் நடந்தபின்பு சுவாமியும் அம்மையும் மிகுந்த அன்புகொண்டு ஒருருவமாகிச் சேர்ந்துவலிமை பொருந்திய யானைமுகத்தையுடைய விக்கினேசுவரரையும், சிவசுப்பிரமணியரையும் பெற்றார்கள்; [illegible] ரமணியருக்கு அஞ்சத்தக்க வேலாயுதத்தை அருளிச்செய் தனுப்புவிக்க, அவர்போய் அந்தத் தாரகாசுரனை வேலாயுதத் [illegible] றிந்துகொன்று சந்தோஷத்தை யடைந்தார். எ-று. (௮௯)

மயிலெனத்திகழ்மலைமகள் பொருகரிவதன
னயிலெடுத்தசெங் கரனுடனிமயவெற்பகன்று
கயிலைவெற்பில்வந்திமையவர் முனிவர்கண்களிக்க
வெயிலுடைப்புரமெரித்தவ னிருந்தனனப்பால்.

இ-ள். மயில்போல விளங்குகின்ற பருவதராசன் மகளாகிய பார்வதி யானைமுகத்தையுடைய பிள்ளையார் வேலாயுதத்தைத்தரித்த சிவசுப்பிரமணியருடன் இமயகிரியைவிட்டு நீங்கித் தேவர்கள் முனிவர்களுடைய கண்களிகூறக் கைலாயத்தில் எழுந்தருளியிருந்தார் முப்புரத்தை யெரித்தவராகிய பரமசிவன் அதன்பின்பு. எ-று. (௯0)

மூன்றாவது
திருவவதாரச்சருக்கம்
முற்றிற்று.
ஆக திருவிருத்தம் · ௨௫௯.

உ

சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

திருக்கண் புதைத்த சருக்க வசனம்.

சிவபெருமான் உமாபிராட்டியாரை விவாகஞ்செய்ததும், குமாரர் தோன்றித் தாரகன் என்னும் அசுரனைக் கொன்று தேவர்களைக் காத்ததும் கூறினோம். தேவியார் இறைவன் திருக்கண்களை மூடியதும் அதனாலுண்டாய பாவத்தை நிவாரணஞ் செய்ததும் புகல்கின்றோம். மார்க்கண்டேய முனிவரே! திருக்கயிலாய மலையிலே இறைவனும் தேவியாரும் திருவிளையாடல் பலவற்றைப் புரிவாராயினர். ஊடல்கொள்ளுவார் அதனைநீக்கி மாலையை யொருவர்க்கொருவர் தரிப்பார்கள். வீணையிசைப்பர். வேதசிவாகம முழக்கங்களைச் செய்வார். ஆபரணங்களைத் தரிப்பர். இவ்வா றிருக்கும் போதில் பரம மாதாவாகிய தேவியார் சிவபெருமானை வணங்கிச் சூரிய சந்திரர்கள் யாவரென்று வினவினார். பெருமான் அருள் கூர்ந்து சொல்வார். அணங்கே! அவை நமது கண்களாகும் என்றார். உடனே தேவியார் மூடினார். கண்கள் மூடப்படவே அண்டங்கள், புவனங்கள், திசைகள் ஆகிய எவ்விடத்தும் ஒளியின்றி யிருள் பரந்தது. நதிகள் எல்லாம் யமுனைபோலக் கறுப்புநிறத்தைக்கொண்டன. எல்லா உயிர்களுங் கண்கள்தெரியாத குருடர்போ லிருந்தன. இல்லற துறவறங்க ளொழிந்தன. பிரமன் முதலாயினோரது படைத்தல் முதலிய தொழில்களும் இல்லையாயின. இயற்கையே திருவருளுடைய பெருமான் உயிர்கள் தம் தொழில்களை விடுத்து உறங்குவார்போலக் கிடந்து மயக்கமுறுதல் கண்டு நெற்றியில் ஒரு திருக்கண்ணைத் திறந்தனர் அதன் ஒளியால் அந்தகாரம் நீங்கி முன்போல உயிர்களெல்லாம் எழுந்தன. இறைவி கையையெடுத்தாள். மூன்றக்கினிபோல மூன்றுகண்களும் விளங்கின. பிரமன் விட்டுணு முதலாயினோரும் மயக்கந்நீங்கித் தமது தொழில்களை

நடத்தினர். உமாபிராட்டியார் பயந்து பெருமானுடைய திருவடிகளை வணங்கி, சுவாமீ! அடியாளாகிய யான் தேவரீரது திருக்கண்களை மூடியதனால் அந்தகாரஞ்செறிந்து, உயிர்கள் தாங்கள் செய்யும் புண்ணியத் தொழில்களினின்றும் நீங்கியிருந்தவனன்றோ? அதனாலுண்டாகிய பாவத்தைப் போக்குமாறு தவஞ்செய்யநினைத்தேன். அதற்குரிய இடத்தை அருளிச்செய்ய வேண்டுமென்று துதித்தார். சிவபெருமான், நங்கையே! காஞ்சிப்பதியிற்சென்று பூசிக்க என்றார்.

அம்பிகையார் விடைபெற்றுக்கொண்டு, துர்க்கை குடைபிடிக்க, ஜயலட்சுமி அடைப்பைதாங்க, அருந்ததியும் கமலினியும்சாமரமிரட்ட, சிவிகையிலேறிக் கங்காநதியைச் சார்ந்தார். ஆங்குள்ள காசித்தலத்தையடைந்து விசுவேசனைப்பணிந்து தொண்டைமண்டலம்வந்து காஞ்சிக்கலையடுத்தார், ஆங்குள்ள பலவனப்புக்களையுடைய வீதிகளையெல்லாங்கடந்து மாவிருக்ஷத்தின்கீழெழுந்தருளியிருக்கும் ஏகம்பநாதரைவணங்கி, மணலை இலிங்கமாகக் குவித்துப் பூசைசெய்யும்போது, பார்வதிதேவியாரின் அன்புப்பெருக்கையுலகர்க்கு அறிவிக்கவெண்ணிக் கம்பாநதிப்பெருக்கை வரச்செய்தார். அது ஆர்ப்பரித்து வருதல்கண்டு, சிவலிங்கப்பெருமானைக் கரைத்துச்செல்லுமேயென்று இரங்கி ஆசையினால் அணைபவரைப்போல இருகைகளாலும் கட்டிக்கொண்டார். அதனால் சிவலிங்கப்பெருமான்குழைந்து வளைத்தழும்பும் முலைத்தழும்பும் பொருந்தப்பெற்றார். கம்பைநதியானது அருணாசலத்தை யொருமுறை நினைத்தாரது நல்வினை தீவினைகள்பிரிவதுபோல இரண்டாகப் பிரிந்துசென்றது. தழும்புகள் விளங்கின. தேவர்களெல்லாம் அவ்வற்புதங்கண்டுதுதித்து மகிழ்ந்தார். பரமசிவன் இடபாரூடராய்த்தோன்றினார். அம்மையார்கண்டு வணங்கிநின்றார். நங்கையே! உனக்குவேண்டியது யாது என்ன! தேவரீர் இடப்பாகத்திலமரும் பெருவாழ்வைத் தந்தருளவேண்டுமென்றார். சிவபெருமான் பெண்ணரசியே! நீ இங்குப் பூசைசெய்தமையால் நம் கண்களைமூடிய பாவம் அகன்றது. அழற்கிரிவடிவமாக நாமவீற்றிருக்கும் திருவருணைத்தலத்தையடைந்து பூசிப்பையாயின் அவ்வரந்தருவோமென்றார். அப்போது அம்பிகையார்சொல்வார். பெருமானே! கைலாயம் காசி என்னுமிவ்விரண்டுதலங்களினும் காஞ்சிநகர் அதிகமென்று, இப்போது காஞ்சியினும் அருணாசலம் என்னும் அக்கினித்தலமே மிகவும்விசேடமென்றருளினீர். அதினும் விசேடமான தலம்வேறுளதோவென்றார். உலகத்தில் திருவருணைக்கு நிகரானவும், மேலானவுமான தலங்கள் எவ்விடத்திலுமில்லையென்றார். பார்வதிதேவியார் சுவாமியைவணங்கி விடைபெற்றுக்கணங்களோடுந் திருவருணைக்குவெளிப்பட்டு இரண்டுகாததூரம்போயிரங்கினார். சூரியன் அத்தமித்தான். சுப்பிரமணியக்கடவுள் ஒரு பந்தல் அமைத்தார்.

அப்போது பிராட்டியார் குழந்தைவேற்பெருமானையணைத்து முத்தமிட்டுப் பன்னிருகைகளுஞ்சிவந்தனவோ என்றுரைத்து, சந்தியாவந்தனஞ்செய்வதற்குப் பரிசுத்தமான தீர்த்தம்வேண்டுமென்றார். உடனே சுப்பிரமணியப்பெருமான் தமது திருக்கரத்திலுள்ள வேலாயுதத்தையேவினார். அவ்வேல் போதவான், புத்திராண்டன், புருகூதன்முதலிய எழுவரையும் அவரிருந்த மலைகளையும் அழித்துச் சலங்கொண்டுவந்தது. அதனையே சேயாறு என்றுசொல்வர், அதன்கண் நீராடிச் சந்தியாவந்தனமுடித்து வாழைப்பந்தரிலிருக்க, சுப்பிரமணியப்பெருமான் இத்தீர்த்தம் சிவப்பாயிருப்பதற்குக் காரணமென்னென்றார், எழுபிராமணர்கள் பாவிகளாய்த் தவஞ்செய்ய, பிரமன்வந்து, குமாரசுவாமி வேலாயுதத்தை யேவுவார். அதனால் அவர்களுடல்கிழிய இரத்தங்கலந்து சிவப்பாயிற்று என்று அம்மையார்கூறினர். விடிந்தவுடன் நித்திய கடனை முடித்துப் பல்லக்கிலேறித் திருவருணாசலத்தையடைந்து வணங்கினார். அங்

தே நடக்காநின்ற பற்பல விசேடங்களையெல்லாம்பார்த்து உவகையுற்றுக் கௌதமமுனிவரின் ஆச்சிரமத்தை யடைந்தார். முனிவர் பத்தினியாகிய அகலிகையும் புத்திரரான சதானந்த முனிவரும் வந்து பணிந்தார். கௌதமன் எங்கேயென்று அம்மையார் வினவ, அவர் தருப்பைபுட்பங்கள் கொய்யச்சென்றார். இதுபோதே யழைத்து வருவலென்றுசென்று தந்தையார்க்கு அறிவிக்க அவர் கரையற்ற ஆனந்தக் கடலின்மூழ்கி சதானந்தரை யெடுத்தணைத்து ஆனந்தங்கூத்தாடி, எளியேம் உய்ந்தேம்! உய்ந்தேம்!! என்று ஓடோடிச்சென்று அம்மையாரை வணங்கித் துதித்து நின்றார். அம்மையார் தம்வரலாறுகளைக்கூற, கௌதமர் தலமாண்மிய முரைத்துச்செய்யவேண்டுந் தவத்தினையுமெடுத்துப் பகர்ந்தார். அங்கே தவச்சாலையொன்று அமைத்து நோன்பு கொண்டார், பார்வதி தேவியார். அம்மையார் செய்ததவத்தின் அருமையும்வருத்தமுங்கண்டு அற்புதமும் துன்பமும் அச்சமுங்கொண்டு நின்றார் யாவரும். இங்ஙனம் இருக்கும்போது விட்டுணு முதலாயினோர் கூட்டமாகச் சேர்ந்து அம்மையாரது தவச்சாலையை யடைந்துவணங்கி வேதாகமத்தோத்திரங்களைக் கூறிநின்றார். உமாதேவியார் அவரைக்கடைக்கணித்து வந்ததென்னை யென்றார். தாயே! மகிடாசுரனாற் பெரிதும் வருந்துகின்றேம் என்றுகூற, துர்க்கையையழைத்து அவனைக்கொன்று வருதியென்றுபணித்தார். இனியவனைக்கொன்று இடப்பாகம்பெற்றதைக் கூறுவேம். மார்க்கண்டேயரே கேட்பீராகவென்று சொல்வாராயினார்.

திருக்கண்புதைத்த சருக்க வசனம்
முற்றிற்று.



மேற்படி கோபந்தீர்க்க பார்வதியார் கா
ஞ்சிநகரிலே கம்பாநதியில் மணலால் இலிங்
கம் ஸ்தாபித்துப்பூசித்தல்.—10

ஸ்ரீகைலையம் வேடிக்கைபார்த்தமாய் பார்
வதியார் சுவாமியின் கண்களை மூட அகறெ
ரோஷமடையப்பெற்றது.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நான்காவது,

பார்வதிதேவியார்
திருக்கண்புதைத்த சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மின்னனையு முகிறவழு மிமகிரியின்
றவ பலத்தான் மேனை யான
வன்னையிடத் தென்னன்னை யவதரித்த
கதைசிறிதே யறைந்தே னிப்பாற்
பொன்னனைய சடையிறைவன்
றிருநயன மிருகரத்தாற் புதைத்தவாறுந்
தென்னருணை மாநகரி லன்னைவினை
தீர்த்ததுவுஞ் செப்ப லுற்றேன்.

இ-ள். மின்னல்பொருந்திய மேகங்கள் தவழ்ந்துபோகின்ற மயபருவதத்தின் தபோபலத்தால் மேனாதேவியிடமாகவென் தாயா ய பார்வதி அவதரித்த கதையிலே சிறிதுபாகஞ் சொன்னேன்.

கரிபோலக் கறுத்தது; கெடுதலில்லாத பிரமன் ,கொடியாகி
அன்னம் காகம்போல் கருகியது; அப்படி எல்லாப் பொருளு
கறுத்து மயங்குகின்ற காலத்தில் மும்மூர்த்திகட்கு முதல்வனை
சிவனிடத்தில் எல்லோரும்போய் முறையிட்டுத்தங்கள்குறையை
சொல்லிக்கொண்டார்கள். எ-று.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

அஞ்சலெலன வமைத்தகரத் திறைவனுதல்
விழிதிறந்தா னவனி யேழுந்
துஞ்சுமிரு ளகன்றதுபன் னிருகோடி
சூரியர்தந் தோற்றம் போல
வஞ்சியுமை யிறைவன்விழி புதைத்ததிருக்
கரமலரை வாங்கி நின்றாள்
விஞ்சுமறை யவர்வளர்க்குங் கனல்போல
விழிமூன்றும் விளங்கிற் றன்றே.

இ-ள். சிவபிரான் பயம்வேண்டாமென்று கையமைத்துப்பட
னிரண்டுகோடி சூரியருதயம்போலத் தம்முடையநெற்றிக்கண்ணு
த்திறக்க, ஏழுலகமும் அந்தகாரத்தை நீங்கியது; பார்வதியானவ
பரமசிவத்தின் விழிகளைப் பொத்திய கையைவாங்கிநின்றாள்; பி
மணர்கள்வளர்க்கும் யாகாக்கினிபோல் மூன்றுகண்களும் வி
கின. எ-று. (

பார்புதைத்த திருவயிற்றாள் பணிந்துரைப்பா
ணெடுஞ்சூலப் படையாய் காலன்
மார்புதைத்த மலர்ப்பதத்தா யார்புதைத்த
சடாடவியாய் வைய மேழுங்
கார்புதைத்த விருளாக விழிபுதைத்த
கொடும்பாவங் கழலு மாறு
நீர்புதைத்த பாரிடத்திற் றவம்புரிதற்
கானவிட நிகழ்த்து மென்றாள்.

இ-ள். எல்லாச் சிவராசிகளையும் கருவாக வைத்துக்கொண்ட வயிற்றையுடைய பார்வதி சுவாமியைப்பார்த்து நெடிய சூலத்தையுடையவரே! எமனை மார்பிலேயுதைத்த மலர்போன்ற பாதங்களையுடையவரே! ஆத்தி மாலையை யணிந்த சடைக் காட்டினையுடையவரே! ஏழுலகமும் மேக நிறத்திலும் அதிக நிறமான இருளுண்டாக உமது கண்களை மூடிய கொடியபாவம் போம்படிச் சமுத்திரஞ்சூழ்ந்த பூமியினிடத்தில் தவஞ்செய்தற்கு நல்லஇடமுஞ்சொல்லுமென்று கேட்டாள். எ-று. (௨)

ஈசனுமங் குரைத்தருள்வா னுனைவினைவந்
தணுகாதே யெனினும் யார்க்கு
மாசகலும் படிக்கரிய தவம்புரிய
விரும்பினையேன் மதுரை மாயை
காசியவந் திகைதுவரை யயோத்தியினுஞ்
சிறப்புடைய காஞ்சி மேவிப்
பூசைபுரிந் தரியதவம் புரியென்றான்
விடை கொண்டாள் புகழ்ந்து போற்றி.

இ-ள். அப்படிப் பார்வதிகேட்கச் சுவாமி பெண்ணே! உன்னைப் பாவம்வந்து சேராதாயினும், மற்றவர்களுக்குப் பாவம் நீங்கும்பொருட்டுத் தவஞ்செய்ய இச்சித்தாயானால் மதுராபுரி, மாயாபுரி, காசி, அவந்தி, துவாரகாபுரி, அயோத்தி இவைகளிற் சிறந்த காஞ்சிபுரத்திற்போய்ப் பூசையுடன் அரியதவஞ் செய்யென்றுசொல்லச் சுவாமியைவணங்கி விடைபெற்றுக்கொண்டாள். எ-று. (௩)

விசயமகள் குடையெடுப்பச் சயமகள்பொன்
னடைப்பைகொடு விரைந்துமேவ
வசையுமணிக் கவரியிரண் டருந்ததியுங்
கமலினியு மடுத்து வீசத்

திசையிலிள நிலவெறிக்குந் தரளமணிச்
சிவிகையின்மேற் சென்ற போது
நகைபெருகு மறம்பெருகப் புனல்பெருகும்
புகழ்க்கங்கா நதியைச் சேர்ந்தாள்.

இ-ள். பார்வதியம்மைக்கு வீரலட்சுமி குடைபிடிக்க, ஜயலட்சுமி பொன்னடைப்பை தாங்கிச் சீக்கிரத்தில்வர, இரத்தினங்களிழைத்த சாமரைகளால் அருந்ததியும் இலட்சுமியும் இரண்டு பக்கங்களில்நின்று காற்றுகளைவீச, நான்குதிக்குஞ் சந்திரனைப்போலப்பிரகாசம்வீசும் முத்துப்பல்லக்கிலேறி யாவரும் விரும்புகின்ற தருமம்பெருகச் சலம்பெருகுகின்ற கீர்த்தியினையுடைய கங்கா தீர்த்தத்தில் வந்துசேர்ந்தாள். எ-று. (௧0)

இறந்தவுயி ரினிமீளப் பிறவாம
லிறவாம லிறைவனார்தஞ்
சிறந்ததிரு வுருவாகுந் திருக்காசித்
தலமடைந்து சிவன்றாள் போற்றி
வறந்தமழைக் குருகுமந்தத் தலத்தவர்கள்
பிழைக்கவறம் வளர்த்துப் பன்னாள்
நறுந்தொடையி னரசன்விடை கொண்டுநிற்பத்
தொண்டைவள நாட்டைச் சேர்ந்தாள்.

இ-ள். இறந்துபோனஉயிர் இனிதிரும்பிப் பிறக்காமலுமிறக்காமலும் பரமசிவத்தினுடைய திவ்விய சொரூபமான காசிப்பதியைச்சேர்ந்து விசுவேசருடைய பாதம்போற்றி, மழையில்லாமல் வருந்துகின்ற சீவராசிகள் பிழைக்கும்பொருட்டு அத்தலத்தில்தருமத்தைப் பலநாள்வளர்த்துத் தேன்தங்கிய மலர்மாலையைத்தரித்த அத்தேசத்தரசன் விடைபெற்று நிற்கத் தொண்டை மண்டலத்தைச்சேர்ந்தனர் பார்வதிதேவியார். எ-று. (௧௧)

மழைதவழுந் தலைப்பலவின் பழமதுவாய்
விரிந்தாலு மகர வாழைப்
பழமதுவாய் விரிந்தாலும் புதுமதுவாய்
விரிந்தொழுகும் பழன நீங்கக்
குழையளவு நடமாடும் விழிமாதர்
நடமாடுங் குறிப்பு நோக்கிப்
பொழிலதனின் மடமயில்க ணடமாடுந்
திருக்காஞ்சிப் புரத்தைச் சேர்ந்தாள்.

இ-ள். மேகங்கள் தவழ்கின்ற தலையையுடைய பலாவினது பழங்கள் வாய்விண்டாலும், மகர வாழைப்பழங்கள் அழிந்தாலும், புதியதேன் பெருக்கெடுத்து வாய்க்கால் வழியாக ஓடி விழுகின்ற கழனிகளைக்கடந்து குண்டலம்வரைக்குந் தாவுகின்ற கண்களையுடைய பெண்கள் நாட்டியஞ்செய்கின்ற குறிப்பைப்பார்த்துச் சோலைகளி லிளமையாகிய மயில்கள் நடனஞ்செய்கின்ற காஞ்சிபுரத்தைச்சேர்ந்தனர் பார்வதி தேவியார். எ-று. (௧உ)

[illegible]க்கை யறிவாக்கி மணிதரையு
ளறிவழுங்கும் [illegible] மாதர்
நூபுரத்தம் புயசரணஞ் சிவப்பேற
விழைமருங்கு லொடுங்க வேறு
மாபுரத்தின் மணிமேடை யரம்பையர்க்கு
விளையாட மலைக ளாகுங்
கோபுரத்தி னெடுங்கொடிகள் காமவல்லி
யெனுங்கொடிக்குக் கொழுகொம் பாகும்.

இ-ள். கற்களையும் மரங்களையும் உருகச்செய்து மனிதர்களுடைய உள்ளநிலைக்கெடுக்கிற விசாலமாகிய கண்களையுடைய பெண்கள் சிலம்பணிந்த தாமரை மலர்போலும் பாதஞ்சிவக்க, அல்

போலும் இடை வளையவருகின்ற அப்பட்டணத்திலிருக்கும் இரத்தினமிழைத்த உப்பரிகைகள் அரம்பை முதலாகிய பெண்கள் விளையாடுதற்கு மலைகளாகவிருக்கும்; சிவாலயத்தின் கோபுரத்திற் கட்டியிருக்கிற கொடிகள் கற்பகவிருட்சத்திற்படர்ந்த காமவல்லியென்னுங்கொடிக்குப்படருகிறதற்குக் கொழுக்கொம்பாயிருக்கும்.

பரதநா டகமாடு மயில்போலுங்
கயிற்றுவழிப் பாவை போலுஞ்
சுரதநா டகமாடுந் துடியிடையார்
கணவருடன் றுவளும் போது
மரகதா திகளுறுத்த விழித்துமணி
மேடையினும் வாரி வீச
வரதனு கரமான தன்றுமுத
லின்றளவு மாழி தானே.

இ-ள். பரதநாட்டியமாடுகின்ற மயிலுக்குச் சமானமாகவும் கயிற்றுவழியாக ஆடுகின்ற சிங்காரம் பொருந்திய பிரதமைபோலவும், சுரதவிளையாட்டைச்செய்கிற உடுக்கைபோன்ற இடையினையுடையபெண்கள் புருடர்களோடு படுத்துப் புரளும்போது, மரகதமுதலிய இரத்தினாபரணங்களறுத்துக்கோபித்து அவ்வுப்பரிகையில்நின்றும் எடுத்துவீசியெறிய, அவ்வாபரண[illegible] [illegible]தில் விழுந்ததனாலேதான் அ[illegible]ரத்நாகரமெனப் பெயர்பெற்றது. எ-று. (௧௪)

அனையமருங் கதன்றுவஞ்சி யொருமாவின்
கீழிருக்கு மரனைப் போற்றிக்
கனலனைய வினைகளையு நடுங்குவிக்க
நடந்ததிருக் கம்பை மேவிப்
புனையமணற் குவித்திலிங்க வடிவாக்கி
யுமைபூசை புரிந்தா ளப்போ
தெனையுடையா னவடவத்தி னுறுதிநிலைத்
தரியகங்கை யேவி னனே.

இ-ள். அத்தன்மையுடைய வீதியைக்கடந்து ஒப்பற்றமாவிரு[illegible] ஏகாம்பரநாதரைவணங்கி, நெருப்பையொத்த பாவங்கள் நடுங்கி ஓடிப்போகவருகின்றகம்பைநதியருகேபோய் அலங்காரமாய் மணலைக்குவித்து இலிங்கரூபமாக்கிப் பார்வதி பூசைசெய்யும்போது, எம்முடையசுவாமி அவள் தவத்தின் உறுதியையறிய அரிதாகிய கங்கையைப் பிரவாகமாக வரச்செய்தார். எ-று. (௧௫)

பூதலமேற் குடமுனிவன் குண்டிகையிற்
கவிழ்ந்துவரும் பொன்னிதானோ
வாதியிலே யந்தமுனி யாசமித்தே
யுமிழ்ந்தவலை யாழிதானோ
வேதமறத் தவம்புரியும் பகீரதற்காச்
சன்னுமுனி யிரக்கத்தாலே
காதின்வழி யொழுக விடப்
பரவியகங் காநதியோ கம்பையாறு.

இ-ள். பூமியில் அகத்தியமுனிவர் கமண்டலங் கவிழ்த்ததினால்வருகிற காவேரியோ! அந்த முனியானவர் ஆதிகாலையில் ஆசமனஞ்செய்து உமிழ்ந்த சமுத்திரத்தின் பெருக்கோ! குற்றமற்றத் தவஞ்செய்யும் பகீரதனுக்காகச் சன்னுமுனியானவர் இரக்கத்தினால் காதின்வழியாகவிடப் பெருக்கெடுத்துவந்த கங்காநதியோ என்று சந்தேகப்படவிருந்தது கம்பைநதி. எ-று. (௧௬)

வேறு.

கங்காநதியின் மணலி லிங்க
மமியர் திருக்கும் வகையுடையாள்
வெங்கா தலினு லணைபவள்போல்
வெற்பா ரிமைய வெற்பாடன்

சங்கார் கரத்தா விருதனத்தா
விருக விருகத் தழுவுதலுங்
கொங்கார் கதுப்பத் திருமார்பு
முருகி யுருகிக் குழைந்தாரே.

இ-ள். பார்வதி கெடாத கம்பையாறு பெருக் கெடுக்கும்போது மணலால்செய்த இலிங்கத்திற்கு அபயமுண்டாக [illegible]ந்து காயங்கொண்ட ஆசையி[illegible] அணைபவள்போல் பர்வதராஜகுமாரி வளையலணிந்த கைகளாலும் இரண்டு கொங்கைகளாலும், இறுகி யிறுகத் தழுவுதலும் வாசனைபொருந்திய சந்தனத்தையணிந்த திருமார்பு உருகிக் குழைந்தார். எ-று. (௧௭)

மனத்தா னினைந்த பெருந்துயரு
மணக்காப் பிரிவு முடன்றீரத்
தனத்தா னெருக்கி முகமழுத்தித்
தலைநாட் போலத் தழுவுதலு
மனத்தால் விளங்குங் கம்பைநதி
யருணா சலத்தை யொருபொழுது
நினைத்தார் வினைக ளிரண்டுபோ
லிரண்டாய்ப் பகுந்து நீங்கியதே.

இ-ள். தன்னுடைய தவத்துக்குப் பின்னம்வராமல் நினைத்திருந்த துன்பமும், சுவாமிகூடாமற் பிரிந்த துன்பமும் தீரும்படித் தனங்களிலேநெருக்கி முகமழுத்தி முன்னாள்போல் அணைந்தவுடனே, அன்னங்கள் சூழ்ந்த கம்பை நதியானது, அருணாசலத்தை ஒருவேளை நினைத்தவர்களுடைய நல்வினை தீவினைபோல இரண்டாகப்பிரிந்து இலிங்கத்தைச் சுற்றிப்போனது. எ-று. (௧௮)

விடுத்தனள் கரத்தைப் பாங்கர்
விளங்கிழை யவர்கள் சூழத்
தொடுத்தபூந் தொடையுஞ் சாந்து
மணிந்தவள் தொழுதா ளந்த
வடுக்கணாள் தனது கேள்வன்
மார்பினைத் தொடாது நாணித்
தடுத்திடுங் குறிகள் போல
விளங்கிய தழும்ப ரம்மா.

இ-ள். பார்வதி சுவாமியைத் தழுவிய கைகளை விட்ட
அருகில் பிரகாசிக்கின்ற ஆபரணத்தையுடைய அநேகம் பெண்
சூழப் புட்பமாலையுஞ் சந்தனமுந் தரித்து வந்தனஞ் செய்த
மாவடுப்போன்ற கண்களையுடைய அந்த அம்மை தன்னுன
சுவாமிமார்பை மற்றப்பெண்கள் வெட்கத்தையடைந்து தொ
லிருக்கும்படி தடுக்கவைத்த குறிகள்போல் தழும்புகள் விள
யதுகள். எ-று.

அப்பொழு தானு மாற
[illegible]த்தழும் பிருக்குந் தோளு
முப்பொழு திறைஞ்சுந் தேவா
முடித்தழும் பிருக்குந் தாளு
மைப்பொலி குழலாள் கொங்கை
வளைத்தழும் பிருக்கு மார்பு
மெய்ப்பொலி நீறுமாகத்
தோன்றினார் விடையின் மீது.

இ-ள். அக்காலத்தில் பரமசிவன் (அரிமர்த்தன) பாண்டி
சன் அடித்ததழும்பிருந்ததிருத்தோள்களும், மூன்றுகாலத்தி

வணங்குகின்ற தேவர்களுடைய கிரீடங்களின் தழும்பிருந்த திருவடிகளும், மேகம்போல் விளங்குங் கூந்தலையுடைய பார்வதி முலைத்தழும்பும் வளைத்தழும்பு மிருக்கின்றமார்பும், தேகத்திற் பொலிந்த திருநீறுமாய் ரிஷபவாகனத்தில் எழுந்தருளினார். எ-று. (௨௦)

அந்தரத்தமரரெல்லா மலர்மழைசொரியவானற்
றுந்துமிமுழக்கத்தோடே சுருதிகண்முழங்காநின்ற
விந்திரன்றிருமாற்றேவ ரிறைவியைத்தொழுதுநின்றார்
சுந்தரக்கனிவாய்மின்னு மீசனைத்தொழுதுநின்றாள்.

இ-ள். ஆகாயத்தில் தேவர்களியாவரும் புட்பவருஷம் பொழியத் தேவதுந்துமி முழக்கத்தோடு வேதங்கள் முழங்காநின்றன. தேவேந்திரனும், விட்டுணுவும், தேவர்களும், பார்வதியைத் தொழுதார்கள், அழகிய கனிபோலும் வாயையுடைய அம்மையும் பரமசிவனை வணங்கி நின்றாள். எ-று. (௨௧)

ஒண்ணுதல் விடைமுன்சென்று
 பணிந்துள முருகிப் பூசை
பண்ணுதல் புகழ்த லாகிப்
 பணிந்தன ளவனை நோக்கிக்
கண்ணுத லுனக்கு வேண்டும்
 வரமெது கழறு கென்றா
னெண்ணுதல் பிறிதொன் றில்லை
 யிடப்புறந் தருதி யென்றாள்.

இ-ள். விளங்குகின்ற நெற்றியையுடைய அம்மை, ரிஷபவாகனத்தின் முன்பாகச்சென்று நமஸ்கரித்து மனமுருகிப் பூசைசெய்து புகழ்ந்துவணங்கினாள்; சுவாமி பார்வதியைப்பார்த்து உனக்கு வேண்டிய வரம் யாது? சொல்லென்றார்; அதற்கு அம்மையும் யாதும்வேண்டிலேன், உமது இடப்பாகத்தை அருளுமென்று கேட்டாள். எ-று. (௨௨)

அத்தனு மொழிவா னென்கண்
 புதைத்ததா லடைந்த தீமை
யித்தலத் தினிய பூசை
 யியற்றலா லகன்ற திந்த
மெய்த்தலந் தனக்குத் தென்பா
 லொருநகர் விளங்கித் தோன்று
முத்திமா நகரந் தன்னை
 நினைந்தபேர்க் களிக்கு மூதூர்.

இ-ள். அதற்குப்பரமசிவன் அருளிச்செய்வார்; என் கண்களை மூடியதனாலே அடைந்தபாவம், இந்தத்தலத்தில் இனிமையான பூசைசெய்தலினால் நீங்கியது; இந்த மெய்ம்மையான தலத்துக்குத் தென்பாரிசத்தில் ஒருநகரம்பிரகாசிக்கும், அதைநினைத்தால் முத்தியுண்டாகும். எ-று. (௨௩)

ஆரணன்றிருமாறேட வடிமுடியொளித்துஞானப்
பூரணவொளியாய்மேல்கீழுலகெலாம்பொருந்திநிற்போந்
தாரணியவர்க்குமற்றைச்சயிலமாயிருப்போமங்கே
வாரணிமுலையாய்பாகந்தருகுவோம்வருதியென்றார்.

இ-ள். பிரமனும், விட்டுணுவும்தேடப் பாதமும்சிரசும் அவர்களுக்குத் தெரியாமலொளித்துப் பூரணமாகிய ஞானவொளியாய் மேல்கீழுலகங்களெல்லாம் ஒன்றாய்நிற்போம், பூமிகளிலிருப்போர்க்கு மலையுருவமாயிருப்போம், அவ்விடத்தில் வந்தால் கச்சணிந்த தனத்தையுடையபெண்ணே! இடப்பாகத்தைத் தருவோம் வாவென்றார் பரமசிவன். எ-று. (௨௪)

என்னலுமிறைவிசொல்வாளினிமைசேர்கயிலைகாசி
தன்னினுமினிதுகாஞ்சித்தலமெனவுரைத்திரித்த
நன்னிலந்தனக்குச்சோணைநகரமேயதிகமென்றீர்
பின்னையுமுளதோவந்தத்தலத்தினுக்கிணையாம்பேரூர்.

இ-ள். பரமசிவன் இப்படி திருவுளம்பற்றிய அளவில், பார்வதிசொல்லுவாள், இனிமைசேர்ந்த கைலாயம், காசி இவ்விரண்டு தலங்களிலும் இக்காஞ்சிபுரம் அதிகமென்று அருள்செய்தீர்; இதைப்பார்க்கிலும் அருணாசலத்தலம் அதிகமென்கிறீர்; அத்தலத்துக்குச்சமானமான பெருமைபொருந்திய தலம் வேறொன்றுண்டோ? என்றாள் பார்வதி. எ-று. (௨௫)

அவ்வுரைமறுத்தெங்கோமானருளுவானமக்கொப்பான
தெய்வமைந்தெழுத்துமானத்திருந்துமந்திரமுமில்லை
சைவமேயனையதானசமயமுமருணைபோல
வெவ்வினைதவிக்குமூருமிலையெனவிளம்பிப்போனான்.

இ-ள். அப்படி பார்வதி சொன்ன வார்த்தையைச் சுவாமி மறுத்து நமக்குச் சமானமாகிய தெய்வமும், பஞ்சாக்கரத்திற்கொப்பான மந்திரமும், சைவத்திற்குச் சரியான சமயமும், பொல்லாத பாவங்களைத் தீர்க்கும் அருணாசலத்திற்குச் சரியான தலமும் உலகத்திலில்லையென்று திருவாய்மலர்ந்து கைலாயத்திற்கெழுந்தருளினார். எ-று. (௨௬)

கொம்பனாள் பொறுப்பா யிதென்
றிறைவனைக் குவித்துப் போற்றி
கம்பையா றகன்று காஞ்சித்
தலத்தையுங் கடந்து வேலன்

றும்பிமா முகத்தோன் கன்னி
வயிரவர் கணங்கள் சூழச்
செம்பொனார் கவரி வீசச்
சிவிகைமேற் சிறந்து சென்றாள்.

இ-ள். புஷ்பக் கொம்பையொத்த பார்வதியானவள் சுவாமீ! நான் தெரியாமற் சொன்னவார்த்தையைப் பொறுத்துக்கொள்ளுமென்று இரண்டு கைகளையுங்குவித்து வணங்கிக் கம்பையாற்றைவிட்டுக் காஞ்சீபுரத்தையுங்கடந்து, சுப்பிரமணியர், கணபதி, சப்தகன்னிகள் வயிரவர், சிவகணங்கள் சூழவும் இலக்குமி கவரிவீசவும் பல்லக்கில் எழுந்தருளினாள். எ-று. (௨௭)

மண்மகள் மகிழப் பட்ட
மரங்களுந் தழைத்து வீறிக்
கண்மலர் சொரியக் கல்லு
மலைகளுங் கரைந்து சோர
வெண்மலர் மடவாள் போற்றக்
காவத மிரண்டு நீங்கி
விண்மதி முகத்தாள் மற்றோர்
வெள்ளிடை மருங்கிற் சேர்ந்தாள்.

இ-ள். பூமிதேவிக்குச் சந்தோஷமுண்டாகப் பட்டுப்போன மரங்களும் தளிருண்டாகித் தழைத்துத் தேனோடும்புஷ்பங்களைச் சொரியப் பாறாங்கல்லுகளும் பெரியமலைகளுங் கரைந்துருக,-வெள்ளைத்தாமரைப்பூவில் வாசஞ்செய்யும் சரஸ்வதி தோத்திரஞ்செய்ய இரண்டுகாததூரம்போய்ச் சந்திரனையொத்த முகத்தையுடைய பார்வதி ஒரு வெளியிடத்திலிறங்கினாள். எ-று. (௨௮)

வெய்யவ னமையா ரென்று
  வினவுகா ரணத்தா னீலக்
கையவன் மரக தத்திற்
  கரியவள் கரமுன் காலுஞ்
செய்யவள் வருந்தி னாளென்
  றறிந்துயிர் சிதைப்பான் போலப்
பையமேற் கடலிற் பாய்ந்தான்
  குமரவேள் பந்தர் செய்தான்.

இ-ள். சூரியன் தன்னையாரென்று பரமசிவனைக்கேட்டதனால் நீலம்போன்ற கையும் மரகதம்போன்ற வடிவமும், தாமரைப் பூப்போன்ற உள்ளங்கையும், உள்ளங்காலும் பொருந்திய அம்மை சாபத்தினால் வருந்தினாளென்றறிந்து தன்னுயிரை விட்டுவிடுகிறவன்போல மெள்ள மெள்ள மேற்குச் சமுத்திரத்தில் விழுந்து அத்தமித்தான்; சுப்பிரமணியர் அம்மையிருக்கிறதற்காக ஒருபந்தல் போட்டுவைத்தார். எ-று. (உக)

அன்னையுங் குகனை நோக்கி
  யரம்பையாற் பந்தர் செய்து
பன்னிரு கரமுஞ் சால
  வருந்தினை யெனப்பா ராட்டி
யின்னுமோர் கருமஞ் சந்தி
  முடிப்பதற் கினிய நன்னீர்
கைந்நிறை வேலை யேவி
  யழைத்திடு கணத்தி லென்றாள்.

இ-ள். அதன்பின்பு, பார்வதி சுப்பிரமணியரைப்பார்த்து வாழைமரத்தினால் பந்தற்போட்டுப் பன்னிரண்டுகைகளுஞ்சிவக்க வருத்தத்தையடைந்தாயென்று பிரியவசனஞ்சொல்லி, இன்னும் ஒருவேலையிருக்கின்றது, அஃதென்னவென்றால் சந்தியாவந்தனஞ் செய்கிறதற்கு நல்லபரிசுத்தமான சலம்வேண்டும்; உன்கையிற்பிடித்திருக்கிற வேலாயுதத்தையேவி அழைப்பியென்று சொன்னாள்.

காதலா ளிறைஞ்சிக்கந்த னேவினான் கைவே லவ்வேல்
போதவான் புத்தி ராண்டன் புகழ்புரு கூதன் போதன்
வாதில்பாண் டரங்கன் சோமன் வாமனென் பவரைவாட்டி
யீதிலேழ் கிரியை வீட்டிக் கொணர்ந்தது வேலை நீத்தம்.

இ-ள். அப்படிச் சொன்னவளவில், அதிகபக்தியோடுசுப்பிரமணியர் வேலாயுதத்தை யேவினார்; அது போதவான், புத்திராண்டன், புருகூதன், போதன், பாண்டரங்கன், சோமன், வாமன் என்று சொல்லப்பட்ட ஏழுபேரையும் அவர்களிருந்த ஏழுமலையையும் உருவி நல்லதண்ணீர்க் கடலுக்குப்போய்ச் சலங்கொண்டு வந்தது; அந்நதிக்குச் * சேயாறென்று பெயர். எ-று. (உஉ)

கந்தவே ளழைத்த வாற்றிற் கடனெலாங் கழித்துவாழைப்
பந்தரி லிருந்தா ளப்போ துமைபதம் பணிந்தவ் வாற்றிற்
சிந்துநீர் சிவப்ப தேதென் றுரைத்தலுஞ் சிறப்பதாக
வந்தவா றதனை யாறு திருமுகற் குரைப்பாள் வஞ்சி.

இ-ள். சுப்பிரமணியர் வரவழைத்த ஆற்றிலே நீர்க்கடனெல்லாமுடித்துக்கொண்டு வாழைப்பந்தரிலிருந்தாள்; அப்போது; அம்மையைவணங்கி இந்த ஆற்றுநீர் சிவப்பாயிருக்கவேண்டியதென்னவென்றுகேட்க, அந்த விவரத்தைச் சுப்பிரமணியருக்குச் சொல்லுகின்றாள் பார்வதி. எ-று. (உ௩)

அனந்தமா புரத்திலேழு மறையவ ரறியாக் காலத்
தனந்தமா வினைகள் செய்தா ரதன்பினல் லறிவுதோன்றி

---

* உலகோர் செய்யாறு என்று அழைப்பதுமுண்டு.

யனந்தமா வெனவே யேறு மயன்பதங் கருதிப் பன்னா
ளனந்தமா லமதா யுட்கொண் டருந்தவம் புரிந்தா ரந்நாள்.

இ-ள். அனந்தமாபுரமென்கிறபட்டணத்தில் எழுபிராமணர்கள், அரியாதகாலத்தில் அனந்தம் தீவினைகளைச்செய்து; அதன்பின்பு நல்லவிவேகந்தோன்றி அந்தமமென்ற அன்னத்தைத் தனக்குவாகனமாகக்கொண்ட பிரமனைக்குறித்து, இலைகளையே உணவாக உண்டு பலநாள் தவஞ்செய்தார்கள அக்காலத்தில். எ-று. ( )

பதுமனு மவர்முன் சென்று
பாவிகாள் வரைக ளேழில்
விதிமுறை தவஞ்செய் வீரேற்
குமரவேள் விடுக்கும் வேலாற்
பொதிசடை முடியு முங்கள்
வினைகளும் பொடியா மென்று
சதுர்முக னுரைத்துப் போனா
னவருமத் தவமே செய்தார்.

இ-ள். பிரமன் அவ்வேழுபேர் முன்னேபோய் பாவிகளே! நீங்களெழுபேரும் எழுமலைகளில் விதிமுறையாகத் தவஞ்செய்வீர்களானால், அப்போது அம்மைக்குச்சலம்வேண்டிய நிமித்தியத்தால், சுப்பிரமணியர் வேல்விடுவார், அதனால் உங்கள் சடையோடுங் கூடிய சிரங்களும் பாவங்களும் பொடியாகப்போமென்று சொல்லிவிட்டுப்போனார்; அவர்களும் அப்பிரகாரம்தவஞ்செய்தார்கள். எ-று.

வேறு.

எழுவரா யுமதிருக்கு மெழுவரையும்
பிளந்ததுநீ யெறிந்த கூர்வே
லதியுமவ ருதிரமுடன் புனல்கலந்து
சிவந்ததுகா ணாகை யாலே
வழுவிலையுங் குனக்கென்ன வடிபணிந்து
மகிழ்ந்திருந்தான் மலைமேற் பட்ட
செழுமுனிவர் குருதியினாற் சிவந்ததுபோற்
சிவந்ததுவே செக்கர் வானம்.

இ-ள். அவ்வேழுபேரையும், அவர்களிருக்குமலையையும் பி
ந்தது உன்னுடைய கூர்மைபொருந்தியவேலாயுதம்; அதனால் வ
ந்தொழுகின்ற அவர்களுடைய இரத்தத்தோடு சலங்கலந்து சி
ந்துபோய்விட்டது, உனக்கொரு குற்றமுமில்லையென்று சொல்
ல அம்மன்பாதத்தில் சுப்பிரமணியர் வணங்கிச் சந்தோஷமாயிரு
ந்த அளவில், மலையில் தவம்செய்துக்கொண்டிருந்த முனிவர்களு
டைய இரத்தத்தினாற் சிவப்புநிறத்தை யடைந்ததுபோலச் சிவந்த
து செவ்வானம். எ-று. (௧௫)

வித்தகர்கண் புதைக்கமுனம் பரந்தவிருண்
மறுமையிற்சூழ் வினையைப் போல
வைத்தலத்தி னுமையவளைப் பின்பிடித்தா
லெனப் பரந்த தந்தகார
முத்தமியோ சிறுகதலிப் பந்தரின்கீ
ழிருப்பவளென் றும்ப ரிட்ட
நித்திலப்பந் தரைநிகராய் விளங்கியது
தாரகையா னெருங்கும் வானம்.

[illegible] கண்களை முன்னே மூடினதினால், உலகமெல்லாம் பரவியவிருள் ஒருவனுக்கு மறுமையில்வந்துபிடித்துக்கொள்ளுகிற பாவத்தைப்போல் அந்தத்தலத்தில் பிறகுவந்து அம்மையைப் பிடித்ததுபோலிருண்டது; பார்வதியோ ஒருவாழைப்பந்தரின் கீழிருப்பாளென்று தேவர்கள் போட்டுவைத்த முத்துப்பந்தரை யொத்திருந்தது நக்ஷத்திரங்களால் நெருக்கப்பட்ட ஆகாயம். எ-று. (௧௬)

அருணாசல புராணம். [நானகா

மாலையெனுங் குமரியிருண் மகிடமுக
மகற்றியந்தி வானிற் சோரிக்
கோலமுடன் படிகலிங்கங் கொண்டதுபோன்
மதியெழுந்து குடபாற் சென்ற
ஞாலமணி மிடற்றிறைவன் விழிபுதைக்க
வளைந்தவிரு ளனைத்து நீங்கப்
பாலமிசை வெடித்தெழுந்த விழியெனவே
யெழுந்தது செம்பரிதி தானே.

இ-ள். மாலைக்காலமென்னும் துர்க்கை இருட்டாகிய மகிடா ரன் தலையையறுத்து, அதனால் செவ்வானமென்று சொல்லப்ப ட இரத்தக்கோலத்தோடு படிகலிங்கத்தைக் கைக் கொண்டது போலச் சந்திரனுதயமாகி மேற்குத்திக்கில் அத்தமித்தது; நீலக ண்டராகியபரமசிவன், இரண்டுநேத்திரங்களையும்அம்மைபுதைத்த அளவில், நான்குதிக்கும் பரவிய யெல்லாவிருளும் போகும்படியா ய் விழித்த அச்சுவாமியின் நெற்றிக்கண்போலச் செம்மைநிறம் பொருந்திய சூரியன் கிழக்குத்திக்கில் உதயமானான். எ-று. (௨௭)

வேறு.

கங்கை நிகராஞ் சேயாற்றிற்
காலைசந்திக் கடன் கழித்து
மங்கை கனகச் சிவிகையின்மேன்
மறையோ லமிட வழிகொண்டாள்
பங்க மலந்தீர் வழியடியார்
கொடிய வினையாம் பஞ்சமலைக்
அங்கி மலையாய் விளங்கிய சீ
ரண்ணா மலைகண் டடிதொழுதாள்.

இ-ள். பார்வதி கங்கைக்குச் சமானமாகிய சேயாறு என்கிற நியில் காலைக்கடனை முடித்துக்கொண்டு, பொன்மயமாகியபல்ல கிலேறி; வேதகோஷ்டமுழங்க நடந்து பங்கப்படுத்து மும்மலங் ளைத்தீர்க்கிற அடியார்களுடைய பாவமாகிய பஞ்சமலைக்கு நெரு புமலையாய் விளங்கிய திருவண்ணாமலையைப் பார்த்துச் சாஷ்டா கமாகச் சேவித்துக்கொண்டாள். எ-று. (௨௮)

வென்றியினாற் கவர்ந்தபொருள் பகிர்ந்திறைவி
பலியிடும் வேனிற் பாலைக்
குன்றமெலாம் வெறியாடன் முல்லையெலாம்
பொதுவர் மின்னார் குரவையாடன்
மன்றல்கம ழிந்திரற்கு விழாவெடுத்துக்
கொண்டாடன் மருத வேலி
முன்றிலெலாஞ் சினச்சுறவு முன்னுணக்கி
யணங்காடு முந்நீர்க் கானல்.

இ-ள். வல்லமையினாலே பாலைநிலத்தார் வழிச்செல்வோரை அடித்துப்பறித்த பொருளைப் பங்கிட்டு அந்த நிலத்திலிருக்கிற துர்க்கைக்குப் பலிபோடுவார்கள்; மலைகளையுடைய குறிஞ்சி நிலத்தில் இருப்பவர்கள் ஆடு பலிகொடுக்கிற பூசை போடுவார்கள்; முல்லைநிலத்தில் இடைச்சிகள் குரவைக் கூத்தாடுவார்கள்; கற்பகமாலையைத்தரித்த தேவேந்திரனுக்கு மருதநிலத்தார் உற்சவஞ்செய்வார்கள் முற்றங்களில் சுறாமீன்களைக் காயப்போடுகின்ற கடலருகாகிய நெய்தநிலத்தி லிருக்கின்றவர்கள் வருணனுக்குத் திருவிழாச்செய்வார்கள். எ-று. (௨௯)

சோதிபெறு கரணாக மறையவம்பு
சொரிகையினாற் றாய்மை யாய
மாதரையெ லாங்கலந்த மகிழ்ச்சியினாற்
பொன்கலந்து மருவு நீராற்

போதவரி சனங் களனைப்
பெருகுதலாள் மதுவுடையப் பொருதலாலே
சீதரனை நிகராகத் திருநதிநாற்
றிசைகளொலாஞ் சிறந்த தன்றே.

இ-ள். திருநதி ஒளிபொருந்திய துதிக்கையையுடையயானைகளை மறையச் சலத்தைப் பெருக்கி வருதலாலும், பரிசுத்தமாகிய பெரியபூமியெல்லாம் பரவிய சந்தோஷத்தினாலும், பொற்[illegible]களையுந் திரட்டிக்கொண்டு வருதலாலும், மஞ்சள் பொடிகளையப் பெருகினபடியாலும், தேன் கூடுடைந்து மோதலினாலும் என்று நதிக்குப் பொருள்கொண்டு (சிலேடை வகையால்) கரனுடைய தேகமறையப் பாணங்களைச் சொரிதலாலும், தூய்மைபொருந்திய கோபிகா ஸ்திரீகளைச் சேர்ந்திருந்த விருப்பத்தினாலும் இலக்குமியைச் சேர்ந்திருக்கிறதினாலும், வைணவர் உருக்கத்தலை செய்தலாலும், மதுவென்கிற அசுரன் சாகயுத்தஞ்செய்தலாலும், விட்டுணுவுக்குச் சமானமாக நான்குதிக்கிலுஞ் சிறந்தது. எ-று. (௩௦)

இந்நதிக்கும் திருமாலுக்கும் செம்மொழிச் சிலேடையணி என்க.

[இதுமுத லாறுபாடல் வயற்சிறப்பு.]

மேவுபுனல் பரந்தொழுகக் குளிர்ந்துமயிர்
பொடித்தனபோல் விதத்திற் றோன்றிக்
காவிலுறை பசுங்கிளியின் சிறகெனவே
பசந்துதொண்டைக் கதிராய் முற்றிக்
கூவுகுல வாரணத்தின் களம்போல
நிமிர்ந்தெழுந்து குறைவில் சாலி
பாவையுமை தவம்புரியுந் தலமிதெனப்
பணிந்தனபோற் படிந்த மாதோ.

இ-ள். இந்நதியில் வந்த நீர்பரந்து ஒழுகுகிறபடியினால் குளிர்ந்த பூமிதேவியுடைய தேகத்தின் மயிர்க்குச் செறிந்ததுபோல் குறைவில்லாத [illegible]க்களுண்டாகத் தோப்புகளில் வாசஞ்செய்கிற பச்சைக்கிளிகளின் [illegible]போல பச்சைநிறத்தையடைந்து தொண்டைக்கதிராய் முற்றிக்கூவு[illegible]கோழிக்கழுத்துப்போல நிமிர்ந்து பார்வதி தவஞ்செய்கிற தலம் இதுவென்று வணங்கினதுபோல வளைந்து கிடக்கின்றன. எ-று. (௩௧)

சந்ததமு மேருழுவர் பதம்பார்த்தங்
கரிந்தவரி தடுத்து வாரி
யிந்திரனு ருலகினொடு போர்செய்வா
னெழுமலையா மெனப் போர்செய்
தந்தரமே சுற்றிரவி புரவிகள்போற்
கடாவிடுத்தே யாற்றித் தூற்றி
மந்தரமா மெனக்குவித்து வழங்குகினுந்
தொலையாதென் மருத வேலி.

இ-ள். எப்பொழுதும் உழுவோர்கள் பதம்பார்த்து அறுத்து அரிகளைச் சுமையாகவாரித் தேவேந்திர னுலகத்தோடு சண்டைசெய்ய எழுந்த மலையென்று சொல்லும்படியாகப் போர்போட்டு ஆகாயவழியாக வருகிற சூரியனுடைய குதிரைகள்போலுங் கடாக்களைவிட்டு அடித்து வைக்கோலைத் ஆற்றி மந்திரகிரிபோலக் குவியல்செய்து எல்லா மனிதர்களுக்குங் கொடுத்தாலும் நெல்குறையாது மருதநிலத்தில். எ-று. (௩௨)

கயலினமென் னுழத்தியர்தங் கண்ணிழலைக்
கண்டுகருங் கயல்வர் தேறு
மயனிலிவர் கொடும்புருவ நிழலினைக்கண்
டேசிலையென் றஞ்சியீனு

[illegible]டையாக கூறுனா. எ-று. (௩௩)

மயத்தவு மாவதனத் தாமரைப்போ
தெனமருவி வண்டு சேரு
மியலுமவர் நாசிநிழல் சண்பகப்போ
தெனவெருவி யிரியல் போகும்.

இ-ள். வயலிற் களைபறிக்கிற பள்ளத்திகளுடைய கண்ணிழலைக்கண்டு சேற்கெண்டைகள் நம்மினமென்று வந்துசேரும், பின்பு அருகில் அவர்களுடைய புருவங்களைப்பார்த்து வில்லென்று பயப்பட்டோடும், ஆசையைக் கொடுக்கிற அவர்களுடைய முகத்தைத் தாமரைப்பூவென்று நினைத்து வண்டுகள் வந்துசேரும், அதன்பின்பு அவர்களுடைய நாசியினிழலைப் பார்த்துச் சண்பகப்பூவென்று ஓடிப்போகும். எ-று. (சக)

பெரும்பழனத் துழத்தியர்தங் கணைக்காலை
வராலெனப்போய்ப் பிடித்து மள்ளர்
திரும்பவுமங் கவர்புறங்கால் கமடமெனப்
பிடிமருதத் திணைக டோறும்
குரும்பையெனு முலைச்சியர்கண் முகத்தினுக்கும்
விழியினுக்குங் குலைந்தோமென்று
கரும்பினுடன் கலுழ்வனபோற் றாமரையுங்
குவளையுந்தேன் சொரியுந் தானே.

இ-ள். பெரிய வயல்களிற் களைபிடுங்குகிற உழத்திகளுடைய கணைக்காலை வரால்மீனென்று மள்ளர் பிடித்துவெட்கத்தையடைந்து மறுபடியும் அப்பெண்களுடைய புறங்காலை ஆமையென்று பிடிக்கு மறுகிலந்தோறுந் தென்னங் குரும்பைப்போன்ற முலைகளையுடையபெண்கள் முகத்திற்கும் கண்ணுக்குந் தோற்றுப்போனோமென்று வண்டுடனே சொல்லி யழுகிறதுபோல் தாமரைப்பூவும் நீலோற்பலமும் தேனைச்சொரியும். எ-று. (சஉ)

வேறு.

நிழலையுஞ்சுழிக்குமேதி நெடும்புனல்குடையுவன்ன
மழலைவண்டானத்தோடு மருதவண்டானத்தோடு
மழலவிர்மணிப்பூண்மள்ள ரரிகிணைக்கிசையவூதுங்
குழலிசையறுகான்மாதர் குழலிசையறுகாற்கூட்டம்.

இ-ள். எருமை நீரிலே போய்விழுந்து கலக்க அன்னம் இளமையாகிய நாரையுடனே மருதநிலத்தில் வளம்பொருந்திய தானத்தையுடைய சோலையில் ஓடும்; பிரகாசம் பொருந்திய இரத்தினாபரணங்களையுடைய மள்ளர்கள் அடிக்கிற அரிகிணையென்னும் வாத்தியத்திற்கு இசையும்படியாக ஊதுகின்ற புள்ளாங்குழலிசை இல்லாதபோது பெண்களுடைய கூந்தலிற்பொருந்திய வண்டுகள் இசையும்படியாக ஊதும். எ-று. (சங)

முசுவண்டினங்களெல்லா முடிந்தசங்கிலிகளாகக்
காசுநெற்கதிர்களெல்லாங் கன்னசாமரைகள்காட்டத்
தேசுவாய்க்கவளம்பெற்றுத் தேறுகட்பாகைச்சிந்தி
வாசவன்களிறுபோல மருதம்வீற்றிருந்தமாதோ.

இ-ள். ஒழுங்காய் மொய்த்துக் கொண்டிருக்கிற வண்டுக்கூட்டங்கள் சங்கிலியாகவும், இரத்தினம்போலும் நெற்கதிர்கள் சாமரைபோன்ற காதாகவும் பிரகாசம்பொருந்த வளப்பம்பெற்று பருவங்கொண்ட தேனாகிய அமிர்தத்தைச் சிந்தி, தேவேந்திரனேறுகிற அயிராவதமென்னும் யானைபோல மருதநிலம் வீற்றிருந்தது. யானையானது தன் அழகிய வாயினாலே கவளம்பெற்றுத் தேறித் தன் கண்ணிருக்கின்ற பாகனைத்தள்ளிக் கொல்லுதலால், தேசுவாய்க் கவளம்பெற்றுத் தேறுகட்பாகைச் சிந்தி வாசவன் களிறுபோல மருதம், என்று சிலேடையாகக் கூறினர். எ-று. (சச)

நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.

பண்ணார் கமலப் பழனப் பதிநீங்கி
மண்ணோர் போற்றும் வடவீ தியிற்குறுகி
யண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றுதொழ
விண்ணோர் கொடிநெடுந்தேர் வீதிகளின் மேவினாள்.

இ-ள். வண்டுகளிசைபாடுகின்ற தாமரை புட்பங்களுடைய மருதநிலத் தூரைவிட்டு நீங்கி பூலோகத்தார் வணங்கும் வடக்கு வீதியிலெழுந்தருளி அருணாசலேசருடைய பாதாரவிந்தத்தைப் போய்வணங்க ஆகாயத்தையளாவிய கொடிகளையுடைய தேர்களிருக்குங் கிழக்குவீதியில் வந்தாள் பார்வதி. எ-று. (௪௭)

கலி விருத்தம்.

நச்சு கோபுரத் துச்சிமே விலோர்
வச்சி ரத்தினான் மதியின் மாசுபோம்
வச்ச மாமணிச் செம்மை யாலினன்
பச்சை மாவெலாம் பவள மாகுமே.

இ-ள். யாவரும் விரும்பப்பட்ட கோபுரத்தின் சிகரத்தினருகில் சந்திரன் வரும்போது, அக்கோபுரத்தி லிழைக்கப்பட்டிருக்கிற ஒப்பற்ற வச்சிரங்களி னொளியினாலே தனது களங்கத்தை நீக்குவான் இன்னும் அக்கோபுரத்தி லிழைத்திராநின்ற மாணிக்கங்களுடைய சிவந்த வொளியினாலே அதனருகில்வரும்போது சூரியனுடைய இரதத்திற்கட்டிய பச்சைக் குதிரைகளேழும் பவளக்குதிரைகளாகத் தோன்றும். எ-று. (௪௮)

வேற்று மேருநேர் மேடை மீதினும்
போற்று கார்மதிற் புரிசை மீதினும்
தோற்று நீலமா மணியின் சோதியா
லேற்ற வானதி யமுனை யானதே.

இ-ள். வேறு வேறாகி மேருவையொத்த மேடைகள்மேலும், மேகங்கள் சஞ்சரிக்கிற மதில்களின்மேலும், இழைத்திருக்கும் நீலரத்தினத்தின் பிரகாசத்தினால் ஆகாயத்திலிருக்கும் கங்கையமுனைபோல் கறுப்புநிற மடைந்தது. எ-று. (௪௯)

பரவை யாமெனப் பணைமு ழக்கவே
யரிவை மாதரா சாட ரங்கின்மேல்
விரவு பச்சையின் கதிரை வெய்யவன்
புரவி கௌவிடும் புல்லென் றுன்னியே.

இ-ள். சமுத்திரம்போல வாத்தியங்கள் முழங்கப் பெண்கள் நாட்டியஞ்செய்கின்ற மேலுப்பரிகையில் இழைத்திருக்கும் பச்சைரத்தினங்களுடைய கிரணங்களைப்புல்லென் றுநினைத்துச்சூரியனிரதத்திற்கட்டிய பச்சைக்குதிரைகளேழுங் கௌவும். எ-று. ()

நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.

அத்தகையவீதிகடந்துமணியாலயஞ்சேர்ந்
தத்தமனையென்னையாளுடையானைச்சோணகிரி
வித்தகனைக்கண்டுபணிந்துருகிமீண்டுபல
சத்திகள்தம்மோடுதலைச்சாரத்தைமேவினாள்.

இ-ள். அப்படிப்பட்ட தன்மையையுடைய வீதியைத்தாண்டி அழகுள்ள கோயிலுக்குட்போய் உத்தமனை என்னை யாட்கொண்டவனை அருணாசலத்தி லிருக்கின்ற ஞானசொரூபனைத் தரிசித்து நமஸ்கரித்து உருக்கத்தையடைந்து திரும்பிப் பலசத்திகளுடனே [illegible] மலைச்சாரலை யடைந்தாள் அம்மை. எ-று. ()

ஊசியிமேலோர்கால்விரலையூன்றியொருகான்மடித்து
நாசிமிசைவிழியைநாட்டியழன்மூட்டிக்
தேசினமுதுருக்கித்தெள்ளமுதையுண்டுதவக்
கோசிகனைப்போன்முயல்வார் * கோடானகோடியே.

---

* கோடானகோடியென்றது கிராமிய வழக்கச் சொல்.

இ-ள். ஊசியிலே ஒருகாலின் விரலை யூன்றிக்கொண்டு. [illegible] காலைமடித்து மூக்குநுனியிலே கண்களைச்சேர்த்துப பஞ்சாக்கினியை வளர்த்திப் பிரகாசமான அமிர்த தாரணைசெய்து பிரமரந்திரத்தின் வழியாய்வருகிற அமிர்தத்தைச் சாப்பிட்டு விசுவாமித்திரன்போலத் தவஞ்செய்வார் அனேகங்கோடிபேர். எ-று. (௫௨)

நாடுமலமூன்றகற்றிநல்வினையுந்தீவினையுஞ்
சாடிமனமிறந்துதானிழந்துதன்மயமாய்
வீடுபெறவிரும்பிவேட்கைபிறிதில்லாமற்
கூடுசிவஞானியர்கள்கோடானகோடியே.

இ-ள். ஆண[illegible]ம், காமியம், மாயையென்கிற மும்மலங்களையும் நீக்கி, நல்வினை தீவினை யொப்புவந்து மனமென்பது இறந்து தற்போதங்கெட்டு, உலகம் சிவசொரூபமாய் மோட்சம்பெறும்படியாக ஆசைகொண்டு மற்றோராசையுமின்றிச் சிவஞானம்பெற்ற ஞானிகள் வெகுகோடிபேர்கள் அம்மலைச்சாரலில் இருப்பார்கள். எ-று.

தொண்டருடனாகமங்கள்சொன்னவிதிமுறையைத்
தண்டிமுடிவுசவுராதியாய்ப்பூசித்
தண்டர்பிரானஞ்செழுத்தையோதியகமகிழ்ந்து
கொண்டகிரியையினர்கோடானகோடியே.

இ-ள். அடியார்களோடு ஆகமங்கள்சொன்ன விதிமுறைப்படி சூரியன்முதல் சண்டேசுரர் அனந்தமாகப் பூசைசெய்து தேவர்களுக்கெல்லாம் முதன்மையுடைய சிவபெருமானுடைய பஞ்சாக்கர மந்திரத்தையோதி மனமகிழ்ந்து கிரியைகளை நடத்துகிறவர்கள் கோடானகோடி. எ-று. (௫௩)

நேருமியமநியமாதனவகையும்
பேர்பிராணயாமம்பிரத்தியாகாரமொடு

தாரணைதியான சமாதிவகை தன்னினுமெய்
கூறுமுயல் யோகியர்கள் கோடானகோடியே.

இ-ள். இயமம், நியமம், ஆதனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்று சொல்லப்பட்ட அஷ்டாங்கயோகங்களின் வகைகளையறிந்து அவைகளைத் தேகசிரமப்பட்டு முயல்கின்றயோகியர்கள் அனேககோடிபேர்கள். எ-று. ()

மாதவர்களின்னசெயல் செய்யும் வகைபார்த்துச்
சூதவனஞ் சூழ்ந்த சுனையுஞ் சுனைசூழ்ந்த
சீத வருவிகளும் பார்த்துச் சிறப்புற்றுக்
கோதமனா ராசிரமந் தன்னிற் குறுகினாள்.

இ-ள். மகத்தாகிய தவத்தினையுடையோர்கள் செய்யும் செய்கையைப்பார்த்து மாந்தோப்புச் சூழ்ந்த சுனையுஞ் சுனைசூழ்ந்த சீதளமான அருவிகளையும் பார்த்துச் சிறப்பை யடைந்து அவ்விடத்தில் இருக்கிற கௌதமருடைய ஆச்சிரமத்தில் அம்மன்சேர்ந்தாள். எ-று. (௫௬)

அந்த விடத்துமையாள் செல்ல வகலிகையு
மைந்தனும் வந்தேத்தினார் வாழ்த்திமறைக் கோதமனார்
முந்து முனி யெவ்விடத்தே யென்றாள் முனிபுதல்வன்
தந்தைமலர் தருப்பைக் கெய்தியதுஞ் சாற்றினான்.

இ-ள். அக்கௌதமருடைய இடத்திற்கு அம்மை போனவுடனே, அவரது பெண்சாதி அகலிகையும் புத்திரராகிய சதானந்தரும் வந்துபணிந்தார்கள்; அம்மை ஆசீர்வதித்து வேதங்களையுணர்ந்த முதன்மையான கௌதமரிஷி எங்கேயிருக்கிறாரென்றுகேட்க, சதானந்தர் புட்பம் தருப்பை கொண்டுவருகிறதற்குப் போனாரென்றுசொன்னார். எ-று. (௫௭)

பின்னு மவனுரைப்பான் பேதைமையேன் புன்குடிலில்
கன்ன லமுதே கணப்போ திருந்தருளி
லன்னவனைக் கொணர்வே னென்றே யடிதொழுது
தன்னை யளித்தவன்பாற் சென்றான் சதானந்தன்.

இ-ள். மறுபடியும் பார்வதியைப்பார்த்து கருப்பஞ்சாறு போன்ற பார்வதியம்மையே! அறியாமையுடைய என்குடிசை வீட்டில் க்ஷணப்போது இருந்தால், என் தகப்பனாரைக் கொண்டுவந்துசேருகிறேனென்று பாதங்களைத் தொழுது தன்னைப்பெற்ற கௌதமரிடத்திற்குப்போனார் சதானந்தர். எ-று. (௫அ)

இங்கிவன் செல்போதி விளந்தருப்பை கொய்துமுனி
புங்கவர்கள் சூழ்ந்து வருமுனிவன் பூத்தலர்ந்து
துங்கவனங் கற்பகம்போற் றோன்றுதலா லிந்தவனந்
தங்கள்வன மல்லவென்று சங்கையுற்று நோக்கினான்.

இ-ள். சதானந்தர் போகிறபோது; இளமையாகிய தருப்பை கொய்து அநேக முனிவர்கள்சூழக் கௌதமர் வருகிறதற்கு முன்னே இவ்விடத்தில் எல்லா விருக்ஷங்களும் புட்பித்துக் கற்பகவிருக்ஷம்போலக் காணுகிறபடியால் நம்முடைய வனமல்லவே! இது யாருடையதென்று சந்தேகப்பட்டுப் பார்த்தார். எ-று. (௫௯)

இத்தலத்தில் வந்தவரா ரென்றுரைத்து மாதவற்குப்
பத்துருவந் தந்த முனியும் பராசரனு
மத்திரியு மப்புதுமை யாராயு மெல்லையிற்றன்
புத்திரனைக் கண்டுவர வென்ன புகலென்றான்.

இ-ள். இவ்விடத்தில் வந்தபெரியோர்கள் யாரென்று விட்டுணுவுக்குப் பத்துதரம்பிரக்கச் சாபங்கொடுத்த பிருகுரிஷியும், பராசரரும், அத்திரியும் அப்புதுமைவிசாரிக்குமிடத்தில் தம்முடைய பிள்ளை சதானந்தரைக்கண்டு இவ்விடத்திலுண்டாகிய விசேஷம் என்னவென்றுகேட்டார் கௌதமர். எ-று. (௬௦)

தாதையிவை கேளினறவர் தங்களை யளிக்குஞ்
சோதியிவ ளெய்தின ளெனத்தொழுது சொன்னா
னாதமறை தேடுமவ ளெங்குடிலின் மேவற்
கேதுதவ மேதுதவ மேதுதவ மென்றான்.

இ-ள். சதானந்தர், தன் தகப்பனாராகிய கௌதமரைப்பார்த்து ஐயா! பிரமன் முதலாகிய ஐவரையுந் தன்னிடத்திலுண்டாகிய தேசோமயமாகிய பராசக்தி இவ்விடத்தில் வந்திருக்கிறாளென்று வணங்கிச்சொல்ல, நாத சொரூபமாகிய வேதங்கள் தேடுதற்கரிய அம்மை நம்முடைய குடிசையில் வர என்னதவம்! என்னதவம்! என்னவஞ்செய்தோமென்றார் கௌதமர். எ-று. (௬௧)

ஓடின னணைத்துமக னுச்சியை முகந்தா
டினன் மகிழ்ச்சியெனு மாழ்கடல் புகுந்தான்
பாடின னெடுத்தகுசை பார்மிசை யெறிந்தான்
வீடினது நந்தம்வினை வேருட னென்றான்.

இ-ள். கௌதமர் இவ்வார்த்தையைச்சொன்ன சதானந்தனைக் கட்டியணைத்து உச்சிமுகந்து ஓடினார்; இருக்கூத்தாடினார்; சந்தோஷமென்கிற சமுத்திரத்திலாழ்ந்தார்; பாடினார்; தருப்பையை பூமியிலேயெறிந்துவிட்டார்; என்னுடையபாவம் வேருடனே கெட்டுப்போயிற்றென்று சொன்னார். எ-று. (௬௨)

அத்திரி முதற்றலைமை யந்தணர்க ளெல்லாங்
கைத்தல மெடுத்தனர் நடித்தனர் களிப்பால்

வித்தகி யிருக்குமிட மேவியெதிர் கண்டார்
பத்திவலை யிற்படு பதங்களில் விழுந்தார்.

இ-ள். அத்திரிரிஷி முதலாகத் தலைமைபெற்ற ரிஷிகளெல்லாம் இரண்டுகைகளையுந் தலைமேல்வைத்துக் கூத்தாடினார்கள்; சந்தோஷத்துடனே பார்வதியிருக்கிற இடத்தையடைந்து எதிரே கண்டு பத்தியாகிய வலையில் அகப்பட்டுக்கொள்ளுகிற பார்வதியினுடைய பாதத்தில் விழுந்து நமஸ்கரித்தார்கள். எ-று. (௧௩)

நின்னிலைமை கன்னியிறை நீர்பிரம சாரி
யென்னுமறை யன்றுமுத லின்றுவரை யெல்லா
முன்னிடை யுதித்தல குயிர்த்தொகைக ளெல்லா
மன்னையெனு முன்பெருமை யாரறிய வல்லார்.

இ-ள். தாயே! நீயோ கன்னிகை, சுவாமியோ நித்தி பிரமசாரியென்று சிருஷ்டி தொடங்கி இதுவரைக்கும் வேதங்களெல்லாஞ் சொல்லிக்கொண்டிருக்கின்றன; அப்படியிருக்க உன்னிடத்தில் உலகங்களிலிருக்கின்ற எல்லாவுயிர்களுந் தோன்றித் தாயென்று சொல்லுவர், அப்படிப்பட்ட உன் பெருமையை யாரறியப் போகிறார்கள். எ-று. (௧௪)

நித்தனை முதற்றருவை நித்தனிடத்தே
சத்தியென நீவருவை சத்திசிவ மென்றே
யித்தகைமை கொண்டுயிர்கள் யாவையு மளிப்பா
யத்துவித மாகுமுனை யாரறிய வல்லார்.

இ-ள். நித்தியமாகவிருக்கிற சிவபிரானை முதலிலுண்டாக்குவாய்! அச்சிவனிடத்திலே சத்தியாகவருவாய்! சத்தி சிவமென்கிற தன்மையைக்கொண்டு உயிர்களையெல்லாம் பெறுவாய்! அத்துவிதசொரூபமாகிய உன்னையாரறியப் போகிறார்கள். எ-று. (௧௫)

231

மெய்ப்பொருண் மகேசனரன் வேதனரி யானால்
மைப்பரும கேசியுமை வாணிதிரு வாவை
யிப்படியு மன்றியவ னெப்படி யெடுத்தா
னப்படியு மாவையுனை யாரறிய வல்லார்.

இ-ள். பரமசிவன்; மகேசுரர், உருத்திரர், பிரமன், விட்டுணு, ஆனால், நீ மகேசுவரி, உருத்திரி; சரஸ்வதி, இலக்குமியாகிய சத்திகளாய் இப்படியுமல்லாமல் அச்சிவபிரான் எப்படிப்பட்ட உருவங்கொண்டனரோ அதற்குத்தகுந்த உருவங்கொள்வாய்!" உன்பெருமையை யாரறிய வல்லவர்கள். எ-று. (௧௬)

நெஞ்சுருகி மாதவர்க ணின்றிவை புகழ்ந்தார்
வஞ்சியிடை கோதமனும் வந்தனன் வரும்போ
தஞ்சலிபு ரிந்தன னதற்குமுன மேமின்
கஞ்சமல ரென்னவிரு கால்களில் விழுந்தான்.

இ-ள். மாதவத்தையுடைய ரிஷிகளெல்லாம் நெஞ்சமுருகி நின்று இப்படி தோத்திரஞ் செய்தார்கள். அச்சமயத்தில் பார்வதி சமீபத்தில் கௌதமர் வரும்போதே இரண்டுகைகளையும்சிரத்தில் வைத்து கூப்பித் தாமரை மலரையொத்த அம்மையின் இரண்டு பாதத்திலும் நமஸ்கரித்தார். எ-று. (௧௭)

அன்பினுயர் கோதமனு மன்னையை வணங்கி
யின்புற வுரைப்பனய னெண்டிசை புரப்போர்
தன்சிர மிதிக்கரிய தாளிணைக ளின்றென்
புன்குடுமி மிதிக்கவென புண்ணிய முடித்தேன்.

இ-ள். பத்தியினாலே உயர்ந்த கௌதமரிஷியும் பார்வதியம்மையைவணங்கிச் சொல்வான்; பிரமன் அட்டதிக்குப்பாலகர்சிரத்

திலேகூடவைத்தற்கு அருமையானபாதமிரண்டும் அடியேனுடைய புன்மைபொருந்திய சிறுவீட்டில் மிதிக்க என்ன புண்ணியஞ் செய்தேன். எ-று. (௬௮)

இந்தமொழி சொற்றனு மிளங்கொடியும் வேலன்
றந்தியிடை சென்றிடவ னங்கது தவிர்ந்தால்
சிந்தைமகி ழுன்னிடையில் வந்துகுறை தீர்வேன்
மைந்தவென வோதினண் மறுத்துமிவை சொல்வாள்.

இ-ள். இவ்வார்த்தையைச் சொன்ன அளவில், இளமையாகிய கொடிபோன்ற அம்மையும் பிள்ளையாகிய கௌதமனே? எனக்கோர் குறைவந்தால் சுப்பிரமணிய னிடத்திலும் கணபதியினிடத்திலுஞ்சென்று தீர்த்துக் கொள்வேன்; அவ்விடம் விட்டால் என்மேல் அன்புவைத்த உன்னிடத்தில் வந்து தீர்த்துக்கொள்வேனென்று சொல்லி மறுபடியுஞ் சொல்வாள். எ-று. (௬௯

நாயகன் மொழிந்திட நடந்தபடி யெல்லாம்
பாயிர மெனும்படி பகர்ந்தன ளெவர்க்குந்
தாயிவை மொழிந்தன ளினிற்சத மகற்கன்
றாயிரம் விழித்திர ளளித்தமுனி சொல்வான்.

இ-ள். பரமசிவன் சொன்னபடி பூமியில் வந்து தான் நடந் சமாச்சாரமெல்லாம் பாயிரத்தோடுங் கூடிய நூல்போல் முறைய விரித்து எவருக்குந் தாயாகியபார்வதி சொன்னபோது, முற்க லத்தில் தேவேந்திரனுக்கு ஆயிரங்கண்ணுண்டாகச்செய்த கௌதமர் சொல்வார். எ-று. (௭௦

இத்தல முதற்றல மிதன்பெயர் தலேச்ச
ரூத்தம மிதிற்றரும மொன்றுபல வாகும்
மெய்த்தவ மியற்றதனில் வெள்விடையின் மேல்வந்
தத்தனு மிடப்புற மளித்தருளு மென்றான்.

இ-ள். இத்தலம் முதன்மையான தலம்; இதனுடையபெயர் லேச்சரம்; இதுமிகவு முத்தமமானது, இஃதில் ஒரு புண்ணியத்தைச் செய்தால் ஒன்று பலவாய் விருத்தியாகும்; இதிலிருந்துகொண்டு நீ மெய்மையாகிய தவஞ்செய்தால, வெண்மையுள்ளரிஷபவாகனத்தின்மே லெழுந்தருளிய பரமசிவன் உனக்கு இடப்பாகங்கொடுப்பாரென்றார் கௌதமர். எ-று. (௭௧)

மாலயன் வசுக்கண்மக வான்முனிக ளத்தோர்
சாலைகள் சமைத்ததில் தனித்தவ முடித்தார்
காலமிட நன்றுசெயல் கைப்பலமி தென்றான்
மூலமுதல் வல்லியு முடிப்பணிது வென்றாள்.

இ-ள். அம்மையே? விட்டுணு, பிரமன், அஷ்டவசுக்கள் தேவேந்திரன் அநேகமுனிவர்கள் அவரவர்கள் இடஞ்செய்துகொண்டு ஒப்பற்ற தவஞ்செய்து நினைத்தகாரிய முடித்துக்கொண்டார்கள்; நீவந்தகாலமு மிடமு நன்மையாகும்; இவ்விடத்தில் நீ தவஞ்செய்தால் கைப்பலமாகி முடியுமென்று கௌதமர் சொல்ல, எல்லாப் பொருள்களுக்கு மூலமாகிய அம்மையும் தவஞ்செய்து என்கருத்தை முடித்துக்கொள்ளுகிறேனென்றாள். எ-று. (௭௨)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கோதமனே முதலாய முனிவர்க் கெல்லாங்
  குளிர்ந்தமொழி பகர்ந்துவிடை கொடுத்துச் சோண
பூதரமா மதன்குணபாற் பன்ன சாலை
  புதிதமைப்பித் தகமகிழ்ந்து புறம்பு காக்க
மாதரெழு வரையமைத்து நாலு பாலின்
  வாயிலையெண் வயிரவர்கண் மகிழ்ந்து காக்க
வாதரவி னிறுத்தி மைந்தர் மருங்கு காக்க
  வந்தரியுட் பிறங்காக்க வமைத்தாண் மன்னே.

* இ-ள். கௌதமர் முதலான முனிவர்களுக்கெல்லாம் பிரியவசனஞ்சொல்லிஉத்தரவுகொடுத்து, அருணாசலத்துக்குக்கிழக்குப் பக்கத்தில் பர்ன்னசாலை புதிதாகச்செய்வித்து, சத்தமாதர்களைப்

புறக்காவலாகவைத்து, நான்கு வாயில்களையும் எட்டு வயிரவர்க காக்கவும், விநாயகர் சுப்பிரமணியர் தன் இரண்டுபக்கமுங் காக் கவு, [illegible] க்கங்காக்கவுஞ் செய்தாள் பார்வதி. எ-று. (

கொந்தளகஞ் சடைபிடித்து வரித்துப் பொற்றோட்
  குழைகழுத்திற் கண்டிகையின் குப்பைபூட்டி
யுந்துமர வுரிநிகர்பட் டாடை நீக்கி
  யுரித்தகர வுரிசாத்தி யுத்தா ளத்தால்
விந்தைதிருநீ றணிந்து கனற்குட் காய்ந்து
  விளங்குமூசியி னொருகால் விரலை யூன்றி
யந்திபக லிறை பதத்தின் மனத்தை யூன்றி
  யரியபெருந் தவம்புரிந்தா ளகில மீன்றாள்.

இ-ள். புட்பங்களைத் தரிக்கின்ற கூந்தலைச் சடைசெய்து விரித்துத் தோள் கழுத்து காதுகளில் உருத்திராக்ஷமாலைகளைத் தரித்து, ஆடுகின்ற பாம்புரிபோலிருக்கிற பட்டாடையுடுப்பது விட்டு மரவுரிதரித்து, செயத்தைக்கொடுக்கின்ற விபூதியைச்சர்வாங்கமுந்தரித்து நெருப்பில்காய்ந்து பளபளவென் றுபிரகாசிக்கும் ஊசியில் ஒருகாற்பெருவிரலையூன்றி, இராப்பகலாக மனத்திலே பரமசிவத்தைத் தியானஞ்செய்து, அரிதாகிய பெரியதவத்தைச் செய்தாள் உலகத்தைப்பெற்ற பார்வதியம்மன். எ-று. (௭௪)

இளைத்தகொடி மருங்குவளைந் தெரியி னுப்ப
  ணினியதவ மியற்றுதல் கண்டிளைத்து வாடிக்
களைத்துமனந் துடித்துவிழி புதைத்து வாணி
  கண்ணீரின் மூழ்கினின்றாள் கமலத் தாரு
முளைத்துமனந் தளர்ந்தழுது விழுந்தாள் மற்றை
  யுயிர்களெலாங் கலைந்துகரைந் துருகா நின்ற
வளைத்துலைத் துரைப்ப தென்றாய் வருந்து மானால்
  வயிற்றினுள்ள கருப்பமெலாம் வருந்தி டாதோ.

து]

இ-ள். மிகவுஞ் சிறிதாகிய கொடிபோன்ற இடைவளைந் தசுக், [illegible]னிமத்தியில் இனிமையான தவத்தைச் செய்வதைப் பார்த்து, இளைத்து வாட்டமடைந்து களைத்து, மனந்துடித்து, இரண்டுகண் ணையு மூடிக்கொண்டு, சரசுவதி கண்ணீரால் [illegible] அழுதுவிழுந்தாள்; மற்றுச்சீவ [illegible]ல்லாம் மனங் கரைந்துருகின; நானிதைப் பிரித்துப் பிரி த்துச் சொல்லுவதால் என்னபயன்! தாயானவள் வருந்துவளாயின் வயிற்றிலுள்ள கருவாகிய சீவனெல்லாம் வருத்தத்தை யடையாதோ! எ-று. (௭௫)

முன்பனியிற் கருகுபடாக் கமலம்போல
  முகந்தோன்றப் பனிக்கயத்துண் மூழ்கிநிற்கும்
பின்பனியி லதிசீத விடத்திற் சேரும்
  பெருமழைக்குண் மீனென்னப் பேணி நிற்கும்
அன்பனிடம் பெறுமளவு மதுபோல்வேண்டு
  மரியதவம் புரிந்தனளவ் விடத்து வேதன்
வன்பணியிற் றுயினெடுமான் முதலாந்தேவர்
  மறைபுகுந்த தவச்சாலை மருங்கிற் சார்ந்தார்.

இ-ள். முன் பனிக்காலத்தில் கருகிப்போகாத தாமரைப்பூப் போல முகமாத்திரந்தெரியக் குளிர்ச்சிபொருந்திய தடாகங்களில் நின்றும், பின்பனிக்காலத்தில் அதிகசீதளம்பொருந்திய இடத்திலிருந்து மழைபெய்கிறபோது அதில்ஒரு மீன்போலச் சஞ்சலப்படாது நின்றும், பரமசிவன் இடப்பாகத்தைப் பெறுகிறவரைக்கு மதுபோலவேண்டிய தவத்தைச்செய்தாள்; அவ்விடத்தில் பிரமனும் வலியசர்ப்பத்தில் நித்திரைசெய்கின்ற விட்டுணுமுதலாகிய தேவர்களும் வேதகோஷம்பொருந்திய தவச்சாலையைவந்து அடைந்தார்கள். எ-று. (௭௬)

அந்தரியு மாயவனார்-முதலாந் தேவ
  ரனைவருக்கு முபசார மளித்து நீங்கள்
வந்தவர வியம்புமென் மகிட னாலே
  வருந்தியதுந் தளர்ந்ததுவும் வகுத்துச் சொன்னார்

சுந்தரியுங் குமரியுடன் சுடரும் வாளாற்
செருகளத்தின் மகிடனுரந் தொலைப்பா யென்றாள்
சிந்தையது புரிவனெனப் பணிந்தா ளன்னை
விடையப்பு [illegible] டிருந்து விடைகொண் டாரே.

இ-ள். பார்வதி, விட்டுணுமுதலான [illegible] முபசாரஞ்சொல்லி நீங்களிவ்விடத்திற்கு வந்த [illegible] சொல்லுங்களென்றுகேட்க, அவர்கள் மகிடாசுரனால் தாங்கள் துன்பப்பட்டுத் தளர்ச்சியடைந்தவகை விவரமாகச் சொன்னார்கள்; அதற்குப்பார்வதி துர்க்கையைக்கூப்பிட்டு நீ சத்தியினால் யுத்தகளத்தில் மகிடாசுரன் வல்லமை கெடக் கொன்று விடென்று சொன்னாள், அதற்குத் துர்க்கை அப்படியே செய்வேனென்று பணிந்தாள், தாயாகிய பார்வதி இந்தவார்த்தையைச் சொன்ன அளவில், விட்டுணு முதலானவர்கள் சந்தோஷத்தை யடைந்து வணங்கி விடைபெற்றுக் கொண்டார்கள். எ-று. (எஎ)

கலி விருத்தம்.

கௌத மாச்சிர மந்தனிற் கோல்வளை
தீதி லாத்தவஞ் செய்தது செப்பினேன்
மேதி மாமுகற் காய்ந்ததும் வெள்விடைச்
சோதி பாக மடைந்ததுஞ் சொல்லுவேன்.

இ-ள். சத்திதேவி கௌதமருடைய ஆச்சிரமத்திற் குறைவில்லாத தவஞ்செய்ததுஞ் சொன்னேன்; பிறகு மகிடாசுரனைக் கொன்றதும், ரிஷபவாகனத்தை யுடைய சிவபிரானது இடப்பாகத்தைப் பார்வதி அடைந்ததுஞ் சொல்வேன். எ-று. (எஅ)

நான்காவது
திருக்கண்புதைத்த சருக்கம்
முற்றிற்று.
ஆக திருவிருத்தம் - ௨௨௭.

சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

இடப்பாகம் பெற்ற சருக்க வசனம்.

மார்க்கண்டேய முனிவரே! தேவியார் இடப்பாகம் பெற்ற ரித்தத்தைக் கூறுவேன் கேட்பீராக. நீலகிரியில் ஓரசுரன் இருந் ான். அவன் மிக்க வல்லமை யுடையவன். ஆலாலத்தை யொத்த ன். பெருந்தீமைகளை யுடையவன், குபேரனது திரவியங்களை யெல்லாங் கொள்ளை கொண்டவன். ஆதிசேடனை கவணைக்கியும், அதிற் படுத்துறங்கும் விட்டுணுவைக் கவண்கல்லாக்கியும் எறிந்து விளையாடுவோன். ஐராவதத்திற் பவனி போவான் சூரியரதக்குதி ரைகளினும் உலாச்செல்வான். உயிர்களைக் கொல்வான். அவன் எருமைக்கடாமுகத்தையுடையவனானபடியால் இயமன் எருமைக் கடாவாகனத்தி லேறுவதை யொழித்தான். தான் உண்பதற்கு மீன்வேண்டிச் சமுத்திரங்களையுந் தூர்த்தான். அவ்வாறாய் மகிடா சுரன் மகிடபுரத்திலே பிரமன் அறுகும் அக்ஷதையுங் கொடுக்க வாழ்ந்திருக்கும் நாளிலே, அவனுணவுக்காக ஆயிரம் அசுரர்கள் மிருகம் பறவைகளைத்தேடி ஆயுதபாணிகளாகப் புறப்பட்டனர். அவர் பார்வதிதேவியார் தவஞ்செய்திருந்த வனத்தில்வர, அங்குக் காவலாகின்ற அஷ்டவைரவர்களும் அவர்களாயிரவரையுங்கொன்றனர். அதனைத் தூதர்கள் மகிடாசுரனுக்குத் தெரிவித்தனர். அவன் கோபித்து, ஆர்ப்பரிக்க, சேனாபதியான கிரும்பனென்பான் தான்சென்று பகைவரைக் கொல்வதாக வீரமொழி புகன்று, சேனைகளோடும் சென்றான், அசுரசேனைகள் முனைந்தன. அதுபோது பார்வதிதேவியார் பக்கத்துள்ள தாக்கணங்கு கோக்கணங்கு என்பார் தடுத்துப் போர்புரிந்தார்.

சண்டன், உருத்திரன் முதலாய எட்டுவைரவர்களும்மிக்கசினங்கொண்டு, கிரும்பனுந்தேரும்சாரதியும் இருக்கமற்றவர்களையெல்

லாங்கொன்றனர். அதனைக்கண்ட கிரும்பன் தாக்கணங்கையெதிர்க்க அவன் அம்புதொடுத்து அவன்றலையை யறுத்தாள். அதனை தூதர்களாலறிந்த மகிடாசுரன், தன்னருகிலுள்ள கயிடவனுட ஆயிரம்யானைகள் கட்டப்பட்ட இரதத்திலேறி, காந்தன், நீலன் முதுகாண் முதலிய பன்னிருவரும் உடன்வர, பலவகை வடிவ களையுடைய அசுரசேனைகள் ஆயிரவெள்ளமடர, பலவித ஆட பகக்ளுடன் அம்மையார் எழுந்தருளிய வனத்திற்கு வந்தனன் தேவர்முனிவர் அஞ்சினர். தேவியார் துர்க்கைக்கு ஓர்சத்தி கொடுத்து அவனைக்கொன்று வருவாயாக என்றார். துர்க்கை சேனைகளோடெதிர்க்க அசுரசேனைகள் பாதியழிந்தன. மகிடாசுரனும் சேனைத்தலைவரும் துர்க்காதேவி சேனைகளைத் துரத்தியடிக்க, துந்துமி, காளி, மதங்கி, சண்டியென்னும் நான்குசத்திகள் தோல்வியுற்றனர். யாவருந்தோற்றனர். துர்க்காதேவி மனந்தளர்ந்து உமாதேவியைத் தியானித்துநின்றாள். தேவியார் அருளினாலே நெருப்புமழை இடிமழை சொரிந்தமையினால் அசுரன் சேனைகள் இறந்தன. பின்னர் அயிராபி அருசிகனையும், வாரணிசாந்தனென்பவனையும், சண்முகிசனென்பானையும், குலக்கையான் மிண்டனையும் வராசிசண்டனையும், நீலகண்டி மதனென்னும் அசுரனையும், இந்திரைநீலனையும், தாந்துமிக் கொடியான் இரத்த ஆணனையும், அருணாசல அக்கினிக் கண்ணனையும், சுந்தரிகயிடவனையும் புகைக்கண்ணனையும் கொன்றனர். துர்க்காதேவி மகிடாசுரனை யெதிர்த்தாள். சங்கத்தை முழக்கினாள். அசுரர் அதனால் மயங்கினர். மகிடனும் மாரிபோற் பாணங்களைச் சொரிந்து துர்க்கையின் பாணங்களையெல்லாம் அறுத்துத் தள்ளினான். துர்க்கை அர்த்தசந்திர பாணங்களிரண்டினை விடுத்து மகிடன் றலையிலழுந்தச் செய்தாள். மகிடனும் துர்க்காதேவி கையிலிருந்த வில்லை முறித்தான் நெற்றியில் அடித்தான். கோபித்துச் சக்கிராயுதத்தை விடுத்து மகிடன் றலையை யறுத்தாள். அதனால் இறவாதவ

ய் யானை யுருவங்கொண்டு எதிர்த்தான். துர்க்கையின் வாகன கிய ஆளிசென்று யானையின் மூளையைத் தோண்டித் தின்றது னும் இறக்காதவனாய்க் குதிரை முகனாய்வந்தான்; அவ்வுருவத்தையும் அறுத்துத்தள்ளினாள் துர்க்கை. பின்னரும்அசுரன் சலரனயும், அந்தகாரம், பிரமன், விட்டுணுமுதலிய பற்பல வருவங்களை மாயையினாலே கொண்டெதிர்த்தான். துர்க்கையிவைகளை கண்டு மனநொந்து அம்பிகையாரைத் தியானிக்க, அன்பினையுடையவனே இயல்பான எருமைமுகங் கொண்டபோது அறுத்துக் ழ்த்தள்ளிக் காலினாலே மிதிக்கின் இறப்பான், என்ற அசரீரிக் ற்று. அவ்வாறு செய்துகொன்று தேவியைவணங்கினாள் துர்க்கை.

அவன் கழுத்திலிருந்த படிகலிங்கத்தைத் துர்க்கை யெடுத்துச்சென்று தேவியார்க்குக்கொடுக்க அவரும் வாங்கினார். தேவியார் கையைவிடாமல் சிவலிங்கப்பெருமான் இருந்தனர். இவ்விலிங்கமூர்த்தி எமது கையைவிடாதிருந்ததற்குக் காரணமென்னென, கௌதமர் கூறுவார். உலககாரணீ? முற்காலத்தில்அகத்தியர்முதலாய ஐம்பது இருடிகள்சேர்ந்து, வரமுனிஎன்பவரின் ஆச்சிரமத்திற்குச்சென்றார்கள் அவர் மரியாதை செய்யாமையால் அகத்தியர் முதலாயினோர் கோபித்து எருமைக்கடா ஆகக்கடவாயென்று சபித்தார். வரமுனி பயந்துவணங்கி யெனது பிழைபொறுத்தருள்வீரென்ன, அசுரனாகி யாளுங்காலத்தில் அம்மையார் உன்சாபத்தைத் தீர்ப்பார் என்றார். அவன்தான் மகிடாசுரன். ஒருநாள் வேட்டையாடி வருங்காலத்திற் கடும்பசிதோன்ற இரைகிடையாமல், எதிர்ப்பட்ட மன்னதரிஷியை விழுங்கினான். அந்தரிஷியி லிங்கம் இவன்கழுத்தில் தங்கியிருந்தபடியால் அவன் சிவசொரூபமன்றோ? அவனைக் கொல்வித்தமையாற் பாவம் நேர்ந்தது. இங்குள்ள நவதீர்த்தங்களாடினால் அப்பாவம் அகலுமென்ன், அங்ஙனம் ஆடினார். இலிங்கம் நீங்கிற்று. அத்தீர்த்தத்திற்குக் கட்கதீர்த்தமென்று பெயரிட்டுப் பரமசிவனை வணங்குமாறு கோயிலிற்சென்

று தரிசித்துத் தம்குறையை மொழிந்தார் கார்த்திகை மாதத்து கார்த்திகையில் ஒருசோதி மலையிற்றோன்றிற்று இம்மலையை வலம்வருதியென்று சுவாமிசொல்லி மறைந்தனர். அங்ஙனம்உமாதேவியார் வலம்வந்து முடியவும் பெருமானார் தேவியார்மீது கடைக்கண் நோக்கஞ்செய்தருளி இடப்பாகம் அளித்தார். ஒருபாதி சிவனுருவமும், ஒருபாதி தேவியாருருவமும் ஆகவிளங்கிய கண்டு யாவரும் ஆனந்தக்கடலில் மூழ்கினர். இக்கதையைப் படித்தவர்! கேட்டவர் யாவரும் தத்தம்பாவங்களெல்லாம் நீங்கப்பெற்றுச் சிவசாயுச்சிய [illegible]வார் என்பது திண்ணம் திண்ணமென்று திருநந்திதேவர் கூறினர்; இனி மார்க்கண்டேயரே! வச்சிராங்கதபாண்டியன் மோக்ஷம் அடைந்த சரிதத்தையுரைப்பேம். கேட்பீராக என்று சொல்வார்.

இடப்பாகம்பெற்ற சருக்க வசனம்

முற்றிற்று.



பார்வதி தேவியார் தூர்க்கையைக்கொண்டு மகிடாசுரனைச் சம்மாரிக்கச் செய்வித்தபின், பரமசிவன் பார்வதியார் தவத்துக்கிரங்கி இடப்பாகந்தந்து, அர்த்தநாரீச்சுரனென்னு மியற்பெயருஞ் சூட்டப்பெற்றனர் —12.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஐந்தாவது,

பார்வதிதேவியார்
இடப்பாகம்பெற்ற சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அஞ்சனக கரியில் வாழு
மசுரன்ற னூர்க்குந் திரு
வஞ்சமே யனையா னந்த
நமனுக்கு நமனாய் வந்தோ
னஞ்சிகை யெரியைத் தீய்க்குந்
திமையா னளகை நாட்டின்
விஞ்சையான் வருந்த வுள்ள
வளமெலாங் கவர்ந்த வீரன்.

இ-ள். நீலகிரியில் வாசஞ்செய்துகொண்டிருக்கிற அசுரன் எல்லாரிலும் அதிக பராக்கிரமத்தையுடையவன், விஷத்தினுக்குச்சமானமானவன், அந்த எமனுக்கும் எமனானவன், சிவப்பாகி மேலேயெழுகின்ற கொழுந்தையுடைய நெருப்பைச் சுடத்தகுந்த தீமையையுடையவன், அளகாபுரியில் குபேரன்தரித்திரத்தையடைய அங்கேயிருக்கிற வளங்களெல்லாங் கொள்ளையிட்டவன். எ-று.

தாமரைக் கண்ணன் றாங்கு
மரவினைத் தலைவால் கூட்டி
மாமணிக் கவண்போற் கொள்வன்
வன்னிவா கனத்தை வாங்கி
வேமழற் குஞ்சி மைந்தர்க்
குதவுவன் விமானத் தோடே
சோமனைப் பிடித்துக் கையாற்
பிழிந்தமு தருந்துஞ் சூரன்.

இ-ள். விட்டுணு நித்திரைசெய்கின்ற ஆதிசேடனைத் தலையையும், வாலையும், ஒருகையினால் சேர்த்துப் பிடித்துக் கவணாக அந்த விட்டுணுவைக்கவணைக்கொண் [illegible] எறிந்துவிளையாடுவான்; அக்கினியைத்தள்ளிவிட்டு அவனேறுகிற ஆட்டை நெருப்பைப்போல சிவப்புமயிரையுடைய தன்பிள்ளைகளுக்கு ஏறக்கொடுப்பான்; சந்திரனை அவனுடம்பிலிருந்துவருகிற தேவாமிர்தத்தைப் பானம்பண்ணுகிறசூரன். எ-று. (௨)

கருதிய மகவான் வெள்ளைக்
களிற்றின்மேற் றிரிவன் பின்னைப்
பரிதிதே ரதனிற் பச்சைப்
பரிசெலப் பவனி போவா

னிருதியைச் சுமக்கு மாளி
யேறுவ னிணத்தின் மூழ்கிக்
குருதிகொப் பளிக்கும் வாளொன்
றெடுத்துயி ரனைத்துங் கொல்வான்.

இ-ள். உயர்வாக நினைக்கப்பட்ட தேவேந்திரனுடைய வெள்ளையானையின்மேல் திருவோலக்கம் வருவான்; சூரியனுடைய தேரிலேறிக்கொண்டு பச்சைக்குதிரைகளேழும்நடக்கப் பவனியாகப் போவான்; நிருதியைச்சுமக்கின்ற ஆளியின்மேலேறிக்கொள்ளுவான்; நிணங்களால்முழுகப்பட்டு இரத்தங்களைக்கொப்பளிக்கும் ஒருவாளாயுதமெடுத்துச் சருவசீவன்களையும் கொல்வான். எ-று. ( )

அன்னவன்மகிடமான வாற்றினலஞ்சிக்காலத்
தென்னவன்மகிடமேறுன் காலினாற்றிரிந்தானென்று
லென்னவன்கொடுமைநம்மா லியம்பலாமிலங்குஞ்சோதி
மன்னவன்கிரியைச்சாய்த்தான் மீனுக்காவாரிதூர்த்தான்.

இ-ள். அப்படிப்பட்ட அசுரன் எருமைமாட்டு முகத்தையு[illegible]னைபடியால் தெற்குத்திக்கிலிருக்கின்ற தன் எருமைக்கடாவிலேறாமற் காலினால்நடந்து திரிந்தானென்றால் அந்தமகிடாசுரனுடையகொடுமை நம்மாலெப்படிச் சொல்லக்கூடும்! சோதிசொரூபமாகிய சிவபிரானிருக்கிற கயிலாயத்தையுஞ் சாயச்செய்தான்; மீன்வேண்டியதற்காகச் சமுத்திரத்தையுந் தூர்த்தான். எ-று.

மயனெனுந்தச்சன்செய்த மகிடமாபுரத்திலன்ன
னயனறுகரிசிநல்க விருக்குநாளவனுக்காய
பயனுறுநகர்ச்சிவேண்டி யாயிரம்படைக்கையாளர்
கயமுதல்விலங்கைநாடி வேட்டையாக்கானிற்சென்றார்.

இ-ள். மயனென்ற தேவதச்சனால் இரத்தினகசிதமாகச்செய்யப்பட்ட மகிடபுரத்தில் அந்த அசுரன், பிரமதேவர் நித்தியம் அறுகும் அக்ஷதையுங்கொடுக்க வாழ்ந்துகொண்டிருக்கிறநாளில், அந்த அசுரன் தின்னுகிற மாமிசத்துக்காக ஆயுதபாணிகளாகிய ஆயிரம்பேர்கள் யானைமுதலான மிருகங்களைத்தேடி வேட்டைமார்க்கமாகக் காட்டுக்குப்போனார்கள். எ-று. (௫)

தானவர்சென் றுவஞ்சி தவஞ்செய்கானகத்தைச்சூழ
வானவர்பணியுமட்ட வயிரவர்தொலைத்தாராவி
போனவரிந்தவாறும் புரிகுழறவமுந்தூத
ரானவரவுணர்கோவுக் கடிபணிந்தறிவித்தார்கள்.

இ-ள். அப்படி வேட்டைவெளிப்பட்ட ஆயிரமசுரர்களும் வந்து பார்வதிதவஞ்செய்துகொண்டிருக்கிற வனத்தைச் சுற்றிக்கொள்ள, அதைக்கண்டு தேவர்கள்பணிகின்ற காவலாகவிருந்த அஷ்டவைரவர்களும் அந்த ஆயிரம்பேரையுங்கொன்றார்கள்; அவர்கள் இறந்துபோனதும், அம்மை தவம்பண்ணுகிறதும் தூதர்கள்மகிடாசுரன்பாதத்தை வணங்கித்தெரிவித்தார்கள். எ-று. (௬)

போற்றியங்கவர்கள்சொல்லப புகைநகைபிறந்ததங்கி
தூற்றியவிருகணண்ட கோளமுஞ்சுழன்றதங்கே
நாற்றியதிசையின்வேழ நடுங்கியதிமையோர்கூட்டங்
கூற்றமுங்கரந்ததால காலமுங்குளிர்ந்ததன்றே.

இ-ள். தூதர்கள்வணங்கித் தெரிவித்தவளவில் புகையுண்டாகும்படி கோபச் சிரிப்புமுண்டாயின; இரண்டு கண்களும் நெருப்புகள்பறக்கவீசின; அண்டகோளமும் இறுகிறென்று சுழன்றது; அஷ்டதிக்கிலிருக்கிற யானைகளும் தலையைத் தாங்கப்போட்டன; தேவர் கூட்டம் நடுக்கத்தையடைந்தது; எமனும் ஒளித்துக்கொண்டான்; ஆலகாலவிஷமுங்குளிர்ந்தது. எ-று. (௭)

அப்படி மகிடன் சீறு
மளவினி னிகும்ப னென்போன்
செப்பிடு முனது கோபம்
பொறுப்பரோ சிறிய ரென்றே
முப்புடை யிளநீ ரென்னு
முலைச்சிவாழ் வனத்து ளாரைக்
கைப்படை யதனாற் கொல்வே
னெனச்சொலிக் கடிது போனான்.

இ-ள். அப்படி மகிடாசுரன் கோபிக்குமளவில் நிகும்பாசுரனென்கிற படைத்தலைவன் அரசனே! உம்முடைய கோபத்தை அற்பமானவர்களா பொறுப்பார்கள் என்றுசொல்லி, இளநீர் ஒத்த தனமுடைய பார்வதி தவஞ்செய்கிறவனத்தி லிருப்போரைக் கையிலிருக்கின்ற வாளால் கொன்றுவருகிறேனென்று சீக்கிரத்திற் புறப்பட்டுப்போனான். எ-று. (௮)

குடதிசைக் கடலைச் சீறிக்
குணதிசைக் கடல்சென் றென்ன
நெடியதேர் கரிமா சேனை
யெழுந்தன நிகும்ப னென்போன்
வடகிரி தனக்குங் கும்ப
மாமுனி மலைக்கு நேரே
யிடையொரு கரிய மேரு
வெழுந்ததா மென்னச் சென்றான்.

இ-ள். மேற்குச் சமுத்திரத்தின்மேற் கோபித்துக் கிழக்குச
ல் சண்டைசெய்யப் புறப்பட்டதுபோல் பெரியதேர்களும்,

னைகளும், குதிரைகளும், காலாள்களும்புறப்பட்டன; நிகும்பாசுரன் மகாமேருவுக்கும் அகத்தியரிருக்கின்ற பொதியமாமலைக்கு மத்தியில் நிறைந்த ஒருகரியமேரு எழுந்ததென்று சொல்லும்படியாகப்போனான். எ-று. (௯)

வேறு.

எழுந்தவனு மரகதத்தேர் துரகத
மாயிரம் பூண்ட விரதமேறி
வழிந்தகரி மதக்கடலை யெழுந்ததுக
ளடக்கவுமை வனத்திற் சென்றான்
கொழுந்துவிடுங் கனலனையார் வரவுகண்டு
பலகோடி குன்றம் வீசித்
தழைந்தபடைத் தாக்கணங்கு நோக்கணங்கும்
பொருதெதிரே தடுத்தா ரன்றே. ௯.

இ-ள். இப்படி நிகும்பாசுரன் பச்சைக்குதிரை ஆயிரங் கட்டிய தேரிலேறிக்கொண்டு அப்பொழுதும் எழும்பிய சிறு அணுக்கள் முன்போகின்ற யானைகளின் மதஜலம் சமுத்திரமாகத் தேங்கியிருப்பதை வற்றச்செய்ய, பார்வதிதவஞ்செய்யும் வனத்திற்குப்போனான்; கொழுந்துவிட்டெரியு நெருப்பையொத்த அசுரப்படைகள் அநேகமலைகளை விட்டெறிய இவர்கள் வருவதுகண்டு அம்மையாரிடத்திலிருக்கிற தாக்கணங்கு நோக்கணங்கு என்னு மிருவரும் ஆயுதபாணிகளாகப்போய் எதிரே தடுத்தார்கள். எ-று. (௧௦)

சண்டனுருத் திரன்சோமன் கபாலிநிகர்
சங்கரன்கோ தண்டன் வீத
னெண்டரிய சித்திராங் கதனென்னும்
வயிரவர்க ளிருநால் வோரு

349

மண்டமுக டுடையநகைத் தானைகளைத்
தொலைத்திட்ட வரிகள் போலக்
கண்டகனுஞ் சாரதியுந் தேருமன்றிச்
சேனையெல்லாங் கணத்திற் சாய்த்தார்.

இ-ள். சண்டன், உருத்திரன், சோமன், கபாலி, தனக்குத்தானே ஒத்தசங்கரன், கோதண்டன், வீதன், சித்திராங்கதன், இவ்வெட்டு வயிரவர்களும் அண்டகோளமுடைபட யானைகளைக் கொல்லுகிற சிங்கங்கள்போலக் கர்ச்சித்து, நிகும்பாசுரனும், அவன் சாரதியும் தேருந்தவிர மற்றச் சேனைகளையெல்லாம் நொடிப்பொழுதில்கொன்றார்கள். எ-று. (௧௧)

அட்டவயி ரவர்படையா லணங்குகளாற்
றனதுபடை யழிதனோக்கி
வட்டநெடுந் தேர்முடுக்கித் தாக்கணங்கின்
முகத்திலெண்ணில் வாளி கோத்தான்
விட்டகணை களைவிலக்கித் தேருருட்டுஞ்
சாரதியை வீழ்த்தி வாளி
தொட்டகரங் களைப்பிடுங்கி யவனுயிரைக்
குடித்தனளச் சூர மாது.

இ-ள். எட்டுவயிரவர்களுடைய ஆயுதங்களினாலும், இரண்டு பெண்களாலும், தன்னுடைய படைமுழுவதும் இறந்துபோவதைப்பார்த்து நிகும்பாசுரன் வட்டமாகியநெடியதேரைவிட்டுக்கொண்டு தாக்கணங்கென்பவளுடைய முகத்தில் கணக்கில்லாத பாணங்களைவிட்டான்; அப்பாணங்களைவிலக்கித் தேர்நடத்துகிறசாரதியைக்கொன்று அம்புதொடுத்த கைகளையறுத்து அவனுடைய தலையையும் அறுத்துக்கொன்றாள் அந்தத்தாக்கணங்கு. எ-று. (௧௨)

ஓடினசெங் குருதிநதி யுடலிழந்து
விழுமவுண ருயிர்கள் போல
வாடினவெங் குறைத்தலைக ளனுதினமு
மருந்துகின்ற வலகை போலச்
சூடினர்கள் வைரவருந் தாக்கணங்கு
நோக்கணங்குந் தும்பை வாகை
வீடினர்க ளவுணரென மகிடமுதற்
குரைத்தனர்போய் விரைந்து தூதர்.

இ-ள். வயிரவர்களாலும் இந்த இரண்டுபெண்களாலும் தேகமறுபட்டுச் சீக்கிரத்தில்போகு மசுரருயிர்போல் இரத்தநதி ஓடியது; நித்தியம் மாமிசத்தைத் தின்று கூத்தாடுகிற பேய்போல் கபந்தங்கள் கூத்தாடின; வயிரவர் தாக்கணங்கும் நோககணங்கும் தும்பைவாகைமாலை சூட்டிக்கொண்டார்கள்; அசுரர்களிறந்துபோனார்களென்று மகிடாசுரனுக்குத் தூதர்கள் சீக்கிரததிற்போய்ச் சொன்னார்கள். எ-று. (௧௩)

கேட்டளவின் மகிடமுகன் கயிடவன்றன்
முகநோக்கிக் கிளத்து வானோர்
காட்டிலுறை சிறுபேயுங் கணங்களுநம்
பெரும்படையைக் கடிந்த வென்று
னட்டநுத லயனரியு மெனக்கினிமேற்
றிறைகொடுக்க நாளுவாரென்
றிட்டிநகை புரிந்தெழுந்தா னேறினனா
யிரங்கரிசூ ழிரத மீதில்.

இ-ள். மகிடாசுரன் இவ்வார்த்தையைக் கேட்ட அளவில் தன்னருகிலிருக்குங் கயிடவன் முகத்தைப்பார்த்துச் சொல்லுவான்

ஒருகாட்டிற் சஞ்சா[illegible] சிறியபேய்களும் கணங்களும்நம்முடைய பெரியசேனைகளைக் கொன்றன[illegible]றால், சிவன், பிரமன், விஷ்ணு முதலானவர்கள் சொன்னபடி கேட்பாரோ[illegible]வென்று அதிகமாகிய நகைக்கொண்டெழுந்திருந்து ஆயிரம் யானைகள் கட்டிய தேரிலேறிக்கொண்டான். எ-று. (௧௪)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பதினொரு கோடி யானைப்
புலத்தராங் காந்த னீலன்
முதுகரன் குருதி யண்ட
னீசகன் சண்டன் முண்டன்
மதுகயிட வன்றீக் கண்ணன்
புகைக்கணன் மாலி யென்னுந்
துதிகொளா றிரண்டு பேருந்
தேர்களைத் தூண்டிச் சென்றார்.

இ-ள். மகிடாசுரன் தேரிலேறினவுடனே, பதினொருகோடி யானைப் பலத்தை யுடையவராகிய காந்தன், நீலன், முதுகரன், குருதி, அண்டன், நீசகன், சண்டன், முண்டன், மதுகயிடவன், தீக்கண்ணன், புகைக்கண்ணன், மாலி யென்றுந் துதிக்கப்பட்ட பன்னிருவரும் தங்கள் தங்கள் இரதங்களை நடத்திக்கொண்டுபோனார்கள். எ-று. (௧௫)

கரிமுகத் தவர்நி வாத கவசர்கள் கால கேயர்
பரிமுகத் தவுணர் மேதிப் பணைமுகத் தவர்கள் பற்றி
யெரிமுகத் தவுணர் சீறி யெழும்புலி முகத்துக் கள்வ
ரரிமுகத் தவுணர் வெள்ள மாயிரஞ் சென்ற வன்றே.

இ-ள். யானைமுகத்தை யுடையவர்கள், நிவாதகவசர்கள், காலகேயர்கள், குதிரை முகத்தை யுடையவர்கள், எருமை முகத்தையு

டையவர்கள், நெருப்பெரிந்து கொண்டி[illegible] முகத்தையுடையவர்கள், புலிமுகத்தையுடை[illegible]ள், சிங்கமுகத்தை யுடையவர்களாகிய அசுரர்கூடிய ஆயிரம்வெள்ளம் நடந்தன. எ-று. (௪௬)

பாய்பரி யதனிற் பாதி பரிகளிற் கரிகள் பாதி
காய்கரி யதனிற் பாதி கடும்பரிக் கொடுந்தேர் செல்லப்
பேய்கருங் கொடிகளாடப் பிணங்கிவெண் கொடிகளாட
வேய்களப் பறைகளார்ப்பக் குறுகினன் விந்தைகானில்.

இ-ள். இப்படி ஆயிரம் வெள்ளங் காலாட்கள் புறப்பட்டவுடனே, ஐந்நூறுவெள்ளங் குதிரையும், இருநூற்றைம்பது வெள்ளம் யானையும், நூற்றிருபத்தைந்து வெள்ளந்தேரும்நடக்கப்பேய்களும் காக்கைக் கூட்டமும் விருந்தகப்படுமென்று களித்துக் கூத்தாட வெள்ளைக் கொடிகளாடப் புள்ளாங்குழல்பேரிகை இவைமுதலான வாத்தியமுழங்க மகிடாசுரன் அம்மை இருக்கிற காட்டில் வந்து சேர்ந்தான். எ-று. (௪௭)

அடலவன் வரக்கண் டஞ்சி
யடைந்துமைக் கபய மென்று
படருறு முனிவர் கூற
வுமையவள் பயங்க டீர்த்து
விடலுடனருகு நின்ற
விந்தையை விரும்பி நோக்கிக்
கடகங்கொண் டடுவா யென்றாள்
விடைகொடு பெயர்ந்தாள் கன்னி.

இ-ள். வல்லமைபொருந்திய மகிடாசுரன் வருவதைப் பார்த்துப் பயப்பட்டு ஓடிவந்து பார்வதிக்கு அபயமென்று முனிவர்கள் முறையிட்டுச்சொல்ல, அம்மை அவர்களுடைய பயங்களைத் தீர்த்

உருஷிகளால் சாபம்நேரிட்ட வரமுனி மகிடாசுரனாய்ப் பிறந்து துஷ்டகிர்த்தியஞ் செய்கையில், அருணையம்பதியின் கீழ்பாரிசத்தில் பர்ணசாலையில் பார்வதி தபசுசெய்யுங்கால் துர்க்கையால் மகிடாசுரன் வதையுண்டனன்—12.

னுத் தன்சமீபத்தில் நின்ற பெருமைபொருந்திய துர்க்கையைப்பார்த்து உன்னுடைய சத்தியினாலே அவ்வசுரனைக் கொன்றுவிடென்று சொல்ல உத்தரவு பெற்றுப் புறப்பட்டாள் துர்க்கை. எ-று.

ஆளிமேற் கன்னி செல்ல
வருணநா யகிமுன் செல்லக்
காளிதுந் துபிபின் செல்லச்
சுந்தரி கணங்கள் செல்ல
ஞாளிமேல் வடுகர் செல்ல
நான்முகி முதலா மாதர்
தூளிமேற் செல்லத் தங்கள்
விடையின்மேற் றூசிச் சென்றார்.

இ-ள். துர்க்கை சிங்கவாகனத்திலேறிக்கொண்டுபோக, அருணநாயகி யென்பவள் முன்னேபோகவும், காளி, துந்துபி என்கிற இருவரும் பின்னேபோகவும், பார்வதியின் கணங்களும் சுவர்ண வாகனத்தில் வயிரவர்போகவும், அபிராமி முதலாகிய மாதரெழுவரும் தங்கள் தங்கள் வாகனங்களிலேறிக்கொண்டு தூசிப்படையாகத் துகளெழும்பப் போனார்கள். எ-று. (௧௧)

சென்றுதோ மரத்திற் குன்றிற்
சிலைகளிற் படையிற் கையிற்
கன்றிய மகிடன் சேனைப்
பாதியைக் கணத்திற் சாய்த்தார்
வன்றிறன் மகிடன் சேனைத்
தலைவரும் மகிடன் றானுங்
குன்றென வெதிர்ந்து கன்னி
படையெலாந் துரத்திச் சென்றார்.

இ-ள். இப்படித் துர்க்கைசேனைகள் போனவுடனே உலக்கையினாலும், மலைகளாலும், வில்முதலாகிய ஆயுதங்களாலும், கைகளினாலும் கோபத்துடனே போர்செய்கிற மகிடாசுரனுடைய பாதிச்சேனையை ஒரு நொடிப்பொழுதிலே கொன்று விட்டார்கள்; மகிடாசுரனும் அவனுடைய சேனைத் தலைவர்களும் மலைபோல் எதிர்த்துத் துர்க்கையின் சேனைகளையெல்லாந் துரத்திச் சென்றார்கள். எ-று. (௨0)

துந்துமிமுதலாநால்வ ரிடைந்தனர்சூலியால
கந்தரிவராகியாறு முகத்தவடிகிரிக்கையா
ளிந்திரைமறையாளென்னு மெழுவருமறைந்தார்ஞாளி
யுந்தினாரிடைந்தார்கன்னி மனந்தளர்ந்துமையேயென்றாள்.

இ-ள். அசுரனது படைகள் எதிர்த்து யுத்தஞ்செய்த அளவில் துந்துமி, காளி, மதங்கி, சண்டி என்கிற நான்கு சத்திகளுந் தோற்றார்கள்; சூலி, நீலகண்டி, வராகி, கௌமாரி, நாராயணி, இந்திரைபிராமியென்கிற எழுமாதரும் யுத்தஞ்செய்ய மாட்டாமற் கட்டிலொளித்தார்கள்; சுவர்ண வாகனத்தையுடைய வயிரவர்களும் தோற்றார்கள்; துர்க்கை மனந்தளர்ந்து உமாதேவியே என்று தியானித்துநின்றார்கள். எ-று. (௨௧)

உறுதுணை யுமையே யென்னும்
பொழுதில்யோ கினிகள் வானி
லறுபது நாலு கோடி
யதிர்த்தெழுந் தழலின் மாரி
யிறுதியா யுருளச் சேனை
யிடிமழை சொரிகை யாலே
குறுகிய மகிடன் சேனைத்
தலைவருங் கொதித்துச் சென்றார்.

இ-ள். துர்க்கையானவள் அம்மையே! துணையென்றபோது அறுபத்து நான்குகோடி யோகினிகள் ஆகாசத்தி லார்ப்பரித்தெழுந்து நெருப்புமழையையும், இடிமழையையும், சொரிந்தபடியினால் மகிடாசுரனுடைய சேனைக ளெரிந்துபோயின; அப்பொழுது சேனைத்தலைவர் கோபித்துச் சண்டைசெய்தார்கள். எ-று. (௨௨)

கலி விருத்தம்.

அருசி கன்றனைச் செற்றன ளாரணி
மருவு காந்தனை மாய்த்தனள் வாரணி
கரனை வென்றனள் வேலுடைக் காரணி
நரக னாருயி ருண்டன ணாரணி.

இ-ள். அப்படி மகிடாசுரனுடைய சேனைத்தலைவர்கள் எதிர்த்தவுடனே, அபிராமி யென்பவள் அருசிகனென்பவனைக் கொன்றாள்; வாரணியென்பவள் காந்தனென்பவனைக்கொன்றாள்; சண்முகியென்பவள் கரனென்னும் அசுரனைக்கொன்றாள். நரகனென்னும்அசுரனை நாரணியென்பாள் கொன்றாள். எ-று. (௨௩)

சூல பாணி தொலைத்தனள் மிண்டனைக்
கோல மாமுகி சண்டனைக் கொன்றன
ளால வூணி மதுவை யழித்தன
ணீல னாருயி ரிந்திரை நீக்கினாள்.

இ-ள். காளியென்பவள் மிண்டனென்பவனையும், வராகிசண்டனென்பவனையும், நீலகண்டிமதுவென்னுமசுரனையும் இந்திராணி நீலனென்பவனையுங் கொன்றார்கள். எ-று. (௨௪)

துந்து மிக்கொடி சோணித வூணனைக்
கந்து மிக்கும் படிக்கதை காட்டினா
ளைந்து மிக்க நிகர்த்தரு ணாசலை
வந்து மிக்கெரிக் கண்ணனை வாட்டினாள்.

இ-ள். துந்துமிக் கொடியையுடையவள் சோணிதனுணனென்பவனைத் தலையறும்படி தண்டாயுதத்தா லடித்தாள்; சங்கத்தைக் கையிலே தரித்த அருணாசலை யென்றவள் அக்கினிக் கண்ணனைக் கொன்றாள். எ-று. (உ௫)

கயிட வன்புகைக் கண்ண னிருவருஞ்
செயிரின் மாளுறச் சிந்தினள் சுந்தரி
நெயிடு மிக்க நிணமிடு வேலினள்
மயிட வன்முகங் கண்டெதிர் வந்தனள்.

இ-ள். சுந்தரியென்கிறசத்திகயிடவனையும், புகைக்கண்ணனையும் யுத்தத்திற்கொன்றாள்; நெய்யைப்பொழிகின்ற நிணம்பொருந்திய வேலாயுதத்தையேந்திய துர்க்கை மகிடாசுரனைக்கண்டு எதிர்த்துவந்தாள். எ-று. (உ௬)

வெங்க டாமுகன் மேவலு மாதர்க
டங்க ளாயுதங் கொண்டு தடுத்தனர்
சிங்க வூர்தி யவனெதிர் சென்றுகைச்
சங்கை யூதினண் மேரு சலிக்கவே.

இ-ள். வெப்பம்பொருந்திய எருமைக்கடா முகத்தையுடைய அசுரன் யுத்தத்துக்கு நேரிட்ட அளவில் சப்தமாதர்களும் தங்களாயுதங்களினால் அவன்விட்ட ஆயுதங்களை விலக்கினார்கள்; அவ்வேளையில் சிங்கவாகனத்தி லேறிவந்த துர்க்கை யவனுக் கெதிரே போய்த் தன்கையிலிருக்கிற சங்கத்தை மகாமேரு அசையும்ப வாயில்வைத்து ஊதினாள். எ-று. (உ௭

செருவி லங்கவன் சங்கொலி செய்திட
வொருவ ரின்றி யவுண ருறங்கினார்
பெருவ ரங்களிற் பெற்ற சரங்களை
யிருவருஞ் சொரிந் தார்மழை யென்னவே.

இ-ள். வல்லமைபொருந்திய சிங்கவாகனத்தையுடைய துர்க்கை சங்கத்தொனிசெய்ய அசுரர்களொருவரும் இல்லாமல் மயக்கத்தையடைந்தார்கள்; அருமையாகிய வரத்தினால் பெற்றுக்கொண்ட பாணங்களை இருவரும்மழைபோலச் சொரிந்தார்கள். எ-று.

எந்த வெந்தக் கணையிவ ளேவினு
மந்த வந்தக் கணையா லறுத்தனன்
விந்தை மீண்டிரு வெண்பிறை வாய்க்கணை
சிந்தின ளவன் சென்னி யழுந்தவே.

இ-ள். எந்தெந்தப்பாணங்களைத் துர்க்கைவிட்டாலும் அவைகளை அந்தப்பாணங்களினாலேமகிடாசுரன் அறுத்துத்தள்ளினான்; அதன்பிறகு இரண்டு அர்த்தசந்திரபாணங்களை அவனுடையசிரத்தில் அழுந்தும்படியாக விட்டாள். எ-று. (உ௯)

வெம்பு-செம்புனல் வெள்ள முருக்கிய
செம்பு போலச் சிதற விடுங்கணை
யம்பு போல விருக்கினு மாங்கவன்
கொம்பு போல விளங்கின கோடியே.

இ-ள். இரத்தவெள்ளம் உருக்கினசெம்புபோல் சிதறிவிழவிட்ட அர்த்தசந்திர பாணங்கள் அம்பாயிருந்தாலும் அசுரன் தலையில் முளைத்திருந்த கொம்பினைப்போல் தலையில்தைத்து அழுந்தி விளங்கித்தோன்றின. எ-று. (௩0)

வெற்றி கொண்டவள் வில்லை முறித்தன
னுற்ற வம்பிற் சிலைநுத லூன்றினள்
கொற்ற வம்பின் குலங்கள் விடுத்தவ
னொற்றி யிற்கண் ணழலி னிமிர்த்ததே.

இ-ள். ஜெயங்கொண்டவளாகிய துர்க்கையின் கையிலிருந்த வில்லையிரண்டாகமுறித்தான்; அந்தவில்லினால் அசுரனுடைய

ற்றியில் அடித்தாள்; மிகப்பலம்பொருந்திய அம்புகளை விட்டவனாகிய அந்தமகிடாசுரன் நெற்றியில் சுவாமியினுடைய கண் நெருப்புப்போலச் சுறுக்கென்றுதாக்கியது. எ-று. (௩௧)

சாப வெஞ்சிலை போகத் தரிப்பளோ
கோபம் விஞ்சிக் கொதித்தெழு கூற்றத்தின்
றீப மென்னத் திகிரியொன் றேவியே
பாப காரி தலைவிழப் பண்ணினாள்.

இ-ள். துர்க்கை வில்லொடிந்ததும்பொறுக்காமல் அதிககோபங்கொண்டு கொதித்தெழும்பும் எமன்போல் பிரகாசிக்கின்றவொரு சக்கிராயுதம்விட்டுப் பாவியாகிய மகிடாசுரன் தலைவிழும்படிசெய்தாள். எ-று. (௩௨)

கன்னி யாழி யெறியக் கடாமுகன்
சின்ன பின்னங்க ளாயுஞ் சிதைந்திலன்
முன்னை மாதவத் துண்மையின் மும்மதக்
குன்று மால்கரி யாயெதிர் தோன்றினான்.

இ-ள். துர்க்கை சக்கிராயுதத்தைவிட்டெறிய, மகிடாசுரன் தேகஞ் சின்னபின்னமாகியுஞ் சாகாதவனாகிப் பூருவகாலத்திற்செய்த தபோபலத்தினால் மும்மதங்களையும்பொழிகிற பெரியயானையுருவங்கொண்டு எதிராக வந்தெதிர்த்தான். எ-று. (௩௩)

ஆளி யேற்சென் றங்கவ னுச்சியின்
மூளை வாரி நுகர்ந்தது மொய்ம்பினான்
மீள வுங்கதை கொண்டெதிர் வீசினான்
கூளி நாயகி கூரவே லேவினாள்.

இ-ள். அப்படி யானையுருவங்கொண்டெதிர்த்த அளவில் துர்க்கையேறுகின்ற ஆளிபோல் அந்தயானையுச்சியிலிருக்கின்ற மூளை

யைக் கையினாலளைந்து தோண்டியெடுத்துத் தின்றது; அதனாலேயுஞ்சாகாமற் கையினால்திரும்பியுந் தண்டாயுதங்கொண் டெறிந்தான்; பேய்களுக்கதிகாரியாயிருக்கிற துர்க்கை கூர்மைபொருந்திய வேலாயுதத்தை விட்டாள். எ-று. (௩௪)

விடந்த தும்பிய வேல்பட வெஞ்சமர்க்
கிடைந்த தும்பி முகனு மிறந்தன
னடைந்த தும்பிக ளாயிர மாயிரங்
குடைந்த தும்பி மரமெனக் குன்றியே.

இ-ள். விடத்தைக் கக்கிக்கொண்டிருக்கிற வேலாயுதம்பாய்ந்தவுடனே யுத்தத்தினின்ற யானைமுகன் அதைச்சகிக்கமாட்டாமல் இறந்துவிட்டான்; அநேகமாயிர வண்டுகள்குடைய உள்ளேவொன்றுமில்லாமற் றுளையோடுகூடிய அ[illegible]ரம்போல் குன்றினான். எ-று. (௩௫)

வீழ்ந்த பின்பரி வேடம தாயெதிர்ப்
போந்து வெங்கதை கொண்டு புடைத்தனன்
சேர்ந்த வன்கதை யும்மவன் சென்னியு
நாந்த கங்கொண் டறுத்தன ளாரணி.

இ-ள். அப்படிவிழுந்து இறந்துபோனவுடனே, குதிரைமுகமுள்ள அசுரனாகி யெதிரேவந்து தண்டாயுதத்தினால் அடித்தான், அடித்த தண்டாயுதத்தையும் கத்தியினால் அறுத்துத் தள்ளினாள் துர்க்கையும். எ-று. (௩௬)

அங்க தன்பி னழலுரு வாயினன்
கங்கை யாயினன் காரிரு ளாயினன்
பங்க யாசன னாயினன் பங்கய
மங்கை நாயக னாயினன் மாயையால்.

இ-ள். அதன்பின்பு அசுரன் நெருப்புருவங்கொண்டு வந்தான் அதன்பின்பு சலப்பிரளய ரூபங்கொண்டும் அந்தகாரமாகியும், தா

மரைப்புட்பத்திலிருக்கின்ற பிரமனாகியும், இலக்குமி நாயகராகிய விட்டுணுமூர்த்தியாகியும், எதிர்த்தான் மாயையினாலே. எ-று. ()

ஈது கண்டவ னென்செய்வன் மாயையால்
வாதை செய்தன னென்றுத ளர்ந்துமை
பாத நெஞ்சினிற் பற்றினள் பற்றிய
போதி லோர்மொழி விண்ணிற் புகன்றதே.

இ-ள். அப்படி அசுரன் பலபலவடிவங்கொண்டவுடனே பார்த்து மாயையினாலே துன்பப்படுத்துகிறான், என்ன உபாயஞ்செய்தாலும்சாகிறதில்லை, இதற்கென்னசெய்வேனென்று துர்க்கைபார்வதிதேவியினுடைய இரண்டுபாதங்களையும் மனத்திலே தியானித்தாள், அப்படி தியானித்தவுடனே ஆகாயத்திலின்றும் அசரீரி ஒருவாக்கியஞ்செ[illegible]ற்று. எ-று. (௧௮)

மாய வேடங்க ளன்றி மகிடமே
யாய போதி லவன்றலை தள்ளியே
தூய தாளின் மிதிக்கத் தொலைந்திடுந்
தீய மாயை யெனச் சொலத் தேறினாள்.

இ-ள். அநேகவிதமான மாயவேஷங்களல்லாமல் சுபாவமான எருமைமுகரூபங்கொண்டபோது அவன் தலையையறுத்துக் கீழே தள்ளி உனது பரிசுத்தமாகிய காலினாலே மிதித்தால் தீமைபொருந்திய மாயை தொலைந்துபோமென்று சொல்லத் துர்க்கை தேறினாள். எ-று. (௧௯)

மட்டின் மாயை வடிவின் மலைந்தபின்
னெட்டி லைத்தலைச் சூலத்தி னீக்கினாள்
துட்டன் மேதிய தாய்ப்படை தொட்டனன்
வெட்டி வீழ்த்தி யடியின் மிதித்தனள்.

இ-ள். அளவில்லாத மாயரூபங்கொண்டுவர கொடுமையானவனுடைய சூலத்திற் குத்திக்கொன்றாள், பின்பு அத்துஷ்டன் பழய எருமைக்கடா முகத்தையுடையவனாகி ஆயுதங்களைப் பிரயோகஞ்செய்தவளவில், அவைகளைவிலக்கி வாளாயுதத்தால் தலையைவெட்டித்தள்ளிக் காலினால்மிதித்துக்கொன்றாள் துர்க்கை. எ-று. ()

ஒப்பி லாப்பத மூன்றி மிதித்திடில்
தப்பின் மாயை தவிர்ப்பது பாரமோ
வப்ப தத்தை நினைக்கினு மாணவஞ்
செப்பு காமிய மாயையுந் தீர்க்குமே.

இ-ள். துர்க்கை பாதத்தை நினைத்தாலும், அதைநினைத்தவருடைய ஆணவம், மாயை, காமியம் என்கிற மும்மலங்களையும் நீக்கிவிடும், அப்படிப்பட்ட ஒப்பில்லாத பதம் பரிசமாகும்படி ஊன்றி மிதித்தால் பொய்யாகிய மாயைமாத்திரந் தவிர்ப்பது பெரிதோ! எ-று. (௨௧)

போத வானவர் பூமழை பெய்தனர்
மேதி மாமுகன் மெய்க்கதி யுற்றனன்
தீதி லாவவன் செங்களந் தன்னிலோர்
சோதி லிங்க மிருந்தது தோன்றவே.

இ-ள். தேவர்கள்மிகவும் புட்பவருஷம் பொழிந்தார்கள், மகிடாசுரனும் அம்மைகையினாலிறந்ததனாலே மெய்மையானமோட்சத்தைச்சேர்ந்தான்; யாதொருகுற்றமுமில்லாத அவன் சிவப்பாகிய கண்டத்தில் ஒருபடிகலிங்கமிருந்தது. எ-று. (௨௨)

கண்ட மட்டிலக் கைக்கொளக் கார்நவ
கண்ட மட்டிற் புரந்த கடாமுகன்
கண்ட மட்டி லிருந்த கடவுளைக்
கண்ட மட்டி லெடுத்தனள் கன்னியே.

இ-ள். நவகண்டமட்டும் ஆண்டமகிடாசுரனுடைய கழுத்தை இலக்காகவைத்துத் துர்க்கையறுக்க, அக்கழுத்திலிருந்த படிகலிங்கத்தைக் கண்டபோதே கையினாலெடுத்தாள். எ-று. (௨௩)

கொண்டு சென்றுமை கோகந கப்பதங்
கண்டு போற்றிக் கடவுளை யீய்ந்தனள்
வண்டு வார்குழல் வாங்கினள் செங்கையை
யண்டர் நாயகன் விட்டில னாசையால்.

இ-ள். அப்படிப்பட்டபடிகலிங்கத்தைஎடுத்துக்கொண்டுபோய் உமாதேவி பாதங்களைத்தொழுது நடந்தகாரியமெல்லாஞ் சொல்லிச் சுவாமியைக்கொடுத்தாள்; வண்டுகள் சூழ்ந்திருக்கின்ற கூந்தலையுடையபார்வதி கையினால்வாங்கினாள்; தேவர்கட்கெல்லாம்நாதராகவிருக்கின்ற சுவாமியும் அம்மை கைமேல்வைத்திருக்கிற ஆசையினால் கையைவிடாமற் கெட்டியாகவிருந்தார். எ-று. (௪௪)

தாயு மங்கது கண்டு மகிழ்ந் திறை
யேய வென்கரம் பற்றிய தேதென
வாயை யங்கை புதைத்து மகபதிக்
காயி ரங்கண் ணளித்தவன் கூறுவான்.

இ-ள். பார்வதி அந்த ஆச்சரியத்தைப்பார்த்து மகிழ்ச்சியடைந்து; என்கையைவிடாமலிருந்தது எதனால் என்றுகேட்க, தேவேந்திரனுக்கு ஆயிரங் கண்கொடுத்த கௌதமர் வாயைக் கையினால் பொத்திக்கொண்டு அம்மைக்குச் சொல்லத்தொடங்கினார். எ-று.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முன்னமகத் தியன்முதலா முனிவர்களைம்
பதின்மர்வர முனி பாற் செல்ல
வன்னவன்றன் றவமதிப்பா லவமதிப்பா
யிருந்திடவு மவனை நோக்கிப்
பொன்னனைய தவ முனிவர் வெகுண்டு ரைப்பா
ரேர்மை யிகழ்ந்த புன்மையாலே
யுன்னரிய கருங்கடவா யினிப்பிறக்கக்
கடவாயென் றுளையச் சொன்னார்.

இ-ள். முற்காலத்தில் அகத்தியர்முதலான ஐம்பதுரிஷிகள் கூடி, வரமுனியென்பவருடைய ஆச்சிரமத்திற்குப் போனார்கள். அந்தவரமுனி தம்முடைய தபோபலத்தினால் மரியாதையாக உபசாரம் செய்யாமலிருந்தார்; அப்போது அவரைப்பார்த்து பொன்போலும் அரியதவத்தையுடைய எல்லாமுனிவர்களுங் கோபித்து எங்களை அவமரியாதைசெய்தபடியினால் யாவராலும் குறைவுசொல்லப்பட்டகரிய எருமைக்கடாவாகப் பிறப்பாயென்று அவர்கள்மனம்வருந்திச் சபித்தார்கள். எ-று. (௪௬)

அருந்தவரைம் பதின்மருமன் றுரைத்தமொழிக்
கொடுமை யைக்கண் டச்சமாகி
யிருந்தவனு மெழுந்துபணிந் தெனதுபிழை
பொருத்தருள்வீ ரென்றா னந்தப்
பெருந்தவரன் புடனுரைப்பார் மகிடமுகத்
தவுணனெனப் பிறந்து பின்னர்த்
திருந்தவர னிடம்வேண்டித் தவம்புரியு
முமைகணத்திற் றீர்ப்பா ளென்றார்.

இ-ள். அரியதவத்தினையுடைய ஐம்பதுமுனிவர்களும் அன்றுசொல்லிய சாபத்தின் குரூரத்தைக்கேட்டுபயப்பட்டு, பெருமைபொருந்திய தவஞ்செய்தவரமுனியும் எழுந்துவந்தனஞ்செய்து முனிவர்களே! தெரியாமல் நான்செய்தபிழையைப் பொறுத்துக்கொள்ளுங்களென்றார், அதற்குமுனிவர்கள் நீர் எருமைமுகம்பொருந்திய அசுரனாகி அரசாளுங்காலத்தில் சுவாமியிடப்பாகத்தைப் பெறும்படி தவஞ்செய்துகொண்டிருக்கிற அம்மை உம்முடையசாபத்தைநொடிப்பொழுதில் தீர்ப்பாளென்று சொன்னார்கள். எ-று. ()

ஆங்கவர்சொற் படியிலவ னசுரர்பெருங்
குலத்தி லுதித் தரசனாகி
யோங்கியபேர் மகிடனெனக் கொடுங்கோன்மை
புரிகுதலு மொருநாள் வேட்டைத்

தீங்குசெய வனத்திலடைந் தழற்பசியா
லிளைத்தோடித் திரிந்தா னங்கே
நீங்கரிய வருச்சனைசெய் மன்னதனென்
றொருமுனிவ னேர்ப்பட் டானே.

இ-ள். அந்த முனிவர்கள் சொன்னபிரகாரம் வரமுனி அசுரகுலத்திற்பிறந்து அரசனாகி மகிடாசுரனென்கிற பெயரையடைந்து கொடுங்கோலரசு செய்துகொண்டு வருகையில், ஒருநாள் வேட்டையாடும்படி வனத்தில் வந்து மிகுந்த பசியினால் இரையொன்றும் அகப்படாமல் ஓடித் திரிந்துகொண்டிருந்தான்; அவ்விடத்தில் நீங்குதற்கரிய தவஞ்செய்கின்ற மன்னதரிஷி என்பவன் எதிர்ப்பட்டான். எ-று. (௪௮)

மன்னதனா மவனையிவன் கரத்திலிங்கத்
துடன்விழுங்கி மகிழ்ந்து போனான்
பின்னதனா லவன்மிடற்றிற் சிவனுருவ
மிருந்ததந்தப் பெருமை யாலே
யுன்னதமா யினன்சிவனு முருத் தரித்த
வுடலுமிறை யுருவ மன்றோ
வன்னதனால் வினையடைந்த ததுதவிரு
* நவதீர்த்த மாடி லென்றான்.

---

* நவ தீர்த்தங்களாவன — கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, கோதாவிரி, காவிரி, சிந்து, சீதேவி, சோணநதி என்பனவாம்.

“கங்கையமுனை சரசுவதி கமழ்கோதாவிரி காவேரி, கங்கை சிந்து நன்மதைசீதேவி சோணநதியெனவே, யிங்கேயெனுமொன் பதுநதியு மித்தத்தலத்தினினிது திக்கு மங்கைவிந்தை கைவாளால் வெட்டவாய்க்குஞ் சிலைமடுவில்” என்பது அருணகிரிபுராணம்.

இ-ள். எதிர்ப்பட்ட அம்மன்னதனென்கிற ரிஷியைக் கையிலிருக்கும் இலிங்கத்தோடே இம்மகிடாசுரன் எடுத்து விழுங்கிவிட்டுப்போனான்; பின்பு அவன் கண்டத்திற்சிக்கிக்கொண்டு படிகலிங்கமிருந்ததனால் மிகுந்தபெருமையையடைந்தான், அந்த இலிங்கமிருந்த கண்டத்தையுடையவனும் சிவசொரூபமன்றோ! அவனைக் கொன்றபடியினால் பாவம்சம்பவித்தது, நீ நவதீர்த்தங்களாடினால், அப்பாவம்போமென்றார் கௌதமர். எ-று. (௪௯)

அன்புமுனி யுரைத்தளவி லொருமொழியந்
தரத்திலெழுந் தரிய தீர்த்த
மொன்பதுமிவ் விடத்தில்வரு மவைவருமா
றியற்றுமென வுமையும் விந்தை
தன்பதும முகநோக்கி யுனதுகைவா
ளொ[illegible] ருவா யென்றாள்
வன்பணில மெடுத்தாளுந் தொழுதுகைவா
ணிலத்தெறிந்து வாங்கும் போதில்.

இ-ள். மிகவும் பக்தியையுடைய கௌதமர் இப்படிச் சொன்ன அளவில், பாவந்தீர ஆடுதற்கு ஒன்பது தீர்த்தமும், இவ்விடத்தில் வரும்படிச் செய்யென்று ஆகாயத்திலிருந்து ஒருவார்த்தை பிறந்தது; அதைக்கேட்டுப் பார்வதியும், துர்க்கையின் மலர்போன்ற முகத்தைப்பார்த்து உன்னுடையகையிலிருக்கின்ற வாளினால்பூமியைப் பிளந்து கங்கையைவரும்படி செய்யென்று சொல்ல, ஜயசங்கைக் கையிற்றரித்த துர்க்கையும் வணங்கி வாளாயுதத்தால் பூமியில் வீசியெடுத்தபோது. எ-று. (௫௦)

நவநதியும் பிறவுளநன் னதிகளுமச்
சோகந்தீர் நல்ல தான
சுவையதிக முதவுபல தடங்களுமங்
கெழுந்தவந்தச் சுனையி னூடே
பவமகல வொருமாத முழுகியிருந்
தாள்கரத்தைப் பற்றி நீங்காச்
சிவவடிவு மகன்றதுதன் னுளமகிழ்ந்து
கரையில்வந்தா டேவர் போற்ற.

இ-ள். ஒன்பது தீர்த்தங்களும் மற்றுமுள்ள நதிகளும் விடாயாறும்படி உதவிசெய்யும் நல்ல ருசியைக்கொடுக்கின்ற அநேகத் தடாகங்களும் உண்டாயின; அந்நதிகளில் ஒருமாதவரைக்கும் அம்மை குற்றம் நீங்கும்படி ஸ்நானஞ் செய்துகொண்டிருந்தாள்; கையைப் பற்றிக்கொண்டு விடாமலிருந்த இலிங்கமும் நீங்கிற்று; அப்போது தேவர்கள் போற்றும்படி மனம் சந்தோஷித்து அம்மை கரையில் வந்து சேர்ந்தாள். எ-று. (௬௧)

அருவுருவா மொருசிவனை யதன்கரைமேற்
புறத்திருத்தி யருச்சித் தாணம்
மிருவினையுந் தவிர்ப்பானுக் கென்பாவந்
தீர்த்தானென் றியற்பே ரிட்டாள்
திருமருவும் பெருஞ்சுனைக்கு மினியகட்க
தீர்த்தமெனத் திருப்பே ரிட்டாள்
குருமணியை யருணகிரிப் பெருமானைத்
தொழக்கனகக் கோயில் சார்ந்தாள்.

இ-ள். அருவமாயும், உருவமாயும் விளங்கும் ஒப்பற்ற சிவனை அந்நதிக்கரையில் எழுந்தருளச்செய்து அருச்சனைசெய்தாள்; தம்முடைய நல்வினை, தீவினை, இரண்டையும் நீக்குகின்ற சுவாமிக்கு என்பாவந் தீர்த்தாரென்று பேரைத்தரித்து அழகியசுனைக்குக் கட்கதீர்த்தமென்று பெயரிட்டாள்; நிறம்பொருந்திய மணியையொத்தவரை அருணாசலத்தில் எழுந்தருளியிருக்கிற பரமசிவனை வணங்கும்படியாகப் பொன்மயமாகிய கோவிலுக்குப்போனாள். எ-று. ()

"முருகுமல ரயன்றடத்திற் படிந்துவெண்ணீ
றணிந்துசெங்கை முடியிற் கூப்பி
யருகுவருங் கோதமன்சொற் படிதொழுதுட்
புகுந்துதண்ணா ரமுதைக் கண்ணாற்
பருகிநில முறவிழுந்து பணிந்தெழுந்து
பரவசமாய்ப் பாடி யாடி
யுருகியுவந் தழுதுயிர்த்து வலம்புரிந்து
தனதுகுறை யுரைத்துப் போற்றி."

இ-ள். வாசனையுள்ள தாமரைமலரிலிருக்கிற பிரமதீர்த்தத்தில்முழுகி விபூதிதரித்துச் சிவந்தகைகளைச் சிரமேல்வைத்துத் தெண்டனிட்டுத் தன்னருகேவருகிற கௌதமர் சொன்னபடிபோய்க் குளிர்பொருந்திய அமிர்தம்போன்றசுவாமியைக் கண்ணாற்றரிசித்துப் பூமியிற்றேகம்பொருந்த நமஸ்காரஞ்செய்து எழுந்திருந்து பரவசமாகிப் பாடியாடி உருக்கமடைந்துகளித்து ஆனந்தக்கண்ணீர்பெருகிப் பெருமூச்செறிந்து வலமாகவந்து தன்னுடையகுறையைச்சொல்லி வணங்கினாள். எ-று. (௬௨)

கார்த்திகைத்திங் களிற்றிருநா ளாகமத்தின்
படிநடத்திக் கடற்கண் ணானைத்
தோத்திரம்பண் ணுதலுமொரு சுடர்மலைமே
லெழுந்ததந்தச் சுடரி னூடே

ஏத்தரிய பலகோடி யிரவியென
வொருசோதி யெழுந்து மின்னே
வாய்த்தமலை வலமாக நடத்தியென
வுரைத்துடனே மறைந்த தன்றே.

இ-ள். கார்த்திகைமாதத்தில் ஆகமத்தின்படி திருநாள்செய்து நெருப்புக்கண்களையுடைய சிவபிரானைப்பணிந்த அளவில், மலைமேல் ஒருபிரகாசமுண்டாகி, அதிற்சொல்லுதற்கரிய பலகோடி பாலசூரியப்பிரகாசமாய் சுவாமியெழுந்து பெண்ணே! இம்மலையை வலமாக நடந்துவாவென்றுசொல்லி மறைந்துவிட்டார். எ-று. ()

நாரிதனைச் சிலையாக்கு முனிவனுமப்
படிவலமா நடத்தி யென்றான்
வாரியென மறைபுகழக் காரிகையு
நடந்தனடன் மலர்க்கை கூப்பிப்
பேரிகையுங் காகளமுஞ் சல்லரியு
மல்லரியும் பெரிய வானிற்
றூரியமுந் துந்துமியு மத்தளமுங்
குடமுழவுந் துவைத்த வன்றே.

இ-ள். * அகலிகையாகியபெண்ணைக் கல்லாக்கிய கௌதமரிஷியும், அம்மா! அப்படியே வலமாகப்போவென்றுசொல்லச்சமுத்திரம்போல் வேதகோஷ்டமுழங்கவும் பேரிகை, காகளம், சல்லரி, மல்லரி, முரசு, துந்துமி, மத்தளம், குடமுழா இவை முதலான வாத்தியங்கள் ஆகாயத்தில்முழங்கவும் பார்வதி இரண்டுகைகளையுங்கூப்பிக்கொண்டு நடந்தாள். எ-று. (௫௫)

---

* அகலிகையைக் கல்லாக்கிய சரித்திரத்தைக் கூர்மபுராணம் பார்க்கவபுராணம் என்பவற்றிற்காண்க.

அரம்பையுருப் பசிமுதலா மகபதிநாட்
டரிவையர்க ளாடல் காட்டக்
குரும்பையென நெருங்குமுலை வரையரமங்
கையர்மலரின் குப்பை கொட்டக்
கரும்புகனிந் தனையமொழிப் புனலரமங்
கையரிரட் டுங்கவரி யாட்ட
விரும்புருக நகைபுரியு மரவமினார்
மணிவிளக்க மெடுத்து நீட்ட.

இ-ள். இப்படி பார்வதிவலம்வரும்போது, அரம்பை ஊர்வசி முதலான தெய்வலோகத்துப் பெண்கள் காட்டியமாடத் தென்னங்குரும்பையொத்த தனத்தையுடைய மலையரமகளிர் அம்மைநடந்துவரும்போது, பாதம் பூமியிற்பட்டு உறுத்தாமலிருக்கப் புட்பங்களைக் குப்பையாகக்கொட்டக் கரும்பஞ்சாறுபோலும் வார்த்தையையுடைய நீரரமங்கையர் சாமரமெடுத்துவீச, இரும்புமுருகும்படி நகைசெய்கின்ற நாகலோகப்பெண்கள் இரத்தினதீபங் கையிலெடுத்துக்கொண்டுவர. எ-று. (௫௬)

[இதுமுதலிரண்டுபாடல் குளகம்.]

முண்டகமண் டபமயிலும் புலோமசையு
கண்டகமும் வழிப்பாலு மொழித்துவர
நிலமகடன் கைக ணீட்ட
அண்டர்குல மடந்தையரு முனிவர்குல
வனிதையரு மருவிப் பூந்தேன்
வண்டவிடுஞ் சேறகற்ற மலரினறுந்
துகள்சொரிந்து வழிக ளாக்க.

இ-ள். தாமரைப்புட்பமாகிய மண்டபத்திலிருக்கிற இலக்குமியும் இந்திராணியும், வெண்டாமரைப்பூவிலிருக்கிற சரஸ்வதியும் போகிறவழியிலிருக்கும் முள்ளுகளையும் கற்களையுந்தள்ளிக்கொண்டுவரப், பூமிதேவிகைகளைநீட்டி சாக்கிரதையாகத்தாங்க தேவஸ்திரீகளும் முனிவர்களுடைய ஸ்திரீகளும் புட்பத்திலிருக்கிற தேனருவியினால்வழி சேருக்கிக்கிடந்ததைநீக்க புட்பத்துக்குள்ளிருக்கிறபராகப்பொடிகளைக்கொட்டி நல்லவழியாகச்செய்ய. எ-று. (௫௭)

கன்றினதுன் விருசரணம் பொறுத்தருள்வா
யெனவங்கை கன்னிக கூப்ப
மன்றனலத் திசையணிகி யழற்கிரியை
யெதிர்முகமா வணங்கிப் போற்றித்
தென்றிசையு நிருதிபெருந் திசையினையுங்
கடந்துகுட திசையிற் சென்றாள்.
குன்றரிய புகழரனு மழவிடைமீ
தினிற்காட்சி கொடுத்துப் போனான்.

இ-ள். கங்கையானவள் அம்மாபார்வதி உன் பாதமிரண்டும் பூமியிலேபட்டுக் கன்றிப்போய்விட்டன; பொறுக்கவேண்டுமென்று இரண்டுகைகளையுங்கூப்ப, அழகிய அக்கினிதிசையில்வந்து அக்கினிமலையை எதிர்முகமாகக்கொ[illegible] தெற்குத்திசை[illegible] திமூலையுந்தாண்டி மேற்குத்திசையிற்போனாள்; குறைவில்லாத கீர்த்தியையுடையசுவாமியும் இளமைதங்கிய ரிஷபவாகனத்தில் எழுந்தருளிவந்து தரிசனங்கொடுத்து நடந்தார். எ-று. (௫௮)

நாற்றிசையும் போற்றிசெயும் புகழணியண்
ணாமலையா னடத்தாள் போற்றி
மேற்றிசையுங் காற்றிசையுங் கடந்துவட
திசையணுகி விரும்பி யேத்தி

373

யேற்றிசையு மிறைதிசையு மகிழ்ந்துகுண
திசையடைந்தா ளிமய வெற்பிற்
சேற்றிசையு மணவழலை வலம்புரிந்த
செயல்போலச் செறிந்த தன்றே.

இ-ள். நாலுதிக்கும்வணங்குகின்ற கீர்த்தியையுடைய அருணாசலேசுரனுடைய பாதத்தைவணங்கி மேற்குத்திசையும் வாயுதிசையுந்தாண்டி, வடதிசையில் மறுபடியுந்தொழுது எருதிலேறுகின்ற ஈசானனுடையதிசையைக்கடந்து கிழக்குத்திசைக்குவந்தாள் அப்படிவந்தது இமாசலத்தில் சுவாமி கலியாணஞ்செய்தபோது ஓமாக்கினியை வலம்வந்ததுபோலிருந்தது. எ-று. (௫௯)

க[illegible]க் துறை.

* யாணு கம்பன்கைச் சங்கொலி நெடியமால் பணிலத்
தான சம்பலை நாரதர் வீணையி னரவம்
வான துந்துமி கம்பலை திசையெலா மறைத்த
தேனி றைந்திடு மலர்மழை யிமையவர் சிதற.

இ-ள். யாணுகம்பனென்பவன் தன்னுடைய ஆயிரங்கைகளிலுஞ் சங்கத்தைவைத்து ஊதுகிறவொலியும், விட்டுணு தமதுசங்கத்தைவாயில்வைத்து ஊதுகிறசத்தமும், நாரதர்வீணையைவாசிக்கிறசத்தமும், ஆகாச துந்துபியினுடைய சத்தமும் திசைகளெல்லாஞ் செவிடுபடச்செய்தன; தேனிறைந்த புட்பவருஷங்களைத் தேவர்கள்சொரிய. எ-று. (௬0)

[இதுமுதல் மூன்றுபாடல்களுங் குளகம்]

கற்றை வார்சடை யிளம்பிறை கெடிலாக் கமழப்
புற்ற ராமணி யினொளி விரித்திடப் புலியைப்
பெற்ற மாதினுக் கொருபுத மவித்திடப் பிடித்த
வெற்று நூலெனப் புரிமுநூன் மார்பகத் திலங்க.

---

* பாணுகம்பன் சங்கு சஞ்சலம். திருமால் சங்கு பாஞ்சசன்னியம், நாரதர் வீணை மகதியெனப்படும்.

இ-ள். கற்றையாகிய நீண்டசடையில் தரிக்கப்பட்ட இளமையாகியபிறையின் நெடுமையான சந்திரிகை பிரகாசிக்கவும், ஆபரணமாகிய புற்றிலிருக்கின்ற சர்ப்பத்தின் தலையிலிருக்கிற மணிகாந்தியை வீசிக்கவும், உலக மாதாவாகிய பார்வதிக்குப் பாதிசரீரத்தைக் கொடுப்பதற்கு மத்தியாகப் பிடித்த எற்றநூல்போல் புரியாகிய பூணுநூல் பிரகாசிக்கவும். எ-று. (சுக)

பிறப்பி லாமுதன் மறையெலா மளவிடாப் பெரியோ
னிறப்பி லாவிறை விடையின்மே லினிதெழுந் தருள
வறத்தி ணயகி யடிபணிந் திறைஞ்சின ளனைத்துந்
துறக்கு மண்ணலு மவளுட னிவை[illegible] சொல்லும்.

இ-ள். பிறப்பில்லாமூர்த்தி அநேகவேதங்களாலும் அறியப்படாதவர் இறப்பில்லாதபரமசிவன், ரிஷபவாகனத்தி லெழுந்தருளத் தருமம்வளர்கின்ற பார்வதி, அச்சுவாமிபாதத்தைத்தொழுது வணங்கினாள்; எல்லாவற்றையும் நீக்கிய கடவுள் அவ்வம்மையோடு சொல்லுவார். எ-று. (சுஉ)

பெண்ணுமாணுமா யுலகுயிர்ப் பொருளெலாம் பிரித்தோ
மண்ணுதாகிய பீடமு * மிலிங்கமு மானோ
மெண்ணு நீயென நானென விரண்டிலை மரமு
முண்ணிலாவிய வயிரமு நிகர்த்துட னுறைவோம்.

இ-ள். உமையே! நீயும், நானும், பெண்ணு மாணுமாகி, உலகத்தில் அநேகம் ஜீவராசிகளை வேறு வேறுண்டாக்கினோம்; சமீபமாய் ஆவுடையாரும் இலிங்கமுமானோம், நீயென்றும் நானென்றும் வேறுபேதமில்லை; மரமும் அதற்குள்ளேயிருக்கிறவயிரமும்போல் ஒன்றாய்ச்சேர்ந்திருப்போம். எ-று. (சுங)

---

* லிங் - லயம். கம் - தோற்றம். எனவே உலகமெல்லாந்தோன்றியொடுங்குதற்கிடமாயதெதுவே அதுவே இலிங்கமெனப்படும்.

அங்கம் யாவுநம் பொருட்டுவிட் டிமயமேற் படைந்தா
யிங்கு நாமுனக் கொருபுற மளிப்பதே யியற்கை
மங்கை யேநம திடப்புறத் துறையென மகிழ்வுற்
றங்கை யாலணைத் தருளின னுருகியொன் றானார்.

இ-ள். தேகத்தை விட்டு நம்பொருட்டாக இமயபர்வதத்தில் வந்து பிறந்தாய், இவ்விடத்தில் நாம் ஒருபாகங் கொடுப்பது சுபாவமே, பெண்ணே நம்முடைய இடப்பாகத்திற் சேர்ந்திருவென்று சந்தோஷமடைந்து கையிரண்டும் அணைத்துக் கொண்டார்; இரண்டு தேகமும்உருகி ஒருதேகமானார்கள், அம்மையும் அப்பனும். எ-று.

அடுத்த செஞ்சடை யொருபுற மொருபுற மளகந்
தொடுத்த கொன்றையோர் புறமொருபுறநறுந்தொடையல்
வடித்த சூலமோர் புறமொரு புறமலர்க் குவளை
திடத்தி லார்கழ லொருபுற மொருபுறஞ் சிலம்பு.

இ-ள். அப்படி யிருவரும் உருகிச் சுவாமியினுடைய பாதியும் அம்மனுடையபாதியும், ஒருதேகமான்போது ஒருபக்கத்திற்சிவந்த சடையும், ஒருபக்கம் கூந்தலும், ஒருபக்கம் கொன்றை மாலையும், ஒருபக்கம் புட்பமாலையும், ஒருபக்கம் சூலமும், ஒருபக்கம் நீலோற்பலபுட்பமும், ஒருபக்கம் வீரகண்டாமணியும், ஒருபக்கம் சிலம்புந் தோன்றின. எ-று. (சுரு)

பச்சை வன்னமற் றொருபுற மொருபுறம் பவளங்
கச்சுலா முலை யொருபுற மொருபுறங் கவின்வா
ரச்ச நீக்கிய வரதமொன் றபயமொன் றங்கை
பிச்சையாமிவ ருறுதல்கண் டிறைஞ்சின ரிமையோர்.

இ-ள். ஒருபுறம் பச்சைநிறமும், ஒருபுறம் பவளநிறமும், ஒருபுறம் கச்சணிந்த தனமும், ஒருபுறம் அழகானமார்பும், ஒருபுறம் அபயமும், ஒருபுறம் வரதமுமாகியகைகளாக ஆசையோடு இருவரும் பொருந்துதலைப்பார்த்துத் தேவரும் வணங்கினார்கள். எ-று.

இவ்வாறு இருவரின்ற கோலத்தைச் சேரமான்பெருமானும்
"வலந்தான் கழலிடம் பாடகம் பாம்பு வலமிடமே
கலந்தான் வலனீ றிடஞ்சாந் தெரிவலம் பந்திடமென்

பலத்தார் வலமிட மாடகம் வேல்வல மாழியிடஞ்
சலந்தாழ் சடைவலந் தண்ணங்குழலிடஞ் சங்கரற்கே."

எனப்பொன் வண்ணத் தந்தாதியில் அருளிச்செய்தலானுமறிக.

இந்த மாக்கதை படித்தவர் செவிகளிற் கேட்டோர்
சந்த சைல முனியினிற் றமிழ்க்கடல் கடப்பார்
மைந்த ரேமுதற் கிளையுட னுலகினில் வாழ்வார்
பந்த பாசமற் றறிவிலாப் பரகதி பெறுவார்.

இ-ள். இக்கதையைப் படித்தவர்களும், செவியாற்கேட்டவர்களும் சந்தனவிருக்கங்கள்சூழ்ந்த பொதியமலையிலிருக்கின்ற அகத்தியர் போற்றமிழ்க்கடல்கடப்பார்கள், சந்தான பாக்கியத்தோடுஞ் சுற்றத்தாரோடும் உலகத்தில் வாழ்வார்கள்; தங்களைப்பந்தமாகச் சூழ்ந்துகொண்டிருக்கிற தீவினையைத்தள்ளி மோட்சம்பெறுவார்கள். எ-று. (௧௭)

முனிவனே யெனைப்பயந்தவ னுரைத்ததிம் முறையென்
றனைய மாமுனிக் குரைத்தது மவனெழுந் திறைஞ்சிக்
கனக வச்சிராங் கதனுயர் கதிபெறுங் கதையை
வினவி னான்முனி யினவனு மகிழ்ந்திவை விளம்பும்.

இ-ள். நந்திதேவர் மார்க்கண்டேயரைப் பார்த்து என்னைப் பெற்ற பரமசிவன்சொன்ன சரித்திரத்தின் முறையிதுவென்று அவருக்குச்சொல்ல, அம்மார்க்கண்டேயரிஷி! எழுந்துதெண்டஞ் செய்து, பின்பு, சுவாமி? வச்சிராங்கத பாண்டியன் உயர்வாகிய மோட்சம் அடைந்த கதையைச் சொல்லுங்களென்று கேட்க, நந்திதேவர் சந்தோஷமடைந்து சொல்லத் தொடங்கினார். எ-று. ()

ஐந்தாவது

இடப்பாகம்பெற்றச் சருக்கம்

முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௧௦௨.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வச்சிராங்கத பாண்டியச் சருக்க

வசனம்.

சந்தனாடவியிற் றோய்ந்து செந்தமிழ்ச் சுவையளைந்து மந்த மாருதம் வந்து வீசும் வைகையவளநாடாகிய பாண்டி நாட்டிலே பெரும்புகழுடையவனும், மன்மதனை வென்ற அழகினனும், ஆகமங்களை நன்காராய்ந்து அறிந்தவனும் இவ்வாறாய பலசிறப்புகளையுடையவனுமான வச்சிராங்கத பாண்டிய னொருவன் அரசு செய்திருந்தான். அவன் வேட்டையாட விரும்பி நாலுவகைச் சேனைகளோடும் புறப்பட்டு வடக்குத் திசையே குதிரையை யோட்டிக்கொண்டு சென்றான். அங்கே வனத்தினுழைந்து பற்பல மிருகங்களையெல்லாங் கொன்றான். தன்சேனைகளெல்லாம் பின்னிட்டிருக்கத் தானொருவன் தனியே வரும்போது புழுகுபூனை யொன்றைக் கண்டு துரத்தினான். அது அருணாசலத்தை வலமாகச் சுற்றி யோடவே குதிரையை முடுக்கிச் செலுத்தினான். உடனே புழுகுபூனை விழுந்திறந்து வித்தியாதரனாய் நின்றது. குதிரையும் அவ்வாறே வீழ்ந்து இறந்து கந்தருவனாய் விளங்கியது. பூனையும் குதிரையும் பழைய வடிவம் ஆகிய காந்திசாலி, கலாதரன் என்னும் வடிவம்பெற்று ஒருவர்க்கொருவர் கட்டித்தழுவி உபசாரமொழிகள் கூறிநிற்ப, பாண்டியன் கண்டு இது என்ன என்னவென்று அதிசயமடைந்தான். வித்தியாதரர் இருவரும்பார்த்து, அரசனே யஞ்சற்கவென்று கையமர்த்தினர். பாண்டியன் கூறுவான். ஐயன்மீர்! நீவியர் யாவர்! உங்கட்குவந்த இப்பிறவிக் காரணம்யாது கூறுதிரென்ன, கலாதரன் கூறுவான். மதுரையரசே! நாங்களியாவரும் வித்தியாதரர் எம்பெயர் காந்திசாலி, கலாதரன் நாங்களிருவரும் மிக்கநட்புடையராய் மேருமலைச்சாரல்சென்றேம் ஆங்குத் துருவாச முனிவரது நந்தவனத்துட்புகுந்து மலர் முதலியன பறித்து விளையாடல்களைச் செய்தேம்.

துருவாச முனிவர்கண்டு மிக்க கோபமுடையவராய்ச் சொல்வார், சூரியகிரணமும் தென்றற்காற்றும் நுழையாத இச்சோலையின் கட்புகுந்து சிவபெருமானுக்குச்சாத்தி யருச்சித்தற்குரிய மலர்களை

யும் [illegible]களையும் பறித்தீர் ஆதலால் நீவிர் இருவரும் குதிரையாகவும் பூனையா[illegible]ப் பிறக்கக்கடவீர் என்று சாபமிட்டார். அதுகேட்டயாங்கள் அவர் திரு[illegible]களின் வீழ்ந்துவணங்கி மதிமுடிப்பெருமாற்கு அடியவராம் அண்ணலே! தேவரீர் இட்டசாபங்கழியுநாள் எப்போது, அதனை யருளல்வேண்டுமெனக் கமலவடியின் வீழ்ந்துவணங்கிக் கேட்டனர். இம்மலையை வலம்வந்தால் அப்பாவந்தீரும். அது அக்காலத்து அரசுசெலுத்தும் வச்சிராங்கத பாண்டியனாகிய உன்னாற் கிடைக்குமென்றனர். அதுகூறிச் சுப்பிரமணியப் பெருமான் மாங்கனிக்காக விநாயகருடன் உறழ்ந்து பூமியெல்லாஞ் சுற்றிவந்ததும் அதனைவாங்கிக்கொண்டது[illegible] ஆன சரிதங்களையும் கூறினார். அரசனே யாங்கள் ப[illegible]யுருவம் பெற்றேமென்றுரைத்து நீகுதிரையேறி வலம்வராமையால் உனக்கு இவ்வருத்தம் நேர்ந்த[illegible]ற்காகச் சிவபூசை மலைவலங்கள் செய்கவெனச் சென்றனர்.

வச்சிராங்கதன் இறைவன் திருவருளை வியந்துவணங்கித் துதித்துத் தனது குமாரனாகிய இரத்தினாங்கதனை யழைப்பித்து அவனுக்குத் தன்னதிகாரத்தைக் கொடுத்துத் தான் சிவபெருமானுக்குத் திருப்பணிகள்செய்து, கௌதமரது ஆச்சிரமத்தினொருபக்கலிற்பன்னசாலை யமைத்துக் கிரிப்பிரதக்கிணஞ் செய்யுநாளிற். பரமசிவன் றோன்றியருளினார். பாண்டியன் மிகவும் வணங்கித் துதித்து, ஐயனே! முழுமுதலே! தேவரீரை யடியேன் இயல்பாகவுள்ள அஞ்ஞானத்தன்மையால் அசுவத்திலேறிக் கிரிப்பிரதக்கிணஞ் செய்தேன். அக்குற்றத்தைப் பொறுத்தருளவேணுமென்று குறையிரந்து கேட்டான். சுவாமியருளிச்செய்வார். வழுதியே முற்பிறப்பில் நீ தேவேந்திரனாக இருந்தனை, அந்நாளில் நம்மையலட்சியஞ்செய்து குலிசாயுதத்தைப் பிரயோகித்தனை. அதனால் மனிதனாகப்பிறந்தாய். இப்போது நம்மைப் பூசித்தமையால் முன்போல இந்திரனாகித் தேவலோகஞ் சார்வாயாகவென் றருளி மறைந்தனர்.' பாண்டியன் இந்திரனாகிச் சுவர்க்க மடைந்தான் என்று கிரிவலம் வரும்பேற்றையெடுத்து மார்க்கண்டேயர் முதலாயினோர் கேட்பத் திருநந்திதேவர் உரைத்தருளினார்.

வச்சிராங்கத பாண்டியச் சருக்க வசனம்
முற்றிற்று.



துருவாச ரிஷி சாபத்தால் காந்திசாலி கலாதரனை புழுகு பூனையாகவும் குதிரையாகவும் ஜனித்துய்யுங்கால், வச்சிராங்கதன் புழுகு பூனையைத் துரத்தி அண்ணாமலை வர மேற்படி புழுகுபூனையும் குதிரையும் சாபம் நீங்கின —12



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அறுபது,

வச்சிராங்கத பாண்டியர் சருக்கம்.

கலி விருத்தம்.

தோடுகமழ் சந்தன வனத்திடை அளைந்தே
நீடுதமி ழின்சுவை யளைந்துநெடு நாளா
பாடுமயி லன்னவர்க ளன்னநடை போலே
வாடைமிசை தென்றல்புகும் வையைவள நாடு.

இ-ள். பூவிதழ் மணக்கும் சந்தனவனத்தின் மத்தியிற் சஞ்சரித்தது, என்றுமுள தமிழின்மதுரம் அளைந்துநெடுநாள் ஆடுகின்ற மயில்போன்ற பெண்கள் நடைபோல வாடைக்காற்றோடு சம்பந்தமாகத் தென்றற்காற்று வருகின்ற வையையாறு பொருந்திய பாண்டிநாடு. எ-று. (க)

வெவ்விருக ணாரிடையை மின்னென மருண்டே
செவ்விபெறு கேதகை செறிந்தலரு நாடு
நவ்வியனை யாரளக நள்ளிருள தென்றே
மவ்வலரு கேயலரும் வையைவள நாடு.

இ-ள். வெப்பமதைச்செய்யும் கண்களிரண்டையுமுடைய பெண்களினிடையைப்பார்த்து மின்னலென்று மயங்கி அழகுபொருந்திய தாழைகள் புஷ்பிக்கும்காடு, மான்போன்ற மாதர்கள் கூந்தலைப்பார்த்து இருளென்றுநினைத்து முல்லைச்செடிகள் கரையில் புஷ்பிக்கும் வையை ஆற்றினால்வளம்பொருந்தியபாண்டிநாடு எ-று.

அந்தவள நாடர்பெரு மானரசர் கோமா
னிந்திரன் முடிக்கிடை யெறிந்தவளை வீர
னிந்தையக றென்கயிலை நெற்றிவிழி போலே
* முந்திய திசைக்கரி முகத்தெழுதி வைத்தோன்.

இ-ள். அத்தன்மையாகிய பாண்டிவள நாட்டாருக்கு அரசன் அரசர்க்கரசனானவன் தேவேந்திரன்முடி சிதரும்படியாக வளையென்னும்ஆயுதம் பிரயோகித்தவன்; குற்றமற்ற தென் கைலாயத்துக்கு நெற்றிக்கண்போல் அட்டதிக்கிலுமிருக்கிறயானைகள் முகத்திற் றன்னுடைய மீனக்கொடியை எழுதிவைத்தவன். எ-று. ()

வேறு.

ஆக மாதி மதனி னழகினா
னாகமாதி தெளிந்த வறிவினான்

பாக நாரியர் பத்தியி னான்மொழிப்
பாக நாரியர் பற்றிய தோளினான்.

இ-ள். தேகமுதலானவைகளால் மன்மதன்போல் அழகுள்ளவன், ஆகமமுழுவதும் தெளிந்தவிவேகத்தையுடையவன், பாகத்திற் பார்வதியையுடைய சிவன்மேல் பக்தியுடையவன், பாகுபோல் மதுரமாகிய சொற்களையுடைய ஸ்திரீகள் விரும்பாநின்ற தோளையுடையவன். எ-று. (௪)

வான கத்திலு மண்ணிலு மெண்ணிய
வான கத்திலும் வைத்த புகழினான்
கான கத்தொளி யார்சடைக் கண்ணிதன்
கான கத்தொளி யாமனைக் காப்பவன்.

இ-ள். தெய்வலோகத்திலும், பூமியிலும் எண்ணத்தக்க இமயபருவதத்தினிடத்திலும், தன் கீர்த்தியை நாட்டினவன்; சுவாமி தரிக்கின்ற சடைக்காட்டினிடத்தில் பிரகாசிக்கும் ஆத்திமாலையினது வாசனையைத் தன்மனத்தில் நினைத்துக்கொண்டு பூமியைக் காக்கின்றவன். எ-று. (௫)

தங்க ணாயக னைத்தலை சூடிய
வெங்க ணாத ரடித்தலை யேத்தினான்
பொங்கு நன்றி யறிந்தது போற்றுவா
ரிங்கி வற்கிணை யாவரு மில்லையே.

இ-ள். தங்குலத்துத் தலைவனாகிய சந்திரனை முடியில் தரித்த எங்கள் நாதரது பாதங்களைத் தலையினால் வணங்குகிறவன் மிகுந்த நன்றியையறிந்து அதைப் பாதுகாக்கின்றவர்களில் இவனுக்கொப்பானவரொருவருமில்லை. எ-று. (௬)

---

* முந்தியதிசைக் கரிமுகத்து எழுதிவைத்தோன் என்பதற்கு எல்லாத் திசைகளிலுஞ்சிறந்த கீழ்த்திசை யானையாகிய ஐராவதத்தின் முகத்தில் அத்திசைக் கிறைவனான இந்திரனைத் தன் வலியால்பொருதுவென்றமை எழுதிவைத்தவனென்னலுமாம்.

பத்து வார்திசை மீறும் படர்புகழ்
வித்து வாரி யிறைக்கின்ற மேன்மையோ
னத்து வாரியில் வாரினர் நல்கிய
முத்து வாரி யிறைத்திடு முன்றிலான்.

இ-ள். நீண்டபத்துத்திக்கிலும்பரவக் கீர்த்தியாகியவிதையை வாரி யிறைக்கின்றதன்மைபோல், சங்கங்கள் தவழ்கின்ற கடலிற் குளித்து வாரிவந்தவர்கள்கொடுத்த முத்துகள் இறைத்துக் கிடக்கின்ற முற்றத்தையுடையவன். எ-று. (௭)

ஆட லர்ந்த வரசன் புகழ்க் கடற்
கோடு கின்ற கலங்கதி ரோட்டுதேர்
கூடு செக்கர் பவளக் கொடிகளே
நீடு திக்கினர் நீரின் மனிதரே.

இ-ள். வெற்றியமைந்த அரசன்கீர்த்தியாகியகடலில் ஓடுகின்ற கப்பலானது சூரியனோடுகிற தேர் கூடியசெக்கர்வானமே அக்கடலிற்படர்ந்த பவளக்கொடிகள் நீண்ட எட்டுத்திக்கிலுமுள்ள மனிதர்களே அக்கடலிற்சஞ்சரிக்கும் நீர் மனிதர். எ-று. (௮)

எச்ச ராசர முங்களிப் பெய்தவே
நச்ச ராவுல காளு நலத்தினன்
கச்ச ராவு கழற்பொலி காலினன்
வச்சி ராங்கத னென்றொரு மன்னவன்.

இ-ள். அசையும்பொருள் அசையாப்பொருள்களாகிய எவையும் சந்தோஷத்தையடைய விஷத்தையுடைய ஆதிசேடன் தாங்கும் உலகத்தை ஆளும் நன்மையுடையவன்; கச்சு அராவிய வீரகண்டாமணியைத்தரித்த காலையுடையவன் வச்சிராங்கதபாண்டியனென்றொருவனிருந்தான். எ-று. (௯)

படையிற் றோற்ற வரசரைப் பல்சிறை
யிடையிற் போட்டன னென்கை வியப்பதோ
கொடையிற் றோற்றிடுங் கொண்டலை யுஞ்சிறை
யிடையிற் போட்டன னென்ற திருக்கவே.

இ-ள். அவன் யுத்தத்திற்றோற்ற அரசர்களைச் சிறையிலிட்டானென்பதென்ன ஆச்சரியம்! தன்கொடைக்குத்தோற்றமேகத்தையுஞ் சிறையிற்போட்டானென்றது இருக்கும்போது. எ-று. ()

நாட்டு மவ்வர சனொரு நாளிலே
வேட்டை யாட விரும்பின னாகியே
மூட்டு சேனை கரிபரி மொய்த்திட
வோட்டி னான்பரி யுத்தர திக்கிலே.

இ-ள். இப்படிச் செயத்தைகாட்டிய வச்சிராங்கதபாண்டியன் ஒருநாள் வேட்டையாடும்படி மனத்திலெண்ணி யானை, குதிரை, சேனைகள்சூழக் குதிரையை நடத்திக்கொண்டு வடதிசையில் நடந்தான். எ-று. (௧௧)

துங்க வாம்பரி மீதிவன் றேறலு
மங்கை வேழ மகன்றகன் றோடின
திங்க ளின்குலச் செல்வனென் றஞ்சியே
யெங்கு மோடு மிருட்கண மென்னவே.

இ-ள். சந்திர வமிசத்திற்பிறந்த அரசன் தாவும் சிறந்த குதிரைமேலேறினமாத்திரத்தில் சந்திரனைக்கண்ட இருட்கூட்டம்போல் துதிக்கையுடைய யானைக்கூட்டங்கள் அஞ்சியோடின. எ-று

வீறு மம்புலி யின்குல மேன்மையான்
வீறு மம்புலி யின்குலம் வீட்டினு

னாறி லொன்று கடமைகொண் டாள்பவ
னாறி லொன்று கடமை கொண் டானரோ.

இ-ள். சிறப்புள்ள அம்புலியென்னும் பேரினையுடைய சந்திர குலத்திற்பிறந்த மேன்மையினால் இறுமாப்படைந்த அழகிய புலிகளைக்கொன்றான்; ஆறிலொருகடமை வாங்கிக்கொண்டு ஆள்கிறவன் வழியில்நேரிட்ட கடம்பைமிருகங்களைக் கொன்றான். எ-று.

சேர மானினந் தன்னைச் சிதைத்தவன்
சேர மானினந் தன்னைச் சிதைத்தனன்
வார மாய்கலைச் சங்கம் வளர்த்தவன்
வார மாய்கலைச் சங்கம் வளைத்திட்டான்.

இ-ள். சேரமானெனனும் பெயரையுடைய சேரனது சேனையைசெயித்தவன் ஒருமிக்க மானினங்களைக்கொன்றான்; அன்போடு ஆராய்கின்ற வித்தியாசங்கத்தை வளர்த்தவன்; அநேக கலைமான் கூட்டங்களை வளைத்துக்கொண்டான். எ-று. (௧௪)

சோனை யோன்மத மாரி சொரிந்திடும்
யானை தேர்பரி யாண்முத லாகிய
தானை பின்னிடத் தான்றனி வாசிமேற்
கான நாவியைக் கண்டுதொ டர்ந்தனன்.

இ-ள். சோனை மழைபோல் மதத்தைச் சொரிகின்ற யானை, தேர், குதிரை, காலாள் இவர் பின்னிட்டுப்போகத் தானொருவனாகவே குதிரைமேற்கொண்டவனாய் ஒருபுழுகுபூனையைத் தொடர்ந்தான். எ-று. (௧௫)

அந்த நாவி யகன்றரு ணாசலத்
துந்தி யேவல மாய்விரைந் தோடவு
முந்து வாசி யதன்பின் முடுக்கினான்
சந்த நாவி விழுந்தது கண்முனே.

இ-ள். அப்படி அரசனாலேதுரத்தப்பட்ட புழுகுபூனை சீக்கிரத்தில் அருணாசலத்தை வலமாகச்சுற்றி யோடினவளவில், வேகத்தோடுங் குதிரையைநடத்தினான்; அந்தப்புழுகுபூனை (அவன்) கண்முன்னேவந்துவிழுந்தது. எ-று. (௧௬)

பச்சை நாவி பருகினர் போல்விழுந்
தச்ச நாவிதன் னாகம் விடுத்தெதில்
விச்சை வேந்தர் துதிக்க விமானமே
லிச்சை மேனிகொண் டேகி யெழுந்ததே.

இ-ள். நாவியாகியவிஷம் சாப்பிட்டவர்கள்போல் விழுந்துபயத்தையுடைய புழுகுபூனைதன்தேகத்தைவிட்டு வித்தியாதரர் முதலானவர்கள்துதிக்க விமானத்தின்மேல் திவ்வியதேகம்பெற்றுக் கொண்டெழுந்தது. எ-று. (௧௭)

மேவு மந்த வரசன் விழுந்திட
மாவும் வீழ்ந்து வடிவு தனைத்துறந்
தோவி யர்க்கெழு தாவுருக் கொண்டொரு
பூவி மானம தேறிப் பொலிந்ததே.

இ-ள். தற்செயலாய் ஏறின அரசன்விழவே குதிரை இடறிவிழுந்து தன்தேகம்விட்டுச் சித்திரக்காரரும் எழுதக்கூடாததிவ்வியரூபம்பெற்று ஒருபுட்பவிமானம் ஏறிப்பிரகாசித்தது. எ-று. ()

கைவி லங்கனை யான்பரிக் காலின்வீழ்ந்
தவ்வி லங்கை யரசனைப் போலவே
செவ்வி லங்க லடியினிற் றேம்பினான்
வெவ்வி லங்குட னோடின் விழார்களோ.

இ-ள். யானைபோல்பவனான வச்சிராங்கத பாண்டியன் குதிரைக்காலினருகில்விழுந்து, அந்த இலங்காபுரியையாண்ட இராவ

ணன்போல் அருணாசலத்தினடியில் வருந்தினான்; மிருகத்தின்பின் ஓடினால் யார்தான்விழார்கள். எ-று. (௧௯)

பாய்ந்த நாவி பரிப்பெயர் போய்ப்பழங்
காந்தி சாலி கலாதரப் பேர்படைத்
தாய்ந்த நண்பொ டருவியங் கண்ணராய்
மோந்த ணைந்து மகிழ்ச்சியின் மூழ்கினார்.

இ-ள். பாய்ந்து செல்கின்ற குதிரை நாவி யென்னும் பெயர் போய் பழைய காந்திசாலி கலாதரனென்கிற பேர்படைத்தவராய் மிக்க நண்பராய் அருவிபோல் கண்ணிலிருந்து நீர்பெருக ஒருவர்க்கொருவர் கட்டியணைத்து உச்சிமோந்து சந்தோஷத்தினால் முழுகினார்கள். எ-று. (௨௦)

அன்ன வீரர்க ளவ்விடை நின்றுழி
யொன்ன லர்க்கு முறுந்துய ருய்த்திடு
மன்னர் மன்னவன் மற்றிது வந்தவா
றென்ன வென்னவென் றேங்கி யிரங்கினான்.

இ-ள். அவ்வீரர்கள் அவ்விடத்தில்நின்றபோது தன்சத்துருக்களுக்குவந்த துக்கத்திலும் அதிகமாய் வருந்துகின்ற பாண்டியன் இதுவந்தவகையென்னவென்று இரங்கிவருத்தமுற்றான். எ-று.()

விஞ்சை மன்னர் விமானத்த ராகியே
தஞ்ச மில்லவன் றன்புடை சூழ்ந்துநீ
யஞ்ச லஞ்சலென் றங்கை யமைத்தனர்
பஞ்ச வன்மகிழ் வோடும் பகருவான்.

இ-ள். வித்தியாதரர்களாகிய இருவரும் விமானத்திலேறிக்கொண்டு தஞ்சமில்லாத பாண்டியனிடத்தில்வந்து நீபயப்படவேண்டாம் பயப்படவேண்டாமென்று கையமர்த்தினார்கள்; அப்போது பாண்டியன் மிகவுஞ்சந்தோஷத்தோடு சொல்வான். எ-று. ()

நீதி யாய்வரு நீரெவ ரித்துயர்க்
காதி காரணம் யாதில் வருந்துயர்
போது மாறெது போதியு மென்றவ
னோத வோதக் கலாதர னோதுவான்.

இ-ள். நீதிபொருந்திய நீங்களிருவரும்யார்? உங்களுக்கு இப்படிவந்த துக்கத்திற்குக் காரணமென்னவென்றான்? அது சென்றது எவ்விதத்தினால் சொல்லுங்களென்றுகேட்க, கலாதரனென்பவன் சொல்லுவான். எ-று. (௨௧)

வாய்ந்த சாலி மதுரையின் மன்னனே
யேய்ந்த விஞ்சையர் யாங்க ளிவன்பெயர்
காந்திசாலி கலாதர னென்பெய
ராய்ந்த நண்பின ராய்விளை யாடினோம்.

இ-ள். நெல்விளைகின்ற மதுரைக்கு அரசனே? நாங்கள் ஒய்பற்றவித்தியாதரர்கள், இவன்பேர்காந்திசாலி, என்பெயர்கலாதரன்நாங்களிருவரும் மிகுந்தநேசராய்விளையாடிக்கொண்டிருந்தோம்.

மார வேளும் வசந்தனும் போலவே
யார வேபிரி யாதுறை நாளிலே
சேர வூழ்வினை சென்று தொடர்ந்திட
மேரு மால்வரைச் சாரலின் மேவினோம்.

இ-ள். மன்மதனும் அவன்சிநேகனாகிய வசந்தனும்போல, ஒருவர்க்கொருவர் பிரியாமல்வாசஞ்செய்யுநாளையில் முன்செய்த ஊழ்வினைவந்தடைய மகாமேருவின்சாரலில்போய்ச் சேர்ந்தோம். ()

வேறு.

மாற்சரிய மிக்கதுரு வாசமுனி வாழு
மாச்சிரம மேலருகி லந்தமுனி தானே.

நீர்ச்சொரிய நெஞ்சுருகி நின்றமர மெல்லாம்
பூச்சொரியு நந்தவன மீதினிடை புக்கேம்.

இ-ள். கோபமிகுந்த துருவாசரிஷிவாழ்கின்ற ஆச்சிரமத்தினருகில் அந்தரிஷி மனமுருகித் தண்ணீர்சொரிய, வளர்ந்த விருட்சங்களெல்லாம் புட்பங்களைச் சொரியும் நந்தவனத்திற் புகுந்தோம். எ-று. (௨௬)

புக்கவ னத்திற்சிறு புதற்களை மிதித்தான்
மிக்கவினை யேனுமதின் மென்மலர் பறித்தே
னக்கணமு ணர்ந்துமுனி யங்கிவிழி யாலே
கக்கவொளி மிக்கசடை கட்டவிழ வந்தான்.

இ-ள். அப்படிப் புகுந்தவனத்தில் இக்காந்திசாலி அங்குள்ள சிறுபுதர்களைமிதித்தான், மிகுந்தவினையையுடைய நானும் அவைகளிலிருக்கும் மென்மையாகிய புட்பங்களைப்பறித்தேன், அக்கணமே துருவாசரிஷி அறிந்துவிழிகளால் நெருப்பைக்கொட்டிக்கொண்டு சடையவிழ்ந்துவிழக் கோபித்துவந்தார். எ-று. (௨௭)

முத்துமணி யாமென முகத்தினில் வியர்ப்ப
வித்துருமம் வைத்தனைய மெல்லிதழ் துடிப்ப
வுத்தரியம் வீழ்வதை யடிக்கடி யுயர்த்திச்
சித்திர வழற்பொறி தெறிக்கவிவை சொன்னான்.

இ-ள். முத்துகள்போல் முகத்தில்வேர்வையுண்டாகவும், பவளம்போன்ற மிருதுவாகிய இதழ்துடிக்கவும், நழுவிப்போகின்ற வஸ்திரத்தையடிக்கடி உயர்த்திக்கொண்டு சித்திரமாகிய அக்கினிப்பொறிதெறிக்க இவைகளைச் சொன்னார். எ-று. (௨௮)

செந்தபனர் தங்கதி ருறாதுசிறு காலு
நந்துமறு காலுமொரு காலுமிதை நண்ணு

391

முந்திலையு திர்ந்துபுல ராதுமுடி வெய்தா
திந்தவன மீதொருவ ரெய்தவொளி தாமோ.

இ-ள். சிவப்பாகிய சூரியகிரணமும் என்னுடைய பயத்தினாலே வரக்கூடாது; தென்றற்காற்றும், வண்டுகளும், ஒருபோதும் இவ்வனத்தை யடையமாட்டாது; இலையுதிராது: வாடாது! நாசமடையாது; இவ்வனத்தில் ஒருவர்வருவதற்கு எளிதோ. எ-று. ()

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

சேவினார்க் கினிய பூசைக்
கனிமலர் செலுத்துங் காவிற்
பாவிகாள் புகுந்தென் கோபக்
கனலிடைப் பஞ்ச தானீர்
மேவிய துரங்க மாகென்
றிவற்குரை விடத்தை யீந்தா
னாவியாப் பிறப்பா யென்று
னாண்மலர் பறித்த வென்னை.

இ-ள். இடப வாகனராகிய சிவபிரானுக்கு இனிமையாகிய பூசைக்காகச் சாத்தும் புட்பங்கள் இருக்கும் சோலையில் பாவிகளே! நீங்கள்புகுந்து என்னுடைய கோபமாகிய நெருப்பினிடத்தில் அகப்பட்டுப் பஞ்சானீர்கள், குதிரையாய்ப் போவென்று விஷம்போல் இக்காந்திசாலிக்குச் சாபங்கொடுத்தார்; புட்பம் பறித்த என்னைப் புழுகுபூனையாய்ப் போவென்று சபித்தார் துருவாசரிஷி. எ-று.

கோபமே தவமதாகப்
பலித்திடுங் கொடியோ னிட்ட
சாபமேல் வரவே நாங்க
ளிருவருந் தளர்ந்து ஞானத்

தீபமே யருளே யன்பர்
செல்வமே யெனச்சென் றேத்திப்
பாவமே விடுமிச் சாப-
மொழியுநாள் பகர்தி யென்றோம்.

இ-ள். கோபமே தவமாகப் பலித்த பொல்லாத இருடியிட்ட சாபம் எங்கள்மேல்வர, நாங்களிருவருந் தளர்வடைந்து ஞானவிளக்கே! கிருபையே! பத்தருடைய செல்வமே! என்று வணங்கிப் பாவம் உண்டானதினால் எங்கள்மேல் வந்தசாபம் ஒழியும்நாள்என்றைக்குச்சொல்லுமென்று கேட்டோம். எ-று. (௧௧)

முனிவது தவிர்ந்து சாப
முனிவனு மொழிவா னிந்தத்
தனிவருஞ் சாபஞ் சோணா
சலத்தினை வலஞ்செய் தாற்போம்
மனிதருஞ் சுரரும் போற்று
மலைவலம் புரிகை தானு
மினிமையாம் பாண்டி நாட்டி
னிறைவனா லெய்து மென்றார்.

இ-ள். துருவாசரிஷிக்குக் கோபம்நீங்கி நானிட்ட இவ்வொப்பற்றசாபம் திருவண்ணாமலையை வலமாகவந்தாற் போகும், மனிதரும் தேவரும் வணங்கும் அந்த மலையைப் பிரதக்ஷிணஞ் செய்தல் சிறந்தபாண்டியதேசத்தரசனாற் கிடைக்குமென்றார். எ-று. (௧௨)

என்றொரு கதையுஞ் சொல்வா
னரியழற் கிரிய தாக
நின்றவெம் பிறைவன் முன்னா
ணெடுவனக் கடவு ளீந்த

மன்றல்சேர் கனியைத் தன்சே
யிருவரும் வருந்திக் கேட்க
வின்றுல கனைத்துஞ் சூழ்ந்தோர்க்
களிப்பமென் றிறையுஞ் சொன்னான்.

இ-ள். இப்படிச்சொல்லி ஒருகதையுஞ் சொல்வார்; அக்கினிமலையாய்நின்றசுவாமி, முன்னே வருணன்கொடுத்த வாசனைபொருந்திய மாம்பழத்தைத் தமது பிள்ளைகளாகிய விநாயகர், சுப்பிரமணியர் இருவரும் வருந்திக்கேட்க, இன்றைக்குள் உலகமுழுதுஞ் சுற்றிவந்தவர்க்கு இப்பழங் கொடுப்போமென்றுசொன்னார். எ-று.

கந்தனு மயிலி லேறிக்
கடலுல கனைத்துஞ் சூழ
முந்தினான் கரிய வானை
முகத்தவ னெழுந்தெல் லோர்க்குந்
தந்தையாந் தனது தாதை
தனைவலம் புரிந்தா னந்தை
மைந்தனைத் தழுவி வேண்டும்
வரத்துடன் கனியு மீந்தான்.

இ-ள். சுப்பிரமணியரும் மயில்வாகன மேறிக்கொண்டு சப்தசமுத்திரஞ்சூழ்ந்த பூமிமுழுதுஞ்சுற்றிவந்தார்; யானைமுகமுடைய விநாயர் எழுந்திருந்து சுவாமிதானே உலகமாயிருக்கிறார், அவரைச் சுற்றிவந்தால் உலகத்தைச் சுற்றிவருதலாகுமென்று யார்க்குந் தகப்பனாகிய தம்முடைய தகப்பனைப் பிரதக்ஷிணஞ்செய்தார்; சுவாமி மகனைத் தழுவிக்கொண்டு வேண்டியவரங்களும் பழமுங் கொடுத்தார். எ-று. (௧௪)

வேலினான் கடிது மேவிக்
கனிதர வினவத் தம்மைக்
காலினால் வலமா யிந்தக்
கரிமுகன் வந்தா னேழு

ஞாலமே வலஞ்செய் தாலும்
பலபல தவஞ்செய் தாலும்
பாலகா நமைச்சூழ் தெய்வப்
பலத்தினுக் கிணையோ பார்க்கின்.

இ-ள். சுப்பிரமணியர் சீக்கிரத்தில் பூமியைச்சுற்றிவந்துபழங் கேட்கச் சுவாமி நம்மை விக்கினேசுரன் காலால்நடந்து சுற்றிவந்தான், ஏழுலகத்தை வலஞ்செய்தாலும் பலபலவாகிய தவத்தைச் செய்தாலும் மகனே! நம்மைச் சுற்றிவரும்பலனுக்குஒப்பாகுமோ பார்க்குமிடத்தில். எ-று. (௧௫)

செம்மலை யுருவா நம்மைத்
தினம்வலம் புரிந்தோர் வேதன்
றம்மினு மதிக மாயோன்
றனக்குமே லதிகம் பார்க்கி
னும்மினு மதிக ரிந்த
வுமையினு மதிகர் மைந்தா
வெம்மினு மதிக மென்று
னெவர்க்குமே லதிக மானோன்.

இ-ள். சிவப்பான மலையுருவமாகிய நம்மை தினம் வலம் வந்தவர்கள் பிரமனிலும் அதிகராவார்; விட்டுணுவிலும் அதிகராவார்; பார்க்கில் உம்மிலும் அதிகராவார்; பார்வதியினு மதிகராவார் மகனே? எம்மைப்பார்க்கிலும் அதிகராவர் என்றார். எல்லார்க்கு மேலாகிய சிவபிரான். எ-று. (௧௬)

மாசிலா நமது மேனி
வரைதனக் கமரர் தாமும்
பூசனை புரிய மாட்டா
ரதைவலம் புரிந்த பேருக்

காசையா யளிக்கும் பூசை
நமக்கினி தளிக்கும் பூசை
கூசமா றிழைத்த தீங்கு
நமைச்செயுங் கொடுமை யாகும்.

இ-ள். குற்றமில்லாத நம்முருவமாகிய இம்மலைக்குத் தேவர்களும் பூசைபண்ண மாட்டார்கள்; அதை வலமாகச்சுற்றி வந்தவருக்கு ஆசையுடனே செய்கிற பூசை நமக்கு இனிதாகச் செய்கிற பூசையேயாம்; அவர்களுக்குக் கூசும்படி செய்த தீமை நமக்குச் செய்த தீமையேயாமென்று சுவாமி சுப்பிரமணியருக்கு அருளினார். எ-று. (௧௭)

என்பது மொழிந்தா னந்த
னெனச்சொலி முனிவன் போனான்
பின்பதன் படியே நாவி
புரவியாய்ப் பிறந்தோ மின்று
தென்புவி யுடையாய் நின்னாற்
றிருமலை வலமும் பெற்றே
மின்பொலி பழைய கோலம்
படைத்தெழில் விமானத் தானோம்.

இ-ள். இப்படிச்சுவாமி சொன்னாரென்று துருவாசரிஷிசொல்லிப்போனார்; பின்பு அப்படியே குதிரையாகவும் காவியாகவும் பிறந்தோம்; பாண்டியதேசத்தையுடைய அரசனே? இன்றைக்கு உன்னால் திருமலையைப் பிரதட்சணஞ்செய்தோம்; மின்னல்போல் பிரகாசிக்கின்ற பழைய உருவம்பெற்று விமானத்தில் ஏறினவர்களானோம். எ-று. (௧௮)

எங்கடம் வாவி துன்பா
லிடுக்கண்வந் தடைந்த தின்று
வெங்கனல் வரையை மாவின்
மிசைவலம் வருகை யாலே

பொங்கிய தநுவும் பூசை
புரிந்திடிற் போமென் றோதித்
தங்களூர் புகுந்தார் காந்தி
சாலியுந் தானு மாக.

இ-ள். எங்களுடைய சரித்திரமிது; அக்கினி சொரூபமாகிய இம்மலையைக் காலினால் வலஞ்செய்யாமல் குதிரையிலேறி வலஞ்செய்த படியினா லுனக்குத் துன்பம்வந்துநேர்ந்தது; அதுவுஞ்சுவாமியைப் பூசைசெய்தாற் போமென்று சொல்லிக் காந்திசாலியுங் கலாதரனுந் தங்களூருக்குப் போனார்கள். எ-று. (௩௯)

வேழமும் பரியுந் தேரும்
வீரருஞ் சுவடு நாடிச்
சூழமந் திரிக ளோடுஞ்
சூழ்ந்தனர் துயரந் தீர்ந்தான்
றாழையின் கமுகின் காடுந்
தவளவான் கதிரைத் தீண்டும்
வாழையுங் கரும்பின் சாற்றின்
வளர்ந்திடும் வையை நாடன்.

இ-ள். அதன்பின்பு யானையும், குதிரையும், தேரும், காலாள்களும், அடிபற்றிக்கொண்டு மந்திரிகளுடனே அரசனைசுற்றிக்கொண்டார்கள்; அப்பொழுது வியசனம் நீங்கினான்; தென்னமரங்களும் கமுகவனமும் சந்திரனைத் தழுவும் வாழைமரங்களும் கரும்பின்சாற்றினால் வளர்ந்திடும் பாண்டிய தேசத்துக்கரசனாகிய வச்சிராங்கதபாண்டியன். எ-று. (௪௦)

அரதனாங் கதனா மைந்தன்
றனைக்கடி தழைப்பித் தாதி
பரதனா மெனவிப் பாரைப்
புரவெனப் பகர்ந்தான் சில

397

விரதனாங் கதனைக் கேளா
வதன்முனம் விடைபெற் றானை
யிரதநான் மருங்குஞ் சூழப்
பதிபுகுந் திறைமை செய்தான்.

இ-ள். வச்சிராங்கத பாண்டியன் தன்பிள்ளையாகிய இரத்தினாங்கத பாண்டியனைச் சீக்கிரத்தில் வரவழைத்து, முன்னாலுமது வமிசத்திற் பிரபலனாயிருந்த பரதன்போல் இராச்சியத்தைக் காப்பாற்றென்று சொன்னான்; அவ்வார்த்தையைக் கேட்பதற்குமுன்னமே விடைபெற்றுக்கொண்டு யானைதேர் முதலாகிய சேனைகள் சூழ மதுரைக்குப்போய் இராச்சியபரிபாலனஞ் செய்தான் இரத்தினாங்கதன். எ-று. (௪௧)

முறையினா விறையின் வந்த
கனகமு முத்துந் தெவ்வர்
திறையினா லளந்த பொன்னுந்
தினந்தொறுங் களிற்றின் மேலே
யிறைவனாந் தனது தாதைக்
களித்திட விறைவன் வேணிப்
பிறையினாற் கினிய பூசை
திருப்பணி பெரிதுஞ் செய்தான்.

இ-ள். நியாயமாக ஆறிலொரு கடமைகொண்ட திரவியமும், கடலிற் குளித்து வாரிவந்த முத்துக்களும், சத்துருக்களால்திறையிட்டபொன்னும், தினந்தோறும் யானையின் மேலேற்றி அரசனாகிய தன் தகப்பனுக்கு அனுப்புவிக்க, வச்சிராங்கத பாண்டியன் சடையில் சந்திரனைத் தரித்த சுவாமிக்கு இனிமையாகிய பூசை திருப்பணி பெரிதாகச் செய்தான். எ-று. (௪௨)

செய்தபின் றவம தாகிக்
கவுதமாச் சிரமத் தோர்பா
லெய்திய பன்ன சாலை
யியற்றிநம் பாவந் தீர்க்கு
மைதவழ் மிடற்றாற் கன்பாய்
மலைவலஞ் செயுநா ளந்தக்
கைதவற் கெதிரே வந்தான்
கைதவர்க் கெதிரே வாரான்.

இ-ள். அருணாசலேசருக்குத் திருப்பணியும் பூசை முதலானவைகளும் சிறப்பாக நடந்தபின்பு, தவஞ்செய்வதற்குநினைந்துகௌதமருடைய ஆச்சிரமத்தி லொருபக்கத்திற் சேர்ந்து பர்ன சாலை கட்டி நம்முடைய பாவத்தைத் தீர்க்கின்ற நீலகண்டமுடைய சுவாமிக்கு அன்பாய்க் கிரிப்பிரதட்சணஞ் செய்கின்றநாளில், கைதவனாகிய பாண்டியனுக் கெதிரே தோன்றினார், வஞ்சம் பொருந்திய மனத்தை யுடையவர்க ளெதிரே வராத பரமசிவன். எ-று. (சஉ)

அணிச்சிறு பிறையும் போத
வருள்பொழி விழியு நீல
மணிக்கறை மிடறு நாலு
புயங்களு மலர்க்கை மானுங்
கணிச்சியும் விடையின் மீதி
லிருப்பதுங் கண்டென் பாவப்
பிணிச்சிறை விடுப்ப தென்றோ
வெனச்சொலிப் பெரிதுந் தாழ்ந்தான்.

இ-ள். அழகு அமைந்த சிறிய சந்திரனையும், மிகவும் கருணை பொழிகின்ற கண்களையும், நீலமணிபோல்பிரகாசிக்கின்றகண்டத்தையும்,நான்குகைகளையுமலர்போன்றகையில்மானும்மழுவுமுடை-

யவராய் ரிஷபவாகனத்தின்மேலிருப்பதுபார்த்து என்னுடையபாவப்பிணிப்பு என்னைவிடுவது என்றைக்கோவென்றுசொல்லிமிகவும் பாண்டியன் வணங்கினான். எ-று. (சங)

397

வேறு.

அண்ணாமலை யுடையாய் மழ
விடையா யணி சடைசேர்
தண்ணாமலை யுடையா யெமை
யுடையாய் நுதல் தழுவுங்
கண்ணாமலை வுடையா வினை
கடவா ரறி வறிதற்
கொண்ணாமலை யுடையா யுமை
யுண்ணாமுலை தலைவா.

இ-ள். அண்ணாமலையென்னும்பெயரையுடையவரே! இளமையாகிய ரிஷபவாகனத்தையுடையவரே! அழகுள்ளசடையில் குளிர்ந்த கங்கையையுடையவரே! எங்களையாட்கொள்ள. உடையவரே! நெற்றியிற் கண்ணுடையவரே! மயக்கமுடையவரும் பாவங்களைக் கடக்காத பாவிகளறியப்படாத கைலாயத்திலிருக்கின்றவரே! உண்ணாமுலையாகிய பார்வதியினது தலைவரே. எ-று. (சச)

மையாகிய வினையே னுனை
யொருமா வினில் வலமாய்ச்
செய்யாதது செய்தே னிது
தீரென் றுரை செய்தான்
பொய்யா தவன் மொழிகின்றது
கண்டே யருள் பொழிவுற்
றையானன முடையான் மழ
விடையா னிவை யருள்வான்.

இ-ள். தீவினையையுடையவனாகிய நான் உம்மை ஒருகுதிரையிலேறி வலமாகவந்து நான் செய்யத்தகாத காரியம் செய்ததனைப் பொருத்தருளவேண்டுமென்று பொய்யில்லாத பாண்டியன் சொல்ல, அதைக்கேட்டு கிருபையுண்டாகி இளமைபொருந்திய ரிஷபவாகனராகிய ஐந்து திருமுகத்தையுடைய பரமசிவன் அருளிச்செய்தார். எ-று. (௩௮

மன்னாமக பதிநீ யெமை
மதியா தொரு குலிச
மந்நாள்விட லுற்றா யத
னாலே நரர் வடிவா
யின்னாதன பெற்றா யினி
யிமையோ ரதி பதியாய்ப்
பொன்னாடனே யென்றே வரம்
பொழிந்தே யிறை மறைந்தார்.

இ-ள். வச்சிராங்கத பாண்டியனே! நீ பூர்வஜன்மத்தில் தேவேந்திரனாயிருந்தாய், அந்நாளில் நம்மையலட்சியஞ்செய்துவச்சிராயுதத்தை நம்மேல் பிரயோகஞ்செய்தாய், அதனால் பூமியில்மனிதனாகப்பிறந்து துன்பமடைந்தாய், அதன்பின்பு (இப்போதுநீ) நம்மைப்பூசித்து வலம்வந்தபடியினால் இனித்தேவர்களுக்கு அதிபதியாகிய தேவலோகத்துக்குப் போவென்று வரங்கொடுத்து சுவாமி மறைந்தார். எ-று. (௩௯)

அருணைப்பதி வள மிப்படி
யருணா புரி நினைவோர்
மரணத்துக ளடையார் சிவன்
வடிவா குவ ரென்றான்

கருணைக் கொரு கடலேபர
கதி பெற்றன னென்றே
சரணத்திடை பணிந்தா னமன்
றனை வாட்டிய தவத்தோன்.

இ-ள். அருணாசலத்தின் வளமையிப்படி, இத்தலத்தைநினைப்பவர்கள் மரணத்துன்பம்பொருந்தாமல் சிவனுடைய ரூபம்பெறுவார்களென்று நந்திதேவர்சொல்ல, எமன்வாடும்படிச்செய்த தவமுடையமார்க்கண்டேயர்கேட்டு கிருபாசமுத்திரமானவரே! உம்மால் பரகதியடைந்தேனென்று அவர்பாதத்திலே வணங்கினார். எ-று. ()

இக்காதையின் பொரு ளானதோ
ரெழுத் தாகிலுந் தெளிந்தோர்
தக்காருடன் படித்தோர் சிவ
சாயுச் சியம் பெறுவார்
முக்காலமு மிது கற்றவர்
வினவிப் பொருண் முடிப்பார்
புக்கார்சிவ கதி யென்பது
புதுமைப் பொரு ளன்றே.

இ-ள். இக்கதையில் ஒரு எழுத்தினது பொருளாயினும் அறிந்தோர்களும், பெரியோர்களோடு படித்தவர்களும், சிவசாயுச்சியமடைவார்கள்; திரிகாலத்திலு மிதைக் கற்றவர்கள் இதின் அருத்தத்தைக்கேட்டு முடிப்பவர்கள் சிவகதியிற் சேர்வார்களென்பது ஆச்சரியமாமோ. எ-று. (௪௧)

ஆறாவது
வச்சிராங்கதபாண்டியச் சருக்கம்
முற்றிற்று.
ஆ திருவிருத்தம் - ௪௰௧.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வல்லாளமகாராசச் சருக்க வசனம்.

அன்பரிதயத்து விளங்கும் மார்க்கண்டேயமுனிவரே! வச்சிராங்கத பாண்டியனாரது சிறப்பை யெடுத்துக் கூறினேம். இனி வல்லாள மகாராசனுக்குச் சிவபெருமான் பெறற்கரிய பிள்ளையாக வந்த சரிதத்தைச் சொல்கின்றேமென்று திருநந்திதேவர் திருவாய் மலர்ந்தருளுகின்றார்.

திருவருணைப்பதியின்கண் சத்தியம், நற்குணம், தன்னுயிரை மன்னுயிர்போலக்காத்தல், சிவபத்தி முதலியவற்றிற் சிறந்த சேரகுலத்தரசனாகிய வல்லாளமகாராசனிருந்தான், அவன் தன் மனைவியையன்றி மற்றைப்பெண்களையெல்லாம் தாய்மார்போல நினைத்தொழுகுவோன். அவன் புலியும் பசுவும் ஓர்துறையிலே நீர் குடித்திருக்கவும், அந்தணர்மறவாது வேதாத்தியயனஞ்செய்யவும், மாதமும்மாரிமாறாதுபொழியவும் அரசாட்சிபுரிந்துவருங்காலத்திலே தனக்குப்பின் தன்பெயர்கூறுதற்குப் பிள்ளையில்லையேயென்று மிகவும்வருத்தமுற்றான். மந்திரிகளைநோக்கி அமைச்சர்காள்! சிவபூசையிற் குறைவுநேர்ந்ததோ? உலகநீதியிற் பிழையிற்றதோ? வேறெவற்றிற்குற்றங்கள் போந்தனவோ? இவ்வாறு எனக்குச் சந்ததியில்லாமற்போனதற்குக்காரணம் என்னை? கூறுவீராக என்றான். மந்திரிமார் மன்னர்மன்னரே! அவையொன்றினாலுமல்ல. பூர்வவினைப்பயனே. ஆயினும் இங்குவரும் அடியார்க்கு வேண்டுவனவற்றை மனமகிழ்ச்சியுடன் கொடுப்பேமாயின் அருணாசலப்பெருமான் திருவருளினாலே சத்புத்திரப்பேறுண்டாகு மென்றனர். அதுகேட்ட அரசன், மந்திரிமார்களே! சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற இத்திருவருணாசலத்தில் வந்தசிவனடியார் எதுகேட்டாலுங் கொடுப்போமென்று கொடிகட்டிச் செய்துவருவீரென்று கட்டளையிட்டனன். அமைச்சர் அவ்வாறேதுவசநாட்டி முரசறைவித்தகாலை, இப்பூமியின்கணிருக்கும் விருத்தர், பிராமணர், தவத்தர், சங்கமர்கள், யாசகர்முதலிய பலரும்வந்து வேண்டியனபெற்று வாழ்ந்தனர். விவாகஞ் செய்யவேண்டுமென்று வந்தவர்க்கு ஆயிரம்பொன்னும், மனைமுதலியவற்றைக் கொதுவையினின்றும் மீட்கவேண்டுமென்றவந்தார்க்கு இரண்டாயிரம்பொன்னும், உபநயனமுடிக்கவென்றால் முந்நூறுபொன்னும், ஆலயப்பணிகள் செய்யவேண்டுமெனவந்தார்க்கு இருபதினாயிரம்பொன்னும், மடதருமமென வந்தார்க்கு ஐம்பதாயிரம்பொன்னும் இவ்வாறே அவரவர்க்குத் தக்கவாறீந்து வருவதனைக் கேள்வியுற்று நாரதமகாமுனிவர் வல்லாளனிடஞ்சென்றார்.

அதுகண்ட அரசன் இருக்கைவிட்டெழுந்து எதிர்கொண்டழைத்து ஆசனத்திருத்தி முகமன் உரைத்து, அடியேனிடத்துத் தேவரீர் எழுந்தருளியதென்னென முனிவருரைப்பார். மூவகையரசருட்சேரகுலத்தரசனே! நீசெய்யுந் தருமத்தைக்கேட்டு அதன்கருத்தையறியவந்தோம். அதனைச்சொல்வாயாகவென்ன, அரசன்றன்கருத்தைக்கூறினன். முனிவர் அருணைப்பெருமான்றிருவருளால்குழவியுண்டாகும். யாம்போகின்றோம் என்று புறப்பட்டுத் திருக்கயிலையடைந்து சிவபெருமானது திருக்கோலத்தைக்கண்டு துதித்துத்துதித்து வல்லாளனதுசெய்கைகளையெல்லாம் எடுத்துக் கூறினர். சிவபெருமான் இளப்புன்முறுவல்செய்து, யாமும் அதனைக்கண்டு அறிவோம் என்றுயாவர்க்கும்விடைகொடுத்து, குபேரனையழைத்து வல்லாளனுடையதருமத்தைச் சோதிக்கவேண்டும், ஆதலால் நீசேடனாக நிதியுடன்வருதி என்று, சங்கமவடிவங்கொண்டு திருவருணைப்பதிசென்று பசிகொண்டார்போல, உணவுகொடுப்பாரில்லையோவென்று ஓலமிட்டார். கணிகைவீதிசென்று இராமுழுதிற்கும் பரியமாகக்கொடுக்கும்பொன் எவ்வளவு என்றுகேட்ப, அ

வரவர்கள் ஐயரே! பொய்கூறேம் ஓரிரவிற்கு ஆயிரம்பொன் கொடுக்கவேண்டுமென்றனர்.

பரத்தையர்கள் கூறியதைக்கொடுத்து ஒவ்வொருத்திக்கு ஒவ்வோர் சங்கமரைவிடுத்து ஒருதாசிதானும் மீந்திருக்கவொட்டாமற் செய்து சிவபெருமானாகியசங்கமர் அரசனிடஞ்செல்லுதலும், அவன் அவரையும்சீடனையும் அழைத்துச்சென்று பூசைபுரிந்து வணங்கிநிற்க, சங்கமர், அரசனே! எனக்குற்ற மன்மதவாதையைத் தீர்த்தற்காக வந்தேம் என்றார். அரசன்கேட்டு அவ்வாறாயின் அடிகட்குவிவாகம் சீக்கிரத்திற், புரிவிப்பேனென்றான். சங்கமர் செப்புவார், அரசே! காமநோயை விலைமாதரே மாற்றுவாரென்றார். தங்கள் இஷ்டப்படியேசெய்வேனென்றுகூறி, எவலாளரைநோக்கி ஒருதாசியையழைமின் என்ன, அவர் கணிகையர்வீதிகடோறுஞ்சென்றுசென்றுவிசாரித்து ஒருவருங்கிடைத்திலர் என்று அரசனுக்குக்கூறினர். அரசன் மிக்கமனவருத்தமடைய, மந்திரிமார் அரசனே நாம்கொண்டுவருவேமென்று சொல்லிச் சென்று எவ்வளவு தந்திரங்களைக்கூறினும் கணிகையர் சம்மதியாததன்மையை அவர்களும் துன்புடன் தெரிவித்தனர்.

அரசன்கேட்டுச் சோர்வுற்றுப் பின்னர் விரைந்துவந்து இச்சங்கமர்க்கு இசைவார்க்கு எம்நகரமுழுதும் கொடுப்போமென்று கொடியிட்டான். அதுவன்றி யானை குதிரை முதலாய பொருள்களெல்லாவற்றையுங் கொடுப்பேம். அந்த மங்கையர்க்கரசியேபெற்றதாய்போன்றவளாவள் என்றான். கணிதமங்கையர்கேட்டு, வேந்தே! பொன்வாங்கியுன்னேம் வருதலியலாது என்ன அரசன் வெட்கமுற்று, மனவருத்தத்துடன் தனது அரண்மனையிலிருக்க, அரசன்மனைவியரான அல்லமாதேவியாரும் சல்லமாதேவியாரும் நேர்ந்ததென்னவென்று பணிந்துகேட்ப, நிகழ்ந்தவற்றைச்சொன்னான். அப்போதுசல்லமாதேவிகேட்டு, அரசே! என்னையவர்க்குக் கொடுக்குங்கருத்துத்தேவரீர்க்கு இருக்குமானால் இசைகின்றேனென்ன அரசன் அளவிடற்கரிய மகிழ்ச்சியுற்று அவ்வீட்டினறையுட்சென்று அவர்துன்பத்தை யொழிப்பாயென்று, சங்கமரிடம்வந்து தங்கள்மனப்படிப்போல் அனுபவித்துக்கொள்க என்றான்.

சல்லமாதேவி நீராடித் தன்னையலங்கரித்துச் சங்கமரிருந்த அறையுட் சென்று கீதம்பாடிப் பக்கத்தினெருங்கும்போது, பரமநாதராகிய சங்கமர் சிவயோகத்திலிருந்தார். சல்லமாதேவியார் எவ்விதமான சல்லாபங்களைச்செய்யினும் பரமசிவமாகிய சங்கமர் யோகமிருப்பார்போல் இருக்கக்கண்டு வருந்தி சங்கமர்மீது சாய்ந்து தழுவப்போகையில், பெருமான் ஓர்குழந்தை வடிவாகித் திருவாய்திறந்து அழத்தொடங்கினார். அதுகேட்டு இதுசிவபெருமானது திருவிளையாடலென்று அரசன்விரைந்துசென்று, ஆவலோடும் குழந்தையை யெடுத்தணைத்து உச்சிமோந்து ஆனந்தமுற்றிருக்கும்போது, சிவபெருமானுடனேமறைந்தனர். அப்போது அரசனுந்தேவியும் அழுது அலமந்து இரங்கினர். அவரது அழுகையொலி கேட்டுத் திருவுளமிரங்கிப்பெருமானார். பார்வதிசமேதராய் இடபாரூடராய்த் தோன்றியருள, அரசனும் மனைவியும் வணங்கித்துதித்து ஓர் குழந்தை யருளுதல்வேண்டுமென்று இரப்ப, சிவபெருமான், மன்னனே; யாமே உனக்குக் குழந்தையானேம். ஆயுண்முடிவில் உத்தரகிரியை முதலானவற்றையும் செய்துமுடிப்போம் வருந்தாதேயென்று அந்தர்த்தானமானார்.

வல்லாளமகாராசச் சருக்க வசனம்

முற்றிற்று.



திருவண்ணாமலையை அரசாண்ட வல்லாள மகாராசனுக்குச் சிவபெருமான் புத்திரனாகத்தோன்றி மறைந்து, ரிஷப வாகனரூடராய் வந்து அவ்வரசனுக்குக் காட்சிதந்த மகாத்மியம்—14.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஏழாவது,

வல்லாள மகாராசன் சருக்கம்.

கலிநிலைத்துறை.

பாச முற்றவச் சிராங்கத பாண்டியன் சிறை
வாச மாய்நவின் றேமினி * வல்லாளனுக்
கீச னேமக வாகவந் தெய்திப் பின்னுறுதி
ஓசையா யருட் செய்ததை யுமக்குரை செய்வாம.

இ-ள். சந்திர ஜடாதர மூர்த்தியாகிய பரமசிவனுடைய பாத பத்மங்களில் மிகவும் அவாவினையுடைய வச்சிராங்கத பாண்டியன் சரிதையைச் சொன்னோம்; இனி வல்லாள மகாராசனுக்கு (அரி

---

* ஆதியில் விஜயநகரத்தை யரசாண்ட கிருஷ்ணதேவ ராயர் விஜயத்தாலும் பிரதாப உருவத்தாலும் மேற்படி வல்லாளமகாராசன் வமிசந் தெரிந்துகொள்ளலாம்.

பிரமாதிதேவர்களுக் கரியவனாகியும், பார்வதி தேவியாரோடு தேவகணங்கள் பணிந்து போற்றும்படியாயும், ஸ்ரீ கைலாயகிரியி லெழுந்தருளியிருக்கும்) பரமசிவமே புத்திரனாகத் தோன்றி மறைந்த பின்னர், அக்கடவுள் விசும்பின்கண் வெள்விடையின்மீ தெழுந்து அவ்வரசனுக்கு அருள் சுரந்ததையும் மார்க்கண்டேய முனிவரே? உமக்குச் சொல்லுகிறேமென் றுநந்திதேவர் திருவாய்மலர்ந் தருளுகின்றார். எ-று. (௫)

மணி கொழித்திடு மாடமா ளிகைதவழ் சோலை
திணிகொ ளம்பரத் தினையுறு சிறப்பினை யார்ந்த
கணிகை யாமவர் கற்பினை யருந்ததி தனக்கே
பிணையெனச் சொல விசைக்குமா வருணையம்பதியாம்.

இ-ள். மாணிக்கம், மரகதம், வயிரம், வயிடூரியம், கோமேதகம், புட்பராகம், இந்திரநீலம், முத்து பவளமென்னும் நவமணிகளால் அலங்கரிக்கப்பட்ட மாடமாளிகைகளும், ஆகாயத்தையளாவி யுயர்ந்து தீஞ்சுவைக் கனிகளையுதிர்க்குஞ்சோலைகளும், மலர்ச்சோலைகளெங்கும் நிறைந்து பரிமளிக்கவும், அருந்ததிக் கொப்பான வடிவமும் கற்பும் வாய்ந்த கணிகையர்கள் வசிக்கும் அருணாசல மென்னுந்தலமாம். எ-று.

எழுசீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்.

இத்தகை சிறப்பை வகித்திடு நகருக்
கிறைவனும்வல் லாள பூபன்
சத்திய மொழியா னற்குண முடையான்
றன்னுயிர் மன்னுயி ராகப்
பத்தியாய் நாளும் பாதுகாத் திடுவோன்
பகாருஞ் சேரனற் குலத்தோன்
அத்தனா ரடியை நித்தமுந் துதித்தே
வவர்திருப் பணிசெய வந்தோன்.

இ-ள். இத்தன்மை பொருந்திய புகழினையுடைய அவ்வருணாசலம் என்னும் தலத்திற்கு அரசனாகிய வல்லாள மகாராசனென்பவன் மிகவும் சத்திய வாக்கிய முடையவன், சகல வுயிர்களையுந் தன்னுயிர்போற் பாதுகாப்பவன்; அக்கினி வமிசத்தில் உதித்தவன்; சகதீசனாகிய பரமசிவனுடைய உபய சரணாம் புயங்களைத் தினந் தினந் திரிகாலமுந் துதிசெய்பவன்; அக்கடவுளினது திருப்பணிசெய்ய வுதித்தவன். எ-று. (௬)

பிறர்பொரு ளாசை யற்றவன் றனது
பெண்டிரை யன்றிமற் றோரை
முறையுடன் றமக்கை தங்கைய ரெனவு
மொழிந்திடு நன்னடை யுடையோன்
நெறியுட னாறி லொருபங்கு குடிக
ணிலையுடன் றரப்பெறும் புனிதன்
கறைமிடற் றண்ண லாலயப் பணியைக்
கருத்துகந் தியற்றுநல் லன்பன்.

இ-ள். ஒருவன் பொருளின்மீது இச்சை யென்பதை மறந்தவன் தன் மனைவியாரையன்றி மற்றஸ்திரீகளைத் தமக்கைமார்களைப்போலவும், தங்கைமார்களைப் போலவும், மனத்திற்பரிவுகொண்டு பேசுவன்; குடிகளிடத்தில் ஆறிலொருபங்கு பகுதி பெறப்பட்டவன் ஆலாலமுண்ட ஸ்ரீகண்டராகிய அருணாசலேசரது ஆலயத் திருப்பணியை மனக்களிப்போடும் நடத்தும் மேன்மை பொருந்திய பத்தியையுடையவன். எ-று. (௭)

நீதியாய்ப் புலியும் பசுவுமோர் துறையி
னொருங்கியே புனலுண்டு வசிக்கும்
போதனை யருளும் வேதியர் மறையைப்
புகன்றிட யாவருங் கேட்பார்

ஆதியாங் கடவு ளருட்பெற நகரை
யலங்கரித் தற்புதஞ் செய்வார்
வீதியிற் புனலைத் தெளித்துமின் னார்கள்
மேம்படு கோலமு மிடுவார்.

இ-ள். அரசன் ஆணையால் புலியும்பசுவும் ஒருதுறையிற்சேர்ந்து தண்ணீரருந்திக் களித்து விளையாடி வாசஞ்செய்துவரும்; வேதாகமங்களையுணர்ந்து உபதேசிக்கும் அந்தணர்கள்செய்யும் வேதபாராயணம் யாவரும் பத்தியோடு கேட்பார்கள்; ஆதியாகவும் ஒப்பற்றதாயும் விளங்குங் கடவுளாகிய ஸ்ரீ அருணாசலேசருடைய திருவருளைப் பெறும்பொருட்டு அந்நகர் முழுவதும்வீதிகடோறும் வரிசை வரிசையாய் மகரதோரணங்களும், மாவிலைத் தோரணங்களும், விருஷபத் துவசங்களுந்தூக்கி எங்குஞ் சுகந்தபரிமளம்வீசும் புட்பங்களால் அலங்காரஞ்செய்து வீதிகளில் மங்கையர்கள் வாசனை கமழுஞ் சலந்தெளித்து விசித்திரங்களாகிய கோலங்களையிடுவார்கள். எ-று. (௯)

மாதமும் மாரி சொரிந்துவே ளாண்மை
மாறிலாச் செழிப்புற விளையும்
சாதமென் போரை யக்கண மழைத்தே
தழைக்க ஷட்சுவை யமுதளிப்பார்
மாதவர்க் கேவல் புரிந்தவர் கேட்கும்
வகையெலாந் தந்தருள் பெறுவார்
நீதனா லயத்தி னெய்விளக் கமைத்து
நிரந்தரம் பூசித்து வருவார்.

இ-ள். அவ்வருணையம்பதியென்னுந் தலத்தில் மாதமும்மாரி பொழிந்து வேளாண்மை எந்நாளுங் குறையாது செழித் தோங்கி விளைந்துவரும், அல்லாமலும் அந்நகருள்யாவரேனும் பசிப்பிணியால் மெலிந்துவந்து புசிப்புவேண்டுமென்று வினவுபவர்களை அக்கணமே அழைத்து சயித்யோபசாரஞ்செய்து (கைத்தல், புளித்தல், காரத்தல், உவர்த்தல், துவர்த்தல், தித்தித்தல் என்னும்) அறுசுவையோடுங்கூடிய உணவை திருப்தியாகக்கொடுத்து உபசரிப்பார்கள்; மேலும் தபோமகிமையையுடைய குணமுடையவர்கள், சொல்லுங் குற்றேவல்களைப் புரிந்து இச்சித்துக்கேட்ட வஸ்துக்களை எல்லாங் குறைவில்லாமல் ஈந்து, அவர்கள் அருளைப் பெறுவார்கள், அஃதல்லாமலும் நீதனாகிய ஸ்ரீ அருணாசலேசராலயத்தில் எங்கும் பிரகாசம்பொருந்தத் தக்கதாய் திருவிளக்குகள் அமைத்து அக்கடவுளை என்றும் பத்தியுடன் பூசித்துப்பணிந்து வருவார்கள். எ-று.

கலி விருத்தம்.

இந்த வண்ண மிறைவன் விதிப்படி
அந்த மாநக ரானதி லங்குநாள்
எந்தச் சீரு மிருக்கமன் பேர்சொல
சந்ததி யில்லை யென்று தளர்ந்தனன்.

இ-ள். இத்தன்மையாய் அரசன் செங்கோன்முறைப்படி யாதும் குறைவில்லாமல் அந்நகரம் செழித்தோங்கியிருக்கையில், ஓர்நாள் மன்னனாகிய வல்லாளமகாராசன் தனக்கு ஆண்டவனருளால் எல்லாச்சிறப்பும் பொருந்தியிருக்க நாம் எடுத்தணைத்து உச்சிமோந்து முத்தமிடவும் இனியமழலைச் சொற்களாற் சிரவணானந்தமுறவும், பின்னர் நம்பெயரைச் சொல்லவும், பிள்ளையில்லாமற் போயிற்றேயென்று மனம்வெதும்பி மிகவுந் துன்பமுற்றான். எ-று. ()

ஐயன் பூசை யதிற் குறை வோவிந்த
வைய நீதியின் மாறுள தோவன்றிக்
கொய்ம் மலர்களிற் கோதுறச் செய்தனோ
செய்யும் வண்ணமென் செப்பு மமைச்சரே.

இ-ள். ஜகதீசனாகியும் உமாமகேசனாகியும் என்னையாட்கொள்ளும்பொருட்டு எழுந்தருளியிருக்கும் ஐயனாகிய ஸ்ரீ அருணாசலேசனுக்குப் பேதையேனாற் செய்யப்பட்ட பூசையில் ஏதேனுங்குறையுளதோ! அல்லது இவ்வுலகத்தை நடத்துவதில் மாறுபாடாகிய குற்றங்களுண்டோ! அதுவல்லாமலும் நங்கடவுளை அருச்சித்துப் பணியும் பொருட்டு கொய்தமலர்களிலேதேனுங் குறையுண்டோ! என் செய்கேன்! அறியேன்! இனியான்செய்யும் விதியாது கூறுவீர்கள் மந்திரிகளே என்றான் வல்லாளமகாராசன். எ-று. (௮)

அண்ண லேநமை யாதரித் தாண்டிடுங்
கண்கள் மூன்றுடை யானற் கருணையால்
நண்ணு மாதுலர் யார்க்குநல் லன்புடன்
றிண்ண மாயறஞ் செய்யிற் சுதனுண்டாம்.

இ-ள். எங்களிறைவனே! நம்மை ஆட்கொள்ளும் பொருட்டெழுந்தருளிய சகலபுவன கர்த்தாவாகியுஞ் சர்வாந்தரியாமியாயுந் திரிநேத்திர முடையவராயும் அடியார்க ளிருதயத்தில் விளங்கும் ஸ்ரீ அருணாசலேசுரரது மேன்மைபொருந்திய கருணையினால் நம் பதியைநாடிவரும் ஆதுலர்முதலிய அந்தணர்களும் இன்னும் மற்றவர்களும் எதைக்கேட்டபோதிலும் அவைகளை இல்லை என்னாது அவர்மனங் களிப்புறும்படி உள்ளன்போடும் நல்குவோமாயின் (பரமசிவனருளால்) புத்திரனுண்டாமென்று சொன்னார்கள் மந்திரிகள். எ-று. (௯)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சுந்தர வருணை நாதந் துலங்குமிந் நகரி னுள்ளே
வந்தவ ரேது கேட்டாலும் வழங்குது மெனவிப்போது
அந்தர மளாவ நீங்க ளழகிய துவச நாட்டி
எந்தனற் பெயர் விளங்க வெழின்முர சறையச் செய்மின்.

இ-ள். சோமசுந்தரக்கடவுளாகிய ஸ்ரீ அருணாசலேசுரர்வாழும் இப்பதியின்கண்வந்தவர்கள் எந்தப்பொருளை விரும்பிக்கேட்டாலும் குறைவின்றித்தருகிறோம் வாருங்கள் நற்றவர்களே என்று கரங்களை நீட்டியழைப்பதுபோலும் இவ்வெல்லையுட்புக்க மாந்தர்களைக் கலியென்னும் பிணியணுகாமற்றுரத்த ஆகாயபரியந்தமளாவியுயர்ந்து படபடாகாரஞ்செய்யும்படியாய் அழகிய ஓர் துவசம்நாட்டி என்பெயர் எங்கணுஞ் சிறக்கும்பொருட்டு எழுகடலொலிகளையுங் கவளீகரித்து இடிமுழக்கம்போற் பேரொலிகாட்டும் முரசமார்ப்பச் செய்யுங்களென்றான் வல்லாளராசன். எ-று. (௧௦)

தாத்திரி முற்று நற்சீர்
தழைக்குமெங் கோனே கேண்மோ
சாத்திரம் புகழு மீசர்
தாடொழுந் தொடர மூப்பர்
தோத்திர விரவ லோர்கள்
தோன்றிய வண்ண மீயப்
பாத்திர மோநா மென்று
பகர்ந்தன ரமைச்ச ரானோர்.

இ-ள். நெடிய கடல்சூழ்ந்த உலகமெங்கும் மிகுந்தகீர்த்தியை விரியச்செய்த எங்களரசே! (கேளீர்) இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்குவேதங்களும் ஆறுசாத்திரங்களும் புகழத்தக்க உமாமகேசனாகிய ஸ்ரீ அருணாசலேசுரருடைய உபயசரணாம்புயங்களைப்பணியும் மெய்யன்பர்கள், தபோமகிமையைப்பெற்ற விருத்தர் தோத்திரஞ் செய்யும் பாவலர் முதலியவர்களின்மனத்திற்றோன்றியவண்ணம் அளித்து களிப்படையச் செய்விக்கும்படியாகிய பாத்திரரோ! நாம், இறைவனே யென்று மொழிந்தார் மந்திரியார்கள். எ-று. (௧௧)

பூவிலப் பொருளைக் கேட்கப் போகுமோ கேட்கிவ்வா
றியாவரா யினுந்தா னல்கா ராதலாற் புகன்ற வண்ணந்
நியம மாகச் செய்வீ ரெனத்துவ சத்தை நாட்டித்
தேவநா டளவு மோங்கச் செயமுர சறைவித்தாரால்.

இ-ள். இவ்வுலகிலில்லாதபொருளைக் கேட்கப்போமோ! அவ்வாறு கேட்டபோதினும் யாவரேனும் எத்தன்மை வாய்ந்தவராயினுங்கொடார்கள்; ஆகையால்யான் உங்களுக்குரைத்த விதியின்படி கொப்பெனச் செய்வீர்களென்றறைந்த மொழியைக்கேட்டு மந்திரிகள் துவசத்தைநாட்டி வானுலகளவும் பேரொலிமுழக்கமெட்டும்படி செயமுரசறைவித்தார்கள். எ-று. (கஉ)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

நாதன்வா ழருணை நகரினில் வேந்த
னாட்டிய துவசத்தை யோர்ந்து
பூதலத்துள்ள விருத்தர்கா வடிகொள்
பூரிய ருடன்மிகச் சிறந்த
மாதவர் மறையோர் ஜோகி ஜங்கமர்கள்
வாணர்க ளியாசக ரியாரும்
நீதமாய்த் திரளாய் வெய்தியன்னோர்க
ளிலைபெறப் பரிசினை யடைவார்.

இ-ள். நாதனாகிய சகதீசன் ஸ்ரீ-அருணாசலேசுரர்வாழும் அருணையம்பதியின்கண் வல்லாளமகாராசனால் தருமக்கொடி நாட்டியிருப்பதாய்கேள்வியுற்ற நெடிய கடல்சூழ்ந்த வையகத்திலிருக்கும் விருத்தர், பிராமணர், தபோதனர், ஜோகி ஜங்கமர்கள் பாவாணர் யாசகர்முதலியயாவரும் பத்தியோடுங் கூட்டங் கூட்டமாய்க் கூடி வந்து தத்தம்வறுமை நீங்கும்படியாய் அரசனிடம் வேண்டியவைகளைப்பெற்று குறைவின்றி வாழ்வார்கள். எ-று. (சக.)

417

வதுவை செயப் பொன்வேண்டி வந்தோருக்
காயிரம்பொன் வழங்கிப் பின்னுங்
கொதுவை மனை நிலம்பணிதி கொற்றவனே
யதைமீட்டுக் கொடுமென் றோர்க்கத்
ததியிலீ ராயிரம் பொன் றந்தவரை
மகிழச்செய் ததன்பின் னுங்கு
முதுமறையோ ருபநயன முடிக்க வென்று
லவர்க்குநிதி மூன்றா யீவான்.

இ-ள். விவாகஞ்செய்துக்கொள்ளவேண்டுமென்று ஆவலோடும் அரசனை நாடிவந்து கேட்டவர்கள் மனந்திருப்தியடையும்படி ஆயிரமாயிரமாகப் பொன்கொடுத்தும், பின்னர் ஆபரணாதி முதலிய மண்மனையாவுங் கொதுவைவைத்து மீட்டுக்கொள்ளுவதற்கு வேறதுவில்லாமல்மூழ்கிப்போகின்றன அரசர்க்கரசனாகிய எங்கள்கோவே! தேவரீர் அவற்றைமீட்கும்பொருட்டுத் திருவருள்சுரப்பீராயின் மிக்கபுண்ணியமாமென்றுபணிந்து வினவியவர்களுக்கிரங்கி, அக்கணமே இரண்டாயிரம் பொன்கொடுத்து அன்னவர் மனமகிழச்செய்வித்தும் அதன்பின்பு வேதாகமங்களையுணர்ந்த" பெரியோர்களாகிய அந்தணர்வந்து அரசனையாசீர்வதித்து மகாராஜனே! உபநயனம் நடத்தவேண்டியிருக்கிறதென்று அறிவிப்பார்களாயின் அவர்களுக்கு மூன்றுறுபொன்கொடுத்து மகிழச்செய்விப்பான். எ-று.

ஆலயத்தி லுற்றமணி மண்டபமுஞ்
சூழ்மதிலு மவமாந் தன்னைக்
கோலமுற வமைப் பதனுக் கிறையவனே
திரவியங்கள் கொடுப்பா யென்னச்

சீலமுட னிருபதினாயிரம் பொன்னுந்
  தந்துசீர் செய்யென் றான்பின்
ஞாலமகின் மடந்தருமஞ் செய்ய வைம்ப
  தாயிரம்பொன் னல்கி னானால்.

இ-ள். ஸ்ரீ அருணாசலேசுரர் எழுந்தருளியிருக்கும்கோயிலினுள் நவமணிகளினாலுஞ் சந்திரகாந்தக்கற்களினாலும் அமைத்துப் பிரகாசம்பொருந்தியிருக்கும் மண்டபங்களும் செஞ்சுடராகிய சூரியனுஞ்சாய்ந்து ஒதுங்கிப்போகும்படி ஆகாயத்தையளாவி மேகங்கள் தவழுஞ் சுற்றுமதில்களுங் கிலம்பட்டிருக்கின்றமையா லவைகளைத் திருத்தஞ்செய்யும்பொருட்டுப் பொருளுதவிசெய்யவேண்டும் மகாராசனேயென்றுகேட்குங்கால், அரசன் மிக்கபக்தியோடும் ஜகதீசன் திருப்பணி நிறைவேறும்பொருட்டு இருபதினாயிரம்பொன் கொடுத்துச் சீர்திருத்தஞ்செய்தும் பின்பு, உலகின் மடம் புதுக்க வேண்டுமென்றவைகளுக்கு ஐம்பதினாயிரம் பொன்னுங் கொடுப்பான். எ-று. (௧௫)

அந்தகர்க்குஞ் சங்கமர்க்கு முடவருக்கும்
  சோகிகட்கு மாபத் தென்று
வந்தவர்க்கு மாதுலர்க்கு மாறாத
  சஞ்சலமும் வறுமை நோயால்
நொந்தவர்க்குஞ் சொலுமின்ன மற்ற வர்க்குந்
  தினந்தினமும் நுவன்ற வாறு
சந்தமொடு பரி சளித்தல் நாரதரு
  மோர்ந்தங்கண் சார்ந்திட் டாரால்.

இ-ள். கண்ணில்லாதவர்களுக்கும், ஜங்கமர்களுக்கும், கரசரணாதிகளற்றவர்களுக்கும், ஜோகிகட்கும் வினைவழியால் வெவ்விய ஆபத்துநேர்ந்துவந்தவர்களுக்கும், ஆதுலர்களுக்கும் கெடாததன்

பத்தையடைந்து தரித்திரமென்னும் பிணியால் மெலிந்துமனநொந்தவர்களுக்கும், பின்னும்சொல்லும் சகலயாசகர்களுக்கும், சதாகாலமும் அவரவர்கள் விரும்பியவண்ணம் மனக்களிப்போடும் உதவிசெய்வதைநாரதமுனிவர் கேள்விப்பட்டு வல்லாளமகாராசனிடத்திற்கு மிகுந்தகருணையோடும் எழுந்தருளிவந்தார். எ-று. (௧௬)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மாதவ முனிவ ராங்கு வந்ததை மன்ன னோர்ந்து
காதல்கொண் டமைச்சர்சூழக் கடிதினி லரசைவிட்டுப்
பூதல னெதிர்சென் றேத்திப் புநிதனை யழைத்து வந்து
ஏதமில் பீட நல்கி யெழுந்தபின் னியம்பு வானால்.

இ-ள். மகாதபோதனராகிய நாரதமுனிவர்வரவைக் காவலாளிகளால்கேள்விப்பட்ட வல்லாளமகாராசன் மிகவும் அன்போடும் சிங்காதனத்தைவிட்டெழுந்து மந்திரிமுதலிய சேர்வைக்காரர்கள் புடைசூழ்ந்து வரும்படி அரசனெதிர்சென்று பணிந்து தமியேங்களையாட்கொள்ளும்பொருட்டுத் திருவருள் சுரந்தெழுந்தருளிவந்த மாதவமே! புண்ணியப்பொருளே! என்றுதுதித்துப் பேரானந்தத்தோடும் அழைத்துவந்து குற்றமற்றமணிகளினாலலங்காரம்பெற்ற பொற்பீடமளித்து அதிலெழுந்தருளியபின் சொல்லுகின்றான். ()

அயன்றவத் தினிலு தித்தே
  அழகிய கரத்தின் வீணை
வியமுறக் கொண்டு பாடும்
  மென்முனி வரனே தாங்க
ணயமுட னாயன் மீது
  நாட்டமுற் றெழுந்த செய்தி
தயையுட னருள்க வென்னத்
  தாபத ரிசைப்ப தானார்.

இ-ள். சிருட்டிகர்த்தாவாகிய பிரமன் தபோமகிமையால் உதித்து, சரோருகம்போன்ற அழகியகரத்தில்வீணை இலங்கக்கொண்டு கானஞ்செய்யும் மேன்மைபொருந்திய முனியே! தாங்கள் நாயினுங்கடையேனாகிய பேதையென்மேல் கருணைவைத் தெழுந்தருளிவந்த சங்கதியை அருள்செய்ய வேண்டுமென்று பணிந்துநின்ற வல்லாளமகாராசனைப் பார்த்து நாரதமுனிவர் கூறுவார். எ-று.()

தலத்தின்மேன் மகிமை யுற்ற தாபதர் புகழு மாதவம்
புலத்தினை வென்ற மேலோர் புகலுமூ வகையுள் வன்னி
குலத்தினில் வருமன் னாநின் கோதிலாத் தருமங்கேட்டந்
நலத்தினை யறியவந்தோம் நவின்றிடா யெனவுரைப்பான்.

இ-ள். புவனத்தின்கண் மகிமைபொருந்திய முனிவர்களும் புகழத்தக்க ஐம்புலனுகர்ச்சிகளையும் வென்று மெய்யுணர்ச்சிபெற்ற புண்ணியர்களால் சொல்லப்பட்ட சோமசூரியாக்கினி யென்னு மூக்குலத்தரசன் அக்கினிக்குலத்திலுதித்த அரசே! நின் குற்றமற்ற மகாதானத்தின் பெருமையைக் கேள்வியுற்று அதையறியும் பொருட்டு வந்தோம், ஆதலால் உன்கருத்தை வெளியிடுவாயென்று நாரதமுனிவர்கேட்க அரசன் சொல்லுவான். எ-று. (௧௯)

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மனுமுறை யறிந்த தாபதர் புகழு
மாதவ முநிவரே கேண்மோ
தனியிலென் னரசைத் தாங்கவு மென்பேர்
சாற்றவு மகவில னதனாற்
பனிமலர்க் குழலாள் பாகனார் தொழும்பர்
பரிவுடன் கேட்டவை மண்மேற்
கனிவுட னளிக்கத் துவசம துயர்த்தேன்
கடவுளின் செயலறி யேனே.

இ-ள். வேதசாஸ்திரங்களை யுணர்ந்த முநிவர்கள் புகழத்தக்க மகாதபோபலமுடைய நாரதமுநியே! எளியேன் ஆளுகையைத் தாங்கிக்கொள்ளவும், பின்னர் எளியேன் பெயரைச்சொல்லவும், மைந்தனில்லாமையால், மனமெலிந்து பூங்குழலையுடைய உமாதேவிபாகனாகிய ஸ்ரீ அருணாசலேசுரரடியார்கள் இச்சித்துக் கேட்டவைகளை இல்லையென்னாது கொடுக்கும் நியமங்கொண்டு துவசமு நாட்டி நடத்திவருகிறேன், நம்மையாட்கொள்ளுங் கடவுளின் திருவுளம்யாதோ! அறியேனென்றான் வல்லாளமகாராசன்.

திருவுயர் தரும நடத்துவர் மண்மேற்
சேயரைப் பெறுவ ரென்றேநற்
றருமநூல் களினுஞ் செப்புவ தன்றித்
தக்கவ ரும்புகல் வதனாற்
பெருகுமாமதியு மதியமுஞ் சடையிற்
பெட்புட னுற்றெலாங் காக்குங்
குருபர னருளாற் குழவியு முண்டாங்
கொற்றவா செலவிடை தருவாய்.

-600 008.

இ-ள். அழகிலுயர்ந்த முப்பத்திரண்டறங்களையும் இரப்பவர்களுக் கில்லையென்னாமல் நடத்துபவர்கள் மண்மேல் புத்திரபாக்கியங்களைப் பெறுவார்களென்று மேன்மைபொருந்திய ஆகமசாத்திரங்களிற் சொல்லியிருப்பதல்லாமலும்; மறைவிதி யுணர்ந்த பெரியோர்களுஞ் சொல்லுவார்கள்; ஆதலால் எங்கும் பரவி மகிமையுள்ள கங்கையையும் சந்திரனையுஞ் சடையிற்றரித்து எண்பத்துநான்கு நூறாயிரம் ஜீவபேதங்களைப் படைத்தளிக்கும் பரமசிவத்தினருளால் மக்கட்பேறு பெறுவாய், எனக்கு விடைதருவாய் அரசனே யென்று நாரதமுனிவர் விடைபெற்றுச் சென்றார். எ-று.()

மன்னவன்ற னீதிதனைக் கயிலைவளர்
பரமனுக்கு வழங்க வேண்டித்
தன்னுமுனி காதலுற்றுச் செல்லுகையிற்
சிவகணங்கள் துதித்து நிற்க
முன்னிலங்குஞ் சங்கரனை நாரதனும்
பணிந்து பின்னர் முனிவர்சூழச்
சென்னிமதி யணிந்தபிரான் றிருக்கோலங்
கண்டிறைஞ்சிச் செப்பு வானால்.

இ-ள். வல்லாள மகாராசனுடைய நன்மார்க்கத்தையும், தருமப்பரிபாலனத்தையும், கயிலாயகிரியில் எழுந்தருளியிருக்கும் பார்வதிசமேதனாகிய பரமசிவனுக்குத் தெரிவிக்கும்படியெண்ணங்கொண்டு, தவத்திற்சிறந்த (நாரத) முனிவர் ஆசையோடுஞ்செல்லுகையில், அங்ஙனம் அனேக சிவகணங்கள் அடிபணிந்து துதித்துநிற்க முன்னம் பிரகாசித்துக் கட்டளைகள் விதித்துக்கொண்டிருக்கும் இரண்டாஞ்சங்கரனாகிய நந்திதேவரைப் பணிந்து, பின்பு மகாதபோதனர்களும் தேவர்களும் முனிவர்களும் புடைசூழும்படி உமையவள் இடப்பாகத்தில் இலங்கக் கொலுவீற்றிருக்குஞ் சிவபெருமானுடைய திருக்கோலத்தைக்கண்டு சாஷ்டாங்கமாய்ப்பணிந்தெழுந்து போற்றிக் கூறுவார் நாரதமுனிவர். எ-று. (௨௨)

தேசின்மிகு கயிலையில்வாழ் தேவாதி
தேவேநின் றிருத்தாள் போற்றி
மாசின்றி விளங்கருணை யம்பதியின்
வல்லாள மன்ன னென்போன்

ஓசைபெறச் சுதன்வேண்டிக் கொடிநாட்டி
யுலகிலுள்ளோ ருவந்து கேட்கும்
பாசமுட னதையேனுந் தருவனென்று
பறைசாற்றும் பண்பைக் கேண்மோ.

இ-ள். பிரகாசம் பொருந்திய கயிலாய கிரியில் வீற்றிருக்குந் தேவதேவனே! உன் உபய சரணங்கள் போற்றி! பூலோகத்தில் குற்றமற்றுவிளங்கும் அருணையம்பதி யென்னுந் தலத்துக்கிறைவனாகிய வல்லாள மகாராசனென்பவன் தன் பெயரை விளக்கஞ்செய்ய ஓர் புதல்வனை வேண்டி யாவர் எப்பொருளை விரும்பிக் கேட்டபோதினும் அவர் திருப்தி யடையும்படி தருகிறேனென்று கொடிபோட்டு, பறைசாற்றி நடத்திவரும் பெருமையைக் கேளும் எந்தையே! என்று பின்னுங் கூறுவார் நாரதமுனிவர். எ-று. ()

வேறு.

நீதியைவளர்ப்போ னுண்மையைக் காப்போ
னெறி முறை தனிற்பிற ழாதோன்
கோதினைக் களைந்த வறமெனு முருவாய்க்
குவலயத் துதித்தநற் பூபன்
பூதலத் துயிர்க ளியாவுந்தன் னுயிர்போற்
புந்தியுட் கருதியே காப்போன்
ஆதியே நினது பதமலர் துணையென்
றனுதினந் தொழுதுவா ழன்பன்.

இ-ள். நன்மார்க்கமேம்படி வளர்ப்பவன். சத்தியத்தைக் காப்பாற்றத்தக்கவன், செங்கோல்விதி பிசகாதவன், பாவங்களென்னும் இருளைத் துரத்தியெழுந்த மதிபோன்ற தருமமாகிய ஒளியே ஓருருவங்கொண்டு உலகிற்பிறந்த மேன்மை பொருந்திய அரசன்;

அல்லாமலும் பூமியில்வாழு மன்னுயிர்யாவுந் தன்னுயிர்போல மனத்திலெண்ணிக் காப்பவன், அடியவர்க் கெளியவன், ஆதி கடவுளாகிய தங்கள் சரண கமலங்களில் மனம்பொருந்திச் சதாகாலமும் பணிந்து துதிசெய்து வாழ்ந்து வரும் மெய்த்தொழும்பன் என்று நாரதமுனிவர் கூறினார். எ-று. (௨௪)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

வந்தமா முனிவன் கூறும் வாய்மையை யீச னோர்ந்து
அந்தவல் லாளன் றன்மை யாமுங்கண் டறிவோ மென்றே
சிந்தைசெய் முநிக்கு மற்றத் தேவர்க்கு மிருடி கட்குத்
தந்தமாச்சிரம மெய்தச் சாற்றினான் தன்னே ரில்லான்.

இ-ள். அங்ஙனம் வந்து வல்லாள மகாராசன் பெருமையைச் சொல்லும் நாரதமுனிவன் மொழியைப்பரமசிவன்கேட்டு, அவ்வரசன் தன்மையை நாமுங் கண்டறிய வேண்டுமென்று மனத்தில் நினைந்து, துதிசெய்துகொண்டு நிற்கும் முனிவரையும்மற்றத்தேவர்கள் இருடிகள் யாவர்களையுந் தத்தம் இருப்பிடம்போய்ச்சேரும்படி திருவாய் மலர்ந்தருளினார் ஒப்பொருவரு மில்லாத உமாமகேசர். எ-று. (௨௫)

அக்கணங் கயிலைநாத னளகைகோன் றனைய ழைக்கத்
திக்கெலா மதிக்க வன்னோன் றிரண்டபொற் குவியல்தாங்கி
அக்கர வணிந்த யீச னருட்பதம் வந்து போற்றச்
செக்கர்மே னியனு மாங்கு சிலமொழி யருள லுற்றான்.

இ-ள். அக்கணமே கயிலாயபதியாகிய பரமசிவன் அளகாபுரிக்கிறைவனாகிய குபேரனைவரும்படி கட்டளையிட்ட மாத்திரத்தில் எண்டிசையு மதிக்கும்படி அவ்வரசன் அளவிறந்த பொற்குவியல்களோடும் பிரயாணப்பட்டு அக்குமணிகளாகிய உருத்திராட்ச மாலைகளையும் சர்ப்பங்களையும் ஆபரணமாகவணிந்த சிவபெருமானிடம் வந்து அடிபணிந்து போற்றி நிற்கச் செவ்வானம்போன்ற தேககாந்தியுடையபரமசிவன் அங்ஙனம் சிலவசனங்களை யருளுவார். எ-று

அளகையா ளரசேகேளு மருணையம் பதிவாழ் வேந்தன்
உளமுறு தியைச்சோ திக்க வுன்னிய படியா னீயும்
வளமுறுஞ் சீடனாகி மாநிதி யுடனெம் மோடு
புளகமாய் வருக வென்று புகன்றனன் கயிலை நாதன்.

இ-ள். அளகாபுரிக் கிறைவனே; பூமியில் நாம் அருணையம் பதியில் வாழும் வல்லாளமகாராசன் மனவலியைச் சோதிக்கும்படி எண்ணங்கொண் டிருக்கின்றமையால், நீயும் சிறந்த சீடனாகி அளவிறந்த பொருளோடும் நம்முடன் மனமகிழ்ந்து வரக் கடவையென்று கூறினார் கயிலாயபதியாகியும் திரிநேத்திர முடையராகியும் விளங்கும் ஜெகதீசன். எ-று. (௨௭)

மாலய னிருவர் கண்டு மனத்தினி லென்று மில்லா
மால்கொள வும்ப ராரு மலர்மழை சொரிய வேத
நூல்களுந் துதிக்க யாரு நுவலுதற் கரிய மாதோர்
பாலொளிர் பரமன் யாரும் பரவுஞ்சங் கமராய் நின்றார்.

இ-ள். விட்டுணுவும் பிரமனுங்கண்டு மனத்தில் ஒருநாளுமில்லாத மகிழ்ச்சிகொண்டு போற்றவும் தேவர்கள் மலர்மாரி பெய்யவும், வேதாகமங்கள் துதிக்கவும், யாவராலுஞ் சொல்லுதற் கரிய உமாமகேஸ்வரியை ஒரு கூறாகக்கொண்ட பரமசிவன், சகலரும் பணியும்படி சங்கமராய் வேடங்கொண்டு நின்றார். எ-று. (௨௮)

தேவுறை கயிலை வாழுந் திருவுயர் சிவக ணங்கள்
யாவுமெம் மைய னற்சீ ரருளினா லாண்டி யானார்
பூவுல கினில்வல் லாளன் பொருந்துநற் பதியை நாடிக்
கோமுறை யோர்கொண் டாடக் கூட்டமாய் வருவ தானார்.

இ-ள். தேவதேவனாகிய பரமசிவன் வாழும் கயிலாயகிரியில் வாசஞ்செய்துகொண்டிருக்கும் அழகிய சிவகணங்களெல்லாம் எமதையன் கருணாரசத்தினால் ஆண்டிகளுருவங்கொண்டு உலகில் இணையில்லாக் கீர்த்தியையெய்திப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் வல்லாள மகாராசன்வாழும் பதியைநோக்கி அரசநீதியோர்கொண்டாடிப் பணியத்தக்கதாகக் குருமூர்த்தமாயெழுந்தருளியிருக்குஞ் சிவபெருமானைச் சூழ்ந்து வந்தார்கள். எ-று. (௨௯)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கற்பினி லுயர்ந்துங் கணவனை யிறைபோற்
  கருதுதா யொருவரு மிலையோ
பொற்புறு மைந்த ரில்லையோ பசிக்குப்
  போனக மளிப்பவ ரிலையோ
விற்பன முடைய வரசர்க ளிலையோ
  வியப்புட னெங்களைக் கூப்பிக்
கற்பனை யோடு வமுதினைப் படைக்குங்
  கண்ணிய ரில்லையோ வென்பார்.

இ-ள். கற்பினில் அருந்ததியைப்போல் மிகுந்தும் தத்தம் கணவனையே தெய்வமாகப் பாவித்துநடக்குந் தாய்மார்களொருவருமில்லையோ! அழகிய பெருமைதங்கிய வாய்மைகள் வாய்ந்த மைந்தர்களில்லையோ! அடியார்கள் பசிவேளையறிந்து அன்னங்கொடுப்பாரில்லையோ! மநுநீதியோடுங்கூடிய அரசர்களில்லையோ! மனப்பூர்த்தியாய் எங்களைத்தொழுது அழைத்துக்கொண்டுபோய்பத்திரசத்தோடு அன்னம்பாலிக்கும் தண்ணியர்களுமில்லையோவென்று கூறுவார்கள். எ-று. (௩௦)

பொன்னளித் தாலும் வேண்டுவ திலைநற்
  பூடணந் தரினும்யாம் வேண்டோம்
துன்னுமா மணிக ளல்கினும் விரும்போந்
  தொங்குமுத் தாரமுங் கருதோம்
மன்னர்கள் செங்கோ லரசினை யெமக்கு
  வழங்கினு மனமதி லில்லை
அன்னமீந் தெம்மை யாதரிப் பாரே
  லன்புட னுண்ணுவோ மென்பார்.

இ-ள். செம்பொன் அளித்தாலும் விரும்போம், இரத்தினங்களையழுத்தி யிலங்கும் அழகியபணிகளையும் விரும்போம், பிரகாசம்பொருந்திய ரத்தினங்களை அளித்தாலும் விரும்போம், முத்துமாலைகளினும் மனம்வையோம், அரசர்கள் செங்கோலின் விதியைத் தந்தபோதினும் வேண்டோம், அறுசுவைபதார்த்தவகைகளோடும் அமுதளிப்பார்களானால் மிகவும் அன்பாய் உண்ணுவோமென்று அடியார்கள் கூறுவார்கள். எ-று. (௩௧)

நவ்வியங் கரத்தி லிருந்ததை நீத்த
  நாதர்சங் கமருமே நற்சீ
ரொவ்விய வருணை மாநகர்த் தெருவி
  லொலியெழக் குமுதவாய் மலர்ந்து
வெவ்விய பசியான் மெலிந்தவ ரேற்க
  மேவுவ போலவுங் கூவிச்
செவ்விய கொவ்வை வாயராங் கணிகைத்
  தெருவினைச் சார்ந்தவ ரானார்.

இ-ள். அழகியகரத்தில் மானைத்துறந்தவராகிய சங்கமர்சிறப் போங்கி இசைந்தும் அருணையம்பதிவீதியில் ஓசைபெறத் தக்கதாக

ச் செங்குமுதம்போன்ற திருவாய்மலர்ந்து கொடிதாகியபசிப்பிணியால் துன்புற்று இரப்போரைப்போல வரத்திச்சிவந்த கொவ்வைக்கனிபோன்ற கணிகைமாதர்கள் வசிக்கும் வீதியில் வந்தார் பரமசிவஞான சங்கமர். எ-று. (௩௨)

கெண்டைபோல் விழியுங் கிளிநிகர் மொழியுங்
  கிளர்மதி வதனமு மென்பூச்
செண்டையார் குழலுங் கந்தம துலவுந்
  தெங்கதின் குரும்பை நேர் முலையா
ரண்டையி லிருந்து வல்விடி யளவு
  மைங்கணை மாரனாற் புரியுஞ்
சண்டையை யகற்றத் தருபொனை மின்காள்
  சாற்றுது மெனவவர் மொழிவார்.

இ-ள். சேற்கெண்டைப்போன்ற அழகியவிழியையும், அஞ்சுகத்தையொத்த இனியவார்த்தைகளையும் ஆகாயத்திலிலங்கும் பூரணச் சந்திரோதயம்போன்ற திருமுக வொளியும், சீதள நிறைந்த கனயமலர்களாற் கட்டப்பட்ட பந்தைநிகர்த்து ஊசலாடுங்குழலும் சுகந்தங்களைத்திமிர்ந்து தென்னங் குரும்பைகளைப்போற் பிரகாசிக்கும் இரண்டுகுயங்களையுடைய வனிதையர்கள்பக்கலில்இன்றிரவு விடியுமளவுமிருந்து முல்லை, அசோகு, நீலோற்பலம், மாம்பூ, தாமரை இவ்வைந்துமலர்களை ஐந்துகணைகளாகவும் கரும்பை வில்லாகவும்வளைத்து போர்புரிய எழுந்துநிற்கும் மன்மதன்கணை வலியைத்தடுத்தோட்டும்பொருட்டுப் பரியமாகக்கொடுக்கும் பொன்னைப் பகருவீர்கள் பெண்களேயென்று சங்கமர்வினவியபோது அக்கணிகைமாதர்கள் கூறுவார்கள். எ-று. (௩௩)

பையரா வணிந்த பரமனைப் போன்ற
  பகரரும் ஐயகேள் யாங்கள்

பொய்யது முரையோம் வஞ்சக முணரோம்
  புணர்தலுக் கோரிருண் முற்றுந்
தையல ரொருத்திக் காயிரங் கனகந்
  தருவதவ் வாறளித் திடின்யாம்
மெய்யுடன் மெய்யும் பொருந்திடக் கலவி
  விளைத்துமன் மதன்வினை தவிர்ப்போம்.

இ-ள். வெவ்விய விடங்களையுடைய சர்ப்பங்களை ஆபரணமாக வணிந்த ஸ்ரீ கைலாயபதியாகிய பரமசிவனைப்போல் சொல்லுதற்கரிய சங்கமரே! யாங்கள் பொய்வார்த்தைகளைப்பேசோம், வஞ்சகமாகிய துரோகசிந்தனைகளையுங் கருதோம்; ஓரிரவுமுழுமையுஞ்சுகலீலைகளை யநுபவிப்பதற்கு ஒவ்வொருபெண்ணுக்கு ஆயிரம்பொன் கொடுக்கும் நியமமாதலால், அதுபோற்றருவீராயின் யாங்கள் எங்கள்மனமும் மெய்யும் ஒன்றுபடத்தக்கதாக அஷ்டவித ஆலிங்கனமுஞ்செய்து அனங்கன்கணையுங் கருத்தும் நாணும்படி புணருவோமென்றார்கள் கணிகைமாதர்கள். எ-று. (௩௪)

வேறு.

பரத்தையர்க ளுரைத்தவணந் தந்துடனெவ்
  வொருத்திக்கோர் பண்டாரத்தைக்
கரத்தமைத்துப் பிரியாதீர் என்னவுங்கண்
  காட்டி மிகக் கட்டுப் பாடா
யுரைத்துவிலை மாதர்களின் வீதியெலாஞ்
  சங்கமரா யொளிரச் செய்து
வரத்தைமிகத் தருமருணை நகரினிலெண்
  காதமட்டு மருவச் செய்தார்.

இ-ள். அக்கணிகை மாதர்கள் சொல்லியவைபோல் அவர்மகிழும்படி கனகம்சொரிந்து ஒவ்வொருத்திக்கோர் ஆண்டியை நிய

மித்து கங்குல்விடியளவும்விட்டு நீங்காதீர்களென்று கண்சாடையினாற்றெரிவித்து மிகவும் கட்டுப்பாடாக அக்கணிகைமாதர்கள் வாழும் வீதியெல்லாம் சிவனடியார்களாகவே பிரகாசிக்கும்படிசெய்து எண்ணிய எண்ணங்களையெல்லா முற்றச்செய்யும் அழகிய அருணையம்பதி எண்காதம்வரையிலுஞ் சுரதலீலை புரியச்செய்தார் சங்கமராகிய பரமசிவன். எ-று. (௧௫)

வேறு.

விலைமாதர் தனித்தொருவ ரில்லாம
லரிதாக்கி வெய்ய காமன்
கலைமார்க்கப் படிமருவச் செய்தசங்க
மருநீங்கிக் கமழு மாகன்
னிலைமார்க்க மாய்ந்திட்ட சீடனுடன்
மேவவந்த நிலத்தை யாளுஞ்
சிலைமார்க்க மறிந்தமன்னன் கண்டெதிர்சென்
றிறைஞ்சியழைத் திருத்திச் சொல்வான்.

இ-ள். விலைமாதர்கள் தனித்து எங்கும் கிடைக்காது அரிதாகச்செய்து கொடிய மன்மதன் சாஸ்திர விதியின்படி அஷ்டவித ஆலிங்கனமும் நகக்குறி தந்தக்குறி தாடனங்கள் அறுபத்துநான்கு விதலீலைகள் இவைகளையுஞ் செய்யச்செய்த சங்கமராகிய சகதீசன் அவணின்றெழுந்து பிரகாசமும் பெருமையும் பொருந்திய நன்மார்க்க நிலையைப் பரிசோதித்த சீடனாகிய அளகேசனோடும் அரசன் அரண்மனையைநோக்கிச் செல்லுகையில், அப்பதிக்கிறைவனாகியும் சதுர்வேதமார்க்கம்யாவும் பூரணமாயுணர்ந்த மன்னனுமாகிய வல்லாளமகாராசன் சங்கமர் வருதலைக்கண்டு எதிர்சென்று பணிந்து போற்றியழைத்துக்கொண்டுபோய் நவமணிகளா லலங்கரிக்கப்பட்டு பிரகாசம்பொருந்திய அழகிய ஒருசிங்காதனத்தில் எழுந்தருளச்செய்து அஞ்சலியத்தனாய் நின்று கூறுவான். எ-று. (௧௬)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பண்ணியதவமோவன்றிப் பாரினியானியற்றும்
நண்ணியகருமம்யாதோ நயக்கினவ்வாறுநல்கப்
புண்ணியவசமோதேவர் பொன்னடிவருந்தவிங்கு
கண்ணியமுறுவேன்றங்கள்கடாக்ஷமும்பெறுவேனென்றான்.

இ-ள். தமியேன்செய்த தவப்பலனோ! அல்லது ஸ்ரீ அருணாசலேசுரர்வாழும் இவ்வருணையம்பதியில் எளியேனாற் செய்யப்பட்ட கிரியைகளின் புண்ணியமாமோ! பரம சிவத்தைப்போலெழுந்த சங்கமதேவரின் பிரகாசம்பொருந்திய தங்கமயமாகிய உபயசரணகமலங்கள்வருத்தமுறும்படி இங்ஙனம் அருள்சுரந்த விதியாதோ! அவற்றைத் திருவாய்மலர்ந்தருளினால் அத்தன்மையா யடியேன்கடைத்திக்கண்ணியனாவதல்லாமலுந் தேவரீர்கருணைகடாக்ஷத்திலுஞ் சேர்வேனென்றான் வல்லாளமகாராசன். எ-று. (௧௭)

மன்னகேளரசுநீதி மார்க்கமும்நீடுவாழி
உன்னையாங்கருதிவந்த தோதுவமுருவில்மாரன்
பன்னுமைங்கணையாலின்று படுத்திடுந்துயரைமாற்றக்
கன்னியைநல்கிற்கீர்த்தி கடலேழும்வயங்குமென்றார்.

இ-ள். இப்பூமண்டலத்திற் கீர்த்திபொருந்திய வல்லாளமகாராசனே? உன் அரசும், செங்கோன்முறைமையும், நீடூழிகாலம்வாழி: இப்போது உன்னை யாம்வேண்டிவந்தகாரணம் யாதெனில், உருவிலியாகிய மன்மதனாலெய்யும் முல்லை, அசோகு, நீலோத்பலம், மாம்பூ, தாமரைமலரென்று சொல்லப்பட்ட ஐந்துகணைகளினாலும் இன்றுயாம்படுந்துன்பத்தை நீக்கும்பொருட்டு ஒருமாதை எனக்குக்கிட்டும்படி செய்வையேயானால் உன்கீர்த்தி எழுகடல்சூழ்ந்த இவ்வையகத்திற்பிரகாசிக்குமென்றார்சங்கமராகிய பரமசிவம். எ-று.

இதைவிட தேவ ரீருக்
கெழின்பமா முடிப்பிப் பேனென்
றதையுணர்ந் தைய ராமே
ரரபேகே ளதுமா தொல்லை
வதைசெயுங் காம நோயை
மாற்றுதல் விலைமா தர்க்கே
புதையல்போற் றெரியு மென்று
புகன்றனர் பெரியோ ராங்கு.

இ-ள். இவ்வாறு பரமாதரை இச்சித்துத் திரிவதைப் பார்க்கிலும் எக்காலமும் தேவரீரைவிட் டகலாம லிருக்கும்படி சிறப்போங்கிய மணஞ்செய்து வைக்கிறேனென்று மிகு பத்தியும் பரிவுங்கொண்டுரைத்த வல்லாள மகாராசனது அன்பு நிலையையறிந்த சங்கமராகிய சிவபெருமான் சொல்லுகின்றார், அரசனே? இப்போது நீ சொல்லிய வார்த்தை கொடிய துன்பத்திற் கிடமாயும், சுடர்முன் மெழுகுபோல் மனம் ஒருங்கு பதித்தாமல் பலவிதகோலங்களை உண்டுபண்ணி அலையச்செய்யும்; அதுவல்லாமல் பஞ்சேந்திரியங்களுந் தடுமாறி காம வெகுளி மயக்கத்தால் நாவறட்சிசெய்யும் சுகப்பிணியைப்போக்கும் ஔடதம் விலை மின்னார்களுக்குக் கைவல்லியப்பட்டதேயன்றி இதரமான மாதரறியார்கள்; ஆதலான் அவரால் என்பிணிமாற்றுவிப்பாயென்று பெரியோராகிய சங்கமர் கூறினார். எ-று. (௪௩)

நிட்டைசெய்வோர்க்கும்போத நிகழ்த்துசங்கமரேதங்க
ளிட்டத்தின்படியான்செய்வே னென்றிறைகாவலோரை
விட்டதிவ்விரவிற்சீரார் வேசையாமொருமின்னாளை
யிட்டமாயழைமினென்ன வேகினர்வாய்மைமிக்கோர்.

இ-ள். இல்வாழ்க்கையைக்கடந்து சதாநிட்டை செய்யும் தபோதனர்களுக்கும் ஞானோபதேசஞ் செய்விக்கும் மகிமைபொரு

மையுலாம் விழிநேர் மாதர்க ணெருங்கி
வாழுமிவ் வீதியி லொருத்தி
மெய்யுலா மரசை நாடிய பெரியோர்
விரகத்தைத் தணித்திடு வாரேல்
கையுலாங் கடகப் பணிமணி வடமுங்
கவித்திடு சதங்கையு மணிந்து
நெய்யுலாந் தயிர்பா லறுசுவை யன்ன
நிரந்தர முண்டுவாழ் குவரே.

இ-ள். நீலோற்பலம்போன்ற பிரகாசம்பொருந்திய கண்களையுடைய பெண்கள் கூட்டமாய்வாழ்ந்து கொண்டிருக்கும் வீதியில் யாரானாலும் ஒருமாது உண்மைவிளங்கும் எங்க ளிறைவனை நாடிநயந்த சங்கமர் வெவ்விய காமநோயைத் தணிப்பாரேயானால் அவர்கள் இருகரங்களுக்கும் கடகமும், நவமணிகளாலமைத்த ஆபரணங்களும், முத்துமாலைகளும், ஓசையைக்கொடுக்கும் பாதச்சதங்கை முதலிய நூபுரங்களை அணிவதல்லாமலும்; நெய் பால் தயிர் அறுசுவை பதார்த்தங்களோடும் அமுதுண்டு சதாகாலமும் யாதுகுறைவின்றி வாழ்வார்கள். எ-று. (௪௪)

இன்னவா றமைச்ச ருரைக்கவும் மின்னா
ரிறைஞ்சியே யாங்க ளெல்லோரும்
முன்னுபு வடியா ரிடம்பொரு ளிரவு
முழுமையு மிருந்திடப் பெற்றோம்
துன்னுமிவ் விரவு கழிந்தபிந் நீவிர்
சொற்றது போலவா மமைச்சர்
தன்னகஞ் சலித்து மன்னனுக் கதனைச்
சாற்றவு மாங்கவன் மொழிவான்.

இ-ள். இவ்வண்ணமாய் மந்திரிகளுரைத்த மொழியைக்கேட்ட மின்னலைப்போற்றுவளும் இடையினையுடைய அக்கணிகை மாதர்கள், எதிர்வந்து நின்றுபணிந்து பலவாறாகத்துதித்து நாங்கள் யாவரும் இன்றுபகற்போதே நம்மையாட்கொள்ளும் ஸ்ரீ அருணாசலேசருடைய மெய்த்தொழும்பராகிய இவ்வடியார்களிடமின்றிரவு விடியுமளவும் சுகலீலைகளுக்கிணங்கி நடப்பதாய்ப் பொன்னைப்பெற்றுக்கொண்டோமாதலால் இந்நாள் செல்லுமானால் தேவரீர்சொல்லியபடி நடக்கலாமென்று மொழிந்தவைகேட்ட அமைச்சர்கள் தத்தம்மனஞ்சலித்து அவணின்றுநீங்கி அரசனிடம் வந்துரைக்க, அப்போது கூறுவான் வல்லாளமகாராசன். எ-று. (௬௫)

அற்பமிது நமக்கரிதா யிருப்ப தென்கொ
லந்தோவென் றயர்வுற் றுங்கு
பற்பலவாய் சிந்தைதனி லேக்க முற்றி
இறையருளும் பான்மை தானோ
தற்பரனைப் போலெழுந்த சங்கமருக்
குரைத்த வண்ணந் தருவே னென்று
விற்பொருதும் வேந்தனதி விரைவாகக்
கணிகையர்பால் மேவி னானால்.

இ-ள். அற்பமாகிய இச்செய்கை நமக்குக் கிடைப்பதுதற்பலமாகவிருக்கும் காரணம்யாது! ஐயோ! என்று அரசன் துன்பமடைந்து, பின்பு பலவிதமாய் மனத்தில் ஏக்கங்கொண்டு இதுவும் பரமசிவனுடைய திருவிளையாடல் தானோ! ஜகதீசனைப்போல் வடிவுகொண்டு எழுந்தருளிவந்த சங்கமர் எண்ணிய எண்ணந்தருவேனென்றெழுந்து வில்லேந்தி யொளிரும் வல்லாள மகாராசன் மிகவும் தீவிரமாய்விலைமாதர்கள்வாழும்வீதிக்குச்சென்றான் எ-று.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

வந்தவரெதுகேட்டாலும் வழங்குதுமெனப்பதாகை
அந்தரமளாவநாட்டி யளித்திடுநாளினின்று
சுந்தரசங்கமற்குச் சொன்மொழிப்பிறழாதென்னைப்
பந்தமாய்க்காப்பவட்கிப் பதியினைத்தருவேனென்றான்.

இ-ள். நம்பதியை நாடிவந்தவர்கள் எந்தப்பொருளையெண்ணிக் கேட்டபோதினும் கொடுக்கின்றோமென்று ஆகாயபரியந்தமுயர்ந்து பறக்கும்படியாய்த் துவசமுயர்த்தி நடாத்திவரும் நாட்களில், இன்று விரகவேதனையால் மெலிந்து நம்மை நாடிவந்த அழகிய சங்கமருக்கும் உமதுநோயை யகற்றுவோமென்று கூறியவண்ணம்மாறாது ஆசையோடும் காப்பாற்றிய கணிகைக்கு என் அரசுக்குரிய இப்பதியை யளிப்பேனென்று உரைத்தான் வல்லாள மகாராசன் எ-று. (௬௭)

கரிபரி யுடனும் வேண்டுங்
கனகமுந் தருவேன் முத்துச்
சொருகிய சிவிகை யீவேன்
றொல்லுல காள்வ தற்கிங்
கரியசெங் கோலு நல்கி
யவர்க் கியான் பணியுஞ் செய்வேன்
பெரியவர் விரகந் தீர்த்தாற்
பெற்றதா யெனக்கா மென்றான்.

இ-ள். யானை, குதிரை முதலியவைகளோடுந் தாங்கள்வேண்டியபொன்னுந்தருவேன்; இதல்லாமலும், முத்துகளினால் அலங்காரஞ்செய்த பல்லக்குங்கொடுப்பேன்; இப்பூமண்டலமுழுமையும் ஆளநினைத்தபோதிலும் என்செங்கோலைக் கொடுத்தாளும்படி செய்து அவர்கட்கு யான்பணிவிடையுஞ் செய்வேன்; இன்றுநாடிவந்த

சங்கமராது காமநோயைத் தணித்தால் என்னைப்பெற்ற அன்னையு மாவார்களென்று அரசர்க்கரசனாகிய வல்லாளமகாராசன் புகன்றான். எ-று. (௪௮)

உலகினில்வருஞ்சுகத்து ளுயர்சுகமிஃதேயென்று
கலையுணர்முனிவராருங் கழறுவராதலானந்
தலமதிலுற்றசெய்ய சங்கமர்விரகந்தீர்த்தால்
இலகுமென் னுயிர்கேட்டாலு மீகுவேன்வருவீர்மின்காள்.

இ-ள். கடல்சூழ்ந்த இவ்வுலகில்வழங்கும் இன்பங்களுக்கெல்லாமேலாகியது மானேர் விழியினையுடையபெண்களின்கலவித்தொழிலில்வரும் இன்பமே யதிகமென்று வேதநூலுணர்ந்த முனிவர்களும் கூறியிருக்கின்றார்கள்; ஆதலால் நமதுபதியை நாடிவந்தமேன்மைபொருந்திய சங்கமரைவருத்தும் விரகவேதனையை இன்று மாற்றினவர்களுக்கு பிரகாசம்பொருந்திய என்பிராணனைத் தானமாகக்கேட்டபோதிலும் அளிப்பேன் வருவீர் கணிகைமாதர்களே யென்று கூறினான் வல்லாளமகாராசன். எ-று. (௪௯)

ஆதரவாகத்தங்க ளாணையின்படியேயாங்கள்
ஏதமிலடியார்தம்மோ டின்புறப்பொருளும்பெற்றோம்
நாதவென்செய்வோமென்று நங்கையர்பணிந்துரைக்கப்
பூதலமன்னன்வெட்கிப் புகழ்மனைவந்துசார்ந்தான்.

இ-ள். அரசன் சொன்னமொழியைக்கேட்ட விலைமாதர்கள், தேவரீர் ஆக்கினையின்படி நடந்துவரும் நாங்கள் இன்று குற்றமற்ற பரமசிவத்தின் அடியார்களிடத்திற் கலவித்தொழில்புரியும்பொருட்டு பொருள் பெற்றுக்கொண்டோமாதலால் எங்களை ஆட்கொள்ளும் இறைவனே! யாங்க ளென்செய்வோமென்று அடிபணிந்துரைத்தமொழியைக்கேட்ட வல்லாளமகாராசன் நாணமுற்றவனாய் கீர்த்திபொருந்திய தன் அரண்மனையைச் சேர்ந்தான். எ-று. (௫௦)

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

இல்லமுற்ற மன்னன்மதி வதன மாறி
இருப்பதனை மங்கையர்க ளிசைந்து நோக்கி
மல்லமா தேவியரு மிளையா ளாகும்
வண்மைமிகு சல்லமா தேவி யாரும்
தொல்லுலகைப் புரக்கவல்ல எங்கள் கோவே
துன்பமுற்ற காரணமென் னவற்றை நீவிர்
சொல்லுமென வடிபணிந்து வினவ வாங்கு
தூயநெறி யோனவருக் கிதுசொல் வானால்.

இ-ள். அரண்மனைவந்து சேர்ந்த வேந்தனுடைய பூரணசந்திரோதயம்போன்ற முகாரவிந்தம் சலனத்தால் வேறுபட்டிருப்பதைக்கண்ட அவன்-தேவிமார்களில் மல்லமாதேவியும் மிகுவண்மைபொருந்திய இளையாளாகிய சல்லமாதேவியும் நெருங்கிவந்து நெடியகடல்சூழ்ந்த உலகங்களை யெல்லாம் ஒரு குடை நிழலினின்று பரிபாலனஞ்செய்யும் எங்கள் காதலனே! எந்நாளு மில்லாது இன்றுமனத்திற் றுன்பம் நேர்ந்தவாறென்னை? அதனை தேவரீர் அருளிச் செய்யவேண்டுமென்று பாதகமலங்களிற் பணிந்துகேட்க, அங்ஙனம் பரிசுத்தமாகிய நிலையினையுடைய வல்லாளமகாராசன் மங்கையர்களுக்கு நடந்தசெய்தியைக் கூறுவான். எ-று. (௫௧)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

இன்றொரு முதியோர் மாறு
ரின்பத்தி லிச்சை கொண்டு
வென்றிசேர் நம்மை நாடி
வினவிய படிக்கி சைந்திம்

மன்றதில் விலைமின் னார்கள்
வாய்ப்பது மரிதா னொந்தே
னென்றவர் வாய்மை கேட்ட
வெறின்மனை யாருஞ் சொல்வார்.

இ-ள். இன்று ஓர் பெரியவர் சேல்போன்ற விழியினையுடைய மடந்தையர்கள் மயக்கத்தின்மேல் மனம் வைத்து, வெற்றிபொருந்திய நம்பதியைச்சேர்ந்து, நம்மை வினவிய வண்ணமிசைந்து இவ்வருணைமாநகர் முழுமையும் விலைமாதர்கள் வாழும் வீதி யெங்கணுந்தேடியும் கிடைப்பது அரிதாயிருப்பதால் துன்பமுற்றேன்! நான் கொண்டிருந்த வைராக்கியத்தையும் துறந்துவிட்டேன்? என் செய்வேன்! அடியவருக்குரைத்த மொழி தப்பிப் போகின்றதேயென்று கூறித் துன்பமுற்றிருக்கும் வேந்தன் வாய்மையைக்கேட்ட மங்கையர்கள் சொல்லுவார்கள். எ-று. (௬௨)

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்!

விரகமுற்ற வடியவர்க்கு வாக்களித்த வேந்தே நின்
மனம்யாதோ வறிகி லோம்யாம்
இருவர்களிற் சிறியவளா மென்னை யன்னோற்
கிசைத்திடவுங் கருத்துளதே லிசைவே னென்றாள்
திருவளரு மன்னனக மகிழ்ந்து நோக்கிச்
சேயிழையே யடியவரோ டறையிற் சேர்ந்து
உருவிலியாற் படுந்துயர மொழிப்பா யென்று
உத்தமனும் பெரியவருக் குரைத்திட் டானால்.

இ-ள். விரக வேதனையால் மெலிந்துவந்த சங்கமருக் கந்நோயைத் தணியச்செய்கிறேனென்று வாக்குதத்தஞ்செய்த எங்களரசே! தங்களுடைய கருத்துளத்தன்மையதோ சிறியேங்களறியோம், ஆதலால் எங்களிருவர்களிற் சிறியவளாகிய என்னை அவ்வடியவர்க்கிசையச் செய்யும்படியாய் கருத்திருக்குமானால் தேவரீர் எண்ணங் குறைவுபடாம லவ்விதமே நடக்கின்றேனென்று கூறியபோது, இலட்சுமி கடாக்ஷம்பொருந்திய வல்லாள மகாராசன் மனமகிழ்ந்து தன்மங்கையைப்பார்த்து பெண்கள்நாயகமே! என் எண்ணத்தை நிறைவேற்றிவைத்த என்னிரு கண்மணிகளே? நம்மை நாடிவந்த சங்கமரோடு பள்ளியறையிற் சேர்ந்து மன்மதனாற்படுந் துன்பத்தைப் போக்குவாயென்று சொல்லி விடைகொடுத்துப் பின்னர் உத்தமகுணத்தை யுடையவனாகிய மன்னவன் பெரியவரிடஞ்சென்று, தேவரீர் கருத்தின்படி யமைத்தேன் அங்கீகரித்துக் கொள்ளுமென்று மிகு பத்தியோடுங் கூறினான். எ-று. (௬௩)

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

அக்கணநன்னீ ராடி யழகுறவறையுட்சேர்ந்து
மிக்கநல்லியாழைமீட்டி விநோதமாய்க்கிதம்பாடிப்
பக்கலினெருங்கியந்தப் பரமனைப்பார்க்குங்காலி
லக்கணிமெய்யனாங்கே யரியயோகத்திலுற்றான்.

இ-ள். இராச பத்தினியாகிய சல்லமாதேவி வுடனே மஞ்சனமாடி ஆடையாபரணமணிந்து சுகந்த பரிமளங்களை யணிந்துபஞ்சகச்சாய வர்க்கங்களேந்தி வீணையெடுத்துப் பள்ளியறையுட் பிரவேசித்து இந்திரநீல மரகதங்களா லமைத்தொளிரு மஞ்சத்தில் அம்சதூளிகா சயனத்தின்மீ தாரோகணித்துக் கொண்டிருக்கும் அடியவர் பக்கலினின்று கனி இன்னோசையைத்தரும் வீணையை மீட்டிக் கீதம்பாடிக்கொண்டு சிலநேரஞ் சென்றபின்பு பெரியவர் சித்திரப்பிரதமைபோ லசைவற்றிருப்பதை நோக்கையில் உருத்திராட்சமாலிகாபரணமணிந்து விளங்கும் மெய்யினையுடைய பெரியவர் யோகநித்திரையி லிருப்பதைக்கண்டாள் சல்லமாதேவி? எ-று. (

பின்னுமம்மங்கையந்தப் பெரியவர்மகிழவெண்ணித்
துன்னுமங்கவர்மீதுற்ற சுகந்தநீரெடுத்துத்தூவி
நன்னயத்துடனேநிற்க நயனமுந்திறவாதன்னோர்
தன்னையும்நோக்காதாலுந் தயங்கியங்குரைப்பதானாள்.

இ-ள். பின்னையும் அருந்ததிக் கொப்பாகிய அவ்வாசி அங்ஙனம் யோகநித்திரையிலிருக்கும் சங்கமர் மனமகிழத்தக்கதாகநினைந்து பிரகாசம்பொருந்திய அவர்மீது சுகந்தமுறவும் பனிநீரையெடுத்துத் தெளித்தும் நன்னயத்தோடு நின்றும் கண் விழியாமலும் தன்னையும் நோக்காமலு மிருப்பதை யுணர்ந்த தேவி சிந்தைமெலிந்து கூறுவாள். (௫௫)

வேந்தனு லுரைத்த வாய்மை
  வீண்பட முறையோ வந்தோ
ஏந்தலே யென் றிறைஞ்சி
  யெழிலுறு மடந்தை யாங்கு
சாந்தமாய் மேல் விழுந்து
  தழுவவப் பரம ரானோர்
ஏந்தவுங் குழந்தை யாகி
  யின்புற வழுவ தானார்.

இ-ள். அரசர்க் கரசனாகிய எங் கோமானுரைத்த வாய்மைவியர்த்தமாவது தருமமோ! ஐயோ! கடவுளேயென்று தொழுது அழகுலாவும் மாது அங்கு நித்திரையிலிருக்கும் பெரியவர்மேல்மெதுவாய்ச்சார்ந்து ஆலிங்கனஞ் செய்கையில், ஸ்ரீ கயிலாயபதியாகிய சிவபிரான் ஏந்துங் குழந்தை வடிவமாகி யவ்வணங்கு களிப்பும் ஆச்சரியமுங் கொள்ளத்தக்கதாக செங்குமுதம்போன்ற அழகியவாயைத்திறந்துஅழ வாரம்பித்தார். எ-று. (௫௬)

இ-ள். அரசன் இவ்வகையாய் மனம் வெதும்பிக் கோவென்று ாய்விட்டலறி நிற்கையில், மகிமைபொருந்திய தவத்தினையுடைய ர்கள் போற்றிப் பணியத்தக்க பரமசிவம் பார்வதிதேவியோடும் வெள்விடையேறி அநேக சிவகணங்கள் சூழத்தக்கதாகவும், பிரம னும், விட்டுணுவும் வாகனங்களி லேறிவரவும் அருணையம்பதியை ஆளும் வல்லாள மகாராசனுக்குந் தரிசனங் கக்கமாத்திரத்தில் ஆவலோடும் பூமியிற் பணிந்தெழுந்து சிரத்தில் இருகரங்களையுங் கூப்பித் துதித்தான். எ-று. (௫௯)

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

ஆதியேசரணமண்மே லடியரைக்காக்கவல்ல
சோதியேசரணங்கங்கைத் தூயசெஞ்சடையிற்றுண்டப்
பாதிமாமதியணிந்த பரமனேதமியேற்குற்ற
நீதியைத்தாங்கவோர்சேய் நின்மலாவருளுவாயே.

இ-ள். ஆதி நாயகனாகிய தேவே சரணம்; உலகில் அடியார்களைச் சோதித் தாட்கொள்ளும் பூரணனே சரணம்; அருட்பெருஞ்சுடரே சரணம்; கங்கையையும் சந்திரனையும் பரிசுத்தமாய் பொன்போற் பிரகாசிக்குஞ் சடையிற்றரித்த பரம்பரனே! அடியேன் செங்கோல்விதியை ஏற்றுக்கொள்ளும்படி ஓர் புதல்வனைக் கடாக்ஷித்தருளல் வேண்டுமென்று தொழுதான். எ-று. (௬௦)

சுந்தரமன்னுகேண்மோ சுதனுமக்கியாமேயானோ
மந்தத்தினுமுனக்கே மறைவிதிமுடிப்போமென்று
சந்த்ரசேகரனார்வாழ்த்திச் சார்ந்தனர்கயிலைபின்னர்ப்
பந்தமாயுலகைவேந்தன் பண்புடனாண்டுவாழ்ந்தான்.

இ-ள். அழகுலாவுங் கீர்த்தி பொருந்திய அரசே? யாமே உனக்குப் பிள்ளையாய்த் தோன்றினபடியால், உன் அந்தியகாலத்தில் வேதவிதியிற் கூறுஞ் சடங்குகளைச்செய்து வருவோமென்று சந்திரசடாதர மூர்த்தியாகிய சிவபெருமான் வாழக்கடவை என்று கூறித் தேவகணங்களுடன் கயிலாயகிரியைச் சேர்ந்தபின்பு, மிகுந்த ஆவலோடும் வல்லாளமகாராசன் அருணையம்பதியை ஆண்டு வாழ்ந்து வந்தான். எ-று. (௬௧)

ஏழாவது

வல்லாளமகாராசன் சருக்கம்

முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௫௧௨.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தீர்த்தச் சருக்க வசனம்.

சைவபுராணத்திலே உருத்திர சங்கிதையிற் சொல்லப்பட்டனவற்றைக்கூறினேம். இனி இலிங்கபுராணத்தில் உரைத்தவற்றையுஞ் சொல்கின்றாம். நாம் சொல்லத்தொடங்கியசரிதம் பிரமதேவர் சனகர்க்கு உரைக்க, அவர்வியாசர்க்குக்கூற, வியாசர் சூதர்க்கும், சூதர்நைமிசாரணிய இருடிகளுக்கும் உரைத்ததாகும். தீர்த்தங்களின்மகிமையும் பிறவுமுறைக்கின்றேம். கௌதமமுனிவர் சுவாமிசந்நிதியில் யாகமொன்றுசெய்ய, சிவப்பிராமணர்! தோன்றினர். அவரைநோக்கிச் சிவபூசை செய்வீராக என்றார். பின்னர் எழுதருப்பையைக் குண்டத்தில் இட, தேவதாசிகள் எழுவர்தோன்றினர், அவர்களைச் சுவாமிசந்நிதியில் நடனஞ்செய்வீராக என்றார். அவர்கள் தடாகங்கள் பலவற்றையுண்டாக்கி பூரைச்சிறப்பித்தனர். அத் தீர்த்தங்களின்பெயரும் அவற்றின் மகிமையும் கூறுவாம்.

க. அருணாசலத்திற்குக் கிழக்கே இந்திரதீர்த்தம் என்று ஒரு தீர்த்தமுளது. அது இந்திரனால் உண்டாக்கப்பட்டது. தேவலோகத்தின்கணுள்ளவர் நாடோறும் அதன்கண்மூழ்கலால், சந்தனக்குழம்பின்வாசனையும் கற்பகப்பூவின்மணமுந்தோன்றும். அதன்கண் தைப்பூசத்தில் முழுகி ஆசமனஞ்செய்யிற் கோடிபிரமகத்திதோடம் நீங்கும்.

உ. தென்கிழக்கில் அக்கினி தீர்த்தமுளது. அதன்கண் பங்குனிமாதம் பூரணையில்முழுகினால் மாதர்களால்வரும் பாவங்களேகும். தருமமுந் தவமுஞ்சேரும். அக்கினிதேவன் முன்னர்நாளி

ல் சத்தமுனிவர் பத்தினிகளை விரும்ப அதனையவன் மனைவியான சுவாகாதேவியுணர்ந்து அவ்வெழுபத்தினிமார் வடிவத்தையெடுக்கப்புணர்ந்ததனாலுண்டான பாவத்தை இத்தீர்த்தத்தின் மூழ்கியதனாற் போக்கிக்கொண்டான்.

௩. தெற்குத்திசையில் யமதீர்த்தமுளது. இதன்கண்மூழ்கினாற் பொன்மயமானவடிவமும், தேகத்திலுள்ள நோய்நீக்கமும் உண்டாம். பிரமாவின் ஆயுதம்பட்டுத் தேகங்குறைந்ததை யமன் இதில் மூழ்கித் தீர்த்துக்கொண்டான்.

௪. தென்மேற்குத் திசையில் நிருதி தீர்த்தமுளது. இதில் தோய்ந்தவர் பகையைவெல்வர். அவ்வாறே நிருதியென்னும் திக்குப்பாலகனும் இதில் மூழ்கினமையால் அகங்காரமான கொடும்பேயைத் தன்வயமாக்கிக்கொண்டான்.

௫. குற்றமற்ற அருணகிரிக்கு மேலைத்திசையில் வருணதீர்த்தமிருக்கின்றது. இதில் மூழ்கினோர்க்கு நவக்கிரகங்களும் நற்பலனைக்கொடுக்கும். முன்னர் இதன்கண் சூரியன்முதற் கேதுஈறாகவுள்ள ஒன்பது கிரகங்களும் தம் இட்டத்தையடையும்படி மூழ்கினர்.

௬. வடமேற்றிக்கின்கண் வாயுதீர்த்தமுளது. அதன்கண் மூழ்கினோர் எல்லாத் துன்பங்களும் நீங்கினவராவர்.

௭. வடக்குத்திசையிற் குபேரதீர்த்தமொன்றுளது. அதன்கண்மூழ்கினோர் நவநிதிகளும் ஏவல்கேட்பச் சகல போகங்களையும் அனுபவிப்பார். இதன்கண் மூழ்கிய இலக்குமி திருமாலின் மார்பைச்சேர்ந்தாள்.

௮. அருணாசலத்துக்குத் தென்பக்கத்திற் சோணநதியுளது. அதன்கண் கங்கை, நருமதை, காவேரி, சிந்து, துங்கபத்திரைமுதலியநதிமங்கையர்தோய்ந்து தங்களுக்குற்றதுயரினின்று நீங்கினர்.

௯. மேலைப்பாரிசத்தில் புண்ணியநதி என்று ஒன்றுளது. அதன் அருகில் புண்ணியாற்றூரென்ற நகர் இருக்கின்றது. ஆங்குள்ள ஈழன் என்னும் அரசன் தனக்குக் கேடாகவந்த பெண்ணுருவை முழுவித்து நல்லவடிவமாக்கிக் கொண்டான்.

௧௦. சேயாறு என்னும் நதி வடதிசைக்கணுண்டு. இது முன்னர்ப் பார்வதிதேவியாரதுசொற்படி சுப்பிரமணியக்கடவுள் வேலெறிந்து அழைத்த தீர்த்தமாகும். இதன்கண் மூழ்கினோர் இருவினைகளு மகலப்பெறுவர்.

௧௧. சுவாமியின் ஆலயத்துள்ளே சிவகங்கை என்னுந் தீர்த்தமுளது. அதனை நாடோறும் மனத்திலே நினைத்தாற் கங்கையின்மூழ்கி இடபவாகனருடராய் எல்லாத்தேவர்களினும் மேன்மைபெற்றனர்.

௧௨. சக்கரதீர்த்தம் இது சிவகங்கைக்குக் கிழக்கேயுளது. விட்டுணு வராக அவதாரத்தில் மூழ்கிப் பேறுபெற்றார். இதனை வலம்வந்தோர், மூழ்கினோர், உட்கொண்டோர் சகல துன்பங்களும் நீங்கப்பெறுவர்.

௧௩. அருணாசலேசப் பெருமான் திருக்கோயிலின் பக்கத்தே தென்கிழக்கில் பிரமதீர்த்தமுளது. இதன்கண் மூழ்கினோர் பிறவிக்கடலில் அழுந்தார். ஆயிரம் பிறவிகளிற்செய்த எவ்வகைப்பாவங்களும் நீங்கப்பெறுவர். இப்பிரம தீர்த்தத்தில் ஓரணுவளவு பொன் ஒருவர்க்குத் தானங்கொடுக்கப்படுமாயின் நவரத்தினங்களையும் பொன்களையும் கோடிகோடியாகக்கொடுத்த பலமுண்டாகும். சிவப்புப்பசுவைத் தானஞ்செய்தவர்கள் மேருமலைபோலுஞ் சொர்ணவிமானத்திலேறிக்கொண்டு சுவர்க்கஞ்சென்றிருந்து பசுவினுரோமம் ஒவ்வொன்றற்கு ஒவ்வொருகற்பம் வாழ்வர். காராம்பசுவைத் தானஞ்செய்தோர் பசுபதியின் பதத்துவாழ்வார். வெள்ளைப்பசுவைத் தானஞ்செய்தோர் ஆயிரம்வெள்ளை இடபங்களினு

ற்சூழப்பட்ட முத்துவிமானத்திலமர்ந்து பரமன்பதத்தில்வீற்றிருப்பர். கன்னிகாதானம் அன்னதானஞ்செய்தோர் பலன் அளவிட்டுச்சொல்லுதல் கூடாது நந்தவனம்வைத்தோர்: தடாகம், கிணறு, தண்ணீர்ப்பந்தர் முதலாயினவைத்தோர் நற்கதியாகிய சிவசாலோக்கியத்தையடைவர் மடங்கட்டினோர் பலம் வாயினாலுன்னவும்போமோ.

௧௪. அசுவினிதீர்த்தம் வடகிழக்குத் திசையின்கணுள்ளது. இதன்கண்மூழ்கினோர் நாற்பயன்களையுமடைவர்.

௧௫. அகத்தியதீர்த்தம் இது யமதீர்த்தத்திற்குத் தெற்கேயுள்ளது. இதிற் புரட்டாதிமாதத்தில் மூழ்கி ஒருகை நீர் உண்டால் தமிழில் மகாவித்வான்களாயிருப்பர் சரசுவதி இலக்குமியிருவரும் நீங்காது அவரிடம் வசிப்பர்.

௧௬. வசிட்டதீர்த்தம் இது குபேரதீர்த்தத்தினருகேயுள்ளது இதின் மூழ்கினோர் ஞானம் அடைவர். இன்னும் அளவிலாத தீர்த்தங்களுள.

ஒருகாகம் முன்னர்க்காலத்திற் கோயிற் பலிபீடத்தில் வைத்த அன்னத்தைக் கவரும்போது சிறகால் கீழேயடித்தது. அதற்காகச் சுவாமி இந்திரபதத்தைக் கொடுத்தருளினார். ஒருபெருச்சாளிவளையொன்று தோண்டும்போது மாணிக்கமணியைத்தோண்டி வெளிச்சம்செய்ய, சுவாமி அப்பெருச்சாளி தீபமிட்டதென்று அதற்குச் சாலோக்கிய பதமளித்தார். ஓர் சிலந்திக்கும் அவ்வாறு வரங்கொடுத்தருளினார் மணலைச்சிவலிங்கமாக நினைத்தோனுஞ் சிவசாயுச்சியத்தையடைந்தான்.

தீர்த்தச் சருக்க வசனம்

முற்றிற்று.



திருவண்ணாமலைத்தலத்தி னெட்டுத்திக்குகளிலும் பார்வதிதேவியார்முதல் பலதேவர்களாலும், உண்டாக்கப்பட்ட அனேகதீர்த்தங்களின் மகாத்மியம். இப்போது சிலதீர்த்தங்கள் மாத்திரங் காணப்படுகின்றன

447

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டாவது,

தீர்த்தச் சருக்கம்.

செருமலையுங் களிற்றுமுகப் பிள்ளையிரு
பதம்போற்றித் திரையான் முத்தந்
தருமலையு மொருமலையுந் தொலைத்தமலைக்
கிழவனிரு சரணம் போற்றிப்
பொருமலையு மிரங்கலையு மடியாருக்
கொழிக்கவழற் பொருப்பாய் நின்றென்
கருமலையுஞ் செம்மலையும் பச்சைமலை
மடந்தையையுங் கருத்துட் சேர்ப்பாம்.

இ-ள். யுத்தஞ்செய்யத்தக்க யானை முகத்தையுடைய பிள்ளையார் இரண்டுபாதத்தையும்வணங்கி அலைகளாலே முத்துகளை கொ

ழிக்குஞ் சமுத்திரத்தையும் கிரௌஞ்சமென்னு மலையையும் அடக்கிய சுப்பிரமணியர் பாதத்தைவணங்கித் துன்பத்தையும்சோர்வையும் அடியார்களுக்கு ஒழிக்க அக்கினிமலையாகநின்று என்னுடைய பிறவியைக்கெடுக்குஞ் சிவபிரானையும் மரகதநிறம்பொருந்திய பார்வதியாரையும் மனத்திற்சேர்ப்பாம். எ-று. (க)

கலி விருத்தம்.

தேங்கு மன்பிற் சிவபுரா ணந்தனி
லோங்கு ருத்திர சங்கிதை யோதினன்
பாங்கி லிங்க புராணப் பரப்பினு
மீங்க றிந்த படியு மியம்புவேன்.

இ-ள். பெருகிய அன்பினாலே சிவபுராணத்தில் உயர்ந்திருக்கின்ற உருத்திரசங்கிதையை முன்சொன்னேன். பெருமையாகிய இலிங்க புராணப் பரப்பிலே நானறிந்த தன்மையுஞ் சொல்லுவேன். எ-று. (உ)

ஆதி வேத னருளச் சனகனும்
வேதம் வல்ல வியாதனுக் கீந்தனன்
சூத னுக்கவன் சொல்லினன் சூதனு
மேத மற்ற விருடியார்க் கீந்தனன்.

இ-ள். ஆதியிலே பிரமன் சனகரிஷிக்குச்சொல்ல, சனகர்வேதவியாசருக்குச்சொல்ல, வேதவியாசர் சூதரிஷிக்குச் சொன்னார். சூதமகாமுனிவரும் நைமிசாரணியமுனிவர்க்குக்கூறினர். எ-று. ()

வன்னி மாமலைத் தோற்றமும் வான்மலைக்
கன்னி பாகங் கலந்தது முன்னமே
சொன்ன தாதலி னாங்க தொழித்தனன்
பின்ன ருள்ள கதைசில பேசுவாம்.

இ-ள். அக்கினிமலைதோன்றியதும், பெருமையமைந்த மலைப்பெண்ணானபார்வதி, சுவாமியினது இடப்பாகம்பெற்றதும்முன்னமே சொன்னபடியினால் அதைநீக்கிப் பின்னுண்டாகிய சிலசரித்திரங்களையுஞ் சொல்லுவோம். எ-று. (ச)

தீர்த்த மும்மதிற் செய்தரு மங்களும்
வாய்த்த வெற்பின் வலமுமி லிங்கமு
மேத்தி டாதவ ரெய்து மிகழ்ச்சியும்
பார்த்த ரன்பொருள் கொண்டவர் பாவமும்.

இ-ள். தீர்த்தங்கள் மகிமையும், அதிற் செய்யப்பட்ட தருமங்களும், கிரிப்பிர தக்கிணத்தின் மகிமையும், இலிங்கமகத்துவமும், சுவாமியை வணங்காதவரடையு மிகழ்ச்சியும், அவரடைந்தஇகழ்ச்சியைப்பார்த்துச் சுவாமியின்பொருளை அபகரித்தவர்களுக்குவருகின்ற பாவமும். எ-று. (ரு)

பந்த மாயறி யாதுசெய் பாவமுஞ்
சிந்தை யார வறிந்துசெய் தீமையு
முந்தை யோர்க ளொழித்த முறைமையு
மெந்தை நான மகிழ்வுமி யம்புவேன்.

இ-ள். பந்தவசமா யறியாமற்செய்த பாவமும், மனதார அ ந்துசெய்த பாவமும், முற்காலத்திலுள்ளவர்கள் அப்படிவந்த பாவத்தைத் தீர்த்துக்கொண்ட முறைமையும், சுவாமியினால் மகிழ் சியடைந்த புழுகுபூனையின் செய்கையுஞ்சொல்லுகின்றேன். எ-று

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

விருப்பில் கோதமனா ரீசன்
றிருமனை வேள்வி நாட்டத்
திருப்பொலி சடையோன் றன்னாற்
செனித்திடு மறையோ னங்கு

வுருப்பொலி கனலோ னென்ன
  வுதித்தன னவனை நோக்கிப்
பொருப்பிறை யவனைப் பூசை
  புரியெனப் புகழ்ந்து சொன்னான்.

இ-ள். உலகத்து ஆசையில்லாத கௌதமரிஷி, சுவாமி சந்நிதிமுன் வேள்வியொன்று செய்வதற்கு எத்தனித்து அக்கினி வளர்க்க, அழகுபொருந்திய சடையையுடைய அந்தச் சுவாமி கிருபையால் முன்னமே தோன்றியிருக்கிற சிவப்பிராமணன் அந்தயாகத்தில் * அக்கினி சொரூபம்போலப் பிறந்தான்; அவனைப் பார்த்துக் கிரிரூபமாகி விளங்கிய அருணாசலேசுரரைப் பூசை செய்யென்று புகழ்ச்சியாக உபசாரஞ்சொன்னார். எ-று. (௭)

மற்றுமேழ் தருப்பை தீயி
  லிடுதலு மலர்மா தென்னக்
கற்றையங் குழலேழ் மின்னா
  ருதித்தனர் கணிகை மாராய்
நிற்றலு மிறைவர் முன்னே
  நிருத்தமே புரியு மென்றா
னற்றடம் பலவுங் கண்டு
  நகரமுஞ் சிறப்புஞ் செய்தார்.

இ-ள். அதன்பின் கௌதமர் ஏழு தருப்பையை யெடுத்துக் குண்டத்தின் அக்கினியிலே போட்டஅளவில், இலட்சுமிபோலக் கற்றையாயிருக்கின்ற கூந்தலையுடைய ஏழுபெண்கள் தேவதாசிகளாகப்பிறந்தார்கள்; அவர்களைப்பார்த்து நீங்கள்சுவாமி சந்நிதியில்

---

* அக்கினி சொரூபம்போல் பிறந்தான் என்கிற மொழியைக் கௌதம புராணத்தில் தெரிந்து கொள்க.

நாட்டியஞ்செய்து வாருங்களென்றார், அவர்கள் நன்மையாகிய தடாகங்கள் பலவுண்டாக்கி ஊரைச்சிறப்புச் செய்தார்கள். எ-று.

மந்திரம் பரவும் வன்னி மலைதனக் கடுத்த கீழ்பா
லிந்திர தடமுண் டந்த விந்திரன் முதலே கண்ட
தந்தரத் தமரர் தாமு மதிற்றின மூழ்க லாலே
சந்தனக் குழம்பு நாறு மணக்குமைந் தருவின்மாலை.

453

இ-ள். தேவர்கள் மந்திரங்களாலே தோத்திரஞ்செய்யப்பட்ட அக்கினிமலைக்கு அடுத்த கிழக்குத் திக்கில் இந்திர தடாகமென்றொன்றுண்டு; அது இந்திரன் முன்னுண்டாக்கினது; தேவலோகத்திலுள்ளவர்கள் அதில் நித்தியமும் முழுகுதலால் சந்தனக்குழம்பின்வாசனையுங் கற்பகப்புட்பத்தின் மாலையினுடைய வாசனையும் மணக்கும். எ-று. (௯)

பரம்மா மிதிற்றைப் பூசம் படிந்திடிற் பருகிற்கோடி
பிரமபா தகம்போ மென்றா லதினலம் பேச லாமோ
சுரர்பதி மூழ்கி முன்னே தொடர்ந்த தீவினைக டீர்ந்தா
னிரவியுள் ளளவும் வாழ விமையவ ருலகம் பெற்றான்.

இ-ள். மேன்மைபொருந்திய அந்த இந்திரதீர்த்தத்தில் தைப்பூசத்தில் ஸ்நானஞ்செய்து ஒருகைசலம்ஆசமனஞ்செய்தால், கோடி பிரமஹத்திதோஷம் போமென்றா லதன்பெருமையைப் பேசக்கூடுமோ! இந்திரன் முன் அதில்மூழ்கித் தன்னைப்பற்றிய தீவினைகளை நீக்கிக்கொண்டு சூரியனுள்ளளவும் வாழத் தெய்வலோகத்தையும்பெற்றான். எ-று. (௧௦)

அங்கதன் பெயராந்தீர்த்த மருணைமால் வரைத்தென்
கீழ்ப்பாற், பொங்கிய ததனின் பீனத் திங்கட்பூ ரணையில்

மூழ்கிற், செங்கயற் கருங்கட் செவ்வாய்த் திருந்திழையவ
ரால்வந்து, தங்கியவினையுந்தீருந் தருமமுந் தவமுஞ்சாரும்.

இ-ள். அருணாசலத்துக்குத் தென் கிழக்கில் அக்கினி தீர்த்தமென்றொன்றுண்டு; அதில் பங்குனிமாதம் பௌர்ணமியில் முழுகினால் செம்மையான மீன்போன்ற கரிய கண்களையும் சிவப்பாகிய வாயையுமுடைய மாதர்களால் வந்து பொருந்திய பாவமுந் தீரும்; தருமமும் தவமுஞ்சேரும். எ-று. (௧௧)

வன்னிமுன் னொருநா ளேழு
மறைக்குல முனிவர்காதற்
றுன்னிய மடந்தை மாரை
விரும்பத் தன் சுவாகை யந்தப்
பன்னியர் வடிவ மாகப்
புணர்ந்துமேற் படர்ந்த பாவந்
தன்னைத்தான் கண்ட வந்தத்
தடத்தினிற் படிந்து சாய்த்தான்.

இ-ள். அக்கினிதேவன் ஒருநாள் வேத முணர்ந்த எழுமுனிவர்களுடைய பத்தினிமார்களை விரும்ப, அதைத் தன் பெண்சாதியாகிய சுவாகாதேவியறிந்து அந்த மாதர் வடிவத்தைத் தானெடுக்கப்புணர்ந்து மேலே நினைத்த பாவத்தைத் தீர்க்கத் தன்னாலே உண்டாக்கப்பட்ட அத்தடாகத்தில் ஸ்நானஞ்செய்து பாவத்தைப் போக்கிக் கொண்டான். எ-று. (௧௨)

தென்றிசைத் தரும தீர்த்த முளதனிற்
செறிந்து மூழ்கிற்
பொன்றிகழ் வடிவ மாகு முடற்பிணி
பொழிபட் டோடும்

வென்றியிற் காலன் முன்னாள்
விதிப்படை தொடர மேனி
குன்றிய சாபந் தீர்த்தா
னதனிடைக் குளித்து மாதோ.

இ-ள். பின்னும் அந்தமலைக்குத் தென் பக்கத்தில் யமதீர்த்தமென்றொன்றுண்டு, அதில் அடைந்து மூழ்கினால் உடல் பொன்வடிவமாகும்; தேகத்திலுள்ள வியாதிபோம், வெற்றி பொருந்திய பிர்ம்மாவினது ஆயுதந்தொடர்ந்துதேகங்குன்றினதையமனானவன் அதில்மூழ்கித் தீர்த்துக்கொண்டான். எ-று. (௧௩.)

நீங்கரு நிருதி தீர்த்த முளதுமே னிருதி கோணத்
தாங்கதின் முழுகி னாருக் கரும்பகை யனைத்துந்தீரு
மோங்குமத் தடத்தின் முன்னே யுருக்கியே நிருதிமூழ்கி
வீங்கிய கனற்கட் பேழ்வா யலகையின் விசயம் பெற்றான்.

இ-ள். நீங்குதற்கரியதாகிய நிருதிதீர்த்தமென்று நிருதிமூலையிலிருக்கின்றது, அதில் முழுகினவர்களுக்கு அரிய பகைகளெல்லாந் தீரும்; உயர்ந்த அந்தத் தீர்த்தத்தில் முன்னே முழுகின பலத்தினால் நிருதியானவன் நெருப்புநிறம்போன்ற கண்களையும் ஆழமாகிய வாயையுமுடைய பேயைத் தன்வசமாக்கிக் கொண்டான்

வசையறு மலைக்கு மேல்பால் வளம்பெறு வருண தீர்த்த
நசைபெற வதனின் மூழ்கிற் கிரகமொன் பானு நன்றா
மிசைபெறக் கிரக மெல்லா முழுகுமவ் விடத்தில் வாயு
திசையினிற் பவன தீர்த்த முழுகிலெத் துயருந் தீரும்.

இ-ள். குற்றமற்றஅருணகிரிக்கு மேற்குத்திக்கில்வளப்பமுள்ள வருணதீர்த்தமென்றொன்றுண்டு, ஆசையுண்டாக அதில்முழுகினால் ஒன்பது கிரகங்களும் நன்மையைக்கொடுக்கும்; முன் அந்

ஒன்பதுபேரும் அதில் தங்களிஷ்டத்தையடைய மூழ்குவார்கள்; வாயுதிக்கில் வாயுதீர்த்தமென் றொன்றுண்டு, அதில் முழுகினால் எல்லாத்துன்பமுந் தீரும். எ-று. (௧௫)

வடதிசை குபேர தீர்த்த முழுகினோர் வறுமை போமத்
தடமதிற் குணபா லீசன் மருத்துவர் சமைத்த தீர்த்தம்
புடைசெறிந் ததனின் மூழ்கிற் புலையரிற் கடைய ரேனு
மடைவுடன் வருண நான்கி லதிகமா யரனைச் சேர்வார்.

இ-ள். வடக்குத்திக்கிலே குபேரதீர்த்தமென் றொன்றுண்டு, அதில் முழுகினவர்களுடைய தரித்திரம்நீங்கிப்போகும்; அதற்குக் கிழக்கு ஈசானியதிக்கில் அசுவினிதேவர்களால் உண்டாக்கப்பட்ட தீர்த்தம் இருக்கின்றது, அதில் முழுகினால் நீசரைப் பார்க்கிலும் இழிந்தவராயிருந்தாலும் பெருமையோடு நான்குவருணத்திலு மதிகமாகிப் பரமசிவனைச் சேர்வார்கள். எ-று. (௧௬)

அந்தகத் தடத்திற் றென்பா லகத்தியத் தடமுண் டங்கே
முந்திய கன்னி மாதம் மூழ்கியுட் கொண்ட பேர்கள்
சந்திர வதனங் கண்டார் தமிழ்க் கவிக் கரச ராவர்
செந்திரு மயிலுங் கல்விச் செல்வியுஞ் சேரு மன்றே.

இ-ள். முன் தெற்காகச்சொன்ன யமதீர்த்தத்துக்குத் தெற்காக அகத்திய தீர்த்தமென் றொன்றுண்டு, அதிற் புரட்டாசி மாதத்தில் முழுகி ஒருகைஜலம் உட்கொண்டபேர்களுடைய சந்திரனையொத்த முகத்தைப் பார்த்தவர்கள் தமிழிற்சிறந்தவர்களாவார்கள்; இல்ட்சுமியும் சரசுவதியும் அவரிடத்திற் சேர்ந்திருப்பார்கள்.

தனபதி தடத்தைச் சேர வதிட்டனோர் தடமுண் டந்த
முனிவரைப் பசியின் மூழ்கி முனிவரிற் றலைமைபெற்றா
ரனையதின் மூழ்கி னோர்கட் கங்கமுஞ் செங்கை நெல்லிக்
கனியென விளங்கும் பாவக் கடலதுங் கடப்ப ரன்றே.

இ-ள். முற்சொன்ன குபேர தீர்த்தத்துக்கருகே வதிட்டதீர்த்தமென்றொன் றுண்டு அதில்வதிட்டர் ஐப்பசிமாதத்தில் முழுகி முனிவர்களுக்கெல்லாம் முதன்மையா யிருக்கப்பெற்றார்; அப்படிப்பட்ட தீர்த்தத்தில் முழுகினவர்கட்குச் சாத்திரங்களெல்லா முள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கும், பாவமாகிய கடலையுங்கடப்பார்கள். எ-று. (௧௮)

கங்கைவேற் குமாரனை முகத்தவன்
  கதிரோன் வெற்பின்
மங்கையோர் வடுகன் கன்னி
  மதியமெண் வசுக்கள் வெள்ளைப்
பங்கய மடந்தை தேவர்
  குடைதடம் பலவுஞ் சூழ
மங்கதோர் தடத்தின் மேன்மை
  மறைகளு மறிவுறாவே.

இ-ள். கங்கை, வேலாயுதமேந்திய சுப்பிரமணியர், விக்கினேசுரர், சூரியன், பார்வதி, வயிரவர், சத்த கன்னிகள், சந்திரன், அஷ்டவசுக்கள், சரசுவதி, மற்றுமுள்ள தேவர்கள் முழுகிய தீர்த்தங்கள் அநேகமுண்டு; அவைகளில் ஒவ்வொரு தீர்த்தத்தின் பெருமையை வேதங்களும் சொல்ல அறியா! எ-று. (௧௯)

ஒருநதி தானு மொவ்வாத்
  திருநதி வடபா லாக
வருநதி முழுகிப் பூமான்
  மாயவ னுரத்திற் சேர்ந்தா
ளருமறை பரவுஞ் சோண
  நன்னதி தென்பாற் றோன்றுஞ்
சுரநதி யமுனை பொன்னி
  படிந்துதந் துயரந் தீர்ந்தார்.

இ-ள். ஒருநதியையும் ஒப்பச்சொல்லக்கூடாத திருநதி என்று ஒருநதி, அருணாசலத்துக்கு வடக்குப் பக்கத்தில் உண்டு; அதில் இலக்குமிமுழுகி விட்டுணுவினுடைய மார்பைச்சேர்ந்தாள், நர்மதாநதிவணங்குஞ் சோணமென்ற ஒருநதி, அருணாசலத்துக்குத் தென்பாரிசத்திலிருக்கும்; அதில் கங்கை, யமுனை, காவேரி முதலிய நதிகள்முழுகித் தங்கள் துன்பத்தைப் போக்கிக் கொண்டார்கள். எ-று. (௨௦)

புண்ணிய வாறு தெய்வ மலைக்குமேற்
றிசையிற் பொங்கும்
நண்ணிய புண்ணி யாற்றா ரென்றுபேர்
நகரந் தானும்
எண்ணிய நதியின் மூழ்கி யீழமனென்
றரசன் றீங்காம்
பெண்ணியல் வடிவந் தீர்ந்தான் வடிவமும்
பேறும் பெற்றான்.

இ-ள். தெய்வீகம்பொருந்திய அம்மலையின் மேற்பக்கத்தில் புண்ணியநதியென்று ஒன்றுண்டு; அதனருகில் புண்ணியாற்றூர் என்று ஒருநகரமுண்டு, அதிலிருந்த ஈழமனென்கிற அரசன் தனக்குத்தீங்காகவந்தடைந்த பெண்ணுருவை அந்நதியில் முழுகித்தீர்ந்து நல்லஉருவமும் வேண்டியபேறும் பெற்றான். எ-று. (௨௧)

திருந்துசே யாறு முன்சொற் றிருநதி வடபாற் றோன்றும்
பொருந்தவே லெறிந்து செவ்வே ளழைத்தவப் புனித நீரி
லருந்திக ழயிலோன் மூழ்கி யசுரரைத் தொலைக்குஞ் சீரு
மருந்தயி லமரர் சேனா பதியெனும் வரமும் பெற்றான்.

இ-ள். அழகிய சேயாறென்னு நதிமுன்சொன்ன திருநதிக்கு வடபக்கத்திலிருக்கும், அதுமுன்சுப்பிரமணியர் வேலெறிந்தழைத்த தீர்த்தம்; அதில்மிகவும் பிரகாசிக்கின்றவேலையுடைய அச்சுப்பிரமணியரேமுழுகி அசுரர்களைக் கொல்லும் வரமும் அமிர்தபானஞ் செய்யுந்தேவர்களுடையசேனாபதியென்கிறபேரும்பெற்றார். எ-று.

திருத்தா லயத்தி னுள்ளே சிவதட முளது நித்தங்
கருத்தினு ணினைத்தாற் றெய்வக் கங்கையிற் படிந்ததொக்கு
முருத்திரர் பலரு மாசி மகத்திலே யுகந்து மூழ்கி
யெருத்தினி விருந்துதேவ ரெவரினு மேற்றம் பெற்றார்.

இ-ள். சுவாமி ஆலயத்திற் சிவகங்கையென்று ஒருதீர்த்தமுண்டு; அதைத்தினந்தோறும் மனதிலே நினைத்தாற் கங்கையில் முழுகிய பலனுண்டாகும்; அநேக உருத்திரர்கள் மாசிமாதத்தில் ஸ்நானஞ்செய்து இடபவாகனரூடராய் எல்லாத்தேவர்களினும் மேன்மைபெற்றார்கள். எ-று. (௨௩)

சக்கர தீர்த்த மந்தத் தடத்தினிற் குணபாற் றோன்று
மைக்கட லனையமேனி வராகமால் படிந்த தாகு
மக்கரை வலமாய் வந்தோர் முழுகினோ ரருந்தி னோர்க
டுக்கசா கரம்விட் டீசன் றுணைப்பதம் பெறுவ ரன்றே.

இ-ள். சக்கரதீர்த்தமென் றொருதீர்த்தம், முன்சொன்ன தீர்த்தத்துக்குக் கிழக்கிலிருக்கின்றது; அதுமுன்னமே சமுத்திரத்தினிறம்போன்றவிட்டுணு வராகவதாரத்தில் முழுகிப்பேறுபெற்றதாகும்; அத்தீர்த்தத்தை வலமாகவந்தவர்களும் அதில் முழுகினவர்களும் அந்நீரை உட்கொண்டவர்களும் துக்க சமுத்திரத்தில் நின்றுமங்கிச் சிவபிரானது இரண்டுபாதங்களையும் இடமாகப்பெறுவார்கள். எ-று. (௨௪)

நாயக னமருங் கோயின் மருங்கினி னளிநக் கோயிற்
றாயவன் பெயராந் தீர்த்தந் தீயவன் றிசையிற் றோன்றுங்
காயமத் தடத்திற் றோய்ந்தார் பிறவியாங் கடலிற் றோயா
ராயிரஞ் சனனந்தோறு மடைந்த தீவினையுந் தீர்ப்பார்.

இ-ள். அருணாசலேசுரர் எழுந்தருளியிருக்கின்ற கோயிலுக்குப்பக்கத்தில் அக்கினிதிசையில் பிரமதீர்த்தமென்று ஒருதீர்த்தம் உண்டு. அதில் முழுகினவர்கள் பிறவிக்கடலில் முழுகார்கள்; ஆயிரம் பிரப்புக்கள்தோறுஞ்சேர்ந்த தீவினையுந் தீர்ப்பார்கள். ()

அத்தட முழுகிச் செம்பொன் னணுவளா வளிப்பா ராகிற்
சத்தசா கரஞ்சூ ழிந்தப் புவியெலாந் தனத்தி னோடு
முத்தணி மணியி னோடு நிறைத்தது முழுது மீசன்
பத்தர்பா லளிக்கு மந்தப் பலத்தினு மதிக மாகும்.

இ-ள். அத்தீர்த்தத்தில்முழுகித் தங்கம் ஒரு அணுவளவுகொடுப்பாரானால் சத்தசமுத்திரஞ்சூழ்ந்த இப்பூமியெல்லாம் சொர்ணத்தினாலும், நவரத்தினங்களினாலும் நிறைத்து அவைகளையெல்லாம் சுவாமியுடைய பத்தரிடத்திற்கொடுக்கும் பலனினுமதிகமாகும்.

தேனகு தடத்தின்மூழ்கிச் செய்யவா னீத்தோர்வெள்ளைத்
தானவா ரணஞ்சூழ் செம்பொற் சயிலநேர் விமானத்தேறி
மேனகை யரம்பை தூய கவரிக ளிரட்ட மேனி
யானிலோர் மயிர்க்கோர் கற்ப மரன்பதத் திருப்ப ரன்றே.

இ-ள். தேன்பொருந்திய புட்பங்களையுடைய அத்தீர்த்தத்தில்முழுகிச் சிவப்புப்பசுவைத் தானஞ்செய்தவர்கள் மதங்கொண்ட வெள்ளையானைகள்சூழ்ந்து தாங்கப்பட்ட மகாமேருபோலுஞ் சொர்ண விமானத்திலேறிக்கொண்டு மேனகை, அரம்பை இருவரும் பரிசுத்தமாகிய கவரிவீசப்போய் அப்பசுவின்மயிர் ஒன்றுக்கு ஒரு கற்பகாலம் சிவபதத்தில் இருப்பார்கள். எ-று. (௨௭)

காலமே யதனின் மூழ்கிக் கரியவா னளித்தோர் கோல
நீலமால் வரைபோ னீல நெருங்கிய விமானத் தேறிச்
சூலமே பிடித்துப் பூதகணத்தவர் தொடர்ந்து போற்றப்
பாலலோ சனர்வாழ் கின்ற பரபதத் திருப்பரன்றே.

இ-ள். அத்தீர்த்தத்தில் காலமே முழுகிக் கறுப்புப் பசுவைத் தானஞ்செய்தவர்கள், அழகுபொருந்திய நீலமலைபோல் நீலரத்தினமிழைத்த விமானத்திலேறிச் சூலாயுதம்பிடித்துக்கொண்டு பூதகணங்கள் தொடர்ந்துவந்துவணங்க நெற்றிக்கண்ணையுடைய சிவனது பரமபதத்திலிருப்பார்கள். எ-று. (௨௮)

வெள்ளையா னளித்தோர் வெள்ளை
விடைகளா யிரஞ்சூழ் முத்தின்
கொள்ளையாம் விமானத் தேறி
யிமையவர் குழாங்கொண் டேத்த
வள்ளலார் பதத்திற் சேர்வர்
மழைக்குடை செருப்புத் தந்தோ
ரெள்ளரும் பரிமா வீந்தோ
ரிந்திர பதத்திற் சேர்வார்.

இ-ள். அத் தீர்த்தத்தில் முழுகி வெள்ளைப் பசுவைத்தானங்கொடுத்தவர்கள், ஆயிரம் வெள்ளையிடபங்கள்சூழ்ந்த முத்தினாலலங்கரிக்கப்பட்டவிமானத்திலேறிக்கொண்டு தேவர்கள்கூட்டமாகச் சேர்ந்துவணங்கச் சுவாமிபதத்திற்சேர்வார்கள்; மழைக்குக்குடையும், (வெயிலுக்கு) பாதரட்சையுங்கொடுத்தவர்கள் இகழ்தலில்லாத குதிரைகொடுத்தவர்களும் இந்திரபதவியிற்சேர்வார்கள். எ-று. ()

கன்னியைத் தான மாயக் கரைதனி லளித்தோர் தேவர்
பொன்னிய லுலகிற் போக பூமியி லளகை நாட்டின்
மின்றிகழ் மலரோ னாட்டில் விரும்பின நுகர்ந்து தேவர்
சென்னியால் வணங்கப் போற்றச் சிவபதத் திருப்பரன்றே.

இ-ள். அத்தீர்த்தக்கரையில் கன்னிகாதானஞ்செய்தவர்கள் தேவலோகத்திலும், சுவர்க்கலோகத்திலும், குபேரனுடைய அளகாபுரிபட்டினத்திலும், பிரகாசம்பொருந்திய பிரமலோகத்திலும், இவைகளிலிருந்து விரும்பினவற்றையெல்லாம் அனுபவித்துத் தேவர்கள்தலையாலேவணங்க அதன்பின்சிவபதவியிற் சேர்வார்கள்.

உத்தம தலத்திற் கோடி யருந்தவர்க் குதவு மன்ன
நித்தமாங் காசி மீதோ ரவிழ்ப்பலன் றனக்கு நேரா
தத்தலத் தனந்த கோடி யருந்தவர்க் குதவு மன்னஞ்
சத்திய வருணை நாட்டி லவிழ்ப் பலன் றனக்கொவ்வா தே.

இ-ள். உத்தமமாகியதலங்களிற் கோடி அருமையாகிய தவசிகளுக்குப்படைத்த அன்னத்தின்பலன் நித்தியமாயிருக்கிறகாசியில் பெரியோர்களுக்குப் படைத்த அன்னத்தில் ஒரு அன்னப்பலனுக்கும் ஒவ்வாது; அப்படிப்பட்டகாசியிலநேககோடிதவசிகளுக்குப்படைத்த அன்னத்தின்பலன் உண்மையாகிய அருணாசலத்தலத்திற்படைத்த அன்னத்தில் ஒரு அன்னப்பலனுக்கு ஒப்பாகாது. ()

ஆவடி யளவு பூமி யந்தணர்க் களித்தோ ரீசன்
சேவடி நிழலிற் றங்கள் கிளையுடன் செருக்கி வாழ்வார்
மாவிடை யரற்கு விட்டோர் மற்றொரு விடைமே லேறி
மேவிடுஞ் சிவலோ கத்திற் பவனிபோய் வியப்ப ரன்றே.

இ-ள். பசுவின் குளப்படியளவ்பூமி பிராமணர்கட்குத் தானஞ்செய்தவர்கள், பரமசிவன்பாதநிழலிலேதங்களுடையசுற்றத்தோடுகளித்துவாழ்வார்கள்; சுவாமிக்குப் பெருமைபொருந்திய ரிஷபங்களைத்தானஞ்செய்தவர்கள் வேறுரிஷபவாகனத்தி லேறிக்கொண்டுசிவலோகத்தில் பவனியாகப்போய் சந்தோஷித்திருப்பார்கள்.

சாலைகள் சமைத்தோர் நந்த வனஞ்சமைப் பித்தோர்கேணி
கூல்மார் தடங்கள் கண்டோர் குலிசனார் பதத்திற்சேர்வா
ராலய மெழுகித் தூர்த்து விளக்கிட்டோ ரலங்க ரித்தோர்
வேலையி னடுவிற் பாந்தண் மெத்தையிற் றுயில்வ ரன்றே.

இ-ள். அருணாசலத்திற் சாலைவைத்தவர்களும், நந்தவனம் வைத்தவர்களும், கிணறுகள் மணற்குன்று பொருந்திய குளங்கள் வெட்டினவர்களும் இந்திரபதவியடைவார்கள்; ஆலயத்திலுள்ள பள்ளம்நிரவி மெழுகி விளக்கேற்றிவைத்தவர்களும், அலங்காரஞ்செய்தவர்களும் விட்டுணுவாய்த் திருப்பாற்கடல்மத்தியில் சற்பசயனத்தில் யோகநித்திரைசெய்வார்கள். எ-று. (௯௩)

463

மகிழ்ப்புனலரிதாநாளின் மருவுநீர்ப்பந்தர்வைத்தோர்
செழிக்குமேற்பதவிதன்னிற் றேவருந்துதிக்கவாழ்வார்
புழைக்கைமாவுரியரன்பர்க் கணிகலைபுனைவித்தோரோ
ரிழைக்களவிறந்தகால மிறைபதத்திருப்பரன்றே.

இ-ள். நீரரிதாகியகோடைக்காலத்தில் தண்ணீர்ப்பந்தல்வைத்தவர்கள், செழிப்பன மேலாகியபதவியில் தேவர்களும்புகழும்படி வாழ்வார்கள்; யானையுரிபோர்த்த சிவனுடைய அன்பருக்குவஸ்திரங்கொடுத்தவர்கள் ஓர் இழைக்கு அளவிறந்தகாலம் சிவபதத்திலிருப்பார்கள். எ-று. (௯௪)

மடஞ்சமைத்தவர்களந்த மடத்திலோர்துகட்கோர்கற்ப
மிடம்பிடித்தழியாவீட்டி லிருப்பர்வேறிறந்தபேர்க்கும்
விடங்குடித்திறந்தபேர்க்கும் விதியினாலுறுதிவேள்விக்
கடன்கழித்தனரேலந்தக் குலமெலாங்கதியிற்சேரும்.

இ-ள். இத்தலத்தில் ஒருமடங்கட்டினவர்கள், அம்மடத்திலிருக்கிற ஒருதுகளுக்கு ஒருகற்பகாலம் கெடுதலில்லாதமோக்ஷத்தில் நிலைபெற்றிருப்பார்கள், பின்னும் வேறுவீதமாயிறந்தவர்கட்கும் விஷங்குடித்திறந்தவர்கட்கும் விதியாக உறுதிபொருந்தியபிதிர்யாகம் அத்தலத்திற்செய்தால் அவர்கள் குலத்தாரெல்லாருங் கதியிற் சேருவார்கள். எ-று. (௯௫)

காகமுன்பலிபீடத்திற் பலிதனைக்கவரும்போதி
லாகமார்சிறையைக்கீழே புடைத்ததாலயத்தினூடே
யோகையானமதுகோயில் விளக்கியதெனவுட்கொண்டு
பாகசாதனனார்வாழும் பதியினைப்பரமனீந்தான்.

இ-ள். ஒருகாக்கை அத்தலத்துக்கோயிற் பலிபீடத்தில் வைத்திருக்கிறபலியன்னத்தை வாயினாற்கிரகிக்கும்போதுதன்னுடை

ய சிறகால் கீழேயடித்தது; அதைச் சுவாமிபார்த்து ஆலயத்திற் பிரியத்தினால் நம்முடைய கோயிலை விளக்கினதென்று நினைத்து இந்திரன்வாழ்கிற தேவலோகத்தை அக்காக்கைக்குக் கொடுத்தருளினார். எ-று. (௧௬)

மூடிகமொன்றுகோயின்
முழையினைக்கிளறும்போது
தேடருமணியொன்றங்கே
சிதறியோர்விளக்கங்காட்ட
வாடியபெருமான்றீப-
மளித்ததென்றதற்குநல்ல
வீடுயர்நெறியுங்காட்டி
விரைந்துசாலோகமீந்தான்.

இ-ள். ஒரு பெருச்சாளி கோயிலில் வளை யுண்டாக்கும்போது தேடுதற்கரிய மாணிக்கமணியொன்று அங்கே சிதறிச் சந்நிதியில் விளக்குபோலக் காண்பிக்க, நடனஞ்செய்த சுவாமி நமக்குத் தீபங்கொடுத்ததென்று அதற்கு ஞானமார்க்கத்தைத் தெரிவித்துச் சாலோகபதவியைக் கொடுத்தார். எ-று. (௧௭)

சிலந்தியொன்றொருநாளந்தத்
திருமலையிடத்துநூலைக்
கலந்துடனிழைக்கவீது
கலைநமக்களித்ததென்று
நலந்திகழரசனுக்கி
யதற்குநல்லறிவுநல்கி
யுலந்தபின்னெடியமாய
னுலகினையுதவினானே.

இ-ள். அம்மலையில் ஒருநாள் ஒருசிலந்திவாயினூலால் பின்னவிட, இதுவஸ்திரஞ்செய்துகொடுத்ததென்று அச்சிலந்தியை அரசனாகப்பிறப்பித்து நல்ல ஞானத்தைக்கொடுத்துத் தேகவியோகமானபிறகு விஷ்ணுலோகத்தைக்கொடுத்தார். எ-று. (௧௮)

455

வேறு.

ஒருமணலைச் சிவனுருவ மென நினைத்தவ்
விடத்தில் வைத்தோ னொருவன் பின்னைப்
பரகதிபுக் கடைந்துசிவ னென்னவேற்
றுமையகன்ற பதவி சேர்ந்தான்
பொருவரிய வருணகிரிப் பதிவளமீ
தென வுரைத்துப் புண்டரீகத்
திருமுகமண் டலமலர்ந்தே யிருந்தனனான்
மறைபுகன்ற செல்வன் றானே.

இ-ள். பின்னும் அத்தலத்தில் ஒருவன் மணலைச் சிவனுருவமென்று நினைத்துவைத்ததனால், அவன் மேலாகிய கதியைச்சேர்ந்து சிவனென்றும் இவனென்றும் பேதமில்லாமல் இருக்கின்ற சாரூப்பியபதவியைப்பெற்றான்; ஒப்பில்லாத அருணாசலத்தின்வளம் இதுவென்று தாமரைமலர்போன்ற முகமலர்ந்து சொல்லியிருந்தார் வேதங்களையுஞ்சொன்ன பிரமதேவர். எ-று. (௧௯)

எட்டாவது
தீர்த்தச் சருக்கம்
முற்றிற்று.
ஆக திருவிருத்தம் - ௫௫௦.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருமலை வலம்புரிச் சருக்கவசனம்.

உலகம் படைத்த நான்முகக்கடவுளே! தீர்த்தமுதலியவற்றின் பெருமைகளையெல்லாங்கேட்டு என்மனம் ஆனந்தத்தழுந்திடுது. திருமலையை வலம்புரியுந் திறத்தையுஞ் சொல்லியருள்வீராக வென்று சனகமகாமுனிவர் கேட்குதலும் பிரமதேவர் கூறுவார்.

திருமலையைவலம்புரியுந்திறம் யாவராலறிதல்கூடும். கற்பகாலந்தவஞ்செய்தோர் தாமும் அறியமாட்டார். சோணகிரியாகிய அம்மலையைவலம்புரிதல் பிறவிக்கடலுக்கு ஓர்தோணியாகும். நரகக்குழிசெல்லாது முத்தியென்னும் மேல்வீட்டிற்கு ஏறவைத்த ஏணிபோலவுமாகும், தவத்திற்கும் அரும்பொருட்கும் காணியாகும். சிவபெருமானையுருக்கத்தக்க நெகிழ்ச்சியாகும். காசித்தலத்திலும் ஏனையமுத்தித்தலங்களினும்வசித்துக் கற்பகாலம் சிவபெருமானைப் பூசிப்பதும், அரியதவஞ்செய்வதும், யோகசமாதிகூட்டி அளவிறந்தசித்திபெறுவதும் இம்மலையைவலஞ்செய்வதற்கு நிகராகமாட்டா. அருணகிரியை வலம்வருவேம் என்றுசொன்னமாத்திரையே சகலபாவங்களுந்தொலையும். வலஞ்செய்வேம் என்று அடியெடுத்துவைத்தவர்க்கு ஒவ்வோர் யாகபலன்கிடைக்கும். இரண்டடிக்கு இராசசூயயாகபலன் கிடைக்கும். மூன்றடிக்கு அசுவமேதயாகபலனாகும். நான்கடிக்கு எல்லாயாகபலனுங்கிடைக்கும். பிரதக்கிணஞ்செய்கையில் தூக்கிவைத்த ஓரடியின்பலன் பூமிப்பிரதக்ஷிணஞ்செய்த பலன்தரும். இரண்டடியின் பலன் சருவ தீர்த்தமாடிய பலனைக்கொடுக்கும். மூன்றடியின்பலன் பதினாறு தானங்களையுஞ் செய்த பலனையளிக்கும். நாலடியின்பலன் அட்டாங்கயோகஞ்செய்த பலனையளிக்கும்.

[illegible]வயன்றி வலமாகவைத்த ஓரடிக்குப் பூசாபலன்கள் எல்லாம்பலிக்கும். இரண்டு அடிக்கு இலிங்கப் பிரதிட்டைக்குரிய பலன்சித்திக்கும். மூன்றடிக்குக் கோடிவிமானம் தூபி என்னுமிவையுடைய கோயில்களைக் கட்டிய பலன்கள் கிடைக்கும். அருணாசலத்தை வலஞ்செய்ய வேண்டுமென்று ஓரடிவைத்தோர் உருத்திரபதத்தை யடைவர். இரண்டடி வைத்தோர் மகேசுர பதத்தையடைவார். மூன்றடிவைத்தவர் கோடி தலைமுறைப் பிதிரர்களையும் நற்பதவியிற் சேர்ப்பாராவார்.

அருணகிரியை வலஞ்செய்தவர் திருக்கயிலையை யடையுங்காலத்தில் சந்திரன் வெண்குடைகவிப்பான். சூரியன் தீபமெடுப்பான். தருமதேவதை கைதாங்கிவரும். இந்திரன் வரும்வழிகடோறும் புட்பங்களைப் பரப்புவான், குபேரன் தண்டஞ்செய்து அருகில்வருவான். எட்டுவசுக்களும் புட்பமாரியைப் பொழிவார்கள். மேனகை, அரம்பை, திலோத்தமை முதலினோர் சங்கீதம்பாடி நடனம் புரிவர். கங்கை, யமுனை சாமரம் இரட்டுவர். மேகங்கள் அமிர்தத்தையும் ஆடைகளையும் எடுத்துக் கொண்டுவரும். நான்கு வேதங்களும் [illegible]ற்கும்.

ஞாயிற்றுக் கிழமையில் வலம் வந்தோர் சூரிய மண்டலத்தைப்பிளந்து சிவபதத்தைச்சேர்வர். கடன்வறுமை என்னுமிவைநீங்கப்பெற்று ஏழுபிறப்பையுந்தாண்டுவர். திங்கட்கிழமையில் வலஞ்செய்தோர் இந்திரன்போல ஏழுலகத்தையுமாண்டு சிவசாரூப்பியத்தைப்பெறுவர். செவ்வாய்க் கிழமையில் வலஞ்செய்தோர் எல்லாத் துன்பங்களினும் நீங்குவர். புதன்கிழமையிற் பிரதக்ஷிணஞ்செய்தோர் நான்குவேதம், ஆறுசாத்திரங்கள், பதினெண் புராணங்கள் முதலியவற்றைத் தெரிந்து முத்திசேர்வார். வியாழக்கிழமையிற்செய்தோர் திரிமூர்த்திகளும் புகழும்படிதேவர்முனிவர்களுக்கு

எசமானராயிருப்பர். சுக்கிரவாரத்திலே வலம்வருவோர் இலக்குமி குடியிருக்க விட்டுணு பதத்தையடைவார். சனிவாரத்திலே பிரதக்ஷிணஞ் செய்தோர் நவக்கிரகங்களும் பதினோராமிடத்திலிருக்கும் பலனையடைவர். சிவராத்திரி, வருடப்பிறப்பு, மாதச்சங்கிராந்தி, அயனம், அத்தோதயம், மகோதயம், கிரகணம், விதிபாதம், விடுவகாலம், அமாவாசி, பௌர்ணிமை என்னுமிவைகளிற் பிரதக்ஷிணஞ்செய்வார் பலத்தை யாவரே யளந்தறிய வல்லார்.

வலம்வருங்காலத்திற் பெண்களை நினைத்தல், சட்டையிடுதல், போர்வைகொள்ளல், கால்களிற் செருப்பு முதலியன இடுதல், பயம், சோகம், கோபமுதலியனகொள்ளல், குதிரை, யானை, பல்லக்கு, சிவிகை, வண்டி முதலியவற்றில் எறிச்சென்று வலம்வருதல், தாம்பூலமுதலியன தரித்தல், சோறுபுசித்தல், சுகந்த திரவியமணிதல், கைவீசிப்போதல், ஈனரைப்பார்த்தல், ஓடிப்போதல், பராகமுஞ்செய்தல், வீண்கதைகள் பேசுதல், மலையில் எறுதல், முதலியன செய்தலாகா. எட்டுத்திக்குப் பாலகரும் இம்மலையின் எட்டுத்திக்குகளினு மிருந்து பூசித்துளார்.

அருணாசலத்திலே குதிரையிலேறிக்கொண்டுவந்த வச்சிராங்கதபாண்டியன் தன்பாவத்தைத் தீர்க்க நினைத்துத் தென்றிசையில் புழுகணியிறைவரென்று ஒரு இலிங்கத்தைத் தாபித்துப் பூசித்தான். நானும் அம்மலையின் மேற்குத்திசையில் அணியண்ணாமலையார் என்னும் ஓர் இலிங்கத்தைத் தாபித்தேனென்று பிரமன் கூறினன்.

திருமலை வலம்புரிச் சருக்க வசனம்

முற்றிற்று.

மன்றியுமம் மலைவலமாய் நடந்தவழிப்
  பாலுறுத்து மழற்சியாலே
கன்றியகா லரைக்காணிற் கன்றியகா
  லரைப்போலக் காணும் பாவம்.

இ-ள். நன்றியைக் கொடுக்கும் அருணாசலத்தை வலமாகச் சிறிதுதூரம் நடந்தவர்களுக்கு நெருங்கிய கிரணத்தை வீசுகின்ற வெள்ளிமலையாகிய கைலாயத்திற்குப் போகும்வழி விரைவில் தொலையும்; அல்லாமலும், அம்மலையை வலமாகப் போம்போது பருக்கைக் கல்லுகளாலும் அழற்சியினாலும் கன்றிப்போன காலையுடையவரைக் கண்டால் எமனென்று பயந்து பாவங்கள் ஓடிப்போம். எ-று. (௧௧)

வள்ளிமலை வலம்புரிந்தோர் பதத்துகளொன்
  றொருவாயு வசத்தினாலே
புன்னாக மனையவிடம் புகுதிலது
  கயிலையெனப் புனிதமாகு
மின்னுமவர் பதத்துகளோர் மனிதருடற்
  செறியிலவ ரிறப்புநீங்குந்
துன்னுமவர் பிறப்பொழியும் வலம்புரிந்தோர்
  பெருமைகளெஞ் சொல்லுவோமே.

இ-ள். அக்ஸோமலையை வலம் வந்தவர்கள் பாதத்தில் ஒட்டியதுகளொன்று காற்றினால் நகரத்தையொத்த இடங்களிற் சேர்ந்தால் அதுவுங் கைலாயம்போல் பரிசுத்தமாம்; இன்னும் வலம் வந்தவர்கள் பாதத்துகளில் ஒன்றுமனிதர் தேகத்திற்பட்டால் இறப்பும் அவர்களை பின்பற்றிவருகிற பிறப்பும் நீங்கும்; அப்படியாகும்போது பிரதக்ஷணஞ் செய்தவர் பெருமைகளை என் சொல்லுவோம். எ-று. (௧௨)

அந்தமலை வலம்புரிந்தோர் சிவனிருக்குங்
கயிலையினி னேகும் போதிற்
சந்திரன்வெண் குடையெடுக்கு மிரவிவிளக்
கெடுக்குமங்கை தருமந் தாங்கு
மந்திரமே லிந்திரனார் வழிக்குமலர்ப்
பரப்பிடுவா னளகைக் கோமான்
வந்தனைசெய் தருகுவருங் கந்தமலர்
மழைசொரிவர் வசுக்கடாமே.

இ-ள். இவ்வருணாசலத்தை வலஞ்செய்தவர்கள் பரமசிவன் வாசஞ் செய்கின்ற கைலாயமலையைச் சேரும்போது, சந்திரன் வெள்ளைக்குடைபிடிப்பான்; சூரியன் விளக்கெடுப்பான்; தரும தேவதை கைதாங்கிவரும்; இந்திரன் வருகிறவழியில் புட்பங்களைப் பரப்புவான்; குபேரன் தண்டஞ்செய்து சமீபத்தில் வருவான்; அஷ்டவசுக்கள் புட்பவருஷம் பொழிவார்கள். எ-று. ()

மேனகையு மரம்பையுட னுருப்பசியுந்
திலோர்த்தமையும் வீணையார்க்குங்
கானநடம் புரிவர்கங்கா நதியுடனே
யமுனைநதி கவரிவீசும்
போனகவின் னமுதுமலைத் துகிலெழி
லெடுத்தெதிரே போகும் போது
நானமுங்கொண் டலர்மடந்தை நணுகுமுன்னே
மறைபுகழ்ந்து நடக்குந் தாமே.

இ-ள். மேனகையும், அரம்பையும், ஊர்வசியும், திலோர்த்தமையும் வீணைவாத்தியத்துடனே சங்கீதம்பாடி நடனஞ்செய்து கொண்டு வருவார்கள்; கங்கையும் யமுனையும் சாமரம் வீசிக்கொண்டு வருவார்கள்; சாப்பிடத்தகுந்த அமிர்தத்தையும் மலையளவு ஆடைகளையும் மேக மெடுத்துக்கொண்டு எதிரேவரும்; இலக்குமி பூவும் கஸ்தூரியுங்கொண்டு வருவாள்; முன்னே நாலுவேதங்களும் புகழ்ந்துக்கொண்டு வரும். எ-று. (௧௭)

வேறு.

சேற்பொதிந்துகளுங்கங்கை படிவதுஞ்சிறந்ததாளம்
பார்ப்பதுமியோகத்தாலே வருதலும்பலமொவ்வாதா
லார்ப்பொலிசடை யான்சோணாசலத்தினைவலமாய்ச்சூழல்
காற்பலமென்றெண்ணாதே முழுப்பலங்கருதுங்காலே.

இ-ள். சேற்கெண்டை குதித்து விளையாடும் கங்கை முதலிய தீர்த்தங்களி லாடியபலனும், சிறந்த சிவத்தலங்களைத் தரிசனஞ் செய்த பலனும், யோகஞ் செய்தலினால் வந்தபலனும் ஒப்பாகாது; ஆத்திமாலைதரித்த சடையையுடைய சிவசொரூபமாகிய அருணாசலத்தை வலஞ்செய்தால் காற்பலமென் றெண்ணாமல் முழுப்பலமாய் நினைக்கும்போது. எ-று. (௧௮)

நிரந்தர மிமையோர் போற்று
நெடியமால் வரையைச் சூழ்வோர்
பரந்திடும் வழியிற் றோன்றும்
பரலினாற் சிவந்த பாதம்
வரங்கொள வணங்கும் வானோர்
மகுடகோ டிகளிற் றைத்து
விரிந்தசெம் மணிக டாக்கி
மீளவுஞ் சிவக்கு மாதோ.

இ-ள். எப்போதும் தேவர்கள் வணங்கும் பெருமையுள்ள அருணாசலத்தை வலஞ்செய்வோர்களுடைய வழியிற்கிடக்கிற பர

ற்கல்லுகளை மிதித்துச் சிவந்த பாதம் பின்பு வரத்தைப் பெறவதற்கு வணங்கும் தேவர்களுடைய மகுடகோடிகளிற் பதிக்கப் பிரகாசிக்கும் இரத்தினகோடிகள் தாக்கி மறுபடியுஞ் சிவக்கும். ()

காணடைகொடுக்கப்பெற்றென் கரியகண்டெரியப்பெற்றென்
மானுடப்பிறவியுற்றென் மலைவலம்புரியாமாந்த
ரூனுடைப்புழுக்கூடேறி நரகிடையூசலாடித்
தானிடர்ப்படுவதல்லா லுய்கிலர்சனகவென்றார்.

இ-ள். அப்படிப்பட்ட அருணாசலத்தை வலஞ் செய்யாதவர்கள் கால்நடையுண்டாய் நடந்துதிரியப் பெற்றென்ன பிரயோசனம்; கறுத்த கண்கள் நன்றாகத் தெரியப் பெற்றென்ன பிரயோசனம்? அரியமானுடப் பிறப்பாகப் பிறந்தென்ன பிரயோசனம்? மாமிசம் திரண்ட புழுக்களுடைய தேகத்திற்சேர்ந்து நரகத்தில் வீழ்ந்து அலைந்து துன்பப்படுவ தல்லாமற் பிழைக்கமாட்டார்கள்; சனகனே என்றார் பிரமதேவர். எ-று. (௧௭)

வஞ்சியர்புணர்ச்சிவேண்டின் மன்னர்கைவசமாவேண்டி
லஞ்சியப்பகைமையெல்லா மக்கணத்தகற்றவேண்டிற்
பிஞ்சினமதிபோனல்ல புதல்வரைப்பெறுதல்வேண்டிற்
சஞ்சிதமுதலாமூன்று கருமமுந்தவிர்க்கவேண்டில்.

இ-ள். அஃதல்லாமல் நல்ல மாதருடைய போகம்வேண்டினால், அரசர்கள் கைவசமாக வேண்டுமானால், அஞ்சத்தகுந்தபகையெல்லாம் அக்கணத்திலே நீக்கவேண்டுமானால், பாலசந்திரன்போல நல்ல பிள்ளைகளைப் பெறவேண்டுமானால், ஆகாமிய சஞ்சித பிராரத்துவமாகிய மும்மலங்களையும் நீக்கவேண்டுமானால். எ-று.

முயலகனலகைபூத கணங்களைமுனியவேண்டிற்
றுயருறுபிணியுமாகச் சோகமுந்தவிர்க்கவேண்டி

லியலிசையறியவேண்டி லெழுதருங்கோலம்வேண்டின்
மயலறுபுகழைவேண்டின் மலைவலம்புரிவார்வல்லார்.

இ-ள். முயலகன்போன்ற இராக்கதரையும் பசாசுகளையும் பூத கூட்டங்களையும் கோபிக்க வேண்டினால், துன்பம்செய்யும் வியாதியையும் தேகத்தில்வரும் சோகத்தையும் நீக்கவேண்டினால், இயலிசை முதலாகிய கல்வியை வேண்டினால், அழகை வேண்டினால் குற்றமற்ற கீர்த்தியை வேண்டினால், அம்மலையை வலஞ் செய்வார்கள் பெரியோர்கள். எ-று. (௧௯)

வரந்தருமருக்கவார மலைவலம்புரிந்தோர்வெய்யோன்
றெறிந்தமண்டலத்தைக்கீறிச் சிவகதிபதியாச்சேர்வார்
திரந்தருஞ்சோமவாரந் திருமலைவலமாய்வந்தோர்
புரந்தரனெனவேழ்பாரும் புரந்தரன்றன்மைபூண்டார்.

இ-ள். சிறந்த ஆதிவாரத்தில் அம்மலையை வலஞ் செய்தவர்கள் சூரியமண்டலத்தைப் பிளந்து சிவபதத்தைச்சேர்வார்கள் ஸ்திரமாகிய சோமவாரத்தில் வலமாய் வந்தவர்கள் இந்திரன்போல எழுலகத்தையு மாண்டு சிவசாரூப்பிய மடைவார்கள். எ-று. (௨௰)

மங்கலதினத்திற்சூழ்வோர் கடனுடன்வறுமைநீங்கிச்
சங்கிலித்தொடராமேழு பிறப்பையுந்தவிர்ப்பார்புந்திக்
கெங்கணாயகரைச்சூழ்வோ ரிருங்கலைமறைகணாலா
றங்கமுந்தெளிந்துமுத்திக் கருகராயமராவார்.

இ-ள். மங்களவாரத்தில் கிரியை வலஞ்செய்வோர் தங்களுக்குண்டாகிய கடனையும் தரித்திரத்தையு நீங்கி, சங்கிலி கட்டுபோல் தம்மைவிடாத எழுபிறப்பையும் நீக்குவார்கள்; புதவாரத்தில் சுவாமியைப் பிரதக்ஷணஞ் செய்வோர் நாலுவேதங்களும், ஆறு

சாஸ்திரங்களும், அறுபத்துநாலு கலைகளும் தெரிந்து முத்திக்கு நெருங்கினவராய்த் தேவர்களாவார்கள். எ-று. (௨௬)

மாவியாழத்திற்செய்ய மணிவரைவலமாய்ச்சூழ்வோர்
மூவரும்புகழத்தேவர் முனிவர்தங்குரவராவார்
தாவிலாவெள்ளிவாரந் தனில்வலம்புரிந்தோர்கஞ்சப்
பூவையைப்புணரும்பூவைப் புணருமால்புரத்திற்சேர்வார்.

இ-ள். பெருமை பொருந்திய குருவாரத்திலே அம்மலையை வலமாக வந்தவர்கள் திரிமூர்த்திகளும் புகழும்படி தேவர்கள் முனிவர்களுக்கு எசமான ராவார்கள்; குறைவில்லாத சுக்கிரவாரத்திலே வலஞ்செய்தவர்கள் தாமரை மலரிலிருக்கின்ற இலக்குமியைச்சேரும் விட்டுணுபதத்தைச் சேருவார்கள். எ-று. (௨௭)

உதயமேசனிநாட்சூழ்வோர்க் கொன்பதுகிரகநன்றாய்ப்
பதினொராமிடத்திற்றாய் பலன்களைப்பலியாநிற்கு
மதியணிசிவனிராவும் வருடம்வந்துதிக்குநாளு
மதிகமாமதிகமாகு மைப்பசிமுதலாமூன்றும்.

இ-ள். சனிவார உதயத்தில் பிரதக்ஷிணஞ் செய்வோர்களுக்கு நவக்கிரகங்களும் பதினொன்றாமிடத்திலிருந்த பலனைக் கொடுப்பார்கள்; சிவராத்திரியிலும் வருஷப்பிறப்பினன்றும் ஐப்பசி முதலாகிய மூன்றுமாதமும் வலஞ்செய்தவர்களுக்கு மேற்சொன்ன பலன்களிலும் அதிகபலன் சித்தியாகும். எ-று. (௨௮)

அயனசங்கிராமமாசி மகத்திலர்த்தோதயத்தில்
வெயிலுறுங்கதிரைப்பாம்பு விழுங்குநாள்விதிபாதத்திற்
பயனுறவலஞ்செய்வோர்க்குப் பலன்களிற்கோடியாகு
மயர்வறத்தினமுஞ்சூழ்வார் பேற்றையாரறியவல்லார்.

இ-ள். உத்தராயணத்திலும், தக்ஷிணாயனத்திலும், மாசிமகத்திலும், அர்த்தோதயத்திலும், சூரிய கிரகணகாலத்திலும், விதிபாதத்திலும், இஷ்டசித்தியை அடைய விரும்பி வலஞ்செய்தவர்களுக்குக் கோடிபங்கதிகமாகப் பலன் கிடைக்கும்; தளர்ச்சியடையாமல் தினந்தோறும் வலஞ்செய்தவர்களுக் குண்டாகும் பலனை யாரறிந்து சொல்லவல்லவர். எ-று. (௨௯)

காரிகையவ[illegible]ைக் கனவிலும்புணர்ந்திடாம
னீரினின்மூழ்கித்தூய துடுத்தும[illegible]த்தி
யாரிடமுறையேதான மளித்துத்தாமவைகொள்ளாமற்
பாரிடைநடந்துசூழ்ந்த தேவரைப்பணிந்துபோற்றி.

இ-ள். அப்படி அதிக பலனைத் தரும் அருணாசலத்தை வலஞ்செய்யும் விதமெப்படி யெனின், பிரதக்ஷிணஞ் செய்யும் அன்றைக்குப் பெண்களைச் சொர்ப்பனத்திலும் நினையாமல் நீரில் ஸ்நானஞ்செய்து பரிசுத்தமாகிய வஸ்திர முடுத்திக் கொண்டு விபூதி தரித்து அவ்விடத்திலே தானம் கிரமமாகக் கொடுத்து தாம் ஒருவரிடத்திலும் தானம் வாங்காமற் பூமியிலே காலினால் நடந்து கிரியைச் சுற்றி யிருக்கின்ற தேவர்களைப் பணிந்து வணங்கி. எ-று. ()

கஞ்சுகம்போர்வைநீத்துக் கவிகையுஞ்செருப்புநீத்தே
யஞ்சுதல்வெகுளிசோக மக்கணத்தகற்றிவாசி
குஞ்சரமுதலாயுள்ள வாகனங்குறுகிடாமல்
விஞ்சியவடைக்காயுண்டி வழியிடைவெறுப்பதாக்கி.

இ-ள். அங்கத்தில் தரிக்குஞ் சட்டையும் போர்வையும் நீக்கிக் குடைபிடித்துக் கொள்ளாமல், கால்களுக்குச் செருப்பும் போட்டுக் கொள்ளாமல், பயமுங் கோபமுஞ் சோகமும் நீக்கிக்

குதிரை யானைமுதலா[illegible]கனங்களிலேறாமல் தாம்பூலம் தரிக்காமற் போச[illegible]தையும் வெறுத்து. எ-று. (௨௬)

செங்கைவீசாமற்சோரா துவகையாற்சிரத்திற்கூப்பி
மங்கையர்பதிதர்நீச ருறுப்பிலாவடிவுநோக்கா
தங்குறுமடியினோசை செவிப்புகாதரசமாதர்
திங்களையிரண்டுஞ்சென்றுநடந்திடுஞ்செயல்போற்சென்று.

இ-ள். கைகளை வீசிக்கொண்டு போகாமல் [illegible]லலாமல், சந்தோஷத்தோடு சிரத்தி[illegible]யைவைத்துக் கூப்பிக்கொண்டு மாதரையும் பாவிகளையும் நீசரையும் அவயவ ஈனரையும் பாராமல் நடக்கிறபோது அடியினுடைய சத்தங் காதிற் கேட்காமல் மெள்ள அரசமாதர்கள் பத்து மாதத்துக் கருப்பத்தோடு நடக்கிறதுபோல நடந்து. எ-று. (௨௭)

இருவினையகற்றுமந்த மலையையெண்டிசையும்வீழ்ந்து
பரவியங்கதனைச்சூழ்ந்த கடவுளர்ப்பணிந்துபோற்றி
யருவமாய்வலமாஞ்சித்த ரமரரைமனத்தாற்போற்றி
யுருகியங்கவர்மேற்கைகால் படுமெனவொதுங்கிச்சென்று.

இ-ள். நல்வினை தீவினைகள் இரண்டையும் நீக்கும் அக்கிரியை எட்டுத் திக்கும் வணங்கி அத்திக்கிலிருக்கும் சுவாமிகளையும் வணங்கி உருவந் தெரியாமல் வலஞ்செய்து கொண்டு வருகிற சித்தர்களையும் தேவர்களையும் மனத்தினால் வந்தனஞ்செய்து அவர்கள் மேற் தங்கள் கைகால்கள் படுமென்று பயந்து வழியினின்றும் ஒதுங்கிச்சென்று. எ-று. (௨௮)

வானமார்மலையைப்பொன்னிற் படிகநன்மணியாவெண்ணி
மோனமாநடக்கவல்ல திறைபுகழ்மொழியைக்கேட்க
வானவிச்செயலினாலே வலஞ்செய்தாலயத்தினண்ணி
யேனமன்னறியான்றாளைப் பணிந்துதன்னிருக்கையெய்தி.

இ-ள். ஆகாயமட்டு மளாவிய அம்மலையைப் பொன் போலவும் படிகம்போலவும், இரத்தினம்போலவும் நினைத்து மௌனமாய் நடக்கவேண்டியது; அல்லது சுவாமி துதிகளைக் கேட்கவேண்டியது. இப்படிப்பட்ட தன்மையாக வலம் வந்து கோயிலுட் சென்று விட்டுணுவாகிய பன்றி யறியாத சுவாமியின் பாதங்களை வணங்கித் தாங்களிருக்கு மிடத்துக்கு வந்து. எ-று. (௨௯)

குன்றெனுங் குணத்தார்சூழ
விருந்துதீங் கனிபால் கொ[illegible]
வன்றியே புலவுநீத்த
வடிசிலை யுண்க நீதி
நின்றவத் தலத்தோர்செய்யு
நிலைமையீ ததிதூ ரத்தி[illegible]
சென்றவர் வருத்தமாயெவ்
வகைவலஞ் செயினுஞ் சீராம்.

இ-ள். மலைபோலுயர்ந்த குணத்தை யுடையவராகிய சிவபத்தர்கள் சூழ இருந்து மதுரமாகிய பழங்களும் பாலுஞ் சாப்பிடக்கடவர்; அப்படி யில்லாவிட்டால் மாமிசபதார்த்த மில்லாமல் அன்னத்தைப் புசிக்கக்கடவர்; இப்படிப்பட்ட செய்கைகளை நீதி பொருந்திய அத்தலத்தி லிருக்கிறவர்கள் செய்யவேண்டியது; அதிக தூரத்தில் நின்றும் வந்தவர்கள் தங்களுடைய வருத்தத்தினால் எவ்விதமாக வலஞ்செய்தாலும் நன்மையாம். எ-று. (௩0)

தண்டுதலிலாத ஞானச்
சனகவிச் சயிலஞ்சூழ
வெண்டிசை புரப்போர் தம்பே
ரினிற்சிவ வுருவங் கண்டார்

வண்டிசை பெருகு மோதி
மலைமகண மலையின் கீழ்பாற்
கண்டனள் பவள வெற்பிற்
கயிலைவெற் பிறைவன் காட்சி.

இ-ள். கெடுதலில்லாத ஞானத்தையுடை [illegible] கர்வழியே! இம்மலையி னெட்டுத் திக்கிலும் திக்குப பாலகர் எட்டுப்பேரும் தங்கள் பேரினாலே இலிங்கங்களைத் தாபித்துப் பூசித்திருக்கிறார்கள்; வண்டுகளின் ஒலி பொருந்திய கூந்தலையுடைய பார்வதி, கிரியின் கிழக்குத்திக்கில் பவள மலைபோல் ஒரு இலிங்கத்தைத் தாபித்துப் பூசித்தாள். எ-று. (௯௧)

மணிவரை பரியிற் சூழ்ந்த
வச்சிராங் கதனப் போது
புணர்பவந் தவிர்க்கத் தென்பாற்
புழுகணி யிறையைக் கண்டான்
றணிவிலா வினைக ணீக்கத்
தமியனேன் மலையின் மேற்பா
லணியண்ணா மலையா னென்னு
மருவுரு விறையைக் கண்டேன்.

இ-ள். அருணாசலத்தி னிடத்தில் குதிரையிலேறிக்கொண்டு வந்த வச்சிராங்கத பாண்டியன், அக்காலத்தில் தன்னையடைந்த பாவத்தைத் தீர்க்கத் தென்திக்கில் புழுகணியிறைவரென்று ஒரு லிங்கத்தைத் தாபித்துப் பூசித்தான்; தணியாத பாவங்களை நீக்கிக்கொள்ள நானும் (பிரமன்) அம்மலையின் மேற்குத் திக்கில் அணியண்ணாமலையா னென்கிற பேரிட்டு ஓரிலிங்கத்தைத் தாபித்துப் பூசைசெய்தேன். எ-று. (௯௨)

வாலவெங் கதிர்மேற் சோண
மலைகடந் தொருநாட் பாய்ந்து
சாலுமத் துயரந் தீரத்
தனதுபே ரிறையைக் கண்டா
னாலய முழுதுந் தேவ
ரரவநாட் டுறைவோர் சித்தர்
சீலமா முனிவர் கண்ட
சிவனுருத் தெரிக்கொ ணாதே.

இ-ள். சூரியன் அருணாசலத்தைத் தாண்டிப் போனதினால் வந்தபாவந் தீரத் தன் பேரிட்டு ஒரு இலிங்கத்தை தாபித்துப் பூசைசெய்தான்; அஃதல்லாமல் அம்மலையி லிருக்கிற கோயில்கள் முழுதும் தேவர்கள், நாக லோகத்தார்கள், சித்தர்கள் முனிவர்கள் இவர்களால் தாபித்துப் பூசைசெய்யப்பட்ட சிவலிங்கங்களை இவ்வளவென்று சொல்லக்கூடாது. எ-று. (௯௩)

ஈசனார் வடிவமான விலிங்க
மவ் வெல்லை சூழ
யோசனை மூன்றுஞ் சேர
நெருங்கும்வா னுடுக்கள் போலப்
பேசுவ தெவனோ வந்தத்
தலத்தினிற் பெருமை வேலன்
றேசுறுங் கவுரி யானை
முகத்திலுந் தெரிக்கொ ணாதே.

இ-ள். பரம சிவ ரூபமான அநேக இலிங்கங்கள் அவ்வெல்லையைச் சுற்றி மூன்று காத வழிமட்டும் ஆகாயத்து நக்ஷத்திரங்கள்

போல நெருங்கியிருக்கும்; அப்படி யிருக்கிறபோது அத்தலத்தின் பெருமையைச் சுப்பிரமணியர், பார்வதி, விநாயகர், இவர்களாலேயே சொல்லக் கூடாமலிருக்கிறபோது என்னாற் சொல்லக் கூடுமோ. எ-று. (௯௪)

தாதவிழ் மலரோ னிவ்வா
றுரைத்தலுஞ் சனகன் போற்றி
வேதனே பிறவி தீர்க்கும்
விமலனே விமல ஞான
வாதியைப் பழித்தோர் செம்பொன்
கவர்ந்தபே ரடையுந் தீங்கும்
பாதகந் தவிரு மாறும்
பகரெனப் பதுமன் கூறும்.

இ-ள். தாதுவிரிந்த தாமரை மலரி லிருக்கின்ற பிரமன் இப்படிச் சொன்னதும், சனகரிஷி வணங்கி வேதமுழுதுங் கற்றுணர்ந்தவரே! பிறப்பை நீக்கும் பரிசுத்தரே! மலரகிதரான சிவனைப் பழித்தவர்களுக்கு வந்த பாவமும், அவர் தனத்தை அபகரித்தவர்க ளடையும் பாவமும், அவைகள் நீங்கும் வகையும் சொல்லுமென்று கேட்கப் பிரமதேவர் சொல்லத் தொடங்கினார். எ-று. ()

ஒன்பதாவது
திருமலை வலம்புரி சருக்கம்
முற்றிற்று.
௯௫ திருவிருத்தம்-௨௮௫.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

ஆதித்தச் சருக்க வசனம்.

காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக் குற்றங்களையுங் கடந்த முனிவர்களாலே சூழப்பட்ட திருவண்ணாமலைக்கு வேறு மலைகளுமொக்குமென்று நிந்தை கூறும் பாவிகட்கு யமராஜன் கோரத்தண்டனை புரிவான். எத்தகைய பாவங்களைச் செய்தவர்களும் இவர்க்கு நேராகார். விட்டுணுவாகிய பன்றியும், பிரமனாகிய அன்னமுந் தேடியறியாத திருவண்ணாமலையை முற்காலத்தில் இகழ்ந்து தேகங்குறைபட்டுத் துக்கப்பட்டானொருவன் உளனென்று அக்கதையைச் சொல்லத் தொடங்கினார் பிரமதேவர்.

சனகமுனிவரே! முன்னர் ஞான்று காசிபர்க்கும் அதிதிக்கும் பிறந்த குமாரர்கள் பன்னிருவர் உளர். அவர் அதிதியின் புத்திரராதலால் ஆதித்தியர் எனப்பட்டார். அவர் மாதம் ஒவ்வொருவர்தோன்றி உலகத்தைப் பிரகாசப்படுத்துவர். தெய்வமாகிய திருவருணாசலத்தை மற்றை மலைபோல நினைத்து அவ்வாதித்தர்களுள் ஒருவன் தனது ஒரு சக்கரமும் ஏழு குதிரைகளும் பூட்டப்பட்ட இரதத்தை யதன்மீது செலுத்தினான். அப்போது மலை வெடித்து அங்கு நின்றும் வெப்பத்தீ தோன்றிப் புகைந்துவர, சூரியனது இரதம் பரமசிவனாரது திருப்புன்முறுவல் அக்கினியால் வெந்து நீறான திரிபுரங்கள்போல எரிந்து சாம்பராயிற்று. குதிரைகளோ உயிரில்லாதன வாயின. சூரியன் தனது பாகனாகிய அருணன் கால்களை யிழந்ததுபோலத் தானும் கிரணங்களை யிழந்து ஒன்றுந் தோன்றாது மூர்ச்சித்தான். பின்னர்த் தெளிவு கொண்டு அந்தமலையின் பிரபாவங்களை யெல்லாம் தெரிந்து சிவபெருமானைத் தியானித்து மெய்யன்புடன் பிரதக்ஷிணஞ் செய்து மேலான கதியையடையுமாறு செல்லும் யான் சூரியனது நிலையைப்பார்த்துச் சில உபாயங்களைக் கூறினேன்.

ஆதித்த சருக்க வசனம்.

ஆயிரங் கிரணங்களையுடைய சூரியன் அவ்வாறு மெய்யன்புடன் வலம் வந்து பரமசிவனைத் துதித்தான். மகாமேருமலையை வலஞ்செய்யுஞ் சூரியன் [illegible]மலை வலஞ் செய்யவே, "கைலாசசிகராவாச மோங்கார ஸ்வரூபிண மமார்க்குஞ் சேகரம்" என்றத்தொடக்கத்தனவாக வேதாந்தங் கோஷித்த அருணாசலேசுரப் பெருமான் தோன்றியருளி முன்னர்ப்போலவே சூரியனுக்குத் திருவருள் புரிந்தார். சித்திரை முதற் பங்குனியீறாக எல்லா மாதமும் சூரியன் மலைவலம் வருவான்.

ஆதித்தச் சருக்க வசனம்.

முற்றிற்று.



ஆதித்தபகவான் சோதிரூபமுள்ள மலையினுச்சியில் தன் இரதத்தை நடத்த, அச்
சோதி தாக்கி இரத மெரிந்தபின்பு, ஆதித்தபகவான் மலையை வலம்வர பரமசிவன் இட
பவாகனரூடராய்த்தோன்றி காக்ஷிகொடுத்த மகாத்மியம்.—17.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பத்தாவது,

ஆதித்தச் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அற்றமற்றமுனிவர்சூழ மருணபூதரத்துடன்
மற்றமலைவற்புமொக்குமென் றிகழ்ந்துரைத்தமனிதர்வாய்
புற்றெழுந்துபுகையெழுந்து புழுநெளிந்துபுலவுநீர்
சுற்றெழுந்துபெருகுமண்டு சோரிமாரிசொரியுமே.

இ-ள். குற்றம் நீங்கிய முனிவர்கள் சூழ்ந்துவரும் அருணாசலமென்னுமலையோடு மற்றமலைகளையு மொக்குமென்று நிந்தைசொன்ன மனிதர்வாயில் புற்றுண்டாகிப் புகைந்து புழுக்கணெளிந்து புலால் நாற்றம் நாறுகின்ற நீர்சுற்றியெழுந்து மிகவும் இரத்தமாரி சொரியும். எ-று. (௧)

அந்தமைந்தர் தம்மைமெற்றி யந்தகன்றனேவலாய்
வந்ததூதர்செக்கிலிட்டரைத்தரைத்தெடுப்பர்வாய்
வெந்தவாளினாலறுப்ப ரெந்தைசோணவெற்பையோ
நிந்தைசெய்வையென்றடித்து நெய்யில்வேகவைப்பரே.

இ-ள். அருணாசலத்தைநிந்தித்த அம்மனிதர்களைப் பின்பு எமனுடைய ஏவலாய்வந்த தூதர்கள் செக்கில் அநேகதரம்போட்டு அரைத்து எடுப்பார்கள்; அவர்கள்வாய்களை நெருப்பிற்போட்டுக் காய்ச்சிய கத்தியினாலறுப்பார்கள்; எங்களாண்டவன் மலையையோ நிந்தைசெய்வாயென்று அடித்துநெய்யிலேவேகப்போடுவார்கள். ()

பஞ்செழுத்துவைத்தரக் குருக்கிவாய்பரப்பியே
நஞ்சினைப்புகட்டிவெய்ய நரகிலேகிடத்துவார்
அஞ்சியந்தநரகுநாளு மருவருத்தலைத்திடும்
நெஞ்சகத்திலெண்ணினார் தமக்குமீதுநிகழுமே.

இ-ள். பின்னும் அவ்வருணாசலத்தை நிந்தித்தவர்களை எமதூதர்கள் பஞ்சாகத்துவைத்து அரக்கையுருக்கி வாயிலேவிட்டு நஞ்சைக்குடிப்பித்துத் தீமையாகிய நரகிலே தள்ளுவார்கள்; அந்நரகமோவென்றால் பயப்பட்டு இவர்களைத்தாங்குகிறதற்குச் சகிக்காமல்மிகவும்வருந்தும்; இப்படிப்பட்ட துன்பம்மனத்தில் இம்மலையைக்குறைவாக வெண்ணினவர்களுக்கும் உண்டாம். எ-று. (௩)

குருக்கடந்தைதாயராவி கொன்றதீயர்முதலினோ
ரிருக்கும்வெய்யநரகின்மீதி விட்டபோதிலவர்களும்
பெருக்கநொந்துபாவியென்று பேசுவார்கடம்முடன்
சரிக்கொணாதுதள்ளுமென்று தங்கள்கண்புதைப்பரே.

இ-ள். ஆசிரியர்களையும், தாய்தந்தையரையும், பிராணன்வாங்கிய தீயபாவிகள் முதலானவர்கள் வாசஞ்செய்யுங் கொடியநரகத்தில் இவ்வருணாசலத்தை நிந்தித்தவர்களைப்போட்டபோது, இவர்களைமுன்னிருக்கும்பாவிகள் மிகவும்வருத்தப்பட்டு சுவாமியைநிந்தித்தபடியினால், நம்மினும் பாவிகளென்றுசொல்லி நம்மோடிவர்கள் சரியாயிருக்கக்கூடாது தள்ளிவிடுமென்று தாங்கள்கண்களைப் பொத்திக்கொள்ளுவார்கள். எ-று. (௪)

என்றுரைத்துநானும்வைய மேழுமுண்டமாலுமா
யன்றுமின்றுமளவிடாத வருணபூதரத்தையோர்
குன்றமென்றிகழ்ந்துசென்று குன்றிமெய்குறைந்துமுன்
கன்றினானொருத்தனென்று கதைவிளம்பலாயினான்.

இ-ள். பிரமன் இப்படியென்று சனகரிஷிக்குச்சொல்லிப் பின்னுஞ்சொல்லுவார்; நானும் ஏழுலகத்தையுமுண்ட மகாவிஷ்ணுவுஞ்சேர்ந்து அன்றுமுதலின்றையவரையிலும் அளவிடப்படாதமகிமையுள்ள அருணாசலத்தை, ஒருவன் ஒருமலையென்றிகழ்ந்துபோய்க் குன்றுதலடைந்து தேகக்குறைந்து துக்கப்பட்டான் முற்காலத்தில் என்று அக்கதையைச்சொல்லத்தொடங்கினார். எ-று. ()

உலவுகின்றசோதியாவு முள்ளில்வைத்திவ்வுலகிலோர்
நிலையதாகிநின்றதெய்வ மலையைமற்றமலைகள்போல்
அலகுபெற்றவிரவியெண்ணியாழியொன்றுவாசியே
ழிலகுதேரம்மலையினுச்சி யெல்லையாய்நடத்தினான்.

இ-ள். நான்குதிக்கிலுஞ்சென்றுவிளங்கும் பிரகாசங்களையெல்லாம் தன்னுள்ளத்தில் வைத்துக்கொண்டு இப்பூமியில் ஒப்பற்ற நிலைபுருவங்கொண்ட தெய்வீகமாகிய அருணாசலத்தை மற்றமலைகள்போலநினைத்து ஒருசக்கரமும் ஏழுகுதிரையும்பூண்டதேரை அவ்வருணாசலத்தினுச்சியில் எல்லையாகநடத்தினான் சூரியன். எ-று.

முகுந்தர்தேடமைந்தவெற்பின் முடியின்மேவுமுன்னமே
யிருந்தசோதியுள்ளினும் வெடித்தெழுந்துவெம்மையாய்ப்

புகைந்துசெல்லவிரதமூவர் புரமெனப்பொரிந்ததே
யுகைந்தபச்சைவூசியோ வுலர்ந்தவாசியானதே.

இ-ள். சூரியன் விட்டுணுவினால்தேடப்பட்ட அம்மலையின் உச்சியில்போவதற்குமுன்னே, மிகுந்த பிரகாசமான மலைவெடித்து அவ்வுள்ளிடத்தில்நின்று எழுந்து வெப்பங்கொண்டுபுகைந்துவரத் தேர் திரிபுரமெரித்த பரமசிவன் நகையாகிய நெருப்பிலே பொரிந்ததுபோலப் பொரிந்துபோய்விட்டது, நடத்தப்பட்ட குதிரைகளோ சீவனில்லாத குதிரைகளாயின. எ-று. (௭)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

குதிரையுங்கரிகளாகிக் கொடியதேரலகைத்தேராய்க்
கதிரையுந்தனதுபாகன் காலெனவிழந்தபானு
மதியழிந்திருந்தானந்த மலைவலஞ்செய்துஞானக்
கதிபெறச்செல்வேன்கண்டு கதிரவற்கிவையுரைத்தேன்.

இ-ள். அம்மலையினிடத்தில் நின்றெழுந்த கிரணவெப்பத்தினால்; குதிரைகளேழும் கரிகளாகப்போய்க் கொடியையுடையதேர் கானல்போலத்தோன்றியுருவில்லாததாய்த் தன்னுடைய பாகன் காலையிழந்ததுபோலக் கிரணங்களெல்லாவற்றையும் தானிழந்து சூரியன்மதிகெட்டிருந்தான்; அந்தமலையை வலஞ்செய்துகொண்டு மேலாகியகதியை அடையும்படியாகப்போகின்ற நான்பார்த்து அச்சூரியனுக்கு இவ்வார்த்தைகளைச்சொன்னேன். எ-று. (௮)

ஐயனை மலையென்றெண்ணி
யகந்தையா லிகழ்ந்து வீழ்ந்த
கையனே யொருகா லத்துங்
கதியிலை யுனக்கென் றாலுஞ்

செய்யுமோர் தொழிலினாலே
தீர்க்கலாந் தெளிவு ளார்க்கு
மெய்யனை யருணையானை
வலஞ்செயன் றுரைத்து மீண்டேன்.

இ-ள். அருணாசலேசுரரை ஒருமலையென்று நினைத்து அகங்காரத்தினால்நிந்தித்து கீழேவிழுந்துகிடக்கின்ற ஆயிரங்கிரணங்களையுடையசூரியனே? உனக்கு எவ்வகையிலும் ஒருகாலத்துங் கதி கிடைக்காது, அப்படியிருந்தாலும் ஒருதொழிலால் கிடைக்கலாம் அதுயாதெனில் தெளிவுள்ளவருக்கு மெய்ம்மையாகிய அருணாசலத்தை வலஞ்செய்துகொண்டு வாவென்றுசொல்லித் திரும்பினேனென்றார் பிரமதேவர். எ-று. (௯)

போதித்த படியே சென்று
பொன்மலை வலமாய் முன்னஞ்
சாதித்த வருக்கன் சோணா
சலத்தினை வலமாய் வந்தான்
வாதிக்கு மழுவினானு
மழுவிடை மீதிற் கோடி
யாதித்த ரெனவே தோன்றி
யாதித்தற் கருளிப் போனான்.

இ-ள். பிரமன் அனுக்கிரகஞ்செய்தபடியே மகாமேருகிரியை முன்னே வலமாகவருகின்றசூரியன் அருணாசலத்தைவலஞ்செய்துகொண்டுவந்தான்; அச்சூரியனுக்கெதிரே வாதித்துச்சத்துருக்களைக்கொல்லுகின்ற மழுவையேந்தியபரமசிவன் இளமையாகிய ரிஷபத்திற் கோடிசூரியர்போலத்தோன்றி அனுக்கிரகஞ்செய்து கைலாயத்துக்கு எழுந்தருளினார். எ-று. (௧௦)

-477

பன்னிரு மாதந் தோறும்
பரிதிமுற் பயத்தி னாலே
வன்னியின் வடிவ தான
மலையினை வலமாய்ச் செல்வான்
சென்னியி னெல்லை செல்லா
னிடப்புறஞ் செல்லான் றன்றேர்
அந்நிலை வரும்போ தேத்தி
யலர்சொரிந் தகலு மென்றான்.

இ-ள். சித்திரைமுதல் பங்குனி ஈறாகச்சொல்லப்பட்ட பன்னிரண்டுமாதமும் சூரியன் முன்னே தனக்குண்டான பயத்தினால் அக்கினிவடிவமாகிய மலையை வலஞ்செய்துகொண்டுபோவான்; அம்மலையி னுச்சியின்மேலும் போகான்; இடப்புறமாகவும் போகான். அம்மலைக்குச் சமீபத்தில் வரும்போது தோத்திரஞ்செய்து புட்பமாரி பொழிந்து செல்வானென்று சொன்னார் பிரமதேவர். எ-று. (கக)

பத்தாவது
ஆதித்தச் சருக்கம்
முற்றிற்று.
ஆக திருவிருத்தம்-௫௧௧.



காசிநகரையாண்ட பிரதத்தராஜன் இவண்ணாமலை சந்நிதிக்குவந்து தரிசனஞ்செய்யுங்காலத்தில் ஓர் தாசியை யிச்சித்தபாவத்தால் குரங்குமுகமாகி பிறகு சில காணிக்கைகள் கொடுத்துப் பூசித்துப் பழையவடிவமைந்த மகாத்மியம்.—18.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

601

பிரதத்தராஜன் சருக்கம்.

முற்காலத்தில் ஒருநாள் காசிதேசத் தரசனாகிய பிரதத்தன் என்பவன் தன்னுடைய மந்திரிகளோடும் சேனைகளோடும் யாத்திரையாகப் பிரயாணப்பட்டுச் சோழநாட்டுக்குப் போகும்படி திருவண்ணாமலைக்குவந்து சுவாமியைத் தரிசிப்பதற்காகக் கோயிலுக்குப்போய் வந்தனஞ் செய்யும்போது அவ்விடத்தில் நாட்டியஞ் செய்திருந்த தாசிப் பெண்களில் ஒருத்தியைப்பார்த்து ஆசைகொண்டு இந்தப்பெண்ணைத் தன்னுடன் கொண்டுபோய் விடுவதற்கு நினைத்தான். அந்த நினைப்பு அவன் கொள்ளுவதற்கு முன்னமேதானே அவன் முகமானது குரங்குமுகமாய் விட்டதைக்கண்டு எல்லாரும் நகைத்தார்கள். பின்பு அவ்வரசன் மிகுந்த வருத்தப்பட்டுத் தன்னுடைய வாகனங்களெல்லா வற்றையும் தன்கூடிவந்த பெண்களையும் ஆலயத்திற்குக் காணிக்கையாகக் கொடுத்து விட்டு சுவாமிக்கு அருமையான பூசைசெய்தான் அப்பொழுது; பரமசிவத்தின் கிருபையால் குரங்கு முகம்போய் இயல்பான முகத்தை அடைந்து தன் நாட்டுக்குப் போய்ச்சேர்ந்தான்.

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அருணைவா ழிறைவன் றவிய மனுமட்
டாயினுங் கரந்தபே ருடனே
மரணமாய் நமனுட் டழலிலே குளிப்பர்
வச்சிர வுலக்கையான் மறிய
பிருணிறை நரக மிருபத்தெண் கோடி
யிடத்திலு மடைவிலே யிருப்பர்
தரணியிற் புழுவாய்ப் பிறப்பர்கள் களவு
கனக்கியைந் தவருமத் தகையர்.

இ-ள். அருணாசலேசுரரது திரவியத்தில் அணுவளவேனுந் திருடினவர்கள் உடனே மரணமடைந்து எமலோகத்திற்குப்போய் அக்கினிக்குழியில்விழுந் தவஸ்தைப் படுவார்கள்; இருள் நிறைந்த இருபத்தெட்டுகோடி நரகங்களிலும் அடைவாக விழுந்துகிடப்பார்கள்; மறுபடியும் பூமியில்வந்து புழுவாய்ப்பிறப்பார்கள்; அத்திருட்டுக் குடன்பட்டிருந்தவர்களும் அப்படிப்பட்ட துன்பத்தை அடைவார்கள். எ-று. (௧)

ஓங்கிய தரையு ளிசைத்தபொன் னதிமே
 யுற்றபே ருடலையு மொறுக்குந்
தேங்கிய கருணை யருணைநா யகர்பொற்
 செய்கையைப் படியினிற் கரந்து
வாங்கிய சோரக் கிளையுடன் சிதைக்கு
 மலையினுங் கடலினு மொளித்து
நீங்கிய பொழுதுந் தொடர்ந்திடும் விடுமோ
 நிழலெனத் தொடருமெந் நிலத்தும்.

இ-ள். திருடி பூமியினுள் ஒளித்து வைக்கப்பட்டபொன் அவ்விடத்தின்மேல் வந்தவருடைய தேகத்தையுங் கண்டிக்கும்; அப்படிச்செய்வது மிகுந்தகிருபையுடைய அருணாசலேசுரருடையதிரவியத்தின் செய்தியாம்; அப்பூமியில் ஒளித்துவைத்து எடுத்துக்கொண்டவரைபோகவொட்டாமல், அவர்களுறவோடு கெடுக்கும்; மலையினுங் கடலினு மொளித்துக்கொண்ட பொழுதுந்தொடர்ந்து வருத்தும்; விடமாட்டாது; எவ்விடத்திற் போனாலும் நிழலைப்போலத் தொடரும். எ-று. (௨)

கடிக்கலாஞ் சிலையை விழுங்கலா நெருப்பைக்
 கடுவிடங் குழைத்திழைத் தெடுத்துக்
குடிக்கலா மிரும்பை யருந்தலாங் கடும்பாற்
 கொள்ளலா மருந்தினாற் குணத்தால்

203

முடிக்கலாம் பகையை யருணைநா யகர்பொன்
 விழுங்கினால் மிடற்றிலே பிடிக்கும்
உடற்குளே கனலும் புகையுமவ் வளவோ
 வுயிரையு முளத்தையு மொறுக்கும்.

இ-ள். பின்னும் பிரமன் சொல்வான்; கல்லைக்கடிக்கலாம் நெருப்பை யெடுத்து விழுங்கி விடலாம், விஷத்தோடு கொல்லும்படியான வஸ்துக்களைச் சேர்த்துக் குழைத்தெடுத்துச் சாப்பிடலாம் இரும்பைப் புசிக்கலாம். கள்ளிப்பால் முதலிய வற்றையுங் குடிக்கலாம், இவைகள் உபத்திரவஞ் செய்யவொட்டாமல் நல்ல மருந்துகளால் நிவர்த்திபண்ணிக் கொள்ளலாம், அருணாசலேசர் திரவியத்தைச்சாப்பிட்டவுடனே தொண்டையைப் பிடித்துக் கொள்ளும், தேகத்துக்குள்ளே நெருப்பாகக் கனற்றும், புகையுண்டாக்கும், அவ்வளவுதான் செய்யுமோவென்றால் அவர்களுயிரையுங்கொன்று உள்ளத்தையுங் கெடுக்கும். எ-று. (௩)

முக்கணான் பொருளைக் கவர்ந்தபே ரிருக்க
 முயன்றபேர் நினைத்தபேர் முதலா
யக்கணத் தழிவ ரவர்களு மிருக்க
 வடியவர் பொருட்கவர்ந் தலைக்கத்
தக்கது நினைத்தார் கெடுவரென் றுரைத்துச்
 சத்தியம் பலபல சாற்றிச்
செக்கருங் கருக வொளிவிடு மணிப்பூட்
 டிசைமுக னொருகதை செப்பும்.

இ-ள். மூன்று கண்களையுடைய அருணாசலேசுரரது திரவியத்தைத் திருடினவர்கள் படுகின்ற துன்ப மிப்படிப்பட்டது; அஃதிருக்கட்டும், அப்பொருளைத் திருடுகிறதற்கு முயற்சி செய்தவர்கள் திருட நினைத்தவர்கள், இவர்க ளந்தக் கணத்திலே யழிவார்கள்; அவர்களு மிருக்கட்டும், சிவபத்தர்களுடைய பொருளைத்திரு

டி யவர்களைத் துன்பப்படுத்த நினைத்த பேர்களும் கெடுவார்களென்று பலபல சத்தியத்தோடுஞ் சொல்லிச் செவ்வானமுங் கருகும்படி ஒளிவிடுகின்ற இரத்தினாபரணங்களைத் தரித்த பிரமதேவர் ஒரு கதை சொல்லத் தொடங்கினார். எ-று. (௪)

முன்னமே யொருநாள் வடதிசைக் கிறைவன்
முழுமணிக் கங்கைநீர்த் துறைவன்
இந்நிலத் திழிந்த விந்திர னனையா
னாண்டகை முருகவே ணிகர்வான்
மன்னவர் நிரைந்த மகுடகோ டிகளின்
வயிரநா யகங்களாற் றேய்ந்த
பொன்னவிர் கழலான் றருமமுங் கழலான்
புகழ்ப்பெயர் பிரதத்த னென்பான்.

இ-ள். பிரமன் சொல்லுவான், முற்காலத்தில் ஒருநாள் வடதேசத்துக்கு அரசனா யிருக்கின்றவன், விலை யுயர்ந்த முத்துகளுக்கிருப்பிடமாகிய கங்காநதித் துறையை யுடையவன், தெய்வலோகத்தினின்று பூமியிலிறங்கிய தேவேந்திரன் போன்றவன், ஆண்மைக்குணத்தில் சுப்பிரமணியருக்குச் சமானமானவன், அரசர்கள் பணியும்போது அவர்களால் நிரைநிரையாகத் தாழ்த்தப்பட்ட கிரீடகோடிகளில் இழைக்கப்பட்ட உயர்ந்த வயிரங்களாற் றேய்வுற்ற பொன்னாற் செய்யப்பட்ட வீரகண்டையைத் தரித்தவன்; தருமமென்பதை இடைவிடாது செய்கிறவன்; கீர்த்திபொருந்திய பிரதத்தமகாராஜனென்னும் பெயரையுடையவன். எ-று. (௫)

காலனேர் விழியார் முகமென விளங்கிக்
களங்குடைத் தொழுக்கிய மதிபோல்
நீலமா மணிக்காம் பியைந்தவெண் கவிகை
நெடுநிலப் பரப்பெலா நிகழ்த்தச்

சாலவே பணியா வரசர்க ளிவன்பொற்
சரணமே படிந்துயிர் பெறுமென்
றேலவே யழைக்குந் தருமதே வதைபோ
லிரண்டுசா மரைகளார்த் திடவே.

இ-ள். எமன்போலக் கொடுமை செய்கின்ற கண்களையுடைய பெண்கள் முகம்போல் விளங்கிக் களங்கத்தை யுடைத்து ஒழுகவிட்ட சந்திரன்போல நீலரத்தின மிழைத்திருக்கின்ற காம்பையுடைய வெள்ளைக்குடை நீண்ட சந்திரிகையைப் பூமியின் பரப்பெல்லாம் நிகழ்த்தவும் மிகுந்த மரியாதையோடு பணியாத பகை யரசைப்பார்த்து, இந்திரனுடைய அழகிய பாதங்களை வணங்கி உங்களுயிரை இறக்காமல் பெற்றுக் கொள்ளுங்களென்று பொருந்த அழைக்குந் தருமதேவதையைப்போல இரண்டு சாமரங்கள் வீசவும். எ-று. (௬)

வருணமண் டலத்திற் புரவிபோற் கிளர்ந்த
மரகதக் குரகதம் வயங்க
அருணமண் டலத்தை யளவிடுங் கொடித்தே
ரடவிகள் புடவியை யடைப்பக்
கிரணசிந் துரத்துப் புகர்முக மருப்பிற்
கிம்புரிக் கரிதிசை கிளரத்
தரணியர் நடுங்க மந்திரி கணத்தோ
டெழுந்தனன் றண்டை யாத் திரையே.

இ-ள். வருண மண்டலத்தில் விளங்கும் குதிரைகள் போல் உயர்வாகிய மரகத நிறத்தையுடைய குதிரைகள் பிரகாசிக்கவும், சூரியமண்டலத்தை யளாவிய கொடிகள் கட்டிய தேர்க்காடுகள் பூமியையடைக்கவும் கிரணம்பொருந்திய சிந்தூரந்தீட்டிய புள்ளிகளையுடைய முகத்தையும் பூண்கட்டிய தந்தங்களையுடைய யானைகள் திசைகள்தோறும் பிரகாசிக்கவும் பகைமன்னர் பயப்பட மந்திரி கூட்டத்தோடுஞ் சேனைகளோடும் யாத்திரையாகப் பிரயாணப்பட்டார்கள் பிரதத்தமகாராசன். எ-று. (௭)

அங்கர்புற மீற யவனர்வெற் படைய
வவந்தியர் வில்லிநாண் கௌவச்
சங்கிலித் தொடக்காம் மற்றமண் டலிகர்
தம்பிறை தாங்களே சுமக்கச்
சிங்கமே றெனவே சோழநா டணைவான்
றிருநதி கடந்துதென் னருணைக்
கங்கைவாழ் சடையான் கோயிலிற் புகுந்தான்
கங்கையும் காசியும் புரப்பான்.

இ-ள். இப்பிரதத்தமகாராசன் பிரயாணப்பட்டபோது, அங்கதேசத் தரசர்பல்லக்கு புறத்திலேறிக்கொள்ளவும், யவனதேசத்து அரசர்கள்மலையி லொளித்துக் கொள்ளவும், அவந்திதேசத் தரசர் வில்லிலிருக்கின்ற நாணியைக் கௌவிக்கொள்ளவும், மற்ற தேசத்து அரசர்கள் சங்கிலிபோலத் தொடர்ந்து நின்று தாங்கள் கட்டவேண்டிய கப்பங்களைத் தாங்களே சுமந்துவரவும், ஆண் சிங்கம் போலச் சோழநாட்டுக்குப் போகும்படி புறப்பட்டுத் திருநதியைத் தாண்டி அழகிய அருணாசலத் தலத்துக்குவந்து கங்கையைத் தரித்தசடையையுடைய பரமசிவன் கோயிலிற்புகுந்தான்; கங்கை நதியையும் காசிதேசத்தையும் ஆளுகிற பிரதத்த மகாராசன். எ-று.

அரும்பவிழ் மலர்கொண் டருச்சனை புரிய
வருணைநா யகர்திருக் கோயில்
விரும்பியுட் புகுந்து பணியுமவ் விடத்தில்
விடத்தினுங் கொடியகூர் விழியாள்
இரும்பையு முருக்கு மிசையினா லொருத்தி
யிலங்கிழை யாருட னிறைபால்
கரும்பெனு மொழியாற் பாடுதல் கேட்டான்
கண்டனன் வளைத்தவேள் கரும்பை.

இ-ள். காசிதேசத்தரசனாகிய பிரதத்தமகாராசன் அரும்புகள்மலர்ந்த புட்பங்களைக்கொண்டு அருச்சனை பண்ணுகிறதற்காக அருணாசலேசுரர் வீற்றிருக்கும் திருக்கோயிலுள் பத்தியோடேபோய் வந்தனஞ்செய்யும்போது, அவ்விடத்தில்விஷத்திலுங்கொடுமை செய்கின்ற கூரியகண்களையுடையவள், இரும்பும் உருகும்படிசெய்யும் சங்கீதவித்தையையுடையவளாகிய ஒருதாசிப்பெண் பிரகாசிக்கின்ற ஆபரணங்களைத்தரித்த சில பெண்களோடுநின்று சுவைநிறைந்தபாலும் கரும்பினிரசமும்போன்ற மொழியினால் பாடுவதைக்கேட்டான்; அக்கணத்தில் தான் மன்மதன்வளைத்த கரும்புவில்லையுங்கண்டான், காமவிகாரங்கொண்டபிரதத்தமகாராசன். எ-று.

அன்னமோ கிளியோ வமிர்தமோ திருவோ
வமிர்தமன் றமரருக் களித்த
வன்னமோ கினியோ விரதியோ பிரமன்
மனத்தினால் வகுத்தமே னகையோ
என்னமோ கமதாய்த் தனதுநாட் டினிற்கொண்
டேகுவா னினைந்தன னதற்கு
முன்னமே குரங்கு முகமதா யிருந்தான்
முறுவலா யினதேவர் முகமும்.

இ-ள். காசிதேசத்துப் பிரதத்தமகாராசன், அத்தாசிப்பெண்ணைப்பார்த்துச் சொல்லுவான்; இவள் அன்னமோ! கிளியோ! தேவாமிர்தமோ! இலட்சுமியோ! அசுரரைக்கொன்று அமிர்தத்தை முற்காலத்தில் தேவருக்குக்கொடுத்த அழகாகியமோகினியோ! இரதிதேவியோ! பிரமன் மனத்தினால் சிருட்டித்த மேனகையோ! என்றுநினைத்து மோகத்தோடு தன்னுடைய தேசத்துக்கு அப்பெண்ணைக் கொண்டுபோவதற்கு நினைத்தான்; அந்நினைப்பு உண்டாகுமுன்னந் தானே குரங்குமுகத்தை யுடையவனாயிருந்தான்; அதைக்கண்டு எல்லாரும் நகைத்தார்கள். எ-று. (௧௦)

மந்திரிக்கிழவ ராசனைவினவி
மன்னவா நினைத்தவா றதனால்
வந்தவித்துயரந் தவிர்ந்திடமலைமேன்
மருந்தினைப் பணியென வவனுஞ்
சிந்துரக்குவடுங் கவனமாம்பரியுஞ்
செழுமணிச் சிவிகையுந் தேரும்
சந்தனமண்ணியுந் தனத்தினார்பலருந்
தமனியக் கோயின்முன் விடுத்தான்.

இ-ள். மந்திரிமார்கள் பிரதத்தமகாராசனைப்பார்த்து குரங்குமுகம்வந்ததற்குக் காரணங் கேட்டறிந்துகொண்டு, அரசனே! தீமையாகிய உமது நினைப்பினால் அடைந்த இத்துன்பம்நீங்கும்படி மலைமேல்மருந்தாகிய அருணாசலேசுரரை வணங்கென்று சொல்ல, அவ்வரசனும் மலையையொத்தயானைகளையும், வேகமாய்த்தாவுகின்ற குதிரைகளையும், நல்ல இரத்தினங்களா லிழைக்கப்பட்டிருக்கும் சிவிகைகளையும், தேர்களையும், சந்தனக்குழம்பைப் பூசுகின்ற ஸ்தனங்களையுடையபெண்களையும், பொற்பிரகாசம்பொருந்திய அக்கோயிலுக்குமுன் காணிக்கையாகக் கொடுத்துவிட்டான். எ-று.()

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பன்னரு மனந்த பூசனை புரிந்தான்
பரமனு மகிழ்ந்தருள் புரிந்தான்
கின்னர மொழியாள் விருப்பினா லடைந்த
கிலேசவா னரமுக மொழிந்தான்
நன்னர முகம்பெற் றிறையுநா டணைந்தா
னுதலா லரன்பொ[illegible] கவர
வுன்னிய பாவம் பதின்மடங் கரும்பொ
னுதவினாற் றவிருமென் றுரைத்தான்.

இ-ள். பிரதத்தமகாராசன் சுவாமிக்குச்சொல்லுதற்கரிய அநந்தம் அருமையான பூசைகள்செய்ய, அப்பொழுது சுவாமியும் அவ்வரசனுக்குக்கிருபைசெய்தார்; வீணையிலிசைபோலும்வார்த்தையையுடைய பெண்மேற்கொண்ட ஆசையினாலடைந்த துன்பம்பொருந்திய குரங்குமுகத்தை யொழித்தான்; நல்ல மானிட முகத்தையடைந்து அவ்வரசன் தன்னுடைய நாட்டுக்குப்போய்ச் சேர்ந்தான்; ஆகையால் அருணாசலேசருடைய பொருளைத் திருடினதனாலுண்டாகியபாவம் அப்பொருளுக்கும் பதின்மடங்குதிரவியங்கொடுத்தால் நீங்குமென்று சொன்னார் பிரமதேவர். எ-று. (௪௨.)

மாதவமேனை யருணகிரி வளமிதுதா
னென்னத் திருவாய் மலர்ந்தா னந்தப்
போதனையங் கடியனிந்தப் போதனையான்
மகிழ்ந் தனமிப் புவியின் மீதே
கோதமுட னறிந்துசெய்த பவந்தவிருங்
கதையினையுங் கூறுகென்றான்
மூதறிவா யினாறுமுகத் தினுமா
யிரமுகமாய் மொழியலுற்றான்.

இ-ள். மகத்தாகிய தவத்தையுடைய சனகரிஷியே! அருணாசலத்தின வளம் இதுதானென்று சொன்னார்; அப்பிரமனை அவ்விடத்தில் சனகரிஷிவந்தனஞ்செய்து உம்முடைய போதனையினால் ஆநந்தமடைந்தேன், இவ்வுலகத்தில் குற்றமாக அறிந்துசெய்தபாவம் நீங்கும்படியான கதையையும் அருள்செய்யவேண்டுமெனப்பேரறிவுகொண்ட பிரமதேவர் தம்முடைய வாய்நான்கும் ஆயிரம்வாயாகச் சொல்லத்தொடங்கினார். எ-று. (௪௩)

பதினொன்றாவது
பிரதத்தராஜன் சருக்கம்
முற்றிற்று.
ஆ. திருவிருத்தம் - ௫௦௬.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பாவந்தீர்த்த சருக்க வசனம்.

முன்பு ஒருகாலத்தில் பிர்மாவினால்சபிக்கப்பட்ட அஷ்டவசுக்கள் அந்தச்சாபம் நிவர்த்தியாகும்படி கங்கைக்கரையில் பரமசிவனைநோக்கித் தவஞ்செய்தபோது, பரமசிவன் வந்து திருவண்ணாமலையைச்சூழ்ந்த கிழக்குத்திக்குத்தொடங்கி எட்டுதிக்குகளிலுமிருந்து தவஞ்செய்தால் உங்களுடையசாபம் நிவர்த்தியாகும் என்று சொல்ல, அப்படியே அவர்கள் திருவண்ணாமலைக்குவந்து மலையைச்சூழ்ந்த எட்டுத்திக்குகளிலுமிருந்து சுவாமியைப்பூசித்துப் பழையபடி தமதுபதவிகளைப்பெற்றுச் சிவகிருபையும் அடைந்தார்கள். அந்த எட்டுவசுக்களுஞ்செய்த தபோபலத்தினால் பரமசிவன் எட்டுமுகமாயிருந்ததைப்பார்த்துத் தேவர்கள் பல்லாண்டு கூறினார்கள்.

முன் ஒருகாலத்தில் தேவேந்திரன் பிர்மாவினிடத்திற்குவந்து எல்லாரும் தேவேந்திரபட்டத்திற்காகத் தவஞ்செய்கிறார்கள். அந்தத்தவத்தை எவ்விதமாயாவது அழிக்கவேண்டுமென்றுகேட்டுக்கொண்டுபோய்விட்டான். அதற்காகப் பிர்மா, திலோத்தமை என்னும் பெண்ணையுண்டாக்கி அவளுடைய அழகைக்கண்டு அவரே இச்சித்தபோது, தகப்பனென்று அவர்கருத்துக்கு அவன் இசையாமல் பெண்மானாகி ஒடினாள், பிர்மா கலைமானாகத்தொடர்ந்தார். அப்போது அவள் மலையுருவமாகிய அருணாசலேசுரரைக் கொஞ்சதூரத்திற்கண்டு நீரேதஞ்சமென்றுசொல்லியடைந்தாள். உடனே மலையைக்கீறி அதிலிருந்து பரமசிவன் வேடரூபமாகவும் நாலுவேதங்களும் நாய்களாகவும் தோன்றியதைப்பார்த்த பிர்மாபயந்து தன்னுடைய ஆசையை நிவர்த்திசெய்து சுவாமியை வணங்கினான். அப்போது பரமசிவன் பிர்மாவைப்பார்த்து நீஉண்டாக்கின திலோத்தமையை நீயே இச்சித்ததினால் நேரிட்ட பாவம் தீரமாட்டாது ஆகிலும் இந்தமலையைத் தரிசித்தாயாகையால் அந்தபாவத்தைத் தீர்த்துவிட்டோம் உன்னிடத்திற்குப் போவென்றுசொல்லி மறைந்துவிட்டார்.

முன்னொருகாலத்தில் பரமசிவன் திருவிளையாட்டினாற் கற்பகாலம்முடிவுற்று மகத்தாகிய அந்தகாரம் நீங்கியும் சமுத்திரத்திற்றுயிலும் விட்டுணு உலகம் உண்டாக்கும்பொருட்டு பிரமனைசிருஷ்டிக்காமல் நித்திரைசெய்துத் தாழ்த்ததனாலே தீவினையைச் சம்பாதித்துக்கொண்டேனென்று பரமசிவனை நினைக்க அவர் ரிஷபவாகனத்தின்மேற்றோன்றினார். விட்டுணுவானவரெழுந்து அஞ்சலியத்தராய் எனக்கு நித்திரையினால்வந்த வினையைநீக்கி அருள்செய்யவேண்டுமென அதற்குப் பரமசிவன் அருணாசலத்திற்குப் போய் பூசைசெய்தால் உன்னைவிட்டு வினைபோம் என்றுமறைந்தருளினார் விட்டுணுவானவர் அப்படியே அவ்வருணாசல்த்தைப் பூசைசெய்து, வினையை நீக்கிக்கொண்டார்.

சந்திரனானவன் உரோகிணியின்மேல் அதிகவிருப்பமாக விருப்பதை மற்றயிருபத்தாறு பெண்களால் தக்கன்கேள்விப்பட்டு எல்லா நாயகிகளிடத்திலும் விருப்பம்வையாமல் ஒருத்திமேல்மாத்திரம்வைத்ததனால் அவனுடல் குன்றிப்போகக்கடவதென்று சபித்தான் இச்சாபத்தையடைந்த சந்திரன் அவ்வருணாசலத்தை வலம்வந்து அத்துன்பத்தை நீக்கிக்கொண்டான்.

பாவந்தீர்த்த சருக்க வசனம்

முற்றிற்று.



ஓர்காலத்தில் பிரமனால் சாபமடைந்த அஷ்டவசுக்களும், பிரமன் தான் சிருட்டித்த திலோத்தமைபேரில் கொண்ட மோகத்தினாலடைந்த பாவமுந்தீரத் திருமலையைப் பூசித்துப் பேறடைந்தமகாத்மியம்—19.

515

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பன்னிரண்டாவது

பாவந்தீர்த்த சருக்கம்.

கலி விருத்தம்.

வாக்கினால் வடிவினான் மனத்தினால்பவந்
தாக்கினா ரருணையா சயிலநோக்கினா
னீக்கினா ரென்பதுநிகழ்த்தி நான்மறை
தேக்கினான் சிலகதை செப்ப லாயினான்.

இ-ள். வாக்கினாலும், தேகத்தினாலும், மனத்தினாலும், துர்விஷயங்களைச் சொல்லியும், செய்தும், நினைத்தும், பாவத்தையடைந்தவர்கள் திருவண்ணாமலையைத் தரிசனஞ்செய்தால், அப்பொழுதே தங்கள் பாவத்தை நீக்குவார்கள் என்று சொல்லி நான்கு வேதங்களையுந் தன்னிடத்திலுடைய பிரமன் சிலகதையைச் சொல்லத் தொடங்கினான். எ-று. (க)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

எம்பெரிய சபையிடத்தி லிருநான்கு
வசுக்களும்வந் திருந்தார் முன்னே
தம்பெரிய தவத்தினையும் புகழினையும்
வியந்துரைத்த தகைமை நோக்கிக்
கும்பமுனி முதலானோ ரிடையிலுமை
வியந்துரைத்த கொடுமை யாலே
அம்புவியி லிழைத்ததவ மனைத்தினையு
மவமாக்கி யகற்று மென்றேன்.

இ-ள். என்னுடைய பெரிய சபையினிடத்தில் அஷ்ட வசுக்களும் முன்னொருகாலத்தில் வந்திருந்தார்கள்; அப்பொழுது அவர்கள் தங்களுடைய தவத்தின் பெருமையும் அதனால்வந்த கீர்த்தியையுங் கொண்டாடிச் சந்தோஷித்தார்கள்; அதைப்பார்த்து அகத்தியர் முதலான ரிஷிகள் மத்தியில் செய்த தவமெல்லாம் அவமாகச் செய்து விடுமென்று சொன்னேன். எ-று. (௨)

உற்றபெருந் தவத்தினையுந் தமதறத்தி
னலத்தினையு முரைத்த பேரு
மற்றொருவர் தமையிகழ்ந்த வருந்துயரக்
கடன்மூழ்கி மறிவ ரென்றேன்
சிற்றறிவா கியவசுக்க ளனைவர்களு
நடுங்கியிது தீருங் காலஞ்
சொற்றருளு கெனவுரைத்தா ரரனருளாற்
றீருமுங்க டுயர்தா னென்றேன்.

இ-ள். பெருமை வாய்ந்த தம்முடைய தவத்தையும், செய்த தருமத்தையும் சொன்னவர்களும் மற்றொருவரையிகழ்ந்துபேசினவர்களும், துக்கசமுத்திரத்தில் மூழ்கி மதிபட்டுக் கிடப்பார்களென்றேன். சிற்றறிவுடைய அட்டவசுக்களும் அவ்வார்த்தையைக் கேட்டுநடுங்கி, இச்சாபம் எக்காலத்தில் தீரும் அருள்செய்ய வேண்டுமென்று கேட்டார்கள்; பரமசிவன் கிருபை உங்களுக்கு என்றைக்குக் கிடைக்குமோ அன்றைக்குத் தீருமென்றேன். எ-று. (௩)

சொல்லுதலும் வசுக்களெலா மெனையகன்று
நெடியகங்கைத் துறையிலேகி
வல்லையிலா நெடுங்கால மிறையைநினைந்
தரியதவ மியற்றினார்கள்
வல்லிபங்க னொருநாளின் மழவிடைமே
லடைந்துதவம் வரமேதென்றான்
அல்லிமல ரவன்கொடுத்த கொடுஞ்சாபக்
கடலிலெடுத் தருளு கென்றார்.

இ-ள். அப்படி சொன்னவுடன் வசுக்களெல்லாரும் என் சபையைவிட்டு நெடுந்தூரஞ் செல்லுகின்ற கங்காநதியின் துறையிற்போய் அளவில்லாக் காலம் பரமசிவனை நினைந்து அரிதாகியதவத்தைச் செய்தார்கள்; பார்வதியை வாமபாகத்தில் வைத்துக்கொண்டிருக்கும் எமது பரமசிவன், இளமையான ரிஷபவாகனத்திலெழுந்தருளிவந்து நாம் உங்களுக்குக் கொடுக்கவேண்டிய வரமென்னவென்றுகேட்டு அருள்செய்தார்; அவ்வசுக்கள் இதழினையுடைய தாமரை மலரிலிருக்கின்ற பிரமன்கொடுத்த கொடிய சாபமாகிய கடலினின்றும் எங்களை எடுத்தருள வேண்டுமென்றார்கள். எ-று. (௪)

கருணைமுகின் முகமலர்ந்து வசுக்களுட
னுமதுபவங் கடக்கவேண்டில்
தரணியிலே யொருநகரந் தலேச்சுரமென்
றிலங்குமந்தத் தலத்தின் மீதே

அருணகிரி யெனுமலையா யிருக்குமந்தப்
பதியணுகி யசலஞ்சூழ்ந்த
வருணதிசை தொடங்கியெட்டுத் திசைகளினு
மிருந்துதவ மியற்று மென்றார்.

இ-ள். கிருபாவருஷம் பொழிகின்ற மேகமாகிய பரமசிவன் திருமுகமலர்ந்து அந்த வசுக்களைப்பார்த்து உங்களுடைய பாவத்தை நீங்கள் கடக்கவேண்டினால், பூமியில் தலைச்சுரமென்று ஒரு திவ்விய தலம் விளங்குகின்றது. அத்தலத்தில் அருணாசலமென்று ஒருமலை உண்டு, அத்தலத்தையடைந்து அம்மலையைச்சூழ்ந்த கிழக்குத் திக்குத் தொடங்கி எட்டுத் திக்குகளிலுமிருந்து தவம் செய்யுங்களென் றருளிச்செய்தார். எ-று. (௫)

அன்னவய லருணையிற்சீ ரரியதவ
மியற்றிடுமவ் வளவேயுங்கள்
முன்னரழற் கிரியுமெட்டு முகமாக
விளங்கியட்ட மூர்த்தியாகு
மன்னுமுங்க ளரும்பவமுந் தவிருமென
வுரைத்துவெள்ளி மலையிற்சேர்ந்தான்
தன்னையடைந் தவர்களெலாந் தனைப்போல
விருக்கவரந் தருகுவானே.

இ-ள். அன்னப்பறவைகள் தங்கியவயல்சூழ்ந்த அருணாசலத்திற்குப்போய் நீங்கள் அரியதவத்தைச் செய்யுங்கள், அப்படிச் செய்தவளவிலே அக்கினி சொரூபமாய் விளங்கிய ஒப்பற்ற அம்மலை உங்களுக்கு முன் காட்சிகொடுக்கும் அப்போதுநிலைபெற்ற உங்களுடையபாவமும் நீங்குமென்று திருவாய்மலர்ந்து, கைலாயத்திற்கெழுந்தருளினார், தம்மிடத்தி லடைந்தவர்கள் எல்லாரையும் தம்மைப்போல உருவத்தை யடைந்திருக்க வரமருளிச் செய்யும் பரமசிவன். எ-று. (௬)

574

முந்தவசு ரரையுமவர் புரத்தினையு
மெரித்தபிரான் மொழிந்த வாறே
அந்தவசு வனைவருஞ்சென் றருணையிலே
யரியதவ மியற்றினார்க
ளிந்தவசு மதிதழைக்க வழற்கிரியெட்
டுருவாகி யிருந்த தங்கே
தந்தவசு நிலைபுகழ்ந்த கொடுஞ்சாபக்
கிரிகளெலாந் தள்ளினார்கள்.

இ-ள். முன்பு அசுரர்களையும், அவர்கள்வாசஞ்செய்துகொண்டிருந்த திரிபுரங்களையும், நகைத்தெரித்த சுவாமி அருளிச் செய்தபிரகாரம், அவ்வெட்டு வசுக்களும்போய் அருணாசலத்தில் அருமையான தவஞ்செய்தார்கள்; இப்பூமி தழைக்கும்படி அக்கினிமலை எட்டுமுகமாய் விளங்கியிருந்தன; முன்னே தங்களுடைய தவத்தைப்புகழ்ந்து சொல்லியதனால் வந்த கொடிய சாபமென்று சொல்லப்பட்ட மலையைத் தாண்டிவிட்டார்கள் அவ்விடத்தில். எ-று. (௭)

பூதரஞ்சூழ் திசைகளெலா மிருந்தட்ட
மூர்த்திதனைப் பூசித் தார்க
ளாதலினாற் பழையபடி தமதுபத
விகளையடைந் தருள் பெற்றார்க
ளோதமறும் படிக்கரிய மறைப்பயனெட்
டுருவாகி யிருந்த போதுஞ்
சீதரனும் பதங்கிரமத் துடனறியான்
முடியெனக்குந் தெரிந்த தின்றே.

இ-ள். அந்த மலையைச் சூழ்ந்த எட்டுத் திக்குகளிலு மிருந்து வசுக்கள் அஷ்ட மூர்த்தமாகிய சுவாமியைப் பூசித்த படியினால், பழையபடியே தமது பதவிகளைப் பெற்றுக்கொண்டுசுவாமியினது இருமையும் பெற்றார்கள்; குற்றம் நீங்கும்படி அருமையான வேதப் பொருளாகிய அச்சுவாமி எட்டுமுகமா யிருந்தபோதும், விட்டுணுவும் திருவடியைக் கிரமத்துடன் அறியாமற்போனார், இன்றளவும் எனக்கும் முடிதெரியவில்லை. எ-று. (௮)

சண்முகனை யளித்தவைந்து முகத்தவனெண்
வசுக்கள்செயுந் தவத்தி னாலே
எண்முகமா யிருந்ததுகண் டொருமுகமா
யிமையவர்வாழ்த் தெடுத்தா ரென்று
தண்முகநான் குடையபிரான் சனகமுனிக்
குரைத்தருளச் சயிலத்தூடே
பண்முகயா ழனையமொழித் திலோத்தமைசேர்
கதையினையும் பகர லுற்றான்.

இ-ள். சுப்பிரமணியரைப்பெற்ற பரமசிவன் எட்டு வசுக்களுஞ்செய்த தபோபலத்தினால் எட்டுமுகமா யிருந்ததைப் பார்த்துத் தேவர்களெல்லாம் ஒன்றாய்க்கூடி வணங்கிப் பல்லாண்டு கூறினார்களென்று கருணைபொருந்திய நான்கு முகங்களையுடைய பிரமன் சனகரிஷிக்குச்சொல்லி அருள்புரிகின்ற அத்திருமலையில், யாழின் இசைபோன்ற சொல்லையுடைய திலோத்தமையடைந்த கதையையுஞ் சொல்லத்தொடங்கினார். எ-று. (௯)

கலிவிருத்தம்.

தேவர்கோன் முன்னமென் னிடத்திற் சேர்ந்துதன்
பாவன மானதன் பதவி வேண்டியே

யாவரு மருந்தவ மியற்றி னாரதற்
காவது செய்யென வறைந்து போயினான்.

இ-ள். பிரமதேவர் சொல்லுவார்; இந்திரன் முன்னே என்னிடத்தில்வந்து தன்னுடைய பரிசுத்தமான பதவியைச்சிந்தித்து எல்லாரும் அருமையான தவத்தைச் செய்கிறார்கள்; அத்தவம் நிறைவேறாதபடி ஏதாவது ஒருவிக்கினஞ் செய்யவேண்டுமென்று சொல்லிவிட்டுப் போனான். எ-று. (௰)

இந்திரன் போனபின் னியக்க மங்கைய
ரந்தர மங்கைய ரரவ நாட்டவர்
சுந்தரக் கடற்புவித் தோகை மார்வரை
மந்தர முலைச்சிய ரழகு வாரியே.

இ-ள். இந்திரன் போனபிறகு இயக்கலோகத்துப்பெண்கள், தேவலோகத்துப்பெண்கள், நாகலோகத்துப்பெண்கள், அழகமைந்த கடல்சூழ்ந்த பூலோகத்திலுள்ளபெண்கள், மந்திரகிரிபோன்ற முலைகளையுடைய வரையரமகளிர், இவர்களுடைய அழகுளெடுத்துக் கொண்டு. எ-று. (௧௧)

வகுத்தனன் றிலோத்தமை யென்னும் வஞ்சியை
புகுத்தனன் வலியைநன் மதியை யோட்டினன்
மிகுத்ததோர் விஞ்சையிற் புவியின் வேட்டுவ
னகத்துட லழித்துட லளிப்ப தென்னவே.

இ-ள். குளவி தன்னிடத்திலுள்ள ஒரு சாமர்த்திய விசேடத்தினால் புழுவின் உடலைக்கெடுத்து, அதற்கு வேறொரு தேகத்தைக் கொடுப்பதுபோலத் திலோத்தமை யென்னும் பெண்ணை உண்டாக்கினேன்; அப்பொழுதே அவள்மேற்கொண்ட ஆசையால் என்னுடைய வல்லமையை யிழந்தேன்; ஞானத்திற் சொல்லுகின்ற என்னுடைய புத்தியையுந் துரத்திவிட்டேன். எ-று. (௧௨)

மன்மதன்கணையினான் மயங்கிவாடுமென்
றன்மையையறிந்துநான் றனக்குத்தாதையென்
றென்மனம்பொருந்திலா தெனதுகையுறான்
முன்பினிறொளிக்கநான் முகமுந்தேடினேன்.

இ-ள். மன்மதனுடைய பாணத்தினாலே மயக்கமடைந்துவாடுகின்ற என்னுடைய இயல்பை யறிந்து, நான் தனக்குத் தந்தையென்று என் கருத்துக்கு ஒவ்வாதவளாகியும், நான் பிடிக்கும்போது என்கைக்கு அகப்படாதவளாகியும், எனக்கு முன்னின்றும் ஓரிடத்தில் தானறியாதபடி ஒளித்துக்கொள்ள; நான்கு பக்கங்களிலும் அவளைத்தேடினேன். எ-று. (௪௩)

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

கன்னிமானாகச் சென்றாள்
  கலையதாய்த் தொடர்ந்தேன் பேட்டு
வன்னியாய்ப் பறந்தாள் சேவல்
  வடிவமாய்த் தொடர்ந்தேன் மங்கை
பின்னையோர் கதியுங் காணா
  பிறங்கலா மருணை நாதன்
றன்னையே தூரக் கண்டாள்
  சரணமென் றுரைத்துச் சார்ந்தாள்.

இ-ள். அப்படி நான்தேடி அவளைக்கண்டு பிடிக்கும்போது, பிடிப்பதற்கு முன்னே பெண் மானாகி ஓடினாள், நான்கலை மானாகத் தொடர்ந்தேன்; அதன்பின் பெண்கிளியாய்ப் பறந்தாள், நான் ஆண்கிளியாய்ப் பறந்து தொடர்ந்தேன்; அத்திலோத்தமை பிறகு என்கையி லகப்படாம லிருக்கிறதற்கு வேறொருகதியுங் காணாமல் வருந்தும்போது, மலையுருவாகிய அருணாசலேசுரரைச் சிறிது தூரத்திற்கண்டு நீரேதஞ்சமென்றுசொல்லி அடைந்தாள். எ-று. (௪௪)

மாயமால்விடையின்பாகர் வடிவிலாவிடையின்பாகர்
காயழலானமெய்யர் கானகத்தாடுமையர்
ஆயுமாரணத்தின்சோதி யடைக்கலமென்றாளையன்
சேயிளமழலைபோலத் திருச்செவிசாற்றினாளே.

இ-ள். மாயஞ்செய்கின்ற விட்டுணுவாகிய ரிஷபத்தின்மேல் வருகின்றவரே! தோற்றாத இடையினையுடைய பார்வதியைப்பாகத்தில்வைத்துக்கொண்டிருப்பவரே! தகிக்கும் அக்கினிவடிவமானவரே! திருவாலங்காட்டினிடத்தில் நடனஞ்செய்த சுவாமியே! ஆராய்ந்து தேடுகிற வேதத்தையுடைய சோதியே! நானடைக்கலம் என்று சகலரையும் ஆளுகின்ற பரமசிவன் திருச்செவியிற் செல்லும்படி குழந்தையின் இளமையாகிய குதலைச்சொல்லைப்போலச் சொன்னாள். எ-று. (௪௫)

முருமலர்க் குழலினாடன்
  முறையிடு முறைக்கென்னையன்
திருவுரு வனைத்துந்தூய
  செவிகளா யிருந்தபோது
விரைவின்மால் வரையைக்கீறி
  வேட்டுவனாகி நாலு
சுருதியு ஞமலி யாகத்
  தோன்றினன் றோகைபாகன்.

இ-ள். வாசனையமைந்த புட்பமாலையையணிந்த கூந்தலையுடைய திலோத்தமை முறையிடுதலுக்கு, என் சுவாமி அழகிய உருவமெல்லாம் செவிகளாயிருந்தன; அதனால் சீக்கிரத்தில் மலையைக் கீறி அதினின்றும் தாம்வேடவடிவமாகவும், பார்வதிவேடச்சி உருவமாகவும், நாலுவேதங்களும் நாய்களாகவும் தோன்றினார் பார்வதியை இடதுபாகத்தில் வைத்துக்கொண்ட பரமசிவன். ஏ-று. ()

சூடகச் செங்கை பாகன்
சிலையொடு தோன்றும் போதில்
வாடிய மருங்குலாண்மேன்
மயக்கமும் வருத்தந் தீர்ந்தே
னாடிய பெருமா னம்மை
முனியுமென் றஞ்சித் தாழ்ந்தேன்
வேடனைப் பறவை கண்டால்
வெருவுமோ வெருவுறாதோ.

இ-ள். வளையலையணிந்த கையையுடையபார்வதியை ஒருபக்கத்தில்வைத்துக்கொண்டிருக்கிற பரமசிவன் வேடனாகிவில்லைக்கையிலேந்திக்கொண்டு தோன்றியபோது, முன்னே நடனஞ்செய்த சுவாமி என்னைக் கோபித்துக்கொள்வாரென்றுபயந்து வளைகின்ற இடைப்பினையுடைய திலோத்தமைமேலுண்டாகியமையலையும், அதினாலுண்டாகியவருத்தத்தையுந்தீர்ந்து அச்சுவாமியை வணங்கினேன்; வேடனைப்பறவைகண்டால் பயப்படுமோபயப்படாதோ. எ-று.

வெற்பெனு முலையா டன்னை
விதித்துநீ விரும்புந் தீமை
கற்பகோ டியினுந் தீரா
தாயினுங் கருணை யாமித்
தற்பர மலைகண் டாயே
யாதலாற் றவிர்த்தோம் போவென்
றற்புதன் மொழிந்து மீளப்
புகுந்தன னருணை வெற்பில்.

இ-ள். மலைக்குநிகராகிய தனத்தையுடையதிலோத்தமையைப்படைத்து நீயேவிரும்பினதினாலுண்டாகியபாவம் கற்பகோடிகாலத்திலுந்தீரமாட்டாது. ஆனாலும் அருவுருவமாகியும் தானே பரமாகியும் உள்ள இம்மலையை தரிசித்தாயாதலால், அப்படிப்பட்ட

பாவந்தீர்த்துவிட்டோம், உன்னிடத்திற்குப்போவென்று திருவாய்மலர்ந்து அம்மலைக்குள் சுவாமிமறைந்துவிட்டார். எ-று. (௧௮)

525

கலிவிருத்தம்.

தன்னையறியாமல்வினை சாருமுடறுனுந்
தென்னருணைசேரிலது தீருவதுதிண்ண
மின்னல்வினைபற்றதனி லெண்ணியதுபெற்றார்
முன்னமுளரென்றயன் முனிக்குமொழிகின்றான்.

இ-ள். ஒருவனுக்கு அபுத்திபூருவமாகவந்த பாவம் அவன் அழகுபொருந்திய அருணாசலத்தையடைந்தால்தீரும்; அது நிச்சயமே; முற்காலத்திலும் அநேகர் தங்களுடைய வினையைநீக்கி அந்தலத்தில் தாங்கள்நினைத்தவரம்பெற்றுக்கொண்டார்களென்று பிரமதேவர் சனகரிஷிக்கு ஒருகதைசொல்லுகிறார். எ-று. (௧௯)

கற்பமுடிவாயிருள் பெயர்ந்துபுலர்காலத்
தற்பவிருளின்றதுமுன் றுயிறையினாலே
சொற்பரவைமாயனுணராதுதுயில்கொள்ளச்
சிற்பரமயோகியர்கள் செம்மலைநினைந்தார்.

இ-ள். முற்காலத்தில் பரமசிவனுடைய திருவிளையாட்டினால் கற்பகாலம்முடிவுற்று மகத்தாகிய அந்தகாரம்நீங்கி வெளிச்சமுண்டாகிறகாலத்தில், அவ்வந்தகாரத்திற் கொஞ்சம்நின்ற அக்காலத்தில் இதனையறியாமல் விட்டுணு சமுத்திரத்தில் நித்திரைசெய்துகொண்டிருக்க மேன்மையான சின்மயமாகிய யோகியர்கள் பரமசிவனைநினைத்தார்கள். எ-று. (௨௦)

அத்தனடியார்கடம தாவமறுக்குஞ்
சுத்தனமலானதொரு சோதிவடிவானோ
னத்தலமுமெத்திசையு மெங்கும்வெளியானோ
னுய்த்தபொறிதம்மிலுள வாயுவுலகெல்லாம்.

இ-ள். எல்லாச்சீவராசிகளுக்கும் பிதாவாகியும், தமதடியார்களுடைய ஆணவமலத்தைக்கெடுக்கின்ற சுத்தராகியுமிருக்கும்பரமசிவன் நெருப்புமயமாகிய ஒரு சோதிரூபத்தை யடைந்தார்; எத்தலங்களிலும் எத்திக்குகளிலும் மற்ற எவ்விடங்களிலும் ஆகாயமே தமக்குருவாகிய அச்சுவாமியானவர் அப்போது செந்தீப்பொறிகளாலே உலகமெல்லாம் உண்டாயின. எ-று. (௨௧)

ஊழிமுடிவாயிருள் புலர்ந்துமுணராதே
யாழியிலைமிற்றுயிலு மச்சுதனையெய்தி
வாழியெனயோகியரெழுப்புதலுமாயன்
பாழியிதுவென்றுபயந்துடனெழுந்தான்.

இ-ள். ஊழிகால முடிந்து மகத்தாகிய அந்தகாரம் நீங்கியும் அறியாமல் சமுத்திரத்தில் நித்திரைசெய்யும் விட்டுணுவினிடத்தில்வந்து வாழியென்றுசொல்லி யோகியர்கள் எழுப்புதலும் அவ்விட்டுணுசர்ப்பசயனத்தினின்றும் அதிகபயத்துடனெழுந்திருந்தார்.

வையகமளிக்கவலரோனையுதவாதே
பையரவின்மிசைத்துயில் கொண்டபரிசாலே
வெய்யபுன்வினைத்தொழில் விளைத்தனனெனத்தன்
னையுணர்வுமஞ்சியென தையனைநினைந்தான்.

இ-ள். உலகமுண்டாக்கும்பொருட்டு பிரமனைச்சிருட்டிக்காமல் படத்தையுடைய பாம்பின்மேல் நித்திரைசெய்த தன்மையினால், வெம்மையாகிய தீவினையைச் சம்பாதித்துக்கொண்டேனென்று ஐம்பொறிகளுங்கலங்கி யென்னுடைய ஆண்டவனாகிய சுவாமியை நினைந்தார். எ-று. (௨௨)

அன்பர்கருதிற்கடிமை யாகியெதிர்வந்தே
துன்பமகல்விக்குமது தாயதொழிலானென்

னன்படிகவெற்புமிசை மன்னுசுடர்போலே
மின்பருடமேனியுடன் வெள்விடையில்வந்தான்.

இ-ள். அடியார்கள் நினைத்தால் சீக்கிரத்தில் தானே அவர்களுக்கு எதிராகத் தோன்றித் துன்பம் நீக்குவதே தமக்குப் பரிசுத்தமாகிய தொழிலாகக்கொண்ட பரமசிவன் வன்மையாகிய படிகமலையின்மேல் விளங்கும் சோதிபோல வெண்மையாகிய ரிஷபத்தின்மேல் மின்போன்ற நிறத்தோடும் எழுந்தருளி வந்தார். எ-று.

பொருக்கெனவெழுந்தடி பணிந்தருள்புகழ்ந்தே
யருக்கியமுதற்புரி யருச்சனையினாலே
யுருக்கியென்வினைத்தொட ரொழித்தருள்கவென்று
னெருக்கணிதுவானிவை யெடுத்துமொழிகின்றான்.

இ-ள். அப்படி பரமசிவன் ரிஷபவாகனத்தில் எழுந்தருளி வந்தவுடனே, விட்டுணு சிக்கிரத்தில் எழுந்து திருவடிக் கமலங்களுக்கு வந்தனஞ்செய்து, அவருடைய திவ்விய கிருபையைப் புகழ்ந்து, அவருக்கு, அர்க்கியமுதலிய பூசைகளினாலே சுவாமியினுடைய திருவுள்ளத்தை இளகச்செய்து, எனக்கு நித்திரையினால் வந்தவினையை நீக்கி அருள்செய்ய வேண்டுமென்றார்; எருக்கம்பூமாலையைத் தரிக்கும் சுவாமி இவைகளைச் சொல்லத்தொடங்கினார். எ-று. (௨௩)

வாசிமகமேமுதன் மகம்பலசெய்தாலும்
பாசமகலாதவினை பற்றறுதலெண்ணித்
தேசுமிகுதென்றிசை செறிந்தருணைதன்னிற்
பூசைபுரிவிட்டுவினை போகுமுனையென்றான்.

அர்க்கியம் முதலாயின என்பன அர்க்கியம், பாத்தியம் ஆசமனமாம்.

இ-ள். ஒருவன் தனக்குண்டான பாசவினையை நீக்கும்படி நினைத்து அஸ்வமேதமுதலிய பலயாகங்களைச் செய்தாலும் அது போகாது; ஆகையினால், சோதிமயமாகிய தெற்குத்திசையில் வி

னைக்கும் அருணாசலத்திற்குப்போய் பூசைசெய்தால் உன்னைவிட்டு வினைபோம் என்றார் பரமசிவனார். எ-று. (௨௬)

நாறுபொழிலங்கரு நாமும்வடிவொன்றே
வேறலவதன்பெருமை வேதமுணராதால்
நீறுபுனையோகியர்க ணீவிர்பலர்தொண்ணூற்
றாறுபிரமாவதி லருச்சனைபுரிந்தீர்.

இ-ள். வாசனையுடைய சோலைகள் சூழ்ந்த அவ்வருணாசலத்திற்கும் எனக்கும் வடிவம் ஒன்றுதான், பேதமன்று; (நான்கு) வேதங்களுங்கூட அறியமாட்டா; விபூதியை முக்கியமாகத் தரிக்கும் யோகியர்களும் விட்டுணுக்களாகிய நீங்கள் பலரும் தொண்ணூற்றாறு பிரமர்களும் அத்தலத்தில் பூசைசெய்தீர்கள். எ-று. ()

முற்றிழையுரோகிணி முலைக்கிடையின்மூழ்கா
மற்றவிருபத்தறுவர் வாழ்வையுமறந்தான்
கற்றைமதிதக்கனுடல் கன்றுறச்சபித்தான்
அற்றமதியப்பதியி லத்துயரொழித்தான்.

இ-ள். சந்திரன் நன்றாக வேலைதீர்ந்த ஆபரணங்களையுடைய உரோகிணி தனங்களின் போகத்தைவிரும்பி மற்றை இருபத்தாறு நாயகிகளுடைய போகவாழ்வுகளை மறந்துவிட அதை முன்சொன்ன இருபத்தேழு பெண்களுக்குந் தந்தையாகிய தக்கன் கேள்விப்பட்டு எல்லா நாயகிகளிடத்தும் விருப்பம் வையாமல் ஒருத்திமேல் மாத்திரம் வைத்ததனால் அவனுடல் குன்றிப் போகக்கடவதென்று சபித்தான்; அச்சாபத்தையடைந்த சந்திரன் அவ்வருணாசலத்தில் வந்து அத்துன்பத்தை நீக்கிக்கொண்டான். எ-று.

நினைப்பளவின்முத்திதரு நீணகரதிற்போய்
மனக்குறைதவிர்த்திடுதி யென்றிறைமறைந்தா
னனற்கிரியைநாடியரி யத்திசையினண்ணிச்
சுனைக்கமலவாசமிகு சோணகிரிகண்டான்.

இ-ள். நினைத்த மாத்திரத்தில் முத்தியைக் கொடுக்கும் அருணாசலமென்னும் அத்தலத்திற்குப் போய் மனக்குறையை நீக்கிக்கொள்ளென்று சுவாமி மறைந்தார்; விட்டுணு அக்கினி வடிவாகிய மலையைத் தியானஞ்செய்து அதுவிளங்குந் தென்றிசையையடைந்து சுனையிலிருக்கிற தாமரைப்பூவின் வாசனைமிகுந்த அத்தலத்தைக் கண்டார். எ-று. (௨௯)

ஈசர்வடிவானமலை கண்டிறைஞ்சித்
தேசமிகுநன்னகர் செறிந்துமகிழ்வாக
வாசவதடத்திடை படிந்துவலமாகிப்
பூசனைபுரிந்துவினை போயமலனானான்.

இ-ள். மலைவடிவமாகிய சுவாமியைத் தரிசித்து அன்போடு பணிந்து ஒளியமைந்த அத்தலத்திற்குப் போய்ச் சந்தோஷமடைந்து இந்திர தீர்த்தத்தில் முழுகிக் கிரிப்பிரதக்கிணம் வந்து பூசைசெய்துகொண்டுவரத் தம்முடைய வினையைநீக்கி விஷ்ணுமூர்த்தி பரிசுத்தரானார். எ-று. (௩௦)

மேவியருணைப்பதியின் மிக்கபுகழ்மாயன்
பாவமகல்வித்திடு பலத்தினையுரைத்துத்
* தாவியுமையாகமுறை சோணகிரிநாத
னாவியின்மகிழ்ச்சியையு நான்முகனுரைப்பான்.

இ-ள். மிகுந்த புகழையுடைய விட்டுணு அருணாசலத்திற்குப் போய்த் தம்முடைய பாவத்தைநீக்கி அவர் அடைந்தபலனைப் பிரமதேவர் சனகரிஷிக்குச்சொல்லிப் பார்வதி ஒருபுறத்தில் வாசஞ்செய்கின்ற அருணாசலேசுரர் பழுது பூசையினால் அடைந்த சந்தோஷத்தையுஞ் சொல்லத்தொடங்கினார். எ-று. (௩௧)

பன்னிரண்டாவது
பாவந்தீர்த்த சருக்கம்
முற்றிற்று.
ஆக திருவிருத்தம்-௧௪௦.

---

* தாவிமயல் பாகமுறை என்றும்பாடம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

புளகாதிபச் சருக்க வசனம்.

நினைத்தவாறு பலபல வடிவங்களை யெடுக்கத்தகுந்த வலிமையுடைய புளகனென்னும் ஓரசுரன் இருந்தான். அவன் ஒருநாட் புழுகுப்பூனையின் உருவத்தைக் கொண்டு அம்மலையின்கண் உலாவிக்கொண்டு புழுகைச் சிதறினான். அதனால் சிவபெருமானது வரபலத்தையடைந்து விட்டுணு முதலாகிய தேவர்களும் முனிவர்களும் துன்பப்படவும், பூமியிலுள்ளார் பயப்படவும் அனேகோரச் செய்கைகளைச் செய்வானாயினான். அச்செய்கைகளாலுண்டாகிய துன்பத்திற்கு ஆற்றாத மாயவன் முதலாய தேவர்கள் பரமகருணாநிதியாகிய பரசிவப்பிரபுவையடைந்து வணங்கி முறையிட்டுக் கொண்டனர்.

தடங்கருணைப் பெருங்கடலாகிய தற்பரசிவனார் அவர் வார்த்தைகளையெல்லாங் கேட்டுத் திருவாய் மலர்ந்தருளுவார். அன்பர்களே! வாசனைமிக்க புழுகை நமது வடிவமாகிய அருணகிரியின்கட் சிதறினபடியால் அதிகபலம் அடைந்திருக்கின்றான். அவன் நமது வரபலத்தை யடைந்தமையால் எளிதில் அழியமாட்டான். ஆதலால் அவனை எமது முத்திக்கண் இரண்டறக் கலக்கும்படி செய்து உங்கட்கு நேர்ந்த துன்பங்களைப் போக்குகின்றேமென்று அபயாத்தங் கொடுத்து, நம்மிடங்கட்குச் சேர்மினென்று விடைகொடுத்தார். அவரனைவருந் தத்தமிடங்கடோறுஞ் சென்றனர்.

மேருவை வில்லாகவளைத்துப் பதுமநாபனாகிய திருமாலைப்பாணமாகக்கொண்ட சிவபெருமானார் புளகன் என்னும் அசுரனையழைப்பித்துத் திருவாய் மலர்ந்தருளுவார். தானவ! நினது உருவத்தைவிட்டு முத்தியடையக் கடவாயென்றனர். அப்போது புழுகுபூனையாகிய அசுரன் கூறியதென்னவெனில் பெருமானே! நானெடுத்த-உருவமாகிய புழுகுபூனை மரபிற்றோன்றும் பூனைகளின் புழுகு தேவரீரது திருமேனியி லேற்றுக் கொள்ளவும், அதனால் தேவரீருக்குப் புழுகணியிறைவன் என்னும் பெயர் தரித்துக்கொள்ளவும் திருவருள்செய்யுமாறு பிரார்த்தித்தான். அவ்வாறேயருள் செய்தேமென அசுரனுயிர் விட்டான். அவனுக்கு முத்திகொடுத்த தன்மையையறிந்து தேவரும் முனிவரும் புழுகுசாத்த, அப்புழுகு கரைந்து பனிநீருடன் ஆலயத்து அருவிபோல ஓடாநிற்கும்.

ஆதலாற் சனகாதி முனிவர்களே! புழுகு காப்பு ஒரு முறையாவது அருணாசலேசுரப் பெருமானுக்கு அணிவித்தோர் சிவசாயுச்சிய முத்தியையடைவார் என்று பிரமதேவர் கூறினார். இவ்வருணாசல புராணத்தைக் கேட்டவர் யாவரும் வாழ்க. புராணம் படிப்போர் பொருள்சொல்வோர் யாவரும் வாழ்க.

புளகாதிபச் சருக்க வசனம்

முற்றிற்று.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பதின்மூன்றாவது

புளகாதிபச் சருக்கம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

உருவுபலவேறுபுனை புளகனெனுமோரசுர
னொருபொழுது நாவிவடிவா
யருணகிரிமீதுலவி யரியபுழுகேசிதறி
யதிகபலமா யவனியோர்
வெருவவிமையோர்முனிவ ரொருவரொழியாதழிய
வினைபுரிகையா லவரெலாங்
கருணைமலைபோலிமய மலையமலைபாகருறை
கயிலைமலைமேவி மொழிவார்.

இ-ள். நினைத்தபடி வெவ்வேறே உருவங்களை எடுத்துக்கொள்ள வல்லமையுள்ள புளகனென்னுமோரசுரன் ஒருநாட்புழுகுபூனை



ஓர்காலத்தில் புளகனென்னும் அசுரன் புழுகுபூனை வடிவங்கொண்டு உலகச்சைமாறித்த திருமலையில் புழுகைச் சிதறி ஜீவிக்குங் காலத்தில், தேவர்கள் தோத்திரத்திற் கிரங்கிய பரமசிவன் புளகனுக் கனுக்கிரகஞ்செய்த மகாத்மியம்—20.

வது.] புளகாதுபச சருக்கம்.

535

உருவமடைந்து வெவ்விய திறத்தையுடைய அம்மலையின்மேல்உலாவிக்கொண்டு புழுகைச் சிதறியபடியால், சுவாமியினால் அதிகபலம் பெற்றுப் பூமியிலுள்ளவர்கள் பயப்படவும், தேவர்கள், முனிவர்களெல்லாரும் துன்பப்படவும், அக்கிருத்தியஞ் செய்வதனாலே அவர்களெல்லாம் இமய பருவதராசனுடைய புத்திரியாகிய பார்வதியை ஒருபாகத்தில் வைத்தருளிய கருணைமலைபோன்ற பரமசிவன் எழுந்தருளியிருக்கின்ற கைலாயகிரிக்குப்போய்ச் சொல்வார்கள். எ-று. (க)

புளகனெனுமோரசுரன் மிருகவடிவாகிவதை
புரியவுலகேழு முறைபோய்
வினைதுயரமாயினர்க ளெனவுரைசெய்தாரவர்கள்
விமலனவ ரோடுபுகல்வா
னளவின்மணமானபுழு கருணைகிரிமீதுதவி
யதிகபலமாய் மருவினா
னெளிதிலழியானவனு மினியகதியேறவுமை
யிடரலையிலேற விடுவோம்.

இ-ள். புளகனென்னும் ஓர்அசுரன் புழுகு பூனை வடிவங்கொண்டு ஏழுலகங்களிலும் முறையே புகுந்து சீவராசிகளையும் வதைசெய்ய, அதனால் எல்லாரும் துன்ப மடைந்தார்களென்று வந்தவர்கள் சொல்லிக் கொள்ளப் பரமசிவன் அவர்களோடு திருவாய்மலர்ந்தருளுவார்: மணம் வீசும் அளவில்லாத புழுகைகமழுருவமாகிய அருணாசலத்திற் சிதறியதனால் அதிகபலம் அடைந்திருக்கின்றான் அப்படிப் பட்டவன் எளிதில் அழிய மாட்டான்; ஆனபடியினாலே அவனை மோட்சத்தில் அடைவித்து உங்களைத் துக்கசமுத்திரத்தினின்றும் கரையேற்றுவோம். எ-று. (உ)

மேவுமெனவோதியரு ளோடுபுளகாதிபனை
வேதமுதல் கூவியவுணா
நாவிவடிவாகியவ னுயிர்விடுவாயெனது
நாவிவடிவான் மொழிகுவான்
பாவையொருபாககரு ணாலயபுராதன
பராபரவிலோச னுதலா
வேவலெளியேன்மொழியு மாறுதவெனாவிறைவ
னீரடியின் மீதுதொழுதே.

இ-ள். நீங்கள் உங்களிடத்திற்குப்போய்ச் சேருங்களென்று விடைகொடுத்தருளி மிக்ககிருபையோடு புளகனென்னும் அவ்வசுரனை, வேதமுதலாகிய பரமசிவன் அழைத்து அசுரனே? புழுகு பூனைவடிவங் கொண்ட உன் பிராணனை விடென்று சொல்லிய அளவில், அவ்வசுரன் சொல்லுவான், பார்வதியை யொருபாகத்திற் கொண்டருளியவரே! கிருபைக்கு இடமாயிருக்கின்றவரே! பழமையானவரே! பராபரமாகியவரே! நெற்றிக்கண்ணையுடையவரே! உமக்கு ஏவல் செய்தற்குரிய எளியேன் கேட்டுக் கொள்ளுகிற வரங் கொடுத்தருளுமென்று சுவாமி இரண்டு திருவடிகளுக்கும் வந்தனஞ்செய்து சொல்லுவான். எ-று. (௬)

எனதுகிளையாமிருக முனதுதிருமேனிபுக
வினியபுழுகாகு மொருபேர்
புனுகமெனவேபரவி யுயிர்விடலுநாவிகதி
புகுதவிறையோ னருளினான்
மனமுருகியேமுனிவ ரிமையவர்கண்மானிடர்கண்
மதிமுடியின் மேலணியவே
யனவரதமான்மதமு மிமசலமுமாலயம
தாகவெனவே பெருகுமே.

இ-ள். நானெடுத்த உருவமாகிய புழுகு பூனையின் மரபினால் உண்டாகின்ற புழுகு உம்முடைய திருமேனியேற்றுக்கொள்ளவும், அதனாற் புழுகணி யிறைவனென்று ஒரு நாமத்தைத் தரித்துக்கொள்ளவும், அருள்செய்ய வேண்டுமென்று வணங்கி நாவியுயிர் விட்டவுடனே, அவ்வசுரன் கதிசேரும்படி சுவாமி அனுக்கிரகஞ் செய்தார். அப்படி அவனை இரட்சித்ததுகண்டு முனிவர்களும், தேவர்களும், மனிதர்களும் மனவருத்தமடைந்து சந்திரனைத் தரித்த சுவாமி சிரத்திற் புழுகு காப்புச்சாத்த, எப்போதும் அப்புழுகு கரைந்து பனிநீரோடு சுவாமி ஆலயம் அருவியை யுடையதாகப் பெருகியோடும். எ-று. (௭)

புழுகுபனிநீர்களப மணுவளவேனுமிறை
புனையும்வகையா லுதவினோர்
விழிகுளிரநாடியர னிணையடிகளேபரவி
வினவினர்கள் வீடுபெறுவா
ருழைமருவுபாணியினர் சரிதமிதுவாகுமென
வுவகையுடனே யுரைசெய்தான்
மொழியுமலராலயனை முனிவருடனே சனக
முனிபுகழ்வினோடு தொழுதான்.

இ-ள். புழுகும் பனிநீரும், கூட்டு வர்க்கச் சந்தனமு மாகிய இவைகளில் அணுவளவேனும் சுவாமி ஒப்புக்கொள்ளும்படி செய்தவர்களும், கண்கள் களிப்படையும் படியாகத் தரிசித்துச் சுவாமி திருவடிகளைவணங்கி அவர் சரித்திரத்தைக் கேட்டவர்களும் மோட்சமடைவார்கள்; மானைக்கரத்தில் வைத்தருளிய பரமசிவனுடைய திவ்யசரித்திர மிதுவாமென்று சந்தோஷமாய் அப்பிரமதேவர் சொல்ல அப்படிச்சொல்லிய பிரமதேவனைச் சனகரிஷி முனிவர்களோடு தோத்திரஞ்செய்து வணங்கினர். எ-று. (௮)

கலி விருத்தம்.

அஞ்செழுத்தும்வாழிவாழி யருணைவாழியருணையான்
கஞ்சமுற்றசரணம்வாழி கருணைவாழிகருணைபோன்
மஞ்சுபெற்றவானம்வாழி வையம்வாழிவையமேற்
றஞ்சமுற்றநீறும்வாழி சைவம்வாழ்வாழியே.

இ-ள். பாவங்களைப் போக்கக் காரணமான பஞ்சாக்ஷரம் வாழ்க வாழ்க, அருணாசலத்தலம் வாழ்க, அருணாசலேசருடைய தாமரைமலர்போன்ற திருவடிகள் வாழ்க, அச்சுவாமி கிருபைவாழ்க, அக்கருணைபோன்ற அழகாகிய மேகவருடம் வாழ்க, பூலோகம் வாழ்க, பூமியில் உயிர்களுக்குப் பற்றுக் கோடாகிய திருநீறு வாழ்க, சைவ சமயம் வாழ்க வாழ்க. எ-று. (௬)

ஞானம்வாழிநன்மைவாழி நாடிராசநீதிசீர்
தானம்வாழிதருமம்வாழி சரதம்வேதமாகமங்
கானம்வாழிகல்விவாழி கற்றறிந்தகேள்வியன்
பான்மையோர்கள்வாழியீச னடியர்வாழிவாழியே.

இ-ள். ஞானம் வாழ்க, நன்மை வாழ்க, நாடும் இராசனும், அவனுக்குரிய நீதியும், கீர்த்தியும், தானமும்வாழ்க, தருமம்வாழ்க, உண்மையாகிய வேதமும் ஆகமங்களும் வாழ்க, சங்கீதம் வாழ்க, மற்ற வித்தைகளும் வாழ்க, அவைகளைக் கற்றறிந்தும் கேள்விப்பட்டும் யாவரிடத்தும் அன்பு உண்டானவர்கள்வாழ்க, பரமசிவன் அடியார்கள் வாழ்க வாழ்க. எ-று. (௭)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

இக்கதை படித்தோர் கேட்டோ
ரெழுதினோ ரெழுதிவைத்தோர்
மைக்கடல் சூழ்ந்தவிர்ந்த
வையகமுழுதுங் காத்துத்

தக்கசந் தானபோக
சவுக்கியந் தழையவாழ்ந்து
திக்கருணேச ரன்பாற்
சிவபதம் பெறுவர்தாமே.

இ-ள். இவ்வருணாசலத்தின் மான்மியத்தைப் படித்தவர்களும் கேட்டவர்களும், எழுதினவர்களும், எழுதிவைத்துக்கொண்டவர்களும், கரிய கடல் சூழ்ந்த பூமி முழுதும் காத்துத் தகுந்த புத்திர சம்பத்தும், போக சௌக்கியமும் தழையும்படியாக வாழ்ந்து யாவருக்கும் ஆதாரமாகிய அருணாசலேசர் கிருபையினால் சிவபதம் அடைவார்கள். எ-று. (௮)

பதின்மூன்றாவது

புளகாதிபச்சருக்கம் முற்றிற்று.

அருணாசலபுராணம் மூலமும் உரையும்

முற்றிற்று.

பாயிரமுட்பட சருக்கம் பதினான்குக்கும்

ஆக திருவிருத்தம்-[illegible].

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவ - எல்லப்பநாவலரவர்களால்
அருளிச்செய்யப்பட்ட

திருவருணையந்தாதி.

காப்பு.

செந்தாதிமஞ்செறிசோணாசலத்தரைச்செந்தமிழி
னந்தாதியமனைச்செற்றார்க்குக்கோசலநாடுவிட்டுத்
தந்தாதியால்வனம்புக்காரும்வேதச்சதுமுகரு
மந்தாதிகண்டிலர்யானேவந்தாதியறைகுவனே. (௧)

திறவாகுவான்செம்மையொப்பான்பொருதிருதாஞ்சு
மறவாகுவான்மகவான்பணிவான்புனைவைத்திருந்த
திறவாகுவான்பொற்சிவான்குறியாதின்றென்சிந்தையுள்ளே
யுறவாகுவானம்மருணையந்தாதியுரைப்பதற்கே. (௨)

நூல்.

பூமன்றலைமையளிசூழருணையிற்புங்கவனூர்
மாமன்றலைமையடுத்தலையாகவரங்கொடுத்தார்
காமன்றலைமையறவழலாக்கியகண்ணர்விண்ணோர்
தாமன்றலைமையக்கந்திரகஞ்சத்தரித்தனரே. (௧)

நஞ்சமையக்கச்சணிந்தவண்ணாமலைகம்பனைமுத்
தஞ்சமையக்கற்றடிபணியாதவரந்திபக
தஞ்சமையத்துளேவிகத்தத்தித்தலைவெடித்து
நெஞ்சமையக்கத்துடன்போய்விழுவர்நெறிக்கயலே. (௨)

கயற்கண்ணிறைக்குஞ்செழுமாவனங்களரும்பவிழ்த்தி
புயற்கண்ணிறைக்கும்பொழிலருணைசர்புனலிறைக்குங்
கயற்கண்ணிறைக்குமப்பால்வலைசோருங்கருத்தகுரு
மயற்கண்ணிறைக்குமகராலயமன்னவல்லியர்க்கே. (௩)

காவலர்கடுகுதல்.

வல்லியமன்றுமுதல்போற்றமாகணம்வாழ்த்தமறை
சொல்லியமன்றுடைமாதேற்புதன்சோணைவெற்பிற்
கொல்லியமன்றுடியோகர்க்காவலர்கொட்டுபறை
பல்லியமன்றுபகைத்தடியாருகம்பார்த்திபர்க்கே. (௪)

பாரக்கழலுந்திவஞ்சியாடல்பயிலருணை
பாரக்கழலுந்தியாரணிவார்பதம்புயமும்
வீரக்கழலுங்கண்டேன்குஞ்சிதானும்வெளுத்துத்தந்தஞ்
சேரக்கழலும்பொழுதுமுண்டேகமன்றீதுகமே. (௫)

நீதகங்காணியளவில்லாதென்றிருக்கறத்தோன்
போதகங்காணிகொண்டோன்மெருமீசன்பொருந்தருணைச்
சாதகங்காணிறைவண்டினங்காளுயிர்தான்வருந்தும்
யாதகங்காணிலன்றேபிரிந்தார்க்குண்டுபெற்றுதவே. (௬

பற்றவளக்கரும்பாரிடமோகின்படையிமவான்
பெற்றவளக்கரும்பாரிடத்தாய்மறைபேசருணைக்
கொற்றவளக்கரும்பாரிடகாலையுங்கூட்டியழ
குற்றவளக்கரும்பாரிடந்தேரெனவூர்ந்தவனே. (௭

பாங்கி தலைமகற்குக் குறியிடங்கூறல்.

ஊருவரம்பையன்றேர்பகற்போதிலுறைவிடமைந்
தாருவரம்பையர்சூழ்பொன்னாட்டிலுந்தக்கதுகாண்
காருவரம்பையிற்காரிணையாகியகண்டர்வில்லா
மேருவரம்பையிடத்தாரருணையில்வெற்பினனே. (௮

வாயில் மறுக்கக்கேட்ட பாணன் கூறல்.

வெற்புடைமானின் றவேலோனைத்தந்தவன்வேழவுரிப்
பொற்புடையானியல்சோணாசலத்திற்புரவலனே
விற்புடையாமெழுதெதென்மடமான்கல்லெலுதிமெறிந்தான்
கற்புடையாமென்றசொல்லேகொடுத்ததுகைபலமே. (௯)

பாகனொடு கழறல்.

பலவாகனங்களுஞ்சேவிக்குமால்விடைப்பாகனுமை
குலவாகனம்பனருணையிலேழுத்தின்கோவையெலா
நிலவாதனங்கடுந்தேர்காடிநிற்பவர்நெஞ்சுருக
வலவாகன முந்திருணிற்குமோலைகயில்வண்டினவே. (௧0)

வண்டெளிக்குமரிப்புன்னைதோறுமதுவுண்டென்றுங்
கண்டெளிக்குமலர்ச்சோலைத்தேனைக்கயலினங்க
ளுண்டெளிக்குமருணாசலத்திலுவந்துறைவார்
வெண்டெளிக்குமதனைப்பூசியமெய்யினரே. (௧௧)

இடையூறு கிளத்தல்.

மெச்சம்பரவையிரும்பொடியாகவிழித்தவனு
நச்சம்பரவையறமேவுமத்தனருணையன்னீர்
மச்சம்பரவையிருங்காவியென்றுமகிழ்ந்திருந்தேன்
கச்சம்பரவையிலாறுற்புதையுநயனத்தையே. (௧௨)

கையுறை புகழ்தல்.

கதியமலைக்குஞ்சடைமுடியாரருணாசலனார்
பதியமலைக்குளமுந்தமொப்பீர்தென்றனின்றலவும்
நதியமலைக்குளமுதமொப்பீர்தென்றனின்றலவும்
பொதியமலைக்குங்கிடையாதகாஞ்சிப்பூந்தழையே. (௧௩)

543

செவிலி வினாதல்.

தழைக்குஞ்சரவணச் செவ்வேளைத்தந்தவர் சங்கரிகை
குழைக்குஞ்சரப ரருணையிலேயிரு கோலவிழி
யழைக்குஞ்சரத்துக்கு மொப்புடையீரொரு குங்குருகி
ழைக்குஞ்சரமயிலக்கு வந்ததுண்டோமும் மதஞ்சொரிந்தே. (௧௪)

நற்றாய் பாங்கியர் தம்மொடு புலம்பல்.

சொரியுங்கடமையு வாவுரிபோர்த்தவன் சோணைவெற்பி
லரியுங்கடமை யுமைவாயுழுவையு மந்திப்கற்
றிரியுங்கடமையுங் கண்ணுமொருவன் பின்சென்றதென்னும்
பரியுங்கடமையு மெய்மையுநீத்தின்று பாவையரே. (௧௫)

பாவலருந்த வருங்காணத்தூது செல்பாதர்கனி
வாவலருந்த வருங்காவருணையின் மத்தரெண்ணார்
ஏவலருந்த வருங்காமன்கொண்டெய்ய வேந்திழையார்
காவலருந்த வருங்கைதல் பூண்டிவணைகின்றதே. (௧௬)

கைவளையாழிசைச் சொல்லிபங்காருணாசலனார்
மைவளையாழியி னஞ்சுகந்தார்நெடு மாலவற்கே
கைவளையாழி யளித்தாரெனக்கண்டு கைதொழுதேன்
பெய்வளையாழிக ளெல்லாமிழந்தனள் பேதையரே. (௧௭)

பேய்த்தேரைநீரென் றுழல்வீர்களுழன் பிடித்தபணி
வாய்த்தேரைநீர்மைசண் டுரிந்தவாழ்க்கையும் மாயமெல்லாஞ்
சாய்த்தேரைநீர்பெறு பேருசொல்கேன்கற்ப தாருகிக
ராய்த்தேரைநீள்கொடி சூழருணேச ரடிதொழுமே. (௧௮)

தொழுவாருமாணிடர் காணரகேழையுந் தூர்க்கும்வண்ணம்
முழவாருங்கோயில் வலஞ்செய்வாருமுதன்மடக்கே
புழவாரும்பங்கவர் மங்கைகல்லரு மொதுக்கிமுத்தை
யெழவாருஞ்செக்கல் வயலருணேசரை யேற்றனரே. (௧௯)

ஏற்றுக்கரைக்குளிர் சோணாசலத்தாரை யேத்தலின்றிச்
சோற்றுக்கரைக்குடைக் காடைக்கென் றேமனந் துன்புறுவீ
ராற்றுக்கரைக்குண் மரம்போலுடல்விழ லாருயிரைக்
கூற்றுக்கரைக்கும் பொழுதுமக்கார்கை கொடுப்பவரே. (௨0)

கொடுங்கயிலாயிழை யார்தனபாரத்திற் கூடியவர்
கடுங்கயிலாயகண் ணுற்றனர்வீரவர் கன்னையெலாம்
விடுங்கயிலாய னயன்போற்றருணை விமலரைவாழ்த்
திடுங்கயிலாய மலைமேலிருப்ப தெளிதுமக்கே. (௨௧)

உன்பாவனையு நினைவுமுண்டாகி யொழிவதில்லா,
வென்பாவனையும் படியரிதேயிரங் காதவர்க்கு
வன்பாவனையும் பிறப்புமில்லாயன்பு வைத்தவருக்
கன்பாவனையு மதிலருணாசலத் தாதிபனே. (௨௨)

ஆதித்தனையனங் காரகன்போற்றிய வண்ணல்கழைச்
சோதித்தனையனங் காவருணாசலன் றேயுமட்டும்
வாதித்தனையனங் காவினிப்போதுன் மதமழியப்
போதித்தனையனங் கான்றிங்களாகப் புறப்பட்டதே. (௨௩)

புறங்காட்டினாலும் புயம்வீசருணையிற் புங்கவனோர்
அறங்காட்டினாலு முனிவோரையாண்டவ ரம்பொன்வெற்பிற்
கறங்காட்டினாலு நிகரோவெனச்சுழல் காற்றெய்வமே
யுறங்காட்டினாலுனதோவிவனாசைக் கொருமருந்தே. (௨௪)

துணிவு.

ஒருமானிடங்கையி லேயொருமான்றரித் தொன்னலரைப்
பொருமானிடப மிசைவருவான் முப் புரமெரித்த
பெருமானிடங்கொண்ட சோணாசலத்தினிற் பேதையின்பக்
தருமானிடமங்கை யென்பதுகாட்டிய தாமரையே. (௨௫)

குருகோடிரங்கல்.

தாவி கவரு மலகாற்கயலின் றலைபிடித்துன்
னாவிக் கவரு மினக்குருகீரொரு நாளடியார்
சேவிக் கவருங் கதிதந்தபாதர் திருவருணை
பாவிக் கவரும் பகையாகினாலென் பகருமதே. (௨௬)

பாங்கிக்குலகின்மேல்வைத்துரைத்தல்.

கருங்குவளைக்குளிர் பூவணைமீதிற் களித்துமுகஞ்
சுருங்குவளைக்குலஞ் சூழருணேசர் துடிக்கிணையா
மருங்குவளைக்குந் தனமயிலேபுன் மடலல்லவோ
நெருங்குவளைக்குழை யார்தந்தகாதலை நீக்குமதே. (௨௭)

நீங்காவிடைக்கொடி யாரருணாபுரி நித்தர்வெற்பி
லோங்காவிடைக்கொடி யார்தந்தபால் கொண்டுலாவரவே
பூங்காவிடைக்கொடி போலேயிருந்தப் பொற்குடத்தைத்
தாங்காவிடைக்கொடி யாவகையார்செய்யத் தக்கவரே. (௨௮)

கல்விக்குப்பிரிவு தலைமகளுணர்ந்ததோழி

தலைவிக்குணர்த்தல்.

தக்கவிருக்குமணி கேள்வர்போற்றிய சங்கரனூர்
மிக்கவிருக்கு மறையாரருணையில் வெற்பரென்றே
டொக்கவிருக்குமலர்ச் சோலையிலெய்தி யொன்றுதலா
யிக்கவிருக்கு மணமாமென்றார் கல்வியெய்துமென்றே. (௨௯)

எச்சிலந்திக்கும் பகலைர்குமேற்று மெயினனுக்கு
மெச்சிலந்திக்கு மருளருணேசரை வில்வம்விளா
நொச்சிலந்திக்குஞ் சடையாரையேத்திலர் நுண்ணிடையார்
சொச்சிலந்திக்கு நிகர்முலைக்கே வைப்பர்புத்தியையே. (௩0)

புந்திநெக்கத் தவிர்த்தென்னையாண்டகற் போதன்சென்னி
யைந்தினைக்கத் தடிந்தோனருணை யமலனிதழ்க்
கொந்தினைக்கத் தருங்கொன்றைவேண்டியென் கோதைவளை
சிந்தினைக்கத் தனிலேவிழுந்தனள் சித்தமுமே. (௧௧)

சித்தமிழுக்குறத் தீமையுறார்பெருஞ் செல்வமுறார்
முத்தமிழுக்கு முதன்மையுமாகுவர் மூண்டகப்பூங்
கொத்தமிழுக்கு வரக்கனியூறல் குளிர்நதிபாய்
நத்தமிழுக்கும் வயலருணேசரை நத்தினரே. (௧௨)

கிழவோன்பிரிந்துழிக்
கிழத்தி மாலையம்போது கண்டிரங்கல்.

நந்திக்கொடிச மலராதியார்திசை நான்கினுஞ்செல்
வந்திக்கொடிய மலர்வீசருணையில் வாசமலர்
சிந்திக்கொடியவன் போல்வானுலாவருந் தென்றலையு
மந்திக்கொடிய மதியையுங்காண்கில ரன்பினரே. (௧௩)

பின்பரியங்க வடியானுஞ்செய்ய பிதாமகனுந்
தன்பரியங்க வடிதாங்கநிற்பவன் சந்தனத்தான்
முன்பரியங்க மடிசிலுண்டானை முகனருணை
யன்பரியங்க வடிவேல்விழிச்சிக் கலர்பெரிதே. (௧௪)

பெரும்படைவாளை யடர்த்துழவாளைப் பெயர்த்தவயற்
கரும்படைவாளை புகுமருணாபுரிக் கண்ணுதலா
ரரும்படைவாளை யிலாம்விழியாளை யனகத்தில் [யே.
கரும்படைவாளை யணையான்கொடான்கொன்றைச்சூழ்த்தொடை

மெய்தொட்டுப் பயிரல்.

தொடுத்துவண்டான மறைபாடவாடி தோன்றல்வய
வடுத்துவண்டான மருவருணாபுரி யன்னமன்னூர்

நடுத்துவண்டானம் பரிதேர்மருங்கு லிங்காரிதனை
விடுத்துவண்டானமர் காண்மதனாரிக்குள் வீற்றிருமே. (௧௬)

இரும்புணரிக்கணஞ் சேற்றுண்டகாத னிசைச்சுரும்பின்
பெரும்புணரிக்கணன் மெய்யழித்தோனெம் பிரானருணை
விரும்புணரிக்கண மேமனமேயினை மெய்யொழிந்தாற்
கரும்புணரிக்கண ஞாளியின்கூட்டங் கழிந்திடுமே. (௧௭)

கழிப்பாலையேகம்பந் தில்லையின்மேவிய கண்ணுதலான்
செழிப்பாலையேதிகழ் தென்னருணேசன் சிலம்பிலிரு
விழிப்பாலையேவுள வண்டர்மின்னே தயிர் விற்கவந்து
மொழிப்பாலையேன்சிந்து வீர்முனிவோர்சொன மோகத்தையே. ()

மோகமருப்புக் கமலவிற்காமனை முடிக்குதவிக்
கோகமருப்புக் கமலமொப்பாயெழு கொங்கைநல்லார்
தாகமருப்புக் கமலப்பொற்றுளிற் றனித்தருள்வாய்
நாகமருப்புக் கமலமுன்சூழரு ணாசலனே. (௧௯)

அருணாசலம்பதி யாயுறைவா யரவாபரணா
கருணாசலநிதி யேமுதலீறுங் கலையுமில்லாத்
தருணாசலஞ்சல மும்மயிராவதந் தந்தமும்போன்
மருணாசலங்கொடு தாரருக்காதருண் மாதருக்கே. (௨௰)

தலைவியைத் தலைவனெதிர்ப்படல்.

மாதவிழாவுடை யாரருணேசர் வரையில்வண்டு
கோதவிழாமற் கதிரோனடைத்தசெங் கோதனகத்
தாதவிழாத்திருக் கோயிலுக்கேயொரு தாழுமுண்டோ
போதவிழாநிற்கு மன்பாலென்பரிருட் போக்கவரே. (௨௧)

போதாம்பரத்தை யகலாமற்காஞ்சி புரத்துறைவான்
பீதாம்பரத்தைய னுன்முன்னின்றேமெம் பிரானருணை

மாதாம்பரத்தையு ரத்தையொப்பா நெஞ்சவஞ்சகரே
யேதாம்பரத்தையர் கண்டாலென்பால்வந்த தேழமையே. (௪௨)

எழுமுழக்குஞ் சரத்தோலருணை யிறையெனுமால்
கீழுமுழக்குஞ் சரத்தாள்கொடாவுமை கேள்வனெனும்
வீழுமுழக்குஞ் சரமாரியெய்தனன் வில்லியென்றுஞ்
ஊழுமுழக்குஞ் சலதியென்றோது மென்னூநகையே. (௪௩)

தூரியங்காமன் கடவாகத்தோன்றினன் சூரியனூர்
தேரியங்காமன் முகிலியங்காமற் றிசைகளெல்லாம்
வேரியங்காமன் திருவருணைபுரி வித்தகனே
காரியங்காமன் பதைபுரப்பான்றொழு நாயகனே. (௪௪)

நாயகனாவிக் குலஞ்சூழருணையி னமபனழற்
சாயகனாவிக் குரியனென்றேத்திலர் தண்டமிழாற்
றாயகனாவிக் குமாரவென்றற்பரைச் சொல்வர்கெடி
தாயகனாவிக் குரம்பையில்வாழ்க்கையு மாவியுமே. (௪௫)

ஆவணங்காரண மாயவெண்ணெய்மேவிய வந்தணனூர்
பூவணங்காயம் பலஞ்சேர்பவர்வருஞ் பூமகண்மால்
பாவணங்காரணன் போற்றருணேசர் பவனிவந்த
மாவணங்காரணைக் காரணங்காகி மருவினரே. (௪௬)

மருமகரந்த நுகரளிசாளி வரிக்கொடியே
யொருமகரந்தனு விக்காளை வேலை யுருவழித்தார்
அருமகரந்தணர் போற்றருணேச ரடியவற்குத்
தருமகரந்தனை யேவும்பர்நாடென்ப தங்குதற்கே. (௪௭)

பாங்கி கையுறையேற்றல்.

தன்குறைவந்தடை யாவலில்போல்விழித் தையலுன்றன்
வெங்குறைவந்தனை யாலுரைத்தேனினி வேட்டருள்வாய்

549

மங்குறைவந்த மதிலருணேசர் மணிச்சிலம்பர்
கொங்குறைவந்தனை சோலையின்மாந்தளிர்க் கொத்தினையே. (௪௮)

ஆற்றிடைமுக்கோர் பகலைர விருவதல்.

சொத்தடியானடி யேனென்றுகூறிக் குலிசத்தினன்
மத்தடியானயன் போற்றருணேசர் மணிவரைமேற்
றத்தடியானடை யன்னமொப்பான வென்றையனல்லாள்
முத்தடியானடைப் பீர்வந்தாகிலின் மொழிந்திடுமே. (௪௯

கனவினை விடுவுரைத்தல்.

மொழித்தேனையோர்க்கு மலராசஞ்சேர்க்கு நயங்கையிலே
விழித்தேனையோமுன் விதிப்பயனோ மதி விண்ணைவரை
யொழித்தேனையோர்க்குத் தருவாரருணையி லோடையிற்பூங்
கழித்தேனையோதி மணத்தாலழைக்குங் கருங்குயிலே. (௫

கறுத்தகண்டத்தையர் சோணாசலத்தர்வெண் காட்டுக்கை
யறுத்தகண்டத்தை மகவாயழைத்தவ ராற்றிலர்தீப்
பொறுத்தகண்டத்தை விழுங்கிநிலாவெழும்போதயிலே
வெறுத்தகண்டத்தை யனையசொல்வார்தம் விருப்பிசையே. (௫

பாங்கி பிறைவினா நகுதல்.

விருப்புசிலையமர்ந் தாரருணாசலர் மேருவெற்பின்
மருப்புச்சிலையெனும் வேழமெய்வாருக்கு வாங்குவில்லம்
பருப்புச்சிலையின் றணங்கேயென்றுங்கொ லுலகையென்ற
கருப்புச்சிலைமதன் கூர்வாளிபார்க்கிற் கடிமலரே. (௫

கடியரவத்தையு நீர்மானுந்திங்கட் கலையும்வைத்த
முடியரவத்தை யன்பர்க்கணுகாமன் முழக்கஞ்செய்யுந்
துடியரவைத்தையர் சோணாசலத்தைத் தொழாதமன
மிடியரவத்தை யடைந்தேழ்நரகத்தும் வெம்புவரே. (௫

வெப்புக்குழைக்கும் பனிநீரென் றங்கம் வெதும்புந்த
ணப்புக்குழைக்கு மருணாசலத்தரை யையரெனுங்
கொப்புக்குழைக்கு மப்பாலுந்தண்மாரி குதிக்கவிழுஞ்
செப்புக்குழைக்கு நிகராமுலைவிழித் தீங்கனியே. (௫௪)

நற்றாய் தலைவிசெல்சுரந் தணித்தல்.

தீகுதிக்கும்பரல் சூழ்ந்தவெம்பாலையின் றீமையற்றப்
பாகுதிக்கும்பைங் கரும்பாலையாகப் பழனமன்றி
யாகுதிக்கும்பர் மகிழருணாபுரி யத்தர்வெற்ப
ரேகுதிக்குத்தையல் சென்றாடிடமு மிருநிலத்தே. (௫௫)

சித்து.

நிலவிரதத்தரைச் சோணாசலத்தரை நெஞ்சில்வைத்த
நலவிரதத்தரெண் சித்தரியாகவ நீதமுடன்
பலவிரதத்தரும் யோனமுங்கட்டிப் படையப்பனே
கலவிரதத்தரி தாரம்பொன்னுமெந்தக் காலமுமே. (௫௬)

காலைக்கரும்புகொண் டாற்போதவர்ந்தமெய்க் காதலினா
லாலைக்கரும்பு நிகர்த்தமின்னாளுக் கருள்புரியாய்
வேலைக்கரும்பு லரக்கரைக்காளி விதித்ததுழாய்
மாலைக்கரும்புய றேடருணாசல மன்னவனே. (௫௭)

மன்றமரத்தையல் காணநின்றாடிய மன்னபுன்னை
யின்றமரத்தை நிகழருணேச வெனைமெல்லியா
ளென்றமரத்தை யலர்பூட்டினான்மத னென்றிடையன்
கொன்றைமரத்தையொத் தாளிழந்தாள்கைக் குருகினமே. (௫௮)

குருவடிவேபெற் றுயர்கயிலாயக் குவட்டில்வட
தருவடிவேர்கொண் டிருப்பாருண சயிலத்திலே
யிருவடிவேல்விழி போல்வீரென் சென்னிக் கிசையவுங்கள்
திருவடிவேய்ந்திடு மீனவன்றாய்த்துவன் சேகரமே. (௫௯)

551

சேகரமாகவலையா றுடன்வைத்தசெல்வகரு
ணாகரமாகவலையாற் றருணையினம்பவிழிச்
சாகரமாகவலையாற் றுவக்கிருந்தையலர்க்குச்
சூகரமாகவலையாவருவென் றுதோற்றவதே. (௬௦)

தோற்றருத்திக்குநிகரான துகித்தஞ்சோறு துற்றப்
போற்றருத்திக்குளெழுகாரிற்போய்விம்பூசவத்தீர்
மேற்றருத்திக்குமருந்துக்குமீசரைவேரிவயல்
நாற்றருத்திக்குநிகராருணேசரைநம்புமினே. (௬௧)

மின்றனந்தங்கிறமேபுனைந்ததும்வில்விகணை
யொன்றனந்தங்கணையானதும்பார்க்கிலருற்பலத்தே
சென்றனந்தங்கமலர்வீழருணைச்சிவன்கனக
மன்றனந்தங்கமலர்க்கரிதாகியவானவனே. (௬௨)

வானரகத்தியனே முதலாமவர்வாழ்த்தும்வெள்ளை
யானரகத்திவிடர்தீர்க்குமத்தாருணையென்னா
ரீனரகத்தில்வழிகுழியாய்ச்சென்றிரப்பர்பினைத்
தீனரகத்திரைதாணுகவீழ்வரச்சேதகத்தே. (௬௩)

சேதாவையோதிமத்தாற்புரந்தோன்பங்கர்தென்னருணைப்
போதாவையோதிமந்தன்னையென்றோவதுபூங்கணையாற்
கோதாவையோதிசருகாவையென்றமைக்கூட்டில்வைத்த
வேதாவையோதினம்வீழ்வானரகத்தின்மெத்தவுமே. (௬௪)

வெயிற்றியொடு புலம்பல்.

மெத்தவெயிற்றிகழ்சானகத்தேமலர்மென்கொடியே
யொத்தவெயிற்றுகண்டாயிலையோவும்பருரனவாய்
வைத்தவெயிற்றிகழ்தென்னருணேசர்மணிவரைமேன்
முத்தவெயிற்றியுமுத்தாரமார்பனுமுன்வரவே. (௬௫)

வரும்பெண்ணையிலனஞ்சூழ்தேயநாடாத்திருமால்வரையோன்
றரும்பெண்ணையிலமைத்தாரருணேசர்க்கென்றைநயல்மையல்
கரும்பெண்ணையிலையிலெல்லாமெழுதிக்கடிதுவிட்ட
சுரும்பெண்ணையிலவகையாகியதூதினுக்கே. (௬௬)

இறையோ னிறைவிதன்மையியம்பல்.

தூதுவளைக்குவணக்கனிவாயொப்புச்சுதமன்ன
னூதுவளைக்குநிகர்கழுத்தாந்தெய்வரூர்முனிந்த
போதுவளைக்குஞ்சிலையருணேசர்பொருப்பனையார்
காதுவளைக்குவமையின்றேயென்றன்கண்மணிக்கே. (௬௭)

நெறிவிலக்குதல்.

கண்கைக்கவரிகரிமேற்கொடரக்கரிகளஞ்சி
வெண்கைக்கவரிவனத்தேயிரவிக்கிளங்கமுகு
தண்கைக்கவரியிடுமருணேசர்சயிலத்தின்ப
முண்கைக்கவரிருள்வரராதுரையென்றனுண்மெலிவே. (௬௮)

உண்ணாமலையத்தருக்கோபமோகமுலோபமுற்றாய்
தண்ணாமலையத்தமிழ்ப்பாடல்புல்லர்தமக்குரைப்பாய்
அண்ணாமலையத்தனைப்புகழாயனுவத்தனையு
மெண்ணாமலையத்தனைமனமேமெக்கென்கதியே. (௬௯)

பாங்கி புலம்பல்.

கதிரங்கழலிடீமத்திலாடிவெங்காலனங்கத்
துதிரங்கழலவுதைத்தருள்வாளிசையோங்கருணை
யதிரங்கழலனையாமனெஞ்சமழிந்தவஞ்சி
யெதிரங்கழலிறைக்குஞ்செக்கர்வானத்திளம்பிறையே. (௭௦)

பிறைக்கண்டருந்திசைகாணுதுழலுமென்பேதைநல்லா
ளுறைக்கண்டருந்திரையோதமொப்பாகியதோதமென்ன

மறைக்கண்டருந்தி மலரோன்புகுத முழங்கருணைக்
கறைக்கண்டரும்பிற் கொடுத்தாரிலைச்செழுங் கைச்சங்கமே. (௭௧)

சங்கமலக்கணைச் செல்வாதடர்க்கிடெந் தண்பழனச்
செங்கமலங்களை யாருமொழுகவந் தேனலைக்கே
துங்கமலங்களை தென்னருணைபுரிச் சோதிதந்தான்
பங்கமலங்களைப் பண்ணுமன்னானைப் பணிக்கறையே. (௭௨)

தலைமகன் செலவின்றாட் குணர்த்தி விடுத்தல்.

பணிக்கறைதோறுஞ் சுவைதயோட்டச்சொல்லு முற்பாடமெல்லாங்
கிளிக்கறையச்சொல்லு மந்தணைரே கினர்காணவிடத்
துளிக்கறைகண்டத் திருத்துஞ்செம்மேனியர் சோணைவெற்பி
லளிக்கறையோன்ற செவிலிக்கும்பாங்கிக்கு மன்னைக்குமே. (௭௩)

அன்னைக்களிக்கு மதுவுண்டவாறெக்கு மன்னமன்றோ
னென்னைக்களிக்கு மதுவுமற்றேவனைர யிந்த்ரகரும்
பின்னைக்களிக்கு மதுசூதனனென்றெழு பிஞ்ஞகனூர்
புன்னைக்களிக்கு முதல்குழருணைப் பொருப்பவனே. (௭௪)

அவமானமன்றம ராற்செய்தவேளை யழுத்தவனைக்
தவமானமன்றம ராடவன்சோணை சயிலசிம்பற்
குவமானமன்றம ராவதிசேரன் றுரைமனமே
சிவமானமன்றம ராவழியாதுநின் சிற்றுயிரே. (௭௫)

இருமையிராவண னுகமுன்னாட்செய்த சேவடியாய்
பெருமையிராவண னுடருணைபுரிப் பிஞ்ஞகனே
யுருமையிராவண னாகியகாலன்பட் டோலையிலே
மருமையிராவண னுடைத்தாட்கொண்டு மாற்றுகவே. (௭௬)

பாங்கி தலைமக னவயவத் தருமை சாற்றல்.

மார்க்கண்டனையந் தகன்வருத்தாமல் வரங்கொடுத்த
சீர்க்கண்டனையன் றிருவருணைபுரி சேரிழையார்

பாற்கண்டனைய நலஞ்சேர்மொழியைப் பயின்றகோலை
வேற்கண்டனையனத் தோணுமன்ப விதிக்கரிதே. (எஎ)

அரிபுரந்தாழ்வுறச் சிம்புளதான வமலரங்கி
திரிபுரந்தாவ நகைத்தாரருணையிச் செம்மலிரு
பரிபுரந்தானுற்ற பொற்றொடொழுதவர் பாரனகா
புரிபுரந்தார்பின் புரந்தரனும்மெம் புரந்தனரே. (எஅ)

புரந்தரவானவன் போற்றருணைபுரிப் புங்கவனே
யிரந்தரவான பணிபுனைவாய்பிறப் பேழிசிரந்
தரந்தரவானமன் றூதர்செல்லாவரந் தாபிறவா
வரந்தரவானம்பி னேயெனக்கோர்கதி மற்றில்லையே. (எகூ)

பாங்கன் றலைவனை வியத்தல்.

இலங்காரவாரணிந் தேகாயத்துன்னின் றிடையொடிக்கு
மலங்காரவாரணக் கோட்டின்முன்பேநின்ற வன்பரெங்கு
மலங்காரவார நிறையருணேசர் மணிவரைமேற்
கலங்காரவா ரணனூட்டுமெட்டா யரிகளுக்கே. (அ0)

மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொருள் சொல்லிநாடலிற்
கலைவியந் துரைத்தல்.

கரும்புகையுந்துஞ் சிலையசமதனுடல் கட்டழலும்
பெரும்புகையுஞ்செறித் தாரருணைபுரிப் பெண்ணமுதே
சுரும்பகையுந்தொடை யுஞ்சந்த்ரரேகையைச் சூழவெயர்
வரும்புகையுந்தரு மோகனையாவர்சென் றூடினுமே. (அக

ஆடரவக்குழை யாரணிவாரிசை யானர்நின்று
பாடரவக்குழை யாரருணேசர்கண் பார்த்தருளார்

555

கோடரவக்குழையாரளிகாண்மதன் கோத்தமலர்த்
தோடரவக்குழையாரணங்காருயிர்த் துன்பத்தையே. (அஉ)

துன்னியமாமுனிவா லுரித்தானைச்சுகமெனுமெ
மன்னியமாமுனிபோற்றருணேசன்வரங்கொடுத்தா
னன்னியமாமுனிகாத்தூதரோடிங்கணுடியவா
றென்னியமாமுனிலாதேயெமைக்கடந்தேறகில்லே. (அ௩)

ஏற்றுவளத்துவசத்தாரருணையிலேந்திழையீர்
தோற்றவளத்துளமூ றூட்டிடுகாண்மலர்சூட்டியன்பா
னேற்றுவளர்த்துவிடுத்துயின்றேவன்னிலத்தினிடை
நாற்றுவளத்துவளநடந்தாள்பதகோவரவே. (அ௪)

வரங்களங்கற்றவர்க்கொன்றுங்கொடாதொழிவாரவர்மா
யிரங்களங்கற்றவர்க்கீவாரருணையிறைவரன்று
புரங்களங்கற்றவர்கொண்டெரித்தார்மயல்பூணுமட்டு
சரங்களங்கற்றவர்மேல்விடுவோன்வரத்தாமதமே. (அ௫)

தாமதியாதவரன்பர்முன்னேவரத்தங்குவிழி
நீமதியாதவராமருணேசர்தந்தேரின்முன்னே
போமதியாதவர்தார்கேட்பதென்னைபுலருநெஞ்சே
நீமதியாதவர்பாற்பலகாற்செல்லனீதியன்றே. (அ௬)

நீடத்துவபரம்பொன்மலையானநிருத்தர்பிறப்
போடத்துவாவறுத்தாரருணைபுரியோங்குமணி
மாடத்துவாமதிகோர்முகம்வேர்க்கவெண்மார்பமெனுங்
கூடத்துவார்முலைப்பந்தரடினைநின்றகோதையரே. (அ௭)

கோதாயணங்கனம்பான்மெலிவேனுயிர்கொள்ளைகொள்ள
வாதாயணங்களிற்றென்றலையாவர்வரவழைத்தார்
பேதாயணங்கவோமருணேசர்பிரிந்தமர்க்குத்
தீதாயணங்கழையோலைசயென்றுருடன்செப்பும்தே. (அ௮)

தன்மகன் மென்மைத் தன்மைக் கிரங்கல்.

செப்புளிக்குஞ்சிறைதயாமூரம்பூமென்சேவடிகள்
தொப்புளிக்கும்பொழுதென்பமோவுமைகொங்கையிட்ட
மைப்புளிக்குங்குமத்தோளருணேசன்மணிவரைமே
வப்புளிக்குஞ்சரமோயும்வெம்பாலையருநெறிக்கே. (௮௯)

நெற்றவிம்பமிராதபுன்மாக்களைநீக்கடனும்
வற்றவிம்பரிமாகுலாவெனுமானிடர்காள்
உற்றவிம்மையதவருணேசரைப்பொன்கரத்தைச்
சுற்றவிம்மையபரவாரைவாழ்த்துஞ்சுருதிகொண்டே. (௯0)

சுரும்பாயிரங்கலைமான்குயிலாயிரந்தாதுவிட்டேன்
இரும்பாயிரங்கலைநெஞ்சமென்னேவினியாயினுந்தான்
திரும்பாயிரங்கலைசூழருணாசலசெப்பியமால்
பெரும்பாயிரங்கலைநான்போனதோதிற்பெருகிடுமே. (௯௧)

பெருகாசினியமதுரங்களாகப்பிறக்குமொழித்
தொருகாசினியன்புசெய்யுமென்றூலுமுரவுவரோ
முருகாசினிமடர்சோணசலத்தின்முதல்வரின்பந்
தருகாசினியம்பரம்புகழ்வார்க்குத்தருகுவரே. (௯௨)

தந்தவிலங்கலைநேரானசேனைத்தலைவர்களும்
பந்தவிலங்கலைபாதத்தரானதும்பார்த்துநெஞ்சே
சூந்தவிலங்கலைநிநெறிகாணின்மொழிந்துதொழாய்
அந்தவிலங்கலைவில்லாக்கருணையமலனென்றே. (௯௩)

அச்சத்தன்மைக் கச்சமுற்றிரங்கல்.

அங்காந்தலையடைந்தாடரவாவென்றரும்பவிழ்ந்த
செங்காந்தளையஞ்சிநின்றழும்பேதைதிருநதியின்
பொங்காந்தலையடர்தென்னருணேசர்பொருப்பின்மலர்
கொங்காந்தலையவிழ்தாரோன்பின்செல்லக்குறித்தனளே. (௯௪)

குறித்திட்டமோதக்கரங்காட்டுநெல்லைக்குவித்திரண்டாய்ப்
பிறித்திட்டமீதொன்றுந்தடையைக்கெடிரமன்னிக்கைத்
தறித்திட்டசோணகிரிநாதர்சேர்மருன்சட்டுவத்தேன்
மறித்திட்டகூனனறுகேளாய்கெவுளிவலஞ்செய்ததே. (௯௫)

வலந்தினஞ்செய்துபணிந்தேத்துமன்பர்வடிவுசெவ்வ
னலந்தினஞ்செய்துமிடற்றினரேக்கருணாதர்நந்தம்
கலந்தினஞ்செய்துழைந்தாரத்தையீனுங்கவினருணை
நிலந்தினஞ்செய்துணைத்தாடொழக்கண்டருள்சிறப்பனே. (௯௬)

சிற்பரவத்தனதிபணிவேணியன்றிண்புயத்து
பொற்பரவத்தனற்சாக்கியனாருட்பொருந்திவிட்ட
கற்பரவத்தனகமகிழ்ந்தனருணையின்க
ணிற்பரவத்தனவென்புமெய்துவர்நீணிலத்தே. (௯௭)

நிலமந்தரவப்பதியோர்கணிதமுமடைக்
கலமந்தரப்புயகொன்றையவென்றசழல்பணியு
லமந்தரங்கத்தன்கண்டோதுமத்தனளினத்தளிக்
குலமந்தரப்பண்டருமருணைவயற்கொற்றவனே. (௯௮)

கொற்றவரக்கரம்வானவரிந்திரன்கோகனத்த
நற்றவரக்கரமெட்டுடையான்புவிநாகத்தரும்
பற்றவரக்கரஞ்சூலருணைப்பதியருள்ளான்
புற்றவரக்கரவிந்தம்பதத்தன்புகவுவரே. (௯௯)

உதவக்கரத்தரவங்கணைத்தின்னருக்கம்புன்
னிதவக்கரத்தரசோரியருணைநிலத்தினரே
னதவக்கரக்கரமாங்கழலாரரியம்பரையற்
புதவக்கரத்தவர்க்குயர்பாகன்வெண்பூமன்னனே. (௧00)

திருவருணையந்தாதி முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவ - எல்லப்பநாவலரவர்களால்

அருளிச்செய்யப்பட்ட

திருவருணைக்கலம்பகம்.

காப்பு.

நேரிசை வெண்பா.

துன்னவயல் சூழருணை யண்ணாமலையார்மேன்
பன்னுங் கலம்பகப்பா மாலைக்கு-துன்னியசீர்
மெய்க்கோட்டு மேருவெனும் வெள்ளேட்டின் மீதெழுதும்
கைக்கோட்டு வாரணமே காப்பு.

கட்டளைக்கலித்துறை.

சைவத்தின் மேற்சமயம் வேறிலையதிற் சார்சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வமில்லெனு நான்மறைச்செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவார முந்திரு வாசகமும்
உய்வைத்த ரச்செய்த நால்வர்பொற் றாளெம் முயிர்த்துணையே.

மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

இது எட்டடித்தரவு-௧.

மணிகொண்ட நெடுங்கடலில் விழிவளரு மாதவனும்
அணிகொண்ட புண்டரிக மகலாத சதுமுகனும்
ஞானக்கண் ணதுகொண்டு நாடோ றுணராதே
ஏனத்தின் வடிவாகி யெகினத்தின் வடிவாகி
அடிதேடி யறிவலென வவனியெலா முழுதிடந்தும்
முடிதேடி யறிவலென மூதண்ட மிசைப்பறந்தும்
[illegible]

காணரிய வொருபொருளாய்க் களங்கமற விளங்குபெறும்
சோணகிரி யெனநிறைந்த சுடரொளியாய் நின்றருள்வோய்.

[இவை ஈரடித்தாழிசை-௭.]

மலைமிசையி லிருப்பதற்கோ மலைசிலையா வெடுப்பதற்கோ
மலையரையன் மகிழ்வதற்கோ மலையுருவ மெடுத்தனையே. (௧)

இத்தலத்தி லைந்தொழிலு மிருபிறப்போ ரறுதொழிலுந்
தத்துவமுந் திருமேனி தரித்திலையே வியவாவே. (௨)

இருக்காதி சதுர்வேத மிசைப்பதுநின் பலபேத
மொருக்காலு மொன்றுரைத்த தொன்றுரைக்க வறியாதே. (௩)

கருமுடிவைத் திருகால கற்பமெலாங் கடக்கவுநின்
றிருமுடியிற் பிறைசிறிதுந் தேயாது வளராதே. (௪)

தானவரைக் கடிந்துமலர்ச் சதுமுகனை யொழித்துமற்றை
வானவரை யழித்துநின்கை மழுப்படைவாய் மழுங்காதே. (௫)

அண்டருக்கு முனிவருக்கு மழலான கொடுவிடத்தைக்
கண்டமட்டி னுகர்ந்திடவுங் கண்டமட்டிற் கடவாதே. (௬)

மூவாமை தனக்குநின்றன் முதனடுவீ றிலாதமைக்குஞ்
சாவாமை பிறவாமை தமக்குமிவை சான்றன்றே. (௭)

[இவை நாற்சீரோரடியிரண்டுகொண்ட அம்போதரங்கம்-௨.]

தடவரை நடைகெழு தரமென வருமொடு
கடகரி யுருவிரி கலையென மருவினை. (௧)
படமுடை யரவொடு புகைபடு முடிபதி
தடைமற வுடனுறை சடைநெடு முடியினை. (௨)

[இவை முச்சீரோரடி அம்போதரங்கம்-௪.]

சிலையென மலையை வளைத்தனை. (௧)
திரிபுர மெரிய நகைத்தனை. (௨)
கலைமறை யிவுளி படைத்தனை. (௩)
கதிரவ னெயிறு புடைத்தனை. (௪)

[இவை இருசீரோரடி அம்போதரங்கம்-அ.]

விதி சிரத்தினை. (க) நதி தரித்தனை. (ரு)
அகழ் கரத்தினை. (உ) மதி பரித்தனை. (சு)
விடை நடத்தினை. (ங) நாள்க ளாயினை. (எ)
பொது நடத்தினை. (ச) கோள்க ளாயினை. (அ)

[இவைபெயர்த்தும் ஈரடித்தாழிசை-ங.]

பண்ணு நீ சுவையு நீ பரிதியு நீ பனிக்கதிர் நீ
பெண்ணு நீ யாணு நீ பேதமு நீ யபேதமு நீ. (க)

செங்காலிற் கருங்காலன் சிரமுருள வுதைத்தனையே
சங்காழி முகுந்தனுக்குச் சங்காழி கொடுத்தனையே. (உ)

ஆராலு மளவிடுதற் கரியவுனை யொருகாத்து
நீராலு மலராலு நெஞ்சுருகப் பணைவாமே. (ங)

இது தனிச்சொல்.

எனவாங்கு.

[இது பத்தடிநேரிசை ஆசிரியச் சுரிதகம்.]

வேற்று மருந்தால் விடாதவெம் பிறவியை
மாற்று மருந்தா மலைமேன் மருந்தா
அழகிய நாயகி யருளுடை நாயகி
புழுகணி நாயகி பொருந்திய புனிதா
காசியி லிறந்துங் கமலையிற் பிறந்தும்
தேசமர் தில்லையுட் டிருநடங் கண்டும்
அரிதினிற் பெறும்பே றனைத்தையு மொருகால்
கருதினர்க் களிக்குங் கருணையை விரும்பி
அடைக்கலம் புகுந்தன னடியேன்
இடர்க்கடல் புகுதா தெடுத்தரு ளெனவே.

நேரிசை வெண்பா.

சேதறவஞ் சோணகிரி வித்தகர்க்கார் வேறுவார்
சோதியா மானிவர் சோமனிவர்-ஆதலினும்

561

மண்ணுங்கா லும்புனலும் வானுமழ லுமிவர்
எண்ணுங்கா லெல்லா மிவர். (உ)

கட்டளைக் கலித்துறை.

எல்லா வுயிர்க்கு முயிரரு ணேச ரிவரசைவின்
அல்லா தணுவு மசையாத தென்ப தறிந்தனமே
வில்லாடன் மார னிருக்கவு மெய்யம் விளைத்த வந்நாள்
புல்லா திருந்தன வெல்லா வுயிருந் தம் போகத்தையே. (ங)

கலித்துறை.

போகம் விடுத்தே தாக வெடுத்தே புவிமீதே
யோகம் விளைத்தே யாக மிளைத்தே யுழல்வீர்காள்
ஆகம வித்தார் மோக மவித்தா ரருணேசர்
கோகனகத்தா ளாக நினைத்தே குழைவீரே. (ச)

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

குழையடுத்த விழியிடத்தர் மழுவலத்த ரருணையத்தர் குளிர்வெற் பூடே
மழைதொடுத்த துளிகளைக்க மடிசுருக்கி யயிர்பொடித்து வருந்துஞ் சேதா
தழைபடுத்த விடையர்பற்ற குழலிசைக்கு மனமுருக்கித் தளருமாலை
பிழையடுத்த மொழியுரைத்த தலைவருக்கு மிகவிரக்கம் பிறப்பி யாதோ. (ரு)

எழுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

யாவர் குலத்து நெடி மாதவன் மருப்புடைய வேனமிரு கத்துருவ மாய
வேதமொழி பெற்றவய னேதினமு மெனப்பறவை வேடமு மெடுத்த திலையோ

ஞ்சருணை வித்தகனை மூவரி லொருத்தனென
வோதியிடு மற்ப மதியீர்
சீதமதி வைத்தமுடி பாதமல ரைச்சிறிது
தேடுதனி னைத்தபரமே. (௬)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பரவை யாடினு நதிக ளாடினும்
படியெ லாநடந் தோட்டியினும்
குரவ ராயினுங் கனலி னின்றுதன்
மொதிம்பா ருக்கினுங் கதிகி டைக்குமோ,
அரவ மாடுசெஞ் சடில ரங்கணே
ரமுதர் தாளிணைக் கடியர் தம்மொடு
விரவி நீரணிக் கருணை சேர்வரேல்
வெற்ற ராயினு முத்த ராவரே. (௭)

பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

முத்தமிழ்முறைமுறையன்பொடு
மப்பர்கவுணியர்சொல்சுந்தரர்
மும்பொழுதுமெதிர்புகழ்ந்திடு முதனூலவர்
அத்தரருணையினெடுந்திரை
தத்துதிருந்தியின்மென்பெடை
யச்சமறவுடனணைந்துறை மடநாராய்
ஒத்தமனமொடுபுணர்ந்தவர்
சற்றுமகல்வதிலையென்றவ
ருற்றதுணையெனவிருந்தவ ருளம்பெறாய்
எத்தனைகபடநினைந்தவர்
கைப்பொருள்கருதிநடந்தன
ரெப்படியிறைவரைநம்புவ தினநாமே. (௮)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இனமகளு மருகர்மட மிஞ்சயிலடு கனன்மதுரை
இறைவனுடல் புகமொழிவரே

கனகமுக படகலன கரடதட விகடமத
கரியின்மத மறநினைவரே
வனமருவு மருமுதலை யொருமுதலை தரவினிய
மதுரகவி மொழிமுதல்வரே
அனகரபி னயரதுல ரமலரம ரருணகிரி
யடிகடம தடியவர்களே. (௯)

தலைவன் விழைவுதல்.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அடியவர் சிந்தையி லினிதுறை சங்கர
ரருணைவ ளம்பதி யன்றோ
படியிலெ னெக்கரி யனையம தங்கொடு
பதறிந டந்திடி யின்றோ
ஒடியு மருங்கென வுணர்விலர் கின்றினி
யொருவச னஞ்சொல வொண்ணாதோ
கடியச ரங்களி னிளைஞரு டன்பல
கலகவி தம்பயில் கண்றோ. (௧௦)

அம்மானை — மடக்குத்தாழிசை.

நாரா யணனறியா நாதரரு ணைசருக்கு
வாரார் முலைகலைமெய் மாதங்க மம்மானை
வாரார் முலைகலைமெய் மாதங்க மாமாயின்
ஆராயுங் காலெப்ப தையமன்றோ வம்மானை
அன்னமறி யாரெப்ப துதயமோ வம்மானை. (௧௧)

பாங்கி தலைவிக்குரைத்தல்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மானென்பார் கலையென்பார் கைம்
மலையென்பார் வழியே தென்பார்
ஊனென்பா ரிலையென்பார்யா
னேந்துமாந் தழைநன் றென்பார்

ஊண்மென்பார் நிறையுந் தாரா
    குறையுந்தென் னருணை மானே
காமென்பார் குழலை வேந்தர்
    கருத்தென்னோ கருதுங் காலே. (௪௨)

புயவகுப்பு ஆசிரியவண்ணவிருத்தம்.

கருணைமுக மண்டலத் தொளிர்மகர குண்டலக்
    கலன்மலிக வின்குழைக் குறவாயிசைந்தன
களபமகில் குங்குமத் தளறுகுடி கொண்டெட்
    டியபுழுக ணைந்துமெய்ப் பனிநீர் துளைந்தன
கலைமதிமு ழுங்கிநத் தினமிருள டைந்துமுத்
    தொளிகருக வெண்சுதைத் திருநீறணிந்தன
களவிசைய ரிந்துகட் பரிதிசைமு னிந்துதக்
    கனைமுடித டிந்துமைத் தலையேவழங்கின. (௪௨அ)
இரணியனு ரங்கிழித் தளவறும தங்கெழித்
    தெழுகரம டங்கலைத் தடமார்பிடந்தன
இமயமட மங்கைபொற் புளகவிரு கொங்கையிற்
    சுவைபட வின்பமுற் றதிலேகுழைந்தன
இரவிகிர ணங்கொழித் ததிசயமு டன்கிளைத்
    தெழுபவள வன்பொருப் பெனவேவளர்ந்தன
இதழியர விந்தமுற் பலமகிழ்செ ருந்திகட்
    குரவலரி சண்பகத் தொடையாணிறைந்தன (௪௨இ)
தரியலர்பு ரங்கெடச் சுரர்சரப யங்கெடத்
    தமனியமெ ருஞ்சிலைச் சிலைநாணெறிந்தன
தனுவலத ருஞ்செயற் கமர்பொருச ரந்தரச்
    சரதமென வந்துமற் பொருபோர்புரிந்தன
சலசமலர் மண்டபச் சதுமுகவ யன்றிருத்
    தலையுடனி லங்குமுத் தலைவேலுவந்தன
தடவிகட கும்பமத் தசதவள தந்தநத்
    தறுகண்மத குஞ்சரத் துரிபோர்வைகொண்டன (௪௨ஈ)

அருணகிர ணக்கதிர்ப் படைவெளிசெ றுமகிழ்ச்
    சரவரிசை கங்கணப் பணியாண்மலிந்தன
அளவறுத மப்பலத் திகிரிபடி பெற்றெழிற்
    கமலவிழி தங்கமெய்த் தழுகோடிருந்தன
அருமறைமு ரிந்தசொற் புகலியிறை செந்தமிழ்க்
    கரசிசெழுநி சுந்தரப் பெருமான் புகழ்ந்தன
அரிபிரமர் தங்களுக் கரியபத பங்கயத்
    தருணையதி ருக்கழற் பெருமான் புயங்களே. (௪௩)

தலைவனை வேண்டல்.

மடக்கு-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

புயங்கமுமெங் கண்ணியுஞ்செவ் விதழியேமால்
    பூண்டகையுங் கண்ணியுஞ்செவ் விதழியேமால்
வியக்குமெரு வன்னதுட்பொன் னிறமேமெய்க்கண்
    மின்னிறமும் பொன்னிறமே புயம்பெறுமல்
அயர்ந்திவள்வா டத்தகுமோ வருட்கண்பாரீர்
    அருணகிரிப் பெரியீரே யமலரேநல்
வயந்தவிழா வழகரேகிளைக்க முந்தி
    வரந்தருவா ரேயலேனென் மருந்தனாரே. (௪௪)

இரங்கல்-எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மலையேனை மருந்தருணேசான் றுவலைவீசிமின் றலைவே
அலைமேனிறைந்துவருமீன ருந்தியருகேயிடங்கொள் குருகே
மூலைமேன் முயங்குதலைகாளிலன்பர்மொழிகுண்மறந்தபிழையோ
தலைமேல்வரைந்தபடியோவிருந்து தமியேன்வருந்துதகவே. (௪௫)

தலைவியைப்புகழ்தல்.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தகைமுறுவலின் மதனைமுனிபவர் சடையிலணியல தலைவிளர்
அகைவலடியைதொழுதையுமெனுமையாருணைநகர்தரிவையார்

கிரிறன தடவமுதகிறைதுடிலவுமுகபடம்விலகினால்
கனவமாருநாருமிகல்கொடுகலகமிடுவரிவ்வுலகிலே. (௧௬)

இதுவுமது.

மடக்கு-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

உலககண் டிகளுப் வருசலந் தரனு
ருடறடிந் திடுவார் கடல்விடங் கொளுவார்
குலவுசங் கரனு ரருணையங் கிரிசூழ்
குளிர்புனந் தனிலே கிளிகடிந் திடுவார்
மலர்முகஞ் சசியே வடிவமுஞ் சசியே
மகரமென் குழையே வருணமென் குழையே
முலையுமந் தரமே யிடையுமந் தரமே
மொழியுமா சுகமே விழியுமா சுகமே. (௧௭)

இரங்கல்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சுகமே சுகமே யிரும்வந் துபுனஞ்
சூழ்கின் றவுமைத் தினமித் திளையுட்
புகமே யவிடா துகடிந் திடுமெம்
பொல்லா மையுமின் றுபொசுறத் திடுமின்
மகமே றுகெடுஞ் சிலையா னருணை
மலையா ரருணை புரிமால் வரைமேல்
அகமே செலுமா றுதுணிந் திதனை விட்
டகறுன் பழுமன் பர்வரிற் சொலுமே. (௧௮)

இதுவுமது-அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சொல்லா ரணத்திற் கறிவரியார்
சோணா சலத்திற் சுகங்கடமைக்
கல்லா லெறிந்த பகைக்குவழி
காட்டா தொழிதல் கண்டாயே

ரல்லா வம்புஞ் சமர்க்களத்திற்
குனியா வில்லுங் கொண்டுநிற்கும்
லா டவனே யெமக்குறுதி
புகன்று தெங்கே யகன்றுரே. (௧௯)

பிரிவுவிலக்கல்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஆரும் விரும்பிய கல்விமே லாசையு மக்குள தாயிடின்
பாருற வென்பொரு பாவையாப் பாடிய பாவலர் போலவே
நீருமருந்தமிழ் செப்பிடு நீர்மைய திந்திவ ணேகுவீர்
மேருவெ டுஞ்சிலை யத்தனார் வீறரு ணைபுரி யெவற்பரே. (௨௦)

காலம்மடக்கு.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வெற்றிமதன் போர்க்காயம் பிறைக்குங் காலம்
வெங்கணைவேல் போர்க்காயம் பிறைக்குங் காலம்
சற்றுயிரு காமென்னே சங்கணியாக் காலம்
தலைவர்துறை மறந்தென்னே சங்கணியாக் காலம்
கற்றைநெடுஞ் சடைமுடியா ரடியார்மேன் முழுதுங்
கருணைநாட் டம்புரியு மருணைநாட் டினையும்
பெற்றவினந் தென்றன்மறு கிடத்தியங்குங் காலம்
பேதையேன் சிந்தைமறு கிடத்தியங்குங் காலம். (௨௧)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

காலிற் றலங்கு நகத்தாலுங்
கையிற் பொலிகூர் நகத்தாலும்
சீலத் தரக்க னுரங்கொண்டீர்
திசைமா முகனைச் சிரங்கொண்டீர்
மேலைப் புரத்தை நகைத்தெரித்தீர்
வில்வேன் புரத்தைப் பகைத்தெரித்தீர்.

குலப் பகை—யேன் மழுப்படையேன்
  சமந்தி ரருணை யமர்ந்தீரே. (௨௨)

மாலையிரத்தல் மடக்கு.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

அமர்ந்தரு ணைப்பதி வாழ்வீரே
  யன்பர்க ளன்பினி வாழ்வீரே
சமர்த்தோளிர் சூலமெ டுப்பீரே
  தோளணி மாலைகொ டுப்பீரேல்
இமந்தரு வெண்மதி காயாதே
  யிருகணெ ழும்புனல் பாயாதே
கமழ்ந்தரு முற்கொடி வாடாதே
  கந்துலு மிப்படி நீடாதே. (௨௩)

ஒன்பதின்சீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நீடாழி ஞாலம் வானெனுநீ தீகாலு லாவுமி யானையுந்
  நீறுய காலமாய் விமொன்
கோடாழி மால்பி ரமக னானன கோடி வீழ்தலை
  சேர்மார பாரமீ தறவே
சூடாத மாலை சூடுவர் தோளோடு தோளை வீசுவர்
  சோணாச லேசர்சோ பனமா
ஆடாத வாட லாடுவர் பாடாத பாடல் பாடுவ
  ராராத வோசைகூ ருவரே. (௨௪)

புன்னாகங்கண்டிரங்கல்-கலித்துறை.

கூத்தாமெருணைச்சர்வரையன்பர்பொருளன்புகொண்டென்னையும்
நீத்தார்கொளிழலாருமிலையாலின்னுய்நெடுங்காலமே
பார்த்தாலுமயலேவினைத்தாய்சலித்தாய்பசந்தென்றலால்
பூத்தாய்பொன்னிறமாகவென்னாகநீயன்னபுன்னாகமே. (௨௫)

569

இரங்கல்-மடக்கு.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நாகமெ டுத்தவ ரம்பானார்
  நாலும றைக்கவ ரம்பானார்
தோலகயி டத்தவர் சேனாராய்
  சோணகி ரிப்பதி வானாராய்
மாகமெ டுத்தவி ளங்காவே
  மன்னவெ ரெண்ணம்வி ளங்காவே
கோகன கத்திமி ருந்தேனே
  கொண்கனை விட்டிமி ருந்தேனே. (௨௬)

ஊசல்-மடக்கு.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இருசரணச் சிலம்பாட வாடீ ரூசல்
  இணைமுலைப்பொற் சிலம்பாட வாடீ ரூசல்
மருவுகலை மருங்கசைய வாடீ ரூசல்
  வரிவளைக்கை மருங்கசைய வாடீ ரூசல்
அருமறைக ளளவிடற் கரிதா மைய
  ரருணகிரிப் பரமர்புக ழுடனே பாடிப்
பொருமிருகட் கயலுலவ வாடீ ரூசல்
  புயமதனன் கயலுலவ வாடீ ரூசல். (௨௭)

பாங்கி சொல்லுதல்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஊசலு கைத்திடுவார் குன்றெதிர் கூவிடுவா
  ரொண்டர ளங்கொளுவார் தண்டலை கொய்திடுவார்
ஆசில்பு னற்றுடைவா ரம்மனை பந்துகழங்
  காடும கிழ்ந்திடுவார் கோடும டக்கையரே
ஈசர்வி டைக்கொடியார் பூசைசெ யற்கெளியா
  ரோசனை [illegible] மோகவி ளிர்க்கவனே

வீசு தினைப்புனமே யாவரெ னத்தெளியேம்
வேலர்ம னத்திடையே மாலைவி ளைத்தவரே. (௨௮)

மடக்கு-கலிவிருத்தம்.

மாலையெண்பரங் கலத்தாரு மறைநாறுங் கலத்தாரும்
கோலமன்ன கலத்தாருங் குறைவில்பரி கலத்தாரும்
மாலைவில்வேள் சலத்தாரு மதர்த்தமதா சலத்தாரும்
மேலகலாச் சலத்தாரும் விளங்கருணை சலத்தாரே. (௨௯)

தலைவியைப் புகழ்தல்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அருணைநெறி தனிலுமெதனி ரருமலைம ருந்தாய
வமலரதி ருங்கழலினார்
மருவலர் விரிந்தநதி பெருகருணை யம்பதியின்
மருவிய மடந்தையிடையாம்
ஒருகொடியி லொன்றுகமு கொருபவள மொன்றுகுமி
ழொருமதிய மொன்றுபிறைதான்
இருசிலையி ரண்டுகணை யிருபணையி ரண்டுகுழை
யிருமலையி ரண்டுமலையே. (௩௦)

எழுதரி தென்றல்.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மலையாச னத்தர்மலை மயிலாச னத்தரெழு
மலையா னிலத்து வருவார்
அலையாச னத்தரொடு மயிர்தாச னத்தர்தொழு
மருணைச லத்தர் வரையீர்
முலையானை கட்டியிடை வெளிதேர் நிறுத்திமதி
முகமாய வமைத்தரு ளுலாம்

இலைவேல்ப ரப்பியினி தொழுதோள மைப்பனினி
யெழுதேனி ருப்பு மனமே. (௩௧)

இரங்கல்-சிலேடை-கட்டளைக்கலித்துறை.

மேலாடை தோற்றணி சங்காழி கைவிட்டு மென்சிலம்பின்
காலால் வருந்தி கிலங்கிறுங் கோலத்தைக் கண்டிருந்தும்
ஆலால முண்ட வருணை மலையர்த மன்பாக்கன்றி
மாலான வர்க்கிரங் காதிங்ஙனே யொரு வன்கண்ணரே. (௩௨)

நேரிசை வெண்பா.

கண்ணருக்கும் போதருக்குங் காண்பரிதாயக் கண்பறித்த
திண்ணருக்கு நன்றாய்த் தெரிந்ததே - விண்ணருக்காப்
போற்றவா ரண்ணார் புரமெரித்தா ரென்பிறவி
மாற்றவா ரண்ணாமலை. (௩௩)

இரங்கல்-கலிவிருத்தம்.

அண்ணா மலையைத் தாடற் கிரிமேல்
எண்ணா மலையத் தவஞ்செய் திலரால்
கண்ணா மலையத் தனைநீர் கலுழும்
விண்ணா மலையத் தரும்வெண் மதியே. (௩௪)

பாங்கன் துணிவு.

எழுசீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்.

மதுவாணி லுறந்தகுழன் மடவார்நெ ருங்கருணை
மலைமேன்ம ருத்தர் வரையில்
முதுநீரில் வந்தவவ ரடையாள [illegible]
முதலேமொ ழிந்த படியே
இதுகாக மன்றுமுலை யிதுபூத மன்றுகள
மிதுமேக மன்றளகமே

அறநீல மன்றவிழி யதுசாப மன்றுநுத
லதுகோப மன்ற தரமே. (௩௬

நாரைவிடுதூது.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அருணை வெற்பின ரயனிருக்கவு மரியிருக்கவு மாகவே
திருமிடற்றொரு கருமை வைத்தவர் திருநுதிக்கய [illegible]
கருது கெட்டலைசவ றத்துயில் [illegible] நாரைகாள்
இருகணித்திரை யிலையெனச்சொல விறைவர் பக்கலி லேகுமே.

—பாணந்தலைவிக்குரைத்தல்—கட்டளைக்கலித்துறை.

ஏகார் புனத்துத் தழைமாற் கரிபட்ட தென்பரென்றும்
போகாத வூர்க்கு வழிதேடு வார்புலிக் கான்முனியும்
நாகா திபருந் தொழுமரு ணாசல நாட்டிலிளந்
தோகா யணங்கனை யாயவர்க் கேதுசொ லத்தக்கதே. (௩௭)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சொர்க்கமெனு மொருபதவி யிருக்க மாலைத்
துளவணியு மரிபதவி யிருக்க மேலை
நற்கயிலை மலையிருக்க வினைத்தோர்க் கெல்லா
நயந்தமுத்தி நகரமொன்றே நல்கா நிற்பீர்
பொற்கையிறு லுமைவணங்கிப் பரிந்துபூசை
புரிந்துதவந் தெரிந்துதினம் புகழ்வோர்க் கெல்லாம்
எற்குலவு புகழருணை யீசனாரே
யினிதளிக்கும் பதவிதனக் கென்செய்வீரே. (௩௮

சித்து—எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வீரத்தை [illegible]யவாளா
விளங்கருணைச் சித்தர்யாம் விளம்பக் கேளா
காரத்தை யெமக்கிடுகெஞ் சத்தையேகோ
கனகமெனக் காட்டிடுவோங் கரியோ ருக்குத்

முகமாய வயத்தரு குலாம

தாரத்தைப் பொன்னாக வமைத்தோந் தம்பீ
தாம்பரமும் பொன்னாகச் சமைத்தோ மிந்தப்
பாரத்தை யாரறிவா ரயனூ கத்தைப்
பசும்பொனிற மாகவுமே பாவித்தோமே. (௩௯)

இதுவுமது.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பாதமெமக் களித்தவரு ணேசனார்க்கின்
பச்சிலைபொன் செய்திமையோர் பசிநோய் தீர
ஓதுகடை மருந்தளித்த சித்த ரேம்யா
மொருபிடிசோ றல்லதுகூ ழுண்டோ வப்பா
மாதவர்தந் திருவாணை கரிக ளெல்லா
மாதங்க மாக்குதற்போ மருந்தில் லாதே
ஏதமற நாகமொளித் தாராவாச் செய்வோ
மிரும்பையும்பொன் னாவுரைத் திசைவிப் போமே (௪௦)

தலைவியைப் புகழ்தல்.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இதழி யந்தொடைய ருணையங் கிரியி
லிரத மூர்ந்திடு வலவனே
பதிய டைந்துமறு கினில்வ சந்தனி
படையெ ழுந்தது பகருவேன்
புதிய [illegible]புனலை வளையி ரண்டருகு
பொழியும் வெம்பகழி பே[illegible]ரு
உதய தந்தமத களிறு டன்கதலி
யுபய தண்டுவரு கின்றதே. (௪௧)

ஒன்பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வரைக்கனக சாப சோணகிரிப்புனித கால கால
மதிக்குநெடு மாயர் போலலே

தரைக்குளினி யாரியாவ ரவர்க்குமுனி வாமனிவ
  தழநீசிகரி யாக வீதியோ
விரைக்கமல மேவாடை யாவர் புரத்தைமுனி யாணமாவர்
  விரித்தகொடி யாவ ரீதலால்
இரக்குமனை தோறு மேறி நடத்துமெரு தாவர் மேவி
  யிடத்திலுறை தேவி யாவரே. (௪௨)

கட்டளைக்கலித்துறை.

ஆனிடபக்கொடி சோணாசலனென்று மன்பர்பலர்
தானிட முத்தி தரும்பெரு மானென்றுஞ் சம்புவென்றும்
கானிட வேடன்மு னூனிட வுண்டறு கண்டுமொரு
மானிட மானவ னைத்தேவர் செய்வதென் வந்தனையே. (௪௩)

களி-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தனையிருக்கு மறைதுதிக்கு மருணை நாதன்
  சரணமலர் புகழ்களியேஞ் சகா பூசை
வினையிருக்கு மவர்க்கெளிதோ வரிதா னன்றோ
  விதிவசத்தால் விவரமற்ற விதஞ்செல்வேனே
பனையிருக்க கொடியகஞ்சா விருக்க வீணே
  பச்சையா விலைதுயின்றான் பனையன் றேளி
வனையிருக்கப் பணிதுயின்றான் மதுவார்ந் தெய்வ
  வாழிவிட்டுப் பாற்கடன்மீ தழுந்தி னானே. (௪௪)

களி நேரிசை வெண்பா

ஆனூர் கொடியா ரருணை புரிக்களியேம்
வானாடே தேனா மதியற்றார் - மேனாளில்
சும்மாகஞ் சாவிலையே தூளிடித்துத் தின்றாலும்
தம்மாகஞ் சாவிலையே தான். (௪௫)

பிச்சியார்-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தாமணிவர் திரிசூல மெதிர்கண் டார்மேற்
  சக்கரத்தை விடுவார்சிவ சமயத் தாவர்

காமுகரை யாண்டுகொளார் சிவநூல் கேட்பர்
  கருத்தினின்மா றெரிசனமே காட்டா நிற்பர்
ஆமையர வணிதொடையார் விடையார் வாழு
  மருணைகிரி வளநாட்டி லகங்க டோறும்
சேமநிதி யெனவுலவும் பிச்சி யார்தந்
  திருப்பெயரை வெளியாக்கித் திரிகின் றாரே. (௪௬)

இதுவுமது-மடக்குக் கட்டளைக்கலிப்பா.

தில்லை மன்றுண டம்புரி பாதனார்
  தேவ ராயர் திருவரு ணைக்குளே
முல்லை மல்லிகை சண்பகம் பிச்சியார்
  மொய்த்த வார்க்குழன் மோகனப் பிச்சியார்
நல்ல மேனியும் பொற்றிரு வேடமே
  நாடியிட் டதும் பொற்றிரு வேடமே
இல்லை யாயினி மிவ்விடை யையமே
  யேற்க வந்தது மிவ்விடை யையமே. (௪௭)

கார்கண்டு பாகனோடு சொல்லல்.

கட்டளைக்கலித்துறை.

அயங்காட்டியமறையார்விடையானருணைவெற்பில்
புயங்காட்டியமணித்தேர்வலவாமுன்புபோனகொண்டல்
சயங்காட்டிக்கோபமுஞ்சாபமுங்காட்டித்தடித்திடித்துப்
பயங்காட்டினாவஞ்சமேதனியேனின்றபைங்கொடியே. (௪௮)

நேரிசைவெண்பா.

பைங்கட் புலிக்குப் பரிபவத்தைக் காட்டுநா
சிங்கத் தினையடர்த்துச் சீறியே - வெங்கைப்
புழைக்குஞ் சரமுரித்துப் போர்த்த தருணைக்கே
தழைக்குஞ் சரபமொன் றுதான். (௪௯)

குறம்-பதினான்கு சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஒன்று மூன்றி நாலு ரைக்க வந்து சேரு மரிவையீர்
  குதய மான சுளகு நெல்லு மொற்றை பட்ட தாதலால்

கன்று மானு மழுவு மாக வொருவர் வந்து தோன்றினார்
கண்ட மட்டி லேக றுப்பர் கைக்கபால ரவரையும்
சென்ற காடி லருணை மீது காண லாகு காமழுங்
தேவ ராய் ரவர லாது தெய்வம் வேறு கண்டிலேம்
நின்று வாடு மிவடனாசை யிடர்தவிர்ப்ப ராதலா
னீறு கொண்டு மூன்றி ரேகை நெற்றி மீதி லெழுதுமே. (௫௦)

இரங்கல்-இதுவுமது.

நெற்றி மீது கண்ப டைத்த வும்மை மார னெய்வனோ
நீர ணிந்த வரவி ருக்க நெடிய தென்றன் முடுகுமோ
வெற்றி யான தாளி ருக்க மதிய மும்மை நலியுமோ
விரவு கங்கு லுமது கண்கள் வெயிலின் முன்பு நிற்குமோ
கற்றை யான குழலி யெந்த வுதவி கொண்டு பகைவெலும்
கருணை கூர்தெ னருணை மேவு கலியு கத்து மெய்யரே
செற்ற லார்கள் புரமெரித்த.புழுக ணிப்ர தாபரே
தேவ ராய ரேசு கந்த தினவ சந்த ராயரே. (௫௧)

கார்காலம்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்த

நினைப்போது தானே நினைத்தாலு மேலோர்
சிறப்பான பேறீகுவோர்
வனத்தாடு சோணா சலத்தாடு நீரா
மயிற்பேடை காளோடைகாள்
வினைப்பாவி யானேன் விழிப்பாயு நீரான்
மிகுதேறு கார்காலமே
தனித்தாவி சோர்வார் தமக்கால மேநீள்
சரற்கால மேகாலமே. (௫௨)

இளவேனில்—நேரிசை அகவற்பா.

காலையு மாலையுங் கைம்மலர் குவித்து
மாலு மயனும் வணங்குதற் கரியோன்

577

இமைக்கு முலக மியாவையும் படைத்தோன்
தனக்கொரு தாயுந் தந்தையு மில்லோன்
பழவினைக் கயிற்றிற் பல்லுயிர்ப் பாவை
அழுந்துற நடிக்கத் திருநடம் புரிவோன்
வினைவலை யறுக்கு மெய்த்தவ வேடன்
மனைவலைப் பிணிக்கு மான்மத நாதன்
பேரு மறுபத் தாறு மியம்போன்
மாறுந் தியாக வசந்தவி நோதன்
அண்ணா மலைய னிருங் கழலன்
கண்ணா ரமுதன் கைலைப் பொருப்பின்
மறலித் திசையின் மலயா சலமென
இருத்திய குறுந்திகொண் டிளங்கால் பரப்
காவலைப் பல்லவக் கனைறு வசைப்பக்
குறைவறு குயில்வாய்க் குறட்டினி லடக்கிப்
பொறிதிக ழளிக்கனி யதனிடைச் சொரிந்துன்
இசைத்திடு மஞ்சரிப் பசைக்கோ லசைத்து
மதவீ ரனுக்கு வசந்தக் கருமான்
பனிமலர்ச் சாயகம் பண்ணி நீட்டினன்
இன்னமும் வந்திலர் கேள்வர்
புன்னையங் குருகுழ லன்னமென் னடையே. (௫௩)

மடக்கு-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அன்னியமா சடையாரும் பின்னியமா சடையாரு
மடிமாற நடித்தாரு முடிமாற னடித்தாரும்
உன்னுமற மொழிந்தாரும் பின்னுமற மொழிந்தாரு
முனைத்திடமா னேற்றாரு மினைத்திடமா னேற்றாரும்
என்னகத்த ருரியாருங் கொன்னகத்த ருரியாரு
மெருக்கிதழி மணத்தாரு முருக்கிதழி மணத்தாரும்
கன்னிவடி வணைத்தாருஞ் சென்னிவடி வணைத்தாரும்
வருகருணைப் பதியாரும் பெருகருணைப் பதியாரே. (௫௪)

சம்பிரதம்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பரவைபொ ருக்கெழுவுங் ககனம்வ டுப்படவும்
 பரிதிவ டக்கெழவு மிருதிகு ணக்குறவும்
இரவுப கற்படவும் பகலிர வொத்திடவு
 மெளிதனி யற்றியவோ மிவைசில வித்தைகளோ
அரவம ணிப்பணியா னனலகி ரிப்பெருமா
 னருணை கிரிக்கிணையா வவனித லத்திடையே
கருதும னத்தினிலே சிறிதுநி னைத்தளவே
 கதியைய ளித்திடுமோர் பதியுமு ணர்த்துவமே. (௩௬)

கருணைச்சிறப்பு-நேரிசைவெண்பா,

உள்ளத்தின் ஞான முயர்ந்தவிடத் தன்றியிருட்
பள்ளத்தி லென்றும் படராதே-வள்ளல்
அருணா சலப்பெருமா னம்பிகையோர் பாகன்
கருணா சலமாங் கடல்.

பண்-அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கங்கை வார்சடைப் பரமர்தென் னருணையிற்
 கடைதொறு நீபாட
அங்கை யாலிரு செவிபுதைத் தேத்துவோ
 மருச்சுனன் றிருநாமம்
எங்கை மார்செவி பொறுக்குநின் னிசையெனு
 மிடிக்குரன் மகிழ்வாரார்
மங்கை மார்செய லறிந்துகொள் பாணனே
 மயிலெனப் புகழ்வாயே. (௩௭)

தலைவியைப் புகழ்தல்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

புடைசெறிந் தளிபாடு மிதழியந் தொடைமார்பர்
 புலிபதஞ் சலிநாவோர்



இத் திருவண்ணாமலையைத் திரிகரண சுத்தியுடன் இத்தல புராணத்தை மனமுழுப்பாடி வலம் வருவோர்கள் தீவினை நீங்கி, நான்காம்பதவி யடையவேண்டி வலம்புரியு
மகாத்மியம்—16.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்பதாவது,

திருமலை வலம்புரிச் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

கனகமல கனகமலர்த் தடங்களது
பெருமையினாற் களித்தே னந்த
வனகமலை வலம்புரியுஞ் செயலினையுந்
தெரியவுரைத் தருள்வா யென்று
சனகமுனி யெழுந்துபணிந் துரைக்குதலு.
மனமகிழ்ந்து கிரணக் கோவிற்
றினகரனார் திறந்தடைக்குந் திருக்கோயிற்
கடவுளிவை செப்ப லானான்.

இ-ள். மேலான பிரமனே! பொன்போன்ற நிறத்தையுடைய தாமரைப்புட்பங்கள்சூழ்ந்த தீர்த்தங்களின் பெருமையைச்சொல்

லக்கேட்டுச் சந்தோஷித்தேன், பாபரகிதமாகிய கிரியை வலஞ்செய்யும் பெருமையுந் தெரிய அருளிச் செய்யென்று சனகரிஷி எழுந்து வணங்கிச்சொன்ன அளவில், மனம் சந்தோஷித்துச் சூரியன்தன் கிரணமாகிய திறவுகோலால் திறந்து மூடுந் தாமரை மலராகிய கோயிலில் வாசஞ்செய்கின்ற பிரமன் சொல்லத் தொடங்கினார். எ-று. (க)

கற்பமெலா மரியதவம் புரிந்தவரு
மதன்பெருமை காண மாட்டா
ரற்பதவம் புரிந்தவருக் கருணைகிரி
வலத்தினை யறிய லாமோ
சிற்பரன்றன் புகழ்கேட்கும் விருப்புடையா
யெனவுனக்குச் செப்பா நின்றே
னற்புதமிக் கதையமுதைச் செவிவழியே
புகட்டவின்ப மருந்துகென்றான்.

இ-ள். கற்பகாலம் அரிதாகிய தவஞ்செய்தவர்களும், அதன் பெருமையை யறியமாட்டார்கள்; அற்பமான தவத்தைச் செய்தவர்களுக்கு அருணாசலம் வலஞ்செய்யும் பெருமையை அறியக்கூடுமோ பரமசிவனுடைய புகழைக்கேட்கும் ஆசையுள்ளவனென்று உனக்குச் சொல்லத் தொடங்கினேம்; அற்புதமான இக்கதையாகிய அமிர்தத்தை உன்காதாகிய வாய்வழியிற் புகட்ட இன்பமாக அருந்தென்று சொன்னார் பிரமதேவர். எ-று.

சோணகிரி வலம்புரிதல் பிறவியெனும்
பெருங்கடற்குத் தோணி யாகு
மேழ்நரகக் குழிபுகுதா தரியமுத்தி
வழிக்கேற வேணி யாகுங்

473

காணரிய தவத்தினுக்கு மறத்தினுக்கு
மரும்பொருட்குங் காணி யாகும்
வாணுதன்மின் னிடத்திருக்குங் கண்ணுதலை
மனமுருக்கு மகிழ்ச்சி யாகும்.

இ-ள். அருணாசலத்தை வலஞ்செய்வது பிறவி என்னும் பெரிய கடலைத் தாண்டுவதற்கு ஒருதோணியாகும்; எழுநரகக்குழியிலும் புகுதாமல் அருமையாகிய முத்தியில் ஏறுவதற்கு ஏணியாகும்; காணுதற்கு அரியதவத்திற்கும், தருமத்துக்கும், சம்பத்துக்கும், ஒருகாணியாயுமிருக்கும்; ஒளியுள்ள நெற்றியையுடைய பார்வதியை இடப்பாகத்தில் வைத்திருக்கின்ற சுவாமியை மனமுருக்குஞ் சந்தோஷமாகும். எ-று. (உ)

காசிமுதற் சிறப்புடைய தலங்களிலே
யிருந்திறையைக் கற்ப காலம்
பூசைசெய் மொருபலமு நெடுங்கால
மரியதவம் புரிகை தானுந்
தேசிகனு ருரைத்தபடி சமாதியிலே
யிருந்துபெறுஞ் சித்தி தானு
நேசமுட னருணகிரி வலம்வருமென்
றுரைப்பதற்கு நிகர தாமோ.

இ-ள். காசி முதலாகச் சொல்லப்பட்ட சிறப்பையுடைய தலங்களிலிருந்து சுவாமியைக் கற்பகாலம் பூசைசெய்த பலமும், அநேககாலந் தவஞ்செய்தாலும், குருசொல்லிய முறைப்படி சமாதியில் இருந்து அடைகின்ற சித்திகளும், அருணாசலத்தை வலம்வரவேண்டுமென்று சொல்லிய பலனுக்கு நிகராகுமோ வென்று சொன்னார். எ-று. (௩)

அருணகிரி வலம்வருகென் றுரைப்பளவி
லதிகபிர மத்தி நீங்கு
நருமதையி னளவுமது வருந்துபவம்
வருந்தநடு நடுங்கி யோடு
மருவுபெரும் பொருள்கவர்ந்த பழவினையுங்
கரங்குவித்து வழிக்கொண் டேகுங்
குருபாற்குத் தவறிழைத்த கொடுவினையும்
பயந்துகருக் குலையுந் தானே.

இ-ள். அருணாசலத்தை வலஞ்செய்யென் றுசொல்லுமளவிற் பிரமஹத்திபாதகம் போய்விடும்; நருமதையாற்று நீரளவுமதுவைப் பானம்பண்ணிய பாவமும் வருத்தமுற்று நடுநடுங்கி யோடிப்போகும்; பிறருடைய பொருளைக் களவுசெய்த பழமையாகிய பாவமுங் கைகுவித்துக்கொண்டு ஓடிப்போகும்; குருவாகிய சுவாமிக்குத் தவறுசெய்தபாவமும்பயந்து கருப்பங்குலைந்துஓடிப்போகும். எ-று.

அந்தவினை யுடன்படலும் பெருங்காற்றி
னெரிசுடர்போ லவியா நிற்குந்
தந்தையரைக் கடிந்தவினை கருடனுற்ற
வரவெனவே தளர்ந்து மாயு
மைந்தரையு மகளிரையுந் தொலைத்தவினைக்
கடல்சுவறி வறிய வாகு
மெந்தைபொருள் கவர்ந்த வினை
தனக்கிருக்கு மிடமேதென் றிசைக்குந்தானே.

இ-ள். இறுதியைக் கொடுக்கும் பாவமும், அருணாசலத்தை வலஞ்செய்ய வேணுமென்று நினைத்தஅளவில் சூறைக்காற்றி னெதிரிலிருக்கும் தீபம்போ லவிந்துபோம்; தந்தையைக்கொன்றபாவ

மும் கருடனைக்கண்ட பாம்புபோல் நடுக்கமடைந்து ஓடிப்போம்; குழந்தைகளையும் மாதரையுங்கொன்ற பாவமாகிய கடலும் வற்றிப்போம்; எம்முடைய சுவாமி திரவியம் திருடினபாவமும் தானிருக்குமிடமெங்கே யென்று ஓடிப்போம். எ-று. (௬)

வேறு.

ஓரடிக்கியாகஞ்செய்த பலத்தினையுதவாநிற்கு
மீரடியிராசசூய பலந்தருமினியமூன்று
நேரடிபரிமேதத்தின் பலத்தினைநிறைக்குநாலு
பாரடியிடுவார்க்கியாகப் பலமெலாம்பலிக்குந்தானே.

இ-ள். அருணாசலத்தை வலஞ்செய்ய வேண்டுமென்று நினைத்து ஓரடி எடுத்து வைத்தவர்க்கு யாகஞ் செய்தபலன் சித்தியாம்; இரண்டடிக்கு இராசசூய யாகபலன் சித்தியாம்; மூன்றடிக்கு அஸ்வமேத பலனுண்டாம்; நாலடிக்கு எல்லாயாகத்தின் பலனுஞ் சித்தியாம். எ-று. (௭)

வலங்கொளோரடியேபூமி வலஞ்செயும்பலத்தைநல்கு
மலங்குமீரடியேதீர்த்த மாடியபலன்களீயுந்
தலங்கொண்மூன்றடிகளீரெண் டானத்தின்பலத்தைநல்கு
மிலங்குநாலடிக்கியோகத் தெண்வகைப்பலத்தைநல்கும்.

இ-ள். பிரதக்ஷிணஞ் செய்கையில் தூக்கிவைத்த ஓரடியின் பலன் பூமிப் பிரதக்ஷிணஞ் செய்தபலன் தரும்; இரண்டடியின் பலன் சருவதீர்த்த மாடிய பலன் தரும்; மூன்றடியின்பலன் சோடசதானப் பலன் தரும்; நாலடியின் பலன் அஷ்டாங்கயோகஞ் செய்த பலன் தரும். எ-று. (௮)

வைத்தவோரடியேபூசைப் பலமெலாம்வழங்குமங்கே
உய்த்தவீரடியேலிங்கந் தாபித்தவுறுதிநல்கு

மெத்தவேயடிமூன் றிட்ட பலன்சொலின்விமானங்கோடி
யெத்தனைதூபிக்கோயில் சமைத்தபேறெல்லாநல்கும்.

இ-ள். அதுவல்லாமலும் வலமாகவைத்த ஓரடிக்குப் பூசாபலன்களெல்லாம் பலிக்கும்; இரண்டடிக்கு இலிங்கப் பிரதிட்டை செய்தபலன் கொடுக்கும்; மூன்றடிக்கு கோடிவிமானம் தூபிகளையுடைய கோயில் கட்டியபேறு தரும். எ-று. (௯)

வேறு.

நீடருணை கிரிவலத்தோ ரடியிட்டோ
ருருத்திரர்வா ணிலைகைக் கொண்டோர்
நாடியிரண் டடியிட்டோர் மகேசுரர்தம்
பதத்தடைந்தார் நதியுஞ் சூடி
யாடரவம் புனைந்தமலை வலமாக
வெழுந்தொருமூன் றடியிட்டார்க்கே
கோடிதலை முறையவரைச் சிவலோகந்
தனிற்கொடுபோய்க் குடிவைத்தாரே.

இ-ள். நீண்ட அருணாசலத்தை வலஞ்செய்ய வேண்டுமென்று ஓரடி வைத்தவர்கள், உருத்திர பதமடைவார்கள், இரண்டடி வைத்தவர்கள், மகேசுர பதமடைவார்கள்; மூன்றடி வைத்தவர்கள் கோடிதலை முறையிலுள்ள மனிதரையும் பதவியிற் கொண்டுபோய்ச் சேர்க்கும். எ-று. (௧௦)

நன்றிதரு மருணகிரி வலமாகச்
சிறிதுவழி நடந்தபேர்க்குத்
துன்றுநெடுங் கிரணவெள்ளிக் கயிலைமலை
வழிகடுகித் தொலையாநிற்கு

579

மடையினங் கயறுவ் மருணையங் கிரிமீது
மலரணங் கெனமேவுவார்
நடையுமின் திரவேழ மிருகையின் திரதாரு
நயனமின் திரநீலமே
இடையுமின் திரசால நுதலுமின் திரசாப
மிதழுமின் திரகோபமே. (௫௮)

உருவெளி — கலிவிருத்தம்.

இந்திரகோபமா மிதழிபாகனார்
செந்தமிழருணைத் தேருஞ்செல்லுமே
சந்திரரேகையுஞ் சமரவாளியும்
மந்தரமேருவும் வளைந்துகொண்டவே. (௫௯)

தலைவியை வியத்தல்.
எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கொண்டலணி கண்டர்பிறை கங்கையணி செஞ்சடையர்
கொம்பரொரு பங்கி லுறைவார்
அண்டபகி ரண்டமள வங்கியென நின்றவதி
ருங்கழலர் தங்க ருணையீர்
கண்டனது கொண்டல்மிசை திங்களெழு கின்றதிது
கண்டதிலை யுங்கண் முகமா
மண்டலமெ னும்புதிய திங்கண்மிசை கொந்தளக
மஞ்சுகுடி கொண்ட வடைவே. (௬௦)

நேரிசை வெண்பா.

அடுத்தமதிச் சென்னியின்மே லம்பிருக்கு மன்றோர்
இடத்திலே நாரி யிருக்கும் — தடக்கையிலே
ஏந்துசிலை விட்டிருக்கு மெம்மருணை நாதனார்
போந்து புரமெரித்த போது. (௬௧)

கார்காலம்-கலித்துறை.

போதற்குமரிதானவருணசலத்தீசர்பொன்மேருவாய்
வதப்படும்பாவிமனமேபிரிந்தாரிதெண்ணூர்கொலோ

ஓதத்தினீரோகெனலுன் மெய்யன் மீனவுமிழ்தன்மைபோல்
காதற்குண் மடவார்மெய்பொன் பூசுமின்வீசுகார்காலமே.

தலைவியைவேண்டல்-கொச்சகக்கலிப்பா.

கார்வந்தாலன்ன கரைக் கண்டனார்செங்கதிரோன்
தேர்வந்தாலும்பொழில்சூழ் தென்னருணைநன்னாட்டில்
ஆர்வந்தாலுந்தணியா தன்னமன்னீராளும்
நீர்வந்தாலாசை நெருப்பவியுங்காணுமே. (௧௩)

பனிக்காலம்-கலித்துறை.

காணம்பரந்தோலினுடையாரருணேசர்கைலாசமேல்
துணங்கணிகர்தோளருநைநின்றங்களுஞ்சொரியாதரோ
பூணங்கைவளைசிந்தமடவார்மனத்தேறுபுகைபோலவேள்
பாணங்களுதிர்கின்றதுகன்போலவுறைகால்பனிக்காலமே. (௧௪)

நேரிசை வெண்பா.

பண்ணிறந்த வாசவரிற் பல்கோடி மாண்டாலும்
எண்ணிறந்த வேத ரிறந்தாலும் - கண்ணைற்
கமைத்தவெலா மாண்டாலு மண்ணா மலையார்க்
கிமைப்பளவுங் கால மிலை. (௧௫)

தலைவனைவேண்டல்.

ஒன்பதின் சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இலகொளி பரந்துமாரன் விசிகணை துரந்தகாடி
 யிடமிரு நெடுங்கண் மாதரார்
இலகரிய கொங்கைமீது பழநழுவி வந்துபாலின்
 விழுவதென வந்து சேர்கிலீர்
மலகரி குறிஞ்சிதேசி வைரவி சுரும்புபாடும்
 வயலருணை மங்கை பாகரே
பலமலர் கதம்பதூளி மிருகமத சுகந்தம்வீசும்
 பரிமள வசந்த ராசரே. (௧௬)

581

மதங்கு.

ஒன்பதின் சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வசிகரம் வயங்குநீறு மணிய புசங்கராச
 வலயமு மணிந்த தோளினார்
அசலகுல மங்கை பாகர் பரிமள வசந்த ராச
 ரருணையின் வளங்கள் பாடியே
இசைபெற லரங்கினூடு பவுரிகொண் மதங்கியார்த
 மிலகிவளர் கொங்கை யானையே
இசைபெற விருந்தயானை பிறகிட முனிந்து போர்செய்
 திறலிப மணந்த மானவே. (௧௭)

இதுவுமது-மடக்குக் கட்டளைக்கலிப்பா.

நதியைச்சூடதிருக்கழனாதனார்
 நம்பனாருணைபுரிவீதிமேல்
சதியிற்பாடிநடிக்குமதங்கியார்
 தந்த வாசைத ரிக்கும தங்கியார்
வதனத் தாற்சசி மண்டல மாறுமே
 வந்தி ருந்தவிம் மண்டல மாறுமே
கதியிற் கொண்டது மந்தக் கரணமே
 கண்ட பேர்க்கிலை யந்தக் கரணமே. (௧௮)

குறம்-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அருணமணி முலைக்கிரிமேற் செங்கை வைத்தா
 யாகையா லருணகிரி யன்பன் மூதூர்
வருணமுலை கண்ணாரப் பார்த்தா யுன்றன்
 மகிழ்நனுங்கண் ணாமுதன் வந்துகேளாய்
தரணியிலுன் றனைச்சேர்வன் முருகன் போலத்
 தாயரையும் பெறுவையிவை தப்புமாயின்
திருகிறைவண் டார்குழலாய் குறமும்பாடேன்
 சிறந்தகுறக் கூடையும்யான் றீண்டிலேனே. (௧௯)

மறம்-எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நீண்டரியுமட்டப்பனையின் சருகைவாரிச்
சிற்றிரும்பாற் சுற்றிவரச் செருக்கிக்கட்டி
நீண்டதுவுஞ் சுருண்டதுமா வளைந்துசுற்றி
நிருபமனைக் கொடுத்தெதிரே நிற்குந்தூதா
தாண்டவமா டும்பரனா ரருணைநாட்டிற்
றருமறப்பெண் டனைவேண்டிச் சமரிற்போந்து
மாண்டவரே றியகோணல் வளைகளுங்கள்
வருங்கவிவழி வாயினமு மரங்கடாமே. (௭௦)

மடக்குக் கலிவிருத்தம்.

மறைத்தவனப்பரியாரும்வரைக்கவனப்பரியாரும்
எறித்தவிரும்பிறையாருமெவரும்விரும்பிறையாரும்
பொறுத்தசினவிடையாரும்பொருந்துசினவிடையாரும்
அறத்தவனம்பதியாருமருணைவனம்பதியாரே. (௭௧

கலித்துறை.

ஆரணிதுங்க னாரணிபங்க னருணைசன்
தாரணியஞ்சுவ காரணஞ்சத் தரியானேல்
வாரணமெங்கே சாரணமெங்கே மலர்மேவும்
பூரணமெங்கே காரணமெங்கே போவாரே. (௭௨

தழை-கட்டளைக்கலிப்பா.

போந்தபோதக கஸ்தூரியாடையார்
போர்வையாளர் புகழருணைக்குன்னே
ஈந்தருத நறுந்தழையையனே
யெங்கண்மாத ரெடுத்துமகிழ்ச்சியாய்
மோந்தபோது துவண்டதுமெய்யிலே
மொய்த்தபோது புலர்ந்ததுகண்ணினீர்
பாய்ந்தபோது நனைந்ததுமீளவும்
பார்த்தபோது பசந்துமலர்ந்ததே. (௭

இரங்கல் மடக்கு.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மலரிதழித்தொடையான் மதியணிவித்தகனுர்
மலைமகணற்புதனுர் வயலருணைப்பதிசூழ்
குலவுமிடக்கழியே பலவுமிடக்கழியே
குறைவையினக்கயலே யுறவுமெனக்கயலே
சலமிகு முற்பலமே தளர்வது முற்பலமே
சருவுமனத்திடரே தழுவுமனத்திடரே
இலைமெரி சற்பனையே யிவருரை சற்பனையே
யினியபணித்திரையே யினியிலை நித்திரையே. (௭௪)

சுவடுகண்டிரங்கல்.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்

நித்தனம்பனரு ணாசலநீதிருவ
கின்றுதேடியுழ லனஞ்சமே
இத்தடஞ்சுர மடங்கலோவிதல
தில்லைவேறுமர மிதனிடை
அத்திநின்றவிட முவ்விடஞ்சிலைகொ
ளாதகன்னறவிட முவ்விடம்
எய்த்துளஞ்சியின வஞ்சினின்றவிட
மிவ்விடஞ்சுவடு மேவுமே. (௭௫)

மடல்விலக்கு-கலிவிருத்தம்.

ஏறுடையண்ணலா ரேழைபாகனார்
ஆறணிசென்னியா ரருணைவெற்பரே
கூறொருபெண்ணையே கூடவேண்டுவார்
வேறொருபெண்ணையே வெட்டுவார்கொலோ. (௭௬)

தவம்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வாய்ந்தநலமருந்தருந்தி யரியயோக
வகைபுரிந்துவாயுவுன்னே யடக்கினுலும்

காய்ந்தவிருப்பூமியிலே தவஞ்செய்தாலுங்
  காயம்வருந்திடுவதல்லாற் கதிவேறுண்டோ
ஆய்ந்ததிருநீறணிந்தைந் தெழுத்தையோதி
  யகமகிழ்ந்துசிவாகமத்தி னடைவையோர்ந்தே
வய்ந்தருணாசலத்தைவலங் கொண்டாரன்றோ
  விமைக்குமுன்னேகைலைமலையிடங்கொண்டாரே. (௭௭

மாலை யிரத்தல்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இலங்கியதிங்களெழுந்தாலெல்கண்மின்வெங்கதிரென்பாள்
கலங்கினளாயினுமன்றேள்கட்கமலங்குவியாவோ
துலங்கியவெங்கதிர்தானேசோணகிரிப்பெருமானே
அலங்கலையென்றுகொடுப்பாயன்றதுவெண்மதியாமே. (௭௮)

நேரிசை வெண்பா.

ஆற்றுங்காற்கஞ்சத் தவர்தாமரைக்கண்ணர்
சாற்றுங்காற்கண்ணரவர் தந்தையார் — ஏற்றுமதி
சூடும்பெருமானைச் சோணகிரிவித்தகனைத்
தேடுவதெங்கெப்படியோ சேர்ந்து. (௭௯)

கட்டளைக்கலித்துறை.

சேணார்திருவுடைச்செல்வரைக்காணிற்சிறப்புச்செய்து
பேணாதவருமுண்டோபுவிமீதிற்பெருத்தெழுந்து
சோணாசலவடிவாய்வெளியாய்நின்றசோதிதனைக்
காணாதகண்ணனைச்சொல்வர்செந்தாமரைக்கண்ணனென்றே. ()

தவம்.

நேரிசைவெண்பா.

என்றுமதிக்கண்ணு ரிறைவருணைபுரியில்
நின்றுதவம்புரியாய் நெஞ்சமே — பொன்றிரளான்
மாதவராயாணாயிழைசூழ் மாதவராயானீவண்டு
மாதவராயாணாமையென் சொல்வாய், (௮௧)

இடைச்சியார்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சொல்லாடினுமக்கிரண்டு பசுவேயுண்டு
  சுமந்திடுபொற்கலசமுமத் துணையாமீதும்
அல்லாமலிடையின்மிக விளைத்துப்போனீ
  ராயிருந்துமிடைமதியோ வகாறைதானே
புல்லாரென்பணிதொடையா ரருணைநாட்டிற்
  பொதுவர்குலமங்கையரே பவிமேற்கண்டோம்
கல்லாருந்தனித்தனியே யெடுத்தக்காலு
  மிரண்டுமொருமையாமலகன் றேதுவீரே. (௮௨)

இதுவுமது-கட்டளைக்கலித்துறை.

வீரனைகல்கிமகநூறுசெய்த விடைக்கொடியார்
காரணிகண்டரருணாசலத்திற் கல்சங்கொண்டு
மோரதுகூறுமிடையினர்க்குமுண்டகம்போல்
காடிமெல்லினம்வல்லினமாகுமிருதனமே. (௮௩)

தலைவி யிளமை யுணர்த்தல்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தடணாக மணிவெயிலும் பிறையுமிழு நிலவுமெதிர்
  சடில நாதன்.
அடணாக நெடுஞ்சிலையா னசுரர்புர மெரித்தபிரா
  னருணை நாட்டில்
இடணாக மனையவரே தனஞ்சிறிதுங் காணாத
  சிறியார் தம்மைக்
கடணாக நீர்விளவிப் பிணைதேடி முதிநனையேன்
  கைக்கொண்டீரே. (௮௪)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கையடைத்த மழுமானுஞ் செழுமானு முழைமானுங்
  கயலுமானும்

மையடைந்த விழிமாது மூடனாக வருணேசர்
    வருகு வாரே
மெய்யடைந்த திறங்கருதி விழிகளும்பஞ் சடைந்தவர
    மிடற்றி னாடே
ஐயடைந்து படர்ந்துவர யமனடர்ந்து தொடர்ந்துவரு
    மன்று தானே. (௮௫)

தலைவன் சொல்லல்.

நேரிசை வெண்பா.

அண்ணாமலையா ரருணையனை யீருமைக்
கண்ணாலஞ்செய்தான் கமலத்தோன் - என்னை
இணைக்கோலஞ்செய்தமுலை யேந்திழையீ ரென்னை
மணக்கோலஞ்செய்தா னமதன். (௮௬)

கொற்றியார்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மழலைமொழி யிசையாலுங் கொம்பார்வை யதனாலு
    மயக்க மாகிச்
சுழலும்விட ரவமெலாம் படமெடுத்து முன்னாடத்
    தோன்றி னீரே
அழலுருவ மணிகரத்த ரருணகிரி வளநாட்டி
    லளிவந் தாலும்
குழலொருசற் றண்டாயி னெப்படியோ வாட்டிடுவீர்
    கொற்றி யாரே. (௮௭)

இதுவுமது.

கொச்சகக் கலிப்பா.

ஆரிதழிசூடு மருணேசர் நன்னாட்டில்
வாரிருகொங்கை மலைசுமக்குங் கொற்றீரே
பேரிருள்போய்க்காமப் பிணிநிலவு கண்டொளிக்கக்
கூரியகண்ணில்லார் குழல்குறைந்தா ரென்பாரே. (௮௮)

வஞ்சித்துறை.

பாணார் மொழிநிறை
சோணா சலத

பேணா தவனூறு
மாணா நரகமே.

வஞ்சி விருத்தம்.

[illegible]யதயல வன்பிறார்
தாரணி மீதொரு கோன்பெறார்
சுரரு லோகமு மின்புறார்
அருணை நாயக ரன்பறார். (௯௦)

வேற்றொலி வெண்டுறை.

அருணைசெருங்கழலாறணிசெஞ்சடையாளரரிவைபாகர்
கருணைநெடு[illegible]லான்பெருமானார்தாடொழுதார்கதியைநாடின்
மரணமிலாவிமை[illegible]ர்தம்வானுலகமன்றே
பொருண்மறையுளான்ம[illegible]றயோர்புகலுமத்தாட்பூவே. (௯௧)

இரங்கல்-கலித்துறை.

பூவுண்டவிடையாளரருணாசலத்தீசர்பொன்மேருவாய்
பாவுண்டபுகழாளர்பிரியேனெனச்சொன்னபருவத்திலே
காவுங்குயிலுமயிலுங்கிளியுங்கனிதாவுதே
[illegible]வுங்குருகுந்திருகுண்டமனனுமெறலாலே. (௯௨)

வெறிவிலக்கு-கலிவிருத்தம்.

வாங்குவில் நேர்நுதல் வயங்கு மாதரீர்
ஈங்கிவ ளொருவர்மே லேட்டட வாங்கினால்
ஆங்கவ ளணிந்தவ ரருணை நாட்டிலே
சங்கணமை யழிப்பது நீதி யல்லவே. (௯௩)

தலைவியைப்புகழ்தல்-கட்டளைக்கலித்துறை.

அள்ளற்கடல்விடநீங்காதகண்டரருணைவெற்பிற்
பின்னைப்பிறையுஞ்சிலையுமொப்பாநுதற்பேதைநல்லாள்
வள்ளற்குழைபொருகண்ணுக்குத்தோற்றம்பும்வாரிதியுங்
கள்ளக்கயலுமிராசியின்மீனுங்கடைப்பட்டதே. (௯௪)

வலைச்சியார்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தேவயா [illegible] ணையிரி வனகாட்டித்
தெருக்க டோறும்
மாவிரத முனிவரெலா மயல்கூரக் கயல்கூறும்
வலைச்சியாரே
காவிதிகழ் வாவியிலே மீன்பிடித்துவருவோரைக்
கண்டோங் கண்டோர்
ஆவியெலாம் பிடித்திழுக்கு முன்மைப்போல வொருவர்க்கண்
டறிந்திலோமே. (௯௬)

வலைச்சியார் - நேரிசைவெண்பா.

மேலா ரணிசடையார் வீறருணை யூரிலே
மாலாக வந்த வலைச்சியரே - காலா
மிருவரா லுங்காட்டும் யான்பிடிக்கக் காதல்
ஒருவராலுந் தீருமோ. (௯௭)

செவிலி சுரமுலையைத் தேற்றல்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஒருவராலு மேறுகாத காளிலே
வயிரி ருணைவொரு கேள்வ னுசையால்
மருவி னூதுமெனை தாரு சுவடேயே
வழிக டோறுமினி யாடி மீளவே
கருணை நீதிமனை யேனு மாதுடன்
நடக்க னெழுமலை யெழு மேழுமா
வருணர் குழுமலை கேழு மேழுமா
வருணை நாதர்சபா லதாரமே. (௯௮)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தரிகலந்த மன்றமுடியி னடித்தருள மருணைசை
தகைத காட்டில்

காரியர்மேன் மனமகிழு மளியினங்காள் ஒருவார்த்தை
கவிலக் கேளீர்
எரிருக்கும் கைகளெலாஞ் சேதிருக்க நீரிருந்து
மிடைக டோறும்
வெரிமலர்த் தேனிருக்க விவர்கொழு விரும்பிவந்தென்
விழுதின் நீரே.

தலைவி யவயவ வருமை சொல்லல்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

எமக்கின்று சிவஞானத் தபெருமானு கருணையிரி
விறைவர் சேர்ந்த
குயமைமைன் பைத்துறைய மடக்கையமைட பெருகவென்
குற்றலை குடே
பாருமெய்த்தொம் பிணிலேழி விசும்பவலைப் பறித்துமெணம்
வடிவி லாதோன்
ஆமையமையிர்ங் கயிறுகொமி செசிக்கனிக்க பதுமையிலா
மருமை யாமே. (௯௯)

தலைவிகையுறை யேற்றமை சொல்லல்.

கட்டளைக் கலிப்பா.

ஆர்வ லர்க்கழி யாவர கல்துயர
ரத்த ஞரு ருபரி யெதுபகே
பார்வி யப்புற நீசுரு மாமணி
பட்ட யாம் பகர்ந்திட வருமோ
கார்குழ்க்கு முடிமணி யாயிரு
கண்கண யீனுறு கண்மணி யாய்முலை
சேர்க துந்த பொழுதிரு குன்றிலுந்
தென்ன லாவுந் தீண்மணி யானதே. (௧௦௦)

திருவருணைக்கலம்பகம்
முற்றிற்று.

சிவமயம்.

திருக்கைலாசபரம்பரைப்
பொம்மையபாளையம்
சிவஞானபாலையதேசிகராதீனத்து
நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம்

சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச்செய்த

சோணசைலமாலை.

காப்பு.

நேரிசை வெண்பா.

சதுரனெழிற் சோண சைலற் றுதிப்பன்
மதுரமொழி யன்பர் மனமாங்—குதிரைதிறை
கொண்டவனென் றேத்துங் குரைகழற்கால் யானைதின்ற
கொண்டவனை யென்னுளத்தே கொண்டு.

நூல்.

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அன்னைமா புகழ்மூ வரும்புனை யரும்பா வன்றியென் கவிபுனைந் தனக்காம், பண்ணுலா மிருவ ரிசைகொளின் செவியிற் பாணிமா ணொலியுமேற் றிலையோ, விண்ணுலா முடியின் மேருவின் வடபால் வெயிலொரு புடையுற வொருபாற், றண்ணிலா வெறிப்ப வளர்ந்தெழுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௧)

துவக்கற வறிந்து பிறக்குமா றுருந் துயர்ந்திடா நடைக்குகண்மன் ற, முவப்புட னிலைத்து மரிக்குமோர்பதியு மொக்குமோ நினைக்குநின்னகரைப், பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற் படர்பவர் திசைப்பறநோக்கித், தவக்கல நடத்த வுயர்ந்தெழுஞ் சோண சைலனே கைலை நாயகனே. (௨)

நீங்கருந் துயர்செய் வளிமுதன் மூன்ற னிலையுளே னவைதுரந்திடுமுன், வாங்கிநின் றனிவீட் டுறைகுவான் விரும்பி வந்தனனின் குறிப்பறியே, னுங்குறைமதியே தாங்கியென் றுலக மறைந்துறை யறநிறைமதியுந், தாங்கியமுடியோ டோங்கியசோண சைலனே கைலைநாயகனே. (௩)

கனிமலை துவர்வாய்க் கோதையர்க்குருகுங் கன்மனக்கொடியனுக்கென்னே, துனிமலைபிறவி தவிர்த்தனையெனநிற் சுளிபவரிலையெனக்கிரங்காய், பனிமலைகதிர்வந் துறநிலையாடி பயின்றபீடிகையெனவுதயத், தனிமலையிருப்ப வளர்ந்தெழுஞ்சோண சைலனே கைலைநாயகனே. (௪)

சுடரிலைநெடுவேற் கருங்கணார்க்குருகித் துயர்ந்துநின் றலமருமனநின்; னடநவில்சரண பங்கயநினைந்து நைந்துநைந்துருகுநாளுளதோ; மடலவிழ்மரைமாட் டெகினெனவருகு மதியுறக்கார்த்திகைவிளக்குத், தடமுடியிலங்க வளர்ந்தெழுஞ்சோண சைலனே கைலைநாயகனே. (௫)

அருங்கவிவாத வூரனேமுதலோ ரன்பிலே மென்றதுவேண்டி, யிரங்குதல்பொய்ம்மை யன்பிலேனெனயா னியம்பலே மெய்யெனக்கருளாய், கருங்கடமிழு மீர்ங்கவுட்பனைக்கைக் கரிபுரிகஞ்சுகங்கப்பத், தரங்கமுண்டெழுகார் முகில்பயில்சோண சைலனே கைலைநாயகனே. (௬)

புரத்துறுமவுணக் குழாமும்வண்டிசைகூர் பூங்கணைமதனுமுன் பெறநின், சிரித்தவெண்ணகையு நுதல்விழிநோக்குஞ் சிறியனேனிருண்மலம்பெறுமோ, கருத்தினுங்கருத வரியநுண்ணியனென் கடனறவுலகெலாங் காண்பான், றரித்ததிருல வடிவுறுஞ் சோணசைலனே கைலைநாயகனே. (௭)

ஆர்த்தெழுதிரைகள் சுருண்டெறிகடனஞ் சமுதுசெய்பெரும்புகழ்த்தனிமை, தீர்த்திடவுளங்கொண் டவலனேன் றனைநின் றிருவடிக்கன்பனாக்கிலையே, கார்த்திகைவிளக்கு மணிமுடிசுமந்து கண்டவரகத்திருளனைத்துஞ், சாய்த்துநின்றெழுந்து விளங்குறுஞ் சோண சைலனேகைலைநாயகனே. (௮)

தொடையுடைத்திரோ ணமன்புறத்துட னுந்தொலைக்குமுணகத்துடனொலைத்துத், தடையறத்திகழ்பே ரறிவுருவாகத் தமியனேற்கருளுநாளுளதோ, புடையினிற்கரிக்கோ டிளம்பிறைபுரையப் பொங்குசோதியங்கொடிவிரித்த, சடையெனப்படர்ந்து கிடந்தொளிர்சோண சைலனே கைலைநாயகனே. (௯)

கண்புன லுளிப்ப வழற்படுமிழுதிற் கரைந்துருகு நெஞ்சினின்றனையே, பெண்பயிலுருவ மொடுநினைந் தெனது பெண்மயலகற்றுநாளுளதோ, வண்புனல் வேந்த னூர்கலிக் குடத்து மணிமுடிக்கலசத்தின் முகந்து, தண்புனலாட்ட வாடுறுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௧௦)

வேலையந் துகில்சூழ் மலர்தலை யுலகின் மெய்யினைப் பொய்யெனுமவர்க்கே, யேலவந் தருள்வ தன்றிமெய் யினைமெய்யெனுமெனக்கருள்புரிந் திடாயோ, காலகன் குணர்ந்து சினகரம் புகுந்து காணரிதெனுதல கனைத்துஞ், சாலவின் றுழியே கண்டிடுஞ் சோண சைலனே கைலை நாயகனே. (௧௧)

மயலினு ளழுந்தும் பிறவியா மளற்றை வளர்தரு நின்பெருங் கருணை, வெயிலினு லுலர்த்தி யெனதுளக்கமலம் விரிக்குமொண் பரிதிநீயலையோ, பயிலுமா லயமோர் சைலமோர் சைலம் பகைப்புல முருக்குகார் முகமோர், சைலமா தலனு மெனக்கொளுஞ் சோண சைலனே கைலை நாயகனே. (௧௨)

புலம்புரிதுயரங்கழன் றுநின் கழற்கால்புந்தியஞ் சினகரத்தித்தி, நலம்புரிபுநிதர் பேரவை தமியே னணுகுவா னருளுநாளுளதோ, வலம்புரி மனிதர் கடலென்ன வொலித்து வளைவுற் சிலைவளைந் தரம்போற், றலம்புரி தவத்தி னின்றொளிர்சோண சைலனே கைலைநாயகனே. (௧௩)

சீரினி லெழுமொக் குளினழி யுடம்பு நிலையென நிலைக்குமாணைந்த, வாரிதிபடிய வறிந்திடாதுழலு மடமையே னுய்யுநாளுளதோ, வெரிபல் பசுமுன் றேமொக்கேழ லின்றுநா டியகிளைத் திடல்போற், சாரலினேன மருப்புடன் சோண சைலனே கைலை நாயகனே. (௧௪)

கருத்திடை நினது கருணைமா மேனி கண்டிடப்பூ [illegible] நாவியம்பச், சிரத்தினி லமைத்த கரத்தொடு நினையான் றினம வலம்புரியுமா றருளாய், வரத்திருமுடியின் மதிதிருமுடியின் வளைந்துகந்தரத்தினி லிருள்கந், தரத்தினிலிருத்தி விளங்குறுஞ் சோண சைலனே கைலை நாயகனே. (௧௫)

பாவிரவா மிகழு மிகழ்ச்சியும் புகழ்ச்சிப் பயனென வுணர்ந்து நாடொறுமா, ரூரனு ரவையி னிகழ்ந்ததொத் ததியி னுவக்குநின் பதந் தொழவருளா, யேருலாமண்டச் சுவர்மதின் மிசைப்பாலிலங்குறு மண்டகோளகையாச், சாருமா லயத்தி லிலிங்கமாஞ் சோண சைலனே கைலை நாயகனே. (௧௬)

இந்திரியங் கரண முடலம் வேறாக்கி யிருண்மலப் படலமுங் கீறிக், கந்தமுமலரு மெனநினை யென்னிற் காண்பறக் காணுநாளுளதோ, வந்தொரு களிறு முழுவையுங் கொன்றமலிபகை தவிர்ப்ப வெண்ணிறந்த, தந்தியும் புலியும் வளர்த்திடுஞ் சோண சைலனே கைலை நாயகனே. (௧௭

முழங்குவண்டினங்கள் விருந்துணு மலங்கல் மொய்குழல் மகளிர்தம் மயலாற், புழுங்குமென் றனைநின் றிருவடி நிழலிற்புவிஞ்சளிர்க்குநா ளுளதோ, வழங்குவெண் டிரையாற் றவிர்சடைகப்பமணிமுடி நின்றிழிந் திடல்போற், றழங்கு வெள்ளருவி யிழிதொளிர் சோண சைலனே கைலை நாயகனே. (௧௮

குன்றுதோறாடுங் குமரனே யெனவுங் கொடுஞ்சிலை மதனவேளெனவும், புன்மொழின் மனிதரைப் புகழ்ந்து பாழ்க்கிறைக்கும் புலமைதீர்த்தெனக்கருள் புரியா, யொன்றொரு கினந்தோட் குட்குழைந்தனமென் றொருதுநா டொறுமகமேரு, தன்றலை தாழ்ப்ப வளர்ந்தெழுஞ் சோண சைலனே கைலை நாயகனே. (௧௯)

வெண்டிறு நீறு புனையுமா தவர்க்கு விருந்துசெய திரும்பெருமிடியுங், கொண்டகல் விரதச் [illegible]ளைக்கும் யாக்கையுமிக் கொடியனேற்கருளுநா [illegible]ர, வண்டுழுங் குவளை மலர்த்தடஞ் சுனை [illegible] யிறைவா னவர்க்குரித் தன்றிச், சண்டியுண்மகிழ்ந்து கொள மலர் சோண சைலனே கைலை நாயகனே. (௨௰)

வந்துமா மதலி யெனதுயி ருண்பான் மயிலையுஞ் சிரலினிற்கின்றன், மூந்திநீ யெனையா னந்தவா ரிதியின் மூழ்குற விடுத்தருள் புரியாய், சந்துளான் மலையே யென்று சாதிப்ப சுனைமலர் வேங்கையு மசோகுஞ், சந்துமேன் முளைப்பச் செய்துகொள் சோண சைலனே கைலை நாயகனே. (௨௧)

பூமழை யமரர் பொழியமா தவர்கட் புனன்மறு கிடைப்பொடியடக்கத், தூமொழி மனைநீ தூதுபோம் பயனில் சொற்பதர் புடைத்திளைக் கின்றேன், யாருணர் விருபே ருருவமாய் வரினு மிருவரு முணர்த்திடி னன்றித், தாமுணர் கிலரென் றெழுந்துயர் சோண சைலனே கைலை நாயகனே. (௨௨)

கழைமொழிக் கொடியோர்க் கேவல்செய் துடலங் கமருகுமமிழ்கின்மங் குறுமல், விழைவறத் துறந்துன் றிருவடிக் கமலம் விழைகுநர்க் கேவல்செய் கிலனே, மழைமதக் களிநல்யானைமத் தகம்பாய் வள்ளுகி ரோடுசெல் லரிமா, தழைசிறைச்சிம்புள் கொண்டெழுஞ் சோண சைலனே கைலை நாயகனே. (௨௩)

கார்தரு சுருண்மென் குழற்சிறு நுதற்பூங் கணைபுரை மதரிக் கருங்கட் டார்தரு குவவுக்கொங்கைதுண் மருங்குற்றையலார் மையலென் றொழிவேன், சீர்தரு மணிபி னணிந்தன வெனக்கட் செவியுமொண் கேழலின் மருப்புஞ், சார்தரு மூலக விளக்கெனுஞ் சோணசைலனே கைலைநா யகனே. (௨௪)

நந்துகைத் தலத்து நாரணற்கயற்கு நவமணிக் கரகநீ ரிருந்து மைந்துறக்குறித்து மாட்டியுங் காண்பான் மதித்திடா துனையெதிர்ந்திலனோ, யைந்துகைத் தனிக்கோட் டொருபெருங் களிறு மறுமுகம் படைத்தகேசரியுந், தந்தமைப் புரக்குங் கருணைகூர் சோணசைலனே கைலைநா யகனே. (௨௫)

வினையரும் புகலிக் கிறைமணப்பந்தர் விருந்தினுக் குதவிலேன்முந்திற், றுனையிரந் திலான் வந்தனன் பதநீ யுதவியென் றுயரொழித் தருளா, யினியபைந் தமிழின் பொதியமால் வரைபோலிசைக்குரு காதிமலையின், றனையயின் றீஞ்சொற் குருகுறுஞ் சோணசைலனே கைலைநா யகனே. (௨௬)

பெண்ணொருங்கலமே யமுதமே யெனப்பெண் பேதையர்ப் புகழ்ந்தலந் திரிவேன், பண்ணுறுந் தொடற்பிற் பித்தவென் றினுநீ பயன்றர லறிந்துநிற் புகழேன், கண்ணுறுங் கவின்கூ றவயவங் காந்தங் கதிர்கணூ றுயிரங்கோடித், தண்ணிறங் கரலா துயர்ந்தெழுஞ் சோணசைலனே கைலைநா யகனே. (௨௭)

உயங்குறா விடைப்பூங் கோதையால்கு லொளிமணிப் பாம்பு நீண்டுதலான், மயங்குவேன் றனக்குன் பதமருந்துதவி மயக்கமென் றொழித்தருள் புரிவாய், மூயங்குமா புகழ்ப்பூம் புகலியந் தணர்க்கு முத்துவெண் பந்தரீந் தகல்வான், றயங்குமீன் முத்துப்பந்தர் வாழ் சோணசைலனே கைலைநா யகனே. (௨௮)

மெய்த்தவ ரடிக்குற் றேவலின் றிறத்தும் விளங்குமா கவுமணர்ச்சியினும், புத்தலர் கொடுநிற் பரவுபூசையினும் பொழுது போக்கெனக்கருள்புரிவாய், முத்தமுமாவ மணிகளுமெறிந்துமுதிர்திரை

[illegible] கைலைநா யகனே.

ப்புனத்தெயின் மடவார், தத்தைகள் கடியுஞ் சாரலஞ் சோணசைலனே கைலைநா யகனே. (௨௯)

பாயும் வெண்டிரைப்பே ராழிசூழுலகிற் பழமொழி யொழிய மெய்யடியா, ராயுமென் மலரோர் மலையனவணிய வமர்ந்தநின் கோலம்யான் மறவேன், றூயவெண் மதியிற் களங்கமென் றுரைப்பச் சூழ்பசுங் கொடிபயி லுருவச், சாயைசென் றுற விலங்குருஞ்சோணசைலனே கைலைநா யகனே. (௩௰)

கடியிடு பசும்பொற் புறவிமேற் கொண்டு களினமென் மலர்க்கரத்தெறியும், படையொடு தூக்கு வந்துமென் விடயப் பகைப்புலி தனைவெறிந் திலையே, யடிநடு நிழல்சென் றெழுகட லடைய வகல்பெரும் புறத்துவாரிதியிற், றடமுடி நிழல்சென் றுறவளர் சோணசைலனே கைலைநா யகனே. (௩௧)

யாவுமா முமையுண் ணருமலை மூலைப்பா லிந்துபா டச்செயா வெனினு, மேவுமா றுயர்செய் குலகோ வெனினும் விடுத்தனிற் பாமொறருணா, யோவுமானலது தொல்லுருக் கொளின்வே றென்றெடுத்திடுமென நினைந்து, நாவுமா னினமெண் ணிகழ்ந்தருஞ் சோணசைலனே கைலைநா யகனே. (௩௨)

விருப்பொடு வெறுப்பு மான்றபேரின்ப வெள்ளத்துளழுந்து மன்னடியார், திருப்பத மிறைஞ்சி யவர்க்குவே ளாண்மை செய்பெருஞ் செல்வமே யருளாய், பொருப்புகடொறும்வீழ் பொங்குவெள்ளருவி போன்றநூ லிலக்கிடையறுமற், றரிப்பருங் கருணை பொழிதருஞ்சோண சைலனே கைலைநா யகனே. (௩௩)

பொங்குறு கலினுங் கற்பும்வாய்ந் திலங்கு புண்ணிய மடந்தையும்பொருளு, மிங்குநன் குதவி யங்குவான் கதியி னிருத்துகிற்புலவரொண்புகழார், துங்கவெங் குறவர் புனத்திடு பரண்கா றணித்துநட்டாரமீ மிசைமா, தங்கவண் மருப்புப் பரப்புறுஞ் சோணசைலனே கைலைநா யகனே. (௩௪)

போழ்ந்திடு வடுக்கண் மகளிரை யணைத்துப் புகழ்ந்திடு பிரம்படக் கொதுங்கிச், சூழ்ந்திடு மமரர் நெருங்குசந் நிதியிற் றொண்டனென் னவருள் புரியாய், வாய்ந்திடு மகக்கண் மருகுதாய் முலைப்பால் வழிந்தொழு குதலென வடியார், தாழ்ந்தெழ வருவி யொழுகுறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௩௫)

நேர்ந்திடு மொருசங் கோல்கொடு கொடுங்கோ னிமிர்த்திட விலங்கைசென் றடைந்தோன், கூர்த்தவன் பொருசின் றிறைஞ்சப் புவழுத்துங் குறைகழ விரக்கவஞ் சுவல்யான், சேர்ந்திடு மலைமான் பெருமுலை புவமை யிறமலை களுக்குதவாமற், சார்ந்திட விரும்பி வளர்ந்தெழுஞ் சோணசைலனே கைலைநாயகனே. (௩௬)

ஏதருமறம் பிறவி தனையகன் றிடாத தேவரைத்தேவரென் றெண்ணி [illegible] யடையாத வறிவிலார் பவப்பிணி யறுமோ, கரிமருங் கணைந்த தெனமுழை வாயிற் கார்வர விரைந்தெழுந்துகன்கே, கரிமறைந்திருந்து நாணுறுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௩௭)

ஆண்டுகம் பலசென் றிடவிருந்திடினு மன்றியோரிமைப்பினி லுடல, மாண்டிடு மெனினு நன்றுநின் மலமலரடிக் கன்பராயிருப்பிற், பூண்டயங் கயில்வேற் குதலைவத் தீஞ்சொற் புதல்வன்மே லிவர்செய லெனமாத், தாண்டன்வந் திவர விளங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௩௮)

விரைவிடை யிவரு நினைப்பிறவாமை வேண்டினர் வேண்டே மதாரம், பெருகுறு தமிழ்ச்சொன் மலர்கிளைக் கணியும் பிறவியே வேண்டுவன் றமியே, னிருசுடர் களுமேல் கிர்வரை பொருந்த விடையுறன் மணிக்குடக் காவைத், தரையிட விருத்தி நற்றனே சோணசைலனே கைலைநாயகனே. (௩௯)

ஒண்மணிப் பசும்பொற் பூணிள முலையார்க்குளத்திட மெலாமளித்தடியார், கண்மணிக்கமைய விருந்துசெய்தருணி கனைபிருப் [illegible] பத, தனமபட வடிவங் குழைந்திடு சோண சைலனே கைலைநா யகனே. (௪௰)

பதத்திடம் புரியேன், வெண்மணிக் கழைமுன் கரியகேற் றிசழி வேங்கைபொன் சொரியமா துணங்க, டண்மணிப்பைக ளவிழ்க்குஞ்சோண சைலனே கைலைநாயகனே. (௪௰)

அருங்கலம் புனைய மகளிரோரிருவ ரணிமணம் புணர்த்திவாரணமுங், துரங்கமும் புலவர்க் குதவுநின் றனையே துதித்திடா துழன்றனன் வறிதே, மருங்குநின் றழகா லத்திதாங் குவபோன் மரைமலர்ப் பெருஞ்சுனை யொடுபூந், தீரங்களின் றிலங்க விளங்குறுஞ் சோணசைலனே கைலைநாயகனே. (௪௧)

ஏனுறுமமரர் கடைகடலளித்த விருளொடு மணிமிடற்றடியே, ஞானவிருளுங் கலந்திடும் [illegible] லங்குறுங்கண்டாய், மாமேனழலவராக [illegible] மணியொளிப் பிழம்பெழல் சிறுநீத், தாணுவின்முருக னெழுதனேர் சோண சை[illegible]னே கைலைநாயகனே. (௪௨)

மின்னவிர்சடிலக் கற்றையு மருள்கூர் விழிகளுந் திருமுகத்தழகுங், கன்னவி றிரடோ ளெண்கும ரடியுங் கண்டுகண் களிக்குநாளுளதோ, விண்ணிசை யொலிகேட் டொருத்தல் கடுப்ப வீழிதர வருவிடம்புருடர், தன்னிகரிசைகூர் சாரலஞ்சோண சைலனே கைலைநாயகனே. (௪௩)

அள்ளிவெண்டிருநீ றுடன்முழுதணியு மடியவர்ப்பெறினெழுந்திளங்கன், றுள்ளிநின் றுருகு மன்னையின் வந்தெக்குருகுபுசென் றிறைஞ்சிலனே, யெள்ளிவெம் புலியெண் கரிதிருமேனி யேறுதற் காதெனவெகுண்டு, தள்ளிவந்தருவி யிழிதனேர் சோண சைலனே கைலைநாயகனே. (௪௪)

இழையெனத் தளிர்ச்சித் திடையுறுமுலையாரெனக்குவண்புகல்வேந்தயின்ற, கழுமணிப்பசும்பொற் குலவுபாற் கிண்ணங் கழுவுநீர் வார்ப்பதற் குரையாய், முழையிடக்கதிர்மா மணிவிளக்கேற்றி முசுக்கலை பிணவொடு மசோகத், தழையிடைத் தழுவி யுறங்குறுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௪௫)

வினைவழி யுடலிற் கமைந்துறு முணவே வேண்டினர் வினைகொடு புணரா, நனைமலர் புனைநின் றிருவடி யடைவா றொடோறும் வேண்டில ருலகர், கனையிருள் கரந்த விடமறிந் துணைப்போங் காட்சியிற் புனக்கிளித் தொகுதி, தனையெறி யணிகண் முழைபுகுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௪௬)

மாங்குயின் மிழற்று நாவலூர்ப் புலவன் மறப்பவு முடிமிசையிருத்தும், பூங்கழ லடியேன் தலைமிசை யிருத்தப் புகலினு மென்கொனீ யிரங்கா, யோங்குறு மண்ட கோளகை யளவு முயர்ந்துமோர் மழுவிடை முதுகிற், ருங்குபு நடக்க விருந்திடுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௪௭)

ஈரமுமருளு மொழுக்கமுஞ் சால்பு மின்சொலு மிந்தியப்பகைவெல், வீரமுமருளி யெனது வெம்பிறவி விலக்கியாட் கொள்ளுநாளுளதோ, வாரமு மகிலுந் தடிந்துசெம் மணிக ளரித்தெறிந்தெழுவலிக் குறவர், சாரலி னிறுங்கு விதைக்குறுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௪௮)

தொகைமிகுமமரர் முனிவரர் பரவித் தொழுதகை யொடுவிரைகமழ்பூம், புகைமிகு மணிமண் டபத்திடை நெருங்கப் புகுநீயணிதல்கண் டுவந்தேன், குகைமிகு வாயிற் சோதிமா மரஞ்சேர் குளிர்மதி விழுங்கவாய் வைத்த, தகைமிகு மூரற் றிரளைநேர் சோண சைலனே கைலைநாயகனே. (௪௯)

சினம்படு முளங்கொன் றவரவை யெனையஞ் சேர்ப்பது தகுமுனக் கிசைவன், டினம்படு மலரி னகவித ழொடுபுல் விதழுமொன் றதனுல குடைத்தே, மனம்படு மடிமை யுளன்சிலை யெறிக்கு மணக்குழைந் துமையவன் களபத், தனம்பட வடிவங் குழைந்திடுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௫௰)

வாம்பரி கரிதேர் சிவிகைபொற் குவியன் மணிப்பணி பெரும்புவியாட்சி, யாம்பரி சலவென் றன்பதமருவி னன்றியென் கவிகளென் கவிகள், காம்பரி முரண்மும் மதகரி வளைத்த கைவிடமோதலாற் கதிர்த்தேர்த், தாம்பரி துணுக்கென் றீர்த்திடுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௫௧)

துன்றுறு துயரப் பிறவிவெங் கொடுநோய் தொலைப்பினுந் தொலைத்திடா தறினு, நின்னடி மலரை யன்றியான் மறந்து நினைப்பனோ விறக்கும் வானவரை, மன்னளிபருக வடையிருண் மதுவும் வாரணமதமும் வெள்ளருவி, தன்னொடுமிகலி யொழுகுறுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௫௨)

நீரினு லழலான் வருங்கொடும் பிணியா னிருதரா லலகையால் விலங்காற், சோரரால் வருந்து மவ்வெலா நினது தூயநாமம்புகன் றிடுமோர், சிறுவா மணியா லரியரவுதலாற் றிசையுற நீள்கையா லெழின்மை, சார்தலா லுமையாள் விழிநிகர் சோண சைலனே கைலைநாயகனே. (௫௩)

முகவிளக் கென்ன மணிக்குழை மிளிர முலைமுகட் டணிபெறு மலரால், பகல்விளக் கென்ன வொளிகெட வரும்பொற் பாவையர்க் கிரங்கிடா தருளா, யகவிளக் கென்ன வகதிரி நெய்தீ யாக்குவோ ரின்றியே யெழுந்த, சகவிளக் கென்ன விளங்குறுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௫௪)

நீலியோ டுணைநா டொறுமருச் சித்து நின்றெழில் புரிந்திட வுடற்குக், கூலியோ தனமென் றளிப்பவர்க் கன்றிக் கூற்றினைக் கடக்குமா றெளிதோ; மாலியோ சனையின் வணங்குறுங் கைலைமலைநிவேதித்திடக் குவித்த, சாலியோ தநமென் றிடத்திகழ் சோண சைலனே கைலைநாயகனே. (௫௫

தோற்றிடும் பிறவி யெனுங்கடல் வீழ்ந்து துயர்ப்பிணி யெனு [illegible]ப்புக் கூற்றெனு முதலை விழுங்குமுன் னின தருளைக் கழு

கரைபுக விடுப்பா, யேற்றிடும் விளக்கின் வேறுபட்டகத்தி னிருளெலாந் தன்பெய ரொருகாற், சாற்றினு மொழிக்கும் விளக்கெனுஞ் சோணசைலனே கைலைநாயகனே. (௫௬)

கந்தரமிருந்து மகுடநீரயின் றுங் கரநிலத்தமைத்திருப்பதமு, மந்தரநிமிர்த்து நின்னிலை யறியா ரரும்பவமொழியுமோ வுரையா, யிந்திரன் வனத்து மல்லிகை மலரி னின்னடைசாத் தியதெனநிறைந்த, சந்திரன் முடிமேல் வந்துறுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௫௭)

கூம்புறுகரமு மலர்ந்திடு முகமுங் கொண்டுநின் றனைவலம்புரிவோர், மேம்படுசரண மலர்ப்பொடிமேனி மேற்படிற்பவம்பொடிபடுமே, பூம்பொழிற் புகலிக்கிறைவனு னிலஞ்சேர் புண்ணியத்தலங்களினடைந்து, தாம்புனைபதிகந் தொறும்புகழ் சோண சைலனே கைலைநாயகனே. (௫௮)

கானமேமருவும் விலங்கினுங்கடையேன் கற்பவைகற்றிலேன் விடய, ஞானமேயுடையே னறிஞரைக்காணி னுணர்விலே றுய்யுநாளுளதோ, வானமேயளவு நெடுங்கிரி மலயமாதமோ துறுபவர்கட்குத், தானமே யுதவ வளர்ந்திடுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௫௯)

விழைவொடு முறஞ்செய் துய்கவென் றுரைக்கும் விதியினைக் கவனமுன் கென்னுங், கழைசுளி நெடுநல் யானையின் முனிந்து கடக்குமென் பவமொழிந் திடுமோ, மழைமுகில்வந்து தவழ்ந்து விண்படரு மலிதரு புகையென வெழுந்து, தழலுருவுண்மை விளக்குறுஞ் சோணசைலனே கைலைநாயகனே. (௬௰)

வாத்தியமுழங்கச் சிவிகையுங் கரியு மாறியூர்ந் தலைவாழ்ந் தவரு, மேத்திய மொழியோ டிரக்கையா னின்குற்றேவலே வாழ்வெனவறிந்தேன், பாத்தியமணிகள் கொண்டிழைத்திலங்கும் பாதவாசிகைமணிமேகஞ், சாத்திய தெனவில் வளைந்துறுஞ் சோணசைலனே கைலைநாயகனே. (௬௧)

குலத்தினிற் பிறந்து மலகினால் கற்றுங் குணத்தினிற் சிறந்து நல்விரத, பலத்தினிற் கவர்ந்து நின்னடியவர்க்குப் பரிவிலார் கதியிலாதவரே, கலத்தினிற் பொலிந்த விடமயின் றெடுத்த கன்னிதன் னிடமிசைக் களபா, சலத்தினிற் குறுதி கொடுத்திடுஞ்சோணசைலனே கைலைநாயகனே. (௬௨)

மூடகவிருளோ டென்னையின் றுண்ணு மூலையா ராலகற் றுவமென், சூடருமொழியா லடைந்தனன் றமியேன் சூழ்வழு வாதரீ யருளாய், வீடுறுங்கவரி கீழ்விழ வுறல்கார் மிசையனம் பன்றிதா மாறித், தாடலைதருவ வடைதனோர் சோண சைலனே கைலைநாயகனே. (௬௩)

ஐயநுண் மருங்கண் மாதர்மேல் வைத்த வாதரவுன் பதாம்புயத்து, மெய்யுறு நறுமென் கலவையின் விருப்பு வெண்டிரு நீற்றினும்வருமோ, கொய்யுறு தினைவீழ்ந்திடுபசுங்கிள்ளைக் குழக்கடோரணமென வெழுந்து, தையலர் கடியப் பறந்துறுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௬௪)

கனவினூடமைத்த விழுதெனவுருகக் கற்றதன் றுள்ளமென் கரங்கள், புனலுமாய்மலருங் கொடுநினைப்பூசை புரிந்திலவென் செய்கோவுரையாய், சினவுநோய்மருந்து வேறுகொண்டிருக்குஞ் சிலம்புக ளுணவுட்கொள்வோர், சகநோய் மருந்தாயெழுந்திடுஞ் சோணசைலனே கைலைநாயகனே. (௬௫)

ஊழுறுமணிப்பொற் கோயில்போய் வாவலுறக்கொடுத் தாங்குநிற் புணர்த்தாப், பாழுறு மகப்பே றவர்க்குடி யிருப்பப் பண்ணுமென் கண்ணுநண்ணுவையோ, வீழுறு மெயினர் கிழங்ககழ் குழியும் வேழம்வீழ் குழிகளு நிரம்பத், தாழுறு மருவி பொன் சொரி சோணசைலனே கைலைநாயகனே. (௬௬)

பைம்மறைப்படுத்தி யுள்ளறியாமற் பணிநறுந் துகில்புனை மடவார், மெய்ம்மிசைக் கருந்தோல் கண்டுவெந் துழலும் வினையினே னுய்யுநா ளுளதோ, செம்மலர்ப் பதம்பா தலங்கடந் திடவான் றிருமுடி கடப்பினு மூவர், தம்மியற் செப்பி னடங்குறாஞ் சோணசைலனே கைலைநாயகனே. (௬௭)

செக்குறு திலத்தின் வருந்துபு பிறக்குஞ் செல்லலு நாடியின்பிடிப்பு, நெக்குறவறிவு கலங்குசாக் காடுநினைதொறு முளம்பதைக்கின்றேன், மொய்க்குறு முகில்கண் டரிகரி யென்னு முழக்கமு மரகரவென்னுந், தக்கவர் முழக்கு மெதிரெழுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௬௮)

மரணமும் பிறவித் துயரு நீக்குறநூல் வாய்ச்சிலம் பிக்கருள் புரிந்த, கருணியென் றுனைவந் தடைந்தன னினிநின் கருத்தினை யின்னதென் றறியேன், முரணிபம் பருஉக்கை தலைமிசை யெடுப்ப முழைக்கரும் பாம்பென மணித்தேர்த், தரணியுள் வெருவி யகன்றிடுஞ்சோண சைலனே கைலைநாயகனே. (௬௯)

அங்கையில் வைத்த கூர்ங்கனன் மழுவா லருவினைக் காடறவெறிந்து, மங்கலில் பத்தி வித்திட வடியேன் மனத்தினைத் திருத்துநா ளுளதோ, பொங்குறு செக்கர் கருவிசும் புறவேள் புரத்தெரிகதுவிட நோக்கித், தங்குத லொப்ப நின்றிடுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௭0)

சுருக்குமைம் புலனும் விரிக்குமூ தறிவுந் துன்னுகல் வினைமு நீத்தகன்றே, யிருக்கும் வெங்கயவ ரினமுமென் றருளி யென்னை நின் னடிமைசெய் தருள்வாய், முருக்குமங் கதமா மணியுமிழ்ந் தகன்ற முழைதழற் றெனவுளம் வெருவித், தருக்குமொண் புலிசென் றுறமருட் சோண சைலனே கைலைநாயகனே. (௭௧)

அந்தரி குமரி யஞ்சலி கௌரி யம்பிகை மனோன்மணி மதங்கி, சுந்தரி யுமையுன் னொருமுலை யெனநின் றுனைவிழை வாழ்த்துமா றருளாய், வந்தரி சுருதி மருங்கினிற் பாட வயங்குதும் புருவுநா ரதனுந், தந்திரி யிசையாழ் பாடுறுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௭௨

நீக்குறு மயலு நிலைத்தபே ரறிவு நின்றிரு வடிமலர்க் கன்பு, மாக்குறு மனமு முடையமெய்த் தொண்டர் கணத்தினு ளென்னை வைத்தருளாய், தேக்குறு மிருவிற் கன்னல்காட் டவேபோர்த் தென்றல்வந் தசைதொறு மெல்லத், தாக்குறு காந்த ளெப்பலர் சோண சைலனே கைலைநா யகனே. (௭௩)

பவமிலே மினியா மென்றிற மாந்து பயமற விருந்திடப் பத்தி, நவமிலே மடியே மென்செய்வா ளிருந்து நாளினை வறிதொழிக்கின்றேம், மவமிலே மிமையா விழியினாற் காண்கை யாலலங் கொள்வடி விலத்தோய், தவமிலே மெனவான் சுரர்தொழுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௭௪)

கண்களிற் பரிந்து கண்டெவப் பனவே கைகளிற் றொழுபவே செவிகள், பண்களிற் புகழும் புகழ்ச்சிகேட் பனவே பதகினை வணம்புரி வனவே, வெண்குபுற் றிடப்ப வெழுமணி கரவா விருந்துசென் றிருள்கவர் வனபோற், றண்கதிர்க் கற்றை கான்றிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௭௫

கிணைத்திகழ் வடிவேற் காளையே யென்றி சேரிழை யவர்வினை ந் திடுவோர், குணந்திரி தனிரின் மடியவுங் கண்டு கொடியனேன் வாழ்வுவந் திருந்தேன், மணந்திகழ் மகளிர் சிலட்டுபொடு மைந்த ர்கழ றவக்கிட வலம்போய்த், தணைத்திடு மயத் தறிந்துகாண் சோண சைலனே கைலைநா யகனே. (௭௬

மாந்தளிர் கவற்று மணிச்சிலம் படிகள் வடுவகிர் பொருவும்வ ணெங்கண், காந்தளி னிமைக்கு மங்கையென் றவலக் கனனியப் புகழ்வினை யறுமோ, பூந்திரை கருட்டுங் கடல்கடை குரோ ன் பொறியர வின்றியா தவர்க்குச், சாந்துய ரகற்று மருந்தரு சோண சைலனே கைலைநா யகனே. (௭

சிந்தனை கலங்கி யிணைவிழி யிரண்டு செவிகளுஞ் செவிடெப டைம்மே, லுந்திட வுயிர்போம் பொழுதுநின் வடிவமுனங்கொளு

பரிசெனக் கருளாய், மந்தர சைலந் தருவிடங் களைந்து வைத்திடத் தினிலிம சைலந், தந்திடு மமுதை வைத்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௭௮)

நயங்கொளு மலரா னின்றிரு வடியை நாடொறு முயிருணுங் கூற்றம், பயங்கொள வகல தருச்சனை புரிந்து பரகதி யடையுநா ளுளதோ, வயங்கொளும் விடயப் பெரும்பகை கடந்து வானநாடா ளொடிட மதிப்போர், சயங்கொள வடைதற் காரணமாஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௭௯)

பிரம்பொரு கங்கொண் டடிப்பநற் றீசர் பெருங்கல்வீழ் பாசியினிமையோர், சிரம்பொர வொதுங்கி நெருங்குநின் னவையிற் றீயனே னணைபுநா ளுளதோ, வரம்பொர வகன்ற விலங்கிலை நெடுவே லமர்ந்தசட் டிலைக ளினைக்குருஞ், சாம்பொர விருந்து விளங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௮௦)

காமரை முனிந்த முனிவரர் புகுமெய்க் கதியிடைப் புகவிடுத் திடினும், பாமர னிவனென் றிருளினுய்ப் பினுநின் பதமலரன்றி வேறுளதோ, வாமலர் பொருந்து முலகுள குவட்டு மலைகள்போ லாதுறு முலையா, டாமரை பொருந்து மாதுனன்வாழ் சோண சைலனே கைலைநா யகனே. (௮௧)

தொடுக்கு மாகமங்க ளெலாஞ்சொலைத் தெழுத்துந் துணிந்தநெஞ்சிருக்கையாற் பகைமைப், படைக்கைதா னிருந்து மஞ்சுறு மவர்போற் பகட்டுமோ மறலியை வெருவேன், மடக்குவார் கலாபமயி துயி லெழுந்து மருவலர் வேங்கைமீ தகவுந், தடக்கைவா ரணங்கண் பிளிறிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௮௨)

கிந்தியா தடவ முழுதுநீ றணிய கேயோ தமலனைத் தெழுத்தாஞ், சிந்தியா தழுது மெனைக்கெடுக் கூற்றென் றெய்யுமோ வுரி

கதிலேன் றமியேன், வந்தியா வரவ வன்றிடைக் கண்ட மலர்சிலம்
படியையமண் ணுணிபோலச், சந்தியா தயர வொளிர்த்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. (௮௩)

மங்கையர் பாரக் கொங்கையங் குவட்டு மதர்விழிக் கடலினு
மளகக், கங்குலி னூடுஞ் சென்றவென் மனத்தைக் கதியிடை கட
த்துமா றெளிதோ, செங்கதிர் காலை மாலையுந் தங்கச் சிலம்புள
வெனக்கமேம் பகலிற், றங்குற நீடி நின்றிடுஞ் சோண சைலனே
கைலைநா யகனே. (௮௪)

கண்டிகைக் கலனே கலனென விழைந்து காயமே லணிந்துவெ
ண்ணீற்றுப், புண்டரக் குறிசேர் நுதலொடு நினையான் பூசனை பு
ரியுமா றருளாய், முண்டகச் செழும்பூ வெனவிளக் கெரியு முடிமி
சை முத்துமேற் கட்டித், தண்டிரைக் கங்கை [illegible] சோண
சைலனே கைலைநா யகனே. (௮௫)

நாவினைக் கெழுத்து மந்திர மலரா நவிற்றுவோர் தமையுநீ
யிருப்பப், பாவினங் கொடுபுன் மனிதரைப் புகழும் பாமரர் தமை
யுமென் னொழிவேன், கோவினம் புரப்பக் குன்றமன் றெடுத்த கு
ன்றமம் பாடகக் குன்றந், தாவினஞ் சிலையென் றெடுத்திடுஞ் சோ
ண சைலனே கைலைநா யகனே. (௮௬)

இங்கனுங் கதிரு மிலங்கியமானுந் திகழ்பெரும் பூதமோரைந்
துங், கங்குலும் பகலுங் கடந்தநின் வடிவங் கண்டெனக் களிக்குமா
றுளதோ, பொங்குருங் குலியக் கலயவா ரழலிற் புகையெனச் ச
ரோருகவல்லி, தங்குவண் டெழூஉம் பொய்கைசூழ் சோண சைல
னே கைலைநா யகனே. (௮௭)

பொறியெனப் புலன்க ளெனக்கரணங்கள் பூதங்களென வினை
தடங்க, வறியெனத் தமியேற் கொருமொழி யுதவி யுருவினைக் குறும்
பறவெறிவாய், செறிமுலைக் கரியுஞ் சிற்றிடை யரியுஞ் சேரமா தனை

நினைக் கட்டுந், தறியெனக் கவின்பெற் றிலங்குறுஞ் சோணசைல
னே கைலைநா யகனே. (௮௮)

பொன்னிடத் தடைந்த மணியென வடைந்து புண்ணியர்க்
கருளுநின் பதங்க, ளென்னிடத் திரும்பி னடைந்தசெம் மணிபோ
லெய்திய தம்மவோ வியப்பே, மன்னிடக் கடலு ளடங்கும் வெற்
பன்றி மலைதரு மருட்பெருங் கடலைத், தன்னிடத் தடக்கு மலை
யெனுஞ் சோணசைலனே கைலைநா யகனே. (௮௯)

கைவிடு நேயத் தவர்க்கறி வரிய தெய்வவ னெஞ்சகன் றிடாத,
தேங்கிய சோதி மன்றுளா டிவென் சிந்தையு ளடப்ப நின்பதங்
க, ளோங்கிய மூங்கிற் றலைமிசை மலர்வீழ்த் தழுமணி புரியிருள்
மருவித், தாங்கிய வால வட்டநேர் சோண சைலனே கைலைநா
யகனே. (௯௦)

ஊழுபகம் புல்லும் புனலுமெவ் விடத்து மிருந்திட நினைந்த
வவ்விடத்தே, விழைவொடு வந்து தோன்றிநீ யிருப்ப வீணின்மானு
டர் பிறந்துழல்வார், மொழிதருகருணை மலையெனும் பெயரன்மொ
ழிபொரீஇ வேற்றுமைத் தொகையைத், தழுவுற நின்று வளர்ந்தி
டுஞ்சோணசைலனே கைலைநாயகனே. (௯௧)

வேணவா வகன்று நின்றிரு வடியின் மெய்ம்மையன் படைந்து
பொய்ப்பிறவி, காணுவா ரினங்கண் டிரம்படு தூய ஞானநாட்டம்
பெற வருளாய், சேணுலா மதியந் தவழ்பெருங் குடுமிச் சிலம்புகள்
சிறிதுரும்பாகத், தாணுவாயெழுந்து வளர்ந்திடுஞ் சோண சைல
னே கைலைநாயகனே. (௯௨)

நின்னையே நோக்கி விடாதகட் புலனு நின்னையே நினைக்கு
நெஞ்சமு, நின்னையே துதிக்கு நாவுமென் றருளி நின்றிருவடியின்
வைத் தருள்வாய், தன்னையே நினைக்குச் சகமெலாங் காட்டுந் த
ளிபோ டிகலியே யினர்க்குந், தன்னையே காட்டு மலையெனுஞ்
சோணசைலனே கைலைநாயகனே. (௯௩)

மின்வணங் கவருஞ் செஞ்சடா டவியும் விளங்கொளி நாற்பும்வானுலக, மன்வணங் குழுநின் பதாம்புய மலரு மணைந்தடியிருக்குநா ளுளதோ, பொன்வணம் புரியுங் காகமொன் றினைப் பொற்பொருப்பென வடைபொரு ளனைத்துந், தன்வணம் புரியும் பொருப்பெனுஞ் சோணசைலனே கைலைநாயகனே. (௯௪)

குருமணி மகுடம் புனைந்தல காளுங் கொற்றவ ராதலினென்கட், கருமணி யெனுநின் றொண்டர்குற் றேவல் கருதியாட்பட்டிடலினிதே, பெருமணி விசும்பி னுச்சியி னெழுந்த பிள்ளையங்கதிரெனவிரவத், தருமணி யொளிவெண் மதியுறுஞ் சோணசைலனே கைலைநாயகனே. (௯௫)

சிம்புளாய்மடங்க லுறழ்வலி கவர்ந்த திறலுமப் பராஞ்சுடர்விதலு, மம்புயா தனத்தன் முடிகளைந்திட்ட வடலுமேத் தினர்க்கிடருளதோ, வும்பர்மாமதியி லங்கையிலிருந்த வுழைகுதித் திருப்பவாரழல்வான், றம்பமாயெழுந்து நின்றிடுஞ் சோணசைலனே கைலைநாயகனே. (௯௬)

அஞ்சலென் றவலக் கொடியனேன் றனைநின் னடியரிற் கூட்டுவலதி, னஞ்சமுண் டிருண்ட கண்டமென் றனது கற்களமிகழ்பவருளரோ, வஞ்சமைங் *கரன்கொண் டிளவலோ டிகலி வலங்கொள்வா தின்னும்வந் துறினுந், தஞ்சமென் றிடாது நின்றிடுஞ் சோணசைலனே கைலைநாயகனே. (௯௭)

அணிந்திடுகலனுஞ் சாந்துமொண் டுகிலு மரிவையர்போகமும் பெறுவான், றுணிந்திடு மனமென் றனைப்பொருளாகத் துணியுமோ வறிந்திலேன் றமியேன், பணிந்திடு மயன்மால் பெருமைகளனைத்தும் பறவைகொண் டெழுதலாய் முடிந்து, தணிந்திட நிமிர்ந்து நின்றிடுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௯௮)

பூவுறுதடமு மதியுறு விசும்பும் பூணுறு முறுப்புநின் றலகாள், கோவுறுநகரு மென்னவென் மனநின் குரைகழன் மருவுநாளுளதோ, வேவுது மினைசெய் பவர்கொள மாக்தாங் கோகலக் குளவுங் கினர்க்குந், தாவுறமுயர்வீ டளித்தருள் சோணசைலனே கைலைநாயகனே. (௯௯)

சீரணிபுகழுங் கல்வியுஞ்சிறந்த செல்வமு மில்லில்வாழ் பவர்க்கும், போரணி கலமென் புதல்வருங் கதியும் பெறத்துதிப் பவர்க்கருள்பவனீ, கோரணிகதியை மறந்தவர்கண்டு நினைந்துற மிக்கபேரருளாற், றூரணி முழுதுந் தோன்றிடுஞ் சோணசைலனே கைலைநாயகனே. (௧௦௦)

சிறப்புப்பாயிரம்.

[illegible] சயிலனுக்கென் ஞான்றும்
பூணுமாலை புனைந்தன[illegible]மாறைப்
பவப்புணரி நீந்தியிடப் பாரதிநூல் செய்த
சிவப்பிரகா சையன்றன் றேர்ந்து.

சோணசைலமாலை

முற்றிற்று.

சிவமயம்.

நமசிவாயசுவாமிகள்
அருணாசலேசுரர்பேரில்
அருளிச்செய்த

சாரப்பிரபந்தம்.

காப்பு.

எக்கணக்கிற் கெட்டாத வின்பக் கடலளிக்கு
முக்கணக்க னீன்றெடுத்த முன்னவன்ற — னிக்கணக்கிற்
சந்தமிகுஞ் சாரப் பிரபந்தந் தான்செ
கந்தமலர்ப் பாதமே கா

ஆசிரிய விருத்தம்.

அரக்காதிருவணாமலைதேவனேசர னார்பினாய்வந்திருந்தவன், அடிகளருளுருவாஞ் சிவானந்த தேசிகற் கடிமையா நமசிவாயன், மருவியேநமதிடம் பரிவுடன்விரவிவீ வந்தகாரிய மேதுகாண், மாதேவனையுமது பேரிலன்பாய்த்தமிழ் மாலைபாடிக்கொணர்ந்தேன், பெருமையா யெதுவேண்டி நம்மீதிலதனைநீர் பேசியேசொன்னவெக்நீர், பிஞ்சகாசம்சார சாகரத்தினில்வைத்த பிரபஞ்ச வாழ்க்கைதனிலே, மரபென் றுமகவென் று மனைவியென் றும் பெரிய வாதனையினால்விசனமாய், வறுமையுதிரவும் வதுவையது செய்யவும் வந்தனனுமைநாடியே. (க)

எனைநாடிவந்ததா லியாதென்ன செய்குவோ மெமக்கொருவர் செய்வதன்றி, எங்கையிலியாதுள தனக்கொன் றுசொல்கிறோ மெமக்கடிமை யானபடியால், உனைநாடுமன்பர்களுக்குந்தமர்களெல்லவர்களுதவிசெய் கின்றபேர்கள், உலகத்திலேசெல்வ தர்மிஷ்டியனைவோர்க ளுன்கோணியுமவர்மேல், தனையினியகவிசெய்து செல்லையாதுன் றனக் குதவிதப்பாதுசெய்வார், தற்பரகல்லது நீர்சொன்ன

வாக்கெனது சாண்வயிறதைவளர்க்க, வினைநாடுமுலகத்தினாரை வந்தனைசெய்து வேண்டவேகைகாட்டினீர், வீணல்லவோவெனது வெண்ணமதுநிறைவேற வேண்டியதுசெயல்வேண்டுமே. (உ)

அலட்டவேண்டாம்புலவ ரேயெம்மையுள்ளபடி யாய்ந்தறியவீணவேனாநீ, அன்னையுந்தந்தையு மில்லாததனியனா னம்மைவிடுமொருவினிமைய, மலைக்கர்வலன்மகள் பெண்டெனக்கவள்தந்த மைந்தரிருவர்களின்மூத்த, மைந்தனுக்கின்னமோர் கலியாணமிலைபெருவயிற்றினானிளவனுக்கு, கலக்காமலிந்திரன் கன்னிகாதானமாய் நயப்புடன்செய்துவித்தான், நாணறக்குறமா தினைத்திருடிபலபேர் கைக்கவேகூடவைத்தான், தலைக்கோமுழுக்கெண்ணெய் யில்லாமல்மயிரெலாஞ் சடைபிடித்ததுபொறுமல், தண்ணீருமதியமுமெக்கோமுஞ்சுமை தான்வைத்தனம்புலவரே. (உ)

உடுக்கின்றவஸ்திரங் கானகத்தினின்மேவு முழுவையின்றோலேதாகும், உடற்குளிர்பொறுமலே புகர்முகத்தானையை யுரித்துமேல்போர்த்திநேன்காண், தொடுக்கின்றபூஷணஞ் சர்ப்பங்கள்தவன்றி தொங்கலோதலைகள்சரமாஞ், சொந்தமொருகாசுக்குமவகாசமில்லைகாண் தொகையாயுனக்குரைத்தோம், கடக்கின்றசெய்திதா னென்னென்றுசொல்லுவோ காலவரோடொப்பில்லைகாண், நாணவேகாளியுட னாடியொருகாலுமோ காணறவாதக்காலதால், எடுக்கின்றமாடொன்று மாதொருன் றுலகையினி லிதன்றிவேறில்லையாலும், இலகுமழுவேக்கிரேனு நால்வரிதையறிவார்க ளின்னுமோபேன்புலவரே. (ச)

கொட்டென் கூடையுங் கொண்டுதான்பிட்டிடுக் கூலிக்குமண்சுமந்தோம், கூசாமலேதலையில் விறகெடுத்தோமன்றி கொலைவேடனெச்சிலுமுண்டோம், தட்டுதலையோடுகொண் டில்லங்கடோறுமே தனியாயிரந்துண்டனம், சாண்வயிறுதனைவளர்க் கப்பாடுபட்டதாக் கலிப்புடன்விடத்தையுண்டோம், கட்டழகியுமையவள் கழுத்தி

ந்நடுத்தனன் காயமதுநிலைபெற்றனக், கருதுமென்னிர்வாகமிப்படியிருக்கநீர் காசுக்குவாதாடுநீர், சிட்டர்தொழுமீசனின் பெருமையறியாமலுன் திருச்சமுகமுன்வருவனோ, இகழுமின்பெருமையை நீயறிந்ததுமென்ன செப்புவன்கேளீசனே. (௫)

மேலானவம்பொன்மக மேருகிரியுந்தவன - வெள்ளிமலையுன்றன் வீடு, விரும்புமுன் சம்பந்த மிமயகிரியும்பொன்னூர் மின்னுடைமையாயணிந்த, வாலானவரவின் சிரோமணிக்கிந்தகல் வையகம்விலையொக்குமோ, மருவுமுன்மனைவிதான் முப்பத்திரண்டறம் வளர்த்திடுமுலோகசனனி, சூலாகியவள்பெற்ற மூத்தவன்பேர்சொன்னாற் றுன்பங்கள்விட்டோடுமே, தூயமின்வல்லபை மணாளனுமிளையவன் சுரர்குடிகனிலைகொள்ளவே, மாலானவசுரரை வதைத்ததாலிந்திரன் மகளைவதுவைப்புரிந்தான், வள்ளியைச்சிறையெடுத் தாணவன்மகிமையை வாயினாற்பேசவெளிதோ. (௬)

பிரமனைத்தலையறுத் தங்கரத்தேந்தியேபிர்மத்திவந்ததென்றே, பேரிட்டிரந்தநீர் வேடமதுகாட்டினீர் பேருலகமதுவெண்ணவே, பரவையிற்கவிட முண்டமருய்யப் பகிர்ந்தமிர்தமேயளித்தீர், பலவெலும்புஞ்சிரமு மாலையாயுற்றதும் பார்க்கிலுன்வெற்றியலவோ, வுரிபுலியினுடையுஞ் செஞ்சடாதாரமும் யோகபாவனையல்லவோ, வோங்கிவருகாளியுடன் வாதாடினீரவ ளூறுவலியடங்கவேதான், இருமைபெறுசதுர்வேத மதிரூபமாகவேயிடபமாயேறினீர்காணீசனேயெனிந்த வேழ்மையாய்ப்பேசுநீரேனென்றனக்காகவே. (௭)

பாதவிக்கின்றநரை பிட்டுவாணிச்சிதன் பத்திக்குமண்சுமந்தீர், பாணனுக்காகவே விறகெடுத்தீர்தலையில் பரிவுடன்கண்ணப்பனார் அருமையாய்ருசிபார்த் துகந்திட்டமாமிச மகமகிழ்ந்தொத்துகொண்டீர், ஒருவருக்கொப்பில்லைநாமென்பதேவர்களுமுன்றனுக்கொப்பாவரோ, திருவிளையாட்டதாயாடுநீரிதுவெலாந் தேவரீரிதமகி

தமாய்ச், சிறுமையும்பெருமையு முணரோசொல்வாயெங்கள் திவ்யசிவசாம்பமூர்த்தி, அருமையாலென்னு லறிந்ததையுரைத்தன னய்யனேயிப்பவன்றனருளினாலென்றனைக் குவகையாயினிமேலு மனுகூலமதுசெய்வீரே. (௮)

அகிலகாரணனுநீ யெள்ளுக்குளெண்ணெய்போ லனேகவிருக்குணர்வுநீ, யகமுநீபுரமுநீ யாதிநடுவீறுநீ யகண்டபரிபூரணனுநீ, பீசமுநீபரமுநீ வருசராசரமுநீ யின்பமுறுசாயுச்சிய, எதுநீசதுர்வேத முடிவுநீவடிவுநீ யிமையகிரியுதவுதான, நசைவதனிபாகனீ யமரருக்கரிதாகி னம்பினவருக்கெளியனீ, நன்குசிற்சபைதனிற் கலகலெனநடனமிடு நகிநாயகச்சொரூபனீ, இகழுமெண்சித்திநீ முத்திதரவல்லனீ திவ்யஞானக்கடவுளீ, திருவுளமகிழ்ந்துநல் லடியவர்க்கருள்செயுந் திருவண்ணாமலைத்தேவனே. (௯)

வந்திடும்புலவரே யிருமிரும்முன்றனது மனபாவசம்பார்த்தனம், மருவுகப்பெருமையை யெடுத்துரைத்தீரந்த வாய்மையான்மிக மகிழ்ந்தோம், உந்தன்வாற்சல்லியமு மார்க்கமும்பெருமையு முண்மைதருபுலமையெல்லாம், உலகத்திலூடறிவார்களோவென்றுதானுன்னிடம்பால்வந்தனை, அந்தவறுமைக்குநாஞ் செய்யவேவேண்டுநீ ராய்ந்தறியுமாகமத்தி, லவனவன்பத்திக்கு முண்மைக்குமுயர்கதி யளிப்பமென்றுரைசெய்வதால், சொந்தமாயுன்றனுக்கெந்தவிதமாகிலுந் தொண்டுபெறுமென்பர்முன்பாய்த், தூயகற்பொருடனைத் தருவிக்கிறோமிகச் சுதந்தரமகிழ்ந்துகொள்வே. (௧0)

ஆரென்றுகேட்பையா லாயிரவர்தங்களி லச்சரப்பாக்கவைசிய, ரவர்நமக்கன்புளோ ரறுநூறுதலைகட்டி லுளவருங்கூடுவார்கள், நீர்கொண்டகும்பலிற் கண்டுநீர்நமதுபேர் செப்பியேவினவல்செய்தால், செம்மையாயுனதுசந் தோஷமாயுன்றற்கு செல்லுமென்றுந் தருவர்காண், பாரென்னபுலவரே யல்லாதுதேவரீர் பயில்வதுக்கெ

ன்சொல்லுவேன், பலர்களும்மொருசித்தமாகிசந்தோஷமாய்ப் பார்ப்பரோவென்சொல்வரோ, சார்நின்றவேற்கென்ன திருமுகந்தருகிறேஞ் சதிருடன்கொண்டுபோய்நீ, சமுகத்தில்வைப்பயேல் பார்த்தவுடனே தருவர் சந்தேகமில்லையிதுவே. (௧௧)

பதினொன்றாதவழி சென்றுசிலரைப்பற்றி பரிவோடுமுமதிடத்தே, பாக்கியம்பெறுதற்கு வந்தனனென்றுரை பகர்வதையறிந்தேனால், இதினாலுமென்றனுக் கனுமானமாகியே யிதயத்திடங்கொளாமல், ஈண்ணுதேயென்செய்வே னெந்தையாமீசனே யிதற்குநீர் சொல்லுமையா, வித்தியாகலைகள் கற்றறிந்தாலுமுன் விவேகத்தையென்சொல்லுவேன், விளங்குந்திருமுகத் தினினோடுமுன்னையும் விழியினாற்கண்டபோதே, மதியாதமூடரும் பொருளாசையுற்றரும் மதியதும்விளங்கிடல்ல, யார்க்காயொருமித் தனக்குதவிசெய்வார்கள் மனமகிழ்ந்தினிதுகொள்ளே. (௧௨)

ஸ்ரீமதுதேவதேவன்கைலைநாயகன் சிவாத்மபரிபூரணன், திகழுற்றவுலகினிற் கொருகர்த்தனாகிய திருவண்ணாமலையீசனார், சாமவேதங்கண்முதல் பாராயணஞ்செயுஞ் சட்டநாதையர்வடிவாய், தரணிதனில்வந்துநா மடிமையதுகொண்டமிகு தயவுள்ளவடியார்களும் நாமமிடுகின்றதம் மைத்துணைந்தடிமையாய் நாடோறும்வாழுகின்றனன்மையடியார்களும் யாவருங்காணவே நயந்துதாறுன்மையதுவாய், யாமிகுதிபத்தரு ளன்புள்ளபத்தரென் றகமகிழ்வுகொண்டெங்களுக், கன்புடன்மடலிற் சங்கரையரெழுதிய வருட்டிருமுகங்காணிரே. (௧௩)

சிரஞ்சீவிபூவைசிய நாட்டாண்மைசெய்யுஞ் சிரோமணிசபாபதிக்கும், தேர்ந்தசிவகணபதிக் கும்புகல்தவாளனுஞ் சீர்த்திருமரப்பனுக்கும், தருஞ்சொலருணாசலச் செல்வனுக்கும்புகழ்ச் சரவணபவன்றனுக்கும், தகைமைசிவசங்கர னமச்சிவாயன்முருக னுக்குமுயர்தனவைசியருள், வருஞ்செயலுணர்ந்தசக் கிரவர்த்திசெட்டிசொக்கப்பசெட்டிக்கும்வணிக, மன்னுசின்னுசெட்டி யுங்கரப்பசெட்டி மாரிசெட்டிக்கும் வளமைப், பெரும்புகழ்படைத்தகோ வைசியருள்ராமசாமிப்பிள்ளை பெரியகிருஷ்ணபிள்ளை, முதலாயினோர்க்கும் பாக்கியசம்பத்து மேன்மேலுமினிபெருகவே. (௧௪)

இ[illegible]துவெந்தமக் கடிமையாகியபுலவனெழினமசிவாயனென்பேர், னை[illegible]கடி[illegible]க்கிசற் றமிழ்மாலைபாடிவந் தேதியாகக்கேட்டதா, லப்போதுவுங்களுக் [illegible]ர்வதித்துநா மன்புதிருமுகமெழுதிறோ, மாதலாலாங்கவன் மகிழவேங்[illegible]ரமாடையாபரணமிதக, ளெப்போதும்வாழ்த்தவே யீந்திடுங்கீர்த்திபெற றெண்ணில்காலங்களடியார்க், கினிதாகவந்தவினை வழிபாடுசெய்வதா லெமதுபதமடைகுவீரால், தப்பாதுவிகபர சவுக்கியமனைத்தையு மடைந்துசாயுச்சியத்திற், றருக்கியின்பச்சாகரத்தினிலமுந்திடியே சார்வதாய் வாழ்குவீரே. (௧௫)

அருணாசலேசுரர்பேரில்

சாரப்பிரபந்தம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அண்ணாமலைச் சதகம்

விநாயகர் காப்பு.

அண்டமெலாந் தம்பரவு மண்ணா மலைச்சதக-
மொண்டமிழாற் பேசவே யுவப்ப-கொண்டாடப்பனிக்
கொன்னை வரக்குருநல் யானை திறைக் கொண்டருண்மூக்
கண்ண வரத்தான் காப்பு.

நூற்பெயர்.

பன்னுதிரு வண்ணா மலைச்சதக மென்றும்பேர்
பின்னுமொரு நாமம் பெறவாம்-இக்கிலத்திற்
றந்து புகழ்வசந்த ராயச் சதகமென்று
மென்றுந் துதிப்பதா மே.

கடவுள் வாழ்த்து.

கார்கொண்ட திருமேனிச் செந்தாமரைக்கண்ணன் கமலையத்தென்னைன் - காணரியபேரொளிச் சுடராகியண்டகடாக ருவின்ற, பேர்கொண்ட திருவுருவ மருவுருவமாகியுல கெங்கும் வியாபியாகி - பெல்லாவுருக்கொடா முயிராகியவ்வுயிர்க் கின்ப வானந்தமாகிப், பார்கொண்ட துணைவர் குமாரமெய்தியாத பரசத்தி பீடமுமாகிப் - பஞ்சகிருத்தியமும் புரிந்தருள [illegible] பலகோ சகலவிதமே, யார்கொண்ட மலைவளச் சிவபுரியரசமெச கூ பெறு வசந்தராயர் - அன்னுவினுற்றுதிசெ யுண்ணாமுலைக்கு வண்ணாமலைத்தேவனே.

திருக்கோவலூர்த்தலப்பெருமை.

கருணாகரக்குக முனிக்காகவேழுனம் கைலாயகிரியின் றன் - கைவேல்விக்கவல் துன்றலாலேதிருக் கைலிங்கே

மெய், பொருணுபனுவே தரித்தலமெனவையார் புகலும்வெண்பா விஞக்காய்ப் - பொங்குபானெய்வந்த பெண்ணைநதிசூழ்தலம் பொன்மாரிபொழியுந்தலம், வருமாவருட்பெரிய நாயகியும்வீரட்ட மாதேவர்வாழுந்தலம் - மாதவக்குகமுனி மகந்தனிற்றெய்வீக மன்னனவதாரத்தலம், அருணைசலக்கிருஷ்ண தாண்டவவசந்தவா ணுதகை வசந்தராயர் - அன்னுவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௨)

அபிஷேகவிதிகூறியது.

சுத்தசலமபிடேக கல்லெண்ணெயரிசிமாத் தூண்மஞ்சளெல்லிமுள்ளி - தூபஞ்சகெனவியமோ டாவினெய்பாற்றயிர் சுவையான பஞ்சாமிர்தம், உத்தபல மாக்கதலி மாதளையுமெலுமிச்சை யோங்குதமரத்தைநார்த்தை - யொண்கனிச்சுளைகளுஞ் சித்தேன் றிரட்டொ லுயர்கருப்பஞ்சாறுடன், மெத்துமிளநீரன்னம் வில்வ நீர்தபனீர் மிளிர்பொன்னிரத்தோதகம் - மென்பசுங்கர்ப்பூர நன்புனுகுசந்தனம் விளங்குதாராபிடேகம், அத்தகைத்தவைய வபிஷேகமேபுரிந் தருள்பெறு வசந்தராயர் - அன்னுவினுற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௩)

அருள்பெறுமாறெங்ஙனெனவிளக்கல்.

தருமலரெடுத்துனைப் பூசைபுரிவோமெனிற் றண்மலர்த்தேனருந்தச் - சைமயக்கெரிந்துமுகை யவிழ்கின்றபோதவிழ் தனிவண்டிறு லெச்சிலாம், விரிபுனலெடுத்துனைக் காட்டுவோமெனின் மேயுமண்டூகமாமை - மீனத்தையெண்டிருக் கலவலாலந்த நீர் மிகுதியுந்தானெச்சிலாந், தெரிமறையிருக்கானு மூவர்தோத்திர திருவாசகத்துதிகளைச் - செப்பமெனிலோ துதிகள் செய்நாக்கு வெச்சிலென் செய்குவனெக்கானவனே, அருள்பரமதேசிகக் குகைநமசிவாயர் திருவருள்பெறு வசந்தராயர் - அன்னுவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௪)

திருவண்ணாமலைத் தீர்த்தத்தொகைவகைகூறியது.

இந்திரன்தீர்த்தமோ டக்கினித்தீர்த்தமா மெமதீர்த்தநிருதி தீர்த்த - மியல்வருணதீர்த்தமுயர் வாயுதீர்த்தம்வடக் கெழிலாங்குபேரதீர்த்தம், நந்தலறுமீசானி யன்தீர்த்தமிறைவியுண் ணாமுலைத் தீர்த்தமரிய - நரசிங்க தீர்த்தமா ணிக்கவாசகதீர்த்த நாடரும்பிரமதீர்த்த, மோங்குசிவதீர்த்தமரி யைந்துசக்கரதீர்த்த மொய்ப்பெருங் கட்கதீர்த்த - மூன்றாற்றின்மேலுமறு பதுதீர்த்தமேவுதல மொழியினின்னருணாசலம், ஐந்துபூதத்தலத் தொருதலமிதென்பர்கா ணருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக் குரிய வண்ணாமலைத்தேவனே. (௫)

மூவர்பாடல்பெற்ற சிவஸ்தலமிருக்குமிடங்கூறியது.

காவிரியின்வடகரையி லறுபத்துமூன்றுபதி காண்டருந்தென்கரையினிற் - கருதுமொருநூறுமிரு பத்தேழெனும்பதி கணிக்கிலீழத்திரண்டு, கோவியற்பாண்டிபதி நான்குமலைநாடொன்று கொங்கிலேழ் நடுநாட்டினிற் - கூறுமிருபத்திரண் டாந்தொண்டைநாட்டிற் குறிக்கிலெண்ணான்குதலமாம், பூவிரவு துளுவத்திலொன்றுவடதிசையைத்துபுகலிலிருநூறுமெழுபான் - புனருமோகாறுதல மூவர்பாடியதலம் புண்ணியத்தலமென்பர்காண், ஆவிதொருமின்றுணை வளித்திடும்பரமனே யருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. ()

மாசந்தோறுமபிஷேகவகை கூறியது.

வருடாதி சித்திரைத் திங்கள்பூரணைகாண் மருக்கொழுந் தபிடேகமாம் - வைகாசிசந்தனந் தானியில்பலாப்பழமு மாங்கனியுங்கதலிக்கனி, கருதாடிசர்க்கரை நலாவணியிலதிரசங் காணும்புரட்டாசியிற் - காச்சியதிரட்பா லைப்பசிக்கன்னமாங் கார்த்திகைதீபார்ச்சனை, திருமார்கழிக்குநெய் தைத்தேன் குடங்கிருதஞ்சேர்த்தகம் பளமீன்மதிக்-நீர்தயிர்பரமனுக் காட்டல்விதிபூரணைத் திதிதோறுமாசபூசை, யரிதாயறிந்தனைக் கபிஷேகமதுபுரிந் தருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௭)

விபூதி தரிக்கும் விதி.

சித்தரும்வைதிக ராதிமறையோர்கட்கு நீர்கொடுகுழைத்துநீற்றை - நெற்றியிற்பன்னிரண் டங்குலத்தளவதா நேராய்த்தரித்தனெறியாஞ், சித்திரமிழைத்தசிங் காதனைக்கரசுபுரி செங்கைவேலரசருக்குத் - திருநீற்றையொன்பதங் குலநீளமாநுதற் சேர்த்தணிதலே விதியதாஞ், சுத்தவைசியருக்கு நாலிரண்டங்குலஞ் சூத்திரற்கேழங்குலந் - தோகையர்தமக்குநாலங்குலத்தளவெனச் சொன்னதேமகுடாகமம், அத்ததேவாங்குலந் திரிசூலவடிவணிதலருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௮)

பிராமணர் சட்கருமாதிவிதி கூறியது.

[illegible]காரணன் மற்றொருவருக்கோதி வித்தலும்யாகஞ்செயல் - விதியோடுமற்றொருவ ருக்குயாகஞ்செய் வித்தலோடுதலேற்றல், ஓதுமிவைசட்கரும மாகவன்னியமொன் றுரைத்தகாருகபத்தியம் - ஒன்றுசடர்தெக்ஷிணாக் கினியொன்றதிவைமூன்றுமூறழுந்திரேதாக்கினி, ஓதமறுமியல்பிரம சாரிகிரகத்தனொர்ந்தவானப்பிரத்தன் - கேடில்சந்நியாசியிவை யாச்சிரமநான்கதாங் கீதவேதங்கணான்காம், ஆதிவருணர்க்கென வியாசமுனிசெப்தவிதி யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௯)

அருக்கியங்கொடுக்கும் காலபலன் கூறியது.

இரவிலோரையைந்து கடிகையதுவுஷக்கால மேத்துவான்மீனிணங்க - ளெங்கும்விளங்குமக் காலையிலருக்கியமிறைத்திடுதல் பூரணபலன், மருவுமிருபானெழு கன்னலருணோதயம் வானிலகுதாரகையெலா, மழுங்கியுமழுங்கா திருக்கவர்க்கியமீதன் மத்திமப்பல

னாகுமாம், உரைசெயிருபரனெட்டி லின்னுதயமுடுவொளி யொழிந்தருக்கியமதமமாமுதயமேலர்க்கியம் வந்திமைதுன்பல னுரைக்கு மறையோர்க் கென்பர்காண், அருணைகிரிநாதர்புக ழியிலவன்றனை யே யருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௪௦)

அஷ்டவிவாகங்களில் பிராமணர்க் கிவையென்பதும் பிராமணர்க் கேற்றிய கருமவிதியுங் கூறியது.

சுருதபிரமந்தேவ தம்பிராசாபத்தியந் தாணமகிழாருடமாங் கந்திருவமசுராமு மிராக்கதம்பைசாச கலியாணமோரெட்டினிற், பரவுமுதனான்கும் பொருந்துமரனினிசரும் பாதானமாதியான - யதினாறுமாச்சிரம நாட்குசட்கருமமும் பழுகுமுத்தழலும்வேள்வி, யிரவியுதிமாமுன்னு ஷக்காலநீராடி யென்றுநிரிசந்திகால - மிருகையாலர்க்கியம் பூசையௌபாசன மியம்புகாயத்திரிசபம், அரிய நால்வேதாத்தி யயனமறையோர்செய்கை யருள்பெறுவசந்தராயர்- அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே

இருபத்தொரு யாகத்தின்பெயர் கூறியது.

ஓதரியவக்கினிஷ்ட் டோமமத்யாக்கினிட் டோமமக்கிரகாயணி-யுத்தியஞ்சோடசி வாசபேயம்மாக்கினி யோத்திரஞ்சதுர்மாசியங், நிதிலாவத்தோரி யாமமதிராத்திரஞ் செப்புமக்கினியதேயங்- தெரிசபூரணமாச நிருடபசுபந்தஞ் சிராவணிசவுத்ராவணி, மேதகையசத்திரி சிரார்த்தமோட்டகை விளங்குமாக்ராயணமுடன்- மேவுமார்வணமாசு வயசுமிருபத்தொன்றும் வேதநவில்யாகங்களாம், ஆதிவேள்வியில்வந்த வமிசகாசிங்கவே ளருள்பெறுவசந்தராயர் அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே

அரசாளவேண்டுந் தன்மைகூறியது.

மலையரண்காடரண் மதிலரணுநீரரண் மருவுமிக்கன்கரணமும் - மந்திரிகடனகர்த்தர் குடிபடையுமுடையராய் வலியசகாக்கசேனை, நிலையுடையராயெளிய ரெளிதினிற்கண்டுகொள நேரிமைக்கருணையுளராய் - நிலமுழுங்குடிகள்பா லாறிலொருகடமையின்னிதிகொண்டுதன துநாட்டிற், கலகமிடுவோர்களைக் கொலைகளவினோர்களைக் கனதுட்டமிருகங்களைக் - கண்டித்துமனுநூ லறிந்து செங்கோலின்முறை காத்திடுதலரசாட்சிகாண், அலைபுனற்பாண்டிநா டாண்டசொக்கேசனே யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௪௧)

அரசர்கட் குறுதி சுற்றங் கூறல்.

மந்திரியர்கருமாதி கர்ரர்கடைகாப்போர்கண் மருவுநகர்மாக்கள்சுற்ற - மலைபடைத்தலைவரோ டிவுளியேறிடுமறவர் மதயானை வீரரெண்மர், சந்ததமுமரசருக் குறுதுணைவராமியல்பு தவறாதவந்தனனர் - சாந்தமூறுநட்பான ரொடுமடைத்தொழிலர்நோய் தனையரிந்தவிழ்தமீயும், புந்தியின்மருத்துவர் கலைஞருநிமித்திகப் புலவரிவரைவர்களுமெப் - போதுமரசர்க்குறுதி யாகின்றசுற்றமிது புகலுமனுநீதிகண்டாய், அந்திசந்தியுமுச்சி வந்தனம்பூசைபுரி யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௪௨)

திருமுனைப்பாடி நாட்டுப்பிரமாணங் கூறியது.

மன்னியல்பசும்புரவி யேறியொருக்ணமதில் வலம்வரும்புவியைநீயே - மாமுடிகவித்தாள்க வென்றுமூவேந்தரும் வாய்மலர்ந்தருளவாங்கே, மின்னுநறுகுணக்குக் கடற்கரைவரைக்குமிரு மேவுமவர்ச்சோலைதெற்கு - விளங்குதிருவாத்துறைவ திட்டகுடிவெள்ளாறு மேற்றிசைக்கொல்லிமலையாந், தென்னியல்வடக்குப் புனற்றருக்கடியாறு செப்புமிந் நான்கெல்லையுட் - டிருமுனைப்பாடிநா டதுசதுர்முடிபெற்ற தெய்வீகமன்னனாண்ட, அந்நிலையில்சிங்கபுரி நன்னிலத்தரசுபுரி யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௪௩)

தெய்வீகராசன் மங்களங்கூறியது.

பணிவெள்ளி செம்பொன்ப ரஞ்சிமணிமரகதப் பச்சைசெழ் வைடூரியம் - பவளமாணிக்ககோ மேதகங்கோமளம் பனிமுத்துபுஷ்பராகம், மணியுந்துமாபரண மாலையும்பன்னிருவகைத் தெய்வமலர்மாலையும் - மார்பத்தணிந்துமா முடிசூடியிலகுயசு வான்புரவியூர்ந்துவெளிவி, கனியுள்ளெழுந்துவந் துயர்திருமுனைப்பாடிநாட்டுத்திருக்கோவலூர், கல்லசிங்காசனத்த தெய்வீகராசனு நரசிங்கமுனைமன்னும், அணிவெள்ளிகோத்ரகுல தீபமெனவந்தகிதி யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௧௬)

தெய்வீகராசன் சதுர்முடிசிறப்புக் கூறியது.

பன்னிரண்டலர்மாலை புனைகின்றதிண்புய பராக்ரமத்தெய்வீகநீ - படையெடுத்தமர்புரிய வேண்டாமெனச்சொலிப் பாராளும் வேந்தர்காண, மன்னரோர்மூவரும் மல்லுயுத்தம்மேற்று மல்லாடலுக்கிசைந்து - மற்போர்புரிந்திடற் கிவனொருவனரசிங்க மாவீரனெனவியந்து, தென்னனுஞ்சோழனுஞ்சோழனுந்தந்தமுடி செல்வமுடியென் றுசூட்டத் - திருமுடியுடன்மூன் றுமொருமுடிச்சதுர்முடித் தெய்வீகுலத்துதித்த, அன்னமெனமதிவளருநிபுணகெம்பீரதுரை யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௧௭)

தெய்வீகராசன் பன்னிரண்டுமாலைவகைகூறியது.

கொம்பலர்பசும்பொனேர் கொன்றைபுனைமாதனை கூவிளங்குமிழ்சண்பகங்-குலவுபரிமளவகுள மலர்துளவுகமலமலர் கோங்குசெங்குவளைவாகை, தும்பையார்வேம்புபன் னிருமாலைகொண்டபுய சுந்தரவிலாசமார்பன் - தூயசதுர்முடிமகுட சேகரன்மும்மன்னர் சொந்தசம்பந்தமுடையோன், கம்பமதமுத்தலைக் காரண்டனைச்சயங் கண்டவேல்கொண்டதிறலோன் - சரசினிலையெழு[illegible] வயதாண்டதெய்வீகக் காவலன்மகிமைகண்டாய், அம்புயமலர்ந்த

மூக கெம்பீரராசபுகழருள்பெறு வசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௧௮)

மலையரையன் தெய்வீகனையவதரித்தமை கூறியது.

கரையில்புகழ்கைலையிற் சிவனுமையுமருவுமக் காலமலையரையனோர்நாட் - கடவுளுக்கறிவியா தேபுகப்பரமனக் காதன்மாதலனை நோக்கித், தரையின்மானிடனாச் சனிப்பையென் றுரைசெயத் தாழ்த்தவன்சோர்ந்துநிற்கக்-கருணைத்திருவுமையெனுந் தன்மாமனார்பிதவி சார்வதோவென்றிறைஞ்சி, யுரைசெயச்சாபந் தவிர்க்கவேண்டவெதாலிவ் வுலகத்திலன்னைவயிற்றி-லுதியாமல்வெளியி லுதித்தவனியாள்கவென் றோதிடக்குகமுனிமகந், தனையனெனவந்ததெய்வீககுலோத்துங்கதுரை யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௧௯)

தெய்வீகராசன் மனைவிகள்பெயர்கூறியது.

சேரன்பயந்தபதுமாதியெனும்பெயர்த் தெரிவையும்பாண்டிய[illegible]மனமால்பொருந்துகாஞ் சனமாலையென் னுமொரு தேவியுஞ்சோழனீன்ற, பேரன்புகொண்டசண பகமாலையென்கின்ற பேதையுமணம்புரிந்த - பெண்ணையாற்றங்கரைக் கோவறெய்வீகனருள் பெருமானிலங்குநாவலூரன்றுதித்திருத் தொண்டத்தொகைக்குள்ளுமரபதியருக்கலந்தே-யுற்றலறுபத்துமூ வரிலொருவராகின்ற வோங்குநரசிங்கமுனையர், ஆனவம்மிசகுலகு பேரனிகர்செல்வதுரை யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௨0)

சந்தபுரிராசகுமாரிகளைத்தெய்வீகராசன் மணஞ்செய்தமைகூறியது.

காசிராசன்மகளனப்பிரபைதன்னையுங் காஞ்சிபேரிகதலீன்ற-கமலாதிப்பெணயோத்தியிற்சிகுமன் கன்னியாங்கனகையினையு

ம், மாசறுமவந்தியா புரிவிசாலக்கண் மகிழ்ந்தருள்கலாவதியினை-மன்னுந்துவாரகைச் சந்த்ரவருமன்றரு மடந்தையுற்பலமாலையுந், தேசுவடமதுரையம் போகவிசையாவருமிர் செல்விகமலக்கண்ணியைச்-செல்வபுரிமாயைமா சேனன்பயந்தமதி சேர்ந்தவுற்பலநயனிமை, ஆசையொருவேட்டதெய் விகுலோத்துங்கதுரை யருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௨௧)

அங்கவை சங்கவை கலியாணங்கூறியது.

சிங்களமெனுந்தேய முழுதாளுமன்னன் சிறந்தபேர்பாரிசான்-செய்தவப்பயனாற்பிறந்தநற்குணமான சிறுவியங்கவைசங்கவை, மங்கையர்களிருவரை வளர்த்தெடுத்தௌவையார் மாமுசக்கணையதிகையான்-மணவோலையெழுதிமும் மன்னரைக்கோவலூர் வரவழைத்தருளிடற்குத், தங்கியபனந்தண்ட மரமாகியேபழந் தரநதிப்பெண்ணையெய்யா-ரூன்வரப்பாடியம் பெண்களைத்தெய்விகத் தலைவன்மணம்புரியவே, அங்குதவுமௌவைதொழு மைங்கரன் றந்தையே யருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௨௨)

மெய்ப்பொருணாயனார் சரிதைகூறியது.

செப்பருந்தெய்வீக மன்னவன்றென்னவன் செல்விகாஞ்சனமாலையைத்-திருமணஞ்செய்தவளை மருவிப்பயந்ததொரு சிறுவர்மெய்ப்பொருணாயனார்க், கொப்பறுபசுமபுரவி யூர்ந்துமுன்வட்டம்வந்துற்றநொடிதன்னி-லொத்தவிந்திரதிசையி னத்தங்களெல்லாமூவந்தரசுபுரிகுவாயென், றிப்பெருங்கோவலின் மணிமுடிதரித்தி-விருந்தமெய்ப்பொருணாயனார்-ஈன்றசந்ததியெலா நத்தமன்னவரென் றிருக்கிடுங்குடிகள்கண்டாய், அப்பெரியமெய்ப்பொருணினற்குலம்விளங்கவந் தருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௨௩)

நரசிங்கமுனையர்சரிதைகூறியது.

வந்துலகில்புகழ்கொண்ட தெய்வீகமன்னனெழின் மலையமானறந்தபதுமா-வதிமாதினைப்புணர்ந் தரிதாய்ப்பயந்ததொரு மைந்தனரசிங்கமுனையற், கிந்தநாடெனுந் திருமுனைப்பாடிநாட் டெல்லைக்குண்மலைமன்னனா-யிருவென் றமுடிசூட்டி வைத்தபடியாலதற் கேய்ந்தநரசிங்கமுனையர், சந்ததியில்வந்தவர்கள் மலையமனென் றுபெயர் சாற்றநெடுமேற்றிசையெலாந்-தங்கியபெருங்குடிகளாய்விறைந்துழுதுபயிர் தானிடுஞ்செல்வர்கண்டாய், அந்தநரசிங்கமுனை யரையர்போன்புநெறி யருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௨௪)

குலசேகரநாயனார் சரிதைகூறியது.

சோழன்பயந்தசண்பகமாலைதனையிற் றேய்ந்துதெய்வீகனீன்ற-தோனநல்குலசேகரன் சுருதியையுணர்ந்தன்ன தூய்முனைப்பாடிநாட்டில், வாழுமூன்றினிலொன் று தன்பங்கிலாசித்து வடநாடுபோய்வந்துதன்-மனைவியைவிடுத்தே குடந்தையின்குடபான் மணிச்சோழன்மாளிகைக்கண், ஞாதினெறியாற்று திருமுப்பியைச்சேர்த்ததி லுதித்தவர்கண்மூப்பனாரென்-றுலகெலாஞ்சொல்லவுஞ் சுருதிமன்னென் றுபெய ருண்டாயிருப்பர்கண்டாய், ஆழ்கருபெருஞ்சுனைகள் சூழ்தருஞ்சிம்மபுரி யருள்பெறுவசந்தராயர் – அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௨௫)

மிருகண்டமுனிவனற்காரண்டனவதரித்தமைகூறியது.

[illegible] யலறலைசநகர் நந்தனவனத்திற் கனத்தமிருகண்டுமுனிவன்-கடவுளைப்பூசிக்க மலர்கொண்டுவாவெனக் கடிதினொருபிரமசாரி, விற்கோட்டுமலர்கொயச் செல்காலைவஞ்சனை விபாவரியரக்கிமாதர்-விளையாடலைக்கண்டு தாழ்த்துவரவம்முனி வெகுண்டசுரனாவாயெனச் சொற்கேட்டவ்வசுரனாய்ப் பிறையூர்மலைச்சார

ரேன்றுகாரண்டனோமுனங் - தண்டித்தவாகைவேல் கொண்புயத் தெய்விகத் தோன்றல்புகழ்சொல்லவெளிதோ, அற்கூட்டமணிகண்ட நாதாவிறைதனே யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௬௬)

வேளாளர் பெருமைகூறியது.

தேவாலயந்தோறுந் திருவிழாப்பூசையுஞ் செப்பரியபிரமாலயத் - தெய்வமறையோர்செய்யு நித்தநைமித்தமுந் திரிசந்தியாகங்களும், பூவாளுமன்னர்சது ரங்கபலமுதலான பொக்கசமிகுஞ்செல்வமும், பொன்வெள்ளிதன தானியம்பலசரக்கினாற் பொருளாக்கும்வணிகத்தொழிலும், கோவாதிசோடசமகாதானதருமமுங் குவலயத்தனைவர்க்குமுங் - கோளாறுகொண்டுழும் வேளாளருழுபடைக் கோலதன்பெருமையன்றோ, ஆவாற்கறந்தபா லபிடேகநேயனே யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௬௭)

வைசியர்பெருமைகூறியது.

செம்பொனைக்கல்லினி லுரைத்தாணிவைத்துத் தெளிந்ததன் மாற்றுரைப்பர் - திரளுடைமையடகுவைத் தாலுநிலைகண்டுமேற் செட்டாகநிதிகொடுப்பர், பம்புநவரத்னப் பரீட்சைரதிகண்டாத் பார்த்துவிலையைப்பணிப்பர்-படியுந்தராசுமுன் னலைவிலைதானம் படைத்தநா ணிலைமையுடையார், வம்பவருவர்த்தகமுகாந்திரங்கோடிபொன் னம்புவாரிவரவுசெலவு-நாடோறுநர்வோர் காணயமிலார்க் கணுவு நல்கார்கள்வைசியர்கண்டா, வம்புவியில்வணிகர்ப்பாற் செம்பொன்வனமதன [illegible] ராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௬௮)

நான்குவருணர்க்குறுதொழில்கூறியது.

வேதம்படித்தலொருவர்க்கோதுவித்திடல்வேள்விசெயல்செய்வித்திடல் - வேண்டுதிரத்தலொருவர்க்கீதலாறுதொழில் வேதியர்க்கானவிதியாம், ஓதருன்வேள்விசெய லீதலிவ்வுலகெலாமோம்பல்படைபயிறல்பொருத - லோராறுமரசர்தொழி லோதலியாகஞ்செய்ய லோங்குபொருளீட்டலீதல், கோதனைக்காத்தலே றுழல் வைசியராறுதொழில் குயிலுவத்தொழிலேருழல் - கோகாத்தல்காருகவினைத்தொழிற் பொருளீட்டல்குணமாக வீதலென் றும், ஆதிசூத்திரர்தொழிற் பகரிவீதாறுகா ணருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. ()

சூத்திரமுஞ்சாத்திரமு மவ்வாறெனக் கூறியது.

செப்புமாபஸ்தம்ப சூத்திரமிசைத்திடுந் தியாயியாயனசூத்திரமானசத்தியா ஷாட்சூத்திரமறை தெரிந்திட்டபோதாயனம், ஓபமொக்காத்தியா யனமாசிலாயென மிதோராறுசூத்திரங்-ளோதருவியாகரண சத்தசாத்திரமொன் றுயர்ந்தசோதிடசாத்திரந், தப்பறும்பரதசாத்திரமொன் றுரைப்பருந் தர்க்கசாத்திரமிதொன் று-சாற்றும்வேதாந்த சாத்திரமந்த்ரசாத்திரந் தருசாத்திரங்களாறாம், அப்புலிங்கத்துருவ மாகின்றவண்ணலே யருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௭௦)

நிலையுள்ளபுகழாளரைக்கூறியது.

பாலனஞ்செய்ததேவா ராலயமமைத்துளோர் பகர்சேதுபங்கட்டினோர்-பத்திமணிமண்டபஞ் சேர்சயானம்பொன் பதித்தவாகனமமைத்தோர், சாலையனசத்திரம் விக்கிரகரூபஞ் சமைத்துளோரன்னதானந்-தடமேரியக்ரார நிலமானியங்கோட்டை தண்சாலையுண்டாக்கினோர், வேலையாயோயா தளித்தவர்கள் பொய்சொலாவிரதியர்கள்கவிவாணரான் - மேலாங்கவித்தொங்கல் பெற்றுளோரிவர்களே வீயாதபுகழ்படைத்தோர், ஆலிலைத்துயிலுமா லறியாதபரமனே யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௭௧)

சைவமடங்கூறியது.

சந்தமலரோனுமாலறியாதபரசிவந் தானேயறுதியாகுஞ்-சகலரும்பணிசிவாலயமேயறுதியாஞ் சைவமடமாகுமதுதான், எந்தசிவலிங்கவுருவைத்தீண்டியர்ச்சித் திறைஞ்சிவாழ் மறையோர்கடம்-மில்லமேயுமாதி சைவமடமாமென் றிசைக்குமுயராகமங்கள், சிந்தையன்பாகியே மறவாதுசந்ததஞ் சிவசம்ஸ்காராதிகள்-செய்யுமறைவேதியர்க ளில்லமேகோகணசை திகள்மகாசைவமடமாம், ஐந்துகதியர்ந்தலச் சந்தரச்சைவனே யருள்பெறு வசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௧௨)

பதினாறுபேற்றின்வகைகூறியது.

நதிவளஞ்சாருபூமி விளைகின் றநெல்லாதி நவதானியப்பெருமையு-நற்குணந்தொடுசொன்ன சொற்படிநடந்துவரு நன்மனையுநன்மக்களும், மதிவளந்தருகின்ற குறைவிலாக்கல்வியுடன் மனமிக்கஞானவறிவும்-வளர்கின்றவிளமையொடு மறுவிலாவழகும் மகிழ்ச்சிதருநோயின்மையும், விதிவளந்தருகின்ற வாணாளும்மடங்கிடமுமெய்த்துணிவுமிக்கபுகழும்-வெற்றியுடனல்லூழு மறுசுவைநுகர்ச்சியும் மேலாய்நிறைந்ததனமும், அதிவளந்தருமிதைப் பேறுபதினாறென்பு ரருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௧௩)

பெண்கொள்ளுமுறைகூறியது-

தன்னுடையகோத்திரம லாதநற்கோத்திரத் தகையளாய்ப் பொய்மையிலளாய்த்-தவறிலாதாண்பெண் சகோதரத்தவளாய்த்தருங்குலத்திழிவில்லளா, யிங்கிலமிகழ்ந்தபழி யுடையமாபில்லளா யெந்துவிண்மீன்பறவையா-றெழில்வரைப்பாந்தள்பெய ரில்லளாய்ப் புருடனுக்கிளையளாய் மென்மொழியளாய்ப், பின்னுமுனி வில்லளாய் நன்னயகுணத்தளாய்ப் பெருமிதம் பிணியில்லளாய்ப், பெருமதிமுகத்தளாய்ப் பேசுமிப்பெற்றியுள பேதையைமணஞ்செய்திடி

ல், அன்னையிலுமிக்கபே ரன்புடையளாமென்ப ரருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௧௪)

பெண்ணிலக்கணங்கூறியது.

பாம்பைச்சுருட்டைமயி ரில்லாமனுனிமயிர் பகுவாய்ப்பிளப்பிலாமற்-பற்றுசடையில்லாது கட்டையயிரோடுசெம் பட்டமயிரில்லாமலுங், கொம்புபோற்பறமயிர் குறுகிவாரில்லாதுகொத்தாகமயிரிலாது-கோணலாய்மென்மயிர் புடைகொண்டிலாதுவரிகொடுவெள்ளைமயிரிலாது, செம்பிறையினெற்றிமேற் பாம்பின்படச்சுழிகள் சேராமலந்நெற்றியுஞ், செவியுங்குருகண்களுங் குறுகாமன்மூக்கொன்று திகழ்கிளையில்லாமலும், அம்பழுதிலாவிந்த பெண்ணிலக்கணமென்ப ரருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௧௫)

புருஷலக்ஷணங்கூறியது.

நெற்றியிடையோரைந்து கீற்றுய்மடிப்புறையி னிறைகின்ற வாயுளுண்டாம்-நிரையாகநாலுவரைதோன்றிலெண்பதுவயதிலையாணவாழ்வுமுண்டாம், மற்றுமூக்கீற்று யிருக்கிலறு பான்வருடமட்டினு மகிழ்ச்சியுண்டாம்-மருவுமிருவரைதோன்றி லாயுளைம்பானேகவரைதோன்றி லாயுண்முப்பான், ஒற்றையஞ்சுழிவலம் புரியாய்நெற்றி லையிலொருமையுடனேயிருந்தா-லுலகமுழுதாளுவானெற்றியில் வலம்புரிச் சுழியொன்றிருக்கி லிறையாம், அற்றறந்தெழுசோதி நயனப்பிரகாசனே யருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௧௬)

இ-து.

விழிதோள்கதுப்புமூக் கிருமுழந்தாளோங்குமிகநீண்டிருக்கவேண்டும்-விரன்மயிர்நகந்தோ னெருங்குபல்லிவையைந்து மெதுவாயிருக்கவேண்டும், ஒழியாதுநீறணியு நெற்றியிருதோண்மார்பு மொண்புறங்கைகள்வயிறு-மோதருங்கைம்மூல மாறிடமுயர்ந்தேயிரு

க்கவேண்டுஞ் - செறியுமுன்னங்கைகீ ழூச[illegible]முன்னங்காற் சிறக்கு மூண்ணாக்குநாக்கு, செருக்கடைக்கணுவிர் கூறுயிடனே மூஞ்சைவ்தேயிருக்கவேண்டும், அழிவிலா நூல்சொலும் புருடலட்சணமென்பதருள்பெறுவசந்தராயர்- அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௩௭)

இ - து.

இடைமார்புநெற்றியும் மூன்றும்விசாலமா யியல்பா யிருக்கவேண்டு-மிருமுழங்காற்கீழு மாண்குறிவிரீவயிவ்விடமிக்குறுகவேண்டும், கடையிலாதுந்தியுஞ் சந்துதாள்வாய்மிகத் தாழ்ந்தேயிருக்கவேண்டும்-தங்குகான்மேன்மையா யங்கையிகவன்மையாய்த் தானங்கிருக்கவேண்டும், கொடைதருஞ்செங்கையிற் சங்குசக்கரரேகை கோதண்டமகரரேகை - குலிசமாலிகைரேகை களினசாமரரேகை கோணிருக்கவேண்டும், அடையுமிப்புருடல க்ஷணமுடையராச த மருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௩௮)

விபூதியிடுங்காலம்கூறியது.

காலையிலெழும்போது மலசலம்விடுத்துமிகு கால்சுத்திசெய்தபோதுங்-காரிகையொடுங்கூடி நீராடினுந்தரணி காவலரிடம்போயினும், மாலையம்போதினுஞ் சண்டாளர்நிழல்படினு மறுகடுசென்றவரினும்-மாதருதகமேவு மங்கையர்கணிழல்படினு மாபெரியரிடமேயினும், பால்பழம்போசனங் கொண்டபினுமருமலர் பறித்திடினுமாபாதகர்-பார்த்திடினுமெவ்வழி பயப்படினுநன்னூர் படித்திடினவிழ்தமுண்ணினும், ஆலயம்புகினும் விபூதியிடன்முறையென்பதருள்பெறுவசந்தராயர்- அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௩௯)

அறம் - ௩௨ - கூறியது.

ஓதுவார்க்குணவீதலர றுசமையத்துளோர்க் கேதனமளித்தலாவங் - குரிஞ்சிடத்தரிகாட்டனுடொறும்பசுவினுக் குவந்துவாயிரை,

கொடுத்தல், சாதோலையீந்திடுதல் கண்ணாடிகாட்டலிரு கண்மருந்திடன்மடங்கள்-கட்டிடுதல்பூஞ்சோலை நாட்டிடுதல்பொருளீந்து கன்னிகாதானஞ்செயன், மாதுபோகம்புரியவைத் தி - றலைக்கெண்ணெய் வார்த்திடுதல் சுண்ணமீதல்-வருவிலங்கிற்குண வளித்தறுவீதநூதவல் வண்ணானமைத்துவைத்தல், ஆதுலரிருந்திட வறச்சாலைசெய்வித்த லருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௪0)

இ - து.

செம்பொனளவின்றியே விலைகொடுத்துயிர்காத்தல் செருஞ்சிறைநச்சோறிடற்-றின்பண்டநல்கலற, லைச்சோறளித்திட றினைத்தோறுமையமிடுதல், வெம்புநோய்க்கவிழ்தங் கொடுத்தலேறிடபம்விடுத்தன்மகவினைவளர்த்தன் - மென்மகப்பால்வார்த்த னன்மகப்பெறுவித்தன் மேவுபிறர்துயர்காத்திட, னம்புமறைவைப்பிணமடக்கலறைவைக்கரட கல்குதல்குளங்கல்லுத - னல்லதண்ணீர்ப்பந்தல்வைத்திடுதல்சோற்றிட்ட நாவெட்டறங்கண்முன்னம், அம்பிகைவளர்த்ததென் றருமறைதண்முறையிடு லருள்பெறுவசந்தராவர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௪௧)

தந்தத் திட்ட விதிகூறியது.

இலைதிகழுமாவன்னி யரியகாயுருவியெ ரிதழிகருவேலழிஞ்சி-லிந்துசுறுவில்வாகை யார்ந்தபூலாநெல்லி யெழிறுவல்வேம்புநார்த்தை, மலர்தருங்கொய்யா கறுக்குருமினிருப்பைதுவர் வாய்த்ததாய்ப்பாலுள்ள தாய்-மருவுகைப்புள்ள தாய்த் தருமுறித்தங்குலம்மறையவர்க்கிராறுதாங், கலைதெரியுமன்னவர்க் கேகாதசாங்குலங் கனவைசியர்க்கோர்தசங்-கருதுசூத்திரர்தமக் கொன்பதாமங்குலங் கழியின்மெத்தேறு முள்ள தாய், அவர்தருந்தந்த தாவனவிதியதாமென்பதருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௪௨)

விபூதிகுழைத்திடுமுறைமைகூறியது.

குழைத்திடுவிபூதிமூன் றங்குலத்தளவதாக் கொண்டுதலைமேலிடலங்-கூறுநெற்றியினிலிரு நான்கங்குலத்தளவு கோணுதலெல்லெவ்வளவை, தழைத்தளவையிடைவிட்டுத் திரிசூலவடிவாய்த் தரித்திடுதற்றிரிபுண்டரங்-தனிமார்பிலும்புயத் தாறங்குலந்தொப்புடனிலோரங்குலமிடல், கழைநிகர்முழங்கையின் மணிகட்டிலே நீறு கனமிலாதேதொட்டிடல்-கழுத்திடுப்பினிலுமூன் றங்குலக்குறியிடல் கணித்தமகுடாகமவிதி, அழைத்தன்னமுதவுபார்க் கவகோத்திரத்தில்வரு மருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௪௩)

பூசைக்காகாதபூக்களைக்கூறியது.

இச்சிலாலரசுபூசுணைபெருக்காமணக் கிலையினிலெடுத்திட்டபூ-விஞ்சோலையணையோலை பின்னலிடுகூடையி லெடுத்தபூவிடதுகையிற், பச்சிலையிலாவெறுங் கையினிலெடுத்தபூ பாண்டத்தெடுத்திட்டபூ-பால்போனிறத்ததுகி லதனிலுமெடுத்தபூ பரிசுத்தமில்லாவிடற், றுச்சிதமறெனமீற யெடுத்தபூகீழ்வீழ்ந் துதிர்ந்தபூ மோந்திட்டபூ-வுண்மையாய்ப்பூசனைக் காகாதுகுற்றமென வோதுஞ்சிவாகமங்கள், அச்சுதன்கண்மலர் பறித்திடவலந்தவா வருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௪௪)

பூஜைக்காம்புஷ்பவகைகூறியது,

வில்வமலர்கொன்றைமாத் தளிர்புன்னைமல்லிகை விரித்தசதகுப்பைதண்ணீர்-விட்டான்பருத்திபொன்மத்தைவெண்மந்தாரை வெண்பட்டிவெள்வழுதுணைச், செல்வகிரைதாமரை நறும்பச்சை வெண்காசை தேமுறழ்மருக்கொழுந்து-செய்யமந்தாரைபன் னீர்முல்லைமாதுளஞ் செழுமலர்க்கொன்றையாத்தி, புல்லறுகழிஞ்சி

லியான் றாவாரைசெவ்வந்தி பூத்திகழ்குதம்பைவடவ-பூளைமலர்நார்த்தைசெவ் வரவிந்தஞாழலிவை பூசனைக்காகுமலராம், அல்லிமலர்கொண்டுசிவ பூசைபுரிநேசனு ருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே.

இ-து.

தேவிசெங்கழுநீர் பசுந்தும்பைகோங்குசிறுசெண்பகம்வெண் பட்டிகை-சிறுநாகமல்லிகை வலம்புரியடுக்குநந் தியாவர்த்தநீலோற்பலம், காவல்பூம்பாதிரி புரோசைபொன்மத்தையெழி ஞாயுருவிகுமரிவேங்கை-நாணல்வெண்காக்கணங் கோட்டங்கடம்பமலர் நறுந்தாளிவெள்ளெருக்குப், பூவுறுகருந்துழாய் வன்னிவெண்கருவூமத்தம்போதுமால்காந்திபிச்சிப்-பூவிருடுவேரிலா மிச்சமிவைசிவபூசைபுரியுமலரென்பர்கண்டாய், ஆவலன்போடுதமிழ் நாவலர்க்குதவுமுகிலருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௪௬)

இ-து.

கரியசெம்பைப்பூ பசுங்குசைசெழுஞ்சேவ சன்போதுசெம்பாதிரி-கள்ளொழுகுவெள்ளலரி வெள்ளைத்திலோத்தங் கமழ்ந்திடுஞ் சிவகரந்தை, விரிதரும்வெட்பாலை மாமணிப்பட்டிகை மிகுங்கொடிப்புலிதுடைக்கி-மென்குராக்குன்றுத்தி சண்பகம்பூகம்விளாகுளவைவெள்ளைநொச்சின், மருவுகருவெண்ணெய்தல் கொட்டைக்கரந்தைகிளை மண்டுகண்டங்கத்திரி-மாதளைசெருந்தியை வண்ணமிருவாட்சியிவை மாபூசைபண்ணுமலராம், அரியகண்ணப்பர்கண் மலர்கொண்டவிமலனை யருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௪௭)

இ-து.

திலமருவுதமரத்தை வெண்கோங்கசோகுதண் ணீராம்பலாண்குறிஞ்சி-ணிலவுவெள்ளைத்துலவு மாவிலிங்கத்தளிர், நிறைந்தி

பெருங்காரத்தை, குவலியகருங்காலி செவ்வேங்கைவெண்ணிறக் கொக்கிறகுவெள்ளெருக்கு - கூமெத்தாரங்கதிர்ப்பச்சையார்ந்தகுன் றுமவலரிகருமைவெண்மை நல்விளாசெவ்வந்தி யோரிதழ்த்தாமரை கவின்றநாற்றெட்டெவகையின் - நன்மலர்ச்சிவார்ச்சனைக்காமென் றுபுட்பவிதி நவிலாகமத்தின்முறையே, அலர்கொண்டுநாடொறு மனோன்மணிப்பூசைபுரி யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௪௮)

சிவலிங்கவகைப்பலன்கூறியது.

ஆற்றுமணலாலே யிலிங்கமேவாணித் தருச்சனைபுரிந்தபேருக்-காயுளுண்டாம்பயுஞ் சாணலிங்கப்பூசை யாற்றுவோர்க்கர்த்தமுண்டா, நீற்றிலிங்கார்ச்சனம் முத்தியுண்டாகித்த நியதியாயாற்றேரமண்-ணையலிங்கஞ்செய்து பூசித்தபேர்க்கின்ப நிதிமைந்தர்பேறுமுண்டா, மாற்றருஞ்சந்தனச் சாந்தாலிலிங்கம் வகுத்துவழிபாடுசெய்யும்-மானிடர்தமக்குக்குபேரபாக்கியமவனி மணிமாடமலைகளுண்டாம், ஆற்றுமுடையவர்பூசை யரசாட்சிசெல்வமா மருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௪௯)

அர்ச்சனைமுதலியதருமமொன்றுக்கொன்று விசேஷங்கூறியது.

ஓராயிரம்பூவினாலருச்சித்தனிக மொருவில்வமர்ச்சித்தலா-மோராயிரங்கிணறுவெட்டிவைத்ததுங்கரு மொருதடாகப்ரதிஷ்டை, யோராயிரம்மனைகள்கட்டிவைத்திடுபலன் சேருமொருமடமமைத்தல்-செப்பருங்கிரகஸ்தராயிரம்பேர்க்குநிகர் தீதிலொருசந்நியாசியாம், பேராயிரஞ்சொல்லு மந்திரிகர்க்குமொரு பெறுமுத்திபஞ்சாக்கரம்-பெரிதுமொன்றென்கறநிகர்க்குமொருஞானியைப் பிட்சைசெய்வித்தலாகும், ஆரமசிக்கைபுரி வாழ்சகாங்காமதனை யருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௫௰)

பலன்களைக்குறித்துப் பூசைசெய்ய வாரங்கட்குப் புஷ்பவகை கூறியது.

ஆதிவாரத்திலே வில்வமர்ச்சிக்கிலோ தஷ்டமாசித்தியுண்டாம் - அமலனைச்சோமவா ரந்துளபமர்ச்சிக்கி லளவிலாச்செல்வமுண்டாம், நீதிசெவ்வாயினில் விளாவருச்சிக்கினன் னேயமுளமைந்தருண்டா - நிகழ்புந்திவாரமா தளையருச்சிக்கினன் னெறியுமெய்ஞ்ஞானமுண்டாம், வேதியன்வாரமதில் வங்கமலர்கல்வியாம் வெள்ளிநாவற்கொழுந்து - மேதினிக்கரசனாஞ் சனிவாரமால்காந்தி மெய்யினோய்வாராதுகாண், ஆதியினின்வல்லாள ராயற்குநேயனே யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௫௧)

ஆலயத்தீபமொன்றுக்கொன்று விசேடங்கூறியது.

ஓதரியதேவா லயங்களுக்குள்ளே யுவந்துதேங்காயெண்ணெயா, லொருகோடிதீபமிட் டதையொக்குநல்லெண்ணெ யொருவிளக்கேற்றிவைத்தா, றீதறுந்தெளிவான நல்லெண்ணெயொருகோடி தீபங்களிட்டதொக்குஞ் - சேருமிருகொம்புள்ள வெண்பசுவினெய்யினாற் றீபமொன்றேற்றிவைத்தா, னீதிபுனைபசுவினெய் யாயிரம்விளக்கொக்குநிறைமுலைக்காயிலுப்பை - நெய்விளக்கொன்றிடலிவ் வாயிரஞ்சுடரொக்கு நிறைகருப்பூரதீபம், ஆதியிற்பரவைமனை தூதுசெலுமண்ணலே யருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௫௨)

உட்சமய மாறின்பெயருந் தேவதையுங்கூறியது.

சந்தகணபதிபூசை பண்ணுவதுபாசுபத சமயமாக்கதிர்வேலவன் - றன்பூசைபண்ணன்மா விரதசமயஞ்சிவன் றன்பூசைசைவசமயங், கந்தாணவீரபத் திரபூசைபண்ணுவது காளாமுகச்சமய

மாவ் – கருதுவைரவதேவ ரைப்பூசைபுரியுமது காணும்வயிரவசமயமாம், பந்தனபயோதரபராசத்தியைப்பூசை பண்ணுவதுவாசசமயம் – பகருமிச்சமயங்க ளாறுமுட்சமயமாய்ப் பண்ணுஞ்சிவாகமங்கள், அந்தரற்கரிதான மெய்ஞ்ஞானபூசைபுரி யருள்பெறுவசந்தராயர் – அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௫௩)

விபூதிவரீங்கித்தரிக்கும் விதிகூறியது.

ஒருகரந்தனைநீட்டி மூன்றுவிரலால்வாங்கி யொருவிரலினூற்பூமிமே – லுதிரும்படிக்குநீ றிடுவோரகோரநர கொருகோடிகற்ப மாழ்வார், இருகரங்கொடுதொழுது வலதுளங்கையிலேற் றிறைவனெதிர்குருவினெதிரே – யெரியினெதிர்வழிநடு விலாசுசமேவுழியி டாமலெவ்வளவாயினும், பெருநிலந்தன்னிலே வீழாமலண்ணாந்து பேசுபஞ்சாக்கரத்தைப் – பேரன்பினோடுன்னி வெண்ணிறவிபூதியைப் பெட்புடன்பூசுவோர்கள், அருணிதியுமுயர்கதியுமாயுளும்பெருகுவா ரருள்பெறுவசந்தராயர் – அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௫௪)

உருத்திராக்கந்தரிக்கும்விதிகூறியது.

உச்சியிடையோர்மணி தழைத்துவிருகாதினு முயர்ந்தமாமணியாறிரண் – டுத்தமாங்கச்சிரத் தெண்ணைந்துநீள்கழுத் தாடுமுப்பத்திரண்டாஞ், செச்சையணிமார்புநூற் றெட்டிருமுழங்கையிற் செப்புமிருபத்தாறதாஞ் – சேர்ந்திருமணிக்கட்டி லிருபத்திரண்டுமணி தேர்ந்தருத்ராக்கமணியை, நிச்சயப்பயபத்தி நியமநெறியுள்ளன்பு நேயநிறையார்வமுடனே – நித்தலும்பூசைபுரி காலத்திலாயினு நீங்காதணிந்தபேர்கள், அச்சிவசொரூபமவ ராமென்னுமாமறைக ளருள்பெறுவசந்தராயர் – அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௫௫)

செபமாலைக்கு விதியும்பலனுங்கூறியது.

செய்யவிருபத்தைந்து ருத்திரமணிக்கோவை சேர்த்துசெபமுன்பொடுசெயிற் – செப்பரியமுத்திதரு மூவொன்பதக்கமணி செல்வமேன்மேலாயிடும், பையவெண்ணான்குமணி கல்விநலமுந்தரும் பதினைந்துமாபிசாரப் – பாலதாம்பதின்மூன்று மேவுமுச்சாடன பலந்தருஞ்செபமாலிகை, கையினிற்சிறுவிரலின் மேற்றள்ளன ஞானமது காட்டும்பவித்திரவிரல் – கனகமுறநடுவிரற் பகைதருநதற்சனி மடிமநோய் விளிவுமுண்டாம், ஐயமிலையங்குட்ட மருளேதழைத்திடும் மருள்பெறுவசந்தராயர் – அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௫௬)

செபஞ்செய்யுந்திக்கின்பலன் கூறியது.

நல்லகீழ்முகமா யிருந்துசெபமேசெய்யி னொடாறும்வசியமுண்டா – நாமெக்கினிமூலை நோயில்லைதென்றிசையை நாடிச்செபம்புரிகிலோ, வெல்லருந்தீமைதரு நிருதிபுல்குரவே விளைந்திடுங்குடதிசையதோ – வேண்டிமுன்றேடிய பொருட்செலவுவாயுதிசை யீறுமுச்சாடனமிகுஞ், சொல்லரும்வடக்குமுக மாய்ச்செபஞ்செய்திடிற் சொர்ன்னமுங்கல்விநலமுந் – தோன்றுமீசானதிசை முத்திவீடாமென்று சொல்லுஞ்சிவாகமங்கள், அல்லலறவெத்திசையு மாகுமெதிகட்குநல் லருள்பெறுவசந்தராயர் – அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௫௭)

பிரதோஷதரிசன விதிகூறியது.

நன்னுதிரையோதசித் திதியதேபிரதோட நாளொன்றுபெயராகுமக் – காளிலிருபத்தாறு நாழிகையதற்குமே லேழுநாழிகையுநீல, வண்ணராத்திரியின்மூன் றரைநாழிகைத்தொகை வரைக்கும்பிரதோடகாலம் – மறவாமலேசிவா லயநந்தியிருகொம்பு மத்தினிடைட்டம்வைத்து, வெண்ணந்திகேசுரன் விஷ்ணத்தைநீவான் மேவழியினின்றிறைஞ்சி – விமலசிவலிங்கத்தை யரகரவெனச்சொ

ல்லி விழியினூற்றெரிசிப்பவர், அண்ணலைருளாற்செல்வ மாயுளும் பெறுவாரல் லருள்பெறுவசந்தராயர்- அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௫௮)

அனுசிதபதார்த்தங்களைக்கூறியது.

பனையினதுவெல்லங் கிழங்குதுங்சொடுபனம் பழம்விளையருந்தலாகா - படர்தருசெடிப்பசளை செம்பசளைசிறுபசளை பரியகுண்டைச்சுரைக்காய், கிளையுவவுமரவள்ளியிருள்ளிவெள்ளுள்ளி செங்கீரைசெம்முருங்கை – தென்னவெல்லத்தொடும் ச்சவெல்லங் காச்சிரக்குபான்புள்ளிபுண்ணாக், கினியதேன்கையாத் பிறைகந்தரவிரோட்டைநெய் யெருமைசெம்மறியசப்பா - லின்றநாட்பத்திற் கறந்தபாற்குதசக்தில்லிற்கறந்திட்டபால், அனுசிதமிதாசார மூடையோரருந்திடா ரருள்பெறுவசந்தராயர் – அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௫௯)

நாடொறுஞ்செய்கையால் வருமைவகைப்பாவமு மதற்கு நிவிர்த்தியுங்கூறியது.

இனந்தொறும்பலபண்ட மம்மியிலரைப்பதாற் செறிவிறகுவெப்பிலிட்டுச் - செந்தீயெரிப்பதாற் றண்ணீர்குடத்தினுட் சேர்த்திடுமுகக்குமதனுன், மூலைக்குசோதினிகொடு பெருக்கிநற்சாணிபட மூதையாய்மெழுக்கிடுவதான் - மூரியசிவாண்மனையி லேகறிகுறைப்பதான் மூளுமைம்பாவநீக்க, நினைந்துமறையோதிட ருறப்பணம்விடுத்திட னெருப்பினிடையோமஞ்செய - னியமமொடுபெலியிடு நன்பாலுவந்துவருதியதிபெறுமதிதியோர்கட், கனம்பகர்தவிலைதினஞ் செய்மகமதென்பர்காணருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. ()

நாடொறுஞ்செயும்பஞ்சயாகங்கூறியது.

பரிவொடுங்காலைக் கடன்கழித்தருமறைபகர்ந்திடுதல்பிரமயாகம்-பலவமரர்குடிபிதுராதிகடருப்பணம் பண்ணுமது பிதுர்யாகமாங், தெரிதரும்விதியினூற்றீவளர்த்தோமவினை செய்குவதுதேவயாகஞ்-செப்புஞ்சிவாகமப் படியன்னபலியிடுத நேர்ந்திடும்பூதயாகம்-வருமரியவதிதியர்க் குளமகிழ்ந்தன்னம் வழங்கன்மானிடயாகநோய், மாற்றுமகமைந்துந் தினஞ்செயிற்பாவமதுவாராதெனத்துணிந்தே, ஆனருள்பெறுஞ்சைவ மறையவர்புரிந்திடுவ தருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௬௧)

போஜனத்திற் குற்றங்கூறியது.

பந்தியிடையோதன மிருப்புகரண்டியாற் பரிமாறவுண்ணறோடம்-பாவையரிடுங்கறியை மீண்டுகொடுவாவெனப் பன்னியிடவுண்ணறோடஞ், சந்தியாகாலத்து மர்த்தராத்திரியினுந் தயிரடிசிலுண்ணறோடஞ்-சாலவயலாருண்ட நற்கலந்தன்னிலே தானுண்ணலதிகதோடம், வெந்தெடுத்திடுமட் கலத்தினுஞ்சுராந்து மிகவுடைந்திடுகலத்து - வேவுமுள்ளங்கையினு மிட்டுண்ணலின்றன்னன் மேலானதோடமாகும், அந்தமிகுபொன் வெள்ளி பாத்திரத்திலேயுணி னருள்பெறுவசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௬௨)

போசனகாலத் தன்னபலியிடும் விதிகூறியது.

போசனஞ்செயிடந் திருமெழுக்கிட்டுப் பொருந்தியகிழக்குமுகமாய்ப்-பார்ப்பாயிருந்திட்ட வடிசிலின்மேனுதகம் புரோட்சித்து வலப்பால், வாசநறுநெய்யன்ன மைந்துபிடிபலிவைத்து மந்திரநவின்றுநன்னீர்-வலமாகவாபோசனங்கொண்டமிகுதிநீர் மருவுசிறுவிரலின்வழிவிட், டேசிலப்பலிகொடிக் கிட்டசனமைந்தாவெழிற்பிராணாகுதிபுரிந் - தின்னடிசிலுண்டுத்தராபோசனங்கொண் டெழிற்சேடநீர்ப்பெருவிரல், ஆசில்வழிவிட்டெழுத லாசாரசைவநெறி யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௬௩)

போஜனஞ்செய்தபினனுட்டானவிதிகூறியது.

போசனஞ்செய்தபின் பாசமனமுஞ்செய்து பொற்புடன்வடகிழக்கம்-போருகாசனமேவி வில்வலன்வாதாவி யொன்றிடவயிற்றைவருடித், தேசொடுஞ்சீரணஞ் செய்தரும்போதுமச் சிவமுனியையுன்னியோர்ந்து-திலமனவுதிருநீறருந்திப்புனைந்துளந் தேர்ந்தன்ன யாசமுடனே, வாசியுளெழும்பிராணயாமமாற்றினானனமாய் மூவேழுரு, மந்திரமகோரத்தையுள்ளேசெபித்துமன் மகிழ்வொடிருப்பர்காணும், ஆசையுறுகிரகத்தவாச்சிரமநெறியென்பரருள் பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே. (௬௪)

தாம்பூலந்தரிக்கும்விதிகூறியது.

மெல்லிலைக்காம்பும் பழுப்போடுகொம்பதன் மேற்றொரம்புங்களைந்தன்-மிகமுறுகலமுகலும் வதங்கலிவ்வெட்டாகும் வெற்றிலைக்குறுநீக்கி, நல்லபாக்கெச்சின்முக் காலுமிழ்ந்தாராய்ந்த நறியவெள்ளிலைமிழித்து-நண்ணுகற்சுண்ணமுங் கிராம்பேலதக்கோல நன்மிளகுவான்மிளகுநேர், சொல்லருஞ்சுக்குமண மேவுசாதிக்காய் [illegible]ந்திஞ்சாபத்திரி-சுகவாசபூரமிவை தாம்பூலசகிதமாய்த் துய்த்திடுவர்செல்வர்கண்டாய், அல்லியலர்வாவிசூழணியண்ணாமலையனே யருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே. (௬௫)

தோடம்வருவகைகூறியது.

ஊணருந்துங்காலை போசனகைசெய்தல்பிடி யுண்டையாயுண்ணல்சிந்தல்-ஒருவிரலைநீக்கியுணன் மயிரென்புபூச்சிபுழு வுகிர்பட்டசோறுண்டிடல், காணுகமயிரினைப் பல்லாற்கடித்தலொருசாலிஞற்காதேய்த்தநீர்-கழுவிதேலுண்கலத் தெச்சிலையுமிழ்ந்திடுதல் கையினனகமுரித்தற், பரணியாற்றலைசொறிதல் விரலினற்றரைகீறல் பாழ்மனையிலேயுறங்கல்-பட்டகஞ்ஞாக்கட் குடித்தல்பெரியோரைப் பழித்தனித்திரையெழுப்பல், ஆணைதள்ளுதலிவைமகாதோடமென்பர்காணருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௬௬)

ஆசமனஞ்செய்யுங்காலங்கூறியது.

வாசமலர்கொய்யினும் வீதியிடைபோய்வரினு மலசலம்விட்டுவரினும்-[illegible]டொராடுசம்போக மேவிடினுநீசர்கிழன் மருவியுடன்மீதுபடினும், தூசனையுடுக்கினும் பலகாரமுண்ணினுஞ் சோறுணினுநீருண்ணினுந்-தூயநற்கருமங்க டருமங்கள்புரியினுந் தொகுசிரார்த்தஞ்செய்யினுந், தேசுதருதானங்கள் செய்யினுங்கனிகாய்கடின்னினுந்துங்கியெழினுந்-தீயசொலைசெய்குவோர் பாயுநிழறோயினுந் தீண்டொணாதவைதீண்டினும், ஆசமனமக்கணஞ் செய்யல்விதியென்பகாணருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௬௭)

மூதேவிவாசமுந் தோடமுள்ளவையுங் கூறியது.

காட்டரசுநீழலும் விளாமரத்தடிநீழலு நன்மனைவிளக்குநிழலு-கடமாடுமெனிவர்கிழ விரவினுடன்மேற்படியினலமிலாச்சேட்டைமருவும், பூட்டுநான்மறையவர்கடங்கிழன்மிதித்திடற் புனிதமாயொருவனுண்ட-புனற்சேடமொருவனுண் பாடைதோய்த்திட்டநீர் பொருந்தவுட்கொள்ளலாகா, வீட்டிடைபெருக்கிய விளக்கமாற்றுப்புழுதி மென்மயிருகுத்தபுழுதி-வீடெங்கழுதைநாய்ப் புழுதிவெந்திடுசாம்பல் வேகாக்கரிப்புழுதியும், ஆட்டிடைப்புழுதிபடலாகாதுமேலென்பகாணருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௬௮)

இவ்வுகையமையற்றொப்பெனக்கூறியது.

விளையுநன்னிலமுமாய்த் தண்ணீருமருகதாய் விரையெலாமனையிடமுமாய்-வெள்ளிமலைபோலெருது கருமலையெனக்கடாவிடுகோ

னமாயேருமாய், சுளிவிலா நெஞ்சுடைய படியாளுமாயுழுங் காலலேயுழவுமாய்க் - களையான விடையொருத் தழையுமாய்நாற்றுவிகாலுமாயுடனடவுமாய், வளமான பாயுமாய்க் களைபறிவுமாய்வேலையுமாய்ச்சத்காவலாங் கைப்புமாய்நாடோறும் வந்துபார்க்குந்நூமாயிருந்தாற்பலிக்கும், அவ்வாறுங்கொழுநனைச் செல்வரிசெல்வமா மருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௬௯)

இந்நாளித்திங்களிற்கூடிற் கருத்திரமுண்டாமெனல்.

இங்ஙனசரீரமுண் டாகின்றவாறாமே சாதகியிலங்குயர்வ - பியலமாவாகைசமா தப்பிறப்பர்கா திருக்குகாட்கலைகக்கிடே, மங்கையர்கள்பூத்தனீ ராடியதினக்கொட்டு வருமாநிரண்டுநாளில்-வாளையமாய்க்கருக் குழிவாய்திறந்திடும் மணவாளனொடுகலந்தாற், பொல்குசக்கிலமுஞ் சுரோணிதத்தொடுசேர்ந்து பூரிக்குமொண்சிப்பியிர்-பூத்தமுத்தைப்போலு மறுகுதனிமேற்பனிப் போலுந்திரண்டுருவமாம், அங்கமலசன்வந் தமைப்பனேயிவ்வுருவ மருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௭௦)

சரீரமுண்டாகுமுறைமைகூறியது.

சுக்கிலஞ்சோணிதந் தட்சேர்ந்துசோணித சொரூபமாய்த்தமவாசலைத்-தேரன்று தடைத்திடும் வாயுவேவேலிபோற் சூழ்ந்துகாகுழும்விந்துவோ, டொக்கப்பிராணவாய் வொளியாமயானவாவொன்றியேவெளியினிற்கு-மூட்பாய்ந்துவிந்துடன் பிராணவாயுகூடியுள்ளே கலந்துநிற்கும், மிக்குதானன்கரு வளாக்குமக்கருவுக்ண் மேவும்வியாதிமூன் றும்-விரவிக்கலக்குமமந் தாநாட்கருக்குழி மேனிபோலாயவளருமே, அக்கமணிதுர்க்கையுறை மிக்கபதிசனே யருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௭

சரீரம்வளரும்வகைகூறியது.

கருத்தரித்திட்டபத் தாநாடிரண்டுருவு கண்டுமுலைபோன்முளைத்துக் - கருதுபதினைந்தாந் தினத்திலேமுட்டைபோற் காணுமக்கருமிதந்தே, யுருத்தருமுதற்றிங்கள் கம்பமாமிருமதியினுற்றதலைமுதுகுமுகமா - மோதுமூன்றாந்திங்கள் செங்கையும்பாதங்க ளுறுவிரல்களையுமுண்டாந், திருத்துநாலாந்திங்கள் மூக்குமுகமுருவமாஞ் செய்யவைந்தாந்திங்களிற் - செவிநாவுகண்களாஞ் செப்புமாறாந்திங்கள் சேர்ந்திடுநகங்களுண்டா, மரத்தமாணிக்கம் பதித்தமுடியரசர்புக ழருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௭௨)

இ - து.

விஞ்சுமேழாந்திங்கண் மயிர்சரம்பென்பும் விளைந்திடுஞ்சடமோடுதான் - மேவிடுஞ்சலமலந் தங்குதாதுக்களு மிடைந்துமூச்சுண்டாகுமே, யெஞ்சிலெட்டாந்திங்க டாயுண்டசாரங்க ளியாவுமுனையானகதிர்போ - லேய்ந்தருவிபாய்ந்தே கபாலத்தின்வழியாக விழிவயக்குழவிவளருங், கொஞ்சவருவோவொன்ப தாந்திங்களறிவுமேற் கொடுபிறப்பித்தோன்றனைக் - குறித்திருகரங்கூப்பி யருடாவெனத்தவங் கொண்டேயிருந்துபுரியும், அஞ்சலப்பையொரீஇ வெம்பிறவிநோக்குமே யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௭௩)

பிறவித்துன்பத்தினியல்புகூறியது.

கொடியபத்தாந்திங்கள் சற்குருப்பார்வையே கொண்டிடுங்குழவிதன்னைக்-கோதறுமபானவளி கீழ்நோக்குவிக்குமக் குழவிமிகுதுன்பமுற்றுப், படியிற்பிறந்தபின் பகாரியமாயா படப்போர்வையான்மறைந்து - பண்டையிலிருந்தபே ரறிவழிந்திருவினைப் பாசவலையிற்படிந்து, துடிவளவுநோகீங் காக்கவலைநோயிலே தோயுமிங்கிதனைநோக்கிற் - சுரைக்கொடிபடர்ந்ததை நிகர்க்குமிச்சனனமா

ந் தோதகமொழிப்பரறிவோர், அடியணாமலையனே தொடியராவணியனே யருள்பெறுவசந்தராயர் – அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (எ௪)

அட்டலட்சுமிகள்பெயர்கூறியது.

மட்டிலாச்செல்வங்கண் மருவுதனலட்சுமி வளர்ந்ததானியலட்சுமி – மணிமாடமனையாதி செங்நெல்வயலேரோட்டங்கள் வளமிகும் பூலட்சுமி, யிஷ்டபாக்கியகுணச் சந்தானலட்சுமி யெழுத்தொடு நிறைந்தகேள்வி – யியல்பாணபுத்திவளர் வித்தியாலட்சுமி யிசைந்தவீரியலட்சுமி, திட்டமாயெங்கணுஞ் சென்றபோதினும்வெற்றி சேரும்விசையாலட்சுமி, தீமைவந்தாலுங் கலங்காதிருக்கின்ற தீரதைரியலட்சுமி, யட்டலட்சுமிவாச நேசதுரைராசர்புக ழருள்பெறுவசந்தராயர் – அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (எ௫)

ஆடியைந்தாந்தேதிவரும் வாரத்தின்பலன்கூறியது.

ஆடிமாதம்பிறந் தைந்தாந்தினத்திலே யரியபுதவாரம்வந்தா லவ்வருடமொருபோக நாடெலாமிகவிளையு மவனிமேலிட்டபயிர்கள், பாளெவியாழம்வரி விருபோகமேவிளைவு பாரெலாஞ்சுகசீவனம் – பன்னுசுக்கிரனெனில் கதிர்ச்சாவிசனியனே பயிரொன்றும் விளையாதுகாண், நீடுஞாயிறுபயிர்கள் பாழ்திங்களொருபோக நெல்விளையுமேசெல்வமாம் – நேர்ந்தவங்காரகன் பனிச்சோளமேவிளையு நெறியீதுகுறியென்பர்காண், ஆடல்புரியண்ணலே மாடமாளிகைசெல்வ மருள்பெறுவசந்தராயர் – அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (எ௬)

பெண்கள்ருதுவாகும்நக்ஷத்திரபலன்கூறியது.

மன்னும்ச்சுவினியிற் புட்பவதியாயிடின்மகுணனுக்கேதோடமாம் – வான்பரணிநாணல்ல மைந்தருண்டாங்கனக மருவுகார்த்திகைமலடியா, முன்னுரோசணிதீர்க்க மங்கிலியமுடையளா முலவுமான்றலைதலைவனுக் – குயர்சுகமளிப்படிரு வாதிரைவெறுப்புமன முடையளாம்புனர்பூசநாள், பொன்னெழில்சுகந்தரும் பூசன்சிறப்புடையள் பொலியுமாயிலியமைந்தர் – பூத்தொழியுமகமூரிய பருடன்மேலதிகாமி பூரமைந்தர்களானியாம், அன்னைநடையார்கடன சாலைவளர்சிம்மபுரி யருள்பெறுவசந்தராயர் – அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (எஎ)

இ – து.

உத்திரம்பதிவிரதை யத்தமென்மேற்செல்வ முண்டாயிடுஞ் சித்திரை – யோங்கியநலந்தரும் யாங்குறுசுவாதிசுக முற்றிடுந் தனிவிசாகம், மத்திபந்தலைவனுக் கல்லல்புன்னேய்கேட்டை மறுபுருடனிச்சைமூலம் – வாழ்வுபால்பாக்கியம் பூராடமடிமைசெடு மாமூத்திராடஞானப், பத்தியுறுமோனநற் பொருளாமவிட்டம் பசும்பொனுள்சதையநிதிபோம் – பகரும்புரட்டைமல மூத்திரட்டாதியிடி பமிரேவதிநடலையாம், அத்தந்துகிர்ச்செறி மடந்தையர்கள் பூத்தபல னருள்பெறுவசந்தராயர் – அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (எஅ)

ஆசூசமுறாத விடங்களைக்கூறியது.

தேவாலயங்களிற் சந்நிதானங்களிற் றிருவிழாவிற்சிறந்த–தேர்நடக்கிடுபொழுதி லருமறைபகர்ந்தவழி செய்யுந்தழற்சாலையிற், பாவாணர்கல்விப்ர சங்கம்புராணம் படிக்கின்றவித்வசபையிற் – பார்வைக்கலங்கார சோபனமுகூர்த்தங்கள் பண்ணும்விவாகசபையிற், கோவானசிங்கா தனத்திருந்தரசுசெங் கோல்கொண்டராசர்சபையிற் – கூறுமிவ்விடமெலா மாசூசமிலையென்று கூப்பிட்டுரைக்குமறைகள், ஆவாகனத்தனே மாவார்வனத்தனே யருள்பெறுவசந்தராயர் – அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (எகூ)

அசுவவிலக்கணங்கூறியது.

நீலமரகதமுத்து மாணிக்கம்பொன் னிறைந்தவெண்பனிச
ந்திரன் – நெடியதாமரைமலர்க் காசைமலர்கருமுகி னெருப்புமணி
வண்டுதீம்பாற், கோலமுறுகின் றசெம் பஞ்சுக்குழம்புகுயில் கூறு
மீரெட்டுநிறமாங்-குதிரையித்தமமிவையி லொருநிறமுடைத்தாய்
க்குறித்தமுகமார்புச்சிவாற், காதுவிவ்வெட்டிடம் வெளுப்பாயிருக்
கிலது கதியட்டமங்கலமதாங் – கவினுமுகநாற்பாத மைந்தும்வெ
ளுப்புறிற் கனபஞ்சகல்யாணியாம், ஆலவாயிற்பரியிலக்கணமுறை
த்தவா வருள்பெருவசந்தராயர் – அண்ணாவினிற்றுதிசெ யுண்ணா
முலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௮௦)

இ – து.

கட்டுவாம்பரிநாபி தொட்டுமுன்புறமெலாங் கதிர்போற்சிவந்
துமதிபோற் – கவினுறும்பின்முழுது நலமாவெளுக்கிலக் கற்பக
ல்விஜயமென்பார், வட்டமதிபோலவே முன்புறம்வெளுப்பாய் வய
ங்கியேயிற்புறமெலாம் – வடிவுசெங்கதிர்போற் சிவந்திடுகின்லை
யது மருவுகதிர் விஜயமென்பார், இட்டநூறங்குலமுயர்ந்தபரியுத்
தம மென்பத்துகாலங்குல – மிவுளியதுமத்தியம தறுபத்தொரங்
குல மியம்புமதமக்கோடையாம், அட்டமங்கலதுரக சித்தனுநடாத்
துதுரை யருள்பெருவசந்தராயர் அண்ணாவினிற்றுதிசெ யுண்ணா
முலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௮௧)

இ – து.

வாசியின்வயதுமுப்பத்திரண்டேவருமருவிடும்பத்தவத்தை-
மாற்றிலொருமூன்றுவற் சரமுமிருமாதமு மன்னுநாட்பன்னிரண்
டாம், பேசுபுரிவெவ்வண்ணை பேதகமிருக்கினும் பெருவெள்ளைதா
ன்கலந்தாற்-பெட்புமிகுமப்புரவி தலைவன்றனக்குப் பெருஞ்செல்
வமுங்கல்வியாங், தேசுவகறுப்புப் பரிக்குவயிறேனுந் திகழ்ந்தநெடு
மார்பமேனுஞ் – செஞ்சிவப்பேறினும் வெள்ளைநிறமேவினுஞ் செய

வாருணைதுரகமாம், ஆசுமதுராஞ்சித்ர வித்தாரகவிஞர்புக ழருள்
பெறுவசந்தராயர் – அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணாமலைத்தேவனே. (௮௨)

இ – து.

ஏறுபரிமாக்கழுத் திடையிரட்டைச்சுழி யிருக்கின்மிடியின்
னலுண்டாம்-இருகாலிலேயிரட் டைச்சுழியிருக்கிலவ் விவுளியா
ளிகளபந்தங், கூறருங்கொடியவினை யாமிருதியுண்டாங் குதக்குமீ
ருதடுதனிலுங்-குலவுமுற்காலடியி லுங்கபோலத்திலுங் கோதறு
முழுந்தாளிலும், வீறுசுழிதானென்றின் மாவேறுதலைவனை வெவ்
வினையிருத்தொறுக்கு-மேவுமிகுளிப்பந்தி பூநேறப்பண்டய மெலிக்
துநல்குரவெய்திடும், ஆருலவுசெம்பவள வேணிமதிமுடியனே யரு
ள்பெறுவசந்தராயர்-அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய
வண்ணாமலைத்தேவனே. (௮௩)

இ – து.

தெரிதருகழுத்தினிடை யொருசுழியிருந்திடிற் றெய்வமணி
[illegible]பெயராம்-திருமகள்விலாசமுண் டாமுகந்தலைநாசி திகழு
மார்பிவைநாலிடம், மருவியவ[illegible]சுழி யுண்டாயின் வெற்றிதரு
மாறிலாச்சரிமத்தகம்-மணியாயிருக்கிலவ் வாசிமேலேறுவோர் வா
ழ்வுமென்மேலெய்துவார், விரவுநெற்றியினடுவி லொருசுழியிருக்கி
னது வீறுநிமதியுமுண்டாம்-மேலிவ்விடங்களிற் சுழியிலாவிவுளி
யின் மேலேறினனன்றகாண், அறியவற்களவிடற் கரியபேரழக
னே யருள்பெறு வசந்தராயர் – அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா
முலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௮௪)

இ – து.

வேங்கைநரி சிக்கமுயன் மயின்மல்லரம்புமத வேழங்குரங்கு
போல-வேசமுனைவ[illegible]தாய்ச் சங்குவெண்கனலின்விலாழிகான்
வாய்துறையுமையத், தாங்குவிற்றெருளிசங்கு மேகமத்தளமேறுதண்

டிரைமடங்கரெனியாய்ச்-சாற்றுகுறமகன்போற் கவிழ்ந்தமுகமாகலாத் தழையுமாந்தளிரினிறமாந், தேங்கமழ்மலர்ந்தகரு நெய்தல்போலுக்கிரஞ் சேர்ந்தவிழியாய்ப்பற்கடாஞ்-செப்பமாயொப்பமாய் வாலைத்துசாணாய்ச் சிறக்குங்குளம்புயரமா, யாங்குதிரைலக்ஷணமுரைத்தவிதியென்பர்காணருள்பெறுவசந்தராயர் — அண்ணாவினிற் றுதிசெயுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௮௫)

இ — து.

பாயும்பெரும்பரி முகத்திடைவெளுத்திடிற் பிராசரைச்செயிக்கும்-பணிபூண்கழுத்துவால் முதுகிவைவெளுத்திடிற் பாக்கியமெலாங்கொடுக்கும், எயுமிருபிடர்வெள்ளை யாயிருந்தாற்புதல்வரின்பமென்மேலுமுண்டா-மெழின்மார்பில் வெள்ளையுறில் கவலைகோயின்றியேயெப்போது மனமகிழ்தருக் - தோயுமிகமிடறுபால் வெள்ளைநிறமேவிடிற் றாய்சந்தானமுண்டாக், தோன்றியவலப்புறம் வெண்ணிறஞ்செல்வமாந் தாய்முகம்பிற்பாசுகம் - ஆயும்பரபக்தகவி நேயம்பொருந்துரை யருள்பெறு வசந்தராயர்-அண்ணாவினிற் றுதிசெயுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௮௬)

இ — து.

மார்புங்கழுத்துமர வப்படம்போலதாய் வாழைமடலொத்தசெவியாய்-வதனமுக்கோணமாய் நுதலுயர்ந்தகலமாய் வைக்குமடிபந்தொத்ததாய், எர்புலையுநாலுகா லுங்கடைந்தேயதை எடுத்துநாட்டியதுபோலா-யிருதுடைதிரட்சியாய்ச் சுழல்கின்றபோதுநீ எழுகடைக்கோலென்னலாய், போர்புரிமுகத்திலே வெட்டினுமெதிர்ப்பதாய்ப் புரவியோன்மனமறிவதாய்-பொங்கழிகோட்டையுந் தங்கியதுருக்கமும் புலியெனப்பாய்கின்றதாய், ஆர்பரியிருக்கின்றதுத்தமப்புரவிகா ணருள்பெறு வசந்தராயர் — அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௮௭)

இ — து.

கொய்யுளைப்புரவியது நிற்கின்மலையென்னவுங் கூத்தினடமகனென்னவுங்-குலவிடும்வாசனையின் மான்மதம்பாளிதங் குங்குமமகிற்கொப்பதாய், வெய்யகட் பொறியரா வட்டநெடு வீதிநடைவிடுசுழற் பங்கென்னவும்-மேலையுமேலவன் காற்குள்ளடங்கியேவேகத்தில் வளியென்னவுஞ், செய்யுநற்சாரிகை பதினெட்டுமுள்ளதாய்த் திருத்தமிருநான்குவாயது-சென்றபரிமேலேறல் விதியென்றுமறையாஞ் செழும்பரியிலேறிவந்ததும், ஜயசீபாண்டியற் கறிவித்ததென்பர்காணருள்பெறு வசந்தராயர் — அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௮௮)

இவர்முன்னிலின்னது பெறவேண்டுமெனல்.

தாமமாகியபிறவி சாராதமெய்ஞ்ஞானசாதனம்பெறவேண்டினோர்-சரியைகிரியாயோக மூன்றுங்கடந்தமெய்ச்சற்குருவையடையவேண்டும், காமமார்தருசிவா லயலிங்கதரிசன நாடியருள் பெறவேண்டினோர்-நக்கன்வலக்கைதலை மேற்கொண்ட வதிகார நந்தியைமுன்காணவேண்டும், பூமியாளரசரைக் கண்டுகாரியஜெயம் பூர்த்தியாய்ப்பெறவேண்டினோர்-புரவலர் கருத்துக் கிசைந்தமந்திரிகள்பாற் போய்முன்புகாணவேண்டும், ஆமிகவளங்கள்சிம் மாபுரிவிளங்கவரு மருள்பெறு வசந்தராயர் — அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௮௯)

கல்வியிற் கொக்கோக வகைகூறியது.

நாடுமுடலிளமையுமா லிங்கனமதோரைந்து நண்ணுமிதழதரபானம்-நல்லசுவைபதினொன்று மமிர்தநிலைபதினைந்து கருநகக்குறிகளேழுங், கூறுதந்தக்குறிக ளெட்டுமுயர்பறவையோற் குரலோசையெட்டுமிருவகைச்-குவிதாடனங்களிரு நான்குமுறைகரணங்கள் கூறுநாற்பத்தெட்டுமே, யூடுகலவிப்போக மெய்ம்முயக் கீரெட்டுமுறழுணர்திருபதுடனே-யோராறுமொழிகின்ற கொக்கோகவித

மதிக்குடலோடினிதாகவே, பாடவருமங்கையரு மதுபவித்திடவிளப மருள்பெறு வசந்தராயர் - அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௯௦)

பெரும்பாலு நோய்கள் வராவகைகூறியது.

எட்கோலைச்செரு முழுக்காடுவோர்பட்ச மிருகண்கவிக்க மிடுவோர் - எத்தாகமதிதொறும் பித்தநீரொல்லா மெடுத்திட மருந்துகொள்வோர், இட்டமாயெண்ணெய்கு நாளினுக்கொருகாற் றிருக்கிழைபுணர்ச்சிசெய்வோர்-செப்புமொருமூன்றும- தத்திலருசிய மது சிருடன்செய்துகொள்வோர், வட்டமாமூவிரு மதிக்கொருவிரோசனம் வாங்காமலேவாங்குவோர்-வயிறுபசிகண்டுண்ணுவோர்களுக்கொருநோயும் வாராதமிருதியாக, அட்டமாசித்திமுன் னிட்டமதுரேசனே யருள்பெறுவசந்தராயர் - அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௯௧)

தீயோர்தேடுபொருள்போம்வழிகூறியது.

வையகந்தன்னிலே தீயோர்களீட்டுபொருள் வம்பருக்காய் பிணிக்காம்-வாயோட்டமாகவே பேயோட்டுபூசாலி மார்கடஞ்செலவினுக்காங், கைபடக்கொண்டகொலை பாதகர்க்காம்படைக்கன்னமிடுகள்ளருக்காங்-கஞ்சாமயக்கபினி சாருயமாகனங் கடியகட்குடியருக்காம், மெய்யகஞ்சிறிதிலாப் பொய்வழக்கதுபேசும் வீணருக்காந்தழற்காம்-வேசையர்க்காம்பூத மூசுமண்ணுக்காகும் வேந்தர்தண்டத்தினுக்காம், அய்யனே தய்யனேசெய்யவெழின்மெய்யனே யருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௯௨

நல்லோர்பொருட்பயன்படுமாறு கூறியது.

சேற்கடற்றரணியி னல்லோர்களீட்டுபொருடேவாலயங்கழு க்காங்-தேவாபிடேகமா ராதனைக்காமையர் திகழ்சமாராதனைக்கா

நூற்கடற்கரைகண்ட புலவர்கட்காமௌன தவனுமெய்ஞ்ஞானியர்க்காம்-நோற்குமாதவமுடைய பேர்க்காம்பசிக்கன னுகர்ச்சிக்குமுதவவாகும், நாற்கிளரும்வேதநெறி வேள்விகட்காஞ்சுகுண கன்னுதானங்களுக்கா-நற்றொண்டர்பாகவதர் தங்களுக்காம்பரிய நாலெட்டறங்களுக்காம், ஆறசூல்வர்க்குமுன் னருள்பராஞ்சோதியே யருள்பெறுவசந்தராயர்-அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௯௩)

பிரயாணத்துக்கு ராசிபலன் கூறியது.

மேடலக்கினமதனி லூர்ப்பயணமாகாது வீறிடப நலமுள்ளதாம்-மிதுனத்திலேசெலுங் காரியமெதுப்படு மென்கடகமரசர்சேவை, நாடருஞ்சிங்கந்தி னாதாயமாங்கன்னிகளிர்சுரங்காணுந்துலாம்-கற்பொருள்கிடைக்கும் விருச்சிகம்பிணியினு னவியுடனடுக்கமுண்டாங், கோடுறுந்தனுசுசத் துருஜயம்மகரமது கொடியபயமாங்கும்பமோ-கொடியர்கண்டனையெய்து மீனமழையாற்பயங் கொண்டயாத்திரைசெய்காலந், தாடுவேயுறுதோளி பங்கவிஃதுண்மையா மருள்பெறுவசந்தராயர் - அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௯௪)

முக்குணத்தியல்புகூறியது.

ஞானமருடவமேன்மை வாய்மைபொறைமௌனமொடு நவைசெயைம்பொறியடக்கல்-நற்கருமவியல்புநெறி சாந்தமுயர்கல்வியிவை நல்லசாத்விககுணமாம், ஈனமறுதானமன வூக்கந்தவந்தருமமெழில்கல்விகேள்விஞானம் - இசைவீரசௌரிய மகங்காரமிவையே யிராசதகுணத்தினியல்பாந், தானுறுநெடுந்துயி லொழுக்கமுதனீதிவழு தாழ்வஞ்சமாதிகோபந்-தாவுகொலைபெருண்டி சோம்புபொய்காமமிவை தாமதகுணத்தன்மையாம், ஆனமுதமைந்தாடு மந்திவண்ணத்தனே யருள்பெறுவசந்தராயர் — அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௯௫)

நவக்கிரகதானங்கூறியது.

பானுவுக்கீந்திடுந் தானமதுகன்றீன்றபசுவாகுமதிதனக்குப்-பானிறச்சங்குசெவ் வாய்க்குச்செகப்பெருது பைம்புதற்குச்செம்பொனும், வானியல்வியாழந் தனக்குவெண்பட்டாடை மாசுக்கிரற்குவெள்ளி-மருவியசனிக்குலவை கரியநிறமாயிலகு மகிடமாமொருமைக்கடா, தானியவிராகுவுங் கச்சங்கறுப்புடைத் தானவெள்ளாட்டுக்கடா-தக்கசெங்கேதுவுக் கோதரியந்தயானை சார்துமறையோர்க்களித்தல், ஆனதுநவக்கிரக தானவிதியீதென்ப ரருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௯௬)

நவக்கிரகவுருவுந்திசையுங்கூறியது.

நடுவட்டமாமிரவி யுருவிருக்கின்றநிலை நமெக்கினிமூலைதா-னுச்சந்திரமதியுருக் காற்றிசைத்திரிகோணகானிலமகன்வடிவமாம், வலிவிலீசன்றிசைப் பாணவடிவம்புதன் வடதிசைத்தீர்க்கசதுரம்-மருவுபொன்கீழ்த்திசைப் பஞ்சகோணத்துரு வயங்குசீர்தருசுக்கிரன், மிடையுமேற்றிசைதனுப் போலுருச்சனிநிருதி மேவுசூர்ப்பாகாரமாய்-மேவுவனிராகுவட மேற்றிசைத்துவசமென வெங்கேதுதங்குமிடமாம், அடையுமொன்பதுகிரக வடிவமுந்திசையுமீ தருள்பெறுவசந்தராயர் - அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௯௭)

நவதானியமுஞ் சமித்துங்கூறியது.

சூரியன்கோதுமை செஞ்சாலிசோமனுந் துவரைசெவ்வாய்தனக்காஞ்-சொல்லரியபுந்திக்கு நற்பசும்பயறதாந் தூயவியாழந்தனக்கு, வேரியங்கடலையாம் வெள்ளிக்குமொச்சையாம் மேவியசனிக்கெள்ளதாம்-வெற்றிகொளிராகுவுக் காணமாடங்கேது விளைகாணநவதானிய, மாகியவெருக்குப் பலாசங்கருங்காலி காயுருவியச்சுவத்தம்-கல்லத்திவன்னிகூர்ப் புல்லறுகுதர்ப்பையிவை நவசமித்தாகு

மென்றே, யாரியமுணர்ந்தமே லவர்துவிதியென்ப ரருள்பெறுவசந்தராயர்- அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௯௮)

மூவர்தேவாரத்தொகைகூறியது.

பன்னருந்திருஞான சம்பந்தர்செந்தமிழ்ப் பதிகமீரெண்ணாயிரம்-பண்பான சுந்தர ரிசைத்ததேவாரமுப்பஃதுமேலேழாயிரம், தன்னுதற்றிலகவதி யாரொடுந்தோன்றுதிரு நாவினுக்கரசர்சொன்ன-நற்றமிழ்ப்பதிகநாற் பத்தொன்பதாயிர மாமெய்ம்மூவர்மொழியுட், பின்னரெண்ணூற்றாறு பத்துநாற்பதிகமிப் பேருலகுதனில் விளங்கும், பேசுமிருநூற்றெழு பத்தைந்துசிவதலப்பெருமைசேர் பதிகமாகும், அன்ன திருமுறையோதி யின்னடிப்பூசைசெய் தருள்பெறுவசந்தராயர்- அண்ணாவினிற்றுதிசெயுண்ணாமுலைக்குரியவண்ணாமலைத்தேவனே. (௯௯)

சிற்றின்பப்பேரின்ப வட்டாங்கயோகங் கூறியது.

வனிதைபஞ்சணையாறு சுவைபோசனங்கந்த மருவுசித்திரவஸ்திரம்-மாலைமணியிழையணித் தயிலதாம்பூலமென் வகையகேசிற்றின்பமாம், தினமணிவிபூதிருத் ராக்கபஞ்சாக்கரந் தீர்த்தம்பிரசாதமாசான-மற்றுசமயலிங்கசங் கமமெட்டுமென்பருட் டெளிதரும்பேரின்பமாம், தனியியமநியமமா சனபிராணாயாமதம்பிரத்தியாகாரமாம்-தாரணை தியானஞ் சமாதியிவ்வெட்டுமே சாற்றுமட்டாங்கயோகம், அனவரதநடனமிடு வனருகபதத்தனே யருள்பெறுவசந்தராயர்- அண்ணாவினிற்றுதிசெ யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௧௦௦)

நாலுயுகத்திலும்பூசைசெய்தவர்களைக்கூறியது.

நீதிலாதுயர்க்கிரேதாயுகந்தன்னிலே செங்கனற்சோதிமலையாய்-திருமாலயன்முதல் விமையோர்கண்மறையினுற்சிவதருமமேபுரிக்கனர், நீதிமாமணிதிரேதாயுகத்தாகம நெறித்தயோதனர் பூசனை-நிதிதுவாபரமதில் வச்சராங்கதனீன்றநிருபனும்வீரசம்பு, காத

னேகலியில்வல்லாளபிரபுடதேவ ராமர்தரும்ஞ்சகாப்த்த-நவிலரிய ரத்தேழு நூறுமெழுபத்துமேனுமிலவங்கவருட, மாதியாய்கின்று தல தருமகர்த்தாவான வருள்பெறுவசந்தராயர்-அண்ணாவினிற்று திசை யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௧0௧)

அவையடக்கங்கூறியது.

பரிமளந்தோய்தழி மாலையொடுமெணைமிலாப் பச்சிளம்புல்லறுகினைப்-பழுதென் றுதள்ளாம லீசனுளமகிழ்வொடும் படர்சடையிலேற்றபடியால், விரவுமாசையினு லுரைத்தவிச்சதகமது மிக்கபுன்சொல்லாயினும்-மேதினியெலாம்புகழிலக்கணமிலக்கிய மிகத்தெளிந்தறிநாவலர், பரவின்புகழ்தலப் பெருமையின் றுதியிருப்பதனுலிகழ்ந்திடாமற்-படியுளநிறைந்தன்பு கொடுபெரிதுவந்தருட் பாலித்துமேற்கொள்ளுவார், அரியயனொடிந்திரன் பூசித்தவீசனேயருள்பெறுவசந்தராயர் — அண்ணாவி னிற்றுதிசை யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௧0௨)

வாழி கூறியது.

சந்தமுமோதுகாண் மறைவாழியாகத் தளிர்க்கும் பசுக்கள் வாழி-தரணிகாவலர்வாழி மனுநீதிவாழிமுத் தமிழ்வா[illegible]னிலை, வந்தெழுந்தெய்வீக [illegible]வண வாழியவண மதலைமெய்ப் பொருணையனர்-மைந்தர்வழிவந்தவர்கள் வாழிகுகமுனிவாழி மாதவசிரைந்துவாழி, சுந்தரமிகுந்தவுண் ணாமுலைத்தாய்வாழி சோதிப்ரகாசமாகத்-தோன் றுமண்ணாமலைப் பரமனர்வாழிமெய்த் துணைவித்தியாரத்தி நாகரமும்வாழி, யந்தணர்கள்வாழியெழில் சிங்கபுரி வாழிமெய் யருள்பெறுவசந்தராயர்-அண்ணாவி னிற்றுதிசை யுண்ணாமுலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (௧0௩)

அண்ணாமலைச்சதகம்
முற்றிற்று.

இஃது, மாம்பாக்கம் உபாத்தியாயரென்னும்பெயருள்ள திருச்சிற்றம்பல நாவலரவர்களால் செய்யப்பட்டது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவண்ணாமலைக் கார்த்திகைத்தீபவெண்பா.

காப்பு.

வெண்பா.

சீர்த்திபெறுஞ் சோணகிரிமுடியின் மீதொளிருங்
கார்த்திகைத் தீபவெண்பா கட்டுரைக்கப்-பூர்த்தியுற
சம்பந்த வாரணத்தி னாதனரு ளாந்துகரச்
சம்பந்த வாரணத்தின் றாள்.

நூல்.

கங்கை யணிதீபங் கற்பூர தீபமலை
மங்கையொரு பங்கில் வளர்தீபம் — பங்கயன்மால்
விண்பாரு நேடும்வண மேவியவண் ணாமலையிற்
பண்பாருங் கார்த்திகைத் தீபம். (௧)

அன்னமளிக் குந்தீப மண்டினரை யாதரித்துப்
பொன்னுமளிக் குந்தீபம் பொற்றீ — பமன்னு
மராவணிநேர் காட்டுமெங்க ளண்ணா மலைமேற்
பராவவருங் கார்த்திகைத் தீபம். (௨)

[illegible]யற கார முறிந்தோடச் செய்தீப
மேகாந்த மாவந் திடுந்தீப — மாகாந்த
னாங்கார்ந்த தென் றுரைக்க வண்ணா மலைமுடிமேற்
வாங்கார்ந்த கார்த்திகைத் தீபம். (௩)

பண்ணாய கார்த்திகைத் தீபம்.

பந்துமுலைப் பாவையர்க்காப் பாங்காருங் கூடலிலே
வந்து வளையல்விற்ற மாதீபங் — கொந்து
மலமலியுஞ் சோண மலைத்தீபம் போற்றிப்
பலர்மலியுங் கார்த்திகைத் தீபம். (௪)

இட்டவிதி சாப மிரிந்தோடப் போற்றிசைக்கு
மட்ட வசுக்கட் கருடீபஞ் — சிட்டர்
மதிதருசீர்ச் சோண மலைத்தீப மெம்முட்
பதிதருசீர்க் கார்த்திகைத் தீபம். (௫)

ஆதலா னீரென்றே யன்றொருசேய்க் காவழக்கு
மாதுலரா வந்துரைத்த வண்டீபங் — காதலரா
நந்தனஞ்செய் சூழுஞ்சோ ணாசலத்தி லன்பரன்பிற்
பந்தனஞ்செய் கார்த்திகைத் தீபம். (௬)

நீகெற்பி னொடுடன்வாழ் நீலகண்டர் தம்மிடம்வந்
தோகெவர்ந் தாண்டொருதீப — மாமெயிற்
கொக்கவிசைவண் டினம்பா டோங்கருணை வெற்பின் மிசைப்
பக்கமிகுங் கார்த்திகைத் தீபம். (௭)

செங்கமல வேதா திலோத்தமையைப் பின்றுரந்த
வங்கவலுக் காவேட ணந்தீபங் — திங்கடவழ்
சோணமலை தீபமிகத் தோத்திரஞ்செய் தென்றுமுயர்
சாணர்மகிழ் கார்த்திகைத் தீபம். (௮)

மண்ணிடந்துங் காணு மலரடியின் மாயவனா
கண்ணிடந்து சாத்திக் களிதீப — மெண்ணிறந்த
சீர்த்திபெறுஞ் சோண கிரித்தீபந் தென்மதுரைப்
பார்க்கிடைவுங் கார்த்திகைத் தீபம் (௯)

எல்லா வுலகு மிசைய வருச்சுனன்கை
வில்லா லடியுண்ட மெய்த்தீபம் — பொல்லாக்
கலிதீர்க்குந் தீபங் கனவருணைத் தீபம்
பலியேற்குங் கார்த்திகைத் தீபம். (௧௦)

சீரார் சிறுத்தொண்டர் செல்வன் கறியுண்ணப்
பேராசை வைத்த பெருந்தீபங் — காரா
ரருணகிரித் தீபமனத் தல்லும் பகலும்
பருணிதர்சேர் கார்த்திகைத் தீபம். (௧௧)

உள்ளதெனு நல்லோர்கட் குள்ளதா வில்லதெனுங்
கள்ளமனத் தோர்க்கின்பதாக் காடீபம் — வெள்ளமதி
மேவுசடைத் தீபம் வியன்கொளரு ணாசலத்திற்
பாவுபுகழ்க் கார்த்திகைத் தீபம். (௧௨)

தொண்டர்க்குத் தோன்றாத் துணையான தீபநல்ல
வண்டர்க்கு மெட்டா வருட்டீபம் — வண்டமருந்
தோடுடைய பூம்பொழில்சூழ் சோணமலைத் தீபநன்மேம்
பாடுடைய கார்த்திகைத் தீபம். (௧௩)

வென்றானே வன்புலனை வீட்டியுணர் கும்பமுனிக்
கன்றுமணக் கோல மருடீபஞ் — சென்றுவியன்
விண்ணளக்குங் கோணகிரி மேற்றீப மன்பருக்குப்
பண்ணளிக்குங் கார்த்திகைத் தீபம். (௧௪)

போற்றுமடி யார்க்கருளும் புண்ணியதீ பம்வினையை
மாற்றுமருந் தாகுமணித் தீபஞ் — சாற்றுமறை
யுன்னரிய சோணமலை யோங்கிவள ருந்தீபம்
பன்னரிய கார்த்திகைத் தீபம். (௧௫)

சிற்றம் பலத்திற் றிருநடனஞ்செய் தீபமன்பர்
குற்றம் பலகுணமாக் கொள்தீப—மற்றக்
துடைத்தருளுஞ் சோணமலைத் தோன்றியதீ பஞ்சீர்
படைத்தருளுங் கார்த்திகைத் தீபம். (௧௬)

கஞ்சமலர்க் கண்ணனயன் காண்பரிய தீபமெனுள்
வஞ்ச மலமகற்றும் வான்றீப—கஞ்ச
மயிலுமுயர் தீபமெழி லண்ணாமலைமேற்
பயிலுமொரு கார்த்திகைத் தீபம். (௧௭)

அன்பருளத் தேயகலா வானந்த தீபம்பே
ரின்பருளத் தோன்று மெழிற்றீபம்—வன்பருளத்
துற்றறியாத் தீபம்வள மோங்குமரு ணாசலத்திற்
பற்றகலாக் கார்த்திகைத் தீபம். (௧௮)

ஆலால சுந்தரரை யன்று மணந்தடுத்து
மேலா வுவந்தாண்ட மெய்த்தீபம்—பாலாழி
யோர்புதல்வ னுக்கருளி யோங்குமரு ணைத்தீபம்
பார்புகழுங் கார்த்திகைத் தீபம். (௧௯)

வாதவூ ரன்பர் மகிழப் பெருந்துறையிற்
போத மளித்த புகழ்த்தீப—மேத
மகலவருந் தீபமுய ரண்ணாமலையிற்
பகலவனேர் கார்த்திகைத் தீபம். (௨0)

முத்திக்கு வித்தா முளைத்தெழுந்த தீபமெழிற்
சத்திக் கொருபால் தருதீப—மெத்திக்கு
மார்த்துமிக்கு மன்புடனே யண்ணாமலைமீது
பார்த்தவர்க்கீங் கார்த்திகைத் தீபம். (௨

போதாந்தப் புண்ணியர்கள் போற்றிசைக்குந் தீபம்விந்து
நாதாந்த முங்கடந்த நற்றீபம்—வேதாந்தச்
சித்திதருந் தீபந் திருவருணைத் தீபநல்ல
பத்திதருங் கார்த்திகைத் தீபம். (௨௨)

பாணனுக்கோர் சத்துருவாம் பாட்டகனைக் கூடலிலே
நாணமுற்றோ டப்பாடு நற்றீபம்—பேணி
யயனுமரி யுங்காணா வண்ணா மலையிற்
பயனுருவாங் கார்த்திகைத் தீபம். (௨௩)

முத்திநெறி காணாவென்று முன்னுமன்ப ருக்குமுன்னம்
பத்திநெறி காட்டிப் படர்தீபஞ்—சத்திநெறி
யோகதவஞ் செய்யருணை யோங்கியதீ பம்பெரியோர்
பாடுமெழிற் கார்த்திகைத் தீபம். (௨௪)

சத்தான தீபமுயர் சன்மார்க்க ருள்ளத்தில்
வித்தா முளைத்து மிளிர்தீப—முத்தான
மோங்குங் கரிக ளுலவுமரு ணாசலத்திற்
பாங்குபெறுங் கார்த்திகைத் தீபம். (௨௫)

இன்பந் தருதீப மேத்திப் பணிந்தோர்க
ளென்பவிரு ளோட்டுஞ் சுடர்த்தீப—மன்ப
ரவமறுக்குந் தீப மருணைவளர் தீபம்
பவமறுக்குங் கார்த்திகைத் தீபம். (௨௬)

அஞ்ஞானம் போக்கி யருடைய மானந்த
மெய்ஞ்ஞானங் காட்டி மிளிர்தீப—மெஞ்ஞான்று
சித்தர்மகிழ் சோணகிரித் தீபம் பணிந்தேத்தும்
பத்தர்மகிழ் கார்த்திகைத் தீபம். (௨௭)

நட்டம் புரிதீப நல்லடியார் தங்கள்கொடு
கட்டங் களையே களைதீப—ம

திசைமேவு மெங்க டிருவருணைத் தீபம்
பசைமேவுங் கார்த்திகைத் தீபம். (௨அ)

நாடியடி யார்பரவு ஞானதீ பம்மறைக்கு
தேடியறியா நெறித்தீப—நீடுந்
திருவருணைத் தீபந் தினமமரர் போற்றிப்
பருவரல்தீர் கார்த்திகைத் தீபம். (௨௯)

நாலா ரணமு நவிலரிய ஞானமெனு
மேலான போகம் விளைதீப—மாலால
முண்டமரர் தங்களிட ரோட்டருணைத் தீபமன்பாய்
பண்டமருங் கார்த்திகைத் தீபம். (௩0)

சென்மப் பிணிதீர்க்குந் தீபமடி யார்செய்கொடுங்
கன்மவினை போக்குங் கணதீப—மன்மதனை
யங்கமிலா தாக்கியரு ணண்ணு மலைத்தீபம்
பங்கமிலாக் கார்த்திகைத் தீபம். (௩௧)

மாமறைக்கு மெட்டா மணித்தீப மேழைகட்குச்
சேமமளித் தாக்காக்குஞ் சீர்த்தீபந்—தாமரையு
நத்துமொளிர் வண்சுனைச்சோ ணசைலதீ பந்திசைகள்
பத்துமொளிர் கார்த்திகைத் தீபம். (௩௨)

கற்றைச் சடைமுனிவர் காண்டீப மாரூரிற்
புற்றையிடங் கொண்டுறையும் பொற்றீப—மொற்றை
தவளவநத் தந்தியூன் றந்த வருணைப்
பவளவநக் கார்த்திகைத் தீபம். (௩௩)

மன்னு மிளசைநகர் மாறன் முளைவாரி
யன்னமிடச் சேவை யருடீபம்—வன்னச்
சித்ரநெடுங் கோபுரஞ்சேர் தென்னருணைத் தீபம்
பத்தமிகுங் கார்த்திகைத் தீபம். (௩௪)

நாவுக்கு வேந்து நமச்சிவா யப்பதிகப்
பாவுக்குக் கன்மிதக்கப் பண்டீபம்—வாவிக்
கயன்மேய்க் கமுகுடைக்குங் காமரரு ணைக்கோன்
பயன்மேவுங் கார்த்திகைத் தீபம். (௩௫)

சிந்தைக் கலக்கந் தெளிவிக்குந் தீபந்தாய்
தந்தைக் கிணையாகச் சார்தீபம்—விந்தை
மதினிலவுக் காறு வளரு மருணைப்
பதிநிலவுங் கார்த்திகைத் தீபம். (௩௬)

மன்னுயிர்கட் கோருயிரா வந்தருளுந் தீபமறை
யுன்னுதற்கு மெட்டாத வோர்தீபம்—பொன்னுலகைக்
கீழாக்குஞ் சோணகிரித் தீபம் வெவ்வினையைப்
பாழாக்குங் கார்த்திகைத் தீபம். (௩௭)

மூவருக்கு ளாதி முதலான தீபமுயர்
தேவருக்குங் காண்பரிய சீர்த்தீப—மேவருவி
யாலிக்குஞ் சோணமலை யார்ந்தெழுந் தீபமின்பம்
பாலிக்குங் கார்த்திகைத் தீபம். (௩௮)

கந்தனையு ஞானமதக் காரானை மாமுகத்தோர்
தந்தனையுஞ் சேயாத் தருதீப—மெந்தமைக்க
ணோக்கியருள் சோணமலை நோன்றீப மன்பருக்குப்
பாக்கியமாங் கார்த்திகைத் தீபம். (௩௯)

வேலனைநேர் மார்க்கண்டேயர் மேவுசிவ பூசைக்காக்
காலனையு தைத்த சலதீபங்—கோல
[illegible] வெணுயின்மேற குடும்
பதுமநிகர் கார்த்திகைத் தீபம். (௪0)

தக்கனுக்கு மேடத் தலையளித்த தீபமென்று
நக்கனெனப் பேர்படைத்த நற்றீப—மிக்க

விருப்பதனுற் சார்ந்தார் வினைதீர்க்குஞ் சோணைப்
பருப்பதஞ்சேர் கார்த்திகைத் தீபம். (௪௧)

கற்றவுடன் கேட்டுணர்ந்து காதலுடன் சிந்தித்தோர்க்
குற்ற துணையா வுறுதீபஞ்—சொற்றகதிச்
சேணிகர் சோணகிரி யோர்முடிமே லஞ்சலெனும்
பாணிசேர் கார்த்திகைத் தீபம். (௪௨)

பண்ணுடனே தேவாரம் பாடுமூ வாக்கிமவான்
பெண்ணுடனே தோன்றும் பெருந்தீபம்—விண்ணுடனே
சேரமலை வான்புலிக்காச் செல்வதுபோ லோங்கருணைப்
பாரமலைக் கார்த்திகைத் தீபம். (௪௩)

தந்தைதிருத் தாடடித்த சண்டேசுரருக்குஞ்
சிந்தைமகிழ் தீபஞ் செழுந்தீப—முந்தை
யொருமுடியில் வாய லுயரருணை வெற்பின்
பருமுடியிற் கார்த்திகைத் தீபம். (௪௪)

பஞ்சாக் கரத்தைமிகு பத்தியுட னுன்னினர்க்கு
விஞ்சாக்க மாக மிளிர்தீப—மஞ்சார்க்கச்
சிக்கமுழை விட்டகலாத் தென்னருணை வெற்புறமோர்
பக்கதழ்லாங் கார்த்திகைத் தீபம். (௪௫)

பந்தவினைப் பச்சத்திற் பட்டுழலும் பாதகனேன்
மந்தமதிக்கும் வண்தீபஞ்—சந்தமுங்
கொக்குமிசை கற்குயில்கள் கூவருணைத் தீபமுயர்
பக்குவர்காண் கார்த்திகைத் தீபம். (௪௬)

ஏதம் பெரிதுடையேனேத் தூக்கீ பருசாம
வேதம் பெரிதும் விழைதீபம்—கேதம்
புலிக்குங்கோ வுக்குமிலாப் பொன்னருணை வெற்பிற்
பலிக்குஞ்சீர்க் கார்த்திகைத் தீபம். (௪௭)

(௧௦)

வன்னிமதிசென் னிமிசை வைத்தருளுந்தீபமறை
பன்னிமதிக்கப் படாத்தீபங்—கன்னிமதிற்
சூரியற்குமே லுயருஞ் சோணமலைமீ துவளர்
பாரியநற் கார்த்திகைத் தீபம். (௪௮)

ஆர்த்துவந்திடுங்கொடுங்க யாசுரனையன் றொருநா
ளீர்த்துரித்துப் போர்த்த வெழிற்றீபம்—பார்த்துரைக்க
வொண்ணாதசோணகிரி யோங்கியதீபங்கோபம்
பண்ணாத கார்த்திகைத் தீபம். (௪௯)

பொய்வசமாம்வஞ்சமணம் போமழியாளுவர்களாற்
சைவசமயந் தருதீபந்—தெய்வ
முனிவர்சித்த ருண்மகிழ்ந்து மெய்யருணைசார்ந்தார்
பனியகற்றுங் கார்த்திகைத் தீபம். (௫௦)

பாரருந்திறென் றுதித்தல் பண்டையம்வாவிகரை
சீருந்தியேறக் கிளர்தீப—நீருந்திச்
சிவணுஞ்செய்மாதவர்வாழ் தென்னருணைத்தீபமெய்ம்மைப்
பாவணுஞ்செய் கார்த்திகைத் தீபம். (௫௧)

தாருவனமாதவர்க டாம்விடுத்தவேங்கைதனை
கூருகிரிறுரித்துக் கொள்தீப—மேருமுக
வோங்குமலையெட்டினுமிக் கோங்குமருணசலத்திற்
பாங்குமலி கார்த்திகைத் தீபம். (௫௨)

கன்னுபுரிபொன்னனையா னன்று திருப்பூவணத்திற்
சென்றுரசவாதமது செய்தீபங்—கன்றுதைக்
கம்பிடிகையாலருந்தி யாகுனைச்சோணமலைப்
பம்பிவளர் கார்த்திகைத் தீபம். (௫௩)

மாயப்பகவமணர் மாமதுரைக்கேவவதை
வீயச்சமர்செய் விடைத்தீப—கேயகா

னீராட்டெனேர்கார் நீள்சோணவெற்பிலன்பர்
பாராட்டுங் கார்த்திகைத் தீபம். (௫௪)

போதனந்தரத்தவரும் போற்றுந்தீபங்கொடியேன்
கோதனந்தமும்பொறுத்துக் கொள்தீப—நாதனண்டந்
தாங்கனிகர்பண்டுபெலாத் தாங்கிவளர்சோணமலைப்
பாங்கமருங் கார்த்திகைத் தீபம். (௫௫)

பொன்புரையுஞ்செம்மேனிப் புண்ணியதீபஞ்சிறிய
வென்புரைமுற்றுந்தீர்த் திடுந்தீப—மன்புரைகொண்
டேத்தியமாத்தொண்டர்களுக் கென்றுமருணாசலத்திற்
பார்த்தியமாங் கார்த்திகைத் தீபம். (௫௬)

பாவிகளும்வந்தேத்திப் பார்த்துப்பணிவாரென்
மேவிவினைதீர்த்தருளு மெய்த்தீபம்—தேவிமுலை
நீட்டுதொய்யனேர்மயில்சேர் தென்னருணைவெற்பிலன்பர்
பாட்டுவக்குங் கார்த்திகைத் தீபம். (௫௭)

சோமனைக்காருண்ணியமாச் சூடுந்தீபங்கொடிய
வேமனைக்கால்கொண்டோச் செழிற்றீபந்—தாமரைக
ணெற்றிவளர்கண்போல நீளுமருணாசலத்திற்
பற்றிவளர் கார்த்திகைத் தீபம். (௫௮)

கோளுங்கொலையுங் குடிகெடுப்புமாணவமு
நீளுமவர்க்கெட்டாது தீப—நாளுந்
திடமிக்குஞ்சோணமலைச் சென்னிவளர்நாகப்
படமொக்குங் கார்த்திகைத் தீபம். (௫௯)

தில்லையம்பலத்திற் றிருநடனஞ்செய்தீப
மொல்லையினிலின்பமுத வுந்தீப—மெல்லை
யிலாண்டுதவஞ்செய்தவரா லேருணைவெற்பிற்
பலாண்டுபெறுங் கார்த்திகைத் தீபம். (௬௦)

665

ஆணிப்பொன்மேருவில்லா வம்பரியாச்சேடனையே
நாணியெனக்கொண்டோர் நகைதீபம்—வேணி
விழுதிலாரத்தவர்கண் மேவருணைவெற்பிற்
பழுதிலாக் கார்த்திகைத் தீபம். (௬௧)

மின்னார்மணியரவும் வெண்மதியுநேசிக்கப்
பொன்னார்சடைமேற்புனை தீப—நன்னாரி
பூரிக்குங்கும்பமுலை போலோங்குஞ்சோணமலைப்
பாரிக்குங் கார்த்திகைத் தீபம். (௬௨)

பன்னருஞ்சம்பந்தருக்குப் பந்தருநற்பல்லக்குஞ்
சின்னமுமுத்தாலளித்த சீர்த்தீபஞ்—செந்நெற்
கழனிபுடைசூழருணைக் காமர்மலைமீது
பழநிமலைக் கார்த்திகைத் தீபம். (௬௩)

பாகத்துமையும் படர்சடைமேற்சானவியு
மாகத்துடன்வாழ் முதிர்தீப—மேகத்
துழனிமிக்கார்சோணமலைத துய்முடிமேன்ஞானப்
பழகர்க்குங் கார்த்திகைத் தீபம். (௬௪)

பொல்லாமலவிருட்டைப் போக்குந்தீபம்புவன
மெல்லாந்தாமாகு மெழிற்றீபம்—வல்லாளன்
மைந்தனெனவந்த வலிமையருணாசலத்திற்
பந்தமிருங் கார்த்திகைத் தீபம். (௬௫)

எங்கெங்கேயன்பரிருந் தெவ்வாறுவேண்டுகினு
மங்கங்கேயவ்வா றருடீபஞ்—சிங்கஞ்சேட்
டஞ்சமுகட்டார்ந்துமுகி லார்க்குமருணாசலத்திற்
பஞ்சமுகக் கார்த்திகைத் தீபம். (௬௬)

எட்டுமிரண்டுந்தெரியா வேழையேனென்பாருட்
கட்டுப்பட்டோங்குங் கனதீப—மட்டிலா

மேன்மைதருசோணகிரி மேவும்பிறைக்கொழுந்தின்
பான்மைதரு கார்த்திகைத் தீபம். (௬௭)

கங்கைதலைவேணியசிற் கம்பாகதியிலுடை
கொங்கைவிளைத்தழும்பு கொள்தீபஞ்—சங்கையிலாப்
புங்கவர்சேர்சோணகிரிப் பொற்சடையார்திருப்பூத்த
பங்கயனேர் கார்த்திகைத் தீபம். (௬௮)

செம்மையடியார்பூசை செய்துவந்தகாரைக்கா
லம்மைக்காலங்காட் டருடீபம்—வெம்மை
யரிகரிக்குமில்லா வருளையடைந்தார்நோய்
பரிகரிக்குங் கார்த்திகைத் தீபம். (௬௯)

காணரியமெய்ஞ்ஞானக் காட்சியருடீபமன்பர்
வேணவரந்தருநன் மெய்த்தீபஞ்—சோண
கிரிமுடிக்கண்மேவியொளி கேழ்ப்புவனமுற்றும்
பரிமளிக்குங் கார்த்திகைத் தீபம். (௭௦)

பாண்டுமகன் வில்லாற் பரிந்தடிக்கப்பாசுபத
மாண்டுமையோடெய்தியருடீப—நீண்டு
விசும்புருவுசோணகிரி வெற்புமிளிட்ட
பசும்பொனிகர் கார்த்திகைத் தீபம். (௭௧)

பன்னற்கரியசெழும் பச்சைப்பவளமென
வன்னமிரண்டா வளர்தீபந்—தென்னருளை
வெற்பரெனும்வெற்பின் வெளிதிட்டவெண்கட்டிப்
பற்பநிகர் கார்த்திகைத் தீபம். (௭௨)

மான்மேற்புலிபோல் வருமிடரெல்லாம்போக்கி
பான்மேவியவர்க்கெதிரேவந் தாருடீப—மேன்மே
லணிகொளருணாசலமா மம்புயமேற்ற
பணிலநிகர் கார்த்திகைத் தீபம். (௭௩)

தேடரிய தீபஞ் சிதம்பரத்தி லாடெடுத்து
நாடியப் பேர்படைத்த நற்றீப—நீடக்
கரியார்க் குலக்காக் கனவருணை சார்ந்தார்
பசிதீர்க்குங் கார்த்திகைத் தீபம். (௭௪)

சாகையுடன் சாத்திரமுஞ் சார்தரிய பல்கலையு
மாகமபு ராணமுத லாந்தீபந்—தேகப்
பிணியகல வந்தெவரும் பேசிமகிழ்ந் தேத்திப்
பணியருணைக் கார்த்திகைத் தீபம். (௭௫)

துப்பற்ற வெண்ணையுமோர் தொண்டாகக் கொள்தீபந்
தப்பற்ற சேவை தருதீப—மொப்பற்ற
வட்டாங்கயோகிகள்வாழ் வாக்கவரு ணாசலத்திற்
பட்டாங்காங் கார்த்திகைத் தீபம். (௭௬)

தூர்த்தவழி வாய்வந்து தோராவியற்பகையார்
சீர்த்தவில்லாளைக்கொண்டு செல்தீபந்—தீர்த்த
கலைஞருஞ் சோணமலை நாடினோர்க்குக்கிட்டும்
பலனுறுங் கார்த்திகைத் தீபம். (௭௭)

கொக்கிறகும் வெள்ளெருக்குங் கோளரவாதிய
மக்குமணியு மணிதீப—மிக்க
வரிசையுற்ற சோணகிரி வாழ்த்துனர்க்கு வேண்டும்
பரிசளிக்குங் கார்த்திகைத் தீபம். (௭௮)

இக்கடன்ஞாலத்தி லிறப்பு பிறப்பென்னுந்
துக்கமுறு வோர்க்கருளுந் தூய்தீப—மிக்க
திருமணிசேர் சோணமலைச் செம்மலின் முத்தின்
பருமணிநேர் கார்த்திகைத் தீபம். (௭௯)

மான்மீனிகர்த்தவிழி மாதரார் மையலுற்ற
நான்மீனக் காண்பார்க்கு நற்றீபம்—வான்மீ

னுதிர்ந்ததென வேய்முத் தொளிர்சோணவெற்பிற்
பதிர்ந்ததிருக் கார்த்திகைத் தீபம். (௮௦)

தீங்கினில்வீ ழாதடியார் சீராருமுத்தியெனும்
பாங்கினிலேசெல்லப் பகர்தீப—ஊங்கின்மதி
சத்திரமேந்துங்காம்பாத் தானோங்குஞ் சோணவெற்பிற்
பத்திரமாங் கார்த்திகைத் தீபம். (௮௧

பந்தத்தொடக்கைப் பரிகரிக்குந் தீபநிதம்
வந்தடியேனுள்ளம் வதிதீப—மிந்தத்
தரணிபணி சோணாசலமுடியினல்ல
பரணிவரு கார்த்திகைத் தீபம். (௮௨)

கானகவேடன் றனலிற் காய்ச்சியெடுத் துண்டீந்த
ஊனமகிழ்ந்தினிதென் றுண்டீப—மான
சராசரமும்போற்றுந் தனியருணை வெற்பிற்
பராபரமாங் கார்த்திகைத் தீபம். (௮௩

காசிமன்னன் றன்னைக் கவியாக்கிப் பின்பவன்சீர்
மாசிலுருவந்தந்த வண்டீபங்—காசினிமீ
னாற்றுதவம்போலாங் கருணைவள ரன்பர்வினை
பாற்றுமெழிற் கார்த்திகைத் தீபம். (௮௪

கல்லாலடியிற் கரங்காட்டி நால்வருக்குஞ்
சொல்லாதுணர்த்துஞ் சுபதீபங்—கொல்லா
விரதமொடுதென்னருணை மேவுணருள் ளத்திற்
பாதமிலங் கார்த்திகைத் தீபம். (௮௫

மெச்சிநகராசமகள் வேண்டுநல்ல கம்பனெனக்
கச்சிகேர்வாழுங் கனதீபங்—கொச்சையெயின்
மாமகளிர்வண்டன் மகிழருணை தன்னிலன்பர்
பாமருவுங் கார்த்திகைத் தீபம். (௮௬

ஆனஞ்சாடுந்தீப மன்பர் பிறப்பிறப்பா
ஊனஞ்சாடுந்தீப மொண்டீபம்—வானஞ்
செவித்திரவெல் லும்போற்றிச் சேரருணைவெற்பிற்
பவித்திரமாங் கார்த்திகைத் தீபம். (௮௭)

கேட்டவரமெல்லாங் கேடுபடா மற்கொடுத்தே
காட்டமுடனுண்டருளு நற்றீபம்—வாட்டமிலாப்
புள்ளிசேர்மான்கள் பொலியருணை கண்கெடற்
பள்ளிதாழ் கார்த்திகைத் தீபம். (௮௮)

மானாயகண்ணியுடன் மால்விடைமேல் வேய்ங்குழல்கேட்
டானாயர் முன்வந் தருடீபம்—வானார்
தருவதனினுஞ்சிறந்த வாருவளர் சோணப்
பருவதம்வாழ் கார்த்திகைத் தீபம். (௮௯)

எறிவருந்தீப மேததுயவர்வல்வினையே
ஆறிவருந்தீப கோன்றீபஞ்—சீறிவரு
மஞ்சிபமாவுற்றறிநாண் மாவருணை வெற்பினிலின்
பஞ்சிறந்த கார்த்திகைத் தீபம். (௯௦)

பாம்பணியுந்தீபம்பத்திநெறி சேரடியார்
தாம்பணியுந்தீபந் தனித்தீப—மாம்பல்
விகசிக்கும்வாவி மிளிரருணை வாழ்கற்
பகமொக்குங் கார்த்திகைத் தீபம். (௯௧)

கண்களிக்குந்தீப கவிலருமுன் [illegible]
மின்களிக் [illegible] பம விழைதீபம்—வன்களிறு
தண்ணருவி பெட்டையுடன் ஊறுஞ்சோணவெற்பிற்
பண்ணவர்தேர் கார்த்திகைத் தீபம். (௯௨)

மங்களஞ்சேர்தீபமொரு மாசடையா மாசடையித்
திங்களஞ்சேர்தீபந் திருத்தீபம்—வெங்களஞ்சேர்

மாலுமிருவர்க்கரிதா மன்னருணை வெற்பிடைவிண்
பாலுயருங் கார்த்திகைத் தீபம். (௯௩)

பாதாரவிந்தம் பரவுந் தொழும்பருக்கோ
ராதாரமாகி யருடீபம்—போதாருங்
கொங்கிலங்குஞ்சோலை குலவருணை வெற்பினுமென்
பங்கினும்வாழ் கார்த்திகைத் தீபம். (௯௪)

சங்கரிக்கோர்பங்குந் தகையுடனே மற்றையொரு
பங்கரிக்குமாகப் பகிர்தீபம்—வெங்கரித்தோல்
போர்த்ததெனமங்குல் பொலியருணை வெற்பிலன்பர்
பார்த்தருள்சேர் கார்த்திகைத் தீபம். (௯௫

ஆணிப்பொன்னம்பலத்தி லாடுந்தீபம் பொல்லா
மாணிக்கதீபமகி மைத்தீபம்—வேணிக்க
ணீராருந்தீபமெழி லீமெருஞ்சைலத்திற்
பாராருங் கார்த்திகைத் தீபம். (௯௬)

அந்தவச்சிராங்கதனை யச்சுவத்தின் கீழ்வருத்திப்
பிந்தவனேத்தவருள் பெய்தீபம்—வந்தார்க்
குதவிசெய்வோ மென்றருணை யுற்றடியார்வேண்டும்
பதவிதருங் கார்த்திகைத் தீபம். (௯௭)

பண்டுபுளகர்சுரனைப் பாவந்தவிர்த்தாண்டு
கொண்டுவகைகூர்ந்த குணதீபந்—தொண்டு
கரவிலாமற்செய்வார் காணருணை வெற்பிற்
பரவிவாழ் கார்த்திகைத் தீபம். (௯௮)

சிந்தாமணிகாம தேனு பதுமநிதி
யுந்தாழ்ந்தவர்க்கருள்செ யுந்தீப—ஈந்தா
வியப்புள்ள சோணமலை மேற்றீபநல்ல
பயப்புள்ள கார்த்திகைத் தீபம். (௯௯

புத்திதருந் தீபநல்ல புத்திரசம் பத்துமுதல்
சித்திதருந் தீபஞ் சிவதீபஞ்—சத்திக்
குயிராகுஞ் சோணமலை யோங்குவளர் ஞானப்
பயிராருங் கார்த்திகைத் தீபம். (௧௦௦)

வாழி.

வான்வாழி மண்வாழி மன்னவனும் வாழிபுய
நான்வாழி மெய்ம்மையடி யார்வாழி—மென்மேலுஞ்
சோபனவண் ணாமலையுந் தூயதிருக் கார்த்திகைத்
தீபமும் வாழி சிறந்து.

கார்த்திகைதீபவெண்பா
முற்றிற்று.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

சோணாசலவெண்பா.

காப்பு.

வாணாளை வீணாள வையகத்திற் போக்காமற்
சோணாசல வெண்பாச் சொல்லுதற்கு—நாணாளு
மிங்கழுநீ ரானைவினை யேக்கமறக் காக்குமுக்கட்
செங்கழுநீ ரானைவினை தேர்ந்து.

நூல்.

ஓங்காரபீடத் துறையும் பிரானின்னைப்
பாங்காரக் காணப் பணித்திடா—யாங்கார
வெம்பிரமா நற்றிருமான் மெய்யதுமாறித் தொடர்மா
சம்பிரமாசோணா சலா. (௧)

சங்கைச் சடையுங் கருணைத் திருமுகமு
மங்கை மழுமானு மரைக்கசைத்த—பொங்கரவுஞ்
செந்தாளு மெங்காளுஞ் சேவிக்க மேன்மேலுந்
தந்தாளுஞ் சோணா சலா. (௨)

எற்றைநாண் மாதுமையோ டென்முன் வருவாயோ
வற்றைநா ளல்லநா ளானநாள்—மற்றைநாள்
கண்மநாள் வீணாள் கரிநா ளிருட்கோன்
சன்மநாள் சோணா சலா. (௩)

தீவாய்ப் படநாகந் தீண்டினாலுந் துயர்கூர்ந்
தாவாவென் றேங்கியழுங் காம—னாவால்
விடாதார வென்பார்க்கு வெய்யவிட முண்டோ
சடாதரா சோணா சலா. (௪

673

கோயில்வலஞ் செய்யேன் கும்பிடே னின்றுருகேன்
வாயிலெழுத் தஞ்சும் வழுத்துகிலே—னாயிற்
கடையாளாப் பேய்போற் கவல்கின்றேன் கங்கைச்
சடையானா சோணா சலா. (௫)

மாதேவா சங்கரா மைக்கண்டா முக்கண்ணா
கோதேது மில்லாக் குணாகரா—பூதேசா
வோம்பவா வோம்பவா வுள்ளவா வுள்ளவா
சாம்பவா சோணா சலா. (௬)

மெய்ந்நூலை விட்டுவிட்டு வேறுவே றன்னபல
பொய்ந்நூலைக் கற்றுப் புலம்புகின்றா—ரென்னோர்க்கும்
பொல்லாவா தைக்குளிர்க்குப் போர்வையுயர் கம்பலமா
சல்லாவா சோணா சலா. (௭)

பிறையிட்ட பொற்சடையெம் பெம்மானே நின்றா
ணிறையிட்ட வன்பா கினேந்து—முறையிட்டுங்
கேளாது போலிருந்தாற் கெட்டேனி னிக்கணமுந்
தானாது சோணா சலா. (௮)

வேதாகமந் தெரிந்த மேலோ ருடன்கலந்து
மாதாகமான் புனற்காண் மாண்பினுளப்—போதாகச்
சத்துவா னந்த சகசநிட்டை தந்தருளாய்
தத்துவா சோணா சலா. (௯)

மண்ணேறு பல்வகையர் மன்பதைக ளத்தனையுங்
கண்ணேறு நீங்கிக் களிப்பதற்கோ—புண்ணேறு
சிந்தனையே யென்னையுமோர் சீவனென விவ்வுலகிற்
றந்தனையே சோணா சலா. (௧௦)

தண்டா மறையிலைமேற் றண்ணீரா வென்றனுள
மண்டாத் துயரா லலைகின்ற—கண்டாய்

சிலையெழுத்தா வோர்மொழியுஞ் செப்பகிலா யீதென்
தலையெழுத்தா சோணசலா. (கக)

பேயுடனே நட்டம் பிரியமுடன் செய்பவனிச்
சேயுடனே சோரதென் செப்புவா—யாயுலக
மாமகண்டா வேதண்டா வண்டரண்டா வாலமுண்ட
சாமகண்டா சோணசலா. (கஉ)

மாயாம லம்புணர்ந்து மாதவமாஞ் சைவநெறித்
தோயாம லம்புவியிற் சோர்கின்றேன்—றூயாகி
வேண்டவா வின்படியே மெய்ஞ்ஞானப் பால்கொடுப்பாய்
தாண்டவா சோணசலா. (கங)

துன்பக் கடல்வீழ்ந்த தொண்டனேன் றன்னைநீ
யின்பக் கடலாட்ட வெண்ணினா—லன்பர்
கடுப்பாரோ வைவாரோ நம்பியவ னென்று
தடுப்பாரோ சோணசலா. (கச)

தெய்வமுண் டென்றோர்வேளை தெய்வமின் றென்றோர்வேளை
மைவளருந் துட்டமன மிருந்தா—லுய்வதெவன்
ஈசனென் றூரர்க் கீண்டவா வாண்டாளீ
தாசனுன் சோணசலா. (கரு)

எத்தனைதான் கற்றென்ன வெத்தனைதான்கேட்டென்ன
வத்தனையு மற்றோர்க் கவர்ந்தென்ன—சித்தந்
தராசனுர்க் கல்லாலுன் றாளுண்டோ மேருச்
சராசனா சோணசலா. (கசு)

அன்புவளர் தொண்டருள மாலயமா வெப்பொழுதுந்
தென்புவளர் தேவியுடன் சேர்ந்துவளர்—நின்புகழைப்
பாடுவேன் பந்தவினைப் பாசத்தை வேரறவே
சாடுவேன் சோணசலா. (கஎ)

கருநிறத்த காகங் கனகமலை சார்ந்தாற்
றிருநிறத்த வாகுஞ் செயல்போ—லிருநிறத்த
வாகரநா னுனைச்சார்ந் தன்பனுவேன் கருணை
சாகரா சோணசலா. (கஅ)

வன்பா தகஞ்செயவும் வஞ்சர்தமைச் சேரவு
மின்பா தகஞ்ச நினைந்துவா—[illegible]
சிதானந்தா மந்தாகினிக் குவந்தா யெந்தாய்
சதானந்தா சோணசலா. (கக)

மான்செய்த கண்ணியொடும் வாலவடி வேலனொடும்
[illegible]ன்செய்த காட்சி வழங்கென்றால்—யான்செய்த
கண்டார வந்துமுகங் காட்டகிலா யீதுனக்குத்
தன்மமா சோணசலா. (உ0)

வெய்யபிறப் பீனுமுயர் வித்தாகு மாசையெனு
வுய்யநல்லோர் சொற்றநெறி யோராயன்—மையலிலே
யாழ்கின்றே னின்சீரு ளெள்ளளவுமின்றித்
தாழ்கின்றேன் சோணசலா. (உக)

மூன்று விளஞ்சேய்க்கு மூண்டநோய்க் காமருந்து
பெற்று ளருந்துகின்ற பெற்றிபோற்—சிற்றம்
பலத்துவந்த மன்பதைக் காப்பாக நடஞ்செய்நிற்
தலத்துவந்த சோணசலா. (உஉ)

ஆட்டுகின்றா யாடுகின்றா[illegible]லையுங் காண்கின்றாய்
கூட்டுகின்றாய் [illegible]ன்றாய் கொள்கைபல—நாட்டுகின்றாய்
ஞாலமெலா மிவ்வகையே நானறியே னின்னுடைய
சாலமெலாஞ் சோணசலா. (உங)

என்னைப்போ லேழையிலை யெவ்வெவ் வுலகத்து
நின்னைப்போல் வள்ளலில்லை நிச்சயமே—பின்னையே

யென்றொழிலேயாசித்த லில்லையெனா நீவதன்
றன்றொழிலே சோணா சலா. (௨௪)

நறும்பூவுடன்சேர்ந்த நாருமணமெய்து
மிறும்பூதன்றைய வெளியேன்—பெரும்பே
றதுவேதானாக வடியருடன்சேர்வே
சதுவேதா சோணா சலா. (௨௫)

பத்தருக்குஞ் சித்தருக்கும் பண்ணவர்க்கும் விண்ணவர்க்கு
முத்தருக்குமற்றவர்க்கு மூவரெனும்—கத்தருக்கு
நற்றுணையாய் வாழ்கின்றாய் நாயேற்கு நாயகனார்
சற்றுணையாய் சோணா சலா. (௨௬)

வணங்காத் தலையும் வழுத்தாத நாவு
மிணங்கா மனமு மெனக்கே யணங்கா
மிகுதியா வின்னம் விளம்புவதே னந்தோ
தகுதியா சோணா சலா. (௨௭)

என்னைநீ நாடப்போ வெண்ணமறந் தொருவன்
பின்னேசேறுகின்ற பெற்றிபோற்—கொன்னேவெங்
கன்மத்தைச் செய்து கழிக்கின்றே னல்லார
சன்மத்தைச் சோணா சலா. (௨௮)

அண்ணா மலையென் றண்டமெலாம் பெற்றெடுத்த
வுண்ணா முலையென் றுமுன்னாளீந்த—பெண்ணாத
நாளில்லை நாயேற்கு னற்றுணை யாதலையுந்
தாளில்லை சோணா சலா. (௨௯)

இலவுதனைக் காத்தே யிருக்குங் கிளிபோற்
குலவுகுமெம் பத்தையே கோரி—விலகினேன்
மாதுரியா னந்தசுகம் வாய்க்குமோ வேழைக்குச்
சாதுரியா சோணா சலா. (௩௦)

காட்டைவிட்டுக் காட்டையுற்று நற்கனிதேரோர்சிறுவன்
வேட்டையிற்றப் புங்கொடிய வேங்கைகண்டு—கோட்டை
யரண்புகுந்தேயுய்ந்ததென யானுய்யநின்பூஞ்
சரண்புகுந்தேன் சோணா சலா. (௩௧)

வானே முகவட்ட மாமூர்த்தி யாவிளங்குங்
கோனே நினதுபதங் கூடாமல்—யானே
தனித்தேனோ விங்குத் தளரலிதற் கென்றே
சனித்தேனோ சோணா சலா. (௩௨)

தேவாரந் தன்னைச் சிரத்தையா காயடியே
னாவாரப் பயந்துவிழிக்—கோவாரக்
கன்னிகருமுள்ளங் களித்துருகும்வாழ்வருளாய்
தன்னிகருஞ் சோணா சலா. (௩௩)

ஞாயிறு திங்க ணயனஞ் செவ்வா யுமைமெய்
மேயபுதனின்மெய் வியாழமுறை—வாய
தனியாமோர் வெற்புதலை வெள்ளியற்குச்
சனியாமோ சோணா சலா. (௩௪)

பெண்ணாசையாதியாப் பேசுகின்றமூவாசை
யெண்ணாசைவையகத்தி லேற்காதோ—அண்ணா
மலையானேகொண்டவர்யார் மற்றாசைதம்மிற்
றலையானே சோணா சலா. (௩௫)

ஓர்கினிரு தாண்மூமல மோவுறவே நாற்கரணஞ்
சேர்தரவஞ்சக்கரமுஞ் சிந்தித்தா—ரோர்பொழுது
மேழுவே தத்திசையி னேத்தருணெட் டங்கமுறத்
தாழுவேன் சோணா சலா. (௩௬)

காலத்தே சென்று சிவ கங்கையிலே நீராடிப்
பாலத்தே நீற்றைப் பரிந்தணிந்து—மூலமா
[illegible]

மந்திரமேயோதிநினை மன்னிவலஞ்செய்வதுய்யுந்
தந்திரமே சோணாசலா. (௧௭

நின்னைச்சதமா நினைக்குஞ்சிறியேற்கும்
பின்னைவருமைப் பிணியுண்டோ—பொன்னைச்
சதாசிவாவென்றழைக்குந் தோகைபுணர்சாம்ப
சதாசிவா சோணாசலா. (௧௮

உடல்பொருளோடாவி யுனக்கேயளித்தேன்
கடலுலகங்காண வெனைக்காவா—தடலுடனே
யிங்கடத்தைநீபுரிந்தா லெவர்பாற்கூறுவனென்
சங்கடத்தைச் சோணாசலா. (௧௯)

தன்னிகரில்சோண சயிலனேயென்பாச்
சொன்னிகழ்பாமாலையன் று சூட்டினருக்—கிந்நிலத்தின்
முன்மானன்றெட்டரிய முண்டகத்தாளன்றியுண்டோ
சன்மானஞ் சோணாசலா. (௨௦)

வாக்கின்வருகவென்றால் வாய்நோமோதாழ்ந்தேனைத்
தூக்கின்மலர்க்கை துவளுமோ—நோக்கின்
வலிக்குமோநின்கடைக்கண் வள்ளலுக்குமுள்ளஞ்
சலிக்குமோ சோணாசலா. (௨௧)

நன்னெஞ்சுசுடனுன்ற னாண்மலர்த்தாள்பூசியே
னென்னெஞ்சகல்லா யிருப்பதா—னின்னெஞ்சங்
கல்லாபார்மேலென்னைக் காவாதென்காரணமோ
சல்லாபா சோணாசலா. (௨௨)

தஞ்சமெனநின்கமலத் தாளடைந்தானிருக்க
வஞ்சகமனென்பால் வருவானோ—நஞ்சமிக்க
பொங்கராவேணிப் புனிதாமார்க்கண்டனையாள்
சங்கரா சோணாசலா. (௨௩)

679

கரங்குவித்துமெய்சிலிர்த்துக் கண்ணீருதிர்த்துச்
சிரங்குவித்துத்தெண்டனிட்டுத் தேம்பி-யிரங்குனர்க்கு
வந்திடுவாய்கேட்ட வரந்தருவாய்நாயேற்கென்
நந்திடுவாய் சோணாசலா. (௨௪)

ஒருவனொருத்தியுட னுறைகைபெறக்கூடும்
பருவம்பனித்துளிபோற் பாய்ந்து-கருவுற்
றுருவஞ்சார்ந்துற்பவித் திங்கோடியுழலாதான்
சருவஞ்சா சோணாசலா. (௨௫)

வன்பிறவிநோய்க்கு மருந்தாவிருந்தடியார்
துன்பிறவிழிக்குநினைச் சூழ்ந்தவருக்-கென்பிறசிர்
சிற்பராவம்பலத்திற் றெய்வநடஞ்செய்தருளுந்
தற்பரா சோணாசலா. (௨௬)

ஓரொன்றில்லாம லோடெடுத்துப்பிச்சைக்கா
ஊரூராச்சுற்றி யுழல்கின்றாய்-பேருரி
லேற்றுவாயென்றனை யெப்படியானம்புவது
சாற்றுவாய் சோணாசலா. (௨௭)

அன்பாரவுன்ற னடிக்கமலம்பூசித்த
லென்பாரமென்னை பிரசித்த-லுன்பாரங்
காருணீதா கருணாகராமழுமான்
தாரணா சோணாசலா. (௨௮)

பந்தக்காலென்னப் பருத்தவுடல்சுமப்பே
னந்தக்காலன்வெகுண்டெ னாவிகொள-வந்தக்கா
லஞ்சிலிப்பேனீவந் தருளாயேலென்செய்வேன்
சஞ்சலிப்பேன் சோணாசலா. (௨௯)

ஒருமணத்தைநீக்கி யுயர்நாவலூரர்க்
கிருமணத்தைச்செய்தாண்ட தென்னீ-வருமணத்தோர்

மாட்சியோவென்பாரேல் மங்கையுமைகங்கையிவர்
சாட்சியோ சோணாசலா. (௩௦)

ஞாதுருமெய்ஞ்ஞான கவிலரியஞேயமென
வோதருமம்முப்புருளி னுண்மைதனைப்-பேதுறவேன்
றேர்வேனோதேர்ந்துன் றிருவாளர்தஞ்சபையிற்
சார்வேனோ சோணாசலா. (௩௧)

ஞாலமிடலோடருந்து காரணனேயாதியரிக்
காலமிடர்தீர்த்தெம்மைக் காத்தியெனா-வோலமிட
நஞ்சுமுண்டாவுன்னைவிட நாயேற்குவேறொரு
தஞ்சமுண்டா சோணாசலா. (௩௨)

அபயகரமு மருள்சேர்முகமு
முபயபதமு முமையா-ளிபமுகன்சேய்
கண்ணவாமால்விடைமே னேயென்சரணுனக்கே
தண்ணவா சோணாசலா. (௩௩)

அன்பேதிரியா வருளேசெய்யாகமிக
நன்போகமகலா நாணுனு-முன்பேமெய்ஞ்
ஞானமாந்தீபமிட்டு கண்பொவோழ்வாழ்வருள்சேர்த்
தானமாஞ் சோணாசலா. (௩௪)

மணமென்று கூறியதோர் வாயாலேமற்றும்
பிணமென்றுகூறுகின்றார் பின்பும்-குணமென்ற
வெம்மதியேனானு மெய்யினைமெய்யென் றனுவுஞ்
சம்மதியேன் சோணாசலா. (௩௫)

மாசகன்றவாதவூர் வள்ளல்வழங்குமணி
வாசகமேமாமறைக்கு மாண்பென்றே-பேசவே
னங்கையானியெழுது மன்பேபெருஞ்சான்றாஞ்
சங்கையா சோணாசலா. (௩௬)

631

இரந்தும் பரிந்தே யிடுவென்று நீதி
காத்துவிடா திருக்கக் கச்சூர்ப்—பொருந்தி
யுணவா தரித்து நம்பியுண்ண வளித்தாய்சீர்
ணைவாத சோணாசலா. (௩௭)

ாலையளித் தாய்காழிப் பாலனு ரின்புறவே
நலையளித் தாயப்பர் தன்புறவே—யேலவிலை
ன்மையோ வாயுண் முறைக்காமத்தி னல்விளைந்த
ன்மையோ சோணாசலா. (௩௮)

ற்பனையெ லாங்கடந்த காரணா நீதகுக
ற்பரனே நின்றான் சரண்புகுந்தே—னற்பனெனக்
கொள்ளாதே குற்றங் குறியாதே யன்னியமாத்
ள்ளாதே சோணாசலா. (௩௯)

சேன்விபூதிதனைப் பூணேன்சிவமணியைப்
பேசேன்பஞ்சாக்கரத்தைப் பேதமையை—வீசேன்
லவனேபோற்றிரிவேன் வாழ்வேனோவேணிச்
லவனே சோணாசலா. (௪௦)

ளவைகடந்த வருளொளியேநின்பே
ளவையனுவு முணரேன்—களவகன்றோர்
ந்தியேமெய்ஞ்ஞான தாண்டவாவானந்த
ந்திரிய சோணாசலா. (௪௧)

தாண்டர்களுமாதவருந் தூயசிவகாமியுநல்
ண்டர்களுங் காணமன்று ளாடுகின்றாய்—பண்டிருவர்
ணேமேயென்று கருதுங் கமலப்பூந்
ணேமே சோணாசலா. (௪௨)

ணிலே யெண்ணிலே யல்லா வுயிர்களிலே
ணிலே யென்போல் விழைபவர்யார்—வேணி

வியானனே பொல்லா வினையேனைக் காப்பாய்
தயானனே சோணாசலா. (௯௩)

தொல்லை வறுமையினுந் சோர்ந்தாலு மென்மேனி
யில்லையெனும் லோபிகளை யாசியேன்—தில்லையிலே
வேம்பசிவ தைக்கழுஞ் செய்வேண்டும் பாலாழிதந்த
சாம்பசிவா சோணாசலா. (௯௪)

கருணைபுரிந் தென்னைநீ காத்திடுயே வென்ன
யருளையடைந்த துண்டோ வன்பாத்—தருணமல
ரிண்டையுண்டோ தொண்டுண்டோ வென்றுண்டென் றன்பர்செ
சண்டையுண்டோ சோணாசலா. (௯௫)

திட்டெண்டு வெண்ணெய்த் திருடியுண்டு மாதராற்
கட்டுண் டடியுண்டான் கண்ணனே—பிட்டுண்டு
வாழ்வெவர்க்கு நல்கவே மாறனடி யுண்டாய்நீ
தாழ்வெவர்க்குச் சோணாசலா. (௯௬)

தாயுமில்லை தந்தையில்லை தான்றனிய னானாய்நீ
சேயுமில்லை செய்களுக்குத் தேர்த்திதனை—யாயுங்கால்
வர்க்கமில்லை முன்பின் மரபிலைநீ வத்துவென்னத்
தர்க்கமில்லை சோணாசலா. (௯௭)

கண்ணியவெற் போவெள்ளி கற்சிலையும் பொற்சிலையாம்
புண்ணியமா தேவியன்ன பூரணியே—யுண்மையிவை
நம்புமென் றன்பத்தர் காடியிரக் துண்டகதை
சம்புவே சோணாசலா. (௯௮)

விளைவான் மலிந்திடு நெல்வேலி யுனக்குண்ட
வினையான் குடிமாற னின்பா—மூலையதனை
வாரிவருங் காலை மறக்காவோ மால்விடைமேற்
சாரிவருஞ் சோணாசலா. (௯௯)

683

அன்று மலையானு மப்பாநீ தாயுமையு
முன்று முலையா ளுண்மைசொல - வொன்றுதா
மிக்கதோ நல்லோர் வியந்து துதிசெய்யத்
தக்கதோ சோணாசலா. (௱0)

சூதாடப் பொய்பேசத் தீயோரை நிந்திக்க
வாதாட வஞ்சிக்க வல்லவன்யான் - வேதாவின்
றோதகமோ நின்றுடு திக்கறியே னென்றுடைய
சாதகமோ சோணாசலா. (௱௧)

குகைநமசி வாயர் குருநமசி வாயர்
தகையுறு வெண்பா மாலைசாத்திப் - புகழடைந்தா
ரேத்துகின்றே னுள்ளபடி யில்லையவர் போலச்
சாத்துகின்றேன் சோணாசலா. (௱௨)

நந்தவனம் புக்கு நறுமா மலரெடுத்துச்
சுந்தரப்பன் மாலைதொடுத் தளித்தே - யெந்த
யருணேசா வெண்பாவை யாபத்திற் காக்குந்
தருணேசா சோணாசலா. (௱௩)

முயலகன் மேல்வைக்கா முனரித் தாளிந்த
மயலகன் மேல்வைத்து மகிழ்வா - வியல்சேர்
பரதமே செய்க பகனுனக்கு முண்டு
சரதமே சோணாசலா. (௱௪)

பூவடிவம் வெற்பரையன் புத்திரிக்குத் திண்டரிய
நீவடிவ நின்றனக்கே நீர்க்கச்சி - மாவலச்சீத்
சந்தேகம் வாடாமற் றன்வலைத்தா ளீயிலைத்தாய்
சந்தேகந் சோணாசலா. (௱௫)

45

நன்மார்க்க நான்மார்க்க நண்ணுஞ் சரியையுறு
முன்மார்க்க மேனு முயலாத — வென்மார்க்கத்
துன்மார்க்க மாதவினாற் சூழ்வதெங்கே மேலான
சன்மார்க்கஞ் சோணா சலா. (௭௬)

பல்லாயிரந் தரமாப் பாலன்குறை யெல்லாஞ்
சொல்லா திருக்கவிலை சொல்லியுமென் — பொல்லாத
புத்தியின் றோடத்தாற் பொருத்தமின்றோ வாண்டருளச்
சத்தியின்றோ சோணா சலா. (௭௭)

ஆடரங்கா வன்பர்மன மானந்தக் கூத்துகந்தாய்
கோடரங்கா ணென்றன் கொடியமன — நீடரங்க
மண்டிப்பாய்வேக மடங்கவெங்கு மோடுவதைத்
தண்டிப்பாய் சோணா சலா. (௭௮)

மழைகுளிர்வெங் காற்றுருமு வல்லிடிதீ வெய்யில்
குழைபசிநோய் கள்ளர் கொடுங்கோல் — விழைகூற்றுந்
தீங்குவா ராதவலஞ் செய்வாரை நீயிருந்து
தாங்குவாய் சோணா சலா. (௭௯)

பூமாலை கையும் புனன்மாலை நேத்திரமும்
பாமாலை நாவும் பரிந்தணியுந் — தாமே
நெடுமாலைத் தேடவைத்த நீயெனைச்சேர் பார்கூய்த்
தடுமாலைச் சோணா சலா. (௮0)

முற்காசி மன்னன் முகத்தைக் குரங்காக்கிப்
பிற்காசி தந்தவருள் பெய்தனையே — யெற்காசி
யப்படியேன் றண்டித் தருள்புரியா யந்தோயான்
றப்படியேன் சோணா சலா. (௮௧)

தென்பாகத்தேவியுடன் சேர்ந்துசிறுத் தொண்டரிட்ட
வன்பாங் கறியை யருந்தற்கே — யின்பாப்போய்ச்
சீராளா வென்றழையுஞ் சேயையெனத் தந்தளித்த
தாராளா சோணா சலா. (௮௨)

ஆக்குவாய் காப்பா யழிப்பாய் மறைப்பாய்பின்
னோக்குவா யாவு நொடிப்போதே — தாக்கு
மியியேற்கு நேர்ந்தா னெத்தனையோ கற்பந்
தமியேற்குச் சோணா சலா. (௮௩)

தாயிலாச் சேய்போற் றவிக்கின்றே னென்றுரைத்தா
லாயிலா னென்ற றைவையென — வாயிலா
ஆமனே யொத்தியா னென்றமுறை யேனிதழித்
[illegible] சோணா சலா. (௮௪)

அனங்காணா னஞ்சுண்டா னம்மை வினையாற்
புனையுடம்பும் பாதியாய்ப் போனான் — றினமுந்தா
னேமாந்த மானிடனென் றெள்ளாம லேத்துவதென்
னேமாந்தர் சோணா சலா. (௮௫)

சங்கரியத் தங்கொளலாற் சக்கரமான் மன்னுதலால்
வெங்கரி பயந்தவனன் மேவலா — லிங்கரிது
நிற்குருவே யென்னுருவ நீமுழுதுங் கொண்டுறைவாய்
சற்குருவே சோணா சலா. (௮௬)

மோன முடிவே மொழியவரு மானந்த
ஞானவடிவேநின் னலமுழுதுங் — ஈன
னியம்புவே னெவ்வா றினியவருள் செய்யாய்
சயம்புவே சோணா சலா. (௮௭)

அருமெனச் சாயலை —

முத்தே மணியே முழுவயிரப் பொற்றூணே
சித்தே யெமதுகுல தெய்வமே - சுத்தகுண
மேருவே நற்கருணை மேகமே வந்தடைந்தேன்
குருவே சோணா— (௮

சோதிக்க லாமா தொழும்பனேன் றன்னைமிக்க
வாதிக்க லாமா மணியரவம் - பாதிக்
கலாமதிசூஞ் சேகரவைத்த காரணனின் றட்குச்
சலாமதிசூஞ் சோணா சலா. (௯

அண்டாண்ட கோடி யருளாக வளித்தடிமை
கொண்டாண்ட சோதிக் குருமணியே - கண்டாய்
சுமுகனே யாகவினைத் தொண்டுகொள் வாயன்பர்
சமுகனே சோணா சலா. (

திருவல மிட்டுத் திருமெழுக்கு மிட்டு
மருவுதிருக் கோலமிட்டு வாழ்த்திப் - பெருகுதளி
கம்பத்தே கத்துடனே கைகூப்பிச் சூழ்வதுநற்
சம்பத்தே சோணா சலா. (௧

உருவா யருவா யுருவருவாய் நின்ற
வொருவா வுபதேச மோதக் - குருவாய்
வரவேண்டு முன்றன் மலர்ச்சரணத் தன்பு
தரவேண்டுஞ் சோணா சலா. (௧

ஆரூரு மம்பலமு மானந்த கானமெனும்
பேரூருங் கட்டமெனப் பேணுகிலேன் - சீரூர்
நித்தியமே நின்னூர் நினைக்கின்றேன் முத்திபெறச்
சத்தியமே சோணா சலா. (௧

பாரறியா விண்ணறியா பாதாளந் தானறியா
யாரறிவா ருன்ற னருஞ்சீர்த்தி — யோரணுவும்
யானறியாத் தன்மையதே யெம்பெருமா னின்னருளி
தானறியாய் சோணா சலா. (௧௪)

கார்த்திகைக்குக் கார்த்திகைநாட் காட்சிபெறக்காட்டுகின்ற
சீர்த்திவளர் மெய்ஞ்ஞான தீபத்தை—யேத்தி
மதுரமேயத் தமிழால் வாழ்த்த வரந்தாராய்
சதுரனே சோணா சலா. (௧௫)

வானே முதலட்ட மாமூர்த்தி யாயமர்ந்த
யேனே வுலகுய்ய வென்னணியே—வானே
றதிபதியே ஞான வருணிதியே சிவச்
சதிபதியே சோணா சலா. (௧௬)

சம்புவே யென்றனது தாணினைக்க வொட்டாம
லம்புலத்தார்கூடி யலைக்கின்ற—வெம்பிறவி
வெந்தோடநீங்கு விபவமருள் வாய்மிகவுஞ்
சந்தோடஞ் சோணா சலா. (௧௭)

சேதனை செய்யாதே சுயவடிவா வந்தென்னை
யாளிப்பாய்காட்டி லருச்சுதனின்—பாதமலர்
நக்கன் வேடுவனு நண்ணிறைய் வில்லாலே
டிறன் சோணா ச [illegible] (௧௮)

ணை [illegible] —யபுவதேன் மென்கனிதேர்
சோ [illegible] ழி போலிதனை கேட்டருள்க—பிள்ளைநான்
ாண்டறேன் வண்பதிநீ யேழைநான்
றுமை [illegible] ணா சலா.
சரமு [illegible] (௧௯)
அரமெனச [illegible] டை

அருணாசல வென்றே யன்புடனே போற்றி
யிருணாச மெய்த்திப மிட்டோர்—பெருவாழ்வைச்
சிந்தையே செய்தவ தேர்ந்துரைக்க வொண்ணுமோ
நந்தையே சோணா சலா. (௧௦௦)

சோணாசலவெண்பா
முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சோணாசல சதகம்.

சோனை நிகராகச் சொரியும் மதச்சிறுக
ணானைமுகன் றந்தைசோ ணாசலத்துத்—தேனைச்
சகம்பொதிந்த பார்வதிக்குத் தக்கிணனை யென்புல்
லகம்பொதிந்து பெற்றே னருள். (௧)

சோதிவடி வாயிருவர் தேடத் துலங்குமுக்க
ணாதிவடி வார்சடையி னார்கங்கை—பாதிச்
சசியணிந்தார் சோணா சலமதனைச் சற்று
லசியயின் றிச் சோவா மிது. (௨)

சோராத நெஞ்சினிடைச் சோணா சலத்தார்க
ளாராத காத லமைவானேன்—பாராழி
சந்திரனுஞ் சூரியனுந் தக்கிலவின் டாலுமுத
லந்தகனென் முன்சேரா னல். (௩)

சோகந் துடைத்தருள்வாய் சூர்ப்பணச் சிறுக
ணாகந் தனையுரித்த நம்பனே—மேகமொழி
சந்திரன் றூழ்சோணா சலவாம பார்றைய
லந்திவண்ணத் தையா வருள். (௪)

சோமன் றலைக்கணிந்த சோணா சலவுனரு
ணாமந்தனை யென்வாய் நல்குவாய்—காமன்
சரமுன்மேற் பூப்போலச் சார்ந்திடினு நம்மே
அரமெனச் சாராமை யருள். (௫)

சோறுண்டிட லுகைத்தல் தூங்க லிவைகளின்க
ணாறுதலுண் டோங்கஞ்சோ ணாசலா—நீறு
சயமாக மேனி தனிலெனது நெஞ்சா
லயமாக வென்று மிரு. (௬)

சோலைநெறி யாரூரோ சோணமலை யோவிசையெண்
ணாலையிசைப் பார்வாயோ நம்பாட்டோ—மாலைச்
சயமழித்த காசியோ சார்தில்லை யோவா
லயமென்று நீசா ரிடம். (௭)

சோதித்தென் னின்ன றுடைகா ரணவியங்க
ணாதிக்குஞ் சோணமலை நாதனே—வாதித்த
சங்கத்தா நெஞ்சின்மடங் தானொழித்தாய் வேதன்மா
லங்கத்தர் யந்தி ணைத்தா. (௮)

சோகித் திருப்போரார் துய்யசிவன் றாட்கிருக
ணாகித் துயர மகற்றாமல்—யோகத்தார்
சங்கத்துச் சோணா சலம்தனி லேகாம
லங்கிங்குச் சென்றலைவோ ராய். (௯)

சோபிக்கு ஞானவுருச் சோணா சலத்தார்தா
ணாபிக் கமலற்கு நாடரிதே—பாவிச்
சனங்கட்குக் காணுமோ சத்திவிளக் கார்பா
லனங்கொண்டு காணுங்கண் ணன்பு. (௧௦)

சோணாசலசதகம்

முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவருணைக் கலிவெண்பா.

கார்பூத்த மாலுங் கருமாவாய்க் காணரிய
பார்பூத்த சீரடியும் பங்கயத்தோ - னேர்பூத்த (௧)

அன்னவடி வாயு மறியா முடியுமன்பர்
நன்மனங்கொள் சோண நகத்தனே - சின்மயமாம் (௨)

உண்ணா முலையம்மை யோர்பாகங் கொண்டிரு
வண்ணா மலைவிளங்கு மைம்முகனே - விண்ணவர்கள் (௩)

தந்தியக்க நீங்கமத தந்தி யுரிவைபோர்த்
தந்திவண்ண நீத்தருளைத் தந்திட்ட - சுந்தரனே (௪)

நஞ்சைதனி யாதீத நஞ்சைவளை சோணமலை
நஞ்சையணி கண்டத்து நம்பனே - யைஞ்சபையாஞ் (௫)

செம்பம் பலநெல்லை சித்ரசபை குற்றாலம்
பம்புமணி யம்பலமா லங்காடு - உம்பர்தில்லைப் (௬)

பொன்னம் பலங்கூடல் புக்கவெள்ளி யம்பலங்க
ளின்னடஞ்செய் சோணமலை யீசனே - வன்னமலி (௭)

தேவன் றுறைச்சந் திரசேக ராலயந்தெற்
காவன் கயிலையது வடக்காத் - தேவர்புகழ் (௮)

சோமநா தம்மேற்குச் சொல்பீமே சங்கிழக்கே
வாமத்தி நின்ற வருணையாய் - காமர் (௯)

[illegible]

வடக்குத் திகளழகை வானிற் றரக்கஞ்
சுடர்ப்பொன் னிலங்கைதெற்காத் தொல்லோர்-நடத்துபுகழ் (௧௦)

பொன்னிலங்கண் மூன்றும்வீற் போலவிளங்க நடு
நன்னிலங்கொள் சீரருணை நாதனே - தொன்மை (௧௧)

அவந்தி துவாரகைமேற் காக்காஞ்சி கீழாச்
சிவன்சீர் மாயாமதுரை தெற்காய்ப் - பவந்தீருங் (௧௨)

காசியயோத்திவடக் காகநடு நின்றமரர்
பூசிக்குஞ் சோணப் பொருப்பனே - ஆசற்ற (௧௩)

கங்கையமுனை கவுதமியே நன்மதைசீர்
மங்காச் சரசு வதிவடக்காய் - ஐங்கரத்தோன் (௧௪)

கொட்டியகா வேரி குமரிதெற்காய்ப் பாயநடு
வுட்டிகழு சோணகிரி யோங்கொளியே - சிட்டர்புகழ் (௧௫)

மண்ணிலிங்கங் காஞ்சி மழையிலிங்க மானைக்கா
விண்ணிலிங்கந் தில்லை வியன் மூதூர் - திண்ணர்சார் (௧௬)

வாயுலிங்கங் காளத்தி மற்றிவைக்குமத்தியாந்
தேயுலிங்க சோணகிரிச் சிற்பரனே - காய (௧௭)

பிறக்கமுத்தி நல்கு மெழிற்காசி வந்து
பிறக்கமுத்தி நல்குதிரு வாரூர் - அறத்தாற் (௧௮)

றனைப்பார்க்க முத்திதரு தில்லை யிவைக்கு
னினைக்கமுத்தி நல்கருணை நின்றாய் - அனைத்தானாய் (௧௯)

கற்பரல்கள் பஞ்சாய்க் கனமழையோ பூவலராய்
வெற்புகினா ராகி விளங்கினவே - பொற்பொலியும் (௨௦)

அந்திவண்ணத் தாகி னமல மலர்ப்பாதம்
புந்திமிசைக் கொண்ட பொழுதக்தே - கந்தமலி (௨௧)

வன்னவா யாரல்லி வாயலனை யாரவொளி
வென்ன வினையுள்வயல் வேலிவனே - யுன்னா (௨௨)

றழல்வரையா ராழிவர யாயயில்வா யுன்னா
ருழியுலவா யொல்லை யருள்வாய் - விழிநிறைந்த (௨௩)

கஞ்சக் கழலிணைகள் கையாற் றுதித்தனது
தஞ்சத் தடைந்தேன் தயைதருவாய் - விஞ்சொளிய (௨௪)

சந்திரனுஞ் சூரியனுந் தாமிருவிற் கால்போல
அந்தவில்லம் பாய்மலைமே லார்தீயம் - இந்துகதிர் (௨௫)

மந்திரிற்குந் தீயாகி மாலயனுன் னேயாகு
மிந்திருநாள் கண்டார்க் கிடருண்டோ - வித்தகமார் (௨௬)

கல்வி மறந்தழியுங் காய நிலையாது
செல்வ நிலையாது தேருங்காற் - றொல்லை (௨௭)

வினையோ வனுபவித்தாற் றீருமென் றும் வீடா
துணையேத்திப் பெற்றவரு ளுண்மை - கனைசிலம்பா (௨௮)

பாரணங்க ளோலிட் டறியா தகிலசக
காரணத் தாகின் கழலிணைக்கே - சாரன்பாற் (௨௯

பாடநாப் பெற்றேன்கண் பார்க்கப்பெற் றேனின்னை
நாடமனம் பெற்றே னேக்கமில்லைத் - தேடரிய (௩௦

பாதார விந்தம் பணியப்பெற் றேன்றமியேற்
காதார நீயே யருள். (௩௧

திருச்சிற்றம்பலம்.

திருவருணைக்கலிவெண்பா
முற்றிற்று.

போற்றும்வாறருளே.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவண்ணாமலை
திருவருட்பதிகம்.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வளங்கிளர்சடையும் விளங்கியவிதழி மாலையுமாலையன் வழுத்துங், குளங்கிளர்நுதலுங் களங்கிளர்மணியுங் குலவுதிண்புயமும் புயத்தின், றளங்கிளர்பதமு மிளங்கதிர்வடிவுந்தழைக்கநீயிருந்தல் கண்டுவந்த, வுளங்கிளரமுதே துளங்குநெஞ்சகனே னுற்றருணையிற்பெறவருளே. (௧)

அன்பர்தம்மனத்தே யின்பமுற்றவைக ளளித்தவர் களித்திடப்புரியும், பொன்பொலிமேனிக் கருணையங்கடலே பொய்யனேன்பொய்மைகண்டின்னுந், துன்பமுற்றலையச் செய்திடலருணைத் தொன்னகரிடத் துனதெழில்கண், டென்புளமுருகத்துதித்திடல் வேண்டுமிவ்வரமெனக்கிவணருளே. (௨)

பூத்திடுமவனுங் காத்திடுபவனும் புள்விலங் குருக்கொடுநேடி, யேத்திடுமுடியுங் கூத்திடுமடியு மின்னமுங் காண்கில ரென்றுங், தோத்திடுமடியர் மாலையினளவிற் குலவினை யென்றுநல்லோர்கள், சாற்றிடுமதுகேட் டுவந்தன னினது சந்நிதியுறவெனக்கருளே. (௩)

அருள்பழுத்தோங்கு மானந்தத்தருவே யற்புதவமலநித்தியமே, தெருள்பழுத்தோங்குஞ் சித்தர்தம்முரிமைச் செல்வமேயருணையந்தேவே, யிருள்பழுத்தோங்கு நெஞ்சினேனெனினு மென்பிழைபொறுத்துநின்கோயிற், பொருபழுத்தோங்குஞ் சந்நிதிமுன்னர்ப் போந்துனைப்போற்றுமாறருளே. (௪)

மறையுமம்மறையின் வாய்மையுமாகி மன்னியவள்ளலேமலர்மே, லிறையுமாதவனு மிறையுமின்னவனென் றெய்திடாவிறைவனேயடியேன், பொறையுநன்னிறையு மறிவுநற்செறிவும் பொருந்திடாப்பொய்யனேனெனினு, மறையுநற்புகழ்சேரருணையைவிழைந்தனங்கெனையடைகுவித்தருளே. (௫)

தேடுவார்தேடுஞ் செல்வமேசிவமே திருவருணாபுரித்தேவே, யேடுவாரிதழிக்கண்ணியெங்கோவே யெந்தையேயெம்பெருமானே, பாடுவார்க்களிக்கும் பரம்பரப்பொருளே பாவியேன்பொய்யெலாம்பொறுத்து, நாடுவார்புகழு நின்றிருக்கோயி னண்ணுமாவெனக்கித்தேனருளே. (௬)

உலகுயிர்தொறுநின் றாட்டுவிட்டாட்டு மொருவனேயுத்தமனேநின், னிலகுமுக்கண்ணுங் காளகண்டமுமெய் யிலங்குவெண்ணீற்றணியெழிலுந், திலகவொண்ணுதலுண் ணாமுலையுமையாள் சேரிடப்பாலுகண்டடியேன், கலகவைம்புலன்செய்துயரமுமற்றைக்கலக்கமுநீக்குமாவருளே. (௭)

அருட்பெருங்கடலே யானந்தநறவே யடிநடுவந்தமுங்கடந்த, தெருட்பெருமலையே திருவணாமலையிற் றிகழ்நயஞ்சோதியேசிவனே, மருட்பெருங்கடலின் மயங்குகின்றேனென் மயக்கெலாமொழிந்துவன்பிறவி, யிருட்பெருங்கடல்விட் டேறநின்கோயிற்கெளியனேன்வரவரமருளே. (௮)

கருணையங்கடலே கண்கண்மூன் றுடைய கடவுளேகமலன்மாலறியா, வருணையெங்கோவே பரசிவானந்த வமுதமேயற்புதநிலையே, யிருணிலம்புகுதா தெனையெடுத்தாண்ட வின்பமேயன்பர்தம்மன்பே, பொருணலம்பெறநின் சந்நிதிக்கெளியேன் போந்துனைப்போற்றும்வாறருளே. (௯)

ஏதுசெய்திடினும் பொறுத்தருள்புரியு மென்னுயிர்க்கொரு பெருந்துணையே, தீதுசெய்மனத்தார் தம்முடன்சேராச் செயலெனக்களித்தவென்றேவே, வாதுசெய்புலனால் வருந்தல்செய்கின்றேன்வருந்துறுவண்ணமெற்கருளித், தாதுசெய்பவனேத் தருணையங்கோயிற் சந்நிதிக்கியான்வரவருளே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பதிகம்

முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருணாசலீசர்பதிகம்.

காப்பு - வெண்பா.

அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற் றிற்பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம்—நல்ல
குணமதிக மாம்பதிகங் கூறுதற்குத் தொந்திக்
கணபதியைக் கைதொழுதக் கால்.

[illegible] தேசம் நிசரூபமான வடிவே
மனமாய்கைமூடி யறிவேகலங்கி மனமுமயங்க [illegible]
வினமோடிருந்து அவதிக்குலைந்து யெமதூதரோடி வருமுன்
மனவேகமாக அருணாசலீசர் வரவேணுமெந்த னருகே. (௧)

கயிலாயமேரு அதிலாறுவீதி கரைகண்டதில்லை யொருவர்
வெயிலானசோதி விளையாடிச்வீதி வெளிமாய்கை யேதுமறியேன்
பயிலானகொம்பிற் பசுங்காயுமாகி பழமாயுதிர்ந்து விழுமுன்
மனவேகமாக அருணாசலீசர் வரவேணுமெந்த னருகே. (௨)

நதியோடுதும்பை முடிமீதணிந்து நலமானவெள்ளை விடைமேல்
பதியாயிருந்து வுமைபாதிகொண்ட பரனேயுன் னைமறவேன்
விதிநாதனேவு யெமதூதர்வந்து வெகுவாதைசெய்து விடுமுன்
மதியேபுனைந்த யருணாசலீசர் வரவேணுமெந்த னருகே. (௩)

உற்றாருமில்லை யுறவாருமில்லையாரு முறைசொல்லி யிப்பவரவே
பெற்றாருமில்லை மறைதேடுகின்ற பிரானேயுன் னைமறவேன்
கற்றாருமேற்ற வடியாரிருந்து கனியாயமர்ந்த கனியே
மற்றாருமில்லை யருணாசலீசர் வரவேணுமெந்த னருகே. (௪)

கொங்கைக்குரும்பை மூலைமாதராசை கொடிதான மோகமதனாற்
சங்கற்பமொன் று மறியாமல்வீணாய்த் தமொறியாவி விழுமுன்
திங்கட்கொழுந்து முடிமீதணிந்த சிவனேயுன் னைமறவேன்
மங்கைக்கிரங்கு மருணாசலீசர் வரவேணு மெந்தனருகே. (௫)

உருவானகாய மதிலாறுவீடு யுதிரங்கலந்த தேகம்
கருவாகின் று புவிமீதில்வந்து கபடேதுமொன் று மறியேன்
குருவாகின்ற சிவஞானசோதி குருவேநின் னைமறவேன்
மருவீசுசோலை யருணாசலீசர் வரவேணு மெந்த னருகே. (௬)

பணியாதகோயி லணியாதநீறு பசியாதசோறு தருவாய்
துணியான வாசி சிவஞானமோன சுகமேயெனக் க[illegible]
தணியாதகோப முடலோடிருந்து சலியாதமாய்கை வெளியே (௭)
மணியாநொத மருணாசலீசர் வரவே[illegible]

ஆ[illegible]கின்ற சிவசூஸ்திரங்கள் சுளுவாயமர்ந்த சுழியே
பாதாதிகேச முடலோடிருந்து படுகானிலாடு நடனம்
வேதாவுமாட மதியாடமூவர் விளையாடுகின்ற வெளியே
வாதாடுகின்ற அருணாசலீசர் வரவேணுமெந்த னருகே. (௮)

அடிமூலவட்ட வதிலாறுதிட்ட வதின்மேலிருந்த பரனே
துடியானசத்தி சிவரூபவல்லி சுகமானவேத வடிவே
அடியார்களுள்ளத் தெரிவாய்விளங்கு மறனே நின் னைமறவேன்
வடிவானசோதி அருணாசலீசர் வரவேணு மெந்தனருகே. (௯

உரைதங்கிநின்ற யுயிரெங்குமாதி யுலகெங்குமேக வடிவாய்
கரைகண்டதில்லை வெகுகோடிகாலங் கலிகாலமாய்கை யதனால்
இரைதேடியாசை பசியால்மெலிந்து யிருகண்டயங்கி விழுமுன்
வரைதங்கிநின்ற வருணாசலீசர் வரவேணுமெந்த னருகே. (௧௦)

அருணாசலீசர்பதிகம்
முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவண்ணாமலை
அருணாசலேஸ்வரர் பதிகம்.

காப்பு வெண்பா.

ஆதியயன்மா லடிமுடியைக் காண்பரிய
சோதிவரை யாகின்ற தூயனொளிர்—பாதிமதி
கற்றைச் சடைக்கணிந்த கண்ணுதலைப் போற்றவெங்க
ளொற்றைக்கொம் பன் துணைத்தா ளுண்டு.

ஆசிரிய விருத்தம்.

ஓதுமலை தல்லிய விபூதிமலை[illegible] னுறைந்தமலை மந்திரம[illegible]ஞானியர் தபோதனர்கள்சூழுமலை யோங்குமலை யழியாமலை, சோதிமலையிருகண் களிக்குமலைமெய்யடியர் தொழுது குருசோணமலையே, துங்கபத்திரியமுனை கலைவாணிதீர்த்தமலி சுனையருகிலொளிர்மாமலை, வேதமலைசித்திர விநோதமலையென்னனையர் வேண்டுமலைகாண்டமலையே, வினைதீர்க்கவந்தமலை கனகாபிஷேகமலை வீறுமலையேறுமலையே, ஆதிமலைமீதுறை யநாதியேயென்னையா ளருணாசலக்கடவுளே, அரகரமகேசனே பரமகுருவீசனே அணியண்ணாமலைவாசனே. (௧)

[illegible]நாதராய்க் கழுகாசலத்தராய்க் காசிதனில்விசுவேசராய்க், கச்சியேகம்பராய் வேலூர்விநோதராய்க் கமலமலர்தன்னிலுறைபுத்தேளுக்குமாலுக்கு மெட்டாதசோதியாய்த் திருவொற்றியூர்த்தியாகராய்த், தென்மதுரையிற்சொக்க ராய்க்காழிதன்னிற்றிருத்தோணியப்பர்தாமாய், நாணச்சரோருகத் தடமேவுதென்றில்லை நடராசராய்விரிஞ்சை, நகர்வழித்துணைலிங்க ராய்த்திருச்செங்

காட்டு நம்பராயடியார்களை, ஆனக்கடைக்கணருள் செயவிளங்கிய வெங்க ளருணாசலக்கடவுளே, அரகரமகேசனே பரமகுருவீசனே அணியண்ணா மலைவாசனே. (௨)

பானிச்செழுஞ்சடைப் பரமனேயுலகிலுருவத்தர்கோடீசனேத்திகேம், பாதபங்கேருகா சங்கரசதாசிவா பாலநேத்ராசாம்பவா, பூணிற்பொலிந்தமா தேவிபங்காசர்ப்ப பூஷணநீலகண்டா, பூதநாதா தற்ப ராசிற்பராசர்வ பூரணசதுராயனு, சேணிற்பொலிந்தபண்ணவர்தமொடுமாலயன் சிந்தனைசெய்தேவதேவா, திகழ்சிகரமேருகோதண்டாவகண்டா சிதம்பராகருணாகரா, ஆணிப்பொனேகாயினேன்றன்னையாளுவா யருணாசலக்கடவுளே, அரகரமகேசனே பரமகுருவீசனே அணியண்ணா மலைவாசனே. (௩)

சூலமொடுமான்மழு கபாலமுங்கைக்கொண்ட துங்கமிகுசிவசங்கரா, சுற்றிவந்துன்கோயில் பத்தியுடனேதொழுது சொல்லுமென் சொல்லையைக்கேள், வாலிபத்தனையை [illegible] வறுமைவந்தெனைவருத்த, வண்புவியிலொருசாண் வயிற்றினை வளர்க்கவுளம் வாடினேன்தேடிவந்தேன், சாவுக்கஞ்சித்தெனைக் கைவிடினுநாயினேன் சாமியுனைவிடுவதில்லை, தள்ளாமனுன்பாதபதும நிழற்றிடத் தயைசெய்வதுன்பாரமே, ஆலவிடமருவுமணி நீலகண்டத்தனே யருணாசலக்கடவுளே, அரகரமகேசனே பரமகுருவீசனே அணியண்ணா மலைவாசனே. (௪)

தேவர்துதிதேவராய் [illegible]லிங்கமீசராய் செகதலக்கர்த்தவராய்த், தெய்வீகமாஞ்சித வைபோகராயவ்லை [illegible] செங்கினி
வாடி, மாவுலகில்கொலைகளவு கட்காமமாதிய வகுத்தவைம்பாதகங்கள், மனத்தச்சமில்லா தியற்றினேனுவுனை வந்தித்திடாத குறையோ, கூவியென்றசத்தமுன் செவிகொண்டிடாத கொடுமைதானென்னையனே, குழவியழுகுரல்கேட்ட தாய்போலவந்தெனது குறைதவிர்த்தாளையனே, ஆவிக்குநீதுணை யலாதுவேறில்லை

வென் னருணாசலக்கடவுளே, அரகரமகேசனே பரமகுருவீசனே அணியண்ணா மலைவாசனே. (௫)

மாணிக்கரப்பர்சுந் தரர்புநிதசம்பந்தர் மாதவத்தோர்தமக்கும் வரமேயளித்தசிவ போகவுண்ணாமலை வல்லிதனிடப்பாகனே, காணிக்கைகொண்டட்ட திசையுளோர்களையொடு கனிந்துபூசனைபுரிந்து, கவிசாற்றவிருகரஞ் சிரமிசைகுவித்தேத்து கர்த்தனேனைதலையரசே, வீணுக்குழைத்துவாழ் நாள்கழித்துப்புவியில் மெலிவிசாரக்கடலினில், வீழ்ந்தலைந்திடுமெனதரும்பவமகற்றவிதமென்னமோவையனே, நானிந்தரத்துவென் முத்தனேயத்தனே யருணாசலக்கடவுளே, அரகரமகேசனே பரமகுருவீசனே அணியண்ணாமலைவாசனே. (௬)

நீயெனதுதெய்வமென் றன்கோயில்வலம்வந்து நேயமொடுகொண்டாடினேன், நினைவொடுபணிபவர்க் கழிவிலாப்பதவியுந்திருச்செல்வமுங்கனத்தையும், தேகசுகம்மிக்கவுண் டாயுளும்பூரணமெதன் புண்மெய்ப்புகழுண்டு, நியாவிக்கநினைவுமுன் னடைகையுண்டியாகல்வி தெளிவுண்டுஞானமுண்டு, வாயுண்டுகவிசொலக் கேட்கவுஞ்செவியுண்டு வாழ்வுண்டுதாழ்விலையே, வல்லாண்மையுண்டுதீது கல்வோரிணக்கமது மாறுதுதகழ்வுறு, ஆயிராரோக்கியமும் பெருகவருள்வாவிருந் அருணாசலக்கடவுளே, அரகரமகேசனே பரமகுருவீசனே அணியண்ணா மலைவாசனே. (௭)

காலுடன்கைகளுங் கிடந்துதிடாமுனங் கழுநாக்குளறுமுன்னம், கண்கள்பஞ்சடையுமுன் துன்பமவந்தெய்துமுன் காலன்வகதனுகாமுனக், தோலுஞ்சுருக்கித்திரைக்துநரையொடுறுப்புதோன்றுமுனவிருமல்முதலாய், தொல்வினைவராமுனம்பல்வரிசைவீழுமுன் செருவிபிட்டுமினைவிலக்கன், மாயுத்தழாமுனம் பாலன்றனக்குமுன் வந்தெனைக்காப்பதரிதோ, மரணத்தயர்ந்திடுந் தருணத்திலுன் றன்மலர்ப்பதமுவந்தருருவாய், ஆலத்தையமுதுசெய்தெமயனேயாகியே அருணாசலக்கடவுளே, அரகரமகேசனே பரமகுருவீசனே அணியண்ணா மலைவாசனே. (௮)

வீணாயிவ்வவனியி லுதித்துவந்தழனோர் விசாரத்திரளெனதுளம், வெந்துமிகநொந்துன்னை வந்தடுத்தேனென்ன விதமானபாதகங்கள், நாணாதுசெய்தகொடி யேனெனினுமென்பிழையை நம்பனேநீபொறுத்து, நலமெலாந்தந்துன் னடிக்கமலமலர்தன்னை நாடவெனையடிமைகொள்வாய், சேணாடர்போற்றுமிறை வாசங்கராமஹரா தேவாத்ரிலோகநாதா, சித்தர்கின்னரருரகர் அரகரவெனச்சொலிச் சேவிக்குமறைநாயகா, ஆணாய்ப்பெண்ணாயலிய தானவென்னையனே அருணாசலக்கடவுளே, அரகரமகேசனே பரமகுருவீசனே அணியண்ணாமலைவாசனே. (௧)

இந்திரன்தீர்த்தமுடன் அக்கினித்தீர்த்தமும் யமதருமதீர்த்தமுதலாய், இயனிருதிதீர்த்தமும் வருணதீர்த்தமுமுக்கிய மென்னுவாயுவுதீர்த்தமும், விந்தைக்குபேரதீர்த் தமும்மலமேவுமீசானதீர்த்தமுமுவந்த, மிளிர்முலைப்பால்தீர்த்தநளிதமிழ்பயந்தமுனிவேண்டுமுயர்தீர்த்தமிகவே, சந்தச்சரஸ்வதி தீர்த்தமுமிலக்குமித் தாய்தீர்த்தமுங்கௌதமர், தன்தீர்த்தமுஞ்சக் கரதீர்த்தமுநந்திதகைதீர்த்தமும்பிரமமாம், அந்தமலிதீர்த்தங்கள் விந்தைபுடைசூழ்தல வருணாசலக்கடவுளே, அரகரமகேசனே பரமகுருவீசனே அணியண்ணா மலைவாசனே. (௧௦)

கூட்டமிகுமடியார்கள் கூட்டுறவிலாமடமை கொண்டமுழுமூடன்வித்யா, குருசீடனாய்க்கல்வி கல்லாதமூடனுன் கூறுசரிதந்தன்னையே, கேட்டதறியேனுனது நாட்டமறியேனன்மை கிளர்பாதநான்குமறியேன், செந்தாட்சதைக்கூ விளங்கொண்டுபூசனைசெய்கிரியையறியாதமூடன், பாட்டுமறியேன்வினைகளோட்டவறியேன் கவிப் பத்துமிவையர்த்தமுடனே, பகரவறியேனுனைப் பரவவறியேன்செய்த பாவமேதோவறிகிலேன், ஆட்டிவைத்தேமன்கை காட்டிக்கொடாதருள்செய் அருணாசலக்கடவுளே, அரகரமகேசனே பரமகுருவீசனே அணியண்ணா மலைவாசனே. (௧௧)

அருணாசலேஸ்வரர்பதிகம்
முற்றிற்று.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

உண்ணாமுலையம்மன் பதிகம்.

703

காப்பு வெண்பா.

அண்ணா மலைநாத ரார்ந்திடுபக்கத் தமர்ந்த
உண்ணா முலைப்பதிக மேவுரைக்க—ஒண்ணான
அந்திநிறத் தானீன்ற வண்ணலெனு மைந்துகரத்
தந்திமுகன் றானே சரண்.

சந்த விருத்தம்.

திருவாருங்கூடு தனிலாறுவீடு தினமேயிருந்துமுடிவிற், பெருவீடுதன்னில் மணல்வீடுகட்டிப் பேயேன்பிழைக்கவசமோ, எரிகாடெனச்சொல் சுடுகாடுபோமுன் னெளியேன்முன் வந்தருளுவாய், மருவார்ந்தவுண்ணா முலைநாமதேவி வரவேணுமெந்தனருகே.

விலைமாதர்தங்கள் நிலையேமெய்யென்று விரிவானவுலகந்தனில், அலைவாய்த்துரும்பு போலேயுழன்ற வடியேனையாராளுவார், கலைதேடிகாணா தொளிருமப்ராசித்திக் கணத்தோர்புகழுமண்ணா, மலைமேவுவுண்ணா முலைநாமதேவி வரவேணுமெந்தனருகே. (௨)

ஊர்கொண்டவகிலந் தனில்வாழுமாந்தர் செய்கோடி தப்பிதத்தை, ஏர்கொண்ட வுன்றன் வாளாலறுத்து யிரட்சிக்கு முலகம்மைநீ, ஆர்கண்டுநின்சீட ருரைசெப்ப வல்லவனாதரட்சகிநீயலோ, வார்கொண்டவுண்ணா முலைநாமதேவி வரவேணுமெந்தனருகே. ()

பிறைபோன்றநெற்றிப் பறையம்பணத்தி பரிபாலனத்திபுகழ்சேர், நிறையோடுநின்ற திருவேனின்சீரை நிலையோடுசெப்பவுளரார், குறைவாழ்வைநீக்கிப் பதமீந்துரட்சிக் கொடிபோலிடைப்பெணமுதே, மறைதேடு உண்ணா முலைநாமதே[illegible] வரவேணுமெந்தனருகே. (௪)

சென்னிக்குழந்தைப் புனலைத்தரித்த சிவன்வாமபாகந்தனில், மின்னேரெனச்சொன் மிகவேயிருக்கு மெல்லியற்கணுமையே, என்னைப்போலேனழ யகிலத்தினில்லை யீடேறவைத்தாளுவாய், மன்னிக்கு உண்ணா முலைநாமதேவி வரவேணுமெந்தனருகே. (௫)

பந்தார்குஜத்தி பனிசோமுகத்தி பதுமாசனத்திமாயி, நந்தார்கழுத்தி நாராயணத்தி நளினப்பதத்தி னனிசேர், சிந்தாகுலத்தை வந்தாதரித்து சீர்பெற்றிடச்சிறுவன்முன், வந்தாளுண்ணா முலைநாமதேவி வரவேண்டுமெந்தனருகே. (௬)

கொடிபோன்றிடைச்சி குறமாதுமாயி குணமானபூஷணத்தோ, டிடியேறுபோன்ற மிடியால்மெலிந்த யேழைக்கிரங்குசத்தி, நடையாலனத்தை மெலியச்செய்விக்கு நாராயணன்சோதரி, வடிவார்ந்த உண்ணாமுலைநாமதேவி வரவேணுமெந்தனருகே. (௭)

சற்றுகிலுன்ற ஞளமேயிரங்க யினிதாமசங்கவேளோ, சித்தாந்தரூபி திவ்யப்பிரதாபி திருவார்ந்ததில்லையதனில், எத்தால் விளைந்த கதைபோலிருக்கு தென்னன்மழையிப்பூமியில், வற்றாத உண்ணா முலைநாமதேவி வரவேண்டுமெந்தனருகே. (௮)

விரிவானபூமி தனில்வாழுமாந்தர் வெகுதப்பிதங்கள் செயினும், அரிதானஞான மதுகொண்டோ வரைப்புரந்தாள்வை, பெருவாழ்வளித்துப் பிரியத்தொடென்னை பிரியாதிருக்க விப்போ, தருசெல்வியுண்ணா முலைநாமதேவி வரவேணுமெந்தனருகே. (௯)

நதியிந்தவேளை மதியேயிலாத தமியேனைரட்சிப்பதற், கெதியாருமில்லை யுனையன்றிவேறு கௌமாரிவீரியிந்தப், பதிகத்தைநின்றன் சரணத்திலொன்ற பரிவற்றுவைகுமெனையாள், மதிசந்தியுண்ணா முலைநாமதேவி வரவேண்டுமென்றனருகே. (௧௦)

உண்ணாமுலையம்மன்பதிகம்
முற்றிற்று.

சிவமயம்.

ருத்திர சங்கிதைத் தோத்திரம்

70

கருவருவினுமூன கவலைகள் களைவா
னருவினையொடுமெத னதுமுத லரிவா
னிருமல னிணையடி நிழலினை யடைவான்
பரிவொடு கரிமுக னடியிணை பணிவாம். (௧)

அருணாசல னிமையோர்தொழு கயிலாசல னியலாம்
வருணாசல மறைஞானிசன் முகன்வாரண வதனத்
தருணாசல னெனுமூவரைச் சமைத்தா னமைத்ததேத்தா
னருணாசல னமருந்திருக் கோயில்லம தறிவே. (௨)

பெருந்தாரணி தனில்வந்தினிப் பிறவாம் வினைப் பிணியும்
பொருந்தாதுயக் கிருந்தேசிவ புரஞ்சேர்ப்பரி புருவா
மருந்தாருயிர் மலநோய்களொளி யருணாசலன் மயமா
மருந்தாமுலை யடிநாடொறும் பணியாமுடி யணிவாம். (௩)

துங்கமான கயிலை மலையனே
துலங்கு செஞ்சடைச் சூடி மலையனே
மங்கையாளுமை யாண்மண வாளனே
மாலயன்சிரஞ் செய்யந்த வாளனே
வெங்கைக யானை யுரித்த [illegible]மைய
விரும்பி [illegible]மை யாண்டு விடலையே
[illegible] பாச மறக்கர மாலையே
யீடழித்துரிக் காய்கர மாலையே. (௪)

மெய்யில் வெண்பொடி பூசும் விரதனே
விண்ணு ளார்மயத் தான விரதனே
கையி லம்பென வாய்த்தவன் கண்ணனே
தசியு மன்றோ நகமலர்க் கண்ணனே

மைமை னதனுங் கருதாதா

பைதல் வெண்பிறை பாம்பணி வேணியே
பத்தா மேற்படர் தற்குள வேணியே
மைய லென்றனை மாற்றிய வாக்கியே
மயிலின் மண்ணின ரேத்துரு வாக்கியே. (௫)

படியிற் றிவியிற் பயிலேனே பாமற் றவரைப் பரவேனே
நடலைக் கடலிற் படியேனே நமனைக் குறுகித் துடியேனே
யுடலைச் சிறையிற் புரியாதா ருணர்விற் புரிவுற் றொளிர்வோனே
யடிவைத் தெனதுச் சியிறனா யருணச் சயிலத் தமர்வோனே. (௬)
இயலிற் பொருளாத் துயிர்வாழ்வா யெனமற் றிருளிற் றுயில்வேனை
னயர்வற் றறிவுற் றிடவேயின் னடிவைத் தெனதுச் சியிறனாய்
கயிலைச் சயிலத் தமர்வானே கனகக் கிரியிற் பயில்வானே
யயனச் சுதனுக் கருள்வானே யருணச் சயிலத் தமர்வானே. (எ)

ஒருவனிரு வருமிகல நடுவே யுணர்வரிய வனலுருவி னொளிர்வோன், வெருவியவர் தொழவுமருள் புரிவோன் மிடலுடைய விகலவரை விடவே, தருணமதி சடைமுடியி னணிவோன் சகலரையு
[illegible]றைரயு மகலா, னருணகிரி யமலனவ னடியா மறிவினுற வினை
வமிரு [illegible] (அ)

தினகரனு மதிதவ[illegible]ங் திருநயன மெனவனலு முடையோன்
கனகமன சடைமுடியி லணி[illegible] கமழிதழி மதியொடு நதிநீர்
மனவினைய கிலவருண மலையான் மலவயி[illegible] கடியை மறவா
தனகனிரு மலனவனொ டகலா தமருமுமை யடிமுடிய னணிவாம்.

வரமறை யோதிய வாயவனே வானில நீரல வாயவனே
பிரமனை யாக்கிய பீடினனே பேரர வட்டவம் பீடினனே [னே
யாவினை யிற்றொரு மாட்டினனே யணங்குமை யாளுற மாட்டின
கருவினை காய்ந்திடுங் கண்ணினனே கருதடியார்தமக் கண்ணினனே.

போதகத் திருரி மூடினனே பொழிவிழி யானொடு மூடினனே
மாதவ ருக்கற மோதினனே வளரொளி பல்லற மோதினனே
யாதியு மந்தமு மில்லவனே யடிய ரடைந்தம ரில்லவனே
பேத மவர்க்கிறப் பேணினனே பிறரறி யாவனப் பேணினனே. ()

கருவைத் துரிசைக் களையாயெங் களவைக் கருணைக் கடலானே
பரிவுற் றுனைக்கண் ணினைமூடிப் பழிபற் றியலம் பிணையார்மே
லெரியுற் றறலுற் றெழிலாகத் திடருற் றிடவோப் பரியானொன்
றரிவைக் கதுலைக் கருள்வோனே யருணச் சயிலத் தமர்வோனே.

பகலற் றிரவற் றன்பாதப் பரவப் பதம்வைத் தெனையாளாய்
சகலர்க் கவரோரத் தவர்பாசந் தனையட் டதனைத் தகைவானே
விகலர்க் கவருங் கழல்வானே விரையத் துகளைத் தனிபேதா
னகலர்க் கெதிழிற் றருள்வானே யருணச் சயிலத் தமர்வானே. ()

கனக வெற்பினுங் கயிலை வெற்பினுங்
கழுகு வெற்பினும் பிரியாதா
னனக னற்புத னருண வெற்பின
னலரி னொத்ததன் னடியாடு
மனித ருக்குமுன் மலம ரித்திலங்
குணர்வி னுற்றெழும் பனுபூதி
தனைய ளிப்பவன் சகள நிட்களன்
சரண நித்தலும் பணிவாமே. (௧௪)

அருவ னிட்கள னமல னித்திய
னசல னத்தத னுமையாள் வான்
கருவி னுட்படு மெமைய ளிப்பது
மெனம னத்தினுங் கருதாதா

யிருவ ருக்குமொள் ளெரிய னைத்திகழ்ந்
திகவிரித்தவர்க் கினியானு
மொருவ னொப்பில னவனி டத்துறு
முமைம லர்ப்பத முன்னுவோமே. (௧௫)

முனை வினைத் திறத்திறு முதிரவுற் றுடற்கணே
யினியெமக் கொழிப்பரா ரெனமனத் திலைப்பிர்கா
னனுசயத் தையற்றுநீ ரருணைவெற் பகத்துளீர்
தனியளிப்ப னொப்பிலா தவனுடற்ற லப்பனே. (௧௬)

கருவினைக் கழிக்கலாங் கரியகட் டழிக்கலா
மொருமையுற் றிருக்கலா மொளிரு கிட்டலாந் துதீ
யிருவருக்கு மெட்டொணா வெரிமயக்க னத்திறு
மருணைவெற் பகத்துனீ ரயர்வினைத் தகைத்துமே. (௧௭)

வெய்யவன் காலனை வீட்டினனே வீரனை மாநிலவீட்டினனே, தையலர் முன்னர் வாட்டினனே தசமுகன்றோள்பல வாட்டினனே, பைதலெ னென்றிடர் பாற்றினனே படர்சடை மேனிரப் பாற்றினனே, நையலென் றென்றுள காட்டினனே ஞானமண் ணாமலைநாட்டினனே. (௧௮)

எழுது புகழுடையா ரெழிலருணை கிரியார்
*புழுகுமகிழ் பெருமான் புனிதவடி புகழ்வோ
மொழுகுமல நவலா யுடலினினி யுதியோ
மகிழ்வின் னடைவோ மமலனடி யடைவோம். (௧௯)

கருதுவதன் முனமே கருதினவு முறுமே
யிருமையினு மினிதா மிருபலமு மெளிதே
யருணகிரி யானோ டமருமுமை யடியே
யொருமையுற வுளமா தரவுமுற வுன்னுவோம். (௨0)

உருத்திர சங்கிதைத் தோத்திரம்
முற்றிற்று.

உ

சிவமயம்.

உண்ணாமுலையம்மன் சதகம்.

காப்பு நேரிசை வெண்பா.

உண்ணாமுலைமாய னுக்குதங்கை சங்கரிமே
லுண்ணாமுலைச்சதக மோதுதற்குச்—கண்மூன்று
வேழமுரித்தானை வேழமுகத்தானை
வேழமுகத்தானை வேண்டு.

அவையடக்கம்.

பார்மிசையி னாவலர்மு னுறுமொருபுன்சொலைப்பகர்வதென் சமனதையனிலோ, பாதலந்தனிலாதி சேடனுடையாண்டம் பணாமுடிதரிற்சுமந்த, திக்கரியாலுமண் டஞ்சுமப் பேனெனச் சிற்றெறும்புசனூட்டை, சிதைந்தவோட் டைச்சுமந்ததுபோல வெட்கத்திறமையாயிலவலாமல், கூர்மையொடு தான்பெற்ற பிள்ளையிளவயதினிற் குழறுகிறமழலைமொழியைக், குற்றமென்றே கற் பெரியோர்களிகழ்வரோ குலவுபாலாம்பிகைபெயர், சார்வாக னுள்ளிருக்கையா லியாவருஞ்சரியென்று கைக்கொள்ளுவார், க்கபெரியோர்களும் மிக்கசிறுபிழையையும் தான்பொருத்தருள் செய்வரே.

நூல்.

உலகமிசைமேவிய சராசரத் தெழுவகையி லுண்டானபேத மதனி, லுள்ளுயிராய்நின்று விளையாடியுங்கருணை யோங்குபிராணவவுருவமா, யிலகுதிரியட்சரச டாட்சரபீசாட்சரத் தினியபஞ்சாட்சரத்தோ, டேற்குமைம்பதினுட னோரட்சரந் தன்னினு மியல்பஞ்சகிர்த்தியமுதலாய், பலபலவிதங்களாய் நின்றபொருணீயென்று பழமறைகண் முறையிடுதலால், பகரவினி வேறுமொரு தெய்வமுண்டோசொலும் பரப்பிரம ஞானவடிவே, தலைவியருளோங் கார ஸ்ரீங்காரவல்லிசிவசத்தியே முத்திமுதலே, தருமேவுமருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௧)

பிராமணரியல்பு.

சதிரோனுதிக்குமுனெழுந்து ஸ்நானஞ்செய்து காயத்திரி செபதபமெலாங், கருதிவழுவாமலே முடித்தபின் றிருசந்தி காலக்ரியங்கொடுத்து, அதிகபுகழ்சேர்சுருதி மூலகற்கவும்வேள்வி யாகங்கள்செய்விக்கவும், அறிவுடன்பலசாத்திரம்பிரசங்கிக்கவு மவனிமிசையெவர்களுக்கும், விதிவழியறிந்து சாதகமெடுத்தோதவும் மிக்கதவமேன்மையதனால், வேதியர்தமைத்தெய்வ மென்றுகலியுகமதில் விளம்புவர்கள் யாவருந்தான், சதுர்மறையிலெட்டாத திருநயனவல்லியே சாம்பவிகன்னியரசீ, தருமேவுமருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௨)

அரசரியல்பு.

ஆளுகையினுலகிற் பிறக்குஞ்சமாசார மன்றுடகம் வாரித், ததற்குமேலெத்தனஞ் சொல்லுமதியுக்தியா பமைச்சனொருவனை யுநேமித், தேளிதப்பயலொன்ன லார்முடிதுணித்தவனி யெங்கு மொருகுடையுளாக்கி, யிதமுறுஞ்சேவகர்க் கவரவர்தராதரத் தேற்றசம்பளமுமீய்ந்தே, நாளினுக்குக்குடிகளுழுதபூமிக்குநிதி யாயமுடதனதெண்டியும், நாலெட்டறத்தையுஞ் சீலமுடனேசெய்து நல்லசற்குணமிசைந்து, தாள்ணிற்பணிபவாக் காறுதலைசொல்லுந் தரணியாண்மன்னர் முறைமை, தருமேவுமருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௩)

மேழிச்சிறப்பு.

செகதலந்தனிலரசர்மனுநீதிமுறைமையும் செய்யவேதியர்தர்மமும், சித்தமொருமைத்தவமு முத்திநிலையும்புகழ்சிறந்ததேவதை மகிமையும், சுகவனுதைமேவின்பமயல்கொள்வதும்பொருட்சுருதியொடு பலகாவியம், சொல்கல்வியுங்கருணை யில்லறமுந்திவ்விய சுந்தரவுலாசவெழிலும், அகமகிழ்ந்திடுசெல்வமும்பரிவுதாரமுமதி சகுலமேன்மைவளமும், அடையலரைவெல்வதுங்கீர்த்திப்ரதாபமுமஞ்செழுத்துணர்வுநிலையும், சகலமும்புவிமிசையில் வேளாளர்மேழியின் றனதுடையபெருமையலவோ, தருமேவுமருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௪)

நல்வழிப்போதனை.

அதிகாலமேமகா கணபதிதனைப்பணிந் தகல்வதைமறக்கவேண்டா, மதிகமயல்கொண்டுகற் புடையவனிதைமேலாசையது வைக்கவேண்டாம், துதிபெறுந்தாய்தந்தை குருவுடன்பெரியோர்கள்சொல்லதனை யிகழவேண்டாம், சோர்வுற்றகொலைகளவு பொய்யுடனகந்தையுஞ் சொப்பனத்தினிலும்வேண்டாம், நிதிமமதையாலே பரதேசியர்க்கன்ன[illegible]யாதிருக்கவேண்டாம், நீணிலந்த[illegible]யசரைவணங்காமனோருடன்பகைக்கவேண்டாம், சதியதுவராமலிப்படிமனிதருக்கியல்பு சாற்றினேந்தருமநெறிதான், தருமேவுமருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே.

மனிதரிற்றெய்வமென்பவர்.

அ[illegible]கான மீய்வதும்வேள்வியாகங்களை முடிப்பிப்பதும், அரும்பொருளளித்தீச ராலயஞ்செய்வித்து மதினந்தனம்படைத்தும், செந்தமிழ்க்கவிஞர்பாடுந்தமிழ்கேட்டுமிச் செகமெலாங்கீர்த்திபெற்றும், சிவனைமறவாதஞ்செழுத்திருதயத்தினிற்றியானித்துவருமுறைமையும், பந்துசனமொடுபுவியி லியார்க்குமொரு தீங்குகுறைபண்ணாதிருக்கையாலும், பரிவுடன்புவிமிசையி லெவர்க்குநல்லவனெனும் பதிவிரதநிலைமையாலும், சந்ததமுமிப்படிப் புகழ்பெற்றமனிதரைத் தான்றெய்வமென்றுசொலலாம், தருமேவுமருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௬)

பசிவேளையினில்லாதவை.

மதுரநவரசமெழுகு கல்வியும்விச்சித்ர வசனமுஞ்சனபெருமையும், மங்கையர்கண்மேலதிக விரகசல்லாபமும் வண்மையுங்

ண்மைநயமும், சதிருடன்பணியணிந் திடுநாகரிகமும் தனயன்மேல் வருபிரியமும், தங்குபுகழ்மானமு மிங்கிதமுயற்சியுமாடாண்மை யோங்குவசமும், விதிமிசையவர்க்களவி லாசையும்புகழுற்ற நேமமும்சூல்வளமையும், நிசமாகவிதயமொரு வழிபடுதலுந்திறமைநேர்ந்தபுயபலசமர்த்தும், சதிருடன்பசிவந்த போதிலிவ்வகையெலாம் சற்றுமில்லாதுகண்டாய், தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணுமுலையம்மையே. (௭)

பயனற்றவை.

குருவுணாக்காதவுபதேசமும்பரிமளங் கொண்டிருக்காதமலரும், கூறரியகணவனில் லாத[illegible]தையுங் குஞ்சரமிலாத தளமும், தருவெடுத்துற்பன முறைக்காதமந்திரியும [illegible]ல்லாச்செல்வமும், சமயகாலங்களுக் குதவாதபந்துவும் தனமிலாதவரினமையும், நெறிமுறைமையில்லாத வேந்தனுங்கபடத்தை நேமிப்பர்விசுவாசமும், நேருடன்பயிர்விளைவு தாராதபூமியும் நின்புகழ்சொலாதபேறும், சரிவரப்புவிமிசை யிருந்தென்னகாரியங் [illegible]தேதமுளதோ, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணுமுலையம்மையே. (௮)

இல்லையென்பவை.

ஆனபலநூலெலாங் கற்றவரிலைத்தலையி லயனெழுத்தறிவதில்லை, அந்திபகலுந்தனைப் பணிவர்க்குவினையில்லை யாசைக்குரோசமில்லை, மானமதுபோனபின் வருவதில்லைக்கவிசொல் வாணருக்குப்பகையிலை, மாதர்மனதளவறிவ திலையுயிருடன்கவரிமானசப் படுவதில்லை, யீனமுடனேபொருளி லாசைவைப்பவர்களுக் கினியபுகழ்வருவதில்லை, யெண்ணருங்கனதனம் பெற்றாலுமறையவர்க ளேற்காதிருப்பதில்லை, தானமதுமுப்பத் திரண்டறவளர்த்திட்ட சாம்பவியிருள்சத்தியே, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணுமுலையம்மையே. (௯)

713

இன்னார்க்கிது முன்னிற்கும்.

சுத்தரணவீரருக்குக்கோபமுந்திடும் சோரருக்குப்பொய்முந்திடும், தோதகக்கள்ளிக்கு விழியினீர்முந்திடுஞ் சொற்புறட்டோதுமடைய, லுத்தருக்ககடவிகடங்களது முந்திடும்யோகிகட்கறிவுமுந்தும், நற்கவிவாணருக் குக்கல்விமுந்திடுமுன் பதத்தினையெணுளும், சித்தமநம்வைப்பார்க்கு மெய்ஞ்ஞானமுந்திடுந் தியாகிக்குக் கைமுந்திடும், தினமுமாடக்குறையி லணியாயமுந்திடுஞ் செய்க்கமூகையேமுந்திடும், சத்திகவுமாரிசிவ சாம்பவிமனோன்மணி சர்வசீவாத்மவுருவே, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணுமுலையம்மையே. (௧௦)

ஒன்றிலொன்றடக்கம்.

துடிமிகுமுழங்குபல வாத்தியமெலாநாத சுரமதிற்குள்ளடக்கம், சுகமிகுங்காமுகர்கண் மயல்கொண்டவேளையிற் றோகையர்க்குள்ளடக்கம், படியினைவளைத்திட்ட சப்தசாகரமெலாம் பண்புதமிழ்முனியடக்கம், பாரிடந்தனிலுற்ற வடிவனைத்துஞ்செய்ய பருதிமதியாலடக்கம், அடையலர்க்கன்முடியி டறுவீரராயினு மரசராக்கினைக்குள்ளடக்கம், ஆதியடியாருமறி யாததிலோசனனு மன்பரிதயத்தடக்கம், தடருநங்கருணைவிழி யம்பிகாமலையுதவு தற்பரி யடியர்பாகாய், தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணுமுலையம்மையே. (௧௧)

வேசிகளியல்பு.

காரொத்தகுழலினைச் சீவிப்பகுத்ததிற் கமழ்மலரினைப்புனைந்து, கலைநுதலிற்கனகதிலதமிட்டுக்கயற் கண்ணிலஞ்சனவரைந்து, வாருற்றகுங்குமக் கொங்கையிற்பரிமள வசந்தபாளிதஞ்சவ்வாது, வாடைநடிமிர்த்துபட் டாடைசிற்றிடைமீது வகையுடன்கொய்துடுத்தி, சீரொடுசெரிந்தமுக் காடொருபுறந்தனந் தெரிவதொயிலாய்மறைத்துச், சிலம்பொலிபுலம்பிட நடந்திகழ்திறந்தினிய சிறுநகைசெய்திளைஞர்வாழும், சார்பினிற்சென் றுவிழி வலைவீசிமயல்தருவ

ர் தாசிகண்டத்தையிதுவாம், தருமேவுமருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௧௨)

இதுவுமது.

போதுமடந்தையர்வீடு சதுர்ப்பரவுகச்சேரி புல்குமனையங்கா யாமம், புந்தியதுவஞ்சகத்தொப்பையவளங்கம் பொருட்டுவாடகைமட்டமாம், கிளிதருங்கொங்கை விளையாடுபெம்மாமல்கு னேர்ந்தலர் துவைக்குமுரலாம், நிசமுமவளிதழ்த்தண்ணீர்ப் பந்தலினில்வந்தவர்கணீர்பருகுகலசவாயாம், விழைவுடன்றழுவுகைக் கிணைதேரின்வடமாகுமிக்ககைவேம்புரசமாம், வேதைதரும்வார்களவ ராசையதுபாஷாண மேதினியிலிப்படியெலாஞ், சதிகண்டிருந்துமவண் மயல்வலையிலலைவதேன் சற்றறிவிலாதபேர்கள், தருமேவுமருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௧௩)

இதற்கு இதுநலமென்பவை.

கற்றறிவிலாதபாமூடர்களிடத்தினிற் சுருதிவிசுவாசமதினுங், கல்விநெறியறிகின்றபெரியோர்கள்சிந்தையிற் காண்குபகைமிகநல்லதாம், உற்றசொற்கேளா திடம்புசொலுமனைவியருடன்கூடிவாழ்வதினிலும், ஓங்குகையிலோடுகொண் டுலகெலாஞ்சென்றிரந் துண்பதேமிகநல்லதாம், பற்றலரிடத்திலடி போற்றியேசேவனம் பண்ணிப்பிழைப்பதினிலும், பங்கமுறசடலத் தொழித்துயிர் விடுப்பதும் பார்மிசையிலேநன்மையாம், சற்றுநின்கிருபையுண் டானவர்க்கணியமித்த சங்கதியெலாநன்மையாம், தருமேவுமருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௧௪)

மனிதரிற் சுணங்கர்.

காசொன்றமீயாதலுத்தனும்புகழுற்றகல்வியடையாமடையனும், கருதுமனையாளைமியாருவர்க்கீய்ந்துதான் றினங்காவலட்சியஞ்செய்பவனும், நேசமுடனன்பிலா மங்கையரைவலுமையொடு சித்திரையிற்போசிப்பனும், நிலையிலாப்பொய்சொலுங்கசடனேடசடனுங்

ஞையுற்றிடுசோரனும், ஆசமுக்குடனணிய தொடுமேனிசற்றுஞ்சுசேயமிலாக்காளையும், தூற்சனம்பலவித விளைப்பனும்புவியினிற் சொற்கெவித்தாய்த்திரிவனும், தாசசிவயோகியை யிகழ்ந்தவனுமிவரெலாந் தரணியிற்சுணங்கனெனலாம், தருமேவுமருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௧௫)

தீமையென்பவைகள்.

தேவரீரல்லாது வேறுகதியிலையெனத் தெண்டனிடுவோர்கண் மீது, சிந்தையிற்கபடம்வைத் தனுதினமவர்க்கிடறு செய்வதுகொடுந்தீமையாம், பாவலரிடத்தினிற் செந்தமிழ்க்கேட்டுநற் பசுவுநல்காமலேபின், பாகட்டுமென்றவீ ணய்க்கடைப்பிப்பதும் பலகூறுகொடுந்தீமையாம், காவலரிடத்தரு கிருந்தமேசகருந்தியுட் கவடுனைவறிந்த பின்பு, கருதிமெதிரா[illegible]சாந்துசமர்புரிவதுங்கடியதோர்கொடுந்தீமையாம், தாவுபரிமளகந்த குங்குமபயோதரத் தரிவையேவிதுமுதலே, தருமேவுமருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௧௬)

பெருமையென்பவை.

மக்களொடுபெதினாறுமறிவிலர்பிறந்தென்ன வரிசையொடுபெருமையல்ல, மன்னுகல்வித்தொழில் விவேகசற்குணனுமொரு மகவுபெறுவதுபெருமையாம், [illegible]தான்யசம் பத்துகளுங்கமுறப்பெறுவதுபெருமையல்ல, மேதினியிலேற்பவர்க் கீய்ந்துபுகழிலகும் விளக்குவதுவெகுபெருமையாம், பக்குவமூறுஞ்சமரினின்றுவீண்பாசையது பகருவதுபெருமையல்ல, பற்றலர்கண்மகுடமுடியற்றிடப்பொருதுவது பராக்கிரமம்வெகுபெருமையாம், தக்கபுகழ் மெய்ஞ்ஞான வல்லியேயருமறைத் தலைவியேயோங்காரியே, தருமேவுமருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௧௭)

கபடசன்னியாசிகள்.

நெற்றியிற்றுளித விபூதிருத்திராக்கமும் நேசமுறுசடைமுடியுடன், [illegible]சமானகாவிகாம்பூரமுமணிந்துமி நேமமும்பலவிரதமும்,

கற்றுணர்ந்தவரனைய சாஸ்திரப்பிரசங்கமும் கையினிற்செபமணிதனை, கண்மூடியெண்ணுவது மெய்ப்பொழுதுமாலையே கருதுவது போன்மொழிவதும், நற்றவம்புரிகின்ற யோகிசர்வாதமுறை நான்கோடிசெய்வமென்பார், காலாறுகைக்கொண்டவ் வேகாரத்திரியிலே நன்றுயொளிந்துவிடுவோர், சற்பனைசெய்திந்தவகை வேடம்புனைந்தகடு தான்வளர்ப்பார்கள்வெகுபேர், தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுணாமுலையம்மையே. (௧௮)

நன்மையிற்றீமை.

தேடரியதருமத்தை நாடினுமவர்க்குமொரு தீமைகள்வராதிராது, சிறந்தவினைபக்களவு துன்பமுங்கூடவே சேர்ந்தேவராதிராது, கூடுகிதியனிலூற்றிலொன்றினிறைவு— ன்றுத்துகளிராதிராது, கோகநகமேவிய தடாகத்திலுங்கொட்டி கூடியில்லாதிராது,— டிரவிமதியுமொரு கணமாயினும்மரவினுன்மறைபடாதிராது, நற்கருப்புக்கட்டியாயினுங்கண்மண்ணு நாடாமலேயிராது, தாடகைசம்மாரமால் துணைவியேகருணைவிழித் தையலேமெய்யபுகழார், தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுணாமுலையம்மையே. ()

சிறுமையிற்சிறுமை.

ஆசைதருவேசியொடு நேசமதுவாயினு மதுவுமொருபெருமையல்ல, வன்புடன்காசுதா ராமலேஜாடையா பகலுவதுவெகுசிறுமையாம், பாசமுமுவறுமையா னொந்துடன்மெலிந்துமலை பவதுமொருசிறுமையல்ல, பாக்கியமிருந்துமிலையென்றுபாசாங்குமொழி பகருவதுவெகுசிறுமையாம், சீர்தரையாயினு லவரிடங்கைகட்டிநிற்பதுஞ்சிறுமையல்ல, நிதமுமனையாடமக் கேவலுன்புரிகுவது சிந்தைபுற்றிசிறுமையாம், சாசுவதமாய்ச்சிரஞ் சீவிமார்க்கண்டனைத் தாபரித்தெமனைவென்ற, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுணாமுலையம்மையே. (௨௰)

இன்றியமையாமை.

பாவலர்க்குனதுசெய லல்லாதுசற்றுமவர் பைந்தமிழ்முடிப்பதில்லை, பகாதியவிந்திரன் செய்கையல்லாமலிப் பாரின்மழைபொழிவதில்லை, யேவல்புரிகண்ணுளர் தொழிலையல்லாமலே யெத்தொழிலுமாவதில்லை, யோம்பர்தனைமுந்தி நினையாதகருமங்களேதொன்றுமாவதில்லை, மாவிருதர்பஞ்சவர் முகுந்தனருளல்லாமல் வன்சமரில்வென்றதில்லை, வளலட்சுமிகிருபை யில்லாமலியாவர்க்குமகிழ்செல்வம்வருவதில்லை, தாவுமல்லிகைமுல்லை யிருவாட்சிசண்பகந் தண்கோடிபடர்ந்தபஞ்ச, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுணாமுலையம்மையே. (௨௧)

கன்மத்தால்வருபவை.

கற்பித்தவித்தையை மறந்தசடனாவதுங் காயமுன்செய்தகர்மம், கல்வியறியாதவர்க் குப்பாரியாவதுங் கருதுபெண்செய்தகர்மம், சிற்புத்தியாலேபோய் பொய்ச்சாட்சிசொல்வதுந் தெளிந்துசெய்திட்டகர்மம், சிவமாலைமதபேத மொழிந்துசணிப்பதுந் தீராதகர்மமாகும், கற்புற்றமனைவிவிபசாரியாவதுமந்த நாயகன்செய்தகர்மம், நளசக்கிரவர்த்தியடி கைத்தொழில்புரிந்ததும் நவிலவொண்ணாதகர்மம், சத்பூரணிபராபரிகராகுபாலியே சாம்பவிசிவகாமியே, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுணாமுலையம்மையே. ()

தனத்தாற்றுக்கமென்பவை.

தனமதைவருத்தமாய்த் தேடவும்வியாகுலஞ் சேர்ந்திடுமேந்திழைபொருவர், தான்கடன் கேட்கக் கொடுக்கவும்வியாகுலந் தந்தபின்சொன்னகெடுவில், திவசடந்தைமெல்ல வாங்கவும்வியாகுலந் தெண்டியேகைக்கொண்டினிச், சேல்லவூராம்ம லாகுமென்றெண்ணியே செப்பமாய்ச்சொப்பிலிட்டு, மனைதனிற்கல்லிப் புதைக்கவும்வியாகுலம் வைத்தபொருளுக்குமோசம், வாராதிராப்பகல்காக்கவும்வியாகுலம்வலுவரசர்சோரர்பூமி, தனநிலாவனலினவையிலே

ருமோசம்வந்திடிற் சாகுமளவரையியாகுலந்தான், தருமேவுமருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௨௧)

இன்னோர்க்கின்னதிட்டமென்பவை.

படிமிசையிலங்கைபுரி மன்னருக்கதிகபொன் பாலிப்பர்மீதிலிஷ்டம், பரமசிவனுக்குரிய தவமுயலுமெய்ஞ்ஞான பத்தர்களிடத்திலிஷ்டம், வடிவம்புணர்ந்தகவி வேணர்களுக்கிசைபுரிமாந்தர்களிடத்திலிஷ்டம், மயலதிகமுற்றவிப சாரிக்குவாலிப வசீகரர்தம்மீதிலிஷ்டம், அடிமையானரமென்ன மெழுபத்திரண்டிலமாயையனுக்கனுமனிஷ்டம், அத்திபகனுக்கனைக் கருதித்துதித்தலே யடியனுக்கிஷ்டமம்மா, சடைதிகழ்விநோதபரி பூரணிதயாதிவ்விய சாம்பவீயேவபுபாகாய், தருமேவுமருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௨௨)

உலகப்பலவிதம்.

காசினியின்மானிடர்க் கயன்விதிப்படியாலே கன்மவினைக்தபோது, கவிகாரர்தமதிட நூறைக்கவமுறைப்பாகி கண்டோர்த்திடுவமென்பார், வீசுபுகழ்சோதியரிடத்துரைத்தாலனு மிகவக்கிராதிகள், விரோதித்திருக்கின்ற குபசாந்திசெய்திடவுவேண்டுமென்றேயுரைப்பார், தேசமுதுதெய்வமாமவர்களைக்கேட்டிலுன்னிதியடர்வீட்டிலுள்ள, தோனதெய்வமது சீராமென்பார்கணிசவைத்தியர்கைகளைப்பார்த், தாசைவைத்திதுதொந்த ரோகமென்பார்புவியின் சங்கதியையாருமுறையார், தருமேவுமருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே (௨௩)

இதந்தீதுகலமென்பவை.

அட்டதிக்கொன்னலரை வெட்டிச்செயங்கொண்டவ் வாசகட்டிசெல்வத்தினிலும், ஆனடியராகுஞ்செழுந்தென்னமெய்ஞ்ஞான வழிகளுமேகசிலாசயம், வட்டமிட்டுச்சிர மயிர்குழச்லாடகிரிவைவலையாகலந்ததனிலும், மதகரிமுகக்கடவுள்சிவனை வலம்தாசனியானைதுவெகுரிலாசியும், நட்டவினைதொலையவுள கந்திலுனதல

செழுஞ்சுற்றியோதொழுவதினிலும், சுந்தரமூயாருணைகிரியிற்றிருக்கார்த்திகைச் சோதிகாண்பதனிலாக்கியம், சட்டமுடனெவ்வுயிர்க்குமிரானபார்வதி சமயமுதல்வனொருனே, தருமேவுமருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௨௪)

இன்னாருக்கின்னார் விரோதமென்பவை.

சொற்புத்திகேளாத மைந்தர்கள் குருச்சொல்லரியசத்துருவைத் திறந்தபின்றந்தையுஞ் சுதனுக்திராவதி, தொலைய, உற்பித்தகிசுவேற தாமனைவுமாதாவி னுயிருக்குச்சத்திராவதி, புட்புருந்தரசர்பாற் கோட்சொல்லுவோர்தமக் கூடலாஞ்சத்திராவதி. கர்ப்பத்திலுகருமனை மிதுனிற் கையினிற றதமகொள்வர்சத்திராவதி, தன்மனைவிகொவமைசொலிவென் றமவன்சல்வியக் தனியாதசத்திராவதி, சற்றுமினைவயிசகிலைப் புவிமிசையிலிவர்களைச் சத்துருவெனச் சொல்லலாம், தருமேவு மருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௨௫)

பலனற்றவை.

சோத்திரமுயர்ந்தென்ன சாத்திரமிலாதவன் குலவீனமாகமலவோ, கொடியலாபத்திலுத வாததெய்வம்நம்பிக் கூடியனைசநதையலவோ, மாத்திரையிருந்தென்ன தாலையறியாத வைத்தியனுமூடனலவோ, மாடமாளிகையலவுங் காரித்துமாதரில் மனையியம்பாழதலவோ, ஆத்திடைசென்றதிற் றீர்த்தமாடாவிடிலரும் பாவிதானுமலவோ, அரியபஞ்சாட்சரத் துபதேசமில்லாத வசனும்பேயலவோ, தாத்திரியதாவெனத் திருடனவம்பலர்கள்புகழ்கின்ற, தருமேவுமருணகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௨௬)

அற்பர்களியல்பு.

புல்லறிவுளோர்தமக் கதிகாரம்வந்திடிற் புகழறத்தினைவிரும்பார், புண்ணியபதிவிரதைமேன் மயல்கொள்ளுவார்களிப் புடனுதாசனம்விண்ணுவார், அல்லுபகலுங்கொடியகோணிலைத்தெவர்களையு

மட்டவிகடஞ்செய்குவார், அன்புடன்பெரியோர் களுக்கிடருபுரிகுவா ரதிசகருவங்களுடனே, நல்லூருவினிற்சாய்ந் தெனக்குநிகரிலையென் றுநட்டணைசன் பேசிவெல்ல, நகைசெய்து மீசைமேற் கைபோகிலவர்தன் னடத்தையைப்பார்த்தபின்பு, கல்வியப்பவர்க்கு நன்றுபைதங்குமோ தங்காதுசற்றுமவர்பால், தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு [illegible] லையம்மையே. (௯)

உலுத்தர் உதவார்.

காட்டின்மரமாயினும் நிழலுதவு நறிவிலாக் கழுதையும்பொதி சுமக்கும், கதிர்ச்சுணங்களுங் கள்ளனையகற்றிடுங் கைத்துரும்புதவியதிகம், வீட்டினிற்சிமையார் சுத்தமதுசெய்திடுங் கோலி பயிரைக்காத்திடும், மிதிபடியுநள்ளிருள் வழிக்குதவிசெய்திடும் விழ்பழயசுவருமறைவாம், காட்டுவெறின்மலசலா திகண்மருந்துக்காகும்நட்பிலாலுத்தரியார்க்கும், நல்குமுபகாரமிலையாகையாலேமுன்னவின்றதற்கிணையாவரோ, தாட்டுணைய லாதியான் வேறுகதி யறிகிலேன் றருமஞானக்கொழுந்தே, தருமேவு மருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௧௦)

நல்லோரியல்பு.

நல்லசற்குணர்தமக சிகாரம்வந்திடினு நாவினிற் பொய்யுரைக்கார், நம்பினோர்தமையாத ரம்பொல்லோருக்கும் நல்வசனமேபகருவார், சொல்லரியதருமத்தை மேற்செய்குவாரொருவர் சொத்திலுக்காசைவையார், தாய்பிறர்மனைவியைத வாயெனச்சிந்தையிற்சொப்பனத்திலுமெண்ணுவார், அல்லலெளியர்மேவிய னூரேனுமவர்க்குதக் கதியாயமதுவுரைக்கார், அரன்திருப்பதமலரை யெப்பொழுதுமிருதயத் தகலாமல்வைத்துநினையுந், தல்விப்பதியெனத துதிசெய்வாரதனையால் சாயுச்சியமீவதறிந்தோ, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௧௧)

சின்னமனிதர்.

அன்புடன்வாகினை கடன்கொடாமனிதனு மபசத்திய முனமனிதனும், அன்னைபொலதேர்ச்சைசொல் விகழின்றமனிதனு மப

[illegible]

யமென்றுஞ்சிமிகவே, நன்மைபெறவந்தோர்க்கு வீண்சொல்லுமனிதனும் நயகுணமிலாமனிதனும், நாடோறும்வேட்டகந் தனிலுண்ணுமனிதனும் நல்லோரையிகழ்மனிதனும், இன்பமனையாளைவேசிக்கடிமைசெய்துதன் னிதயமகிழ்வுறுமனிதனும், ஈனர்களிடத்திலுறவானவீண்மனிதனு மிவர்களெல்லோரு மெளிதாய்த், தன்பெருமையில்லாத சின்னமானிடரெனச் சாற்றுமே யுலகுமுழுதும், தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௧௨)

இணைசொலிற்பயனில்லாதவை.

அருக்கனின்கிருகத்தை மாமின்னுமென்னவென் றுனடாளிணையாகுமோ, ஆனைக்கன் விலையை முத்தென்றுமென்னதிக முரணிமுத்திணையாகுமோ, வருக்காமனைப்புலவர் வேளென்றுமென்சுப்ர மணியவேட்கிணையாகுமோ, வள்ளவிருபத்தொருவரென்றென்னவடகைலை வள்ளலுக்கிணையாகுமோ, திறமிலாலோபரைக் கர்ணனென்றென்னலவர் தியாகமப்படியீய்வரோ, தெய்வமெத்தனைபகிரிந்தாலுன்பதசேர்வை செய்வதற்கிணையாகுமோ, தரைமிசையிவர்களுக் கிணைசொலிற் பயனில்லை தற்பரானந்தவொளியே, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௧௩)

பழவினைப்பயன்.

பொன்னுலகையாளிந்திர னகலிகையாலாயிரம் பொருகுவிழியுருவதானான், புகழரிச்சந்திரன்விசு வாமித்திர முனியினாற் புலையனுக்கடிமையானான், முன்னநளனைச்சனிய னவர்தொடுத்தவர்மேயன்றென்னபாடுபட்டார், முகுந்தர் சாணகியுடன் பதினொன்றுவருடமும் மொய்வனந்தனிலுறைந்தார், பன்னரியசேடனுங் குணமவலியாலுடல்பதைத்துமெலிந்துழன்றான், பகருமுன்பெரியோர்கள் விதியாலலைந்திட்டபண்டுகதைகேட்டிருந்தும், தன்னைமுனவினைவிடா தென்றிராமல்மனிதர் தான்விசன மடைவதேதோ, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே,

தியாகிகள்.

சீருலவுகர்ணனும்புகழ்பெற்றகுமணனுந்திருவசிகரசக்தியும், செயவெண்ணைநல்லூரி னிற்சடையனும்பரிவு சேர்ந்தசயிதக்காதியும், காரணையகரதலச் சேந்திகாத்தானெழிற் கதிக்குநல்காமனும்பின், கனிசமுறுகச்சியப் பனுமதிகபெரியனுங் கருதிண்டக்கானத்தியும், எர்ப்பரவுசோமனு மிவரெலாம்புவிமிசையி லினியதமிழுக்கிரங்கி, யிரவலர்க்கோயாம லீய்ந்தேதியாகியென் றெண்ணருங்கீர்த்திபெற்றார், சார்புதுணையில்லாத னுத்தருக்கவர்களைச் சரியெனப்பாடலாமோ, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுணாமுலையம்மையே. (௧௫)

பாவவழி.

அந்தணர்களுடைமையைத் தெண்டம்பிடித்திடுவ ததுபுண்யமலபாவமாம், அன்னசத்திரமதின் முகம்பார்த்து வன்னமிடுவது புண்யமலபாவமாம், முந்துசமிற்றளில் வீழ்வனைக்கொல்வது முனைச்சௌரியமலபாவமாம், முன்னவன்றேவியைப்பரிகாசமாகவே மொழிவததுவெகுபாவமாம், சந்திகளுடனுண்ண வேயச்சமுறுவதுந் தான்சுத்தமலபாவமாம், தனதான்யவர்க்கத்தி லாபவிலைவைப்பதுஞ் சம்பாத்யமலபாவமாம், சந்ததமுமிவ்வகை நடத்தையிற்பாவங்க டானணுகுகலிகாலமே, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுணாமுலையம்மையே. (௧௬)

புண்ணியத்தாலாமெண்பவை.

குலவீனர்சிவனடியராகிலவரைப்பணிதல்கொஞ்சமலவேபுண்யமாம், கொடியபகையானருக்காபத்திலுதவுவது கோமைமதியல்புண்யமாம், தலையைத்துணிக்கவேவிமெம்புதப்புவதுநாட்டீகமலிபுண்ணியம், சகலசௌபாக்யமுடனேவாழ்ந்திருப்பதுந் தன்றிறமையலபுண்யமாம், நிலையாய்பெருக்காற்றில் வீழ்ந்தவன்றப்புவது நீர்ச்சின்வலியவபுண்ணியம், நெடியவாருதியெய்தி மீள்வதும்மீகாமன்லைமையலவெதுபுண்ணியம், சலதமடந்தைபூங்குழலியேபுவியினிற்றங்குபுண்யங்களிதுவாம், தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுணாமுலையம்மையே. (௧௭)

பயனற்றவர்.

கண்ணிருந்துங்கண்ணி லாதவர்களாரெனிற் கல்விகல்லாதபேராம், காலிருந்துமுடவ ராரெனிற்சவதலங் கருதிமிதியாதபேராம், மண்ணுடன்பொன்னிருந் தன்னமீயாதவர்கள் வாயுள்ளபெரியநாயாம், வாயிருந்தும்முனது திருநாமமொருதினம் வழுத்தவறியாரூமையாம், பண்ணிருந்தும்பாட வல்லமையிருந்துமுனைப்பாடாதவன்புலையனாம், பரிவாகவிருகை யிருந்துங்குவித்துனைப் பணியாதவருமூடராம், தன்மையுளவிம்மனிதர் புவியிற்பிறப்பதிற் றானென்னபலனோசொலும், தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுணாமுலையம்மையே. (௧௮)

வைசியரியல்பு.

சிரிலாமடையரோ டிணங்கிலார்வியாபாரஞ் சிந்தையாய்வந்தபேர்க்குச், சித்தமொப்பித்திர மொழுப்பசும்பொனைச்செயலாகவேயுதவுவார், ஆர்வமுடனேகணக் காசாரமதனிலே யளவீசைமுந்தரியெலாம், ஆராய்ந்துபார்த்தெழுதி நிலுவைதெண்டிப்பொன்னையருமையாய்ச்சேர்ப்பார்பின்னும், கூர்மையொக்கவேலையாவேலையுமதிர்கரங்கொண்டமட்டும்பொருளினைக், கொள்ளுபதினாயிர மிலக்கமாயினுமனங் கொளாதுசெலவழிப்பார், தாரணிதனிற்பிரபலஞ்சிறந்திவைசியர்தங்கடனியற்கையிதுவாம், தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுணாமுலையம்மையே. (௧௯)

உலகவழக்கம்.

வரிசைப்பிடாரிக்குப் பொங்கல்வையாவிலே மழைபெய்யவில்லையென்பார், வந்தகொடுநோயறிந் தெனடதமீயாமலிம் மனிதனுயிறந்தெனென்பார், சரிவரச்செய்தொழின் முயற்சியில்லாமலே தான்குடியினைத்ததென்பார், தன்றிறமையாலேயுன் சொன்னப

டிதப்பாது சபதமுமுடித்தனென்பார், ஒருவனவனெதிராளிபோனபின்பதிகனகயோகம்வந்துற்றதென்பார், உபாத்தியார்திறமில்லையாகையாலே மதற்குயர்கல்விவல்லையென்பார், சரிவையெலாமீசர் செய்கையென்றறியாமற் றரணியின்மயங்குவார்கள், தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௪௦)

ஒன்றாலொன்றுவரும்.

தனதென்றகூசாம லரசர்மனைசொல்வோர் தனக்கிழிவுவந்துநேரும், தன்கணவனற்றபெண்ணாருமில்லாவிடிற் றாய்வீடுவந்துசேரும், நினைவுபேதித்துப் பிதற்றுவர்தனைப்பித்த னிவனென்றுசொல்வரியாரும், நிணமொத்தவிசுவாச மும்பொருள்வழங்குவதினெடியபகைவந்துசேரும், பனகமொடுபலநாளுமேபழகிலொருதினம்பகெவிடந்தருகமீரும், படிமிசையிலருணையைநினைத்தபொழுதேபஞ்சபாதகமொழிந்ததீரும், தனியுனதுபாதமல ரல்லாதுதுணையில்லை தமயன்மேற்கிருபையாரும், தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௪௧)

பொது.

மாணிக்கமீய்ந்ததெனு மறவத்தையுலகத்து மனிதர்நம்புவதுமுண்டோ, மாகனதனம்படைத் தாலுங்கொடாதவரை வையகம்புகழ்வதுண்டோ, பூணிக்கையானநற் றமிழ்வாணர்நாவினிற் பொய்தட்டவட்டமுண்டோ, புலிபசித்தாலுமது தசையருந்தாமலே புல்லினைத்தின்பதுண்டோ, நாணியெதிராளிமுன் வார்த்தைசொல்வார்களது ஞாங்கரும்வெல்வதுண்டோ, நரசன்கைப்பட வுயிர்மீண்டுவந்திப்பெரிய ஞாலத்துமுய்வதுண்டோ, சாணிக்குமேன்மைச் சவ்வாதுக்குமேறவிலை சரியென்றுசொல்வதுண்டோ, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௪௨)

ஒன்றாலொன்றுபயன்படாது.

வேதாந்தமெய்ஞ்ஞான நூலுணர்ந்தென்னகொடு வெகுளிமனதுள்ளிருக்க, மிகநயவொழுக்கமுடன் வார்த்தைசொலிலென்னவவன் வெகுலோபியாயிருக்க, வாதாடியெதிர்செய்துநின்றென்னகூறிய வழக்கிளைத்தேயிருக்க, வரிசையாபரணங்கள்பூண்டென்னமெய்ம்முக வசீகரமிலாதிருக்க, கேதாரமொடுதீர்த்த யாத்திரைகள்சென்றென்ன கெடுதனினைவுள்ளிருக்க, கெம்பீரமாய்க்கையிலாயுதமெடுத்தென்ன கெசபேடியாயிருக்கத், தாதாவேயுலகுக்குமாதாவேயெழுவகைச் சராசரத்திலுமுறைந்த, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௪௩)

மூடர்கள்.

சகலகலைகற்றுணர்ந் தாலுஞ்சினத்தைத் தவிர்க்காதவன்மூடனும், தந்தைதாய்சொற்புத்தி சிந்தையிலுமெண்ணாத் தள்ளிவிடுவோன்மூடனும், அகமகிழ்ந்தரிசிவன் பூசையினினினைவுவேறாவனொருபரமூடனும், அன்பிலார்வீட்டிலே வலியவேசென்றுதானனம்புசிப்போன்மூடனும், சகதிற்பெண்வார்த்தை கேட்டொருவர்மேற்சண்டை தான்செய்குவோன்மூடனும், தயாளுவேயென்றவர்க் கீய்வரைவிலக்கிடுந் தகவிலாதவன்மூடனும், தகவிலாதானையே வேறுபங்காக்குவோன்சண்டாளமூடனாதும், தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௪௪)

பயன்படாதவை.

உரியவேளானையுஞ் சகுனமதுசெய்ததா லூர்ப்பீடையதுதலையுமோ, வொருவர்வாழ்வதுபொருந் தாமலேசாய்ந்தா லுயர்பவுசவர்க்குவருமோ, பரிபூரணானந்த ஞானமறியாவிடிற் பரமபதமுங்கிட்டுமோ, பண்டுநோய்க்குத்தெய்வம் வேண்டியேபொங்கலோடு படிகொடுத்தாற்போகுமோ, அரியவாருதிநீரினைத்தாகமானபேரள்ளியுமருந்தலாமோ, அடையலர்கண்முன்கையி லாயுதமெடுத்தபின் னஞ்சியும்நிற்கலாமோ, சரியெனக்கொருவர்நிகரிலையென்றியாவருந் தன்னையேபுகழலாமோ, தருமேருமருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௪௫)

இதனையிவரறிவரென்பது.

வித்துவானருமைதனை வித்துவானறியாமல் வீண்மூடர்தாமறிவரோ, வியாபாரநிலைவரந் தனவைசியரறியாமல் வேறொருவர்தாமறிவரோ, பக்தரிடதவமகிமை ஈசனறியாமல் பலதேவர்தாமறிவரோ, பருவரதிமதனுருவை யறிவதல்லாமலிப் பாரிலொருமாதறிவரோ, எத்திசையின்விடய நாரதமுனிவரறியாம லிசைய தும்புருவறிவரோ, வெழில்கமலமுளமதுவை வண்டினமருந்தாமலேதமுளதவளையுணுமோ, சத்தியேசின்மகிமை யாரறியவல்லார்கள் சண்முகனையீன்றவளையே, தருமேவுமருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௬௬)

ஒன்றிலொன்றுபயன்.

பண்புற்றசுதிகூட்டி யிசையுடன்படியாத பைந்தமிழினிப்பிராது, பருவகாலத்தில்விரை தெளியாதபயிரும் பலித்தேவிளைந்திடாது, நண்ணுபொருளில்லாதார் சொல்வசனமரசர்சபை நடுவினும்பிடியிராது, நடுவழிமறித்தடித் துப்பொருள்பறிப்போர்க்கு நல்லொழுக்கந்தயவிரா, தெண்பத்துநான்குநூறாயிரஞ்செந்துநீ யில்லாமலுயிரிராதே, ஈசருன் றிருமங்க லச்சலுகையல்லாம லேநஞ்சையுண்பதேது, தன்புத்தியில்லாத வர்க்குஞானங்களைச் சாற்றினுமறிவிராது, தருமேவுமருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௬௭)

இதற்கிதுவேண்டுமென்பது.

வச்சிரமகுடந்தரித் தரசுபுரிமன்னர்க்கு வாக்கின்மனுநீதிவேண்டும், மன்னுகல்வித்தொழிலு மெளிதல்லவிரவுபகன் மனதிற்கருத்துவேண்டும், உச்சிதமுடன்சபையி லுட்கார்ந்தபோதினு முதாரணைகள்சொல்லவேண்டும், ஒருநாளதாகினுந்திருக்கார்த்திகைக்குவந் துந்தனைப்பணியவேண்டும், எச்சுவிச்சித்ரமுடன் வித்தைசெய்யினுமிருகை யேந்தியேயிரக்கவேண்டும், எதுமொருகருமங்கள் கோரிக்கைசெய்யுமிடத் தெண்ணியேயிரக்கவேண்டும், சச்சிதாநந்தபரிபூரணியகிலமதீதந்தகாரணிசாம்பவி, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௬௮)

அதிகபுகழ்பெற்றிடுஞ் செல்வநிலைநிற்குமோ வாங்காரமனதிலெண்ண, வவரவர்கள்முன்செய்த கர்மநோய்த்தீவினைக் கவலாரைநொந்துமென்ன, மதியாமலெவ்வரையும் வசைசொல்லுவோர்கட்கு மானமரியாதையென்ன, வந்தவுடனேமகிழ்ந் துபசரிக்காதவன் வாசலிற்செல்வதென்ன, பதிதொறுமிரந்துண்ப வர்க்கினியசுடுசோறு பழஞ்சோறுபஞ்சமென்ன, பக்திநயத்திலில் லாதவன் சிவபூசைபண்ணுவதிற்பலனுமென்ன, சதுர்மறைபுகழ்ந்திடுங் கருணைநிறைவாரியே கயிலரசனுதவுமயிலே, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௬௯)

நன்னகரம்.

சித்ரமணிமேடையுஞ் சத்ரநிறைசாலையுஞ் சிறந்தரதவீதியழகும், தெங்கயில்பலாவெலு மிச்சைகதலியங்கமுகு சேர்ந்திலகுசோலைவளமும், பத்திரமதானகற் கோட்டையுஞ்சிகரப்ர பலபலமதிற்கோவிலும், பங்கேருகத்தடமு மெங்கெங்குநிதிசிறப் பானகடைவியாபாரமும், உத்தியோகபுருட ரதகஜதுரகபதாதியு முறைந்திருக் கின்றவலுவும், உற்றசங்கீதசா கித்யமுளபாடலு மோங்குதாசிகண்டனமாஞ், சத்தமும்முரசுபல வாத்யமுடனிவையெலாம் தங்குவதுநன்னகரமாம், தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௭0)

உலகவியல்பு.

சிறந்தநிதியுள்ளபே ரங்கியர்களென்னினுந் தெருவீதிவரவுகாணிற், சிந்தையின்மகிழ்ச்சியொடு கைதொழுதுகார்த்திகைத் திங்களின்பிறையென்னவே, விறல்பெறவு நீங்கள்வந் ததுநல்லவேளையென வீட்டில்வரவேணுமென்று, மெத்தவுமகிழ்ச்சியொ டுபசரித்தேமனை விரித்ததிலிருத்திவைத்து, திறம்பெற்றபட்சணங் காய்

சரிபடைத்துணைவு செய்தபின்னுரைப்பர்பூர்வத், தினிலுங்கடாவெங் கள் கிளையினிற்பெண்ணென்று சேதிபெரியோர்கண்மொழிவர், சரசமுடனீங்கள்வந் துறவாடவில்லையென்று சலுவைகொண்டாடு வார்கள், தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலை யம்மையே. (௫௧)

இதுவுமது.

தனமிலாதவனதிக பவுசாளிதன்பந்து ஜனமென்றவீடுவந் தால், தயவுடன்வந்தவனை வாவென்றழைத்திடார் சற்றுகோத்தி ரைப்பால், மனமதுசலித்துநீ யாரென்றுகேட்கவுன் மைத்துனனி யானென்னவே, வரலாறுகேட்டபின் உந்தனைக்கண்டியான் சோதிக்கையில்லையென்பார், தனமிரண்டாயிடிற் பெண்களுமெள்ளச் சினந்துதட்டைப்பிதுக்கிச், செப்புவர்தன்சாடையாய்க் கெதிகெட் டவீண்சோறு தின்னவந்தவனென்பர்கள், சனமல்லவெனவவனை வலியவேதாட்டுவது தரணிமானிடர் முறைமையாம், தருமேவுமரு ணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௫௨)

மானிடசென்மமல்லார்.

மகிமையுளசிவயோகி யென்றதலைகீழ்நின்று வயறுதவளர்க்க வெண்ணி, வம்புசெய்தேகாசு வாங்குவனும்யோகியல வௌவாலெ னுஞ்சென்மமாம், அகமறிவிலாமலே யான்பெருவைத்தியனென் றசாத்தியரோகத்தினுக், கௌடதஞ்செய்தவட னேகூலிவா ங்குவோனவன்வேசரிசென்மமாம், பகல்முழுதுமென்றங்கை யெ ன்னன்னையென்றே பரிந்திரவில்வந்தெனக்குப், பாரியென்றேமு றைமயக்கிப்புணர்ந்திடும் பாவியொருநாய்ச்சென்மமாம், தருமிவர் களுக்காலனென்னதண்டனைக டான்செய்வரோ வறிகிலேன், தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே.

பொது.

எம்பிரானருளவந்து மூவுலகிலேமுபது மெத்தொழிலுமாவத ல்ல, வியபூசவாதமுறை புவிமீதுமானிடர்க ளெல்லோருமறிவ

தல்ல, தம்பிதமயர்க்குமுன் பங்குபதியிலையென்று தள்ளுவதுநியா யமல்ல; தருமங்கெடுப்பவரை யியமவொண்ணாதவை தடுப்பதுநியா யமல்ல, கெம்பீரகயமீது வருவனைச்சுண்ணமது கேட்பதும்புத்திய ல்ல, கொடியராசுதனமென்று படியிலுளபேரைக் கெடுப்பதுந்தரு மமல்ல, சம்புவைப்பரிசெய்த பரமசிவனடிமுடிகள் சகலருங்காண் பதல்ல, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலை யம்மையே. (௫௪)

சகாயத்தாலாமென்பவை.

சுந்தரமுயர்தீபந் திகழ்ந்துவிளங்கிடத் தூண்டுகோ லொன் றுவேண்டும், சூழ்ந்தசதுரங்கசன படைசேனையேவிடச் சொல்லா ளியொருவன்வேண்டும், மந்திரஞ்சித்திக்க வேண்டுமேனின்மனம துமகிழ்ந்து குருவாக்குவேண்டும், மறையவரை யுயிர்கொண்ட போதுமிகவழிபாடு வந்தனைகள் செய்யவேண்டும், கந்தரமிசைத்தி ராகத்தொடுபடிக்கிலுங் கல்வியைக்கருதவேண்டும், கடியநடையா லகதமென்னுமாவுத்தர் கையிற்சவுக்குவேண்டும், சந்ததமு மிடியாவலைந்திடினுமழியாத தருமசிந்தனைமுன்வேண்டும், தருமே வுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௫௫)

தகாதமனைவி.

ஆரடிவீட்டிலே பரதேசியொருவனுக் கன்னமிடுவென்றகண வனுரைப்பொரு பார்வைபார்ப் பதனபாவமேன்கொள்கிறாயுனக் கறிவில்லையோ, சிறுபிள்ளைகளுக் கேயன்னமில்லையென்று சீறுவா ளேதுபதர்தான், சாக்கட்டமதனையெண்ணி மனதில்லைத்தவா றசப்பொறுதையர்மெத்தத், துரத்திருந்துவந் தானன்னமிடு வெனச்சொல்லவும்பின்னேதுகின், ஏக்கத்துக்கெத்தனை நாளழு வேனென்றவளைச் சொல்லவும் வெகுண்டடித்தால், தாரைபோல் விழியினீர் சோரவழுதுரெலாஞ், சலுவைசொலு மனைவிகமனும், தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே.

சிறப்பிலாதவை.

சித்தமகிழ்வடைகின்ற புத்திரபவுசில்லாத செல்வஞ்சிறப்பிராது, திருமங்கல் யங்கழுத் தில்லாதமாதரிட தேகமுஞ்சிறப்பிக்கா, தெர்த்திலாப்புகழ்பெற்ற காவேரியணுகாத ஊருஞ்சிறப்பிக்கா, துன்கிருபைதாங்காது பூதலந்தன்னிலே தோன்றுஞ்சிறப்பிராது, சத்தசுரமறிவிலா ரஸ்தமதில்வீணைசங் கீதஞ்சிறப்பிராது, தலையலங்காரமது வையாததோரழகு சற்றுஞ்சிறப்பிராது, சத்தசிவ சாம்பவிகாதலிமனோன்மணி சடாதரிவேதமுதல்வி, தருமேவு மருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௫௭)

விதிப்பயன்.

குன்றாதசகலசெள பாக்கியமொடுவாழ்வதுங் கொடுங்கலியடைந்துழல்வதுங், கூர்மையொடுகல்விகற் றப்பிரஸங்கித்தலுங் குறுகிமடையனுமாவதும், ஒன்றுநூறாய்வம் விசம்பிரபலிப்பதும் ஒழுங்கிலாதேவிடுவதும், ஆண்மைகூன்குருடுமூட முடவாமெய்ப்பதா முறுமழகிலழகாவதும், மன்னர்வலியாமெளிய ராவதும்மெளியரம் மன்னராவதுமெலாமுன், வரைசரியனெழுத் தெள்ளளவுந்தப்பாது மற்றொருவராலாகுமோ, தன்னையேசார்ந்துகுங் குமமணிபயோதரஞ் சச்சுதானந்தபரையே, தருமேவுமருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௫௮)

இன்னோர்க்கிதுதவி.

பாங்குயருவடவரைக் குதவியாயட்டகுல பருவதஞ்சூழ்சிறந்து, பளபளெனவளர்தா மரைக்குதவி நீ[illegible]கிரபானுவுக்கு[illegible]வாய்வாம், ஒங்குபுகழ்விண்ணவர்க் குதவிகுகனார்கைய [illegible]க்கிரவடி வேலாயுதம், உற்றசங்கீதசெந் தமிழ்ராகமோதுவோர்க் குதவிதம் பூர்புவியினில், தேங்குபயிருக்குதவி மேகம்வருஷித்தல்சிறு சேய்க்குதவியாகுமன்னை, திக்கரசருக்குதவி மதிமந்திரிசுத்தரண சேவகர்க்குதவியகலாள், தாங்குநின் கருணையரு ளல்லாதுவேறுதவி தமியனுக்கேதுமுளவோ, தருமேவுமருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௫௯)

சிறந்தவை.

வரிசையுளநவரத் தினத்திற்பிரகாசமுள மாணிக்கமதுசிரேஷ்டம், மங்கையர்க்குள்ளதிக கற்புநிலையுற்றகுண மாதருக்கதுசிரேஷ்டம், அறியமந்திரமதிற் பிரணவந்தேவர்க்கு மரிதாகுமதுசிரேஷ்டம், அம்புவியிலேகோச லத்தரிச்சந்திரனே யரசரில்வெகுசிரேஷ்டம், பரிவுகந்திடுசத்த சாகரமதிற்றிருப் பாற்கடன்மிகச்சிரேஷ்டம், பண்ணுபழமொழிதமிழி லிங்கிலச்செய்கையது பகர்திருக்குறள்சிரேஷ்டம், தருவுயர்ந்திடுசிவஸ் தலமதிற்சிரேஷ்டநீதங் குபுகழருணைநகராம், தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௬0)

மாதராற்கெட்டவர்கள்.

புவிமிசையிராவண னிறந்ததுங்கீசகன் பொன்றினது விண்ணுலகில்வாழ், புறந்தரர்க்காயிரங் கண்ணானதுந்தவப் புனிதசாதனன்மாண்டதுங், தவநிலைகலைக்கோட்டு மாமுனிகுலைந்ததுஞ் சாரங்கனூனமான, சங்கதியுமிங்கித முயர்ந்தநற்றொருவர்கள் சமர்க்களத்தேபட்டதுங், கவியினத்துற்றபல வாலியுயிர்போனதுங் கணவணிகோயிலனைமுன், கருதரியமதுரையில் விருதாசர்கொன்றதுங் கபடமயிடன்போனதுங், தவளிதமுறுங்கொங்கை மாதரால் வந்திட்ட தாழ்வதனைநவின்பர்பெரியோர், தருமேவுமருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௬௧)

மேலோருக்கு எப்பொழுதும் மேன்மை.

மேதினியின்மேன்மக்கள் கெட்டாலுமவருக்கு மேன்மைமரியாதையுண்டு, வேல்வனோந்தாலுமது நிகழ்கின்றசிவிகையின் மேற்கொண்டிருப்பதுண்டு, நீதாசவாதமுறை கெட்டாலுவைத்தியம் நேர்ந்தேபலிப்பதுண்டு, நிகழ்கரியிறந்திடினும் வீணல்லவஸ்திதனை நிதிதந்துகொள்வருண்டு, குதிலாயோகிகட் கிகமதிற்சுகமில்லை சொர்க்கத்தின்முத்தியுண்டு, சுகமதனரூபியென் றுலுமீரதி

மாட்டுஞ் சுரூபமொடுதோற்றமுண்டு, தாசியில்லில்வாசமிலாவிடினுமரனுடைய தலைமீதிருப்பதுண்டு, தருமேவுமருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையும்மையே. (௬௨)

ஒப்பில்லாதவை.

முருக்குப்பெருத்திடிற் றூணாகுமோபட்சி முட்டையண்டமுமாகுமோ, மூடர்நிதிதேடினுஞ் சர்ச்சனர்களாவரோ முலைகளருமலையாகுமோ, விருப்பமில்லாதபேய்ச் சுரைகரிக்காகுமோ வென்றுதென் சுக்கிரனாமோ, மிக்கபனைகற்பகத் தருவாகுமோதவளை வெற்றிபெருதவளையாமோ, இருக்கிலும்பெற்றப்பிள்ளை தன்பிள்ளையாகுமோ வெழுதுமடன்மாதாகுமோ, வீணவெள்ளாட்டிதன் பெண்டாவளோநீரி னிற்கயல்முழுவதாமோ, தருவடருதலமெலாம் புகழ்தங்குமருணைத் தலத்தினுக்கொப்பாகுமோ, தருமேவுமருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௬௩)

இன்னார்க்கிதுநாசம்.

தெரிவையர்கண் மேலதிகவிரகமுற்றிவெரிட தேகமும்பொருளுநாசம், தெய்வசந்நிதியினின் றபசத்தியங்களைச் செய்வர்குலமுழுதுநாசம், தருமசிந்தனையிலாத் துன்மார்க்கவேந்தரைச் சார்ந்திடுங்குடிகணாசம், சவ்வாதெத்தனையிலொரு பனையளவுசுண்ணமது தான்கலக்கிடவுநாசம், உருகதலிவேய்சிப்பி நண்டிவைகள்கெர்ப்பமுண்டாயிலுயிருக்குநாசம், உள்ளங்கலங்கிடி லெடுத்தகருமங்களியா தொன்றுமில்லையாநாசம், சருவபாவங்க[illegible] லுடைய தாள்பணியநாசமாகும், தருமேவுமருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௬௪)

உலகத்தார்மயக்கம்.

ஐயமிட்டுண்கவென வௌவையாருரைத்தநூலறிவகத்தெண்ணாமலே, யநேகயாகநீதிநெறி முறைமையைவியாசமுனி யருளினாரென்றுவல்ல, செய்யகுருமுனியுடன் பதினெண்மருஞ்சில செப்பினாரென்றவீணாய்த், திரிவதானலமேது நதிமூழ்கியேதலஞ் சேவிப்பதேதுபயனே, வையமதின்மெய்சித்தி யாமெனக்கற்பமும் வமூத்திரந்தனையெண்ணி, மானிடர்கணிசமெனக் கருதுவாரதுகினைது மகிமையில்லாமல்வேறே, தையலேபரிமள மடந்தைபங்கேருகத் தற்பரானந்தவல்லி, தருமேவுமருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௬௫)

பொது.

சிறுபிள்ளையாயினும் புத்திநிலைசாஸ்த்ரவழி தெரிந்தொழுகுவன்பெரியவன், சிந்தைகோணாமலொரு தாம்பூலமாயினுந் தெரிந்துதவுவதுதர்மமாம், பரிவுள்ளபங்கேருகத்திரளனேகம் படர்ந்திருப்பதுதடாகம், பவமுறுஞ்சீற்றமும் பாசமுமொழித்திருப்பவனுமெய்ஞ்ஞானயோகி, புருடனைத்தெய்வமென் றெண்ணியேபூசித்த பூவையேகற்புடையவள், புதியவறுசுவைமிகுதி யாகவேசேர்த்துப் புசித்திடுவதேபோசனம், சருவபூடணமெனும் பரிவுள்ளவஸ்திரந் தரிப்பதலங்காரமாம், தருமேவுமருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௬௬)

இன்னார்க்கிதுபிரியம்.

சூழ்ந்திரவியாலுலர்ந் திட்டபயிருக்குமழை சொரிவதாலேகெற்சிதம், சோரக்கமாவாசையிரவினிற்பிறர்மனை சுரங்கமிடவேகெற்சிதம், தாழ்ந்தவிபசாரிக்கு வருசோரநாயகர் தனைக்காணவுங்கெற்சிதம், சமரிலொன்னார்படை முறிந்தோடில்வெற்றிபெரு தறமனைத்துங் கெற்சிதம், வாழவுணரைக்குகன் வேற்றுணித்திடுபோதில் வானவர்க்குக்கெற்சிதம், மந்தியிரசம்பெருகு கனிசிறந்திடுதோப்பில் வருகமிகவேகெற்சிதம், தார்குழலிநீயெங்கு நிற்பதாலீரேழுலகனைத்துங்கெற்சிதம், தருமேவுமருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௬௭)

இல்லை.

அறிவிலாமூடர்முன் கல்விப்பிரஸங்கமதி வழகில்லையின்பமில்லை, யையமிட்டுண்ணாதவர்க்குமெய்ப்புகழ்கீர்த்தி யதுவில்லை வ

முமில்லை, துரியதுரியாதீத மறியார்க்குமெஞ்ஞான சூட்சமிலைமோட்சமில்லை, சுத்தாணவீருக் கெந்நாளுமனதினிற் றுயரிலைப்பயமுமில்லை, யிருதயக்கபடமிகு சுங்கமணியத்தினுக் கிதமிலைப்பயமுமில்லை, யெவ்வுயிர்க்குயிரான வீசனார்க்கெப்போது மிறப்பொடு பிறப்புமில்லை, சருவலோகாம்பிகா வென்றுனைப்பணிபவர்க்குத் தாழ்வெனுங்குறையதில்லை, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௬௮)

இன்னார்க்கிதுண்டு.

அதிகபலசாத்திரங் கற்றுணர்ந்தவர்களுக் கறிவுடன்மேன்மையுண்டு, அபயமெனவந்தவரை யஞ்சாதேயென்பவர்க் கறமுண்டு திறமையுண்டு, பதிவிரதைமாதர்மே லாசைவைத்திடிலதிக பாவமொடுபகையுமுண்டு, பாலடிசிலுண்ணகம தற்கிரண்டகஞ்செயிற் பழியுண்டுவெழுவுமுண்டு, சுசிதானமறுவிலாற் பாடுசங்கீதமதில் சுகமில்லைகுற்றமுண்டு, துன்மார்க்கமூடரோ டிணங்கியுறவாடினாற் சூதுண்டுவாதுமுண்டு, சதுர்மறையிலெட்டாத இருநயனவல்லியே சத்தியேவேதமுதலே, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௬௯)

துன்பமென்பவை.

துலையாத்தரித்திரநோ யடைவதுந்துன்பவினை சூழ்ந்திடினு மதிகதுன்பம், சொல்லிகழுமனைவியொடு வாழ்வதுந்துன்பமெய் சுசிகரமிலாதுதுன்பம், பலகாலமுந்துயிலு வதுதுன்பமாவயிறுபசியாதிருத்தறுன்பம், பாங்குயர்ந்திடினுமூட் கவிணத்தையெண்ணாத பரியேறுவதுதுன்பமா, மிலகுமனுநீதியில் லாவரசரூரினிலிருப்பது மனேகதுன்பம், எதிராளியைத்தினம் வணங்குவதுதுன்பம வில்லாததிகதுன்பம், சலத்திற்காரவென்றமாலின்சகோதரி சாம்பவிமதுரையரசி, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௭0)

இன்பமென்பவை.

சிந்தையின்மகிழ்ச்சியுறு செல்வமின்பம்பரம சிவனடியராவதின்பம், செகதலப்பிரக்யாதி யாவதின்பந்தரும சிந்தனைமிகுந்தவின்பம், தந்திமுகனைக்கால மேதொழுவதின்பநற் சற்சனர்கள்சேர்வையின்பம், சற்புத்ரனைப்பெற் றெடுப்பதின்பங்கல்வி தானறிந்திடுவதின்பம், கொந்தலர்ந்திடுபுட்ப மணிவதின்பம்நேம குருவினுபதேசமின்பம், குணமிக்கமனைவியுட னில்லறந்தன்னிலேகூடிவாழ்ந்திடுவதின்பம், சந்ததமுநின்பதம் பணிவதற்கின்பமே சாயுச்சியமெற்கருளுவாய், தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகுதாயுண்ணாமுலையம்மையே. (௭௧)

நரகமெய்தவழி.

கற்புவனிதைக்குமொரு தப்பிதஞ்சொல்வதுங் கள்ளுண்டடஞ்செய்வதுங், கனிந்தொருவர்தேடரும் பொருளபகரிப்பதுங் கடுங்கொலைத்தொழில்புரிவதும், செப்புகுருவைத்தூசணிப்பதுஞ்சிவனடியர் சிந்தைநலியச்செய்வதும், தியாகமேற்பவர்தமக் கீய்வரைவிலக்கிடுந் தீமையும்வாய்வலுமையில், ஒப்பினவருக்கழிவுசெய்துகைக்கூலியாங் குடன்கொள்வதும்பிறரிடத், துய்யவேசையோக மது செய்வதிவையெலா முழுநரகில்வீழ்வதற்குத், தப்பிலாமற்செலும் தடமென்றறிந்துமித் தரணியின்மயங்குவார்கள், தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௭௨)

நாவலர்வறுமை.

ஒருகாசுமீயாத லுத்தப்பிசாசர்களை யோங்குபுகழ்கன்னனென்று, முரியசெந்தமிழ்சற்று மறியாதமூடர்களை யுயர்ந்தகுருமுனிவனென்றும், விருதாவினிமிடமதி னூறுபொய்கூறுவரை மிக்கரிச்சந்திரனென்றும், மெய்ம்முகவசீகர மிலாதவரைரஞ்சித மிகுந்தமன்மதனென்றுவெஞ், செருமுனையிலாயுத மெடுக்காதபேடியை செயவீமசேனனென்றும், செந்தமிழினாலும்புகழ்ந்துபுவிமனிதரை

த் தினந்தினம்பாடுவதினாற், றரைமிசையினாவலர்க் கலையாதவறுமையைத் தானடைந்தார்களம்மா, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௭௩)

இதிலிதுமேன்மை.

பாவில்வெண்பாக்கலித் துறையதிகமலரினிற் பங்கேருகக்கமலமாம், பட்சியிற்கருடனே யதிகமாங்கீர்த்தியிற் பாண்டிவேளாளராகும், கோவிலினிலதிகசின் சந்நிதிபிலத்தினிற் கொடுவிடச்சேடனதிகம், குலவுபலமொழியினிற் குறளதிகமலையினிற் குன்றுஹிரண்யவரையாம், காவினிற்கற்பகத் தருவதிகமாதினிற் கற்புடையவனிதையதிகம், கரியிலதிகம்வெண்மை யயிராவதம்நதிக் கணறயினிற்கங்கையதிகம், தாவுபொருண்மேவுதிரி கோணத்துயர்ந்தசிவசங்கரீயருள்வாரியே, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௭௪)

இன்னார்க்கிவர்விரோதம்.

அருளதினிறைந்திடும் வைகுந்தமாலுக்கு மவுணருக்கும்விரோதம், ஐயமிலுணர்ந்தோர்க்கு மூடர்க்குமெந்நாளு மாகாதுவெகுவிரோதம், பருதியொடுமாமதிக் குமராகுகேதெனும் பாம்பினுக்கும் விரோதம், பரிமளசவ்வாதினிற் சுண்ணமதுசேராது பழுதண்டு வெகுவிரோதம், அருமறையர்கணிகைக்கு வைத்தியர்சுணங்கனோடவரினத்தார்விரோதம், அம்புவியையாள்கின் [illegible] களுக் கடையவர்கண்மேல்விரோதம், தரணிதனிலிவர்களொருவர்க்கொருவர்பகையென் றுசாற்றினேனுலகறிய, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௭௫)

பயனற்றசெலவு.

அடங்காதமோகவிகாரத்தினான்மகிழ்ந்தரிவையர்க்குதவுபொருளும், அறிவகற்றிச்சிறுமை வெறிதருங்கள்ளினுக் கன்புடனளித்தபொருளும், உடன்படாமற்கோ ளுரைக்கின்றபாதகரை யுறவுசெய்தீர்த்தபொருளும், ஒருவருக்கொருவர்சூ தாடுசெங்கதியினாலொப்பியேதோற்றபொருளும், திடங்கொண்டவாதமுறை தெரியாமல்வீணிலே தீயினிற்சுட்டபொருளும், செப்புமிப்பொருளெலாம் புண்யவிஷயத்தினிற் சேர்ப்பித்தபொருளல்லவாம், தடங்கொண்டநீர்க் கரைத்தபுளியாமென் றுசாற்றினேன்பலரறிவுறத் தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௭௬)

தருமகாரியம்.

பூவினின்மகத்தான சாலைநீர்ப்பந்தரும் புகழுடனமைத்ததருமம், புட்பஞ்சிறந்ததிரு நந்தனவனப்பயிர் பொருந்தவேசெய்ததருமம், கோவிலணிசிகரகோ புரமண்டபஞ்செயுங் கொள்கையுமநேகதருமம், கூபந்தடாகங் குளம்வாவிசெய்வித்தல் கூறவரிதானதருமம், யாவருமிலாதவர்க் குரியமணமேசெய்வ ததுமகிமையுற்றதர்மம், அன்னசத்திரமுடன் னன்னயமடங்களுண் டாக்குவதுயர்ந்ததர்மம், தாவுபுகழ்சிறந் தோங்குபரிபூரண தயாபரீமுத்திமுதலே, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. ()

அஞ்ஞானிகள்.

சகலமுநமக்குளே யல்லாதுகோவிலிற் றுமொன்றுமில்லையென்பார், சமுசாரமாய்கையது வீணெனதொல்லையாஞ் சந்நியாசம்நல்லதென்பார், பகரரியவேதாகமம்புராணங்களைப் பழுதுமுன்சொன்னதென்பார், பரிவாகவீரேழு புவனத்திலும்புண்ய பாவமேதில்லையென்பார், மகிமையுளபனிரண்டு சமையமுஞ்சமையத்தின் மந்திரமுமில்லையென்பார், வாயிலிப்படியுரைப் பார்கள்சிலபேர்தங்கண் மனதின்மெய்ஞ்ஞானமறியார், தகைமையுடனுலகைப்பழித்திகழுமறிவிலாச் சண்டாளர்மெத்தவம்மா, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௭௮)

பகைக்கவொண்ணார்.

சுருதிநூலறியுமந்தணரையுங்கல்விமுறை துகளறக்கற்றவரையும், தொல்புவியையாளுமன் னவரையும்மன்னரிட தோளமையம

ச்சர்தமையும், விருதணிந்திடுசுத்த வீரர்கருணீகரையு மிகவயித்தியர்கள்தமையும், விபரீதமகாமந்த்ர வாதியருடன் றினம் வேண்டுகுருதேசிகனையும், அறிவுயர்ந்திடுதபோ தனரையுந்தன்னைப் பிராயந்தெரிந்தவரையும், அரிதானபஞ்சத்தி லாதரித்தோர்களுட னொகுமிப்பதினொருவரை, தரணிமிசையெவர்களும் பகைசெய்யலாகாதி தனதாயிருக்கவேண்டும், தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௭௯)

உமையுதவி.

மன்னுபுகழீச்சுரர்வெந் நஞ்சுண்டமகிமையும் மழுமான் றிருக்கரத்தில், வைத்தமகிமையும்வேத னைச்சிரமறுத்திட்ட மகிமையுடனதுவலாமல், நன்னயமதக்கரி யுரித்துமுப்புரமதை நகைத்தெரித்திடுமகிமையும், நல்லகற்பிணிகளதுகற்பகற்றியவடிவுநவிலவொண்ணாமகிமையும், மின்னுமுயலகனையு மிதித்தொடுசமனையு விழவுதைத்திடுமகிமையும், மிகுதக்கன்வேள்வியை யழித்தமகிமையினோடு வெற்றிபெறுமகிமைகளெலாம், தன்னிகரிலாதநின் மங்கல்யமகிமையின் சலுகையல்லாமல்வேறே, தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௮௦)

திருமாதிருப்பு.

வில்வத்திலுங்கலந்த மலரிலும்மும்மத மிசைந்தவேழத்தின் மிசையும், வெம்பரிமுகத்திலுமி ரணகளந்தன்னிலேவீரமாய்ச்செல்வர்பாலும், நல்லபசுதன்னிலும் பாலினுந்தேனிலும் நாகரிகவனிதைபாலும், நவலரியபங்கேருகத்திலுங்கடலிலும் கற்பாறகுடக்கொடியிலும், இல்லினிவிரஞ்சித மிகும்மனையிலுந்தெளிந்திடுநீசிலரசர்வதனத், திலுமுதாரனைத்தொழிலி லுந்துய்யவன்பாலுமியல்வலவர்மொழியிலுஞ், சல்லாபமாயவன் மார்பிலுந்திருமாது சலியாதுவாழ்ந்திருப்பா, டருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௮௧)

திரவியவகை.

நாடுபடுதிரவியம் பயறுசெந்நெற்கதலி நற்கனிபசுக்குரகதம், நயகரும்பொடுபின்பு நகர்படுந்திரவியம் நவில்வதுகருங்குரங்கு, நீடுகண்ணாடியித் தனுமரசர்காட்டானை நெடியகாடுறுதிரவியம், திருதமயனாபியு மிருலரக்கொடுதேனு நீழ்கடற்றிரவியவகை, கூடுமுத்துச்சங்கு பவளமுப்புக்கோர்வை குலவுமலைபடுதிரவியம், கோஷ்டமொடுகுறுமிளகு குங்குமந்தக்கோலங் குளிர்சந்த மைந்துமாகும், சாடியமகாசூர பற்பனைவதைத்திட்ட சரவணனையீன்றவனையே, தருமேவுமருணைகிரி மீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௮௨)

உமைமயம்.

புவனமென்றும்பெருங் ககனமென்றுங்கரும் புனல்பரவுமுவரியென்றும், போதமென்றுங்கருணை வேதமென்றுந் திவ்வியபுண்யமெய்த்தலமுமென்றும், மவுனமென்றும்ஞான மந்திரமென்றும்மேழு வகையிலுறுதோற்றமென்றும், வாசமென்றுந் தவவிசேடமென்றும்மகிமை வாய்ந்திடுந்தெய்வமென்றுங், கவனமென்றும்நல்ல வுவணமென்றும்மறிவிற் கட்டழித்தின்பமுலவும், கடாட்சமென்றும் மதிகமோட்சமென்றிப்படிக் கருணையொடுசகலவடிவாய்த், தலமுமலெங்கெங்கு நின்றபொருணீயென்று சாற்றுகிறதாரணமெலாம், தருமேவுமருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௮௩)

சரியை.

பரிவுகந்திடுதேவ ராலயந்தொழுதலும் பகரரியகங்கை முதலாய், பாரிலுளபுண்யதீர்த் தங்கண்மூழ்கலுமிதயபத்தியொடுமலர் சாற்றலும், பொருள்வழங்கியுமே திருப்பணிமுடித்தலும் பொருந்துதீபம்வைத்தலும், புகழுடன்திருவலகு செய்தலும் மெழுதலும் போதமெய்ஞ்ஞானியர்களை, யரிவினாற்கண்டுள மகிழ்ச்சியொடுபேணிதலு மன்புடனே யுண்டியிடலும், அம்முலவுவாவிகூபங்கள்செ

ய்வித்தலும் ஆகுமிவ்வவனிமிசையில், சரியையாமிதன்படி நடப்பவருமுன்பதஞ் சார்ந்திடுவர்சாலோகமே, தருமேவுமருணைகிரிஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (அச)

கிரியை.

கந்தவர்க்கமுமதிக கிளர்மணப்புகையுடன் கவின்கொடீபமுமன்புடன், கமழ்சிறந்தோங்குதிரு மஞ்சனபிடேகங் கனிந்துநற்புனல்சொரிந்தும், கொந்தலர்ந்திடுபுட்ப முங்கொண்டுமொய்கையின் குணமனைத்துங்களைந்து, கூறவரிதானபரமானந்தவடிவையுங்கொண்டிதயபக்தியுடனே, ஐயந்துஞ்சுத்திகள்செய்த கம்பெறவிறைஞ்சியுமங்கியின்கடன்முடித்தும், அறிவுடன் சிந்தையொரு வழியிலேகொண்டுமைந் தக்கரத்தாலுமரனை, சந்ததமுமிப்படிப் பூசிப்பர்கிரியையோர் தானடைவர்சாமீபமே, தருமேவுமருணைகிரிஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (அரு)

யோகம்.

மூக்கலைம்புலந்தனை யைந்துடனடக்கியே மூலவாய் வினையடைத்து, முற்றுமிகவேயதைப் பக்குவத்தொடுவழி முடித்தொருவழிப்படுத்தி, சிக்கெனும்படியாக வேபிடித்தருணையொளி சேர்ந்திடும்பிர்மமதுபோல், திகழ்கின்றதாண்டவச் சிலம்பொலியுடன்சிறந்திட்டவருளெனமிகுந்த, மிக்கபுகழைஞ்செழுத் தோரெழுத்துருவதாய் விளங்கிடத்தன்மைகண்டே, மேவுபெருவழியினுக்கேபுக்கிஞேருகி மெய்யுறுப்பெற்றுவாழ்வார், தக்கதொரு வேட்டுவனைமண்புகுவெனச்சொலத் தகுமியோகசாரூபமே, தருமேவுமருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (அசு)

ஞானம்.

அரிதானசுருதிநூ லாறுசாஸ்திரசமைய மாறிரண்டிருபத்தியெண், ஞைகழும்பதினெண் புராணபலகலையெலா மறிந்துதேர்ந்திடுதல்பின்னும், உரியதாயாகமப் பொருளினதுசெய்தியையுவமைபலவெனவறிந்தே, யுள்ளந்தெளிந்தறி விசைந்தழலுமாய்கையினுலைவுமுதலாகநீத்து, பரிவாகவேண்டவரி தாகுநற்சிவபோத பண்பனைத்துந்தெரிந்து, பாசமென்னணுவளவு நெஞ்சினிற்கொள்ளாதுபறித்தறிவினைறிவது, சரியுள்ளஞானத் தியற்கைநாலாம்பதந் தருமென்பர்வேதமுதியோர், தருமேவுமருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (அஎ)

தத்துவம்.

பூதமைந்தரிதான புலனைந்துவாக்குமுதற் புகலுகரு மேந்திரியமைந்து, போதமிகுஞானேந் திரியமைந்தரியதாய்ப் புகழ்கின்றகரணம்நான்காம், ஓதரியநாடிபத் தாதாரமாறுபிணி யுறுமூன்றுகோசமைந்து, ஊனுற்றவாயில்க ளொன்பதெனவேமொழிவரோங்கியவாயுக்கள்பத்தாம், ஆதியுளமலமூன்று குணமூன்றுமண்டலமூன்றரிதான தாதுவேழு, அற்புதமிகுந்தவி காரமிருநான்குடனவத்தையோ ரைந்துமாகும், தாதையேதொண்ணூறோடாறுதத்துவமெனச்சாற்றினர் ஞானமுறையோர், தருமேவு மருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (அஅ)

பதரென்பவர்.

பலபேர்கள்வாய்தனைப் பார்த்துமேதன்றொழிற் பாருதவன்றொருபதர், பாரிசற்குணமோடிருக்கவப் பாவையைப் பயிலியாதவன்றொருபதர், இலகுசம்பத்துக ளிருந்துமேயிரவலர்க் கீயாதவன் வீண்பதர், எதிருளிவந்துறவு செய்தபொழுதுள்ளதையிம்புவோன்மதியிற்பதர், உலகினிகரிலையென்று தன்னையே தான்புகழ்ந்துரைப்பதறிவில்லாப்பதர், உள்ளமட்டும்வேட் டகந்தனிலுண்பவனுமூதாரியானபதராம், தலைவிபகவதிபுரு தனிமனோன்மணிநிகர்த்தாண்டவியருமைமணியே, தருமேவுமருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. ௦ (அகூ)

திறமுடையவர்கள்.

மிக்கசெருமுனைதனிற் பின்கொடாமற்சென்று வெட்டுவோனதிகதிறவான், மிடிதுன்பவினைகோடி வரினுந்தன்றைரியம் விடாதவனுமதிகதிறவான், சிக்கெனவெடுத்தகருமங்களைமுடிக்கின்ற சிந்தையனுமதிகதிறவான், திண்புவியிலியார்க்குநல் லவனெனப்பேர்கொண்ட செயலுடையனதிகதிறவான், மைக்கடலினிற்செல்லு வங்கமீதுற்றபல மாலுமியுமதிகதிறவான், வரிசையுளகல்வியிற்கண்டதைக்கற்கின்ற வல்லபனுமதிகதிறவான், தக்கபுகழானந்த ஞானவாருதியரு சத்தியேகைலையரசே, தருமேவு மருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௯0)

பொது.

பொய்வசனமெத்தனை யுரைக்கிலொருமெய்ம்முன்பொருந்தியதுநிலைகொளாது, புல்லருக்கதிகவுபகாரமேசெயினுமவர் புத்தியிற்றயவிருது, தையலர்கண்மேலதிக மயல்கொள்ளுவோர்மனஞ்சற்றும்வெட்கப்படாது, சந்ததிகள்பெற்றதிதுபோதுமெனவேபெற்ற தாய்க்குஞ்சலிப்பிருதே, மையமிட்டுண்டவர்க் குரியபுகழ்மேன்மையா மன்றியொருகுறைகள்வாரு, தனுபோகவினைதனை பலமிலாப்பெரியோர்களாலும்விலக்கொணாது, சையமாதவரம்பூசிதபாதநேமியே சந்திரசேகரநாரியே, தருமேவ்மருணைகிரி யீசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௯௧)

அரிதென்பது.

அடங்காதசண்டமாருதமதைச்சிமிழிதிலடைக்கினுங்கடலினிற்சென்,றாழிவ்வளவெனவுரைக்கினும்பிசகாதவட்டகுலபருவதத்தைத்,திடங்கொண்டுகையினிற் செண்டடிக்கினுமாதிசேடனொடு மல்லுயுத்தம்,செய்துவெல்லினுமறுவிலாதவர்கருத்தைத்திருத்தினுங்கஜமட்டையும், அடங்காமல்வாலைப்பிடித்துச்சுழற்றினும் மாதரிதயத்தினாலை,மண்மிசையிலெவராலுமறிவதரிதென்றேவழுத்தினர் தமிழ்வல்லோர்கள், தடங்கொண்டுலாவ்பூவும்பொழில்களெங்கெங்கு சார்ந்திலகுவேதமுதலே, தருமேவுமருணைகிரி ஈசர்பாலுறையுலகுதாயுண்ணாமுலையம்மையே. (௯௨)

இது இதனைத்தருமென்பது

கல்விகற்றிடினிலா தென்னதருமென்னிலோ கருத்தினல்லறிவுதருமாம், கருத்தினிடைநல்லறிவ தென்னதரு மென்னிலோ கனிந்தரன்றனைவிரும்பும், தொல்புவியிலீசன்ருளென்னதருமென்னிலோ சோர்வற்றபுண்யமுதவும், சொல்லரியபுண்யமவை யென்னதருமென்னிலோ தோற்றமெய்ஞ்ஞானமுதவும், நல்லுற்றமெய்ஞ்ஞானமென்னதருமென்னிலுன் னிணைபதசேர்வையீயும், [illegible] பொற்பதசேர்வையென்னதருமென்னிலோ [illegible] சாயுச்சியமீயும், தல்லியமை [illegible] ண்டாகிலிவையெலாந் தானுகலந்துசேருமே, தருமேவுமருணை [illegible] ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௯௩)

சமயங்கள்.

நேமுயர்சைவமொடு பாசுபதவைரவம் கிருமலக்காளாமுகம் நேர்க்கிடும்வாமமாமாவிரதமிவையாறு கிசமானவுட்சயமாம், பூமிசையினுலகாயிதம்பௌத்தஞ்சமணம் புகலுபாட்டாசாரியம், பொருந்துமீமாஞ்சையொடு பாஞ்சராத்திரமெனும் புறச்சமயமிவைகளோரார, றுமமைப்பனிரண்டு சமயத்திலுலவுமுயரைம் பதிஞ்ஞோடோரரட்சரீ, யத்கோணசதகோண மூக்கோணவீட்டில்விளையாடு மருளானந்தியே, நாமிசமிலர்மலெனியேனையாட்கொளவருக சமயீதருமையுமையே, தருமேவுமருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௯௪)

அரிதானவர்கள்.

குலமுழுது மோட்சமடையத்தவஞ்செய்தரவி குலபகீரதன் போலவும், கூறுபதினுலாண்டி லனலில்விழு வேனெனக்கூறுபரதன்போலவும், இலகுமகனைப்பிரிந் துயிர்வைத் திரேனென்றி

றந்த தசரதன்போலவும், இசைந்திடுங் கணவர்மொழி தப்புரமலேவல்செய் திரௌபதி யைப்போலவும், நிலமிசையின் மருவுஞ்சகோதரர்பிதாவுடன் நேயமுறு மனையாட்டியும், நெடியரா மரியதவமேசெயினு மவர்போல நேர்ந்திடுவ தரிதுகண்டாய், தலைவிதங் களிமகி டாசுர சம்மாரி தற்பரீ சத்தியமையே, தருமேவுமருணைகிரி ஈசர்பா லுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே, (௯௫

ஸ்திரீயுடன் புணரொணாக்காலம்.

வருட்சங்க ராந்தியிற் றிங்கண்முன் பின்னிலும் வளர்பிறைப் பிரதமையிலும், மதிவிளங்கும்பூரணத்திலும் பிதுர்தலைவி வாய்ந்திடுஞ் சிராத்தத்திலும், இருணிறைந் திடுமமா வாசையொடுசென்ம நாளியல்பொடு பிறந்தநாளும், இனியமங் கையுடனே கூட லாண் மூன்றுதவ மேற்கின்ற விரதநா வங்கமேனரும், ஐசுவரிய மில்லாதுதிருவகலுங் காது கூடினவை மதுவலராலயுறுங் குறையுமென்றே, தரைமிசையின் முன்னோருரைத்தவர்களாகையாற் சாற்றினே னுலகமறியத், தருமேவுமருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௯௬)

பிரயாணத்துதவி.

கையினிற் றண்டொன்று தப்பட்டு மோர்பனங் காவில் வலிதாணகுறடு, கட்டுசா தந்தாக நீர்கொளப் பாத்திரங் கனலுதவி செய்பவையரும், தொய்யல்தறு வெள்ளிலை யடைக்கா யுடன்சுண்ணந் தூயவொரு நாழியரிசி, சொன்னதிவை யாவையுந் தைரியத் தொடுகொண்டு சோர்விலா நல்வேளையில், துய்யகரி முகனடி பணிந்து பின்வழிசெலத் துணையாகு மிவைநன்மையாம், குழிவனேயுலகிலுள மானிடவருக்கறிவு தோன்றவே சொன்னதிவையாம், தையலே ஈராறு சமயமுத லாய்நின்ற தற்பரீ பச்சைமணியே, தருமேவுமருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே.

புகழ்பெற்றோர்.

மெய்வாசகந்தனி லரிச்சந்த்ரனே கொடையில் மிக்கபுகழுறு கர்ணனே, விரதநிலை காப்பதிலு ருக்குமாங்கதனென்னும் வேந்தனே யவனிமிசையில், செய்யுமுபகாரமதில் விக்ரமாதித்தனே செருவலர்க்கஞ்சியபயம், செப்பின ரடைக்கலங் காத்திடுதல் விசயனே திவ்யரவி குலம்விளங்க, மெய்த்தவஞ்செய்தவன் பகீரதனொருத்தனே மேவுமிப் படிமிசையிலே, வேந்தர்களிவ்வகைக் கீர்த்தியிவர்கட்கலால் வேறொருவருக்குவருமோ, தையலே முப்பத்திரண்டறம் வளர்த்திட்ட சாம்பவீ பொன்வல்லியே, தருமேவுமருணை
லையம்மையே. (௯௮)

புராணங்கள்.

விரிந்தபொருள் மச்சமார்க் கண்டேயம் வாமனம் விளங்குவைணவமிலிங்கம், விண்ணவர் புகழ்சைவ நாரதீயம்பதுமம் மேன்மைதரு மாக்கினேயம், தெரிதரும் பௌடிகம் பிர்மகைவர்த்தமிகு சீருலவுபாகவதமும், திகழ்கின்ற ஸ்காந்தமெழில் கூர்மமொடு வராகமும் திருதிதரு பிர்மாண்டமும், வரந்தரும் பிர்மமுயர் காருடமென பதினெண்வாய்ந்தவெம் புராணமிவையாம், மாநிலந் தனிலரசருக் கரசியாய்வந்து மாறனுக் கருள்செய்தநீ, தருஞ்சிறியனுக்கினிய பேரின்பமுதவுவாய் தருணமிது கைலையரசே, தருமேவுமருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே. (௯௯)

பொது.

உலகவாழ் வைப்பொய்யன் றேமனதினுக்கறிவுறுத்தியுமனத்திறனை, யொழியாதுமானிட வருக்கரியகாரிருளுள்ளத்திலறிவுமின்றும், நலமிகுந் திடுகின்ற பாததாமரைமலரை நம்புமடியற்கருளுவாய், நாயகி சராசரக் காரணிபூரணி நாரியபிராணிதேவி மலைராசகன்னி பவானிமூக் கண்ணிபரை மாதவி மலையந்தரி, மனோன்மணி பராபரி சத்திசங்கரியையை மாசிலா மேவுருவே,

லைவிமரகதவல்லி பகவதி யுருத்திரை சாம்பவி பிராட்டியஞ்ச;
ருமேவுமருணைகிரி ஈசர்பாலுறையுலகு தாயுண்ணாமுலையம்மையே

வாழி.

சங்கரன் மாயன் வாழி சதுர்முகன் முருகன் வாழி
யைங்கரன் வாழிதேவ ரனைவரும் வாழிவாழி
இங்கித சதகந்தன்னை யெழுதினோர் படித்தோர்கேட்போர்
பங்கமில் லாமலச்சிற் பதித்தவர் வாழிவாழி.

உண்ணாமுலையம்மன் சதகம்

முற்றிற்று.

இஃது

மகா வித்வான் ம-ள-ள-ஸ்ரீ.

கின்னு கவுண்டரவர்களால் செய்யப்பட்டது

747

சிவமயம்.

திருவண்ணாமலை

ஸ்ரீ அருணாசலேசர்

நவகாரிகைமாலை.

காப்பு — நேரிசைவெண்பா.

சொற்பவள மேனியனைத் தும்பிமுகத் தைங்கரனை
யற்பினொடு வேண்ட வமையுமா — லற்பு
தவகாரிகைமாலைத் தாமியருணேசர்
நவகாரிகைமாலை நன்கு.

கட்டளைக்கலித்துறை.

பாரார்தருநம் மருணாசலேசர் பதாம்புயத்தை
யூரோர்நினைந்து கடைத்தேறுந் தன்மையை யோர்பொழுது
மாராய்ந்தறிந்தவ் வழியினிலாத வசடனொரு
தேராய்ச் சமைந்திலனே யருணாபுரித் தேவருக்கே. (௧)

தனமாதர்தங்களுக் கேயிதஞ்சொல்லிச் சலித்திடுமென்
மனமாசுதீர்க்கும் வகையருள்வாயடி வாழ்த்துமன்பர்க்
கினமானவர்புடை சூழ்தரவேறி யிவர்தரும்வா
கனமாய்ச்சமைந்திலனே யருணாபுரிக் கர்த்தருக்கே. (௨)

கோளானவைபல சற்றேயிற்றின் கொடுமையினால்
வாளாவலைந்துலைந்தே னவமேறிடும் வாகனத்தைத்
தோளாற்சுமந்தல லூர்ந்திடுந்தேரினைத் தொட்டிழுக்கு
மாளாய்ப்பிறந்திலனே யருணாபுரி யத்தருக்கே. (௩)

தடமானதிசெதன் றறியாக்குருடரின் றன்மையைப்போல்
மடமாதர்மோக வலையினிற்பட்டு மயங்குகின்றேன்

திடமாகப்பூசுரர் நாடோறுமாட்டுந் திருமஞ்சனக்
குடமாய்ச்சமைந்திலனேயருணாபுரிக் கோயிலுக்கே. (௪)

வடியாரும்வேற்கணி யுண்ணாமுலைக்கு மணாளனென்றே
யடியாரைக்கண்டேநற்றோத்திரஞ்சொல்லி யவரடியை
முடியாரவைக்கு முறையறியாப்பெரு மூடனொரு
படியாய்ச்சமைந்திலனேயருணாபுரிப் பாதையிலே. (௫)

கோடானுகோடி பவமேபுரிந்திட்ட கொள்கையினால்
நாடார்நகைக்க வுடம்பெடுத்தேனிந்த நானிலத்தில்
கூடாதபாவி யினியேவல்செய்குவன் கோயிற்பசு
மாடாய்ப்பிறந்திலனேயருணாபுரி மந்தையிலே. (௬)

நில்லாதுகாயம் நிலையாதுவாழ்விவை நிச்சயமே
பொல்லாதபுத்தியை யேன்படைத்தாய் புரமூன்றெரித்த
வல்லாய்நின்கோயிற் பசுமாடுகள்வயி றாரவுண்ணப்
புல்லாய்ச்சமைந்திலனேயருணாபுரிப் பூமியிலே. (௭)

சனியானபாவி யிளமையிலேயெனைத் தான்பிடித்தே
யனியாயங்கண்டதை யார்க்குரைப்பேனயன் மால்வணங்கும்
பனிமாமலைமகள் பாகனுக்கன்பர் பரிந்தருந்துங்
கனியாய்ச் சமைந்திலனே யருணாபுரிக் காவகத்தே. (௮)

ஈயாப்பெரும்புல்லர்க் கேயிதஞ்சொல்லி யிரந்துழல்வேன்
மாயாப்பிறவி யறுக்குஞ் சிவபெருமான் பதமென்
றோயாமற்பூசைசெய் துன்னன்பர்சேடத்தை யுண்ணுமொரு
நாயாய்ப்பிறந்திலனே யருணாபுரி காட்டினிலே. (௯)

ஸ்ரீ அருணாசலேசர் நவகாரிகைமாலை
முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருணாசல சதகம்.

பொன்பாவுகொன்றையினோடுவான் புனலாறுவெண்மதிசூடிநீ
யன்பாருமினிதாவணிந்திடுதன்மையாலெளியேன்சொலும்
புன்பாடலிங்கிது தன்னையும் போற்றிக்கொள்வாயெனவுள்ளெழும்
அன்பாலுரைத்தேன்கொண்டரு ளருணாசலாவருணாசலா. (௧)

கடியார்துளவத்தொங்கலான் கமலப்புதுமலர்மேவினான்
படியூடிடந்தடிதேடவும் பறந்தன்னமாய்முடிதேடவும்
கொடியேன்மனமேகோயிலாக் குடிமேவினையெனிலையநின்
அடியாரெலாமென்சொல்விடா ரருணாசலாவருணாசலா. (௨)

கற்பம்மனுகற்பம்முப கற்பம்மெனுமுறையால்வரு
பொற்பின்மிகுதிருநீறணி புனிதர்க்கலானின்றுளனு
நற்பங்கயநறுமாமலர் நணுகும்மருடாளெய்துமோ
அற்பினடியார்போற்றிடு மருணாசலாவருணாசலா. (௩)

வில்லார்மலர்க்கணையேவிய வேளைப்பொடியாச்செய்தனை
கல்லாலெறிந்தவன்முத்தியே காணப்பரிந்தனையாதலாற்
பொல்லாமனத்தவனென்றெனைப் புறமேவிடுத்திடலையனே
அல்லார்களத்தெம்மண்ணலே யருணாசலாவருணாசலா. (௪)

முடிபட்டமென்முலைக்கேமலர் முகிழ்போற்குழைந்திடக்கண்டிடும்
வடுபட்டதோட்குடையான்புலி வரேறுடனித்திவொண்மனம்
பொடிபட்டநின்றிருமேனியிற் பொருபூழியன்கையிற்பிரம்
படிபட்டபோதென்பட்டதோ வருணாசலாவருணாசலா. (௫)

வானாகினைவளியாகினை மால்வேதனொடமரர்க்கெலாங்
கோனாகினையடியார்மனங் குடிகொண்டவருளூறிடுந்
தேனாகினையமுதாகினைத் தேரூர்ந்திடர்செறுபோரினில்
ஆனாகிமால்வரவூர்ந்திடு மருணாசலாவருணாசலா. (௬)

புல்லாகியேபூடாகியே புழுவாகியேமரமாகியே
கல்லாகியேனுந்நின்னகர்க் கண்மேவிலேனினியெங்ஙனே
பொல்லாப்பிறப்பொழிந்துய்குவேன் புலைநாயினேனிமயந்தரும்
அல்லார்குழற்கொருபாகனே யருணாசலாவருணாசலா. (௭)

படைக்குந்தொழிலயற்கீந்தனை பரிக்குந்தொழிலரிக்கீந்தனை
துடைக்குந்தொழிலரற்கீந்தனை துதிக்குந்தொழிலடியார்க்கெலாங்
கிடைக்கும்படிக்கினிதீந்தனை கிளரும்வகைதனையன்றுநீ
அடைக்குந்தொழிலானானதென் னருணாசலாவருணாசலா. (௮)

பரிந்திட்டறமென்னுங்குழலி பயில்வாளிருக்கவுநின்னருள்
சுரந்திட்டவன்றொண்டர்க்கெனச் சோறன்றுநிகச்சூரினில்
இரந்திட்டதென்னோசொல்லுவாயெனத்தவன்றலையொன்றினை
அரிந்திட்டதிற்பலிதேர்ந்திடு மருணாசலாவருணாசலா. (௯)

மையார்விழிமலைமாதொடு மருவுந்திருக்கோலத்தையோர்
கையார்புனன்மலரானிதங் காணப்பரியாதென்னையோர்
மெய்யானதுவேறாகவே வேதாவரியுழல்வுற்றனர்
ஐயாவளர்மதியென்கொலோ வருணாசலாவருணாசலா. (௧௦)

வாதாசனனாண்வின்மலை மாலார்கணைமறையேபரி
போதாசனனேசாரதி புவியேரதமாக்கொண்டுபின்
காதாபுரகைக்கிட்டது நவிலும்மலவாசமங்கலோ
ஆதாரமாறினிமேலுறு மருணாசலாவருணாசலா. (௧௧)

முன்னாளிதழ்நறுமாலையு முரிதோலுமேபுனையத்தரும்
பொன்னாரிதழியினோடும்வெம் புலியானைமத்திவைதம்மொடே

மன்னாப்பயிரவவெண்ணியோ வளர்மாமலையுருவாயினை
அன்றோவெனுமன்பர்க்கரு ளருணாசலாவருணாசலா. (௧௨)

மேனாளொருவிழியுன்பத மேல்சாத்தியமாயோன்பெரு
மீனாநாளினுமாங்கவன் விழிகொண்டதருசியென்றுநீங்
காணார்கரும்பதைவேரொடு களைகின்றதுபோலானதால்
ஆனாயனார்தொழுமையனே யருணாசலாவருணாசலா. (௧௩)

பாரின்கணேயைந்தாகினை பகர்நீரிடைநான்காகினை
சேருந்தழற்கண்மூன்றெனச் செறிந்தாய்வளிக்கிரண்டாகினை
நேரும்விணிலொன்றாகினை நிமிருமுயிர்க்குயிராகினை
ஆருன்னிலையறிவார்சொலா யருணாசலாவருணாசலா. (௧௪)

மாறாவரந்தருவோமென வைகுந்தனும்மலர்த்தேவனும்
நூறாயிரமுறைவந்தெதிர் நுவல்கிற்கினுநின்னன்பர்கள்
பேறாயதைநினைவார்கொலோ பிறவிக்கடலதுநீந்தவே
ஆறாறுநீத்தவர்வாழ்த்துறு மருணாசலாவருணாசலா. (௧௫)

ஊனந்தருமிவ்வாழ்வினி லுலையேற்றுமாமையினண்ணியே
ஈனந்தொடர்துயர்மேவினே னென்செய்குவேனெளியேனருண்
மோனந்தருநிலையீதென மொழிவாயெனிலினியுய்குவேன்
ஆனந்தமேயுருவாகிய வருணாசலாவருணாசலா. (௧௬)

இடியுங்கரைமரமாமென லெண்ணாமலிவ்வுடறன்னையோர்
பிடியுங்குறையாதுங்கொளான் பெரிதேவளர்த்துனதன்பினில்
படியுங்குணமிலனாயினும் பரிவாருனையலதியாவரே
அடியும்முடியுங்காணொணா வருணாசலாவருணாசலா. (௧௭)

மட்டார்மலர்கொடுநின்னடி மலர்பூசனைசெய்கின்றிலார்
மொட்டார்முலையார்தம்மையே முயங்கித்திகைப்பாரையையோ
கெட்டாரவர்தமக்குன்னருள் கிடையாதுமுப்புரநீறெழ
அட்டாரணன்றொழுகின்றரு ளருணாசலாவருணாசலா. (௧௮)

பாம்பின் விட வாயிற்குளே பசுந்தேரைபோ லெளியேனுனக்
தேம்பிப்புல னிற்சிக்குறாத் திகைப்புற்றகல் லுணர்வின்றியே
சாம்பிக்கிடக் கின்றேனரு டருவாயெனி லினியுய்குவேன்
ஆம்பற்சிற வாய்பங்கனே யருணாசலா வருணாசலா. (௧௯)

வீட்டுக்கொரு வித்தாகிய மெய்ஞ்ஞானநன் னெறிதேர்கிலார்
பாட்டுக்கருள் செய்வாயெனும் பண்பேறுநன் குணர்கிற்கிலார்,
கேட்டுக்கிட மாய்நாடொறுங் கிறிசெய்குவா ருய்வார்களோ
ஆட்டுக்குவல் லவனாகிய வருணாசலா வருணாசலா. (௨0)

செம்பிற்களிம் பதுநீங்கவே செம்பொன்னெனத் திகழ்தன்
மைபோல், பசுபற்றறும் மலநீங்கவே பரமாவைநீ யெனவோதினை,
வம்புற்றநா யேனோர்ந்திலேன் மயிலைக்குளுங் கயிலைக்குளும், *அம்
பர்க்குள மகிழ்பூத்திடு மருணாசலா வருணாசலா. (௨௧)

பாராளுமன் னவர்செல்வமும் பகரும்விசும் பிறைசெல்வமும்
சீரானவே தன்செல்வமுந் திருமான்மகிழ் தருசெல்வமுங்
காராருமின் னெனவெண்ணியுன் கழல்போற்றுவார் தஞ்செல்வமிங்
காராளுமோர் வொண்ணாதா மருணாசலா வருணாசலா. (௨௨)

உனக்குண்மறைந் திங்காளுநா ளுறல்போலென தருளாலினி
யெனக்குண்மறைந் திருமைந்தனே யென்றாய்குரு வாய்வந்தநீ
நினைக்குந்தொறு நினைக்குந்தொறு நீயன்றியொன் றுங்காண்கிலன்
அனைக்குண்டயோர் பூதற்கரு ளருணாசலா வருணாசலா. (௨௩)

நாவிக்குநேர் விழிமாதரார் காமக்கட லதின்மூழ்கிய
பாவிக்குநின் னிருதாட்புணை பாலித்திடா யெனிலுய்வனோ
நாவிக்கருள் செயுமையனே ஞானத்தவர் புகழ்தூயனே
ஆவிக்குறு துணைமெய்யனே யருணாசலா வருணாசலா. (௨௪)

ஒன்றாகினை பலவாகினை யுளதாகினை யிலதாகினை
யென்றாரண மதுகூறுவ தெண்ணாதுதாம் பரமென்றிங்
கன்றால்வின வெறிமாயவன் கமலத்தயன் வெருவுற்றிட
அன்றாழல் வரையாகினை யருணாசலா வருணாசலா. (௨௫)

வளர்கார்த்திகை மாதந்தொறும் வருகார்த்திகை நாடன்னிலே
பளகானத்தி லாவன்பர்கள் பரிவாகவே யேத்தித்தொழக்
கிளர்மாமலை தனிமேலொளி கெழுசோதிகாட் டாநின்றநின்
அளவார்தெரி பவரையனே யருணாசலா வருணாசலா. (௨௬)

ஒருபான்மல ரயனாகவு மொருபாறிரு மாலாகவும்
பொருவாவருட் டிருமேனியாய்ப் பொலிவாயிதன் றியுமாமலை
வருபாவையோர் பாலாகவும் வருவாயிதன் றியுமையனே
பருவாவையுன் னருளென்னையோ வருணாசலா வருணாசலா. (௨௭)

ஒப்பானதி லொருமூர்த்தியா யொருபாதமார் திரிமூர்த்தியாம்
அப்பான்மைபோன் மலையாகியு மருளின்பெரு மையினையனே
இப்பாருளோர் கண்டேதொழ விருந்தாய்நதி மதியாடர
வப்பார்சடை முடியண்ணலே யருணாசலா வருணாசலா. (௨௮)

இருப்பானது வெளிமாமலை யிடத்தோர்மர கதமாமலை
மருப்பார்மத மலைபெற்றது வளைவில்லொரு பொன்மாமலை
விருப்பாதம ணாலோவொளி மேவும்மலை வடிவாயினை
யருப்பாரெருக் கணிமாலையா யருணாசலா வருணாசலா. (௨௯)

பொறியின்வழி மனம்போக்கிடார் பொன்னக்திரு வடிசேர்வதுஞ்
செறியுட்டிரு வினையாளர்க டிகழும்பிற வியிலாழ்வதும்
வெறிகொண்மறை பரிதிக்கெதிர் விகசித்துவா டல்போலுமென்
றறியுங்கலை யெற்கீந்தரு ளருணாசலா வருணாசலா. (௩0)

படியாவுமோர் குடைநீழலிற் பரிக்கும்மலர் மகிழ்செல்வமுங்
கடியார்தரு நிழல்வைகுதங் கண்ணாயிரன் மகிழ்செல்வமும்

---

* அன்பர்-எதுகைநோக்கி அம்பர் எனத்திரிந்த

நெடியோன்மகிழ் தருசெல்வமு நின்னன்பர்தாள் பணிந்தேத்திடும்
அடியாரடிப் பொருநேருமோ வருணாசலா வருணாசலா. (௧௧)

காட்டுக்குளே தவஞ்செய்குவார் கனலின்னடுத் தவஞ்செய்குவார்
கேட்டுற்றநற் கதிகாணவென் செயலிங்கிதுன் கோயிற்குளே
வேட்டுற்றல கிட்டேதிரு மெழுகிட்டிலார் கதிகாண்பரோ
ஆட்டுக்குமன் றினினின்றிடு மருணாசலா வருணாசலா. (௧௨)

பிறவாநெறி தருவானுநீ பிறக்கும்படி செய்வானுநீ
யிறவாவரந் தருவானுநீ யிறக்கும்படி செய்வானுநீ
மறவாதுனை வாழ்த்தும்படி ணந்தாளவும் வேண்டும்மையா
அறவாணர்வாழ் தொலிமேவிய வருணாசலா வருணாசலா. (௧௩)

உன்றாண்மலர் முடியாகவே யுறுமன்பர்கூற் றுவற்பெற்றபே
றொன்றேனுமா லயன் வானுளோ ருறுகின்றில ரெனிலாங்கவர்
கன்றார்களோ விதுநன் றுகொல் கருணாகரா மதிசேகரா
அன்றாலமுண் டருள்செய்திடு மருணாசலா வருணாசலா. (௧௪)

மானேந்தினை மழுவேந்தினை மதியேந்தினை நதியேந்தினை
கானேந்திலா வெருக்கேந்தினை கமலன்முடி கரத்தேந்தினை
வானேந்திறு ரெலும்பேந்தினை வறியேன்மொழி யையுமேந்திநல்
ஆனேந்தவே வந்தாளுவா யருணாசலா வருணாசலா. (௧௫)

திருமாலொரு கண்வாங்கியுன் செஞ்சேவடி மிசைசாத்தினன்
கருமாவடர் கண்ணப்பருன் கண்ணுக்கொரு கண்சாத்தினர்
பெருமானிவர் களில்யாவரே பெரியோரெனச் சிலரெண்ணுவார்
அருமாதவர் மெய்யோர்குவா ரருணாசலா வருணாசலா. (௧௬)

பூமாந்திரேன் முதலோர்தமைப் பொன்றச்செய்வை யெனவோங்
சாமாந்தக னுவாவெனுங் கருத்தேபெரி தாக்கொண்டுவீ [துமே
ணைமாந்தர்கள் புகழ்வாரிது வெறியோமிகு மஞ்ஞானமோ
ஆமாம்பினை திரிசாரல்சூ ழருணாசலா வருணாசலா. (௧௭)

கல்லானைமுன் கைநீட்டியே கரும்புண்ணுமா றருள்செய்தநீ
பொல்லாதகன் மனமுன்னருட் போதந்தனை யுண்ணச்செய
வல்லாயலைபோனிற்பதென் மாயஞ்சொலாய்மகிழ்தொண்டர்கள்
அல்லாதவர்க்கரிதாகிய வருணாசலா வருணாசலா. (௧௮)

வாட்டேறுகண்ணி சைஞானியர் மைந்தன் றனையாட்கொண்டநாள்
பாட்டேயருச்சனையாமெனப் பகர்ந்தாயஃதுணர்ந்தும்பிறர்
மாட்டேகவிசொலவெண்ணுமென் மருணீக்குவாயிருவோர்கள்போ
ராட்டேசெயவவர்முன்வரு மருணாசலா வருணாசலா. (௧௯)

ஈனந்தருபிறவிக்கட லிடையேழையேன்பலகால்விழ
ஊனந்தரும்வினையாம்வளி யுறுவித்தலாலுனதின்னருள்
மோனந்தருகுகைசேரவே முன்னிக்கொடுவந்தேனையா
ஆனந்தமாடியவையனே யருணாசலா வருணாசலா. (௨௦)

நாய்தன்னிலுங்கடையாகியின் னல்லன்பர்தம்பானண்ணிலேன்
வாய்தன்னினின்றனை வாழ்த்திலேன் வணங்கிப்பணிசெய்தும்மில
பேய்தன்னொடாடியவாறுபோற்பித்தேறுமென்னகண்ணிலே [ன்
ஆய்தன்னிலுமருள்செய்திடு மருணாசலா வருணாசலா. (௨௧)

சந்தித்துமாலயன்வாதுசெய் தலினுங்கவர்க்கரிதாகினை
வந்தித்தலாலொருபாணன்முன் வந்தாய்விறகேந்திக்கொடு
சிந்தித்திடலவ்வித்திறந் தெளிவெய்தியன்னருள்சேர்குவார்
அந்திப்பிறைமுடியாளனே யருணாசலா வருணாசலா. (௨௨)

உமையாளருளனையாகவு மொருதந்தைநீதானாகவுந்
மருன்னடியாராகவுஞ் சார்பற்றவர்தமைநோக்குறி
னமனோர்கணுகாதோடுத னாயேனினைந்துனையண்டினேன்
அமர்நீதியார்தொழுமையனே யருணாசலா வருசலா. (௨௩)

கார்மேவியகளங்கண்டனன் கழன்மேவுமால்விழிகண்டனன்
போர்மேவுசூலங்கண்டனன் போதன்றலைக்கரங்கண்டனன்

சீர்மேவுமா திட்கண்டனன் சிறியேனிடரினிக்காண்பனோ
ஆர்மேவுதாரணிதோளனே யருணாசலாவருணாசலா. (௪௪)

திருமாலயனுந் தாண்முடி தெரிவானலமந்தார்முனம்
ஒருமாதவந்தியின்வாய்தலி னுருமாறறிகிலராகில்
இருமாறியதிறனென்னையோ வுமைபாகனேயருளாகனே
அருமாதவர்பலரேற்றிடு மருணாசலாவருணாசலா. (௪௫)

வல்லாளமன் னவன்வாழ்வோர் மகவாயவற்கருளீந்திடும்
வில்லார்மதிமுடியண்ணலே வினையேன்பிறந்திடவைப்பையேல்
கல்லாய்மரமாயேனுநீ கனிவோடமர்தருமிப்பதி
யல்லாவிடந்தனில்வைத்திடே லருணாசலாவருணாசலா. (௪௬)

வரமாமலரவனீந்திட வானோர்களுக்கிடரேசெய
நரகாசுரன்றனைவெல்லமுன் னாராயணன்றவஞ்செய்தலின்
ஒருபாதியாங்கவனுக்களித் தொருபாதிதேவிக்கீதலால்
அருவாய்மருவினையோசொலா யருணாசலாவருணாசலா. (௪௭)

எள்ளுக்குளெண்ணெய்போலவு மெறிமாமணியொளிபோலவுங்
கள்ளுற்றபூமணம்போலவுங் கனகத்துறுமொளிபோலவும்
விள்ளுற்றிடாதுயிர்தோறுநீ மேவுற்றதோர்ந்துவப்பேற்றுவேன்
அள்ளுற்றநீறணிமெய்யனே யருணாசலாவருணாசலா. (௪௮)

உமையாளுனவிழிமூடினா ளொளிருங்கதிர்மதிவானிடை
சமைவாயிருக்கவுநள்ளிரு டரணிக்குண்மூடியதன்மையாற்
றமையாருநின்விழிகாரணக் கதிர்மாமதியெனவோர்த்தனன்
அமைவாமனத்தவர்போற்றிய வருணாசலாவருணாசலா. (௪௯)

பெருமைக்கடனிறைவண்ணனும் பிரமன்முதலியதேவரும்
ஒருமிக்கமாய்தருமூழிதோ றொருதானுமாய்தரனீங்கவே
தருமக்கடவுள்வெள்விடை தானாய்வரவுவர்த்தார்த்திடும்
அருமைத்திருவருளாளனே யருணாசலாவருணாசலா. (௫௦)

கலையார்மதிகதிராகுமின் கண்ணோரிரண்டையுமூடுகோண்
மலையான்மகள்கழுவாய்செயும் வகைசொல்லியேவினையின்னரு
ணிலையீந்தனினெ வருய்ந்திடார் கிமிர்செஞ்சடைமிசையேமதி
அலையார்நதியொடுசூடிய வருணாசலாவருணாசலா. (௫௧)

தக்கன்முனிந்தேகூறிய சாபந்தொடர்ந்தெய்தாதுணைப்
புக்கன்முசந்திரனோர்கலை பொலிவெய்தவுன்முடிமீதிலே
வைக்கும்படியச்சந்திரன் மனநைந்துசெய்தவனென்னையோ
அக்கன்புடனணிமெய்யனே யருணாசலாவருணாசலா. (௫௨)

உன்னன்னிலைவினவும்பொழு துமைதன்னையேவியந்தாவென்
மன்னும்முழையிற்சந்தமாய் மருவிச்சிறுவிதியாமக
வென்னப்பொலிகென்றேவிய தெவர்க்கும்மருடரவல்லவோ
அன்னத்தவன்பணியையனே யருணாசலாவருணாசலா. (௫௩)

விண்ணோருமிந்திரனக்கினி விறலந்தகனிருதர்க்கிறை
தண்ணார்வருணன்வாயுவே தனதன்னுடனீசானனும்
உண்ணாடிமூழ்கியதீர்த்தமின் றொன்றேயெமதிடர்தீர்த்திட
அண்ணாமலையெனநீடிய வருணாசலாவருணாசலா. (௫௪)

பூசிக்கன்மலருண்டுநீம் புனலுண்டுநின்னெறிதோருவான்
வாசிக்கவாகமமுண்டுநின் மலர்நோக்கமுமுண்டாகுமே
னேசித்தெளியேனுய்குவே னொருகெண்மணிபூண்டெனத்
தாசற்றவர்தொழுமையனே யருணாசலாவருணாசலா. (௫௫)

திருவாசகமொன்றுண்டுநற் றேவாரமுமுண்டாங்கவை
கருவாய்வழிவாராநெறி காட்டும்மெனச்சான்றோர்சொலத்
தெருளாதுவீணேயையவோ தெருநாயினுங்கடையாயினேன்
அருமாதவர்துதியோய்விலா வருணாசலாவருணாசலா. (௫௬)

பல்லார்விடப்பணியாமுனே பரிந்தேதொழவருளீந்ததும்
பொல்லாவிடமுண்டண்டரைப் புரந்தாள்வதுமோர்ந்தும்முனைக்

கல்லார்களைச்சேராநெறி கடையேற்கருள்செயவேண்டுமால்
அல்லார்சுடலையிலாடிய வருணாசலாவருணாசலா. (௫௭)

தேவாதிதேவாவென்கிலேன் சிவலோகநாதாவென்கிலேன்
காவாயரனேயென்கிலேன் காபாலிவந்தாளென்கிலேன்
சேவானதூர்வாயென்கிலேன் சிறியேனதனாலோவையா
ஆவாவெனவருள்செய்கிலை யருணாசலாவருணாசலா. (௫௮)

கண்ணுருபேராவிந்திரா காமாரூகசோமாபுவி
மண்ணுமெனவேபொய்யரை வாழ்த்திக்கவிசெல்லாமனன்
குன்றாருள்பெறுமன்பர்தா ளுளம்வைத்துவாழ்த்துநல்குவாய்
அங்காவலூராளிக்கரு ளருணாசலாவருணாசலா. (௫௯)

பச்சென்னிறமொருபாலுறப் பைம்பொன்னிறமொருபாலுற
வெச்சென்றதீநிறமேவிமேல் வெண்ணீறுபூத்திடநின்றநீ
நச்சுண்டிருண்டகண்டமு நணுற்றதைம்பூதங்களுக்
கச்சென்னநிற்பதுகாட்டவோ வருணாசலாவருணாசலா. (௬௦)

பன்னாகனைதுயின்மாயனே பரிவோடுகாத்தருள்செய்குவ
னென்னுச்சிலரெந்தோதுவ நீதண்மையேவிமையோர்வரை
தன்னாற்கடைந்திடவந்தநஞ் சங்கண்டவரஞ்சித்தொழும்
அந்நாள்புரவாவண்ணமென் னருணாசலாவருணாசலா. (௬௧)

காமத்தொடுகொலைசூதுபொய் களவுக்கிடந்தந்தென்மனம்
பூமத்தமென்பணிநின்றநீ பொருந்தற்கிடந்தாராமையால்
ஈமத்தெரிநரகம்மெனக் கிடமாகுமென்றெணிநின்னரு
ளாமெய்த்துணையேநம்பினே னருணாசலாவருணாசலா. (௬௨)

உனக்குள்ளடியேன்மேவிய முளையோர்கிலாமையினிவ்வுடல்
எனக்கென்னவீந்தனைமுன்னிரு ளென்றேசேர்ந்தந்தோவெனை
நினக்குப்புறம்பாய்நிற்கவே நீடுற்றதாலென்செய்குவேன்
அனக்கன்னிநேர்தருமாதர்கூ றருணாசலாவருணாசலா. (௬௩)

759

பாசத்திடம் பசுவென்னவும் பசுவுக்கிடம் பதியென்னவு
மாசற்றமாமறைபேசுமம் மாயைம்பசு வாமென்னுளே
தேசிற்பொலி பதிபாகுநீ திகழ்கின்றதற் புதமல்லவோ
ஆசைக்குமேலிமிர்சோதியே யருணாசலா வருணாசலா. (௬௪)

யான்செய[illegible]னன் பிறர்செய்தன ரெனதியானெனு மஞ்ஞானமே
பூன்செய்பிற வ[illegible]நல்குமென் றுணர்ந்தேனின தருளாலினி
வான்செய்பத விகள்யா[illegible] மயங்காநெறி தந்தாளுவாய்
ஆன்செய்நெடுங் கொடியான[illegible]ணாசலா வருணாசலா. (௬௫)

வெய்யோனுத யஞ்செய்திடில் விரவும்ம[illegible]ளொழிவாதல்போற்
ம[illegible]யானதில் குருவத்திடப் பொய்ப்போதங்[illegible]மென்னவே
மெய்யாலஞா னுரைசெய்யவும் வீணேதிரிந் துழல்வா[illegible]
ஐயாவவ ருய்வார்கொலோ வருணாசலா வருணாசலா. ([illegible])

பரையுன்னிரு விழிமூடுகைப் பதுமத்தனி விகற்பத்திலும்
வருகங்குலைப் தினின்மூன்றயன் மாலிந்திர னுக்கீந்துமற்
றொருநான்குமூன் றையும்வெளியி லொளித்துப்புவனங்காத்தநின்
அருமைசெய லறிவாரெவ ரருணாசலா வருணாசலா. (௬௭)

வடவாரைய ருமேனோர்புறம் வருகின்றபல் பிணியோர்புறந்
இட[illegible]ம்வறு மையும்மார்புறந் திராததிப் பசியோர்புறம்
[illegible]னுன்குவன் பேயோர்புறங் கழிவால[illegible]ங் குரங்கோர்புறம்
அடலான்மெலிந் துய்யன்ம[illegible] னருணாசலா வருணாசலா. ()

தாய்மார்தளர் [illegible]த்தார்வரு சமனாருமோ சலித்தார்மலர்
வாய்வேதனுஞ் சலித்தானமுன் மல்கும்பிறிஞ் சலித்திட்டதாற்
செய்நாளினிச் செயும்வண்ணமென் செப்பாய்பல கலைவேதமும்
ஆய்மேலவர் தொழுமையனே யருணாசலா வருணாசலா. (௬௯)

மனையாண்மனம் வெறுப்பாகவு மாதாமனம் வெறுப்பாகவுந்
தனிவானபெண் கொள்பிள்ளைகள் கசந்தேமனம் வெறுப்பாகவுஞ்

சனியாமிரு மருமீனையுஞ் சார்ந்தேழையே னலியாவகை
அனையாமென வந்தாளுவா யருணாசலா வருணாசலா. (௭௦)

காட்டுக்குளே தவஞ்செய்குவார் கனலுக்குளே தவஞ்செய்குவார்
நாட்டுக்குளே யறஞ்செய்குவார் நதியாயினும் போய்மூழ்குவார்
பாட்டுக்குநால் வர்களெய்திய பரிசிற்பய னடைவார்களா
ஆட்டிப்பொலி நீக்கண்ணனே யருணாசலா வருணாசலா. (௭௧)

பறவைக்கர சானேந்தவெம் பணி[illegible]பாற் றப்பூண்டநீ
மறமுற்றுமா தவரேவி[illegible]பாம்பணிந் திடவில்லையோ[னைமுன்
இறமுற்றுவன் பில[illegible]ன்றெனைச்செயிர்த்தாட்கொளாவகையென்
அறவர்க்க[illegible]மையனே யருணாசலா வருணாசலா. (௭௨)

[illegible]னதநீப் போற்சிறியே யியமன்வரு மேற்பேதையேன்
பரிகின்றமார்க் கண்டேயர்போற் பணிந்துன்பதம் போற்றுந்திறந்
தெரிகின்றிலே னதனுவினை சிறியேனையாண் டருள்வெம்பவி
யரிகின்றசென் னியிலேற்றிடு மருணாசலா வருணாசலா. (௭௩)

தம்மாலறி வனயாவையுந் தாமல்லவென் பதுமைந்தனே
சும்மாவிருந் திடுமாறெனச் சொல்லுந்தெரி விப்பான்மலத்
தைம்மான்முத லியயாவையுங் கரந்தோர்குரு வாய்வந்தனை
அம்மாவுன தருளென்னையோ வருணாசலா வருணாசலா. (௭௪)

காலாழ்சனர் படுமாயின்வெவ[illegible]ரி தன்னையு நரிகொல்வது
போலாசையாம் படுசேற்றினிற் புலைமங்கவிழுந் துழல்கின்றதாம்
பாலாயிரு வினைவெல்லுநின் பதமெங்ஙனந் தெ[illegible]னையா
ஆலாலமுண் டருணாதனே யருணாசலா வருணாசலா. (௭௫)

பொருளீட்டவு மனைவப் பொத்தற்சடந் தனையோம்பவு
மருளீட்டுமா தர்களாசையின் மயங்கித்திரி தரவுங்கொலோ
தெருளீட்டுமித் தனுவிந்தனை தேவாதிதே வாவென்னையே
அருளீட்டுமென் பர்கள்போற்றிய வருணாசலா வருணாசலா. (௭௬)

பொய்யானதே குடிகொண்டது புழுவானதோ நெளிகின்றது
நசையோகமே விழைகின்றது சவமாகிமேல் விழுகின்றது
மெய்யானதிங் கிதைநாயினேன் வீணேசுமந் துழல்கின்றிலேன்
ஐயாவுன தருள்வேண்டினே னருணாசலா வருணாசலா. (௭௭)

இந்நாள்வரை யிலுமு[illegible]சா றெல்லாமன விடவெண்ணிலோ
பொன்னாமலை தானேருமோ புல[illegible]னின மூணலேபெரி
தென்னாவுழல் வேனுதலா லியமன்வர வேயுன[illegible]வான்
அந்நாளின்மு னீவந்தரு ளருணாசலா வருணாசலா. (௭௮)

பறக்குஞ்சிறை மறையன்னமும் படிகீண்டகோட் டொருபன்றியுங்
கறக்கின்றவான் பாலாட்டியே கனிவாயருச் சித்தின்றவன்
இறக்கும்படி செயுமன்பர்தா மெய்தும்பய னுணரார்கொலோ
அ[illegible]ஞ்சியுஞ் சடைபாவனே யருணாசலா வருணாசலா. (௭௯)

தாய்தந்தைநீ குருதெய்வநீ தமியேனுயி ரதுநீயெனு
வாய்தக்கமொ ழிவேனலான் மனமாண்டநின் னடியார்களுக்
கோய்ந்துவல் வினைநீங்கவுந் துலையொத்தநன் னிலைகூடவும்
ஆய்தந்திலே னுயவேன்கொலோ வருணாசலா வருணாசலா. (௮௦)

மார்க்கண்டனின் மலையுச்சிமேல் மதியாதுநாடொறுமேருதல்
[illegible]த்தாங்கவன் வெருவும்படி பணிதந்தோர்புறஞ் செலவைத்தநீ
வர்த்தாவென வுரைமவுமென் வினையோர்புறஞ்செலவைத்திலை
ஆர்த்தார்முடி கணியண்ணலே வருணாசலா வருணாசலா. (௮௧)

தெள்ளித்தெளி தருமன்பர்பாற் சேர்ந்தேயரு ளீவாய்படர்
முள்ளிக்குவே லிகள்போலிதன் முறையல்லவென் பதுபோலனை
யெள்ளித்திருவரு ளீந்திலையெனினே னழையேனென் செய்குவேன்
அள்ளிப்புனல் முடிமேற்கொளு மருணாசலா வருணாசலா. (௮௨)

தேன்பட்டசொல் லியராசையிற் றிகழாலவாய்க் கரும்பென்னவே
நான்பட்டுநொந் தனன்மேலுமோ நமனார்வரி லென்செய்குவேன்

முண்டமு

காண்பட்டபூங் குழல்பாகநின் கழல்சூடியாட் கொளவேண்டுமோ
ஆண்பட்டநீள் கொடியண்ணலே யருணாசலா வருணாசலா. (அ

பதியாகுநின் பதமாமலர் பணியாதபே யருநின்புகழ்
துதியாதமூ டருமாலவஞ் சூழ்வந்திடாப் புலையாளனை
கதியாதுகா ணுவனையையோ காவலன் —த யடிபட்டெனைத்
ததியாகுல மடைவாதலா ருணாசலா வருணாசலா. (அ

மாயோனையுந் தொழுகின்றிலன் மலரோனையுந் தொழுகின்றில
னேயெனினை யேபோற்றுவே னல்காயரு ளெனிலாங்கவர்
ஏயேயென நகைசெய்வரே யெனநாணுறேன் மெலிகின்றனன்
ஆயேயென வடியார்க்கரு ளருணாசலா வருணாசலா. (அ௬

பொருப்புச்சிலை யாயுன்னருட் போதந்தலைப் படுமன்பர்க
ணெருப்புக்கும்வா யுவினுக்குநீ ணீருக்குமஞ் சார்மேலுமோ
மருப்புக்கடா மறலிக்குமே மனமாய்வுறா ரெனவோர்ந்துநின்
அருட்புக்குய்வான் விழைகின்றன னருணாசலா வருணாசலா.)

வாசிப்பதுன் னடியார்புகழ் வந்திப்பதுன் னடியார்பத
நேசிப்பதுன் னடியார்பத நினைகிற்பதுன் னடியார்பதம்
பூசிப்பதுன் னடியார்பதம் புனைகிற்பதுன் னடியார்பதம்
ஆசிப்பதுன் னடியார்பத மருணாசலா வருணாசலா. (அ௭

பொன்னுக்குளே யொளியென்னவும் பூவுக்குளே மணமென்னவும்
என்னுக்குளே நீமேவுவ தெளியேனுணர் தருமாறுமே
தன்னுக்குளே யான்மேவுவ தொருநீயருள் செயவேண்டுமால
அன்னக்கொடி யோன்போற்றிடு மருணாசலா வருணாசலா. (அஅ)

வேலிக்குமுன் னிடவெண்ணிலார் வெறிகொண்டபேயர்களாகியோர்
காலுக்குமுன் னிடல்போலுனைக் கடையேன்மறந் திதுகாறுமே
மாலுற்றுமெய் யதுபோற்றியுன் மலர்த்தாடொழு மாறோர்ந்திலன்
ஆலிக்குமுன் னத்தோர்க்கரு ளருணாசலா வருணாசலா. (அக)

தரு—
ருளீட்டமென் பக்கன்போற்றிய வருணாசலா வருணாசலா. (எச)

763

கட்டுத்தொழா தவரென்றரு ணைக்காக்ஷ தோர்வாரெனிற்
றொட்டுக்கலா வெறிந்தோற்குமுன் றொலையாதவின் பந்தந்தரு
கட்டுக்கதை யென்றேசிலர் கழறிக்கொள்வா ரேயம்மொழி
யட்டிக்கவொ மென்காதினை யருணாசலா வருணாசலா. (௧0)

கையாற்பெறு பயனின்மலர்க் கழலர்ச்சனை யதுசெய்தலே
மெய்யாற்பெறு பயன்மெய்யநீ மேவாலய மதுசூழ்தலே
பொய்யாணதில் வாயாற்பயன் போற்றித்துதி செயலிங்கிவை
ஐயாவெனி யேற்செய்துமோ வருணாசலா வருணாசலா. (௧௧)

மலமூன்றுடை யாருக்கருள் வடிவங்கொடு வந்தாங்கவர்
சலமூன்றிரு வினையொப்பிலே தற்போதவா தனைநீக்கியே
நலமூன்றுற வருள்செய்யுநீ நாயேற்கருள் செய்வாய்கொலோ
அலமூன்றிதோ ளவனேடிய வருணாசலா வருணாசலா. (௧௨)

பாசாடவிக் குள்ளேப்புலப் பகைவேடருக் குறவாதலாற்
காசாகையான் கொண்டற்பதங் கடைவாயிரோ றுங்காத்திடு
பூசாபனன் றேவென்றுளே புலம்பித்திரிந் துழல்கின்றிலேன்
ஆசாரமா றுதார்க்கரு ளருணாசலா வருணாசலா. (௧௩)

புலையானதோர் தொழில்செய்யினும் பொய்யானதோர் மொழிபே
கொலையாகியசெயல் செய்யினுங்கொடி தாங்களவது செய்யினு[சினு
மலையாதுநின் னருள்சேர்வரேல் வழியேனவ ரடிசேர்வனால்
அலையாறுசூ டியவண்ணலே யருணாசலா வருணாசலா. (௧௪)

படைப்பானுநீ யுலகியாவையும் பரிவாயளித் திடுவானுநீ
துடைப்பானுநீ பொய்பொய்யெனத் தோற்றுவ்வமைமறைப்பானுநீ
சடைப்பாலனுக் கிரங்குஞ்செயுங் கண்ணோனுநீயாயன்
அடைப்பாற்றுயில் வேறுயிதன் னருணாசலா வருணாசலா. (௧௫)

பாடார்கவி பரியாருனைப் பணிமாமலர் கொடுபூசியார்
தேடாடி யார்தம்மையுந் தினமுண்டதே யுண்டையையோ

மாடாமெனத் திரிவாரவர் மண்ம்வெந்துறும் பிபீல்வீழ்வரே
ஆடாதபே யுடனாடிய வருணாசலா வருணாசலா. (௯௬)

போகாதவா யுவையுள்ளானை பூரித்துநே ரிற்பாக்கிலே
சாகாமனத் தவராகினின் சார்புத்திட வேயெண்ணுதல்
சேகார்தரு பலவேணிகள் செறித்தாங்கதன் மேலேறியே
ஆகாயமெட் டிடல்போலுமா லருணாசலா வருணாசலா. (௯௭)

மாலாரொரு கற்பத்தனின் மழைமேகமாய் வரவாங் கதன்
மேலாயினை பின்னுமொரு விடையாய்வரு வேயூர்ந்தனை
பாலாமொழி மாதாய்வரப் பரிவாலிடப் பாலீய்ந்தனை
ஆலாலமுன் னும்பித்தனீ யருணாசலா வருணாசலா. (௯௮)

பாய்வானதி நீர்பாய்ச்சினும் படரெட்டியின் கனிகைப்புறு
நாய்வானிமி ராதாற்பல நாண்கொண்டிறுக் கிக்கட்டினு
மாய்வாகிவன் மனநேருறு வகையாங்கவை போலாதலோர்க்
தாய்வார்க்கரு ளானையண்டினே னருணாசலா வருணாசலா. (௯௯)

தோம்பாரிடை வண்டார்விழிக் கொங்கார்முலைச் சிங்காரிக
டம்பான்மனஞ் சென்றேயழி சண்டாளனை யென்றாள்வையோ
சேம்பாகினேர் மொழிபங்கனே சிந்தித்தவர்க் குயர்வீடருள்
அம்பார்சடை நம்பாவொளி ரருணாசலா வருணாசலா. (௧00)

படியாளுமன் னவர்வாழவும் பரிவோமென் னுயிர்வாழவும்
முடியாமறை தான்வாழவும் முதலன்னசை வம்வாழவுங்
கடியானெறித் தமிழ்வாழவுங் கவிவாணர்யா வரும்வாழவும்.
அடியார்கள்வா ழநன்கரு ளருணாசலா வருணாசலா. (௧0௧)

அருணாசலசதகம் முற்றிற்று.

இஃது

மகாவித்துவான் காஞ்சிபுரம்.

சபாபதி முதலியாரவர்களாற் செய்யப்பட்டது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருணாசல அக்ஷரமாலை.

விநாயக வணக்கம்.

வெண்பா.

மூன்றறிவுந் தோன்றறிவா முப்பொருட்கு முற்பொருளாஞ்
சான்றறிவாம் பூரண சதாசிவத்திற்—றோன்றும்
அருணா சலவக் கரமாலை யோதக்
கருணா கரசு முகன் காப்பு.

நூல்.

இணைக்குறட்டாழிசை.

கிட்களாங்கம்.

லாலிசந்தம்.

அக்கரமனைத்தியக்கும் ஆதித்ய
யித்கலகரத்திறுதி
சொக்கிசிவசோதியறியவா வெக்குகி.
செக்கவொளியருணாசலா. (௧)

ஆரணநல்லாமகலை மீதினமர்
பூரணமெய்ஞ்ஞானவொளியே
பாரணவுமன்பருளமாம் பதமவனே
சீரணவுமருணாசலா. (௨)

இச்சையெழின்மேனியாகி யெவ்வெவரி
னிச்சையறவெய்துஜோதி
பச்சையொருபாதிமேவ பாதிமலர்
செச்சையொளிரருணாசலா. (௩)

ஈறகவோதியில்லா வீடிங்கப்
பேறதவுபேர்வில்சோதி
கூறிலொருகூறதாகுங் கூர்த்தமதி
நீறபுனையருணாசலா. (௪)

உண்மையறிவானந்தமா மோவிலருள்
பெண்மையகலாதமேனி
அண்மியெவனுள்ளுமேனு மாடல்புரி
திண்மையறியருணாசலா. (௫)

ஊறியுலவாதசோதி யோர்மூன்று
பாழினிலவாதசோதி
ஆழியருளானசோதி யற்புதகல்
வாழிமிகுமருணாசலா. (௬)

எட்டுகுணமெட்டிவோ டெட்டெட்டு
வொட்டுகலையெட்டுமுறிவாய்
பட்டுமலையெட்டவரிதாய்ப் பாசமறு
சிட்டர்புகழருணாசலா. (௭)

ஏகவொளியாகிநின்றே யெண்ணிலக
னேகவெளியாவெதிர்த்தும்
ஏகவெளியென்றகண்ட வாங்குசிவ
யோகவெளியருணாசலா. (௮)

ஐந்துகலையைந்துபரையா மைந்துமொரு
லைந்துந்தமைந்துதொழிலா
மைந்துபொறியைம்புலனுமா யாங்கரிய
விந்தைபெறுவருணாசலா. (௯)

ஒன்றேயகண்டதென்று தோங்குமொளி
யன்றேடதாமதென்று

767

நின்றோர்களுள்ளமலர்மே னித்தநட
னன்றேமருணாசலா. (௧௦)

ஓசையொளியூறகந்த மாதிசுவை
யாசையகலாதகன்ற
பூசைபுரிவார்கடம்மைத் தன்னுளுற
வாசைபுரியருணாசலா. (௧௧)

ஔவியமவிந்தவருளோ டார்வமிகு
செவ்வியமெய்ஞ்ஞானவொளியே
எவ்விருளுமென்றுமணுகா வேகரவி
திவ்வியநல்லருணாசலா. (௧௨)

அஃகேனமிருமைமருவித் தன்னிலையை
அஃகாதுகாட்டுமரமே
எஃகார்மெய்யறிவையொன்றி யெந்நாளும்
அஃகாதெழருணாசலா. (௧௩)

சகளாங்கம்.

கட்டுமறையாகமாதி யாவுமன
விட்டுமுணராதசோதி
மட்டுமலர்பொய்கைகாழி பிள்ளைவிரல்
சுட்டினவருணாசலா. (௧௪)

ஙப்போலிருந்தினமெலாங் காசற்ற
மெய்ப்போதமருவுதொண்டைச்
செப்பாதுசெய்துகாட்டுந் திருவாமூர்
வைப்போதுமருணாசலா. (௧௫)

சத்தாதிதத்துவத்தோர் முத்தர்களும்
பித்தாகிநிற்பவஞ்சிக்

கொத்தாருநாவலூரன் கூர்ந்து
பித்தாவென ருணாசலா. (௧௬)

ஞமலியெனத்தனையிகழ்ந்து தன்வினை
கமலவயன்வாதவூரன்
மும்மலமறமொய்க்குருந்தின் கீழமர்
விமலகுருவருணாசலா. (௧௭)

டம்பமுதலாவகுபா தியநெறி
வம்பிலமிழாததூயார்
உம்பரகலாதமைத்தா யும்பர்வளர்
செம்பொனொளியருணாசலா. (௧௮)

இணங்கினவனத்தனக்கோங் கேந்திய
துணங்கிடையணங்கலர்ந்து
மணங்கமழ்தலின் றிருந்தாற் கண்டுனை
வணங்கவெலவன ருணாசலா. (௧௯)

தங்களைத்தாமதித்து வாங்கிருவர்
பொங்கமர் புரிந்தவங்கா
ளங்கமெரியங்கியாகி யனையர்க
மங்கவெழுமருணாசலா. (௨0)

நந்தைமதிகொன்றைதும்பை நாறியக
ரந்தைவனிநாககல்லா
ரந்தமில்குரண்டவாறு மாவலொட
ணிந்தமுடி யருணாசலா. (௨௧)

பற்றிவிரிமலரைங்கணை பைங்கழையி
னெற்றிவிடுமணிமாரனை
வெற்றிபெறவெகுளாதெழும் வீரவெரி
நெற்றிவிழி யருணாசலா. (௨௨)

மன்னுபுலிமுன்றினுழலும் மஞ்சவினை
பொன்னுமுகன்மூன்றுபுரிசை
தன்னையொருவாறொருங்கே சாம்பர்புரி
புன்னகையினருணாசலா. (௨௩)

யட்சபதியெங்கைதின்பா னீக்காத
பட்சமதிதோழனன்றோ
பிட்சைபதியென்னசெவியி லக்குமணி
கட்செவியெனருணாசலா. (௨௪)

அரவணையனறிதேவ ராகியது
கரவணையவெவ்வுமாலம்
வரவணையவாங்கியுண்ட கண்டவெழி
லிரவணையுமருணாசலா. (௨௫)

இலவங்கனிசாத்திரங் கேனழகக
முலவுஞ்சுகம்மதென் றும்
பலவங்கனிசுகமீதென் றும்மருளா
நிலவங்கையருணாசலா. (௨௬)

வஞ்சகமின்றிடாது கஞ்சன்முத
லெஞ்சமரஞ்சநாளும்
துஞ்சுமவரங்கமாலை மார்பினணி
விஞ்சுமொளியருணாசலா. (௨௭)

அழகுதிகழிருடிமாதர் கற்புலவோ
கழலவனாதுகில்கன் கண்டப்
பொழுதவாழவேதோம்பி வேடுசின
வுழுவையுரியருணாசலா. (௨௮)

இளமைகழியாதசெல்வ மெய்தவொரு
வளம்மமுனிபாலனூர்தம்

வுள்ளமையுறவந்தகால லுயிர்தங்கு
முனரிபதவருணாசலா. (௯)

அறவடிவமான விடைமே லனபாருன்
பெறவடிவமாகிவருநீ
மறவடிவமான முயன்மே னட்னமிடு
திறவடிவெனவருணாசலா. (௧௦)

அனகமணிகனகவெளியே யன்பின்மிகு
பனகமுனியொடுபொற்கடல்
தனகமிகமகிழவுண்டான் றனைதொழு
கனகவடியருணாசலா. (௧௧)

சகளநிட்களாங்கம்.

கற்றருமறியாங்லங் கல்லாது
பெற்றருமதிவள்ளலுக்
குற்றபுரிந்துகோலக் காவிலொளிர்
பொற்றளமருணாசலா. (௧௨)

கான்றதழனீற்றினரையே கஞ்சமுகி
டோன்றதடமோடுதென்றற்
போன்றகுளிர்செய்யவம்ப மூர்த்தியினை
யேன்றுகொளுமருணாசலா. (௧௩)

கின்னமுலைவன்னவொயிலாள் கீதமதி
பன்னைமுனிதன்னின்மொழியாள்
பெண்ணினலமுன்னவெண்ணு மாறுர
னன்னவருளருணாசலா. (௧௪)

கீடவுருவோடகாடிக் கீதமதூ
பாகுகுழவிக்குகேரே

தோடமறவாதவூரற் காடல்பல
கூடல்விளையருணாசலா. (௧௫)

குருலிங்கசங்கமங்கட் கன்புறவா
திருவங்கம்லிங்கமென்றால்
சருவங்கடந்ததிற்கே திருவொன்று
வுருவெங்கேயருணாசலா. (௧௬)

குருஸ்வரூபம்.

கூடனெமொறணுரை மூடுமம
ணீடுமிருள்காடுவாட
நீடுமெருணீறதாகி நேரதற
ஆடுமொளியருணாசலா. (௧௭)

கெடிலநதியதிகைபதியாற் கன்புபுரி
தடிகொளிடைதிலதவதியார்
வடிவையடைந்துரைநல்லரசை யாண்டவருள்
பொடிவடிவெமருணாசலா. (௧௮)

கேட்டவுடனபபர்நாம மெய்பொருளுக்
கூடுமதியப்பூதியார்
வாட்டமறவாகிசரை வந்தொன்றி
யாட்டகுருவருணாசலா. (௧௯)

கைம்மாறுகருதாச்சிவ ஞானமழை
பெய்ம்மாதுதன்னையேவி
பொய்ம்மாறப்புகலியரசை யாண்டகுரு
மெய்ம்மார்க்கவருணாசலா. (௨௦)

கொங்கைமுகிழ்பால்கரப்ப வோர்ஞான
செங்கதிருதித்தவன்றே

மங்கையர்க்கரசிபாண்டி மாதேவிக்
கங்கொளிருமருணாசலா. (௪௧)

கோளருகவினமிருளாக கொள்ளமகொள
மூளுமருண்ஞானவொளியை
நாளுமதிஞானநற்கு லச்சிறையை
யாளுமதியருணாசலா. (௪௨)

கௌவினிமையாழ்மூரியம் பதிகநை
செவ்விதினருந்து செவியான்
திவ்யநெறிபாணனை யாண்டவிசை
தெய்வகுருவருணாசலா. (௪௩)

சந்தநிறைந்தவொளியே சுந்தரர்சு
தந்திரமிலாதவெளியே
வந்தநெறிக்கணிற்பா ணோலையளி
தந்திரகலருணாசலா. (௪௪)

சாத்திரமதாந்தவுண்மை சயந்தர்
காத்திரமடைந்துணர்த்தி
சீர்த்திகணநாதர்தம்மை யாண்டபர
மார்த்தகுருவருணாசலா. (௪௫)

சின்மயானந்தமூலஞ் சீர்நந்தி
நன்மெயானந்துணர்த்தி
தன்மெயானந்தமூலன் றனையாண்ட
வின்மெயானருணாசலா. (௪௬)

சீறாப்புனையும்வேணி சோமாசி
மாறனார்க்கருள்மேனி
நீறருச்சுந்தரனாய் நீடருட்
பேறருவருணாசலா. (௪௭)

773

சுழலைப்பெருச்சுரும்பர் சோலைபெரு
மிழலைக்குறும்பனாரை
மழலைச்சொற்பரவைகேள்வன் வாய்ந்தபத
நிழலைச்[illegible]ருணாசலா. (௪௮)

சிவலிங்கஸ்வரூபம்.

சூக்குமுணர்தில்லைவாழ் மந்தணர்கள்
பூக்கண்முதல்கொண்டோரும்
ஊக்கமுள பூசைகொண்டாங் காடல்புரி
சூக்கவடிவருணாசலா. (௪௯)

செப்போதிளங்கொங்கையே யோர்பாலி
ருப[illegible]மேனிதன்னை
மூப்போது நீண்டாருந் தீண்டுமெழில்
வெற்பாகுமருணாசலா. (௫0)

சேமவருளுள்ளசீலக் கண்ணப்பர்
நேமமறிவானினைந்தே
சோமர்விசோதிவிழியே சோரிசொரி
காமர்வடிவருணாசலா. (௫௧)

சைவமுணர்சண்டேசனார் தாதையடி
கொய்துமகாபாதகமென
தெய்தவருளீசனடியார்க் கேயிறைமை
செய்தவருளருணாசலா. (௫௨)

சொக்கவெளிநீறுபூசுஞ் சோதிசிவ
அக்கமணிமாலைபூணும்
மிக்கசிவநேசநெஞ்சார் திருநீல
நக்கர்பணியருணாசலா. (௫௩)

சோராச்சிவானுபூதி தோன்றியுளம்
கோரத்தெரிந்தோர்புத்தர்
சோராதெறிந்தகல்லே அமலரி
சேராக்கொளருணாசலா. (௩௪)

கோயில்.

சௌனகாதிகமுனிவருஞ் சாற்றிய
மௌனவானிலைவாயிலார்
கௌணவாணிலைபூசலார் புரிகோயி
லிவணவாவருணாசலா. (௩௫)

தத்தைமொழிபத்மவதியா வீன்றவன
ரத்தவிழியுற்றவளவன்
பத்திவழிநாவலடியிற் பூசைபுரி
சுத்தமுதலருணாசலா. (௩௬)

தாவில்பொருள்கோவையோதித் தமிழ்மன்னர்
மூவர்தருபொருள்கொடன்பின்
ஆவலொடுகோரியடிகள் செய்கோயில்
மேவிவளருணாசலா. (௩௭)

குளம்.

திண்டிறற்றண்டியடிகள் செய்பொய்கை
கண்டழுக்காறுகொண்ட
மிண்டுநெஞ்சமணர்வெருவ தண்டிக்குக்கண்
கண்டருணலருணாசலா. (௩௮)

அபிடேகம்.

தீயபுரிசோள்வலிந்து சேணெடிது
காயபசியான்மெலிந்த

தூயசீர்புகழ்த்துணைசெய் அபிடேக
நேயநீரருணாசலா. (௩௯)

துரியவெளிபோலுணனை யென்றவொரு
பெரியகுலகந்தணரா
யெரியிலவணைவித்தங் கேன்றபெருங்
கரியவெளியருணாசலா. (௪௦)

புட்பம்.

தூம்பணிகையென்னவண்டேன் றுளிதுள்ளித்
தேம்பணிசெய்மாலைசெய்து
பாம்பணிகள்பாறவணியா முறுகவடி
நாம்பணிசெயருணாசலா. (௪௧)

தூபம்.

தெங்குதிரள்சோலைகடவூர் திகழையர்
மங்கிலியமாறிக்கொணர்
குங்கிலியதூபமுரல்பு திருமேனி
யங்கணியிரருணாசலா. (௪௨)

தீபம்.

தேசுருவமானநிற்கே திருவொற்றி
வாசர்தனவணிகருதிரம்
பேசுதிருவகலிலூற்றித் தீபமிட
வீசுமொளியருணாசலா. (௪௩)

தையலோர்பாகனின்னை வாதபுரி
ஐயர்நீருறுதியெனும்
மெய்யவாசகம்விளக்கு நமிநந்தி
ஐயர்தொண்டருணாசலா. (௪௪)

தொண்டைவாய்க்கெண்டைவிழியா ளோர்பாதி
பிண்டவாண்மதியினனே

தொண்டவாமண்டலானை புற்றீபப்
கொண்டைவான றுணாசலா. (௬௫)

நெய்வேத்தியம்.

தோடமதுதற்கொலையெனு மறையாதி
பாடவதுசெய்ததாயர்க்
கீடவணிலாதிலங்கு மின்பவொரு
வீடருளுமருணாசலா. (௬௬)

தெளவ்வைமகவிதிசுற்றஞ் சிவசொத்தை
வெளவுமயராத நீப்பான்
வெளவியவராவிவாட்கி கோட்புலியென்
செவ்வடிகளருணாசலா. (௬௭)

தோத்திரம்.

நல்லோசைருத்ரபாரா யணமதனை
யல்லோபெகலுமாரு
தெல்லோருமகிழவோதும் பாசுபதி
நல்லோசையருணாசலா. (௬௮)

நாடவர்கண்மகிழமைந்தன் முடிசூடி
யீடுபெறவரசுநல்கி
பாடநலமாலைசெய்தா ரையடிகள்
காடவர்கோனருணாசலா. (௬௯)

நித்தியவசித்திபந்தேர் வதுவுற்ற
சத்தியநற்சேரர்பெருமான்
பத்திபெறுமாலைதமிழுக் கருடந்த
வத்தமாவருணாசலா. (௭௦)

இசை.

நீதானெனுதெவுயிறும் போதமயம்
தானாய்த்தனித்துநிற்ப
வானதவேனா துவாரைந்தெழுத்
தானயருணாசலா. (௭௧)

சிவாக்கினி.

துண்ணியமெய்ஞ்ஞான விழியானோக்கரிய
திண்ணியசிவானலம்வளர்
புண்ணியசிறப்புலியர்பாற் போகமருள்
தண்ணியநலருணாசலா. (௭௨)

சிவபத்தி.

நான்முறையறிந்தசில ரோர்மும்மை
யான்மதுரையாண்டகோலன்
தேன்மொழியாராசையமிழா மூர்த்தியடி.
யான்மறுவுமருணாசலா. (௭௩)

நெற்றிவிழிவுற்றபெருமான் குஞ்சிபத
த்தைமுடிவைத்துமுடியாய்
மற்றுவகளித்தபெருமான் கூற்றுவரென்
நற்றவர்கொளருணாசலா. (௭௪)

நேர்பெறநிலாவுசோதி நீள்வாரி
யேர்பெறமுதற்பவித்த
பேர்பெறுபொன்மீனைவிற்கீத் ததிபத்தர்
சீர்பெறுவருணாசலா. (௭௫)

வயிராக்கியம்.

வைத்துறுகுசிந்தையவனு மேயர்குடி
வந்தவதரித்தநேயன்
(௭௬)

கொந்துமணமாழ்கபெண்பாற் றாதுசெல
லந்தமதுவருணாசலா. (௭௬)

கொச்சியறுகுச்சிபுனைவா யெச்சவிடை
கச்சுமுலைமச்சவிழியான்
கைச்சிதைசெறுத்துணையனார் தம்மைமிக
மெச்சியருளருணாசலா. (௭௭)

நோன்பெனல்கொலாமையன்றோ வதுசெய்த
வூன்படையெறிபத்தனார்
வான்படமராதியோர்கள் வாழ்த்துபதந்
தான்பெறநல்கருணாசலா. (௭௮)

பங்கயன்சிரமரிந்தாய் அதுகண்டோ
விங்கொருபெண் மூக்கரிந்தார்
தெங்குகார்திகருமாரூர்ச் சீர்கழற்
சிங்கர்காணருணாசலா. (௭௯)

சங்கமஸ்வரூபம்.

பாடறமடந்தைபசுமெய்த் தீண்டாது
வீடறவோடாத்துமொருவர்
காடறியக்கூட்டவருநின் வேடவித
ஆடலதேலருணாசலா. (௮௰)

பிறர்மனைபுகாமையதனின் மிக்கதொரு
வறமதிலையென்றதாரே
மறமதுமியற்பகைமனை கைப்பற்று
மறவாராருணாசலா. (௮௧)

பீடைகொடுவெமிலையான் குடிமாறன்
வீடுகேயோமமடையா

நீபேசியென்றமுளைநெல் லமுதுண்ட
வாடலதெனருணாசலா. (௮௨)

புன்புலியதென்றமறியார் புனிதமுறு
நன்புலியபெற்றமறியார்
மன்பொலியுமெய்ப்பொருளனா லந்திட்ட
தென்பொலிவெமருணாசலா. ௮௩)

பூண்டசிவவேடர்த்தொழாச் சுந்தரனு
மாண்டசிவனும்புறகெனாக்
காண்டல்புரிமிண்டனாரை யன்பினொடு
மாண்டதெவனருணாசலா. ௮௪)

பெண்டினொடுபிள்ளையாதி பிறவுமுள
பண்டமெவையும்பறித்தாய்
துண்டமுறகோவணவுடைக் கமர்நீதித்
தொண்டரிடமருணாசலா. (௮௫)

பேதவிதமறியாதநல் லேனாதி
நாதர்தமையாள வெளிவந்
தேதமுறுபேதிலவர்போ லெதிர்நின்ற
போதமதெனருணாசலா. (௮௬)

லையபாசையொழித்தீர் மாவிரத
சைவவேடந்தரித்தீர்
தைலையம்பாலழுத்தீர் கஞ்சாற
மெய்யர்பாலருணாசலா. (௮௭)

பொன்றாத்திறக்குறிப்பே பொறுளென்று
நின்றதராஞ்செய்வண்ணார்க்
கன்றுதராஞ்செயங்கை மலர்பாலை
யின்றேன்றுமருணாசலா. (௮௮)

போய்த்தலையியானடந்து கைலைமலை
மேய்ப்பரமேசரிற்கண்
டாய்புகழ்பாடுமெம்மைக் கொளிமங்கு
பேய்வடிவென றருணாசலா. (௮௯)

பௌவமலியுலகினுனது ஆடல்விளை
திவ்யநகரங்கடோறும்
எவ்வமறவெய்துமூர்க்கர் சூதாட
லொவ்வுமதுவ றருணாசலா. (௯௦)

மனமொத்ததந்தைதாயர் கறிசெய்து
பினமற்றமாவையூட்ட
அனமொத்தவமுதுசெய்ய வரவுற்ற
தெனமெத்தவருணாசலா. (௯௧)

மாற்றலர்தலைக்குவைக்கு ளொன்றுசடை
தோற்றொருதலைக்கணுற்று
போற்றெரிபுகுந்துநிற்சேர் புகழ்ச்சோழ
ராற்றலெனவருணாசலா. (௯௨)

மித்தையுலகத்தைமதியா மிளிர்சைவ
முத்தனரசிங்கமுனைமன்
சுத்தரிகழ்பொய்த்தவர்க்கே யிருபங்க
ளித்தலெவனருணாசலா, (௯௩)

மீனவிழிபங்கனடியா ராமுடைய
மானமறவாற்றமனைவி
ஈனமுறுகைதரித்தார் கலிக்கம்பர்
ஞானமதெனருணாசலா. (௯௪

முத்தியருளீசனடியார் தம்மையிகழ்
புத்தியுறநீசர்துணிகர
சத்திகொடரிவரிஞ்சை நகர்வாழுஞ்
சத்தியடியருணாசலா. (௯௫

மூட்டமர்முனைகடந்து முனையற்று
வாட்டமுறலந்தவரசர்
வாட்டமறலாங்கிபகைதீர் முனையடுவர்
நீட்டுபுகழருணாசலா. (௯௬)

மெச்சுபண்டாரமிவரே யாமென்று
வைச்சகெத்தவருவார்க்கே
மிக்கபொன்னீய்ந்தசீரி டங்கழியர்
எச்சமன்னருணாசலா. (௯௭)

மேதினியிலாடைபலநெய் தாதரவி
னீதலபுரிநேசவடிகள்
பாதமலர்பரவுமவரை மெய்ஞ்ஞான
போதமுறுமருணாசலா. (௯௮)

மைத்தமணிகண்டனடியேமறவாது
பத்தராய்ப்பணிவருடனும்
நித்தமன்பொடுபொலிவா ரொடுநின்று
நிர்த்தமிடுமருணாசலா. (௯௯)

மொழிமணமிறந்தவொளிபாற் சித்தத்தை
யொழிவறவமர்த்திநின்றூர்
அழிவிறிருவாரூர்ப்பிறந் தாரோடு
மொழிவறநிலருணாசலா. (௧௦௦)

மோகவிருளேகவொளிகால் வெண்ணீறு
ஆகமுழுதாகவணிவார்
ஏகசிவபோகமுறுவா ரப்பாத்தி
யோகமெமதருணாசலா. (௧௦௧)

மௌனமகடனைமருவுவா ரிசைஞானி
தவமகடனைமருவுவார்
நவசிவாநுபவராஞ் சடையடிகள்
சிவமுறுவாருணாசலா, (௧௦௨

ந்துனைமனத்தில்வைத்தா வாலால
சுந்த்ரனை வயிற்றிலுற்றான்
சந்த்ரனைமுகத்திலொத்தா ளிசைஞானி
செந்தளிர்மெய்யருணாசலா. (௧௦௩)

வாக்குலகெலாமென் றுசீரம்பலவர்
தூக்கியருளப்பெரியர்சீர்
தேக்கியபுராணமறைவார் செங்குன்றை
பாக்கியரெமருணாசலா. (௧௦௪)

விண்டவர்கள்கண்டதிலையாம் மிளிர்ஞானங்
கண்டவர்கள்விண்டதிலையாம்
அண்டவெளியுள்ளுநிலையாம் பாதமலர்
புண்டரிகமருணாசலா. (௧௦௫)

வீடுவிடவீடுவருமென் றருமறைகள்
பாடமுகமதுபலகொடு
நாடவொருதரநினைத்தா ஞசமில
வீடருள்வையருணாசலா. (௧௦௬)

உற்றதையுரைக்கினுடனே யுடனின்றும்
அற்றதுறுமென்றவுரைநேர்
பற்றறுசுரூபசுகராய் வந்தென்னி
னுற்றதருளருணாசலா. (௧௦௭)

ஊர்பிறவிதெவ்வொழிய வோமாதி
தேர்புரவிகவசமருள்வான்
சேர்பரவணைமலைத்தே வெழின்மேனி
பார்பெறுவருணாசலா. (௧௦௮)

வெண்ணையம்பதியுதித்தார் மெய்கண்ட
தண்ணையெங்குந்தெரித்தார்
பண்ணையுமோசையும்போ லத்துவித
வண்ணமென் றருணாசலா. (௧௦௯)

783

வேணுபுரஞானவள்ளல் வேறுபுரி
ஆணவமறுதவரையும்
பேணிநிருவாணமருளுங் காருண்ய
மாணுருவருணாசலா. (௧௧௦)

வையமொடுவானமுதலா மற்றனவுந்
தெய்வமெனல்சைவநெறியென்
றையமறவோதிப்புகலூர்ச் சிவலிங்க
[illegible]வருணாசலா. (௧௧௧)

ஒண்டலைக்கூருமரவ மொளிர்திங்கள்
வெண்டலைஇயாலையணிவோய்
அண்டரேற்றூரனை யானைமிசை
கொண்டனை யருணாசலா. (௧௧௨)

ஓங்காரவுட்பொருளுள் வைத்தேறிப்
பாங்காகின்றோ டொன்றினர்,
நீங்காதநெறிவாசகர் கின்னருளீ
ஓங்காரனு மருணாசலா. (௧௧௩)

ஔதார்யவருளும்வாழி யானந்த
ஔதார்ய வடியர்வாழி
ஔதார்யவருணைவாழி சந்ததமும்
ஔதார்யவருணாசலா. (௧௧௪)

அருணாசல அக்ஷரமாலை
முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சீர்பாதவகுப்பு.

தனனதன தனனதன தனனதன தனனதன

தனனதன தனனதன தனதான தானதன

உததியிடை கடவுமர கதவருண குலதுரக
வுபலளித கனகரத சதகோடி சூரியர்கள்
வுதயமென வதிகவித கலபகக மயிலின்மிசை
யுகமுடிவி னிருளகல வொருசோதி வீசுவதும்
உடலுமுட லுயிருநிலை பெறுதல்பொரு ளெனவுலக
மொருவிவரு மனுபவன சிவயோக சாதனையில்
ஒழுகுமவர் பிறிதுபர வசமழிய விழிசெருகி
யுணர்வுவிழி கொடுகருதி தமதூடு நாடுவதும்
உருவெனவு மருவெனவு முளதெனவு மிலதெனவு
முழலுவன பரசமய கலையார வாரமற
உரையவிழ வுணர்வவிழ வுளமவிழ வுயிரவிழ
வுளபடியை யுணருமவ ரனுபூதி யானதுவும்
உறவுமுறை மனைவிமக வெனுமலையி லெனதிதய
வுருவுடைய மலினபவ சலராசி யேறவிடும்
உறுபுணையு மறிமுகமு முயரமரர் மணிமுடியி
லுறைவதுவு முறைவிலது மடியேன் மனோரதமும். (௧)

இதழிவெகு முககககன நதியறுகு தறுகணர
விமகிரண தருணவடு பதிசேர்ச டாமவுலி
இறைமகிழ வுடைமணியொ டணிசகல மணிகலென
விமையமயி றழுவுமொரு திருமார்பி லாடுவதும்
இமையவர்க ணகரிவிறை குடிபுகுத கிருதர்வயி
ரெரிபுகுத வுரகர்பதி யபிஷேக மாயிரமும்

735

எழுபிலமு நெறுநெறென முறியவட குவடிடிய
விளையதளர் கடையபழி விளையாடல் கூறுவதும்
இனியகனி கடலைபய றொடியல்பொரி யமுதுசெயு
மிலகுவெகு கடவிகட தடபாரமேருவுடன்
இகலிமுது திகிரிகிரி நெரியவளை கடல்கதற
வெழுபுவியை யொருநொடியில் வலமாக வோடுவதும்
எறுழிபுலி காடியரி கரிகடமை வருடையுழை
யிரலைமரை யிரவுபக விரவாதோ ரடவியில்
எயினரிடு மிதணதனி லிளகுதினை கிளிகடிய
வினிதுறையில் சிறுமிவளர் புனமீது லாவுவதும். (௨)

முதலவினை முடிவிலிரு பிறையெயிறு கயிறுகொடு
முதுவடவை விழிசுழல வருகால தூதர்கெட
முடுகுவது மருணெறியி லுதவுவது வினையுமவை
முடியவரு வதுமடியர் பகைகோடி சாடுவதும்
மொகுமொகென மதுபமுரல் குரவுவிள வினதுகுறு
முறியுமலர் வகுளதள முழுநீல நீவரமும்
முருகுகமழ் வதுமகில ருதண்மைதரு வதும்விரத
முனிவர்கரு தரியதவ முயல்வார் தபோபலமும்
முருகசர வணமகளி ரறுவர்முலை நுகருமறு
முககுமர சரணமென வருள்பாடி யாடிமிக
மொழிகுழற வழுதுதொழு துருகுமவர் விழியருவி
முழுகுவதும் வருகவென வலைகூவி யாளுவதும்
முடியவழி வழியடிமை யெனுமுரிமை யடிமைமுழு
துலகறிய மழலைமொழி கொடுபாடு மாசுகவி
முதலமொழி வனகிபுண மதுபமுக ரிதமவுன
முகுளபரி மளநிலய கவிமாலை சூடுவதும். (௩)

மதசிகரி கதிர்முது முதலைவர் தாகெடிய
மகிமேவில் வெருவியொரு விசையாதி மூலமென

வருகருணை வரதனிக லிரணியனை கோதியுகிரின்
வகிருமட லரிவடிவு குறளாகி மாபலியை
வலியசிறை யிடவெளியின் மூகவிழி படமுடி
வளருமுகி லிருதனிரு பதுவாகு பூதரமும்
மகுடமொரு பதுமறிய வடுபகழி விடுகுரிசின்
மருகனிசி சரர்தளமும் வருதார காசுரனும்
மடியமலை பிளவுபட மகரசல நிதிகுறுகி
மறுகிமுறை யிடமுனியும் வடிவேல னீலகிரி
மருவுகுரு பதியுவதி பவதிபக வதிமதர
வசனிபயி ரவிகவுரி யுமையாள் த்ரிசூலதரி
வனசைமது பதியமலை விசயைதிரி புரைபுனித
வனிதையபி கவையனைகை யபிராம நாயகிதன்
மதலைமலை கிழவனறு பவனபய னுபயசதுர்
மறையின்முத னடுமுடிவின் மனோகர சீரடியே. (௩)

சீர்பாதவகுப்பு
முற்றிற்று.

23:38.212.7

கடைக்கணியல் வகுப்பு.

தன தன தனத்த தத்த
தன தன தனந்த தந்த
தன தன தனத்த தத்த
தானனா.

அலைகடல் வளைந்து ஞெத்த வெழுபுவி புரந்திருக்கு
மரசென விரந்தரிக்க வாழலாம்
அனைகைய ரசன்றனக்கு மமரர சன்றனக்கு
மரசென வறஞ்செலுத்தி யாளலாம்

787

றுலவென் றமுத்தி யதிமதுர செந்தமிழ்க்கு
பறகினைத் துதித்தியாகலாம்
ரு றன் றமுட்ட வலவில்வினை சண்டைகிற்க
லெதி ரித்துவெற்றி யாகலாம்
லஞ்சயுட்ப சமுகனிறம்வெருத்த
காரசெனுமொருப்பு மேற்கலாம்
வாகின் றிடத்து மெவரெவர்க்கிடத்து
ருவனிவனெ னுணர்ச்சி கூடலாம்
[illegible] ழைக்கி லெருடனெ திர்த்துருட்க
யெனமுழங்கி [illegible]
மொழியவும்பலிப்ப தகலவிடுமங்கள்வித்தை
ளாயினிவிடும்பெருத்தி யாருளீர்
யிடைகிடக்கினைப்ப மொகுமொகெனவண்டிரைப்ப
கையவிழ்கடம்பமித்த தாரிறன்
விபெரியம்பலத்தன் வரையாலமண்டபத்தன்
யரிவர்தொழுவன் றுகிர்த்த மாடிறன்
ரதொழு தொழுங்கியொற்றி முதலெனவிரகவெற்றி
றைதெறிபறந்துவிட்ட கோழியான்
யவுணரன் றுபட்ட முதியகுடர்கன் றுசற்று
றுகழுமுபந்தரிட்ட சேவலிறன்
மருவுமைம்புலைத்து வளருமிருகுன் றமொத்த
லிரைபுகுந்திருக்கு மார்பிறன்
கன்மிளம்பிமொய்த்த வடவர்முலையுண்டிமுற்றும்
டிவுண்வளர்ந்திருக்கும் வாழ்விறன்
யிறைமடந்தைபெற்ற வொருமதலையென் றுதித்து
லையிடியவுந்துணித்த தோளிறன்
லையுமவன் றிருக்கை யயிலையுமவன்கடைக்க
ணியலையுநினைத்திருக்க வாருமே. (௪

கடைக்கணியல்வகுப்பு
முற்றிற்று.

சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

வேல் வகுப்பு.

164317

தனத்தன
[illegible]த்தன
[illegible]த்தன
தனத்தன
தனத்தன தான.

[illegible]த்தமுலை சிறுத்தவிடை வெளுத்தநகை கறுத்தகுழ
சிவத்தவிதழ் மறச்சிறுமி விழிக்குநிகராகும்
பனைக்கைமுக படக்கரட மதத்தவள கசக்கடவுள்
பதத்திடுநி கழத்துமுனை தெறிக்கவர மாகும்
[illegible]ழுத்தமுது தமிழ்ப்பலகை யிருக்குமொரு கவிப்புலவ
னிசைக்குருகி வரைக்குகையை யிடித்துவழி காணு
பசித்தலகை முசித்தழுது முறைப்படுத லொழித்தவுண
ருரத்துதிர நிணத்தசைகள் புசிக்கவரு ணேரும்
சுரர்க்குமுனி வரர்க்குமக பதிக்கும்விதி தனக்குமரி
தனக்குநரர் தமக்குமுறு மிடுக்கண்வினை சாடும்
சுடர்ப்பரிதி யொளிப்பநில வொழுக்குமதி யொளிப்ப
யடக்குதழ லொளிப்பவொளி ரொளிப்பிரபை வீசு
துதிக்குமடி யவர்க்கொருவர் கெடுக்கவிடர் நினைக்கினவ
குலத்தைமுத லறக்களையு மெனக்கொர்துணை யாகு
சொலற்கரிய திருப்புகழை யுரைத்தவரை யடுத்தபகை
யறுத்தெறிய வுறுக்கியெழு மறத்தைநிலை காணும்.
தருக்கிநமன் முருக்கவரி னெருக்குமதி தரித்தமுடி
படைத்தவிறல் படைத்தவிறை கழற்குநிக ராகும்
தலத்திலுள கணத்தொகுதி களிப்பினுண[illegible]தெ
[illegible]லர்க்கமல கரத்தின்முனை விதிர்க்க[illegible]